

தேசிய சேமிப்பு வங்கி

ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை

2022

எமது மன உறுதியை திடப்படுத்துகின்றோம்

NSB 50th

NATIONAL SAVINGS BANK தேசிய சேமிப்பு வங்கி

1972 -2022 Anniversary

எமது மன உறுதியை திடப்படுத்துகின்றோம்

தேசிய சேமிப்பு வங்கியின் 50 ஆண்டு வரலாறு முழுவதும், இன்னல்களையும் சவால்களையும் கொண்ட "வெப்பமிகு உலைக்களத்தில்" அடிக்கடி சோதிக்கப்படுவதைப் போன்ற வலிமையினதும் இயலளவினதும் ஆக்கபூர்வமான "செயற்தொகுப்பு" ஒன்றை அது கட்டியெழுப்பியுள்ளது. அனைத்து வெற்றிகளினதும் நன்மைகளையும் வங்கியும் அதன் அக்கறைதாரர்களும் சமமாக அனுபவித்திட இது இயலச்செய்துள்ளது. வங்கியின் பாரம்பரிய வலிமைகளும் எம்முடன் பணியாற்றுகின்ற மக்களின் முன்மாதிரியான இயல்புகளும் எமது செயலாற்றத்திற்கும் சாதனைகளுக்கும் ஆண்டாண்டாக பங்களித்துள்ளன. எதிர்காலத்தில் வரவிருக்கும் சவால்களை முறியடிப்பதற்கு இவ்வலிமைகளை வங்கி ஏனையவற்றுக்கு மத்தியில் மேலும் வளரச்செய்யும். நாம் எமது மன உறுதியை இடைவிடாது வலிமைப்படுத்துகின்றோம்.

NSB

உள்ளடக்கம்

எமது ஒருங்கிணைந்த அறிக்கையினைப் பற்றி 3

ஒருங்கிணைந்த அறிக்கை

7
முன்னுரை

தேசிய சேமிப்பு வங்கி ஒரே பார்வையில்	8
மைற்கற்கள்	10
உற்பத்திகள் மற்றும் சேவைகள்	11
முக்கிய தரவுகள்	12
தலைவரின் செய்தி	14
பொதுமுகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு	18

23
நிச்சயமற்ற நிலைகளின் ஊடாக பயணித்தல்: எமது சூழல் மற்றும் தந்திரோபாயம்

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி	24
ஒருபோதுமில்லாத சமூகப்-பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமின்மைகள்	26
பொருண்மியம்	27
நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்	32
தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு	70
ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு	90

99
முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு

நிதியியல் மூலதனம்	100
தொழிற்பிரிவுகள் பற்றிய மீளாய்வு	111
உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்	116
புலமை மூலதனம்	123
மனித மூலதனம்	130
சமூக மற்றும் உறவுசார் மூலதனம்	148
இயற்கை மூலதனம்	162

167
நிறுவன ஆளுகை பற்றிய அறிக்கை

168
இடர் முகாமைத்துவம் பற்றிய அறிக்கை

தொகுப்பு

169
ஆளுகை

பணிப்பாளர் சபை	170
நிறுவன முகாமைத்துவம்	173
நிறைவேற்று முகாமைத்துவம்	174
பிரதான முகாமையாளர்கள்	176
நிறுவன ஆளுகை	178
சபைக் கணக்காய்வு குழுவின் அறிக்கை	199
சபை மனிதவளங்களும் ஊதியங்களும் குழு அறிக்கை	202
சபை நியமன குழுவின் அறிக்கை	204
சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கை	205
சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவின் அறிக்கை	207
இடர் மீளாய்வு	208

237
நிதியியல் அறிக்கைகள்

நிதியியல் நாட்காட்டி	238
பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை	239
நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று	245
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று	246
உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை	248
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி, நிறுவனத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை) ஆகியோரின் பொறுப்புடமைக்கூற்று	249
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை	250
நிதியியல் கூற்றுகளின் உள்ளடக்கம்	253
வருமானக்கூற்று	254
அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று	255
நிதியியல் நிலைக் கூற்று	256
பங்குரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று	258
காசுப் பாய்ச்சல் கூற்று	262
நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்	264

409
பிற்சேர்க்கைத் தகவல்

வங்கிச்சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு	410
இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம்	430
இலங்கை மத்திய வங்கியினால் வேண்டப்பட்ட ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்	435
2016 இன் 1 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் III 3 ஆம் அட்டவணைக்கு அமைய பாசல் III வெளிப்படுத்தல்கள்	442
உள்நாட்டில் – முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கி மதிப்பீட்டுச் செயன்முறை	454
மைய அளவீட்டின் படி உலகளாவிய அறிக்கையிடல் முன்முனைவுகளின் (GRI) உள்ளடக்கச் சுட்டெண்	456
Independent Assurances Report	459
ஐ.அ.டொலர்களில் வருமானக்கூற்று	462
ஐ.அ.டொலர்களில் அனைத்தையும் வருமானக்கூற்று	463
ஐ.அ.டொலர்களில் நிதியியல் நிலைக்கூற்று	464
புள்ளி விபரக் குறிகாட்டிகள்	465
வைப்புப் பகுப்பாய்வு	466
தொடர்புடைய வங்கிகள்	467
பரிமாற்று இல்லங்கள்	467
யூரோ கீரோ உறுப்பினர்கள்	468
நிதியியல் மற்றும் வங்கியியல் அருஞ் சொற்கள் விளக்கத் தொகுப்பு	469
நிறுவனத் தகவல்கள்	475


எமது ஒருங்கிணைந்த அறிக்கையினைப் பற்றி

தேசிய சேமிப்பு வங்கி (NSB) அதன் எட்டாவது ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது. தேசத்திற்கான சேவையில் 50ஆவது வருடத்தினை பூர்த்தி செய்திருக்கும் நிலையில், வங்கியின் தந்திரோபாயம் மற்றும் நிதிப் பெறுபேறுகள் மற்றும் பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் மீதான தாக்கம் பற்றிய விரிவான விளக்கத்தினை இந்த அறிக்கை வழங்குகிறது. இவ்வறிக்கையானது, வங்கியின் முன்னேற்றம், எதிர்கால சான்றுறுதி க்கான நிலைமாற்றத்துக்கான முயற்சிகள் மற்றும் நாம் தொழிற்படும் சமூகங்களில் சாதகமான மாற்றங்களை உருவாக்குதல் மற்றும் பெறுமதியைத் தொடர்ந்தும் வழங்குவதற்கான அர்ப்பணிப்பு என்பனவற்றை எடுத்துரைக்கின்றது.

இவ்வறிக்கை உள்ளடக்குபவையானது:

- வங்கியின் தந்திரோபாயம், மூலதன முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஆளுகைப் பொறிமுறைகள் பற்றிய ஆழமான புரிதல்
- அக்கறைதாரர்களுக்கு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு எவ்வாறு பெறுமதி உருவாக்கப்படுகிறது என்பதை அறிதல்
- தொழிற்பாடுகள். அடைவுகள், தந்திரோபாய இலக்குகள், உற்பத்தி தொகுதி விரிவாக்கம், சமூகத்திற்கான பங்களிப்பு மற்றும் சூழலியல் தொடர்பான விழிப்புணர்வு போன்ற அம்சங்கள்
- நிறுவன ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகள் பற்றிய விரிவான மீளாய்வு
- 31 டிசம்பர் 2022இல் உள்ளவாறான வங்கியின் தொழிற்பாடு மற்றும் நிதி நிலைமையைக் காட்டும் முழுமையான குறிப்புக்களுடனான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் மேலதிக துணைநிலைத் தகவல்கள்.

இவ்வறிக்கையினை வாசித்தல் மற்றும் வழிகாட்டுதல்



இவ் அறிக்கையானது, உள்ளடக்கத்தை எளிமையாக்குவதற்கும் வாசித்து அறிதலை இலகுவாக்குவதற்கும் இருவழித் தொடர்பு அம்சங்கள் மற்றும் குறியீட்டுச் சின்னங்களை கொண்டுள்ளது. இருவழித் தொடர்பு அம்சங்களானவை, எண்ணியல் வழியாக அணுகும்போது அறிக்கையினூடு பயணிப்பதற்கு இலகுவாகவும், அறிக்கையினுள் வேறு இடத்திலுள்ள மேலதிக தகவல்களையும் அறிக்கைக்கு வெளியேயுள்ள கூடுதல் தகவல்களை பார்க்கவும் முதன்மையாக பயன்படுத்தப்படுகின்றது. இவ்வறிக்கையின் பிரிவுகளுக்கு இடையேயுள்ள இடைத் தொடர்புகளைக் காட்டுவதற்கு குறியீட்டுச் சின்னங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சின்னங்கள் தொடர்பான சுட்டி பக்கம் 6 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

சின்னங்கள் தொடர்பான சுட்டி

இவ்வறிக்கையானது, எமது நோக்கத்தினை நிறைவேற்றுதல், எமது தந்திரோபாயங்களை முன்னுரிமைப்படுத்தல், நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத இலக்குகளுக்கு எதிராக எமது வளர்ச்சியை கண்காணித்தல் தொடர்பான எமது நடவடிக்கைகளின் விரிவான பார்வையை வழங்குகின்றது. இது பெறுமதியை உருவாக்கும் மற்றும் நீடிக்கச் செய்யும் எமது இயலுமையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள், இடர்கள் மற்றும் தொடர்புகளை மதிப்பிடுவதற்கு தேவையான தகவல்களை எமது மூலதன வழங்குனர்களுக்கு வழங்குகிறது. மேலும், எமது குறுகிய மற்றும் நீண்டகால தந்திரோபாயங்களை செயற்படுத்துவதிலும் எமது 10 வருட தந்திரோபாயம் மற்றும் நீண்டகால தந்திரோபாயங்களை நோக்கிய எமது வளர்ச்சிக்கான குறிகாட்டிகளாகிய கடந்த வருடத்திற்கான எமது பெறுபேற்றை மதிப்பிடுவதிலும் நாம் அடைந்துள்ள வளர்ச்சிகளை எடுத்துரைக்கின்றது. மேலும் இவ்வறிக்கையானது, ஆளுகை தொடர்பான எமது அணுகுமுறை மற்றும் பெறுமதி இழப்பிற்கெதிராக பாதுகாப்பதற்கு நாம் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளார்ந்த தகவல்களையும் வழங்குகின்றது.

எமது அறிக்கையிடல் மற்றும் இணக்கப்பாட்டு சட்டகம்

எமது அறிக்கையினைத் தயாரிக்கும் போது, பல்வேறு வகையான நிறுவன அறிக்கையிடல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் சட்டகங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் இணங்கியுள்ளதை உறுதிப்படுத்துகின்றோம். இவை பல்வேறு இணங்குவிப்பு அறிக்கையிடல் நியமங்களினால் கட்டாயமான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. ஆனால் கட்டாயமான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மட்டும் வரையறுக்குட்பட்டவையல்ல.

CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA	இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் (CA Sri Lanka) வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்
INTEGRATED REPORTING Now part of IFRS Foundation	சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் ஆளுகைக்குழு (IIRC) சட்டகம் (www.theiirc.org)
GRI	பூகோள அறிக்கையிடல் முன்முயற்சி (GRI) நிலைபேறானதன்மை அறிக்கையிடல் வழிகாட்டுதல்கள் நியமங்கள் - GRI நியமங்கள் (www.globalreporting.org)
CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA	இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் கோவை
SUSTAINABLE DEVELOPMENT GOALS	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) – ஐ.நாவின் 17 இலட்சிய "பூகோள இலக்குகள்" முன்முயற்சி
	இலங்கை மத்திய வங்கியின் (CBSL) திசைமுகப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதல்கள்
	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (IRD) ஒழுங்குவிதிகள் மற்றும் திசைமுகப்படுத்தல்.
1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்	
1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்	

எமது ஒருங்கிணைந்த அறிக்கையினைப் பற்றி

எமது பரப்பு மற்றும் எல்லை

எமது அறிக்கையிடல் எல்லை தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனங்களான - வரையறுத்த தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிட்டட் (NSB Fund Management Company Ltd.) மற்றும் வரையறுத்த இலங்கை சேமிப்பு வங்கி (Sri Lanka Savings Bank Ltd.) ஆகியவற்றை உள்ளடக்கும். "வங்கி" எனக் குறிப்பிடும் இடத்தில் அது வங்கியைத் தனியாகவும், "குழு" எனக் குறிப்பிடும் இடத்தில் அது முழுமையான குழுவையும் குறிப்பிடும் வகையில் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. 2014 சட்டகத்திற்கு இணங்க, வங்கி மற்றும் குழு இரண்டினதும் சூழலில் முக்கிய நிதிசார் அம்சங்கள் விபரிக்கப்பட்டுள்ள அதேவேளை, வேறுவிதமாகக் கூறப்படாதுவிட்ட சந்தர்ப்பங்களில் நிதிசாராத அம்சங்கள் வங்கியின் சூழலில் மாத்திரமே விபரிக்கப் பட்டுள்ளன.

இந்த அறிக்கை நிதிசார் மற்றும் நிலைபேறானதன்மை அறிக்கையிடலுக்கான ஆண்டு அறிக்கையிடல் சுற்றோட்டத்துடன் இணக்கமான முறையில் ஜனவரி 1 முதல் டிசம்பர் 31, 2022 வரையிலான 12 மாத காலப்பகுதியை உள்ளடக்கி இருப்பதுடன், இத் திகதிக்கு அப்பாற்பட்ட, 27 ஏப்ரல் 2023 வரையிலான சபையின் ஒப்புதல் திகதி வரையிலான நிகழ்வுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நோக்கம் மற்றும் எல்லைகள் தொடர்புபட்ட அம்சங்களின் அடிப்படையில் முன்னைய அறிக்கையிடல் காலங்களிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லாத போதிலும், மீள வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்கூறப்பட்ட எந்தவொரு ஒப்பீட்டுத் தகவலும் தொடர்புடைய பிரிவுகளில் வெளிப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது.

நிதி அறிக்கையிடலுக்கு மேலதிகமாக, நிதியல்லாத பெறுபேறு, வாய்ப்புகள், அக்கறையுள்ள தரப்பினர் தொடர்பான இடர்கள் அல்லது விளைவுகள், தந்திரோபாயம், வணிக மாதிரி, தொழிற்பாட்டு சூழல், பொருண்மியம், அக்கறையுள்ள தரப்பினர் நாட்டங்கள், பெறுபேறு மற்றும் ஆளுகை பற்றிய தகவல்களையும் அறிக்கை உள்ளடக்கியது. குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அளவில் மதிப்பை உருவாக்குவதற்கான வங்கியின் இயற்திறன் மீதான தாக்கத்தின் அடிப்படையில், பக்கங்கள் 27 முதல் 31 வரையான "பொருண்மையைத் தீர்மானிக்கும் செயன்முறை" மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு உள்ளது. மேலும், இது வங்கியின் குறுகியதிலிருந்து நடுத்தர (இரண்டு முதல் மூன்று ஆண்டுகள்) காலப்பகுதிக்கமன முன்னுரிமைகள், வங்கியை எதிர்கால சான்றுறுதி யடையச் செய்யும் மற்றும் இலங்கை பொருளாதார நிலைமைக்கெதிரான மீளெழுச்சியடையச் செய்யும் (ஐந்து முதல்

எமது ஒருங்கிணைந்த சிந்தனைச் சட்டகம்

குறுநோக்கு | இலட்சிய நோக்கு

தொழிற்பாட்டு சூழல்

வங்கியானது கொவிட்-19, புவிசார் அரசியல் நிகழ்வுகள், சமூக-பொருளாதார சவால்கள் மற்றும் நாம் தொழிற்படும் பகுதிகளில் வளர்ந்து வரும் மற்றும் தற்போதுள்ள பரந்த போக்குகளை உள்ளடக்கிய உலகளாவிய போக்குகளை கருத்தில்கொள்கின்றது. இவை வங்கியின் பெறுமதி உருவாக்கும் செயன்முறையை அறிவிப்பதில் மற்றும் வடிவமைப்பதில் பாரிய பங்கை வகிக்கின்றது.

பக்கம் 26 முதல் 69 வரை

இடர்கள் மற்றும் வாய்ப்புகள்

தொழிற்பாட்டு சூழலை கண்காணிப்பது, வங்கி இடர்களைக் குறைப்பதற்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்வதற்கும் ஏற்ப அதன் தந்திரோபாயத்தை வடிவமைத்துக்கொள்ள வழிவகுக்கின்றது. இவ்வறிக்கையில், வங்கியின் ஒருங்கிணைந்த சிந்தனை யை பிரதிபலிக்கும் விதமாக தொழிற்பாட்டு சூழல் மற்றும் அதனுடன் இணைந்த இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

பக்கம் 26 முதல் 69 வரை

அக்கறைதாரரின் ஈடுபாடு

அக்கறையுள்ள தரப்பினருடனான எமது உறவுமுறைகளின் தரமானது, தகவல் அடிப்படையிலான தீர்மானத்தை உறுதி செய்வதற்கும் அக்கறைதாரரின் ஈடுபாட்டை அதிகப்படுத்துவதற்கும் பல்வேறு பொறிமுறைகளினூ டாக அளவிடப்படுகின்றது. அக்கறையுள்ள தரப்பினருடனான எமது உறவுமுறைகளின் தரமானது, நமது நோக்கத்தை நிறைவேற்றும் இயலுமையைப் பாதிக்கிறது.

பக்கம் 90 முதல் 98 வரை

பொருண்மியம்

வங்கியானது, அக்கறைதாரர்களின் நீண்ட கால பெறுமதி உருவாக்கத்தில் கணிசமாக தாக்கத்தை ஏற்படுத்துபவையையே பொருண்மிய விடயங்களாக இனங்காணுகின்றது.

இந்த விடயங்கள் இடர்களை முகாமை செய்வதற்கும் வாய்ப்புகளை உச்சப்படுத்துவதற்குமான எமது தந்திரோபாய விருத்தியில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

பக்கம் 27 முதல் 31 வரை

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

வங்கியின் தொலைநோக்கால் இயக்கப்படுகின்ற தந்திரோபயமானது, தொடர்ந்து செல்லும் வெளியீடுகளை அடைவதற்கான தீர்மானமெடுத்தல் மற்றும் தந்திரோபாய தெரிவுகளை வழிநடத்துகின்றது.

ஐந்து தந்திரோபாய தெரிவுகள் மற்றும் குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்டகால நோக்குகளை உள்ளடக்கிய முழுமையான அணுகுமுறையினூடாக, வளங்கள், உறவுமுறை, மற்றும் பல்வேறு பரிணாமங்களின் வழியேயான முதல்களை பொறுப்புடன் முகாமை செய்வதன் மூலம் அக்கறையுள்ள தரப்பினருக்கு நிலைபேறான பெறுமதியை வழங்குதலை நோக்காகக் கொண்டுள்ளது.

பக்கம் 70 முதல் 89 வரை

எமது முதன்மையான ஐக்கியநாடுகளின் நிலையான அபிவிருத்திக்கான இலக்குகள்



முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

நிதிசார், உற்பத்தி, மனித, புலமைச் சொத்து, மற்றும் இயற்கை போன்ற வங்கியின் முக்கிய மூலதனங்கள் பெறுமதியைப் பாதுகாப்பதுடன் வங்கியின் வணிக மாதிரிக்கு உள்ளீடாகவும் அமைகின்றது. அவை வங்கியின் வணிக நடவடிக்கைகளினூடாக ஆழப்படுத்தப்படுகின்றன, மேம்படுத்தப்படுகின்றன மற்றும் நிலைமாற்றம் செய்யப்படுகின்றன.

விழுமியங்கள்

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க வணிக மாதிரி

எமது வணிக மாதிரியானது, தொழிற்பாட்டு சூழல், அக்கறைதாரர்களுடனான உறவு, மற்றும் வளங்களில் தங்கியிருக்கும் தன்மை உள்ளடங்கலாக பெறுமதி உருவாக்கத்தை பாதிக்கும் காரணிகளை ஆராய்வதற்கான விரிவான சட்டகமாக விளங்குகின்றது.

பக்கம் 24 முதல் 26 வரை

இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகை

இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகையானது, சாத்தியமான இடர்களை வினைத்திறனாக முகாமை செய்தல் மற்றும் நிலைத்திருக்கத்தக்க மற்றும் பாதுகாப்பான நிதியியல் நடைமுறைகளுக்காக ஒழுங்குமுறை மற்றும் விழுமிய நியமங்களுடன் இணங்குதலை உறுதி செய்து, வங்கியின் தொழிற்பாடுகளின் ஒருங்கிணைந்த பகுதியாக விளங்குகின்றது.

பக்கம் 169 முதல் 236 வரை

எமது துணைநிலை ஐக்கியநாடுகளின் நிலையான அபிவிருத்திக்கான இலக்குகள்



பக்கம் 100 முதல் 106 வரை

பத்து வருடங்கள்) தந்திரோபாய வழிமுறைகள் மற்றும் வங்கிக்கான நீண்டகால தொலைநோக்குக்கான (10 வருடங்களுக்கும் கூடுதலான) தந்திரோபாயம் மற்றும் நிதியியல் மற்றும் நிதியியலல்லாத இலக்குகள் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சும் 2022ஆம் ஆண்டிற்கான வங்கியின் தந்திரோபாய முன்னேற்றத்தை உள்ளடக்கியுள்ளது.

ஒருங்கிணைந்த சிந்தனை

யால் இயக்கப்பட்ட பெறுமதி உருவாக்கம்

தந்திரோபாய முகாமை மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகள் மூலம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் அனைத்து அக்கையுள்ள தரப்பினருக்கும் நிலைபேறான பெறுமதியை உருவாக்கும் எமது நோக்கில் அக மற்றும் புற இயக்கிகள், அவற்றின் இடைத் தொடர்புகள் மற்றும் வர்த்தக விடடுக் கொடுத்தல்களை நாம் ஆய்வு செய்கின்றோம்.

எமது அணுகுமுறையானது வளர்ந்து வரும் போக்குகள், வேறுபட்ட மூலதனங்களுக்கிடையேயான உறவுகள், மற்றுட் தந்திரோபாயத் தெரிவுகளின் மீதான உள்ளார்ந்த சாத்தியமான வர்த்தக விட்டுக்கொடுப்புக்கள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட ஒருங்கிணைந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாம் உருவாக்கும், பேணும், அழிக்கும் பெறுமதியைப் பிரதிபலிக்கும் வகையில், வெளிப்படைத்தன்மையுடன் நாம் அறிக்கையிட முயற்சி செய்கிறோம்.

இந்த மூலக்கூறுகள் எவ்வாறு இடைத்தொடர்புபட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்வதன் மூலம், இந்த முழுமையான செயற்பாட்டிலும் நேர்மை மற்றும் தங்கியிருத்தலை உறுதி செய்து எமது அனைத்து அக்கறையுள்ள தரப்பினருக்கும் நிலைபேறான பெறுமதியை வழங்குவதற்கு எங்களால் சிறப்பாக இயலத்தக்கதாக உள்ளது. ஒருங்கிணைந்த சிந்தனையானது எமது மூலதன முகாமை, தந்திரோபாய தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் நீண்ட காலத்திற்கான நிலைபேறான பெறுமதியை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்குகின்றது.

கண்ணோட்டம்

இவ்வறிக்கையிலுள்ள புறநோக்குத் தகவல்கள் வினாவுக்குப் பதிலளிக்கிறது: எமது தந்திரோபாயத்தைப் பின்பற்றுவதில் நாம் சந்திக்க நேரிடும் சவால்கள், வாய்ப்புகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை எடுத்துரைக்கின்றது. எமது வணிக மாதிரி மற்றும் எதிர்கால செயற்திறனினுக்கான சாத்தியமான தாக்கங்களை கண்டறிய விழைகின்றது. பொருளாதார நெருக்கடி காரணமாக உண்டான நிச்சயமற்ற தொழிற்பாட்டு சூழலை கருத்தில் கொண்டு, சாத்தியமான நிச்சயமற்ற தன்மைகளையும் எமது பதிலிறுத்தலையும் பொருத்தமானவிடத்து நாம் வலியுறுத்தியுள்ளோம். புறநோக்குத் தகவல் இந்த அறிக்கை முழுவதும், குறிப்பாக பின்வரும் பிரிவுகளில் காணப்படத்தக்கதாக இருக்கும்:

- நாம் தொழிற்படும் விதத்தை நிர்ணயிக்கும் பாரிய போக்குகள் பக்கம் 32 முதல் 69 வரை
- தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு பக்கம் 70 முதல் 89 வரை
- முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு பக்கம் 100 முதல் 166 வரை

புற உறுதிப்படுத்தல்

இந்த அறிக்கையானது அனைத்து ஒழுங்குவிதிமுறை மற்றும் சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. இணங்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வு செய்யப்பட்டுள்ள, அதேவேளையில் KPMG Sri Lanka நிறுவனம் நிலைபேறான தன்மை அறிக்கையிடல் மீதான உறுதிப்பாட்டை வழங்கி உள்ளது.

முன்னோக்கிய அறிக்கைகள்

இந்த அறிக்கையில் தேசிய சேமிப்பு வங்கியின் எதிர்கால செயற்திறன் மற்றும் வாய்ப்புகள் தொடர்பான முன்னோக்கு அறிக்கைகள் உள்ளடங்கி உள்ளன. இந்த அறிக்கைகள் இந்த அறிக்கையைத் தயாரிக்கும் போதிலான எமது சுயதீர்ப்புகள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கின்றன. ஆயினும், பல்வேறு வளர்ந்து வரும் இடர்கள், நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் பிற முக்கிய காரணிகள் எமது ஆரம்ப எதிர்பார்ப்புகளிலிருந்து பெறுபேறுகளை மாற்றியமைக்கலாம். இக்காரணிகள், எமது வணிகம் மற்றும் நிதி செயற்திறன் மீது பாதகமான விளைவுகளக ஏற்படுத்துபவையாக இருக்கும்.

ஊடாடும் PDF

தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கையானது, வாசிப்பாளர் அறிக்கையினூடு பல்வேறு பயணங்களை மேற்கொள்ள வழிசெய்யும் வகையில், விரிவுபடுத்தப்பட்ட பொருளடக்க வழிகாட்டி மற்றும் மற்றொரு பகுதிக்கான குறிப்புகளுக்கான இணைப்புகளை பயன்படுத்தி ஊடாடும் PDFஆக கிடைக்கப்பெறுகிறது. அக்கறைதாரர்களினது வசதி மற்றும் அனுபவத்தினை முன்னிலைப்படுத்தும் தீர்வுகளை உருவாக்கும் வங்கியின் பரந்துபட்ட முயற்சிகளின் ஒரு பகுதியாக விளங்குகின்றது.

விளக்கம் கோரல்கள்

இந்த அறிக்கை குறித்த உங்கள் கருத்துரைகள் மற்றும் விளக்கம் கோரல்கள் வரவேற்கத்தக்கவையாக இருப்பதுடன், அவை பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படலாம்:

பிரதிப் பொது முகாமையாளர், (நிதி, நிறுவனத் திட்டமிடல் மற்றும் முகாகைத்துவ தகவல் முறைமை)


நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி, இலக்கம் 255, காலி வீதி, கொழும்பு 3.

dgm.finance@nsb.lk


எமது ஒருங்கிணைந்த அறிக்கையினைப் பற்றி

வழிகாட்டல் சுட்டிகளுக்கான குறியீடு

மூலதனங்கள்




அக்கறைதாரர்கள்




குறுங்கால மற்றும் நடுத்தரகால தந்திரோபாய முன்னுரிமைகள்



நீண்டகாலத் தந்திரோபாயங்கள்



பொருண்மைமிக்க விடயங்கள்




வேறு



பக்கக் குறிப்பு

எதிர்கால சான்றுறுதிக்கான தந்திரோபாயம்



ஒருங்கிணைந்த அறிக்கை

முன்னுரை

தேசிய சேமிப்பு வங்கி ஓரே பார்வையில் 08

மைற்கற்கள் 10

உற்பத்திகள் மற்றும் சேவைகள் 11

முக்கிய தரவுகள் 12

தலைவரின் செய்தி 14

பொதுமுகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு 18

தேசிய சேமிப்பு வங்கி ஒரே பார்வையில்

தேசிய சேமிப்பு வங்கியானது நாடு முழுவதும் சேமிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்பதற்கான அசைக்கமுடியாத கடப்பாடு மற்றும் குறிப்பிடத்தக்க பாரம்பரியத்தை கொண்ட இலங்கையின் பாரிய நிறுவனங்களில் ஒன்றாகும். 2022ஆம் ஆண்டில் தனது நடவடிக்கைகளின் 50ஆவது வருடத்தைக் கொண்டாடுகையில், தேசிய சேமிப்பு வங்கியானது நாட்டின் நிதியியல் உறுதிப்பாடு மற்றும் மேம்பாட்டிற்கு வழிகாட்டியாக விளங்குகின்றது. 1972இல் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டு இலங்கையின் நிதியியல் மரபுக்கான பாதுகாவலராக தனது நிலையை திடப்படுத்தி, , தேசிய சேமிப்பு வங்கியானது நாட்டிலுள்ள நான்கு பாரம்பரிய சேமிப்பு அமைப்புகளை ஒரே அமைப்பாக ஒன்றிணைந்து வளர்ந்துள்ளது. அதன் முன்னோடியான 1832 இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியிலிருந்து (CBS) ஒரு நூற்றாண்டு பழமையான சேமிப்பு நிபுணத்துவத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, தேசிய சேமிப்பு வங்கி 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற விசேட வங்கி (LSB) அந்தஸ்து வழங்கப்பட்டது. இன மற்றும் பாலினப் பிரிவுகளைக் கடந்து இலங்கையின் அனைத்து வர்க்கத்தினரிடையேயும் சேமிப்புக் கலாச்சாரத்தை வளர்க்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாகும்.

தேசிய சேமிப்பு வங்கியானது, தனது 50 வருடப் பூர்த்தியைக் கொண்டாடுகையில், அதன் ஸ்தாபனக் கொள்கைகளுக்கு தொடர்ந்து கடப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் அதன் வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளுக்கமைய தொடர்ந்து மாற்றமடைந்து வருகின்றது. 13 மில்லியனுக்கும் மேற்பட்ட இயங்குகின்ற கணக்குகளைக் கொண்டு இலங்கையின் மிகவும் உள்ளடக்கமான வங்கியாக தனது நிலையை திடமாக பேணி வருகின்றது.

எமது தூரநோக்கு – சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கான மிகவும் நம்பகமான மற்றும் அதிகம் தேடப்படும் தெரிவாக இருத்தல்.

எமது இலட்சிய நோக்கு – எமது அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்களதும் எதிர்பார்ப்புகளை திருப்தி செய்வதுடன், சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளை உச்சப் படுத்தும் வகையில் எமது வாடிக்கையாளர்களுக்கு மொத்த நிதிசார் தீர்வுகளை வழங்குதல்

எமது விழுமியங்கள் – எமது நாளாந்த வணிகத்தை நடத்திச் செல்வதில் நாம் நம்பிக்கை, பரஸ்பர மரியாதை மற்றும் ஒருங்கிணை நிலையுடன் கூடிய வகையில் முறையான துலங்கலை வழங்குவதுடன் ஆக்கபூர்வமாக செயற்படுவோம்

தேசிய சேமிப்பு வங்கிக் குழுமம்

தொழிற்படும் கம்பனிகள்

	தேசிய சேமிப்பு வங்கி	வரையறுத்த தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைக் கம்பனி	வரையறுத்த இலங்கை சேமிப்பு வங்கி
தொழிற்படும் கூறுகள்	சில்லறை வங்கியியல்	கூட்டு வணிக நிதியியல்	சர்வதேச நிதியியல்	திறைசேரி	NSB Fund Management	SLS Bank
வணிக வரிசைகள்	• தனிப்பட்ட வங்கியியல் (வைப்புத் திரட்டுதல், சில்லறைக் கடன் வழங்குதல், வங்கி உத்தரவாதம், அட்டைத் தீர்வுகள் மற்றும் பரிவர்த்தனை வங்கியியல் உள்ளிட்ட முழு அளவிலான சேவைகள்)	• நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சேய் நிறுவனங்களுக்கு நேரடிக் கடன் வழங்கல் • நிதி வசதிகளை கட்டமைத்தல் (வாடிக்கையாளர்-களுக்கான உய்த்தறி சாதனங்கள்) • கடன் வழங்குபவர்கள் மற்றும் கடன் பெறுபவர்களிடையே தீர்வு மற்றும் பரிவர்த்தனைகளை ஒருங்கிணைக்கும் திரட்டு வசதிகளுக்கான முகவர் வகிபாகம் • நம்பிக்கைச் சான்றிதழ்கள், தனிப்பட்ட நிலைப்படுத்தல், மற்றும் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்தல் • உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதில் முன்னணி நிபுணத்துவம் • கடன் பத்திரங்களை வழங்குதல்	• USD, EUR, GBP, AUD, SGD மற்றும் JPY இல் வெளிநாட்டு நாணய வைப்பு (சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு) • உள்நோக்கிய மற்றும் வெளிச்செல்லல் பண மாற்றல்கள் • அந்நிய நாணயப் பரிமாற்றம் • இறக்குமதிக் கடன் கடிதம் வழங்குதல் • இறக்குமதிப் பட்டியல்களைக் கையாளுதல் • கப்பல் மற்றும் விமான சரக்கு உத்தரவாதங்களை வழங்குதல்	• அரச பத்திரங்கள், பங்குகள் மற்றும் அந்நிய நாணய, மறுகொள்வனவு ஒப்பந்தக் கடன்கள் மற்றும் தலைகீழ் மறு கொள்வனவு ஒப்பந்தக் கடன் ஆகியவற்றில் முதலீடு	• முதன்மை சந்தை நடவடிக்கைகள் • இரண்டாம் நிலை சந்தை நடவடிக்கைகள் • மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்கு (Lanka Settle) • மத்திய வங்கியுடனான பிணையக் கணக்கு (Lanka Secure) • வர்த்தகர் கூட்டுவணிக கடன் பத்திரங்கள் • SWIFT இணைப்பு • முதலீட்டுத் தொகுப்பு • காசு முகாமை	• சேமிப்பு • கடன்கள் • குத்தகை • நுண் நிதியியல் • அடகு

தொழிநுட்பம் மற்றும் தொழிற்பாடுகள் உள்ளடங்கலான கூட்டுவணிக சேவைகள்

உரு 1

நோக்கமுடைய வணிகம் மற்றும் முற்போக்கான கலாசாரம்

தே.சே. வங்கி நோக்கம் கொண்ட வணிக அணுகுமுறையையும் முற்போக்கான நிறுவனக் கலாசாரத்தையும் கொண்டு இயங்குகின்றது.

சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கான மிக நம்பகமான மற்றும் விரும்பத்தக்க தெரிவு

தே.சே.வங்கியானது சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கான மிகவும் நம்பகமான மற்றும் அதிகம் தேடப்படும் தெரிவாகவும் காணப்படுகின்றது.

சட்டத் தேவைப்பாட்டால் 60% வைப்புக்களை விசேட உயர்ரக அரச பிணையங்களில் முதலீடு செய்யப்படுவதுடன் பாதுகாப்பான முதலீட்டை உறுதிப்படுத்துகின்றது.

முதன்மையான சேமிப்பு வங்கி

நாட்டின் முதன்மையான சேமிப்பு வங்கியாக திகழ்வதன் மூலம் மிக உயர்ந்த நிலையை தக்கவைத்திருக்கிறது.

தெரிவு செய்யப்பட்ட உருவாக்கத்தை பின்பற்றுவதுடன் வினைத்திறனான இடர் முகாமையை பேணுதல், தொழிற்துறை சராசரியுடன் ஒப்பிடுகையில் குறைவான தொழிற்படாக் கடன் விகிதத்திற்கு வழிவகுக்கின்றது.

அரச உத்தரவாதத்துடன் கூடிய நாட்டின் பாதுகாப்பான வங்கி

இலங்கையில், அனைத்து வைப்புகளுக்கும் அதன் மீதான வட்டிக்கும் 100மூ அர உத்தரவாதம் உள்ள ஒரே வங்கி தே.சே. வங்கியாகும். இதுவே இலங்கையின் பாதுகாப்பான வங்கியாக ஆக்குகின்றது.

21.8 மில்லியன் கணக்குகளுடனான மக்களின் தெரிவு

ஆழமான வாடிக்கையாளர் தளத்துடன், தே.சே. வங்கியானது 21.8 மில்லியன் கணக்குகளைக் கொண்டிருப்பது வங்கியை மக்களின் விரும்பிய தெரிவாக ஆக்குகின்றது.

தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளித்தல்

தே.சே. வங்கி பொதுத் திறைசேரிக்கு வரிகள், விதிப்பனவுகள், கட்டணங்கள் மற்றும் பங்கு இலாபத்தின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கின்றது.

தேசத்தைக் கட்டியெழுப்புதலில் முக்கிய பங்கு வகிக்கின்ற அரசினால் ஆரம்பித்துவைக்கப்படும் நீண்டகால அபிவிருத்தி மற்றும் சமூக-பொருளாதார செயற்றிட்டங்களுக்கு வங்கியானது நிதியீட்டம் செய்கிறது.

விழுமியத்துடன் கூடிய வங்கி நடைமுறைகள் மற்றும் சமூகத்தின் மீதான நேர்க்கணிய தாக்கம்


விழுமிய மற்றும் தார்மீக நடைமுறைகளுக்கு இணங்கி, தே.சே.வங்கியானது சமூகத்தின் மீது நேர்க்கணிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வணிகத்தை மேற்கொள்கின்றது.

நிலையான நிறுவனக் கட்டமைப்பு மற்றும் சிறந்த ஆளுகை


அனுபவமிக்க முகாமையால் வழிநடத்தப்படுகின்ற நிலையான நிறுவனக் கட்டமைப்பு மற்றும் சிறந்த ஆளுகைக் கொள்கைகளை தே.சே.வங்கியானது நிலைநிறுத்துகின்றது.

எமது பலம் மற்றும் உறுதிப்பாடு


நிகர வட்டி வருமானம்




வரிக்கு முன் இலாபம்




மொத்த சொத்துக்கள்




வாடிக்கையாளர் வைப்புக்கள்




உரிமையாண்மை மீதான திரும்பல்




சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல்



அனைத்து நாணய திரவத்தன்மை உள்ளடக்கம்



பாசல் III – மொத்த மூலதனம்



உரு 2

மைற்கற்கள்

1972
ஒரு நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நாட்டில் உள்ள நான்கு பாரம்பரிய சேமிப்பு அமைப்புகளை ஒன்றிணைத்து தேசிய சேமிப்பு வங்கி என அழைக்கப்படும் ஒரு நிறுவனமாக மாற்றியது.

1979
சீட்டிழுப்புடன் கூடிய சேமிப்புச் சான்றிதழின் அறிமுகம்

1981
தேசிய சேமிப்பு வங்கி கிராமப்புற மக்களை சென்றடைய நடமாடும் வங்கியியல் அலகை செயற்படுத்தியது தேசிய சேமிப்பு வங்கி

1994
முதலாவது தன்னியக்கக் கூற்று இயந்திரம் நிறுவப்பட்டது

1995
வணிக பல்வகைப்படுத்தலை எளிதாக்கும் வகையில் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் திருத்தப்பட்டது

1998
ஹப்பன் புஞ்சி ஹப்பன் திட்டம் வெளியிடப்பட்டது

1999
தேசிய மேிப்பு வங்கியின் 100 ஆவது கிளை நிட்டம்புவவில் திறக்கப்பட்டது.

இதுரு மிது ரு திட்டம் வெளியிடப்பட்டது

2000
தேசிய சேமிப்பு வங்கியின் சேய் நிறுவனமான தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைக் கம்பனி உருவாக்கப்பட்டது.

2002
“ஸ்த்ரீ” உற்பத்தி அறிமுகப்படுத்தப்பட்டது

2003
வரையறுத்த இலங்கை Fitch Ratings அமைப்பிடம் இருந்து AAA (lka) மதிப்பீட்டைப் பெற்ற இலங்கை முதலாவது வங்கியாக தேசிய மேிப்பு வங்கி அங்கீகாரம்

2004
சர்வதேச வங்கியியல் தொழிற்பாடுகள் ஆரம்பம்

2008
24x7 தே.சே.வ அழைப்பு மையம் வெற்றிகரமாக நிறுவப்பட்டது

2011
தே.சே.வ அதன் 200 வது கிளையினை மதவாச்சியில் ஆரம்பித்தது

2012
தே.சே.வ. அதன் 40வது ஆண்டு விழாவை கொண்டாடியது

2013
இலங்கையில் தனியொரு வங்கியினால் வழங்கப்பட்ட மிகப்பெரும் சிரேஸ்ட பிணையக் குறிப்பாக, அமெரிக்க டொலர் 750 மில்லியன் பெறுமதியான குறிப்பு வழங்கப்பட்டது

2014
உயர்கல்வி கற்கைகளுக்காக “புத்தி” தனிநபர் கடன் ஆரம்பிக்கப்பட்டது
USD 250 மில்லியன் சிரேஷ்ட பிணைகள் வழங்கல்

2016
வங்கியின் 250வது கிளை கோப்பாயில் திறக்கப்பட்டது

குளோபல்/பைனான்ஸ் அமைப்பினால் தே.சே.வங்கி “இலங்கையின் பாதுகாப்பான வங்கி” என்று மதிப்பீடு வழங்கப்பட்டது.

வர்த்தக நிதியிடலின் துணிகர ஆரம்பம்

ரூபா 6 பில்லின் மதிப்புள்ள தே.சே. வங்கியின் முதலாவது பட்டியற் படுத்தப்படாத தொகுதிக்கடன் பத்திரம் வழங்கப்பட்டது.

2017
ரூபா ஒரு திரில்லியன் சொத்துத் தளத்தை அடைந்த இலங்கையின் முதலாவது விசேட உரிமம் பெற்ற வங்கியாக சாதனை

2018
அமெரிக்க டொலர் 750 மில்லியன் பெறுமதியான சிரேஸ்ட பிணையக் குறிப்புக்களை வெற்றிகரமாக மீட்டுக் கொண்டது.

முதலாவது அந்நிய நாணய தவணைக் கடனைப் பெற்றது.

2019
PCI-DSS சான்றுப் படுத்தலைப் பெற்ற இலங்கையின் முதல் அரச வங்கியானது தேசிய சேமிப்பு வங்கி

இலங்கை சேமிப்பு வங்கி தேசிய சேமிப்பு வங்கியின் முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய்க் கம்பனியாக மாறியது

ரூபா ஒரு திரில்லியன் பெறுமதியைக் கடந்தது வைப்புத் தளம்

அமெரிக்க டொலர் 250 மில்லியன் பெறுமதியான சிரேஸ்ட பிணையக் குறிப்புக்களை வெற்றிகரமாக மீட்டுக் கொண்டது

2020
கலப்பின கடன் சாதனங்கள் வெளியீடு (நிரந்தர கடன் பத்திரம்)

2021
NSBPay கைத்தொலைபேசி செயலி அறிமுகம்

2022
தே.சே. வங்கி அதன் 50வது ஆண்டு விழாவை கொண்டாடியது

உற்பத்திகள் மற்றும் சேவைகள்























































சேமிப்பு வைப்புக்கள்

- சாதாரண சேமிப்பு
- சிறுவர் சேமிப்பு – கிரிகெட்டி ஹபன், புஞ்சி ஹபன், ஹபன் சிறுவர் சேமிப்புக் கணக்கு
- பதின்பருவ சேமிப்பு – நியோ சேமிப்புக் கணக்கு
- இளைஞர் சேமிப்பு – I'M நான் சேமிப்புக் கணக்கு
- மகளிர் சேமிப்பு – ஸ்த்ரீ சேமிப்புக் கணக்கு
- விசேட சேமிப்பு – ஹப்பி சேமிப்புக் கணக்கு, ஸ்மைல் சேமிப்புக் கணக்கு

சேமிப்பு/இளைப்பாற்றுகைத் திட்டங்கள்

- NSB பென்சன் பிளஸ்
- ஐந்தாண்டு சேமிப்பு
- ரியாலிட்டி சேமிப்புத் திட்டம்
- பிரார்த்தனா
- பிரார்த்தனா பிளஸ்
- சவிபல சேமிப்பு

கால வைப்புக்கள்

- வழக்கமான வைப்பு – நிலையான வைப்பு
- மூத்த பிரஜைகள் வைப்புக்கள் – கௌரவ நிலையான வைப்புக் கணக்கு,
- மூத்த பிரஜைகள் விசேட நிலையான வைப்பு

வெளிநாட்டு நாணயத் திட்டங்கள்

- தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (PFCA)
- வணிக வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (BFCA)
- உள்முக முதலீட்டுக் கணக்குகள் (IIA)
- வெளிநாட்டு நாணய தவணை வைப்புக்கள்
- விசேட வைப்புக் கணக்கு (SDA)
- பண மாற்றுகை வணிகம்

சில்லறைக் கடன் திட்டங்கள்

- வீடு, அசையாச் சொத்துக் கடன்கள் – கெ தொர, அலங்கார
- அரச ஊழியர்களுக்கான வீட்டுக்கடன்

தனிப்பட்ட கடன்கள்

- ஸ்டேடி தனிநபர் கடன்
- புத்தி கடன்
- விசேட ஓய்வூதியக் கடன்
- சாரிகா கடன்
- சுற்றுச்சூழல் கடன்
- வாகனக் கடன்
- NSB விங்ஸ்
- வைப்புகளுக்கு எதிரான கடன்கள் - விரைவுக் கடன்கள

அட்டை சேவைகள்

- Shopping + ஏடிஎம் அட்டைகள்
- NSB ஈஸி அட்டைகள்

பிற சேவைகள்

- பணம் அனுப்புதல் – NSB U-Trust
- POS சாதன அடிப்படையிலான சேமிப்புத் திரட்டல் – NSB ரீச்
- வர்த்தக நிதியியல்
- உத்தரவாதங்கள்
- நிலையியற் கட்டளை
- நேரடி வரவு வசதி
- பாதுகாப்பு வைப்புப் பெட்டகம்
- பின்னுரித்து நியமனம்
- பயன்பாட்டுப் பட்டியல் கொடுப்பனவுகள்
- குறுஞ் செய்தி முறைமை வங்கி

கூட்டுவணிக கடன் வழங்கல்

எண்ணியல், மின்னியல் வங்கியியல்

- இணைய வங்கி
- விரைவுத் துலங்கல் குறியீட்டு வங்கியியல்

பாடசாலைகளிலான சேகரிப்பு மையங்கள்

வாடிக்கையாளர் தொடர்பு மையம் - NSB அழைப்பு மையம்

திறைசேரி

திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், மறுகொள்வனவு ஒப்பந்தங்கள், தலைகீழ் மறுகொள்வனவு ஒப்பந்தங்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள், அதேநாள் மற்றும் முன்னோக்கி நாணயப் பரிமாற்ற ஒப்பந்தங்கள்

முக்கிய தரவுகள்

அட்டவணை 1

31 டிசம்பர் அன்று உள்ளவாறு	வங்கி 2022	வங்கி 2021	வங்கி மாற்ற%	தொகுதி 2022	தொகுதி 2021	தொகுதி மாற்ற%
ஆண்டிற்கான பெறுபேறுகள் (ரூபா. பில்லியன்)						
மொத்த வருமானம்	**174.56**	134.94	29.36	**175.00**	136.06	28.62
நிதி பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரிக்கு முந்தைய இலாபம்	**7.76**	34.54	(77.53)	**5.74**	34.66	(83.44)
வரிக்கு முன் இலாபம் (PBT)	**4.51**	28.38	(84.11)	**2.34**	28.42	(91.77)
வருமான வரிச் செலவுகள்	**1.98**	6.26	(68.38)	**1.39**	6.29	(77.91)
வரிக்குப் பின்னான இலாபம் (PAT)	**2.53**	22.12	(88.56)	**0.95**	22.13	(95.71)
ஆண்டு இறுதியில் உள்ளவாறான நிலைமை (ரூபா. பில்லியன்)						
பங்குதாரர்களின் நிதி (மொத்த உரிமையாண்மை)	**72.89**	76.01	(4.11)	**76.39**	81.45	(6.21)
வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற வைப்புக்கள்/பிற வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	**1,476.74**	1,428.47	3.38	**1,475.81**	1,426.72	3.44
நிதிச் சொத்துக்கள் – சேத இழப்பிட்ட பெறுமதியில்: கடன் மற்றும் பிற சாதனங்கள்	**919.13**	935.35	(1.73)	**927.92**	940.54	(1.34)
கடன்கள் மற்றும் வருமதிகள்	**553.03**	538.94	2.61	**553.05**	538.60	2.68
மொத்த சொத்துக்கள்	**1,616.69**	1,579.10	2.38	**1,630.64**	1,605.81	1.55
சாதாரண பங்கு ஒன்றுக்கான தகவல் (ரூபா)						
உழைப்பு (அடிப்படை)	**2.69**	23.53	(88.56)	**1.01**	23.54	(95.71)
உழைப்பு (நீர்க்கப்பட்ட)	**2.69**	23.53	(88.56)	**1.01**	23.54	(95.71)
நிகர சொத்து மதிப்பு	**77.54**	80.86	(4.11)	**81.27**	86.65	(6.21)

நிதிக் குறிகாட்டிகள்	வங்கி 2022	வங்கி 2021	வங்கி மாற்றம் (அடிப்படைப் புள்ளிகள்)	தொகுதி 2022	தொகுதி 2021	தொகுதி மாற்றம் (அடிப்படைப் புள்ளிகள்)
நிகர வட்டி எல்லை (NIM) (%)	**2.03**	3.71	(168)	**2.08**	3.73	(166)
சராசரி சொத்துகளின் மீதான திரும்பல் (ROA) (%)	**3.40**	33.92	(3,052)	**1.20**	31.30	(3,010)
சராசரி பங்குதாரர்களின் நிதிகளின் மீதான திரும்பல் (ROE) (%)	**0.28**	1.93	(165)	**0.14**	1.90	(176)
உழைப்பின் மீதான ஆண்டுசார் வளர்ச்சி (%)	**(88.56)**	118.83	(20,740)	**(95.71)**	104.52	(20,023)
ஒழுங்குவிதமுறை தீரவத்தன்மை விகிதங்கள் (%)						
சட்டநியதித் திரவச் சொத்துக்கள் – குறைந்தபட்ச தேவை 20மூ	**40.62**	59.63	(1,901)	**N/A**	N/A	–
திரவ காப்பு விகிதம் (ரூபா) – குறைந்தபட்சத் தேவைப்பாடு (2022 – 90%, 2021 – 100%)	**195.44**	240.84	(4,540)	**N/A**	N/A	–
திரவ காப்பு விகிதம் (அனைத்து நாணயம்) – குறைந்தபட்சத் தேவை (2022 – 90%, 2021 – 100%)	**193.49**	240.43	(4,694)	**N/A**	N/A	–
நிகர நிலைத்த நிதியிடல் விகிதம் – குறைந்தபட்ச தேவை 100%	**180.51**	160.78	1,973	**N/A**	N/A	–
ஒழுங்குவிதிமுறை மூலதனத் தேவைப்பாடு: பாசல் III						
அடுக்கு - 1 – குறைந்தபட்ச தேவை (8%)	**15.78**	18.60	(282)	**17.90**	19.96	(206)
மொத்த மூலதனம் – குறைந்தபட்சத் தேவை (12%)	**18.00**	20.83	(283)	**19.96**	22.00	(204)
முடுக்கு விகிதம் – குறைந்தபட்ச தேவை (3%)	**7.43**	8.92	(149)	**8.14**	8.95	(81)

நிதி இலக்குகள் மற்றும் சாதனைகள் - வங்கி

நிதிக் குறிகாட்டிகள்	குறிக்கோள்	அடைவுகள் 2022	2021	2020	2019	2018
நிகர வட்டி எல்லை (NIM) (%)	3.15	**2.03**	3.71	2.77	2.63	2.43
சராசரி சொத்துகளின் மீதான திரும்பல் (ROA) (%)	1.57	**0.28**	1.93	1.24	0.95	0.78
சராசரி பங்குதாரர்களின் நிதிகளின் மீதான திரும்பல் (ROE) (%)	25.44	**3.40**	33.92	20.15	14.25	10.95
உழைப்பின் மீதான ஆண்டுசார் வளர்ச்சி (%)	12.32	**29.36**	5.80	4.61	8.96	3.62
ஆண்டிற்கான இலாபத்தின் மீதான வளர்ச்சி (PAT) (%)	4.14	**(88.56)**	118.83	58.40	41.80	(53.68)
மொத்த சொத்துக்களின் மீதான வளர்ச்சி (%)	10.78	**2.38**	15.79	17.78	11.68	2.56
மூலதனத் தேவைகள்: பாசல் III						
அடுக்கு - 1 – குறைந்தபட்ச தேவைப்பாடு (8%)	8% ற்கு மேல்	**15.78**	18.60	13.65	13.49	13.08
மொத்த மூலதனம் – குறைந்தபட்ச தேவைப்பாடு (12%)	12% ற்கு மேல்	**18.00**	20.83	16.45	15.82	15.90

பெறுபேற்று குறிகாட்டிகள் - இலாபம், மக்கள், மற்றும் பூமி

இலாபம்

- வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி ரூபா 140.5 பில்லியன்
  (2021 – ரூபா 76.8 பில்லியன்)
- ரூபா 821.5 பில்லியன் அரச பிணைத் தொகுப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது
  (2021 – ரூபா 834.1 பில்லியன்)
- நேர் மற்றும் நேரில் வரிகளாக செலுத்தப்பட்டது ரூபா 5.2 பில்லியன்
  (2021 – ரூபா 12.4 பில்லியன்)
- ரூபா 1.5 பில்லியன் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதியீட்டம்
  (2021 – ரூபா 28 பில்லியன்)

மக்கள்

- ரூபா 13.8 பில்லியன் எமது 4,528 ஊழியர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது
  (2021 – ரூபா 13.0 பில்லியன் 4,616 ஊழியர்களுக்கு கடனாக வழங்கப்பட்டது)
- ரூபா 12.8 மில்லியன் திறன் விருத்தியின் மீது முதலீடு செய்யப்பட்டது.
  (2021 – ரூபா 11 மில்லியன்)
- மொத்த ஊழியரில் 55% ஆனவர்கள் பெண்கள்
  (2021 – 55%)
- 184 வழங்குநர்களிடையேயான கொள்வனவு மீது ரூபா 906.1 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.
  (2021 – 351 வழங்குநர்களுக்கு ரூபா 1,306 மில்லியன்)
- 98.1% தக்கவைத்திருத்தல் விகிதம்
  (2021 – 98.6%)
- தன்னியக்க கூற்று இயந்திரம்/காசு மீள் சுழற்சி இயந்திரம்
  293 + 97 = 390
  (2021 – 292 + 92 = 384)
- 3,996 தபால் மற்றும் உபதபால் அலுவலகங்கள்
  (2021 – 4,064)
- 14 புதிய வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன
  (2021 – 36)

பூமி

- ரூபா 5.8 மில்லியன் பெறுமதியான 3 சுற்றுச்சூழல் கடன்கள் வழங்கப்பட்டன
  (2021 – ரூபா 3.8 மில்லியன் பெறுமதியான 9 சுற்றுச்சூழல் கடன்கள் வழங்கப்பட்டன)
- 70,430 கன மீட்டர் நீர் நுகரப்பட்டது
  (2021 – 88,986 கன மீட்டர்)
- 29,218 ஜிகாஜூல் சக்தி நுகரப்பட்டது
  (2020 – 33,539 ஜிகாஜூல்)
- 344,347 கிலோவாட் சூரிய சக்தி தேசிய வலையமைப்புக்குள் ஏற்றுமதி செய்யப்பட்டது
  (2021 – 277,328 கிலோவாட்)
- 46 கிளைகள் நெட் மீற்றரிங்குடன் தொடர்புபடுத்தப்பட்டது
  (2021 – 42)

தலைவரின் செய்தி

GRI 102-14

1972 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி தொடங்கப்பட்டதிலிருந்து, இலங்கை மக்களுக்கு நன்மைபயக்கும் வலுவான சேமிப்புக் கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கு அது அர்ப்பணித்து, லங்கா ரேட்டிங் ஏஜென்ஸி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கௌரவமிக்க AAA கடன் தரப்படுத்தலைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் 100% திட்டவட்டமான உத்தரவாதத்தால் இயக்கப்படும் பாரிய மற்றும் பாதுகாப்பான உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்ற அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.



வங்கியின் புதிய தலைவர் என்ற வகையில் இச்செய்தியை வழங்குவது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதுடன் கௌரவமிக்கதாகும்.

தேசிய சேமிப்பு வங்கியானது 2022 ஆம் ஆண்டில் முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொண்டமைக்கு மத்தியிலும் முன்னேற்றங்கண்டு, நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கும் நிதியியல் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் கொந்தளிப்பான காலப்பகுதியிலும் அதன் பங்குதாரர்களுக்கு உறுதியான செயலாற்றத்தினை வழங்கி, அதன் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளித்தது. பொருளாதாரத்தை வலுப்படுத்தி மீளவடிவமைப்பதற்கு வங்கி, வரிகளாக ரூ. 5.0 பில்லியன் செலுத்தி, பரந்தளவில் சமூகத்திற்கு ஆதரவளித்த அதேவேளை நிலைபேறான நிதியளித்தல் வழிமுறைகள் ஊடாக குறைந்தளவு கார்பன் பொருளாதாரத்தை அடைந்துகொள்வதை நோக்கி முன்னேற்றமடைந்தது.

2022 இல் இலங்கையின் பொருளாதாரத்திற்கான சவால்களும் வாய்ப்புகளும்

கொவிட்-19 நோய்த்தொற்றின் மோசமான விளைவுகள் மற்றும் அழுத்தமான கட்டமைப்புசார்ந்த பலவீனங்கள் எனபவற்றின் ஒன்றிணைவிலிருந்து தோன்றிய இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாற்றிலேயே மோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியுடன் இலங்கை போராடியதை மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு அனுபவித்தது. கடுமையான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை நெருக்கடி மூலம் நாடு தொடர்சியாக இடையூறுக்குள்ளாகி இருந்ததுடன் நாட்டுக்கான தரப்படுத்தல் தரங்குறைக்கப்பட்டமையைத் தொடர்ந்து சர்வதேச சந்தைகளில் இருந்து நிதிபெறுவதற்கான பெறுவழியை இழந்தது, 2022 ஏப்ரலில் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுகளை இடைநிறுத்தும் அறிவிப்பை மேற்கொள்வதற்கு இட்டுச்சென்றது. வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியானது பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் எதிரொலித்து, ஏனைய சவால்களுக்கு மத்தியில் எரிபொருள் பற்றாக்குறை, மின்சாரத் தடை, இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் பற்றாக்குறை போன்றவற்றுக்கு வழிவகுத்தது. வழங்கல் இடையூறுகள், இலங்கை ரூபாவின் சடுதியான மதிப்பிழப்பு, முன்னைய ஆண்டுகளின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் காலங்கடந்த தாக்கத்திலிருந்து தோன்றகின்ற அழுத்தமான கேள்வி என்பவற்றிலிருந்து தோற்றம்பெறுகின்ற முதன்மைப் பணவீக்கம் வேகமடைகின்ற பாதையில் சென்று, 2022 செப்டம்பரில் 69.8% கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வீதத்தினை எட்டியது.

இச்சமூகப் பொருளாதார அழுத்தங்களின் காரணமாக வங்கித்தொழில் துறை கடுமையான சவால்களுக்குள்ளானது. தொழிற்துறையில் காணப்பட்ட வெளிநாட்டு செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் உயர்வடைகின்ற பணவீக்கத்தின் மூலம் வருமானத்தின் உண்மையான பெறுமதியில் வீழ்ச்சி என்பன வாடிக்கையாளர் மீள்கொடுப்பனவு மீதும் சொத்து தரம் மீதும் பாரியளவு அழுத்தத்திற்கு வழிவகுத்து, மூலதன ஒதுக்குகளின் அளவைக் குறைவடையச்செய்தன. பணவீக்கத்தையும் செலாவணி வீத அசைவுகளையும் நிலைநிறுத்துவதற்கு 2022 இன் ஆரம்ப காலங்களில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான நாணய இறுக்கமாக்கல் வழிமுறைகளுக்கு மத்தியில், கடன்வழங்கல் வீதங்களில் சடுதியான மேல்நோக்கிய சீராக்கத்துடன் ஒன்றிணைந்து, ஆண்டு காலப்பகுதியில் தனியார்த் துறைக்கு வழங்கப்படும் கொடுகடன் வளர்ச்சி கணிசமாக வீழ்ச்சியடைந்தது. பணியாளர்கள் தொழிலுக்கு அறிக்கையிடுவதை சக்தி நெருக்கடி கடினமாக்கியமையினால் கடுமையான பொருளாதார நிலைமையானது அலுவலர் ஊக்கத்தின் மீது மேலும் எதிர்மறையான தாக்கத்தினை கொண்டிருந்து, அதிகரித்த புலம்பெயர்தலுக்கு வழிவகுத்து ஊழியர்களை தக்கவைப்பதில் சவால்களை விளைவித்தது.

பல கோணங்களை கொண்ட சவால்களுக்கு மத்தியிலும், 48 மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக சுமார் ஐ.அ. டொலர் 3.0 பில்லியன் தொகைக்காக 2023 மார்ச்சில் அதன் அனுமதியைத் தொடர்ந்து, 2022 செப்டம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஆதரவு நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கான அலுவலர் மட்ட இணக்கப்பாட்டினை எட்டி, இலங்கை அதன் மீட்ச்சிப் பாதையில் தற்போது பயணிக்கின்றது. 2023 மார்ச்சில் பணவீக்கமானது 50.3% கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வீதத்திற்கு வேகம் குறைந்ததுடன் கூடிய சாதகமான பெறுபேறுகளை அரசாங்கத்தின் கொள்கை ரீதியான வழிமுறைகள் விளைவித்ததுடன் செலாவணி வீதங்களில் நெகிழ்வுத்தன்மையும் மீள நிலைப்படத்தப்பட்டது. வருவாயினை அதிகரிக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளும் அரசாங்க துறையில் மறுசீரமைப்புங்களும் எதிர்காலத்தில் நாட்டின் வளர்ச்சி வாய்ப்புகளுக்கு வழியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பொதுப் படுகடன் நிலைபெறுதன்மையினை மீள நிலைநிறுத்துவதற்கான உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை உபாயங்கள், நிதியியல் துறைக்கு சாத்தியமான ஆபத்தைத் தோற்றுவிக்கலாம் என்பதுடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அரசாங்கத்தின் மூலம் செயலாக்கமிக்கவாறு தீர்க்கப்பட வேண்டிய தேவைகள் காணப்படுகின்றன.

சவால்கள் ஊடாகப் பயணிப்பதில் எமது தாக்குப்பிடிக்கத்தக்க செயலாற்றுகை

தேசிய சேமிப்பு வங்கியானது 2022 இல் சவால்மிக்க பொருளாதார சூழல் ஊடாக பயணிப்பதில் குறிப்பிடத்தக்க தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியுள்ளது. வங்கியானது தொழில்துறையின் மொத்த கடன்களுக்களுக்கான (சேதஇழப்பைக் கழித்து) கட்டம் 3 கடன்களை 2.8% ஆக மிகக் குறைந்த மட்டத்தில் பேணியது. மேலும், மூலதன உட்செலுத்தலுக்கான தேவை எதுவுமின்றி ஆய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியில் ஆரோக்கியமான மூலதன விகிதாசாரங்களையும் வங்கி பேணியது. 2022 டிசம்பர் 31 அன்று தொடங்கி அடுக்கு I மூலதன விகிதம் 15.78% ஆக இருந்த அதேவேளை மொத்த மூலதன விகிதம் 18.0% ஆக இருந்தது, இரண்டும் முறையே 8.0% மற்றும் 12.0% கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சங்களுக்கு நன்கு மேல் காணப்பட்டன. இச்சாதனைகளுக்கு மத்தியில், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுடன் இணையப்பெற்ற போட்டித்தன்மை மீதான வரையறைகள் மற்றும் வைப்புத் தளத்தின் 60% இற்கும் மேற்பட்டவற்றை அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட இடர்நேர்வற்ற முதலீடுகளில் முதலிடுவதுடன் கூடிய கடன்வழங்குதல் வாய்ப்புகள் மற்றும் சாத்தியமான உழைப்பு என்பன மீது பயன்பெறுவதற்கான தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகள் என்பன மூலம் வங்கி சவாலுக்குட்படுத்தப்பட்டது.

படுகடன் சாதனங்களில் உள்ள மூதலீட்டில் இருந்து கிடைத்த உயர்வான வட்டி வருமானத்தினால் முதன்மையாக ஆதரவளிக்கப்பட்டு, வங்கியின் மொத்த வருமானம் ரூ. 174.6 பில்லியனை அடைந்து ஆண்டுக்கு ஆண்டு 29.4% இனால் வளர்ச்சியடைந்தது. வங்கியானது ஆண்டுக்காக ரூ. 4.5 பில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபத்தினையும் ரூ. 2.5 பில்லியன் கொண்ட வரிக்குப் பிந்திய இலாபத்தினையும் அறிக்கையிட இயலுமாக இருந்து, வட்டி வருமானத்தினை விஞ்சி வட்டிச் செலவுகள் எச்சரிக்கை மட்டத்திற்கு அதிகரித்தல், வட்டியல்லா வருமானத்தில் குறைவு மற்றும் சேதஇழப்பு ஏற்பாடு உள்ளடங்கலாக தொழிற்படுத்தல் செலவுகளில் அதிகரிப்பு என்பன மூலம் தூண்டப்பட்டு முறையே 84.1% மற்றும் 88.6% மூலம் வீழ்ச்சியடைந்தது. பங்கொன்றிற்காக அடிப்படை உழைப்பு முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூ. 23.5 இல் இருந்து 2022 ஆம் ஆண்டில் ரூ. 2.7 ஆக வீழ்ச்சியடைவதற்கு இது வழிவகுத்தது.

குறைவான பிடித்துவைத்தல் உழைப்புகள் மற்றும் 25% மிகை வரி கொடுப்பனவின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டுச் சீராக்கம் என்பவற்றின் விளைவாக வங்கியின் மொத்த பங்குரிமையாளர் பங்குரிமைமூலதனம், 2022 இல் ரூ. 72.9 பில்லியன் கொண்ட மொத்த தொகைக்கு ஆண்டு காலப்பகுதியில் ரூ. 3.1 பில்லியனால் குறைவடைந்தது.

எவ்வாறிருப்பினும், தேசிய சேமிப்பு வங்கி அதன் எதிர்பார்கைகள் பற்றி சாதகமான எண்ணப்பாங்குடன் விளங்கி, அதன் வாடிக்கையாளர் தளத்திற்கு உறுதியான சேமிப்புத் தெரிவொன்றினை வழங்குவதற்கு அர்பணித்துள்ளது.

உபாயமும் வள ஒதுக்கீடும்

எமது உபாயமானது தொழிற்படுகின்ற பின்னணி பற்றிய எமது ஆர்வமிக்க புரிந்துகொள்ளலை பிரதிபலிப்பதுடன் ஆளுகை மற்றும் இடர்நேர்வு இயலளவுகளை மேம்படுத்துகின்ற அதேவேளை அனைத்து எமது பங்குதாரர்களுக்கும் நிலைபேறான பெறுபேறுகளை கொண்டுசேர்ப்பதை நோக்கி இயக்கப்படுகின்றது.

விபரங்களுக்கு பக்கம் 70 – 80 வரை

தலைவரின் செய்தி

பொருளாதாரத்திற்கு புத்துயிரளிப்பதில் முக்கிய பங்குதாரர்

இலங்கைப் பொருளாதாரத்தை புத்துயிர்பெறச்செய்வதில் வங்கி பல்வேறு வழிகள் ஊடாகவும் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. முதலாவதாக, பொறுப்புமிக்க நிறுவனப் பிரசை என்ற வகையில் தேசிய சேமிப்பு வங்கியானது அரசாங்கத்திற்கு வரிகள், அறவீடுகள், கட்டணங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பவற்றைச் செலுத்துவதன் வாயிலாக அரச நிதிக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச்செய்கின்றது. இவ்வாறு நிதியங்களை உட்செலுத்துவது, விசேடமாக சவால்மிக்க காலப்பகுதியில் அத்தியவசிய சேவைகளை வழங்குவதிலும் அபிவிருத்தி பணிகளை நடைமுறைப்படுத்துவதிலும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு நேரடியாக ஆதரவளிக்கின்றது.

இரண்டாவதாக, தேசிய சேமிப்பு வங்கியானது அதன் வைப்புகளின் கணிசமான பாகத்தினை அரசாங்க பிணையங்களில் முதலிடுவதன் வாயிலாக அரசாங்கத்திற்கான நிதியிடலில் முனைப்புடன் பங்குபற்றுகின்றது. இம்முதலீடானது வங்கியின் நிதியங்களுக்கு உறுதியான மற்றும் பாதுகாப்பான வழியொன்றை வழங்குவது மாத்திரமின்றி, உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள், சமூக நலநோம்புகை நிகழ்சித்திட்டங்கள், மற்றும் ஏனைய முக்கிய முயற்சிகளுக்கு தேவையான மூலதனத்தை அரசாங்கம் திரட்டுவதற்கு உதவுகின்றது. அரசாங்க பிணையங்களில் முதலிடுவதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கியானது நாட்டின் பொருளாதார மீட்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுகின்றது.

மேலும், உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறு துறைகளுக்கும் கடன்களையும் நிதியியல் ஆதரவையும் வழங்குதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை செலுத்துவதில் தேசிய சேமிப்பு வங்கி முக்கிய பங்காற்றுகின்றது. இம்முதலீடுகள் பொருளாதார செயற்பாடுகளை தூண்டுவதற்கும், தொழில்வாய்ப்புகளை உருவாக்குதற்கும், நாட்டின் ஒட்டுமொத்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன. உட்கட்டமைப்பு கடன்வழங்களை வசதிப்படுத்துவதன் வாயிலாக தேசிய சேமிப்பு வங்கி முக்கிய துறைகளை புத்துயிர்பெறச்செய்வதற்கும் பொருளாதார முன்னேற்றத்தை தூண்டுவதற்கும் பங்களிக்கின்றது.

ஆளுகைகும் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்குமான செயலூக்கமிக்க அணுகுமுறை

கொந்தளிப்பும் சவால்களும் மிக்க தொழிற்படுகின்ற சூழ்நிலைகள், பெறுமதி உருவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் வாடிக்கையாளர்களுக்கு இடைத்தடங்களற்ற சேவையை வழங்குவதற்கும் சிறந்த நடைமுறைகளை வேண்டுகின்றன. அனைத்து முக்கிய தீர்மானங்களையும் மேற்பார்வைசெய்கின்ற மற்றும் வங்கிக்கு உறுதியான தலைமைத்துவத்தை வழங்குகின்ற தேர்ச்சிபெற்ற தீர்க்கமான ஆளுகைக் குழுவொன்றை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது. சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு, கொடுகடன் குழு, முதலீட்டுக் குழு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு போன்ற முகாமைத்துவக் குழுக்கள் மிக முக்கிய விடயங்கள் மீது வங்கிக்கு ஆலோசனைகளை வழங்குகின்றன. வங்கி அதன் தீர்மானங்களுக்கு மத்தியில் பாதுகாப்பாக இருக்கின்றது என்பதனை உறுதிசெய்கின்ற எச்சரிக்கைமிக்க ஆனாலும் தொழில்முயற்சிமிக்க இடர்நேர்வு முகாமைத்துவம் மூலம் இக்குழுக்களுக்கு துணையளிக்கப்படுகின்றது. 2022 இல் இடர்நேர்வு உயர்வாக உள்ள துறைகளுக்கு கடன்வழங்குவதை மட்டுப்படுத்துதல் மற்றும் தொழிற்துறையினை விட வலுவான செயற்படாற்ற கடன் விகிதங்களைப் பேணுதல் என்பன வாயிலாக உறுதியானதும் நிலையபேறானதுமான வளர்ச்சியினை வசதிப்படுத்துவதற்கு அதிஉயர்வான ஆளுகைத் தரநியமனங்களையும் கண்டிப்பான கட்டுப்பாட்டு பொறிமுறைமைகளையும் வங்கி பின்பற்றியது.

இடர்நேர்வு ஏற்பினை உரிய ஆளுகை மட்டங்களில் கண்காணித்தல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு சூழல் பற்றிய தொடர்ச்சியான கணிப்பீடுகளைச் செயலாற்றுதல் என்பன மூலம் நாம் வங்கி முழுவதும் வலுவான இடர்நேர்வு கலாசாரத்தை தொடர்ந்தும் கட்டியெழுப்புகின்றோம். தேசிய சேமிப்பு வங்கியானது இணையம் சார்ந்த தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு ஆதரவளித்து வலுப்படுத்தவதற்கு செலவுச்சிக்கனமிக்க தரவுப் பாதுகாப்பு உபாயங்களை கட்டியொழுப்புவதன் மீதும் கவனம் செலுத்துகின்றது.

ஆளுகை

பொறுப்புமிக்கதும் தீர்கமானதுமான ஆளுகையானது தேர்ச்சிபெற்ற தலைவர்களின் ஆதரவுடன் தீர்மானங்களை நம்பிக்கையுடன் மேற்கொள்வதற்கு வங்கியினை இயலச்செய்கின்றது.

விபரங்களுக்கு பக்கம் 178 – 189 வரை

இடர்நேர்வு அறிக்கை

தொடர்ச்சியான இடர்நேர்வு முகாமைத்துவமானது தொழில் வெற்றிக்காக உரியவாறு கருத்திற்கொள்ளப்படும் இடர்நேர்வுகள் எடுத்துக்கொள்ளப்படுகின்ற போது பாதுகாப்பான சூழலில் வங்கியினை நிலைநிறுத்துகின்றது.

விபரங்களுக்கு பக்கம் 208 – 236 வரை

நிலைபேறான வங்கித்தொழில் நடத்தைகள்

நிலைபெறுதன்மை என்பது காலநிலை மாற்றம், உயிர் பல்வகைமை இழப்பு மற்றும் சமூக பொருளாதார சமமின்மைகள் போன்ற உலகிற்கு தாக்கம்செலுத்துகின்ற பிரச்சினைகள் தற்காலத்தில் தொழிலுக்கான முக்கிய கரிசனையாக விளங்குகின்றன. நிலைபெறுதன்மைக்கான தேசிய சேமிப்பு வங்கியின் கடமைப்பொறுப்பானது வங்கியின் தொழிற்பாடுகளில் முன்னுரிமை வகிப்பதுடன் அதன் உபாயத்தின் பாகமாகவும் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. சமூகங்களை கட்டியெழுப்புதல், நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு ஆதரவளித்தல், சுற்றாடல் நிலைபெறுதன்மையை உறுதிசெய்தல் என்பன ஊடாகவே பெறுமதி உருவாக்கப்படுகின்றது என நாம் நம்புகின்றோம்.

நிலைபெறுதன்மை அறிக்கை

நிதியியல் நிறுவனமொன்றாக நாம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதை நிலைபெறுதன்மை நிர்ணயிப்பதனால், அனைத்து எமது முயற்சிகளினதும் மையமாக அது விளங்குகின்றது.

விபரங்களுக்கு பக்கம் 73 – 76 வரை

தேசிய சேமிப்பு வங்கியானது குறைந்தபட்ச இயற்கை மூலவளங்களை வேண்டுகின்ற எண்ணியலாக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் அதன் காபன் சுவடுகளை குறைப்பதற்கு அர்பணித்துள்ளது. செல்லிட மற்றும் இணைய வங்கிச் சேவையினை நோக்கி வாடிக்கையாளர்கள் நகர்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு ஊக்கமளிப்பதற்கு வங்கி எண்ணியல் உற்பத்திகளையும் சேவைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியானது இலத்திரனியல்-மீள்புதுப்பித்தல் கடிதங்கள் மற்றும் உக்கக்கூடிய ஊக்குவிப்பு பொருட்கள் என்பன ஊடாக காகிதப் பயன்பாட்டையும் குறைத்துள்ளது. அதன் எண்ணியல் உட்கட்மைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்கு மேலதிகமாக, வங்கி சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவதற்காக உபாயமிக்க அமைவிடங்களில் புதிய கிளையினை திறத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள கிளைகளை புதிய அமைவிடத்திற்கு மாற்றுதல் என்பன ஊடாக அதன் கிளை வலையமைப்பினை விரிவுபடுத்தியுள்ளது. இலங்கை முழுவதும் குறைவாக வங்கிச் சேவையைப் பெறுகின்ற மற்றும் வங்கிச் சேவை கிடைக்காத சமூகங்களுக்கு விரைவான, மிகவும் சௌகரியமான, செலவுச்சிக்கனமான நிதியியல் சேவைகளை கொண்டுசேர்த்து, வறுமை ஒழிப்பு மற்றும் தொழில்முயற்சியான்மை அபிவிருத்தி என்பற்றுக்குப் பங்களிக்கின்ற அதேவேளை வங்கியின் நிதியியல் ஆதாயங்களை மேம்படுத்துவது வங்கியின் முயற்சிகளின் இலட்சியமாகும்.

எமது காபன் சுவடுகளை குறைப்பது மாத்திரமின்றி நாம் தொழிற்படுகின்ற சமூகங்களின் பொருளாதார மற்றும் சமூக

அபிவிருத்திக்கும் பங்களிக்கின்ற நிலைபேறான நடத்தைகளை பின்பற்றுவதற்கு நாம் அர்ப்பணித்துள்ளோம். சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகைசார்ந்த கரிசனைகளை எமது தொழில் நடத்தைகளுடன் ஒருங்கிணைப்பதன் வாயிலாக இடர்நேர்வுகளை குறைப்பதற்கும், வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் அத்துடன் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்தினை செலுத்துவதையும் நாம் நோக்காக கொள்கின்றோம்.

வங்கியானது பசுமை தொழில்கள் மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி தேவைகளுக்கு ஆதரவளிக்கும் பசுமைக் கடன் எண்ணக்கருவினையும் முன்னுரிமைப்படுத்தியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி மொத்தமாக ரூ. 5.8 மில்லியன் தொகையுடைய மூன்று பசுமைக் கடன்களை வழங்கியது.

நிலைபெறுதன்மையினை நோக்கிய எமது முயற்சிகள் சுற்றாடலை பேணிவளர்ப்பதற்கு எமது தொழில் நடத்தைகளுடன் அணிசேர்கின்ற ஐக்கிய நாடுகளின் நிலைபெறுதன்மை அபிவிருத்தி இலக்குகளை வங்கி பின்பற்றுவதன் மூலம் மேலும் வலிமைபெற்றுள்ளன. நாம் தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதற்கு ஏற்ப குறைவான காபன் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதற்கும் எமது பங்குதாரர்களுடனான நீண்ட கால உறவுகளை பேணிவளர்ப்பதற்கும் நிலைபேறான நடத்தைகளை ஊக்குவிப்பதில் நாம் கவனம் செலுத்துகின்றோம்.

வங்கித்தொழில் அனுபவத்தை எண்ணியல் புத்தாக்கத்தின் ஊடாக மாறுதலடையச்செய்தல்

வங்கித் தொழில்துறையில் துரிதமான தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பரிணாமத்தை நாம் தழுவிக்கொள்வதனால், வாடிக்கையாளர்களுக்கு தங்குதடையற்ற எண்ணியல் அனுபவத்தை வழங்குவதற்கான எமது இடைவிடாத நாட்டம் தொடர்ந்தும் முன்னுரிமையாக காணப்படுகின்றது. தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழுவின் தலைமையில் இம்முயற்சிக்கு சபை மேற்பார்வையினை வழங்குகின்றது. பயணிக்கும் போதே வங்கித்தொழில் சேவைகளை இலகுவாக அணுகக்கூடியதை இயலச்செய்கின்ற, சந்தையில் முன்னணித் தீர்வுகளை வழங்குகின்ற அதிநவீன தொழில்நுட்பத்திலும் எண்ணியல் சேவைகளிலும் முதலிடுவதற்கு நாம் அர்பணித்துள்ளோம். வினைத்திறனை மேம்படுத்தி, செலவுகளை குறைக்கின்ற அதேவேளை முறைமைகள் கிடைக்கப்பெறும்தன்மையினையும் பாதுகாப்பையும் முன்னுரிமைப்படுத்துகின்ற எமது முறைமைகளையும் செயன்முறைகளையும் நாம் நவீனமயப்படுத்துகின்றோம். தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு மற்றும் தீங்கின்மை தரநியமங்களின் அபிவிருத்திகளில் எமது தொடர்ச்சியான ஈடுபாடானது எமது வாடிக்கையாளர்களின் பாதுகாப்பிற்கும் தீங்கின்மைக்குமான எமது அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றது.

2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் தொடங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள புதிய மைய வங்கித்தொழில் தீர்வொன்றினை நடைமுறைப்படுத்தும் செயன்முறையினை நாம் தற்போது முன்னெடுக்கின்றோம். இதற்கு மேலதிகமாக, சுயமான சேவைக் கூறு ஒன்றின் ஊடாக விடுமுறை, வரவு மற்றும் ஊழியர் தகவல் முகாமைத்துவம் என்பவற்றை தானியக்கப்படுத்துகின்ற மனித வள தகவல் முறைமையின் முதலாம் கட்டத்தை நாம் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளோம். மேலும் இலத்திரனியல் – உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் எண்ணியல் பேரேட்டு தொழிநுட்பத்தை பயன்டுத்தி பணம் தூய்தாக்குதலுக்கெதிரான முறைமையை நடைமுறைப்படுத்தவதை நோக்கிய தொடக்க படிமுறைகளை நாம் மேற்கொண்டுள்ளதுடன் இலத்திரனியல் கற்றல் முறைமையொன்றினையும் உருவாக்கியுள்ளோம். எமது செல்லிட வங்கித்தொழில் கொடுப்பனவுச் செயலியும் ஏனைய புத்தாக்கத் தீர்வுகளும், வாடிக்கையாளர் வசதியினையும் பெறுவழியினையும் மேம்படுத்துகின்ற அதேவேளை தொழில்துறை நியமங்களையும் கடைப்பிடிக்கின்ற முழுமையாக தானியக்கமான, பாதுகாப்பான எண்ணியல் தளமொன்றிற்கான எமது இலக்குகளை நெருங்குவதற்கு எம்மைக் கொண்டுசெல்கின்றன.

எதிர்காலம் பற்றிய நோக்கு

2023 ஆம் ஆண்டு நம்பிக்கையூட்டுகின்ற போதிலும், வங்கித்தொழிற் துறையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட வசதியினை நடைமுறைப்படுத்தல், பொருளாதார மீட்சியில் சவால்கள் மற்றும் நிதியியல் முறைமைக்கு இடர்நேர்வுகளை தோற்றுவிக்கின்ற உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையின் தாக்கம் போன்ற எண்ணற்ற சவால்களை இன்னும் எதிர்கொள்கின்றது. எவ்வாறாயினும், தேசிய சேமிப்பு வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மையானது இச்சவால்கள் ஊடாக பயணிப்பதற்கான அதன் இயலளவில் மாத்திரமின்றி அதன் வர்த்தகநாமம் பற்றிய எண்ணப்பாங்கு, வர்த்தகநாம விசுவாசம் என்பன மீதும் தங்கியிருக்கின்றது. 1972 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி தொடங்கப்பட்டதிலிருந்து, இலங்கை மக்களுக்கு நன்மைபயக்கும் வலுவான சேமிப்புக் கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கு அது அர்ப்பணித்து, லங்கா ரேட்டிங் ஏஜென்ஸி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கௌரவமிக்க AAA கடன் தரப்படுத்தலைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் 100% திட்டவட்டமான உத்தரவாதத்தால் இயக்கப்படும் பாரிய மற்றும் பாதுகாப்பான உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி என்ற அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் ரூ. 30.3 பில்லியன் கொண்ட பெறுமதியுடன் கூடிய இலங்கையின் ஐந்தாவது மிகவும் பெறுமதிவாய்ந்த வர்த்தகநாமம் என்ற வகையில் தேசிய சேமிப்பு வங்கியானது நாட்டில் மிகவும் நம்பகமான வர்த்தக நாமங்களில் ஒன்றாக திகழ்கின்றது. பல ஆண்டுகளாக வங்கியானது இலங்கை சமூகத்தின் அனைத்து வகுப்பினருக்கும் தொடர்புடையதாகவும் அணுகத்தக்கதாகவும் விளங்கும் விதத்தில் மாறுகின்ற காலங்களுக்கு ஏற்ப மாற்றமடைதலை தழுவிக்கொள்வதுடன், வங்கியினை தொடர்ந்தும் நம்பவிருக்கும் பங்குதாரர்களின் அடுத்த தலைமுறையினரை ஈடுபடுத்துவதன் மீதும் பேணிவளர்ப்பதன் மீதும் கவனம்செலுத்துகின்றது.

வங்கித் தொழில்துறையில் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்துடனும் வலுவான அத்திவாரத்துடனும் தேசிய சேமிப்பு வங்கியானது துறையில் தற்போது இடம்பெறும் சவால்களுக்கு மத்தியில், அதன் பங்குதாரர்களுக்கு பெறுமதியினை கொண்டுசேர்ப்பதற்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கு உன்னதமான சேவையினை வழங்குவதற்கும் அர்பணித்துள்ளது. இலங்கையில் வலுவான சேமிப்பு கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கும் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பதற்குமான அதன் பணியை நோக்கி வங்கி உறுதியான நிலையில் காணப்படுகின்றது.

பாராட்டுதல்

தேசிய சேமிப்பு வங்கியின் வெற்றிக்கு அதன் ஊழியர்களின் அர்ப்பணிப்பும் கடமைப்பொறுப்புமே பெருமளவில் காரணமாக அமைகின்றது. வங்கியின் தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதில் முக்கிய பங்காற்றிய அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது உண்மையான பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கின்றேன். சவால்மிக்க ஆண்டுக் காலப்பகுதியில் வெளிச்செல்கின்ற தலைவரும், பணிப்பாளர் சபையும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் உறுதியான ஆதரவையும் வழங்கிய அதேவேளை அனைத்து தீர்மானங்களையும் தலைசிறந்த விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவன முகாமைத்துவ அணியும், தேசிய சேமிப்பு வங்கி முழுவதுமுள்ள அலுவலர்களும் அயராது பணியாற்றியுள்ளனர். வங்கியின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டிற்கு பங்களித்தமைக்காக வங்கியின் விசுவாசமிக்க வாடிக்கையாளர் தளமும் பாராட்டுக்குரியது.

அரச மட்டத்தில், அதிமேதகு கௌரவ சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ நிதி அமைச்சர் ஆகியோர்களுக்கு அவர்களின் வழிகாட்டலுக்கும், ஆதரவுக்கும் எனது நன்றியினை தெரிவிக்கின்றேன். திரைசேரிக்கான செயலாளர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர், தொடர்புடைய நிறுவனங்களில் உள்ள அலுவலர்கள், சனாதிபதியின் செயலாளர், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோரின் முயற்சிகளையும் நான் பாராட்டுகின்றேன். அஞ்சல்மா அதிபர், அஞ்சல் திணைக்களத்தின் அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்ட இன்றியமையாத ஆதரவின் மூலம் வங்கியின் நாடளாவிய தொழிற்பாடுகள் சாத்தியமாக அமைந்தன.

ஒன்றாய், இணைந்து நாம், வரவிருக்கும் தலைமுறையினருக்கு எமது தேசத்தின் நலன்களை பாதுகாப்பதற்கு வலுவான, தாக்குப்பிடிக்கத்தக்க சக்தியாக அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் பணியாற்றுவோம்.



கலாநிதி ஹர்ஷ கப்ரால்

சனாதிபதி சட்டத்தரணி
தலைவர்

2023 மே 17

பொது முகாமையாளரின்/ பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

இன்னல்களை துணிவுடன் எதிர்த்துநிற்பதற்கான தேசிய சேமிப்பு வங்கியின் இயலுமையானது எமது தொழிற்படையின் அர்ப்பணிப்புக்கும் உறுதியான அத்திவாரமொன்றுக்கு உறுதுணையளிக்கின்ற முன்மதிமிக்க உபாயம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பவற்றை நிறுவியுள்ள பொறுப்புமிக்க ஆளுகைக்கும் சான்றுபகர்கின்றது.



2022 இல் கொந்தளிப்புமிக்க பொருளாதார சூழ்நிலையினையொன்றினூடாக தேசிய சேமிப்பு வங்கி பயணித்து, தாக்குப்பிடிக்கத்தக்கதாகவிருந்து அதன் பங்குதாரர்களுக்கு பெறுமதியினை உருவாக்கியது. நீண்ட கால தொடர்பையும் நிலைபெறுதன்மையையும் எடுத்துக்காட்டுகின்ற மாறுதலடைதல்மிக்க எதிர்காலச் சான்றுறுதி உபாயத்துடன், நாம் எமது 50 ஆண்டு அனுபவத்தையும் வலுவான சேமிப்பு கலாசாரத்தில் உட்பொதிந்துள்ள வர்த்தகநாமத்தின் கீர்த்தியையும் எடுத்துக்காட்டி வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களுக்கான ஆதரவு என்பவற்றுக்கான தேவைக்கிடையில் சமநிலையினைத் தொடர்புபடுத்துகின்ற சவாலை எதிர்த்துநிற்கின்றோம்.

சவால்மிக்க காலங்களில் கவனமாகப் பயணித்தல்

2022 ஆம் ஆண்டில் தொழில்துறைக்கு முக்கிய இடர்பாடுகளை தோற்றுவித்த பல கோணங்களை கொண்ட சவால்களை இலங்கை எதிர்கொண்டது. செயற்பாடற்ற கடன்கள் அதிகரித்தல் மற்றும் குறைவடைகின்ற இலாபத்தன்மை என்பவற்றுடன் பல வங்கிகள் போராடிய சூழல் அமைப்பொன்றுக்கு அரசியல் உறுதிப்பாடின்மை, தேய்வடைகின்ற நாணயம், வெளிநாட்டு நாணய திரவத்தன்மை நெருக்கடி, உயர்வான பணவீக்க வீதங்கள், கணிசமான வாழ்க்கைச் செலவு அத்துடன் நிச்சயமற்ற எதிர்காலம் ஆகிய அனைத்தும் பங்களித்தன.

இச்சிக்கல்களை வெற்றிகொள்வதற்கு, நிதியியல் முறைமையினை நிலைநிறுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதற்கும் வடிவமைக்கப்பட்ட வழிமுறைகளை கொண்ட தொடர்களை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. கொள்கை

வீதங்களை உயர்த்துதல், கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள், மற்றும் திரவத்தன்மை வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கிய இறுக்கமான நாணய கொள்கை வழிமுறைகள் இவற்றுக்கு மத்தியில் காணப்பட்டன. எவ்வாறாயினும், உயர்வான வட்டிவீதங்களின் பின்னணியில் காசுப் பாய்ச்சலை முகாமைசெய்வதற்கு அதிகரித்த இடர்பாடுகளை எதிர்கொண்ட வாடிக்கையாளர் மீதும் இவ்வழிமுறைகள் தாக்கத்தினை கொண்டிருந்தன, இறுதியாக சொத்துத் தரம் மற்றும் கடன்அறவீடு என்பவற்றை பாதித்தன.

மேலும், அரசாங்கத்தின் வருவாயினை அதிகரிக்கும் முயற்சிகளும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு நிகழ்ச்சிதிட்டமும் வங்கித்துறை மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. பிடித்து வைத்தல் வரி, சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு எனபவற்றை நடைமுறைப்படுத்தியமை மற்றும் அதிகரித்த நிறுவன வரி வீதங்கள் என்பன வங்கி தொழிற்துறை மீது சாதகமற்ற தாக்கமொன்றிற்கு வழிவகுத்தன.

இவை அனைத்தும் ஊடாக இலங்கையின் பாதுகாப்பான வங்கியாக இருந்து தேசிய சேமிப்பு வங்கி அதன் கடமைப்பொறுப்பு அனைத்தையும் நிறைவேற்றி அதன் வாடிக்கையாளர்களினதும் அலுவலர்களினதும் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதிசெய்ததுடன் அனைத்து பங்குதாரர்களுக்கும் பெறுமதியினை உருவாக்கியது. இதனை எய்துவதற்கு, எரிபொருள் மற்றும் மின்சாரப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் கூட வாடிக்கையாளர்களுக்கு இடைத்தடங்களற்ற சேவையினை வழங்குவதற்கு தேசிய சேமிப்பு வங்கியானது கிளைகள், தன்னியக்கக் கூற்று இயந்திரங்கள், பணவைப்பு இயந்திரங்கள், பண மீள்சுழற்சி இயந்திரங்கள் மற்றும் எண்ணியல் வழிகள் உள்ளடங்கலாக அதன் அனைத்து வகையான சேவை வழங்கல் வழிகளையும் உபயோகப்படுத்தியது.

இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்படக்கூடிய பங்குதாரர்களுக்கு உதவுவதற்காக உயர்வாக இலக்கிடப்பட்ட மற்றும் தனிப்பட்ட தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட தீர்வுகளை உருவாக்கி அதன் வாடிக்கையாளர்களுடன் வங்கி நெருக்கமாக பணியாற்றியது. இக்கட்டான இக்காலப்பகுதியின் போது அதன் அலுவலர்களின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதிசெய்வதற்கு விசேட பேருந்துச் சேகைளை ஏற்பாடுசெய்தல், பணிக்கு தாமதமாகி சமூகமளித்தல் மற்றும் முன்கூட்டியே புறப்படுதலை அனுமதித்தல், தமது விருப்பத்திற்கு ஏற்ப அலுவலக உடையினை அணிவதற்கு அலுவலர்களுக்கு அனுமதியளித்தல், போக்குவரத்து இடையூறுகள் காரணமாக கடமைக்கு அறிக்கையிடும் அலுவலர்களின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்தல் மற்றும் இயலுமான போதெல்லாம் இணையவழி கூட்டங்களை மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல் போன்றன உள்ளடங்கலாக பல்வேறு வழிமுறைகளை தேசிய சேமிப்பு வங்கி நடைமுறைப்படுத்தியது.

இன்னல்களை துணிவுடன் எதிர்த்துநிற்பதற்கான தேசிய சேமிப்பு வங்கியின் இயலுமையானது எமது தொழிற்படையின் அர்ப்பணிப்புக்கும் உறுதியான அத்திவாரமொன்றுக்கு உறுதுணையளிக்கின்ற முன்மதிமிக்க உபாயம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பவற்றை நிறுவியுள்ள பொறுப்புமிக்க ஆளுகைக்கும் சான்றுபகர்கின்றது.

எமது தொழிற்பாடுகளின் உள்ளகப் பின்னணியுடன் பேரண்ட பொருளாதார காரணிகளை கவனமாக சமநிலைப்படுத்துகின்ற

ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனை

அணுகுமுறையினை தேசிய சேமிப்பு வங்கயில் நாம் முன்னெடுக்கின்றோம். எமது மூலதன உள்ளீடுகளும் வெளியீடுகளும் வங்கிக்கும் எமது பங்குதாரர்களுக்கும் மாத்திரமின்றி பரந்தளவில் சமூகத்திற்கும் பெறுமதியினை உருவாக்குகின்ற அதேவேளை சுற்றாடல் நிலைபெறுதன்மைக்கான எமது கடமைப்பொறுப்பினை மீள உறுதிப்படுத்துகின்றோம் என்பதனை இவ் அணுகுமுறை உறுதிசெய்கின்றது. நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கும் நீண்ட கால வெற்றிக்கும் முழுமையான இவ் அணுகுமுறை இன்றியமையாதது என நாம் நம்புவதுடன் அதற்கான எமது அர்ப்பணிப்பில் நாம் திடமாகவுள்ளோம்.

2022 இன் நிதிசார் செயலாற்றுகைத் தொகுப்பு

வங்கித் தொழிற்துறையில் எமது வலிமையினையும் தாக்குப்பிடிக்கும்தன்மையினையும் ஆண்டுக்கான எமது நிதிசார் செயலாற்றுகை எடுத்துரைக்கின்றது. தேறிய வட்டி வருமானத்தின் ரூ. 32.5 பில்லியனை வங்கி பதிவுசெய்து, பிரதானமாக வட்டிச் செலவுகளில் சடுதியான அதிகரிப்பின் காரணமாக ஒரு ஆண்டுக்கு முன்னருடன் ஒப்பிடுகையில் 40.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து, வட்டி வீதங்களில் சடுதியான அதிகரிப்பினால் தூண்டப்பட்டு வட்டிச்செலவுகள், அதே காலப்பகுதியில் ரூ. 140.5 பில்லியனாக 82.9 சதவீதத்தால் உயர்வடைந்தன. தமது ஏற்கனவே காணப்படுகின்ற குறைவான வீதத்தில் அமைந்த நிலையான வைப்புகளை உயர்வான வீதத்தில் அமைந்த நிலையான வைப்புகளுக்கு நகர்த்துவதற்கு வாடிக்கையாளர்களை இட்டுச்சென்று நிலவிய உயர்வான வட்டி வீதச் சூழல் காரணமாக நிலையான வைப்புகள் மீதான வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. வட்டிச் செலவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை இம்மாறுதல் விளைவித்தது.

கடன்கள் மற்றும் முற்பணங்களில் பெரும்பான்மையான பாகம் குறைவான வட்டி வீதச் சூழல் காலப்பகுதியில் நிலையான வீதங்களில் வழங்கப்பட்டிருந்தமையினால் சந்தை வட்டி வீதங்களில் மேல்நோக்கிய அசைவுக்கு மத்தியில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சொத்துப்பட்டியலை 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை மீள்விளையிட வங்கிக்கு இயலாதிருந்தது. மேலும், நியாயமான இலாப எல்லையினை ஈட்டுவதற்கு குறைவான விளைவை தருகின்ற திறைசேரி உண்டியலுடன் ஒப்பிடுகையில் அக்காலத்தில் நீண்ட காலங்களுடன்கூடிய ஒப்பீட்டளவில் உயர்வான விளைவினை தருகின்ற திறைசேரி முறிகளில் முதலிடுவதற்கு எம்மை வற்புறுத்திய எமது வைப்புகளின் 60 சதவீதத்தையும் அதன் மீதான வட்டியையும் அரசாங்க பிணையங்களில் முதலிடுவதற்கு தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் நாம் வேண்டப்பட்டிருந்தோம். எனினும், திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால முதலீடுகள், அதிகரித்த வட்டி வீதங்களுடனான வைப்புகளின் வேகத்தில் மீள்விலையிப்பட்டிருக்கவில்லை.

வங்கித் தொழிற்துறையில் எமது வலிமையினையும் தாக்குப்பிடிக்கும்தன்மையினையும் ஆண்டுக்கான எமது நிதிசார் செயலாற்றுகை எடுத்துரைக்கின்றது. 2022ஆம் ஆண்டின் இறுதியில், வங்கியின் சொத்துத்தளம் 2.4%ஆல் ரூ. 1.62 ரில்லியனாக வளர்ச்சியடைந்தது. இருப்பினும், சந்தை வட்டி வீதங்களில் மேல்நோக்கிய அசைவினால் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சொத்துப்பட்டியலை மீள்விளையிடுவதில் நாம் சவால்களை எதிர்கொண்டோம். கடன்களில் பெரும்பான்மையான பாகம் குறைவான வட்டி வீதச் சூழல் காலப்பகுதியில் நிலையான வீதங்களில் வழங்கப்பட்டிருந்தன. மேலும், நியாயமான இலாப எல்லையினை ஈட்டுவதற்கு குறைவான விளைவை தருகின்ற திறைசேரி உண்டியலுடன் ஒப்பிடுகையில் அக்காலத்தில் நீண்ட காலங்களுடன்கூடிய ஒப்பீட்டளவில் உயர்வான விளைவினை தருகின்ற திறைசேரி முறிகளில் முதலிடுவதற்கு எம்மை வற்புறுத்திய எமது வைப்புகளின் 60 சதவீதத்தையும் அதன் மீதான வட்டியையும் அரசாங்க பிணையங்களில் முதலிடுவதற்கு தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் நாம் வேண்டப்பட்டிருந்தோம். எனினும், திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால முதலீடுகள், அதிகரித்த வட்டி வீதங்களுடனான வைப்புகளின் வேகத்தில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

எமது வைப்புத் தளம், 2022 இல் ரூ. 1.48 ரில்லியனை அடைந்து ஆண்டு காலப்குதியில் ரூ. 48.3 பில்லியனால் (3.4%) அதிகரித்தது. 2022 ஏப்ரலில் இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வீத அதிகரிப்புக்கு இசைவாக வைப்பு

வட்டி வீதங்கள் உயர்வடைந்து, வைப்புகளின் பல உரிமையாளர்கள் தமது ஏற்கனவே காணப்படுகின்ற நிலையான வைப்புகளை முதிர்ச்சிக்கு முன்னர் முடிவுறுத்தி உயர்வான வீதங்களுக்கு சார்பாக முடிவுறுத்துவதற்கு வழிவகுத்தது.

மேலும், நிலவிய உயர்வான பணவீக்க சூழலும் சேமிப்பதற்கான வாடிக்கையாளர்களின் இயலுமையை குறைத்த அதேவேளை, நிலையான வைப்புகளுக்காக வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள் சேமிப்புகளில் இருந்து நிலையான வைப்புகளுக்கு நிதியங்கள் மாறுவதற்கு ஊக்குவித்தது.

அனைத்து இப்புதுமைகளுக்கும் எதிராக, 2022 ஆம் ஆண்டுக்கான எமது வட்டி வருமானம் ரூ. 172.9 பில்லியனை எய்தி 31.6 சதவீத அதிகரிப்பினை அவதானித்தது. எனினும், உயர்வான வட்டி வீதச் சூழலின் காரணமாக நிலையான வைப்புகள் மீதான வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தமை மூலம் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் வட்டிச் செலவுகள் ரூ. 140.5 பில்லியனாக 82.9 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இதன் விளைவாக எமது தேறிய வட்டி எல்லை, முன்னைய ஆண்டில் பதிவாகிய 3.71 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இல் 2.03 சதவீதமாகக் குறைவடைந்தது.

பல்வேறு செலவு மீதப்படுத்தல் உபாயங்கள் மற்றும் முயற்சிகளுக்கு மத்தியிலும் பரந்தளவிலான விலை அதிகரிப்புகளின் காரணமாக ஆளணிச் செலவு, தேய்மானம் மற்றும் மதிப்பிழப்பு அத்துடன் ஏனைய மேன்தலைச் செலவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற தொழிற்படுத்தல் செலவுகள், 2022 இல் ரூ. 21.2 பில்லியனாக உச்சம் தொட்டு 11.12 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது.

சாதகமான நோக்கில், அரசாங்கம் அதன் வெளிநாட்டுப் பொதுப் படுகடனை மறுசீரமைப்பதற்கான அதன் உத்தேசத்தை அறிவித்ததை தொடர்ந்து வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட அரசாங்க பிணைய சாதனங்கள் மீது சாத்தியமான உச்சவரம்புகளை எதிர்பார்த்து அநேகமான வங்கிகள் கணிசமான ஏற்பாடுகளை கொண்டிருந்த தொழிற்துறை சராசரியுடன் ஒப்பிடுகையில், வங்கியின் சேதஇழப்பு அறவீடுகள் குறிப்பிடத்தக்களவு குறைவாவிருந்தன.

அனைத்து விடயங்களையும் பரிசீலனையில் கொள்ளும் போது, 2022 ஆம் ஆண்டானது ஏதுவாகின்ற பொருளாதர சவால்களுக்கு வங்கியின் தாக்குப்பிடிக்கத்தக்க செயலாற்றுகையினை அவதானித்து, ரூ. 4.5 பில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபத்தினையும் ரூ. 2.5 பில்லியன் கொண்ட வரிக்கு பிந்திய இலாபத்தினையும் அறிக்கையிட்டது.

நிதியியல் மூலதனம்

எமது நிதியியல் மூலதனத்தின் முகாமைத்துவத்திற்கு கடுமையாகக் கவனம் செலுத்தப்படுவதுடன் தேசிய சேமிப்பு வங்கியில் வலுவான நிதியியல் நிலையினை உறுதிசெய்வதற்கு நாம் பாடுபடுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு பக்கம் 100 தொடக்கம் 110 வரை.

தொழில் பிரிவுகள் மீளாய்வு

தொழிற்பாடுகளில் பெறுமதியினை உகப்பாக்கம்செய்கின்ற எமது நன்கு சிந்திக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் ஊடாக ஆதரவளிக்கப்படுகின்ற முக்கிய தொழிற்பாட்டுப் பிரிவுகளை வங்கி மேற்பார்வை செய்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு பக்கம் 11 தொடக்கம் 115 வரை.

துறைரீதியான செயலாற்றம்

சில்லறை வங்கித்தொழில், நிறுவன நிதியிடல், சர்வதேச வங்கித்தொழில் மற்றும் திறைசேரி ஆகிய வங்கியின் முக்கிய நாடிகளான அனைத்து நான்கு துறைகளும் ஆண்டு காலப்பகுதியில் சாதகமற்ற சூழல் நிலமைகளினால் குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன.

சில்லறை வங்கித்தொழில்ப் பிரிவு

கொள்கை வட்டி வீத உயர்வின் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட இறுக்கமான நாணய கொள்கை நிலைக்கு பதிலிறுத்தி, தேசிய சேமிப்பு வங்கி கடுமையான கட்டுப்பாடுகளையும் பரிசோதனை நெறிமுறைகளையும் நடைமுறைப்படுத்தி சில்லறை கடன்வழங்கலுக்கு எச்சரிக்கைமிக்க அணுகுமுறை ஒன்றினை முன்னெடுத்தது. பிணைஉறுதி அடிப்படையிலான கடன்வழங்கல் முன்னரிமைப்படுத்தப்பட்டதுடன் அடகுக் கடன்கள் மிதமிஞ்சி ஊக்குவிக்கப்பட்ட அதேவேளை தனிப்பட்ட ரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களுக்கான கடனளவு குறைக்கப்பட்டது.

தொழிற்துறை முழுவதுமான சேதஇழப்பு அதிகரித்தல் மற்றும் வாடிக்கையாளர் எதிர்கொண்ட மீள்கொடுப்பனவு அழுத்தங்கள் என்பவற்றுக்கு மத்தியில் தேசிய சேமிப்பு வங்கி அதன் கடன் சொத்துப்பட்டியலுக்கு 2.8 சதவீதம் கொண்ட தொழிற்துறையின் சராசரி தேறிய செயற்பாடற்ற கடன் விகிதத்தினை விட (மொத்த கடன்களுக்கான தேறிய கட்டம் 3 கடன்கள் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட) குறைவாகவே பேணியது.

நிறுவன நிதியளிப்புத் துறை

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியில் வலுவான சொத்துத் தரத்தை பேணும் பொருட்டு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தித் துறை உள்ளடங்கலாக இடர்நேர்வுமிக்க துறைகளுக்கு கடன்வழங்குவதை குறைப்பதற்கு வங்கி பொதுவாக முயற்சிகளை மேற்கொண்டது. எனினும், முன்னோக்கிச்சென்று கடந்த வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளுக்கு இசைவாக அரசாங்கம் முன்னுரிமைப்படுத்துகின்ற விவசாயம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி போன்ற புதிய தொழிற்துறைகள் மீது கவனம்செலுத்துவதற்கு வங்கி உத்தேசிக்கின்றது. விசேடமாக, தூய சக்தி மீதான அரசாங்கத்தின் வலியுறுத்தலின் காரணமாக மின்சக்தி மற்றும் எரிசக்தி துறையில் குறிப்பாக இணைந்த சுழற்சி மின்சக்தி நிலையங்கள் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (சூரியசக்தி மற்றும் காற்று) துறைகளுக்கு கடன்வழங்கும் வாய்ப்புகளை வங்கி எதிர்பார்க்கின்றது.

சர்வதேச வங்கித்தொழில்ப் பிரிவு

வங்கியானது இலங்கை ரூபாவின் மதிப்பு இறக்கத்தினால் துணையளிக்கப்பட்டு அதன் வெளிநாட்டு நாணய வைப்புத் தளத்தை, 2021 இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 16.4 மில்லியனுக்க எதிராக 2022 இல் ரூ. 10.3 பில்லியனை திரட்டுவதற்கு இயலுமாகவிருந்தது. வங்கித்தொழில் வழிகள் ஊடாக நாட்டினுள் வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமைக்கு மத்தியில், கடந்த ஆண்டின் அதேகாலப்பகுதியில் அறிக்கையிடப்பட ரூ. 57.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இல் ரூ. 71.8 பில்லியன் பெறுமதியுடைய வெளிநாட்டு பண அனுப்பல்களை பெறுவதற்கு இயலுமாக இருந்ததன் மூலம் வங்கி அதன் தாக்குப்பிடிக்கும்தன்மையினை காண்பித்துள்ளது. இதன் விளைவாக, வெளிநாட்டு பண அனுப்பல்களில் சந்தைப் பங்கு 2021 டிசம்பரின் 5.2 சதவீதத்திலிருந்து 2022 டிசம்பரில் உள்ளவாறு 5.73 சதவீத்திற்கு அதிகரித்தது.

தொழிற்துறை போக்கினை பிரதிபலித்து, வங்கியூடாக வழிப்படுத்தப்பட்ட வர்த்தக அளவானது சந்தையில் டொலர் பற்றாக்குறை, அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சி மற்றும் வர்த்தக நிதி வியாபாரத்தை பாரியளவில் பாதித்த வணிகத் தொழில்களை சீராக நடாத்துவதிலிருந்து வாடிக்கையாளர்களை தடைப்படுத்திய நாட்டின் தொடர்ச்சியான முடக்கல் நிலமைகள் என்பன காரணமாக கடுமையான தாக்கத்துக்குள்ளானது. வரவிருக்கும் ஆண்டுக்கான எமது கவனம் முக்கிய வளர்ச்சியை தூண்டுகின்ற துறைகளில் பயன்பெறாத சந்தைகளுக்கு ஊடுருவதன் மூலம் சந்தைப் பாங்கினை அதிகரிப்பதை மையப்படுத்தி இருக்கின்றது.

திறைசேரித் துறை

கடந்த ஆண்டுகளில் அரசாங்கப் பிணையங்கள் வீதங்களில் கணிசமான உயர்வு காணப்பட்டு, 30 சதவீத்தை எய்தியது. அண்மைக்காலங்களில் நாட்டில் அவதானிக்கப்பட்ட உயர்வான மட்டமாக இது இருந்தது. எவ்வாறிருப்பினும், குறைவான வட்டி வீத காலப்பகுதியின் போது வங்கி முதலீடு செய்திருந்த திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மீது சில குறிப்பிடத்தக்க நடப்புச் சந்தை பெறுமதி இழப்புகளை அது அனுபவித்தது.

சர்வதேச நாணய நிதியத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான இணக்கப்பாடானது எதிர்காலத்தில் விளைவுகள் மீதான அழுத்தத்தை குறைக்கின்ற அதேவேளை, மேம்பட்ட பேரண்டப்பொருளாதார அடிப்படைகள், பங்குரிமைமூலதனச் சந்தைக்கு சாதகமான எதிர்கால வாய்ப்பினை வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

போதுமான மூலதனத்துடனும் திரவத்தன்மை மட்டங்களுடனும் கூடிய ஆற்றல்வாய்ந்த சொத்துத் தரம்

தேசிய சேமிப்பு வங்கியின் உறுதிப்பாட்டுக்கு அதன் வலிமையான இடர்நேர்வு முகாமைத்துவமும் பொறுப்புமிக்க ஆளுகையும் காரணமாக அமைகின்றது, குறிப்பாக சமநிலைப்படுத்தப்பட்ட இடர்நேர்வு அணுகுமுறையில் நீண்ட கால உறுதிப்பாட்டினை வங்கி முன்னுரிமைப்படுத்தியுள்ளமையினால் படுகடனை காலந்தாழ்த்தி செலுத்துவதனையும் நீடிப்புக்களையும் முகாமைசெய்வதிலும் இது சான்றாக விளங்குகின்றது.

2022 ஆம் ஆண்டில் சொத்து தரத்தினை பேணுதல் உயர்ந்த பட்ச முன்னுரிமையாக இருந்ததுடன் அதன் வங்கித்தொழில்துறையிலுள்ள இணையான வங்கிகள் மத்தியில் ஆகக்குறைந்த தேறிய செயற்பாட்டற்ற கடன் விகிதங்களிலொன்றை எய்தியது. இடர்நேர்வு உள்ளார்ந்தங்கள் பற்றி ஆளுகை சபை ஆர்வமாக இருந்ததுடன் வங்கியின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான எல்லைகளையும் அனுமதித்தது. வங்கியின் பொறுப்புமிக்க இடர்நேர்வு ஏற்புக்கு இசைவாக தொழிற்படுகின்ற சூழலின் பின்னணியினுள் இடர்நேர்வுமிக்க கடன் அளவுகளை குறைப்பதற்கான தீர்மானங்களை மேற்கொண்டதுடன் அழுத்தம்மிக்க சந்தை நிலமைகளை கொண்ட காலப்குதியில் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமைசெய்கின்ற பொருத்தமான திரவத்தன்மை தாக்க காப்புகளை பேணியது.

வங்கியின் அடுக்கு 1 மூலதன விகிதமும் மொத்த மூலதன விகிதமும் 2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு முறையே 15.78 சதவீதம் மற்றும் 18.0 சதவீதம் ஆக காணப்பட்டதுடன் முறையே 8.0 சதவீதம் மற்றும் 12.0 சதவீதம் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத்திற்கு நன்கு மேல் காணப்பட்டன. வங்கியின் முடுக்கு விகிதமானது தளம்பல்மிக்க மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட திரவத்தன்மை சூழல்களை எதிர்கொண்டமைக்கு மத்தியில் 3 சதவீதம் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத்திற்கு மேல் 7.43 சதவீதமாக காணப்பட்டது.

ஐந்தொகை வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு போதுமான திரவத்தன்மையை பேணுவதில் வங்கியின் தாக்குப்பிடிக்கும்தன்மையானது அதன் வலுவான அத்திவாரத்திற்கும் எதிர்கால வளர்ச்சிக்கு நிதியிடலுக்கான இயலுமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

எதிர்காலச் சான்றுறுதி உபாய வழிகாட்டல் திட்டம்

இலங்கையின் கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றினை தொடர்ந்து வந்த சமூகப் பொருளாதார நெருக்கடியை தாண்டி நாம் நோக்குவதற்கேற்ப நிச்சயமின்மைகள் தொடர்ந்தும் காணப்படும் என்பதுடன் மாற்றமடைகின்ற வாடிக்கையாளர் நடத்தையினை தழுவிக்கொள்வதற்கு வங்கிகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. நிச்சயமின்மைகளுக்கு உணர்வுபூர்வமாக இருக்கின்ற அதேவேளை நீண்ட காலத்தில் செழிப்புறச்செய்வதற்கு வங்கியினை நிலைநிறுத்துவதற்கு எமது குறுகிய காலத்திலிருந்து நடுத்தரமான உபாயங்களை இது வேண்டிநிற்கின்றது. பணிப்பாளர் சபையுடனான எமது கூட்டுமுயற்சி ஈடுபாட்டின் ஊடாக இம்மாற்றங்களுக்கு தொழிலை எவ்வாறு ஏற்றதாக்கி சீர்செய்வது என்பதனை புரிந்துகொள்வதற்கு நிறைவேற்று தலைமைத்துவம் அயராது பாடுபடுகின்றது.

எப்போதும் பரிணாமவளர்ச்சியடைகின்ற சமூக பொருளாதார தோற்றவமைப்பினை செயலாக்கம்மிக்க விதத்தில் எதிர்கொள்வதற்கும் நீண்டகால நிலைபெறுதன்மையை உறுதிசெய்வதற்குமான எமது முயற்சியில், எமது வங்கி அனைத்தையும் உள்ளடக்கிய உபாய மீளாய்வொன்றின் மீது கால்பதித்தது. இம்மீளாய்வானது மாற்றங்களுடனான போக்கை பேணுவது மாத்திரமன்றி எதிர்கால போக்குகளையும் சவால்களையும் எதிர்பார்ப்பதை இலக்காகக் கொண்டது. இச்செயன்முறையின் பெறுபேறானது வெறுமனே அதிகரிக்கின்ற முன்னேற்றத்தை தாண்டி அடுத்த தசாப்தத்தில் மாறுதலடைகின்ற மாற்றத்தினை தொலைநோக்காக கொள்கின்ற தெளிவான எதிர்காலச் சான்றுறுதி உபாயமாக விளங்குகின்றது. எமது மைய விழுமியங்களுடனும் பணியுடனும் இத்தொலைநோக்கு அணிசேர்கின்றது என்பதனை உறுதிசெய்து, சபை இத்தொலைநோக்கினை கடுமையாக மீளாய்வுசெய்து ஆராய்ந்துள்ளது. எமது எதிர்காலச் சான்றுறுதி உபாயத்தின் மையமானது எம்முடன் ஒன்றிணைந்து வளர்ச்சியடைவதற்கும் செழிப்புறுவதற்கும் வாடிக்கையாளர்களை வலுவூட்டுகின்ற "உங்களது தேவையின் வங்கியாளர்" ஆகத் திகழ்வதற்கான எமது அர்ப்பணிப்பாகும். இவ் உபாய மீளமைப்புடன் அதிக வசதிக்குட்படுத்தல், நிலைபெறுதன்மை மற்றும் தாக்குப்பிடிக்கத்தக்க தொழிற்படுத்தும் பின்னணி என்பவற்றை அனைத்து பங்குதாரர்களுக்கும் நன்மையக்கும் வகையில் உருவாக்குவதற்கான எமது இயலுமையில் நாம் நம்பிக்கையாக உள்ளோம்.

உபாயமும் வள ஒதுக்கீடும்

எமது உபாய நிலைநிறுத்தலானது முன்மதிமிக்க இடர்நேர்வு மதிப்பீட்டின் பின்னர் தீர்மானிக்கப்படுகிறது, இதனூடாக வங்கிக்கான் அதிஉயர்வான பாதுகாப்பு மட்டங்கள் உறுதிசெய்யப்படுகின்றது.

விபரங்களுக்கு பக்கம் 70 – 89

வாடிக்கையாளரை மையமாக கொண்ட அணுகுமுறை

உயர்வான வட்டி வீதச் சூழலின் பின்னணியில் அதன் வாடிக்கையாளர்களின் படிப்படியாக வளர்ச்சியடைகின்ற தேவைகளையும் கேள்விகளையும் நிறைவேற்றுவதற்கான பல்வேறு முயற்சிகளை தேசிய சேமிப்பு வங்கி அறிமுகப்படுத்தியது. அவ்வாறான முயற்சிகளில் ஒன்று, நீண்ட கால சேமிப்புக்களுக்காக உயர்வான வட்டி வீதங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்ட பிரார்த்தனா+ சேமிப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியமையாகும். கவர்ச்சிகரமான வட்டி வீதங்களில் சேமிப்பதற்கும் தமது சேமிப்புக்கள் மீது உயர்வான ஆதாயங்களை ஈட்டுவதற்கும் வாடிக்கையாளர்களை இயலச்செய்த பிரார்த்தனா சேமிப்புத் திட்டத்தை வங்கி முனைப்புடன் ஊக்குவித்தது.

இதற்கு மேலதிகமாக, வாடிக்கையாளருக்கு பல்வகைமையினையும் முதலீட்டு தீர்வுகளை வழங்கும் பொருட்டு வங்கி 03 மாதங்கள், 04 மாதங்கள், 07 மாதங்களை கொண்ட காலங்களுடன் கூடிய 03 விசேட நிலையான வைப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தியது. வங்கிக்கு அதிக வைப்புகளை கவருவதற்கும் தமது முதலீடுகள் மீது உயர்வான ஆதாயங்களை ஈட்டுவதற்கு வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்கும் இத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன.

எண்ணியல்படுத்தலைத் தழுவிக்கொள்ளல்

வாடிக்கையாளர்களுக்கான சிறந்த எண்ணியல் வங்கித்தொழில் அனுபவத்தை உறுதிசெய்வதற்காக வங்கியானது 2021 இல் "NSBPay App" என்ற வர்த்தகநாமத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் மொபைல் கொடுப்பனவு செயலியினை தொடங்கி அதன்

பொது முகாமையாளரின்/பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

எண்ணியல் உபாயத்தினை மேம்படுத்துவதில் கணிசமாக முதலிட்டது. இச்செயலியானது வங்கியின் அல்லது வேறு வங்கிகளில் ஏதேனும் வேறு கணக்கிற்கான நிதிய மாற்றல்கள், வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் தொடர்பில் கடன் தவணை கொடுப்பனவுகளை செலுத்துதல், கட்டண பட்டியல் கொடுப்பனவுகள், QR குறியீட்டினை பயன்படுத்துகின்ற கொடுப்பனவுகள், அதன் அழைப்பு நிலையத்துடனான உடனடி இணைப்பு மற்றும் மேலும் பல சேவைகள் போன்ற பல்வேறு வகையான வசதிகளை வழங்குகின்றது.

மேலும், அதே நேர மொத்தத் தீர்ப்பனவு வசதியினை (RTGS) பெற்றுக்கொண்டு, தீர்ப்பனவுகளுக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தைக் குறைக்கின்ற Lanka Pay வலையமைப்பின் முதன்மை உறுப்பினராவதற்கு வங்கியினை இயலச்செய்கின்ற முதலாவது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியாக தேசிய சேமிப்பு வங்கி திகழ்ந்தது.

ஊழியர் ஈடுபாடு

சமவாய்ப்பு வழங்கும் தொழில்தருநர் என்ற வகையில் தேசிய சேமிப்பு வங்கி, 2022 இல் புதிய ஆட்சேர்ப்புகளில் 57 சதவீதமானோரைப் பெண்களாகக்கொண்டு, நிரந்தர ஊழியர்களுக்கிடையில் 55 சதவீதத்தை பெண்கள் பிரதிநிதிப்படுத்துவதையிட்டு பெருமையடைகின்றது. மேலும், சிரேஸ்ட மற்றும் நடுத்தர முகாமைத்துவ பதவிகளில் பெண்கள் முறையே 48 சதவீதத்தையும் 56 சதவீதத்தையும் வகிக்கின்றனர். வங்கி தொழிற்துறையில் உயர்பதவி தொழில்சார் நிபுணராக தேசிய சேமிப்பு வங்கியின் தலைவி பெயரிடப்பட்ட Top 50 Professional and Career Women Awards 2022 நிகழ்வு உள்ளடங்கலாக பல்வேறு தொழில்துறை நிறுவனங்களாலும் பெண்கள் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதற்கான தேசிய சேமிப்பு வங்கியின் அர்ப்பணிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, இலங்கையின் சடின் சஞ்சிகை மற்றும் CIMA Sri Lanka மூலம் தொடர்ச்சியாக 2 ஆவது ஆண்டுக்காகவும் "பெண்கள் சிநேகமிக்க பணியிடம்" ஆக தேசிய சேமிப்பு வங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு ஆதரவளிக்கின்ற பணிச்சூழலை உருவாக்குவதை நோக்கிய வங்கியின் முயற்சிகள் இலங்கைப் பணியிடங்களில் மிகவும் தலைசிறந்த பெண்ணாக தேசிய சேமிப்பு வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்) அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் மேலும் எடுத்தக்காட்டப்பட்டுள்ளது.

பணியிட பாலியல் தொல்லைகளை கையாளுவதற்கு தேசிய சேமிப்பு வங்கி குறிப்பான கொள்கைகளையும் பொறிமுறைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. பெண் ஊழியர்களின் குறைகளை தீர்ப்பதற்கும் அவர்களின் உள மற்றும் உடல் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் துயர் கையாளுகின்ற குழு ஒன்றினை வங்கி 2022 இல் உருவாக்கியது. ஏதேனும் பாகுபாடு அல்லது தொல்லை பற்றிய தமது முறைப்பாடுகளை பெண் ஊழியர்கள் குழுவின் தலைவருக்கு அனுப்பலாம்.

நிலைபெறத்தக்க பெறுமதி உருவாக்கம்

வங்கியின் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு நாம் எமது மூலதன தளத்தை வலுப்படுத்தி செலவுகளை சிக்கனமாக முகாமை செய்கின்ற அதேவேளை நிதியியல் இலக்குகளை அடைவதற்கும் எமது இயற்கை மூலவளங்களை பேணிக்காக்கின்ற விதத்தில் நிலைபெறத்தக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளை உருவாக்குவதற்கும் பாடுபடுவோம். தொழிற்பாட்டு உன்னதத்தினை எய்தவதற்கும் எமது பங்குதாரர்களுக்கு தொடர்ந்தும் பெறுமதியை உருவாக்குவதற்கும், இலத்திரனியல் கற்றலை மையப்படுத்திய கற்றல் கலாசாரத்தை உருவாக்குதல் மற்றும் ஊழியர் அபிவிருத்தி அத்துடன் மனிதவள மற்றும் திறைசேரி முறைமைகளுடன் "மைய வங்கித்தொழில்" தீர்வினை ஒருங்கிணைத்தல் உள்ளடங்கலாக எதிர்காலத்தில் பல வழிமுறைகளைத் தொடங்கவுள்ளோம். இதற்கு மேலதிகமாக, சேமிப்பு மற்றும் கடன் உற்பத்திகளுக்காக தொடக்கத்திலிருந்து இறுதிவரை எண்ணியல் சேவை பெறுவதற்கான நுழைவுடன் எண்ணியல் வங்கிப் பிரிவு ஒன்றினை நிறுவி, எண்ணியல் உற்பத்திகளை அறிமுகப்படுத்துவோம்.

சமூக, சுற்றாடல் மற்றும் ஆளுகை முகாமைத்தவத்தை நாம் முன்னுரிமைப்படுத்துவோம் என்பதுடன் குறைவான காபன் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு பசுமைக் கடன்வழங்கலை அதிகரிப்போம்.

இறுதியில் சமூகத்திற்காக பெறுமதியினை உருவாக்குகின்ற ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாக திகழ்வதே எமது நோக்காகும். எமது தொழிலின் ஒவ்வொரு அம்சத்தையும் இணைப்பதன் வாயிலாக வரவிருக்கும் சவால்களை எதிர்கொள்வதற்கு நாம் உறுதியாக இருக்கின்றோம் என நாம் நம்புகின்றோம். எப்போதும் போன்று, இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சி பெறுவதை உறுதிசெய்வதற்கு அரசாங்கத்துடனும் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுடனும் நாம் இணைந்து பணியாற்றுவோம்.

பாராட்டுதல்கள்

எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, கடந்த ஆண்டின் சவால்களை வெற்றிகொள்வதில் தேசிய சேமிப்பு வங்கிக்கு உதவிய தனிபட்டவர்களையும் நிறுவனங்களையும் பாராட்டுவது எனது கடமையும் கௌரவமும் என நான் உணர்கின்றேன். முதலாவதாக இலங்கையில் பாதுகாப்பான வங்கியாக அதன் நிலையினை பேணுவதற்கு தேசிய சேமிப்பு வங்கியை இயலச்செய்து உறுதியான விசுவாசத்தை கொண்ட எமது வாடிக்கையாளர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். எமது இயலளவுகள் மீதான உங்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை உண்மையில் பாராட்டப்பட வேண்டியதாகும்.

தமது பதவிக்காலம் முழுவதும் ஒப்பற்ற ஆதரவினை வழங்கியமைக்காக வெளிச்செல்கின்ற தலைவி திருமதி. கேசிலா ஜயவர்தன அவர்களுக்கும் பணிப்பாளர் சபைக்கும், அத்துடன் எமது கூட்டான இலக்குகளை அடைந்துகொள்வதற்கு உபாயங்களை திட்டமிட்டு நிறைவேற்றுவதில் விதிவிலக்கான பங்களிப்பை எடுக்துக்காட்டிய முகாமைத்துவ அணி மற்றும் தேசிய சேமிப்பு அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இக்கட்டான இக்காலகட்டத்திற்கு ஊடாக எம்மை வழிநடாத்தியவை அவர்களின் கூட்டான முயற்சிகளும் ஆத்ம சக்தியுமே.

மேலும், வங்கிக்கு இணையற்ற ஆதரவினை வழங்கிய ஆளுகைச் சபைக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். ஆண்டு முழுவதும் அவர்களின் பெறுமதிமிக்க பங்களிப்புகளுக்காக நிதி அமைச்சரான கௌரவ சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், திறைசேரிக்கான செயலாளர் மற்றும் அலுவலர்கள், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அலுவலர்கள், கணக்காய்வாளர், சட்டமா அதிபர், அவரது அணி ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் அவர்களது அணி, அத்துடன் அஞ்சல் மா அதிபர் மற்றம் அஞ்சல் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்தக்கொள்கின்றேன்.

அனைத்து இலங்கையர்களும் தற்போதும் எதிர்காலத்திலும் நம்பியிருக்கின்ற வங்கியாக தேசிய சேமிப்பு வங்கி திகழ்வதினை உறுதிசெய்வதற்கும் ஏதேனும் நெருக்கடிகளை எதிர்த்துநிற்பதற்கும் தேசிய சேமிப்பு வங்கியினுள்ளும் ஏனைய அரச நிறுனங்களுடனுமான தொடச்சியான குழுப்பணி எம்மை இயலச்செய்யுமென நான் உறுதியாக நம்புகின்றேன்.



எம் பி ஏ டபுள்யூ பீரிஸ்
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர்

2023 மே 17

நிச்சயமற்ற நிலைகளின் ஊடாக பயணித்தல்: எமது சூழல் மற்றும் தந்திரோபாயம்

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி
24

ஒருபோதுமில்லாத சமூகப்-பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமின்மைகள்
26

பொருண்மியம்
27

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்
32

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு
70

ஒருங்கிணைந்த அக்கறைதாரார் ஈடுபாடு
90

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி

உலகளாவிய மற்றும் உள்ளூர் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சீர்குலைவுகள்

அக்கறையுள்ள தரப்பினர்

- பங்குதாரர்/ முதலீட்டாளர்
- வாடிக்கையாளர்கள்
- ஊழியர்கள்
- ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள்
- வணிகப் பங்காளர்கள்
- சமூகம் மற்றும் அது சார்ந்த சூழல்

உள்ளீடுகள்

நிதி மூலதனம்

ஓர் திடமான மூலதனத் தளம் மற்றும் வைப்புக்களை ஏற்கும் மற்றும் கடன்களை வழங்கும் தொழிற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கும் சமப்படுத்தப்பட்ட நிதியிடல் சேர்க்கை

- ரூபா. 8.7 பில். காசு மற்றும் காசுக்கு சமமானவை
- ரூபா. 72.9 பில் பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்
- ரூபா. 1.48 திரில்லியன் வாடிக்கையாளர் வைப்புக்கள்
- ரூபா. 44.6 பில். நீண்ட மற்றும் குறுங்கால கடன்படுகைகள்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

உற்பத்தி மற்றும் உற்பத்திகளின் விநியோகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பௌதீக மற்றும் தொழிநுட்பம் உள்ளடங்கலான உட்கட்டமைப்பு

- ரூபா. 14.8 பில். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
- ரூபா. 0.9 பில். மூலதனச் செலவுகள்
- பௌதீக தொடுகைப் புள்ளிகள்
- மெய்நிகர் தொடுகைப் புள்ளிகள்/ எண்ணியல் வழிகள்
- எண்ணியல் உட்கட்டமைப்பு மீதான முதலீடு

மனித மூலதனம்

அர்ப்பணிப்பு மிக்க, வணிக தொழிற்பாடுகள் மீது ஈடுபாடு உடைய மற்றும் உயர் செயற்றிறனுடைய ஊழியர் அணிகள்

- பயிற்சியளித்தல் மற்றும் விருத்தி
- சாதகமான வேலைச் சூழ்நிலை
- திடமான தொழில் உறவுமுறைகளை உருவாக்குதல்
- முக்கிய திறன்களை விருத்தி செய்தல் மற்றும் பிற்தொடர்ச்சி திட்டமிடுதல்
- செயற்றிறன் மற்றும் திறமையை முகாமை செய்தல்
- சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அறிமுகப்படுத்துதல்

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

சமுதாயம் உட்பட பல்வேறு வகையான அக்கறையுள்ள தரப்பினர்களுடனான ஒத்துழைப்பு மிக்க உறவுமுறை

- நீண்டகால வாடிக்கையாளர் உறவுமுறை
- கட்டமைக்கப்பட்ட ஊழியர் ஈடுபாடு
- அரசு மற்றும் ஒழுங்குபடுத்துனர்களுடனான சாதகமான உறவுநிலை
- ஊடகம் மற்றும் சமூகத்துடனான ஈடுபாடு
- வணிகப் பங்காளர்கள் மற்றும் வழங்குநர்களுடன் கூட்டாகச் செயற்படுதல்
- பல்வேறுபட்ட நடவடிக்கைகளினூடாக சமூக ஈடுபாடு

புலமை மூலதனம்

மொத்த மூலதனத்தின் கட்புலனாகா சொத்துகளுக்கு உச்சமாக விளங்குவதுடன் வங்கியின் உள்ளார்ந்த இயலுமை மற்றும் பரந்த அறிவைக் கொண்டிருத்தல்

- ஒருங்கிணைக்கப்பட்ட வியாபார தந்திரோபாயம்
- சிறந்த ஆளுகை நடைமுறை
- தந்திரோபாய நிர்ணயம் மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகளை நிறைவேற்றுவதில் விரைவான அணுகுமுறை
- தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத்தை பயன்படுத்துதல்
- நிறுவனக் கலாச்சாரம்

இயற்கை மூலதனம்


சக்தி, நீர் மற்றும் கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளடங்கலான சூழலியல் முறைமை மற்றும் இயற்கை மூலதனத்தின் எமது இருப்பு

- நீர், காற்று, நிலம் மற்றும் தாதுக்கள் போன்ற வரையறுக்கப்பட்ட வளங்களில் தங்கியிருத்தல்
- உயிர் பல்வகைத்தன்மை மற்றும் சூழலியல் முறைமை

குடியியல் கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் வேலையுலகின் தொடர்ச்சியான மாற்றங்கள்

தொழிற்பாட்டுச் சூழல் பக்கங்கள் 27 இலிருந்து 69

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி



காலநிலை மாற்றத்தினையும் நிலைபெறுதன்மையினையும் முகாமை செய்தல்

அதிகரிக்கப்பட்ட ஒழுங்குறுத்துகை பற்றிய நுண்ணாய்வு

எண்ணியல் சீர்குலைவுகளும் அதிகரித்த போட்டியும்

வெளியீடுகள்	வெளிவரு விளைவுகள்	உருவாக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட நிலைத்திருக்கும் பெறுமதி		ஐ.நா.நி.அ. இலக்குகள் மீதான தாக்கம்
உற்பத்திகள் (பக்கம் 11) i. **வைப்புக்கள்** (15.5% வருடாந்த வளர்ச்சி) சேமிப்பு வைப்புக்கள் தவணை வைப்புக்கள் ii. **கடன் வழங்கல் உற்பத்திகள்** **சில்லறை கடன் வழங்கல்** தனிப்பட்ட கடன்கள் வீடமைப்புக் கடன்கள் அடகு முற்பணங்கள் வாகனக் கடன்கள் வைப்புகளுக்கு எதிரான கடன்கள் **நிறுவனக் கடன்வழங்கல்** நிதி நிறுவனங்க-ளுக்கான நேரடிக் கடன் வழங்கல் கடன் ஒருங்கிணைப்பு செயற்றிட்டக் கடன் வழங்கல	• ரூ 7.8 பில்லியன் வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் • ரூ 2.5 பில்லியன் வரிக்குப் பின் இலாபம் • ரூபா 11.4 பில்லியன் நிறுத்திவைத்த உழைப்பு • ரூபா 821.5 பில்லியன் அரச பிணைகளின் தொகுதி • ரூபா 16.5 பில்லியன் அரசாங்கத்திற்கான பங்களிப்பு	**பின்வருவனவற்றுக்கான நிதியியல் வருமானங்கள்:** • வங்கி • பங்குதாரர்கள் • மூலதன வழங்குநர்கள்	**பின்வருவனவற்றுக்கு உருவாக்கப்பட்ட பொருளியல் பெறுமதி:** • பரந்துபட்ட அக்கறைதாரர்கள் • இலங்கை பொருளாதாரம்	முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள் இரண்டாம்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்
சேவைகள் (பக்கம் 11) உள்முக மற்றும் வெளிநோக்கிய மாற்றல்கள் வர்த்தக நிதி **பெறுமதி கூட்டிய சேவைகள்** அட்டைச் சேவைகள் பயன்பாட்டுப் பட்டியல் கொடுப்பனவுகள் “NSB Pay” செயலி **சூழலியல் நிலைபேறுதன்மை** (பக்கம் 456இலிருந்து 458வரை) மூலப்பிரமாணங்களுக்கு அமைவான GRI உள்ளடக்கச் சுட்டி	• 11,060 புதிய இணைய வங்கி வாடிக்கையாளர்கள் • 293 தானியங்கு கூற்று இயந்திரங்கள் • 97 காசு மீள்சுழற்சி இயந்திரங்கள் • 3,996 தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள் • தகவல் தொடர்பாடல் மற்றும் தொழினுட்ப முறைமைகள், எண்ணியல் தளங்கள், மற்றும் க்ளவுட் சேவைகள்	**சுயசேவை வழிகளினூடாக பெறுமதி முன்மொழிவுகள்** • பெறுமதிச் சங்கிலி முழுவதும் எண்ணியல் நிலைமாற்றம் • வியாபாரத் தொடர்ச்சி • எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பின் நம்பகத்தன்மை	• தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் மேம்பட்ட செயற்றிறன் • நிதியியல் உற்பத்தி சங்கிலிக்கான மேம்படுத்தப்பட்ட அணுகலை மேம்படுத்தல்	முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள் இரண்டாம்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்
	• அதிகளவு எண்ணிக்கையிலான தொழில்தகைமை திறன் வாய்ந்த ஊழியர்கள் • 98.1% உயர் தக்கவைத்தல் வீதம் • 4,528 ஊக்குவிக்கப்பட்ட மற்றும் ஈடுபாடு கொண்ட ஊழியர்கள் • 23,544 பயற்சி மணித்தியாலங்கள் • 99.2% பிரசவ விடுமுறையின் பின் திரும்பல் • 55% பெண் ஊழியர்கள்	**ஊக்குவிக்கப்பட்ட மற்றும் ஈடுபாடு கொண்ட ஊழியர்களாவர்:** • எமது வணிக செயலாற்றுகையை வெற்றிகரமாக இயக்குவதற்கு, எமது வாடிக்கையாளர்களை புரிந்து கொள்ளல் மற்றும் சேவை வழங்குவதற்கான எமது இயலுமையை மேம்படுத்துதல். • எமது நிறுவனம் இலக்குகளை அடைந்து கொள்ளுதல் மற்றும் எமது அக்கறைதாரர்களுக்கான பெறுமதியை உருவாக்குவதற்கான எமது தந்திரோபாயங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளித்தல்.	• எதிர்பாரத நிகழ்வுகள் இடம்பெறும், மாறிவரும் மற்றும் எதிர்வு கூறமுடியாததான சூழலின் அமுத்தங்களின் கீழ் பெறுமதியை உருவாக்குதல். • இலங்கையர்களுக்கான நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்பை உருவாக்குதல்.	முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள் இரண்டாம்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்
	• 13 மில்லியன் வாடிக்கையாளர் கணக்குகள் • 100% உள்நாட்டு வேலைவாய்ப்பு • ரூபா 5.6 பில்லியன் அரசாங்கத்திற்கான பங்களிப்பு	• சமூகத்தின் அனுமதியைப் பேணுதல். • நிதி உள்ளடக்கம். • நீதி, வெளிப்படைத்தன்மை மற்றும் விழுமிய முகாமைத்துவ முறைமை. • நிதி மற்றும் நடுநிலையான கேள்விச் செயன்முறை.	• வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சேவை விநியோகம் தொடர்பில் வாடிக்கையாளர் எதிர்பார்ப்பை விட அதிகமாக வழங்குதல்.	முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள் இரண்டாம்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்
	• PCI DSS சான்றிதழுடன் இணக்கப்பாடு • சர்வதேச நியமங்கள் மற்றும் அடுத்த தலைமுறை அம்சங்களுக்கு இணக்கமான முறையில் இடர் நிகழ்வுத் துலங்கல் இயலுமைகளைப் பேணும் வகையில் தகவல் பாதுகாப்பு பிரிவு மற்றும் ஒரு மூன்றாம் தரப்பு நிர்வாகத்தின் கீழ், 24/7 பாதுகாப்பு செயற்பாட்டு மையம் (SOC) • கைத் தொலைபேசி செயலி • மனித வளத் தகவல் முறைமையின் (HRIS) முதல் கட்டத்தை நடைமுறைப்படுத்தியமை, விடுமுறை, வருகை மற்றும் ஊழியர் தகவல் முகாமை ஆகியவற்றை தன்னியக்கமாக்குதல் • வங்கியின் அனைத்து தகவல் முறைமை தொழிநுட்ப அமைப்புகளையும் உள்ளடக்கும் வகையில் தன்னியக்க தரவு வகைப்பாடு வசதியுடன் கூடிய தரவு கசிதலை தடுக்கும் (DLP) முறைமையை வங்கி செயற்படுத்தியது. • தொகுதிச்சங்கிலி தொழிநுட்பத்துடன் e-KYC தொடங்கப்பட்டது.	• வலுவான வர்த்தகநாம நிலை. • தொடர்ச்சியாக AAA கடன் தரப்படுத்தலை பேணுதல். • வைப்புக்களுக்கும் அவற்றின் மீதான வட்டிக்கும் 100% அரசாங்க உத்தரவாதம். • பரந்துபட்ட தனித்துவமான பொருட்கள் மற்றும் சேவைகள்.	• நிதி உள்ளடக்கம்	முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள் இரண்டாம்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்
	• 29,218 GJ சக்தி நுகர்வு • 70,430 கன மீட்டர் நீர் நுகர்வு • ரூபா 5.8 மில் சுற்றுச் சூழல் கடன்கள் வழங்கப்பட்டது • 47 கிளைகள்/வலயங்கள் சூரிய சக்திக்கு மாற்றப்பட்டன	• குறைந்த காபன் வழித்தடம் கொண்ட வணிகத் தொழிற்பாடுகள். • நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைய இலங்கை அரசுக்கு ஆதரவளித்தல். • பொறுப்புணர்வுடனான நுகர்வு மற்றும் கடன் வழங்கல்.	• பசுமை மற்றும் சக்தி வினைத்திறன் தொடர்பில் முன்னெடுப்புக்கள் • விரைவான எண்ணியாக்கம்.	முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள் இரண்டாம்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்

உரு 3

எமது நிலைபேறான பெறுமதி உருவாக்க மாதிரி

ஒருபோதுமில்லாத சமூகப் - பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமின்மைகள்

2019 இல் உயித்த ஞாயிறு தாக்குதல்கள் அத்துடன் தொடர்ந்து வந்த ஆண்டில் கொவிட்-19 நோய்த்தொற்று என்பன மூலம் இலங்கைப் பொருளாதாரம் அடிமட்டத்தை எட்டியது. பரவலான சமூக-பொருளாதார மற்றும் அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் அதிகரித்து வருகின்ற சென்மதி நிலுவை நெருக்கடியானது 2022 ஏப்ரலில் வெளிநாட்டுக் படுகடனை உத்தியோகபூர்வமாக நாடு செலுத்தத் தவறுவதற்கு வழிவகுத்தது.

2019 – உயித்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் வரிக் குறைப்புகள்

ஏப்ரல்

தீவிரவாதிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட தற்கொலை தாக்குதலில் தேவாலயங்கள் மற்றும் சொகுசு ஹோட்டல்களை இலக்குவைத்து தொடர் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றன. நாட்டின் முக்கிய வெளிநாட்டுச் செலவாணி மூலமான சுற்றுலாத் துறையினை குண்டுவெடிப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் பாதித்தன.

நவம்பர்

சனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கணிசமான வரி சீர்திருத்தங்களை அறிவித்தார். பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% இலிருந்து 8% ஆகக் குறைக்கப்பட்டதுடன் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி போன்ற ஏனைய பல வரிகள் இல்லாதொழிக்கப்பட்டன. வரிகள் குறைக்கப்பட்டமை அரசாங்க வருவாய் குறிப்பிடத்தக்களவு குறைவடைவதற்கு வழிவகுத்தது.

2020 கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்விளைவுகள் மற்றும் குறிப்பிடத்தக்க வரி குறைப்புகளின் எதிர்விளைவுகள் என்பவற்றிலிருந்து இலங்கை மீண்டு வருவதற்கு முன்னர், கொவிட்-19 நோய்தொற்று, உலகம் முழுவதற்கும் வியாபித்தது. இதன் விளைவாக, இலங்கையின் வெளிநாட்டு பணவனுப்பல்களும் சுற்றுலா வருவாய்களும் வீழ்ச்சியடைந்ததுடன் ஏற்கனவேயுள்ள அதன் வெளிநாட்டு ஒதுக்குகளைப் பயன்படுத்தி கணிசமான அரசாங்க படுகடனுக்கு நிதியளிப்பதற்கு நாடு தள்ளப்பட்டது.

2021 – வளமாக்கி இறக்குமதி மீதான தடை

ஏப்ரல்

சேதன வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, அரசாங்கம், இரசாயன உரங்களின் இறக்குமதியையும் பயன்பாட்டையும் தடைசெய்தது.

வளமாக்கி மீது தடை விதித்தமை, நெல் மற்றும் தேயிலை போன்ற முக்கியமான பயிர்களின் விளைச்சல் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. இதனால் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, உயர்வான இறக்குமதிகளுக்கும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் மீதான அழுத்தம் அதிகரிப்பதற்கும் இட்டுச்சென்றது.

நவம்பர்

நாடளாவிய ரீதியில் விவசாயிகளின் போராட்டத்திற்கு மத்தியில் தடை நீக்கப்பட்டதுடன் ஐ. அ. டொலர் 200 மில்லியன் கொண்ட இழப்பீட்டுத் பொதி அறிவிக்கப்பட்டது.

2022 – சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி

மார்ச்

இலங்கை கடுமையான வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறையை எதிர்கொண்டதுடன் எரிபொருள், மருந்துகள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதிசெய்ய முடியாதிருந்தது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொளவனவுசெய்வதற்கான நீண்ட வரிசைகள் எனபவற்றுக்கு மத்தியில் நாடு நீடித்த மின் துண்டிப்பை எதிர்கொண்டது.

மே-ஜூலை

வீதியில் இறங்கி மக்கள் போராட்டம் நடத்தியதன் மூலம் பொருளாதார நெருக்கடி வேகமாக அரசியல் நெருக்கடியாக பரிணமித்து, சனாதிபதியும் அரசாங்கமும் பதவிலகுவதற்கு வழிவகுத்தது.

ஏப்ரல்

வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு இடைநிறுத்தப்படுவதாக அதிகாரப்பூர்வமாக நாடு அறிவித்து, படுகடன் மறுசீரமைப்பு பற்றி சர்வதேச கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது.

2023 – சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய மறுசீரமைப்புகள்

புதிதாக நியமிக்கப்பட்ட சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களும் அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதற்கு தீர்மானித்ததுடன் சுமார் ஐ.அ.டொலர் 3 பில்லியன் கொண்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 48 மாதங்கள் நீட்டிக்கப்பட்ட வசதியொன்று 2023 மார்சில் அங்கீகரிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழான மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பின்வரும் கொள்கை வழிமுறைகள் மீது முன்னுரிமைப்படுத்தப்படலாம்:

வருவாய் - அடிப்படையிலான இறைவரித் திரட்சிப்படுத்தல்

நிலையான விலைகள் மற்றும் நாட்டில் முதலீட்டுக்கும் வளர்ச்சிக்குமான சூழலைப் பேணிவளர்த்தல் ஊடாக விசேடமாக வறுமையானவர்கள் மீதான பணவீக்கத்தின் சுமையை இல்லாதொழித்தல். நெகிழ்வுமிக்க செலாவணி வீதக் கட்டமைப்பின் ஊடாக சர்வதேச சந்தைகளில் இருந்து அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான இலங்கையின் இயலுமையினை மீள நிலைப்படுத்தல்.

பொதுப் படுகடன் நிலைபெறுதன்மையை மீள நிலைப்படுத்தல்

அரசாங்க நடவடிக்கைகளுக்கான நிலையான நிதியிடலை உறுதிசெய்வதற்கு படுகடன் மறுசீரமைத்தல்.

நெகிழ்வுமிக்க செலாவணி வீதக் கட்டமைப்பின் கீழ் வினை உறுதிப்பாட்டை மீள நிலைப்படுத்தலும் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புதலும்.

நிலையான விலைகள் மற்றும் நாட்டில் முதலீட்டுக்கும் வளர்ச்சிக்குமான சூழலைப் பேணிவளர்த்தல் ஊடாக விசேடமாக வறுமையானவர்கள் மீதான பணவீக்கத்தின் சுமையை இல்லாதொழித்தல். நெகிழ்வுமிக்க செலாவணி வீதக் கடடமைப்பின் ஊடாக சர்வதேச சந்தைகளில் இருந்து அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான இலங்கையின் இயலுமையினை மீள நிலைப்படுத்தல்.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்கான கொள்கைகள்

ஆரோக்கியமான மற்றும் போதுமானளவில் மூலதனமாக்கப்பட்ட வங்கித்தொழில்முறைமையை உறுதிசெய்தல் மற்றும் நிதியியல் துறை பாதுகாப்பு வலைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களையும் தரமுயர்த்தல்.

ஊழலினால் பாதிக்கப்படும்தன்மைகளைக் குறைத்தல்

சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியின் ஆதரவுடன் இறைசார்ந்த வெளிப்படைத்தன்மையினையும் அரசாங்க நிதியியல் முகாமைத்துவத்தையும் மேம்படுத்தல், ஊழலுக்கெதிரான வலுவான சட்டக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல், மற்றும் ஆளுகை பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொள்ளுதல்

பொருண்மியம்

நிச்சயமற்ற நிலைகளினூடாக பயணித்தல்

2022ஆம் ஆண்டானது உயர்ந்த தளம்பல் நிலைகளைக் கொண்டிருந்ததுடன், இலங்கைப் பொருளாதாரத்திற்கு நிலையற்ற வருடமாகவும் காணப்பட்டது. 2019இல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் மற்றும் 2020 இல் கொவிட்-19 பெருந்தொற்றிலிருந்து ஆரம்பித்து அதன் பின்பு நிகழ்ந்த பல நிகழ்வுகளின் தொடர்ச்சி இலங்கைப் பொருளாதாரத்தை 2022இல் முற்றிலுமாக வீழ்ச்சியுறச் செய்தது.

வங்கித் துறையானது, திரவத்தன்மை பற்றாக்குறை, எல்லைகள் மீதான அழுத்தம், வாடிக்கையாளர்களின் கடன் திருப்பிச் செலுத்துதலில் ஏற்பட்ட தாமதம், சொத்து தரத்தில் ஏற்பட்ட பாதிப்பு உள்ளடங்கலாக பல்வேறு பரிணாமங்களின் ஊடாக பாதிப்புற்றது. இருப்பினும், புதிய அரசாங்கத்தின் நியமனம் மற்றும் சர்வதேச நாணய சபையினால் அனுமதியளிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் மூலம் நிச்சயமற்ற காலத்தை கடக்க முடிந்தது. வங்கித் துறையானது, வாடிக்கையாளர் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் நிதியியல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை மீள வடிவமைப்பதில் முக்கிய பங்கை ஆற்றுகின்றது. இது வங்கிகள் வாடிக்கையாளர் தேவைகளை புரிந்து கொள்ளுதல், மீளெழுச்சியை உறுதி செய்யும் முகமாக தந்திரோபாயங்களை மீளாய்வு மற்றும் சிறிய மாறுதல்களைச் செய்தல் மற்றும் நிச்சயமற்ற நிலைகளால் ஏற்படும் சவால்களை புத்தாக்க முறையில் எதிர்கொள்ளல் என்பனவற்றை வேண்டி நிற்கின்றது.

ஆகவே, தளம்பலான சூழல், புதிய சவால்களுக்கு முகம் கொடுத்தல் மற்றும் மீட்சிக்கான ஆதரவளித்தல் மத்தியில் தாங்குதிறனுடனும் நீண்டகாலப் போக்கில் நீடித்து நிலைத்திருப்பதற்கும் வங்கியானது, பிரத்தியேகமான பொருளாதார சூழமைவிலிருந்து எழும் விடயங்களையும் வங்கி மற்றும் அதன் அக்கறைதாரர்களுக்கு பொருத்தமானதாகவுள்ள ஏனைய வளர்ந்து வரும் போக்குகளையும் இனங்காணுவதற்கு அதன் வெளியகச்சூழலை பகுப்பாய்வு செய்தது.

பெறுமதி உருவாக்கத்தை கணிசமானளவு பாதிக்கக்கூடிய பொருண்மிய விடயங்களைத் தீர்மானிக்கும் பொருண்மிய மதிப்பீட்டுச் செயன்முறையைத் தொடர்ந்து, இனங்காணப்பட்ட விடயங்கள் தொழிற்பாட்டு சூழலில் வங்கி பாரிய போக்குகள் என கருதும் ஐந்து கருப்பொருட்களின் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தளம்பலான சூழல் மற்றும் புதிய சவால்கள்

- விசேட பொருளாதார சூழல்
- வளர்ந்து வரும் போக்குகள்

↓

ஐந்து பாரிய போக்குகள்

- உலகளாவிய மற்றும் உள்ளூர் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சீர்குலைவுகள்
- குடியியல் கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் வேலையுலகின் தொடர்ச்சியான மாற்றங்கள்
- எண்ணியல் சீர்குலைவுகளும் அதிகரித்த போட்டியும்
- அதிகரிக்கப்பட்ட ஒழுங்குறுத்துகை பற்றிய நுண்ணாய்வு
- காலநிலை மாற்றத்தினையும் நிலைபெறுதன்மையினையும் முகாமை செய்தல்

இடர் மற்றும் வாய்ப்புக்கள்

ஐந்து பாரிய போக்குகளிலிருந்து இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் இனங்காணப்பட்டன.

↓

பொருண்மியம்

ஒவ்வொரு ஐந்து பாரிய போக்குகளின் கீழேயும் பொருத்தமான பொருண்மிய விடயங்கள் இனங்காணப்பட்டன.

(பக்கம் 30 ஐ பார்க்கவும்)

பொருண்மிய மதிப்பீட்டு செயல்முறை

பொருண்மிய மதிப்பீட்டு செயல்முறையானது **ஒருங்கிணைந்த சிந்தனையில்** நமது ஒரு முக்கிய அம்சமாகும். இது எமது வணிகம் மற்றும் அக்கறைதாரர்களின் மதிப்புருவாக்கத்தில் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்கிறது.

காலப்போக்கில் எங்கள் அக்கறைதாரர்களுக்கான மதிப்புருவாக்கும் திறனை கணிசமாக பாதிக்கும் காரணிகளாக எங்கள் கருப்பொருள்களை வரையறுக்கிறோம். குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால அளவில் மதிப்புருவாக்க திறனை பாதிக்கும் விடயங்களை கண்டறிய **ஒருங்கிணைந்த சிந்தனை** அணுகுமுறையை நாம் பயன்படுத்துகிறோம். இந்த விடயங்கள் இடர்களை நிர்வகிப்பதற்கும் வாய்ப்புக்களை அதிகரிக்கவுமான எங்கள் உத்திகளை அறிவிக்கின்றன. அவை எமது தொழிற்பாட்டுச் சூழலில் கருத்திற்கொள்ளவேண்டிய பாரிய போக்குகளை பிரதிநிதித்துவப்படுத்துவப்படுத்தும் வகையில் ஒட்டுமொத்தமாக ஐந்து கருப்பொருட்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

வங்கியின் மூலோபாயத்துடன் பொருண்மிய தலைப்புக்களை அடையாளம் கண்டு ஒருங்கிணைக்கும் செயல்முறைகளை கடந்த சில வருடங்களாக நாங்கள் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம்.

பொருண்மியம்

பொருண்மிய விடயங்களை தீர்மானிக்கும் செயல்முறை கீழே அமைக்கப்பட்டுள்ளது:

நமது மதிப்புருவாக்கத்தில் தொழிற்பாட்டுச் சூழலின் தாக்கம் பற்றிய ஆய்வு
(பக்கம் 32 – நாம் தொழிற்படும் விதத்தை பாதிக்கும் பாரியபோக்குகள்)

சபை மற்றும் துணைக்குழுக்களின் முக்கியமுடிவுகளின் ஆய்வு
(பக்கம் 199 – நிர்வாக துணைக்குழு அறிக்கைகள்)

எமது அக்கறைதாரர்களின் நலன்கள் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களின் மதிப்பாய்வு
(பக்கம் 90 – ஒருங்கிணைந்த அக்கறைதாரர்களின் ஈடுபாடு)

பிற உள்ளீடுகள்
ஊடக ஆய்வுகள்
சக ஊழியர்களின் ஆய்வுகள்
வெளியக ஆய்வு வெளியீடுகள்

மூலோபாய நோக்கங்களை அடைவதற்கான வங்கியின் இயலுமையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் மற்றும் இடர்களின் மதிப்பாய்வு
(பக்கம் 32 – நாம் தொழிற்படும் விதத்தை பாதிக்கும் பாரியபோக்குகள்)
(பக்கம் 208 – இடர் மீளாய்வு)

ஒருங்கிணைந்த சிந்தனையை
பயன்படுத்தும் முறையான மற்றும் தொடர்ச்சியான உள் செயல்முறைகளின் அடிப்படையில் எமது பொருண்மிய அம்சங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. தொழிற்பாட்டு சூழலை கருத்திற்கொண்டு எமது வணிகச் சூழலை பகுப்பாய்வு செய்ய விரிவான ஆய்வு நடத்தப்படுகிறது. எமது வளங்கள், உள் அறிக்கைகள், அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் உள்ளீடுகள் மற்றும் எமது அக்கறைதாரர்களிடமிருந்து பின்னூட்டல்கள் (உள்ளக மற்றும் வெளியக), நிதி, நற்பெயர், செயல்பாடு, சுற்றுச்சூழல், சமூகம், மூலோபாயம் அல்லது சட்டமியற்றும் முக்கியமான விடயங்கள் இந்த செயன்முறையின் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

முன்னுரிமைப்படுத்தல்

இந்தப் பகுப்பாய்வின் முடிவுகளைப் பயன்படுத்துதல் மற்றும் பொருண்மிய வரைபடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, அடையாளம் காணப்பட்ட இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள், எமது மூலோபாயத்தை செயல்படுத்துவதற்கும் எமது அக்கறைதாரர்களுக்கு குறுகிய, நடுத்தர, நீண்ட காலத்திற்கு நிலையான மதிப்பை உருவாக்குவதற்கும் மிகவும் முக்கியமான விடயங்களுக்கு நாம் முன்னுரிமையளிக்கிறோம்.

எமது பொருள் விடயத்திற்கு நாம் எவ்வாறு முன்னுரிமையளிக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள பக்கம் 30இலுள்ள பொருண்மிய வரைபடத்தை பார்க்கவும்.

ஒருங்கிணைத்தல்

மூலோபாய நோக்கங்களுக்கான எமது ஒருங்கிணைந்த அணுகுமுறையை வழிநடத்தும் ஐந்து மூலோபாய முன்னுரிமைகளில் சூழல்சார்மயமாக்குவதன் மூலம் பொருண்மிய விடயங்கள் எமது மூலோபாயத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் எமது ஆறு மூலதனங்களுக்கு இடையேயான வர்த்தக விட்டுக்கொடுத்தல்களின் மதிப்பீட்டின் மூலம் எமது முடிவெடுக்கும் மற்றும் மதிப்பு உருவாக்கும் செயன்முறைகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவற்றின் தாக்கத்தை மதிப்பீடு செய்து மதிப்புருவாக்கத்தில் ஏற்படும் இடையூறுகளை தணிக்க பொருத்தமான உத்திகளை வகுத்து அதிக மதிப்பை உருவாக்கும் காரணிகளை மூலதனமாக்குவதன் மூலம் நாம் பதிலளித்தோம்.

மதிப்பிடுதல்

மூலோபாய நோக்கங்களை வழங்க அடையாளம் காணப்பட்ட முக்கிய செயல்திறன் பகுதிகள் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் ஆகியவற்றை பயன்படுத்தி உத்திக்கு எதிராக எமது செயல்திறனை கண்காணிக்கிறோம்.

மேலும் எமது மூலோபாயத்தின் பொருத்தத்தை உறுதி செய்வதற்காக எமது வருடாந்த மூலோபாய திட்டமிடல் பட்டறையில் விடயங்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

பொருண்மிய வரைச்சட்டம்

அக்கறைதாரர்களின் பரிசீலனை நிலை, எமது வணிகத்தின் நம்பகத்தன்மை மீதான தாக்கத்தின் அளவு, அக்கறைதாரர்களினூடான உறவு மற்றும் தலைப்பு எல்லை அடிப்படையில் அடையாளங்காணப்பட்ட இடர்கள் பொருளியல் வரைச்சட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொருண்மிய விடயமும் பின்வருமாறு மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.



ஒவ்வொரு பொருண்மிய விடயத்தின் கீழும் பொருத்தமான வகைப்படுத்தல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020இல் கொவிட்-19 நோய்ப்பரவல் பொருளாதார சிதைவு, எமது மக்களின் பாதுகாப்பு, எமது தொழிற்பாடுகளின் மீளெழுச்சி, எமது நிதிநிலைமைக்கூற்றின் வலிமை, புதிய வழக்கத்திற்கு ஈடு கொடுத்தல் மற்றும் வாடிக்கையாளர் மற்றும் சமூகத்தின் நிதிசார் பாதுகாப்பு போன்ற புதிய பொருள் தலைப்புக்களை முன்வைத்தது. அதன்படி, 2021இல் எமது செயற்பாடுகளை பாதிக்கக்கூடியவை மற்றும் எமது அக்கறைதாரர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை எனும் அடிப்படையில் 12 புதிய பொருண்மிய சிக்கல்கள் அடையாளம் காணப்பட்டன.


2022இல் மேலதிக அடி எடுத்து, எமது தொழிற்பாட்டுசூழலை பாரியளவில் மாற்றியமைக்கும் சவால்கள் மிகுந்த பேரினப் பொருளாதாரம் மற்றும் புதிதாக தோன்றுகின்ற விடயங்களுடன் ஒத்திசையும் வகையில் எமது பொருண்மிய ஆய்வை மேம்படுத்தியுள்ளோம். இவை உள்நாட்டிலும் உலக அளவிலும் தொடர்ந்து வளர்ச்சியடைவதுடன் குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கு தோன்றுகின்ற புதிய சவால்கள் மற்றும் இடர்களை தெரிவிக்க விரும்புகின்றோம். சபையும் முகாமையும் தொடர்ந்து நிலைமையை தீவிரமாக கண்காணித்து எமது நிதிப் பலத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் எமது வாடிக்கையாளருக்கும் சமூகத்திற்கும் இந்த சவாலான காலங்களில் ஆதரவளிப்பதை உறுதிப்படுத்தவும் எமது பின்னூட்டலையும் மாற்றியமைக்கிறது.

2021இல் இனங்காணப்பட்ட பொருண்மிய விடயங்கள்	2022இல் பொருண்மிய விடயங்களில் ஏற்பட்ட மாற்றங்கள்
பொருளாதார சிதைவு வணிக மற்றும் தொழிற்பாட்டு மீளெழுச்சி	**இவ்விரண்டு பொருண்மிய விடயங்களும் ஒன்றிணைக்கப்பட்டு 'பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிச்சயமின்மைக்கிடையே வணிக மீளெழுச்சி' எனும் புதிய பொருண்மிய விடயம் இனங்காணப்பட்டது**
நிதிசார் நிலைபேறான தன்மை சந்தைத் தளம்பலை முகாமை செய்தல்	**ஒன்றிணைக்கப்பட்டு 'நிதிசார் நிலைபேறான தன்மை மற்றும் இலாபத்தன்மை' யாக மாற்றம் பெற்றது.**
புதிய வழக்கத்துக்கு ஈடு கொடுத்தல்	**இற்றைக்கு பொருத்தமின்மையால் நீக்கப்பட்டது**
சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	**'ஊழியர் பெறுமதி மையப்படுத்தல்' கீழ் மீளவகைப்படுத்தப்பட்டது.**
திறன்கள் மற்றும் ஆற்றல்கள் ஊழியர் பெறுமதி மையப்படுத்தல் இணையவழி அச்சுறுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்பு எண்ணியல் நிலைமாற்றம் வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம் புத்தாக்கம் மற்றும் விரைவுத் தன்மை நிதிசார் குற்றங்கள்	**மாற்றமின்றி காணப்படுகின்றது**
சட்ட மற்றும் ஒழுங்குவிதிமுறை இணக்கப்பாடு	**நீக்கப்பட்டதுடன் 'ஆளுகை மற்றும் இணக்கப்பாடு' எனும் பரந்த வகைப்படுத்தலின் கீழ் புதிய பொருண்மிய விடயமாக இனங்காணப்பட்டது**
சுற்றுச்சூழல் மீளெழுச்சி	**நீக்கப்பட்டதுடன் 'பொறுப்புடன் கூடிய நிதியீட்டம்' மற்றும் 'எமது கரிம வழித்தடத்தை முகாமை செய்தல்' எனும் இரண்டு புதிய பொருண்மிய விடயங்கள் இனங்காணப்பட்டன.**


பொருண்மியம்

தொழிற்பாட்டுச் சூழலின் கீழ் அடையாளம் காணப்பட்ட ஐந்து பாரிய போக்குகளின் கீழ் எமது பொருண்மிய விடயங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை பற்றிய விரிவான ஆய்வு "நாம் தொழிற்படும் விதத்தை பாதிக்கும் பாரியபோக்குகள்" எனும் தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன.


உரு 4



இந்த பொருண்மிய சிக்கல்கள் மூன்று முக்கிய பிரிவுகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.



வங்கி மற்றும் எமது அக்கறைதாரர்களை பாதிப்பதன் அளவைக் கொண்டு, நாம் விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து கீழே உள்ள பொருண்மிய வரைபடத்தில் அவற்றை திட்டமிட்டுள்ளோம்.



உரு 5

பொருன்மிய விடயம்	மேற்தொகுதி (வழங்குநர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள்)	வங்கி நடவடிக்கைகள்	கீழ்தொகுதி (வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் சமூகம் மற்றும் சூழல்)
பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிச்சயமின்மைக்கிடையே வணிக மீளெழுச்சி	✓	✓	✓
நிதிசார் நிலைபேறான தன்மை மற்றும் இலாபத்தன்மை	✓	✓	✓
திறன்கள் மற்றும் ஆற்றல்கள்		✓	✓
ஊழியர் பெறுமதி மையப்படுத்தல்			✓
எண்ணியல் நிலைமாற்றம்	✓	✓	✓
புத்தாக்கம் மற்றும் விரைவுத் தன்மை	✓	✓	
வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம்		✓	✓
ஆளுகை மற்றும் இணக்கப்பாடு	✓	✓	
இணையவழி அச்சுறுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்பு	✓	✓	✓
நிதிசார் குற்றங்கள்	✓	✓	✓
எமது கரிம வழித்தடத்தை முகாமை செய்தல்		✓	✓
பொறுப்புடன் கூடிய நிதியீட்டம்	✓	✓	

அட்டவணை 2

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

1 உலகளாவிய மற்றும் உள்ளூர் சமூக-அரசியல் மற்றும் பொருளாதார சீர்குலைவுகள்

பொருளாதார வளர்ச்சி

உலகளாவிய தொழிற்பாட்டு சூழல்

கொவிட் -19 தொற்றுநோயின் தொடர்ச்சியான பரவல் ரஷ்யா - உக்ரைன் போர் மற்றும் அதன் விளைவாக உணவு மற்றும் எரிசக்தி நெருக்கடிகள், அதிகரித்து வரும் பணவீக்கம், கடன் இறுக்கம் மற்றும் காலநிலை அவசரநிலை உள்ளிட்ட தொடர்ச்சியான அதிர்ச்சிகளால் 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் அமெரிக்கா (US), ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் பிற வளர்ந்த பொருளா தாரங்களில் வளர்ச்சி வேகம் கணிசமாக பலவீனமடைந்தது.

இது உலகப் பொருளாதாரத்தின் மற்ற பகுதிகளை மோசமாக பாதித்தது. இந்த எதிர்மறையான தாக்கங்கள் பொருளாதார மீட்சியின் வேகத்தை குறைத்துள்ளன, பல வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளை 2023 ஆம் ஆண்டில் வரவிருக்கும் பொருளாதார மந்த நிலையுடன் அச்சுறுத்துகின்றன.

ஐக்கிய அமெரிக்கா

அமெரிக்கா 2021 ஆம் ஆண்டில் வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை 5.9% ஆக பதிவு செய்தது. 1984-க்குப் பிறகு இது ஒரு காலண்டர் ஆண்டில் மிக வேகமானது. பொருளாதார வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2.1% ஆக குறைந்தது, இது 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் எதிர்மறை வளர்ச்சி விகிதங்களை இரண்டாம் அரையாண்டில் மிதமான வளர்ச்சியாக மாற்றியது. நுகர்வோர் செலவினங்கள் மற்றும் பெருநிறுவன இலாப வளர்ச்சி ஆகியவை சவாலான சூழலில் உறுதியுடன் இருந்தன.


ஐரோப்பா

ஐரோப்பா எரிசக்தி பற்றாக்குறையின் அபாயத்தை எதிர்கொள்கிறது. அதே நேரத்தில் உற்பத்தியாளர்கள் மற்றும் குடும்பங்கள் அதிகரித்து வரும் விலைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. மோசமடைந்து வரும் வணிகம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை, அதிகரித்து வரும் வட்டி விகிதங்கள் மற்றும் குறைந்த உலகளாவிய ஏற்றுமதி கேள்வி காரணமாக யூரோ வலய பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் 3.5% ஆக வளர்ந்தது மற்றும் 2023 ஆம் ஆண்டில் 0.8% ஆக கணிசமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீனா

"பூச்சிய - கோவிட்" கொள்கை, பலவீனமான உலகளாவிய கேள்வி மற்றும் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய இடையூறு காரணமாக பொருளாதார விரிவாக்கத்தின் வேகம் 2021 இல் 8.4% இல் இருந்து 2022 இல் 3.0% ஆக குறைந்தது. நுகர்வோர் மற்றும் வணிக உணர்வு 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மந்தமாக இருந்தது. மேலும் சீனாவின் மந்தநிலை உலகளாவிய வர்த்தக வளர்ச்சி மற்றும் சர்வதேச பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது. மேலும் சீனாவின் அதிகாரப்பூர்வ உற்பத்தி கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (PMI) செப்டம்பர் 2022 இல் 50.1 ஐ எட்டியது. இது பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்றத்தைக் குறிக்கிறது. ஆனால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்தான பலவீனமான கேள்வி எதிர்கால வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். தொற்றுநோய் கட்டுப்பாடுகளால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சீனாவின் ஆதனச் சந்தையானது, கூடுதல் நிதி மற்றும் நிதிக் கொள்கை தளர்வுகள், வயதானவர்களுக்கான புதிய தடுப்பூசி இலக்குகள் மற்றும் முடிக்கப்படாத நிலவுடமை வியாபார திட்டங்களை முடிக்க வழங்கப்பட்ட ஆதரவு ஆகியவற்றால் உந்தப்பட்ட ஆதன உருவாக்குநர்களுக்கான மறுசீரமைப்பைத் தொடர்ந்து படிப்படியாக வளர்ந்து வருகிறது. சீனாவின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டில் 5.2% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் சுமார் 4.5% ஆகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் — வரைபடம் 1



ஆதாரம்: : உலக பொருளாதார கண்ணோட்டம் புதுப்பிப்பு - ஏப்ரல் 2023, சர்வதேச நாணய நிதியம்.

கண்ணோட்டம்

உலகளாவிய பொருளாதார கண்ணோட்டத்திற்கான அபாயங்கள் பெரும்பாலும் உலகில் முன்னிலைப்படுத்தப்பட்ட படி எதிர்மறையாக உள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார முன்னோக்கு (WTO) ஜனவரி 2023 இன் படி இத்தகைய எதிர்மறை அபாயங்கள் வெளியீட்டின் மீதான கூட்டு எதிர்மறை வளர்ச்சித் தாக்கம், இலக்கு மட்டங்களுக்கு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கொள்கை வட்டி விகிதங்களை கடுமையாக்குதலுடன், நீண்ட காலத்திற்கு நீடிக்கக்கூடிய பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எரிசக்தி மற்றும் உணவு விலை அதிர்ச்சிகள், அமெரிக்க டாலர் மதிப்பு அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் சந்தைகளில் பரவலான கடன் நெருக்கடியைத் தூண்டக்கூடிய உலகளாவிய நிதியியல் இறுக்கம் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. மேலும், சீனாவின் ஆதனத் துறை நெருக்கடி மோசமடைவது, உள்நாட்டு வங்கித்துறை மீதான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், சீன பொருளாதார வளர்ச்சியை பெரிதும் பாதிக்கும். முக்கிய வர்த்தகப் பொருளாதாரங்களுக்கிடையிலான புவிசார் அரசியல் பிளவுகள் வர்த்தகம் மற்றும் மூலதன ஓட்டங்களைத் தடுக்கக்கூடும். தீவிர மற்றும் பேரழிவு வானிலை நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்வது உலகளாவிய பொருளாதார கண்ணோட்டத்திற்கும் சவால்களை ஏற்படுத்துகிறது. அதன்படி, உலகளாவிய வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 3.4 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 2.8 சதவீதமாகக் குறைந்து 2024 ஆம் ஆண்டில் மீண்டும் 3.0 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம்

கொவிட் தொற்றுநோயால் தூண்டப்பட்ட பலவீனங்களிலிருந்து மீள இலங்கை போராடிக் கொண்டிருந்தபோது, ரஷ்யா – உக்ரைன் போர் அதன் பொருளாதார சவால்களை அதிகரித்தது. இதன் விளைவாக சுற்றுலா வருவாய் பாதிப்பை எதிர்நோக்கியது மற்றும் அதிகரித்து வரும் எரிபொருள் விலைகள் உணவு விநியோக சங்கிலிகளை சீர்குலைத்ததால் கடுமையான எரிசக்தி மற்றும் உணவு பாதுகாப்பு நெருக்கடிகளை ஏற்படுத்தியது. ஏற்கனவே இருந்த நிதி மற்றும் வெளிநாட்டுத் துறைகளின் ஏற்றத்தாழ்வுகளால் அதிகரித்த அந்நிய செலாவணி மற்றும் இறையாண்மை கடன் நெருக்கடி நிதித் துறைக்கு முன்னெப்போதும் இல்லாத சவால்களை ஏற்படுத்தியது.

பொருளாதார நடவடிக்கைகளில் சுருக்கம்

2022 ஆம் ஆண்டில், இலங்கை பொருளாதாரம் சுதந்திரத்திற்குப் பிந்தைய அதன் ஆழமான பொருளாதார சுருக்கத்தைப் பதிவு செய்தது. பெருந்தொற்றுக்குப் பின்பான மீளெழுச்சியை பின்னிழுக்கும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய எதிர்விளைவுகளுக்கு மத்தியில் முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியின் அதிர்வலைகளால் உந்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் 2022 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டின் 3.5% வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 7.8% ஆக சுருங்கியது.

ஆழமாக வேரூன்றிய இரட்டைப் பற்றாக்குறையால் வகைப்படுத்தப்படுகின்ற, தொடர்ச்சியான வரவு செலவு பற்றாக்குறைகள் மற்றும் வெளிப்புற நடப்புக் கணக்கு பற்றாக்குறைகளால் ஏற்படுத்தப்படும் நீண்டகால

வங்கித் துறை மீதான தாக்கம்


பொருளாதாரச் சுருக்கம் குடும்ப வருமானத்தில் பரவலான சரிவை ஏற்படுத்தியது, மேலும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளின் உற்பத்தியின் வீழ்ச்சியானது முழு வருமான விநியோகத்தில் வேலை இழப்புகள் மற்றும் குறைந்த வருமானங்களாக (உண்மையான பெறுமதியில்) மற்றும் வேலை இழப்புகளாக வறுமையின் அதிகரிப்பு மக்கள்தொகையின் பல்வேறு பிரிவுகளிடையே பரவலாக இருந்தது. மக்களின் நுகர்வு, முதலீடு மற்றும் வாங்கும் திறன் குறைப்புகள் வங்கித் துறையையும் கணிசமாக பாதித்தது.

மொத்த சொத்துக்கள்

வங்கித் துறையின் மொத்த சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 16.8 திரில்லியனுடன் ஒப்பிடும்போது 15.4% வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ. 19.4 திரில்லியன் ஆக விரிவடைந்துள்ளது. வங்கித் துறையின் சொத்துக்களின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சியடைந்ததுடன் அந்நியச் செலாவணி மதிப்புடைய சொத்துக்களை ரூபாய் மதிப்பில் மறுமதிப்பீடு செய்ததனாலாகும்.

பேரண்ட பொருளாதார பலவீனங்கள் காரணமாக அதிகரித்து வரும் பணவீக்கம், மின்வெட்டு, அதிக வட்டி விகிதங்கள், இறக்குமதி பற்றாக்குறை, எரிபொருள் மற்றும் உர பற்றாக்குறை மற்றும் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்வி குறைதல் உள்ளிட்ட பல காரணிகள் 2022இல் வளர்ச்சியைப் பாதித்தன.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (சந்தை விலையில்) வரைபடம் 2



ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

இரசாயன உரம் மற்றும் பிற வேளாண்மை வேதிப்பொருட்களின் கடுமையான பற்றாக்குறை, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் விநியோக வலைப்பின்னல்களின் சீர்குலைவு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில், 2022 இல் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது விவசாயத் துறை 4.6% வீழ்ச்சியை பதிவு செய்தது. மூலப்பொருட்களின் கடுமையான பற்றாக்குறை மற்றும் உள்ளீடு செலவு அதிகரிப்புகளுக்கு மத்தியில் கட்டுமானம் மற்றும் உற்பத்தி துணைத் துறைகளின் பலவீனமான செயல்திறன் காரணமாக தொழில்துறை முக்கியமாக 16.0% (YoY) வீழ்ச்சியை பதிவு செய்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சேவைத் துறையில் எழுச்சியான செயல்திறன் இருந்தபோதிலும், கொவிட்-19 தொற்றுநோயைத் தொடர்ந்து சேவைத் துறையின் செயல்பாடு படிப்படியாக இயல்பாக்கப்பட்டதன் மூலம் ஆதரிக்கப்பட்டது, அதன் பின்னர் தீவிரமடைந்த பொருளாதாரத் தலையீடுகள், சேவைத் துறையில் மேலும் விரிவாக்கத்தைத் தடை செய்தது, இதன் விளைவாக ஒட்டுமொத்தமாக 2022 இல் 2.0% (YoY) வீழ்ச்சியை பதிவு செய்தது..

வறுமை நிலைகளில் உயர்வு

ஜூலை 2020 இல், உலக வங்கி இலங்கையின் வகைப்பாட்டை உயர்-நடுத்தர வருமான நிலையிலிருந்து கீழ்-நடுத்தர வருமான நிலைக்குத் தரமிறக்கியது. உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, 2021 ஆம் ஆண்டின் வறுமையின் அளவு (ஒரு நாளைக்கு 3.20 அமெரிக்க டாலர்கள் அடிப்படையில் அளவிடப்பட்டது) 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து வாழ்க்கைச் செலவில் விரைவான அதிகரிப்பு காரணமாக ஜனவரி 2020 முதல் சுமார் அரை மில்லியனாக அதிகரித்துள்ளது. முக்கியமாக. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI) உடன் வீட்டு வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பு (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2022) இலங்கையில் உள்ள மொத்தக் குடும்பங்களில் சுமார் 60% வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாக தெரிவிக்கிறது.

கண்ணோட்டம்

குறைந்த கேள்வி மற்றும் நிரம்பல் கட்டுப்பாடுகள் உற்பத்தியை தொடர்ந்து பாதிக்கும் நிலையில், பொருளாதாரம் 2023 மற்றும் அதற்கு அப்பால் சவால் விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்வு கூறலின் படி இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் 3.0% ஆக வீழ்ச்சியை பதிவு செய்யும் என்றும் அதன்பின் 2024 இல் 1.5% வளர்ச்சி அடையும் என்றும் சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

நடுத்தர கால வளர்ச்சி வாய்ப்புகள், நிதி ஒருங்கிணைப்பு, கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பாய்வின் கீழ் உள்ள கட்டமைப்பு சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் வெற்றியில் தங்கியுள்ளது. மிகவும் ஸ்திரமான மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தை நோக்கிய இந்த பயணத்தை இலங்கை மேற்கொள்ளும் போது அனைத்து பிரஜைகள் மத்தியிலும் குறிப்பிடத்தக்க சுமை பகிரப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் அதன் முந்தைய சிக்கலிலிருந்து வெளியேறினாலும், இலங்கையின் பொருளாதார மீட்சி செயல்முறைக்கு விரைவான நடவடிக்கைகள் இன்றியமையாததாகத் காணப்படுகின்றது.

சொத்து தரம்

மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியானது முழு தொழில் துறையின் திரவ நிலையில் குறைவை ஏற்படுத்தியோடு, வாடிக்கையாளரின் திருப்பிச் செலுத்துதல் மற்றும் சொத்தின் தரம் ஆகியவற்றில் கணிசமான அழுத்தத்தை பிரயோகித்தது. வங்கிகளின் சொத்துத் தரத்தை பிரதிபலிக்கும் கட்டம் 2 மற்றும் கட்டம் 3 கடன்களின் அதிகரித்து வரும் போக்கு, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வங்கித் துறையின் கடன் இடர் மேலாண்மையில் தொடர்ந்தும் கவனத்திற்குரியதாக இருந்தது. 2022 இல் கட்டம் 3 செயல்படாத கடன்களால் (பெறப்படாத தொகைகள் உட்பட) சுட்டிக்காட்டப்படும் செயற்படாத கடன்கள் (NPLs) 53.7% ஆல் அதிகரித்து, ரூ. 1.3 திரில்லியனை எட்டியது. இது 2021 இல் ரூ. 835 பில்லியன் ஆக இருந்தது. கட்டம் 3 கடன்களின் செயல்படாத கடன்களின் விகிதம் 2021 இல் 7.6% இலிருந்து 2022 இல் 11.3% ஆக உயர்வடைந்தது.

இலாபத்தன்மை

வங்கி துறையின் இலாபமானது, 2022 ஆண்டில் ஏற்பட்ட பேரண்ட பொருளாதார சீர்குலைவு காரணமாக பாதிக்கப்பட்டது. 31 டிசம்பர் 2022 முடிவடைந்த ஆண்டுக்கான வங்கி துறையின் இலாபமாக ரூ. 192.2 பில்லியனாக காணப்பட்டதோடு முந்தைய ஆண்டுக்கான இலாபமான ரூ. 278.3 பில்லியனுடன் ஒப்பிடும் போது 15.5% வீழ்ச்சியை பதிவு செய்தது.

2022 வங்கித் துறையின் வரிக்குப் பிந்தைய லாபம் ரூ. 150.2 பில்லியனாக காணப்பட்டதோடு, இது 2021 இல் காணப்பட்ட 172.1 பில்லியனோடு ஒப்பிடும் போது, 12.7% குறைவாகும்.

இருந்த போதிலும் தேறிய நிகர வட்டி வருமானம் ரூ. 207.7 பில்லியனாலும் தேறிய வட்டியல்லா வருமானம் 124.1 பில்லியனாலும் அதிகரித்து காணப்பட்டாலும் ரூ. 298.5 பில்லியனால் அதிகரித்த சேதமிழப்பு அறவீடு காரணமாக குறித்த ஆண்டில் இலாபம் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை 2022 இற்கான வங்கி துறையின் சொத்தின் மீதான திரும்பல் (ROA) மற்றும் மூலதனம் மீதான திரும்பல் (ROE) விகிதங்கள் முறையே 1% மற்றும் 10.2% ஆக காணப்பட்டதோடு 2021 இல் முறையே 1.4% மற்றும் 13.4% ஆக காணப்பட்டது.

மூலதனம் மற்றும் திரவநிலை

பாதகமான பேரண்ட பொருளாதார நிலைமைகள் இருந்தபோதிலும், வங்கித் துறையானது 2022 இல் குறைந்தபட்ச சட்டப்பூர்வத் தேவைகளுக்கு மேல் மூலதனப் விகிதத்தை பராமரித்தது. டிசம்பர் 2022 இறுதியில், வங்கித் துறையானது பாசல் III தேவைப்பாடுகளுக்கு கணிசமானளவு மேலே, அடுக்கு 1 இல் 12.3% வீதத்துடனும் மற்றும் மொத்த மூலதன விகிதம் 15.3% வீதத்துடனும் இயங்கியது. இது பாசல் III தேவைப்பாட்டை விட அதிகமாகும். 31 டிசம்பர் 2022 இல் உள்நாட்டு நாணய அலகுகளுக்கான சட்டபூர்வ திரவச்சொத்து விகிதம் 29.9% ஆக இருந்தது.

கண்ணோட்டம்

பொருளாதார மீட்சியின் வேகம் நிச்சயமற்றதாகவே உள்ளது, மேலும் நிதி அமைப்பை தொடர்ந்து அச்சுறுத்துகிறது. இருந்த போதிலும், வங்கித் துறையானது நெருக்கடிகளை எதிர்கொள்வதில் குறிப்பிடத்தக்க மீளெழுச்சியினை காட்டியுள்ளது, மேலும் பல வங்கிகள் நெருக்கடியை வழிநடத்தவும், எதிர்கால வளர்ச்சிக்காக தங்களை நிலைநிறுத்தவும் புதுமையான உத்திகளை செயல்படுத்தியுள்ளன. சேதமிழக்கப்பட்ட கடன்கள் போக்கில் அதிகரிப்பு காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடன் பெறுபவர்களுக்கு சலுகைகளும் வழங்கப்படுகின்றது.

குறிப்பிடத்தக்க கொள்கை விகித உயர்வின் தாக்கம், பொருளாதார சுருக்கங்கள் மற்றும் சாத்தியமான கடன் மறுசீரமைப்பு என்பனவற்றால் வங்கிகள் தங்கள் மூலதன விகிதங்களை ஒழுங்குமுறை குறைந்தபட்ச அளவுகளுக்கு மேல் பராமரிப்பதில் அதிகரிக்கும் சவால்களை எதிர்கொள்ளும் நிலை, மேலும் மூலதன இடையகங்களில் கணிசமான சரிவு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுக் கடன்களைத் தவிர, எந்தவொரு உள்நாட்டு கடன் மறுசீரமைப்பும் வங்கித் துறை வருவாயை எதிர்காகாலத்தில் குறைக்கும்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

பண வீக்கம்

உலகளாவிய தொழிற்பாட்டு சூழல்

கடந்த நாற்பது ஆண்டுகளில் இல்லாத வேகமான பணவீக்கத்தை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இது 1982 ஆண்டிற்கு பிறகு உச்சத்தை பதிவு செய்து, அமெரிக்காவில், பணவீக்கம் டிசம்பர் 2022 இல் ஆண்டுக்கு 6.6% ஆக உயர்ந்தது. யூரோ வலயத்தில் பணவீக்கம் டிசம்பர் 2022 இல் 9.2% ஐ எட்டியது. இது 1997 இல் இணக்கமான புள்ளிவிவரங்களின் வருகைக்குப் பிறகு மிக அதிகமாகும்.


பொருளாதார நிச்சயமற்ற நிலைகள் மற்றும் இடர்களின் அதிகரிப்பு உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புகளை பாதித்துள்ளது. தற்போது இடம்பெற்று கொண்டிருக்கும் ரஷ்யா-உக்ரைன் போர் தொடர்ந்து எரிவாயு விலையை அதிகரித்து ஐரோப்பாவில் எரிசக்தி நெருக்கடியை தூண்டியது. ஐரோப்பாவின் பெரும் பகுதிக்கு ரஷ்யா குறிப்பிடத்தக்க சக்தி வழங்குநராக இருப்பதோடு ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரண்டு நாடுகளும் குறிப்பிடத்தக்க விவசாய ஏற்றுமதியாளர்களாக காணப்படுகின்றனர். பெப்ரவரி 2022 இல் போர் தொடங்கியதிலிருந்து, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விலைகள் மிகவும் நிலையற்றதாக மாறியது, மேலும் விவசாய பொருட்களின் விலைகள் ஆண்டின் நடுப்பகுதியில் தற்காலிகமாக அதிகரித்தன. தொடர்ந்து உயர்ந்த மற்றும் பரந்த அடிப்படையிலான பணவீக்கம் உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகளை வட்டி விகித உயர்வை விரைவுபடுத்த தூண்டியுள்ளது.

பின்னர், வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் பணவீக்கம் குறையத் தொடங்கியது. எரிசக்தி விலைகள் குறைந்து விட்ட போதும், மைய பணவீக்கம் அதிகரித்த வண்ணமே காணப்பட்டது. மேலும் மத்திய வங்கிகள் கொள்கை இறுக்கத்தின் போக்கைத் தக்கவைக்கும் முனைப்புடன் செயற்படுகின்றன.

2022 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டில் இயற்கை எரிவாயு மற்றும் நிலக்கரி விலைகள் தொடர்ந்து அதிகரித்த அதே வேளையில் ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலையில் சடுதியான வீழ்ச்சியுடன் எரிசக்தி விலைகள் பரவலாக வேறுபட்டன. 2022 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டில் எரிசக்தி அல்லாத பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன, இது பலவீனமான உலகளாவிய வளர்சியை பிரதிபலித்ததோடு அதன் விளைவாக தேவையின் அளவு குறைந்துள்ளது. உலோக விலைகள் மிகப்பெரிய சரிவை பதிவு செய்தன. உணவுப் பற்றாக்குறையின் அச்சம் குறைந்ததன் மூலம், 2022 ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டில் பொருட்களின் விலைகள் குறைவடைந்தன. இருப்பினும், கோதுமை மற்றும் உரத்தின் இரண்டு ஆதிக்க உற்பத்தியாளர்களுக்கு இடையே நடந்து வரும் போரின் காரணமாக உணவு மற்றும் உரங்களின் விலைகள் உயர்த்தப்பட்டன.

மேலும், அமெரிக்க டாலரின் மதிப்பேற்றத்துடன், பல நாடுகளில் நாணய பெறுமதியிறக்கத்தினால் உள்நாட்டு நாணய அடிப்படையில் பொருட்களின் விலைகள் உயர்ந்தன. உலகளாவிய பொருட்களின் விலை குறைவடைவதன் மத்தியிலும், குறிப்பாக பெறுமதியிறக்க அழுத்தத்திற்கு முகம் கொடுக்கும் நாடுகளில், நாணய மாற்று வீதத்தினால் பணவீக்கம் மீது கடத்தப்படும் தாக்கம் உயர்வாகவே காணப்படும்.

நுகர்வோர் விலை — வரைபடம் 3



ஆதாரம்: உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் புதுப்பிப்பு – ஏப்ரல் 2023, சர்வதேச நாணய நிதியம

கண்ணோட்டம்

பணவீக்கம் 2023 இல் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஏனெனில் ஏற்றம் ஏற்படுவதற்கு காரணமான நிரம்பல் காரணிகள் மறைவதாலாகும். சர்வதேச நாணய நிதியம் உலகளாவிய பணவீக்கம் 2023 இல் 7.0% ஆகவும், 2024 இல் 4.9% ஆகவும் இருக்கும் என்று கணித்துள்ளது. இது இன்னும் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளுக்கு மேல் உள்ள அதேவேளை, 2022 இல் காணப்பட்ட 8.7% ஐ விட கணிசமாகக் குறைவாக உள்ளது. இறுக்கமான பணவியல் கொள்கை நடைமுறைக்கு வருவதால் மற்றும் மெதுவான பொருளாதார வளர்ச்சி தேவையை பாதிப்பதால் 2023 முழுவதும், பெரும்பாலான பொருளாதாரங்களில் பணவீக்கம் படிப்படியாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு, சீனாவின் பூச்சிய - கொவிட் கொள்கை, தொழிலாளர் சந்தை இறுக்கம் மற்றும் தீவிர வானிலை நிலவரம் ஆகியவை குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் உலகளாவிய பணவீக்கத்திற்கு இடர்களை அதிகரிக்கச் செய்து கொண்டிக்கின்றது. 2023இல் வாழ்க்கைச் செலவு நெருக்கடி மற்றும் உயர் மந்த நிலை இடர், வணிகங்கள் மற்றும் நுகர்வோருக்கு முக்கிய பேரிடராக விளங்குகின்றன.

வங்கித் துறை மீதான பாதிப்பு

இலங்கை மத்திய வங்கி உயர் பணவீக்க நிலைகளை எதிர்கொள்ள அறிமுகப்படுத்திய இறுக்கமான பணவியல் கொள்கை நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் சந்தை வைப்பு மற்றும் கடன் வட்டி விகிதங்கள் தொடர்ந்து கணிசமான அளவில் மேல்நோக்கி அதிகரித்தன. கணிசமான பணவியல் இறுக்கம், உள்நாட்டுப் பணச் சந்தையில் பாரிய மற்றும் நிலையான பணப்புழக்கப் பற்றாக்குறை மற்றும் அரசாங்கப் பிணையங்கள் மீதான வருவாய்களின் ஏற்றத்தாழ்வு அதிகரிப்பு ஆகியவை சந்தை வட்டி விகிதங்கள் சடுதியாக மேல்நோக்கி நகர்வதற்கு வழிசெய்தது.

கடன்கள் மற்றும் முற்பணங்கள்

இறுக்கமான பணக் கொள்கை நிலைப்பாடானது, 2021 ஆம் ஆண்டில் 14.5% வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் வங்கித் துறையில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியை 5.7% ஆகக் குறைக்க வழிவகுத்தது. மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள். 2022இல் ரூ. 11.3 திரில்லியனை அடைய ரூ. 0.6 திரில்லியனால் அதிகரித்தது. இதே காலகட்டத்தத்துடன் ஒப்பிடும் போது 2021இல் ரூ. 10.7 திரில்லியனாக பதிவு செய்ப்பட்டது. முக்கியமாக வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீதான நாணயமாற்று 2021 இல் விகித தேய்மானத்தின் தாக்கம் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது.

வைப்புகள்

அதிக வட்டி விகிதங்களால் தூண்டப்பட்டு, வங்கித் துறையின் வைப்புத் தளம் 18.8% ஆல் அதிகரித்து ரூ. 15.3 திரில்லியனாக 2022 இன் இறுதியில் காணப்பட்டது. இது 2021 இல் ரூ. 12.9 திரில்லியனாக காணப்பட்டதை ஒப்பிப்படும்போது அதிகமாகும். மேலும் நிதிகள், குறைந்த வட்டியையுடைய வைப்புகளில் இருந்து அதிக வட்டியையுடைய தவணை வைப்புகளுக்கு மாற்றப்பட்டது. வங்கித் துறையில் 67.9% பங்கைக் கொண்டிருந்த தவணை வைப்புத்தொகை 2022 இல் 32.2% வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்து, 2022 ஆண்டின் இறுதியில் ரூ. 10.4 திரில்லியனாக வளர்ச்சிபெற்றது.

கண்ணோட்டம்

நிதித்துறை மற்றும் பரந்த பொருளாதார வளர்ச்சி ஆகிய இரண்டையும் ஆதரிக்கும் திறனுடன் ஒட்டுமொத்தமாக, பணவீக்கம் குறைவதற்கான கண்ணோட்டம் நம்பிக்கைக்குரியதாகத் தோன்றுகிறது. பணவீக்கத்தைக் குறைப்பது வட்டி விகிதங்களைக் குறைக்க வழிவகுக்கும், இது கடன் பட்டியலின் வளர்ச்சியை அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் முதலீடு செய்ய அல்லது தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்த விரும்பும் வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இது குறிப்பாக சாதகமாக இருக்கும்.

மேலும், பணவீக்கத்தைத் தணிப்பதன் மூலம், நுகர்வோரின் பொருட் கொள்வனவு ஆற்றல் அதிகரிக்கும். மக்கள் அதிக விருப்பத்துடன் பொருட்களையும் சேவைகளையும் வாங்க முடியும் என்பதால், இதையொட்டி, அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய நிறுவனங்கள் முயல்வதால், இது அதிகரித்த வணிக செயல்பாடு மற்றும் விரிவாக்கத்திற்கு வழிவகுக்கும்.


இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம்

கொவிட்-19 தொற்றின் போது ஏற்பட்ட நாணய வசதியளித்தலால் உருவான கேள்வி அதிகரிப்பு, வழங்கல் பக்க இடையூறுகள், நிர்வாக விலை மாற்றங்கள் மற்றும் இலங்கை ரூபாயின் சடுதியான தேய்மானம் ஆகியவற்றின் காரணமாக குறித்த ஆண்டின் போது பணவீக்கமானது வேகமாக அதிகரித்து வரலாற்று ரீதியாக உயர் மட்டங்களை எட்டியது.

கொவிட்-19 தொற்றுநோய், உணவு மற்றும் உணவு அல்லாத பணவீக்கம் மற்றும் உள்நாட்டு எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் மற்றும் மின்சார கட்டணங்களின் மேல்நோக்கிய திருத்தம் ஆகியவை பணவீக்கத்தை கணிசமாக துரிதப்படுத்தியது. உயர்ந்த உலகளாவிய பொருட்களின் விலைகள் மற்றும் ரூபாயில் ஏற்பட்ட கணிசமான தேய்மானத்தின் குறிப்பிடத்தக்க மாற்றத்தை பிரதிபலித்து, இறக்குமதி பணவீக்கமும் அதிகரித்தது. பணவீக்கம் மற்றும் தொற்று நோயைத் தொடர்ந்து கணிசமான பண வசதியளித்ததால் உருவான கேள்வியை மையப்படுத்திய அழுத்தங்களே பணவீக்கத்திற்கு பகுதியளவு காரணமாகும்.

பணவீக்கமானது, செப்டம்பர் 2022 இல் 69.8% (YoY) க்கு மிதமடைந்தமையும், டிசம்பர் 2022 இல் தொடர்ச்சியாக 3 ஆவது மாதமாக தொடர்ந்து வீழ்ச்சியடைந்தமையும் எதிர்த்திசையில் செல்வதற்கான அறிகுறிகளை பிரதிபலித்தன. அதன்படி, கொ.நு.வி.சு. (2013=100) ஆல் அளவிடப்பட்ட மொத்தப் பணவீக்கம், டிசம்பர் 2022 இல் 57.2% (YoY) ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் 12.1% ஆக இருந்தது. அதன்படி, தே.நு.வி.சு. அடிப்படையிலான பணவீக்கமும், ஒரு வருடத்திற்கு முன்பு அளவிடப்பட்ட 14.0% க்கு எதிராக 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 59.2% ஆக உயர்ந்தது.

பணவீக்கம்: கொ.நு.வி.சு மற்றும் தே.நு.வி.சு வரைபடம் 4



ஆதாரம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கண்ணோட்டம்

முதன்மை பணவீக்கமானது, பணவீக்கத்தைக் குறிக்கும் பாதையின் வழியே நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பணவீக்கம் குறைவதோடு, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் தேவையான அளவுகளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இறுக்கமான பணவியல் மற்றும் இறையியல் கொள்கைகளால், ஒட்டுமொத்தமான கேள்வி குறைவடைதல் உள்நாட்டு விநியோக நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் மற்றும் சாதகமான புள்ளிவிவர அடிப்படை விளைவு ஆகியவற்றுடன். உலகளாவிய பொருட்களின் விலைகளை உள்நாட்டு விலைகளுக்கு கடத்துதல் மூலம் பணவீக்க விகிதங்களில் கீழ்நோக்கிய சரிசெய்தல் 2023 ஆம் ஆண்டு வரை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

நாணயக் கொள்கை

உலகளாவிய தொழிற்பாட்டு சூழல்

நிலவுகின்ற பொருளாதார நிலைமைகளின் இறுக்க நிலையானது, நிதி நிலைமைகளின் தொடர்ச்சியான இறுக்கம், அதிக கடன்சுமையுள்ள அரசாங்கங்கள் மீதான அழுத்தத்தை மேலும் அதிகரிக்கும் என்றும் தளம்பல் நிலைகளை அதிகரிக்குமென்றும் முதலீடுகள் மற்றும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை எதிர்மறையாக பாதிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க மத்திய வங்கி அதன் அடிப்படை வட்டி விகிதத்தை 15 ஆண்டுகளில் அதிகபட்சமாக, பூச்சியத்திலிருந்து 4% இற்கும் அதிகமாக 2022 இல் உயர்த்தியது. இந்த நடவடிக்கையை உலகம் முழுவதும் பல நாடுகள் பின்பற்றின. கொவிட் தொற்றுநோய்க்குப் பிறகு பொருளாதார வளர்ச்சியானது விலைகளில் விரைவான அதிகரிப்பைத் தூண்டியதுடன், செலவுகளை ஸ்திரப்படுத்த மத்திய வங்கியின் தலையீட்டுக்கு வழி வகுத்தது. வட்டி வீத அதிகரிப்பு நுகர்வோரை அதிகமாகச் சேமிக்க ஊக்குவிக்கிறது என்றாலும், அது கடுமையான பொருளாதார மந்தநிலையைத் தூண்டி அதிக வேலையின்மைக்கு வழிவகுக்கும்.

பரந்த முறிகள் சந்தையில் வட்டி விகிதங்களை அதிகப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை குறைக்கும் கடன் வாங்கும் செலவுகளை உயர்த்தவும், அதன் முறிகளை வாங்கும் திட்டத்தையும் அமெரிக்க மத்திய வங்கி முடிவுக்கு கொண்டுவந்தது.

கண்ணோட்டம்

ரஷ்யா-உக்ரைன் போர் மேலும் உக்கிரமடை-யக்கூடும் என்பதால், பணவீக்கத்திற்கு இறுக்கமான நாணயக் கொள்கை தொடர்ந்து தேவைப்படுகிறது மற்றும் கொரோனா இடையூறுகளில் இருந்து சீனாவின் மீட்சி பலவீனமானதாகவே உள்ளது.

கொள்கை வகுப்பாளர்கள் பணவீக்கத்தைக் குறைக்க கொள்கை நிலைப்பாட்டை தொடர்ந்து இயல்பாக்குவதால், அனைத்துப் பொருளாதாரங்களிலும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மேம்பட்ட பொருளாதாரங்களிலுள்ள அதிக வருவாய் மற்றும் பாதுகாப்பான முதலீட்டு நிலை ஆகியவை, வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களில் இருந்து மூலதன வெளியேற்றம் மற்றும் எதிர் மாற்றங்களை ஊக்குவிக்கும். பணவீக்கம் அதிகரிக்கும் போது, இவை அந்த நாணயங்களில் மேலும் தேய்மான அழுத்தத்தை ஏற்படுத்தும். உலகளாவிய நிதி நிலைமைகள் இறுக்கமாகி வருவதால், பலவீனமான பேரண்ட பொருளாதார அடிப்படைகளைக் கொண்ட வளர்ந்து வரும் மற்றும் முன்னணிச் சந்தைப் பொருளாதாரங்களில் இருந்து மூலதன வெளியேற்றத்தின் மத்தியில் வெளியக கடன் வாங்கும் செலவுகள் அதிகரித்துள்ளன. மேம்பட்ட பொருளாதாரங்களில், நிதி நிலைமைகள் விரைவாக இறுக்கமடைந்துள்ளன, சில வளர்ந்து வரும் சந்தைகளில் இது இன்னும் இறுக்கமாக உள்ளது, இவை அடமானக் கொடுப்பனவுகள் மற்றும் பிற வட்டி உணர்திறன் செலவுகளை பாதிப்பதுடன் மற்றும் குடும்பங்கள் மற்றும் நிறுவனங்களின் செலவழிக்கும் இயலுமையை கட்டுப்படுத்துகிறது.

கூடுதலாக, வலுவான தொழிலாளர் சந்தைகள் மற்றும் உறுதியான ஊதிய வளர்ச்சி ஆகியவை நுகர்வோர் தேவையை அதிகரிக்கலாம், அதே சமயம் விநியோகச் சங்கிலி இடையூறுகளில் ஏற்படும் தளர்வானது பணவீக்கத்தை குறைக்க உதவுவதோடு மேலும் பண இறுக்கத்தின் தேவையை குறைக்கும்.

இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம்

அதிகரித்து வரும் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகளை எதிர்கொள்ள, இலங்கை மத்திய வங்கி 2022 இல் நாணயக் கொள்கையை கணிசமாக இறுக்கியது. உள்நாட்டு பணச் சந்தையில் கடுமையான திரவநிலை பற்றாக்குறை மற்றும் இறுக்கமான பணக் கொள்கையின் வேகமாக கடத்தும் இயல்பு காரணமாக சந்தை வட்டி விகிதங்கள் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தன.

அதன்படி, ஆகஸ்ட் 2021 இல் நாணய இறுக்கச் சுழற்சி தொடங்கியதில் இருந்து, இலங்கை மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி விகிதங்களான, துணைநில் வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதி விகிதம் (SLFR) ஆகியவை ஏப்ரல் 2022 இல் இடம்பெற்ற பாரிய சீராக்கத்துடன் 1000 அடிப்படை புள்ளிகளால் உயர்த்தப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் தேவையினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களை தடுக்கவும் நாணயமாற்று விகிதத்தை ஸ்திரப்படுத்த தேவையான உத்வேகத்தை வழங்கவும், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கொள்கை வட்டி விகிதங்கள் 700 அடிப்படை புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன. கொள்கை வட்டி விகிதங்களுக்கு ஏற்ப, நியதி ஒதுக்க விகிதமும் (SRR) செப்டம்பர் 2021 முதல் 200 அடிப்படை புள்ளிகளால் மேல்நோக்கி திருத்தப்பட்டது.


டிசம்பர் 31 நிலவரப்படி கொள்கை விகிதங்கள் பின்வருமாறு.

நிதிச் சந்தைகள்

சாதகமற்ற பேரண்ட பொருளாதார நிலைமைகள் காரணமாக நாட்டிற்குள் உள்ள நிதிச் சந்தைகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டன. இத்தகைய சாதகமற்ற நிலைமைகளினாலேற்பட்ட எதிர்மறை சந்தை உணர்வை பிரதிபலித்து இக் காலக்கட்டத்தில் பங்குச் சந்தை மோசமாகச் செயல்பட்டது. இருப்பினும்இ சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கான அணுகலை இழந்த போதிலும் அரசாங்கம் அதன் தேவைகளுக்கு நிதியளிக்க அனுமதித்து உள்நாட்டு அரசாங்கப் பிணையங்கள் சந்தை வேகமாக வளர்ந்தது. அரசாங்கமானது தனது பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு உள்நாட்டு மூலங்களில் தங்கியிருத்தல் அதிகரித்தமையாலும் தற்போதுள்ள சந்தை திரவநிலை நிலைமைகள் மற்றும் முதன்மைத் தொகை இடர் அதிகரிப்புக்கு வழிவகுத்த கடன் மறுசீரமைப்பு தொடர்பான கரிசனைகளால் அரச பிணையங்களிலிருந்தான விளைவுகள் புதிய உயரத்தைத் தொட்டன. உள்நாட்டு அரசாங்கப் பத்திரங்களின் இந்த உயர் விளைவு விகிதங்கள் உள்நாட்டுக் கடனின் நிலையான நிலைகளை பராமரிப்பதற்கான சவாலை மோசமாக்குகின்றன.

விபரணம்	2022 %	2021 %
துணைநில் வைப்பு வசதி விகிதம் (SDFR)	14.50	5.00
துணைநில் கடன் வசதி விகிதம் (SLFR)	15.50	6.00
நியதி ஒதுக்க விகிதம் (SRR)	4.00	4.00

நிதிச் சந்தைகள் — புகையி 5



ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

சந்தை திரவத்தன்மை

ஒரிரவு திரவத்தன்மை ஆண்டு முழுவதும் நிலையற்றதாக இருந்தது. அனுமதி பெற்ற வணிக வங்கிகளுக்கு துணைநில் சேமிப்பு வசதி ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக ஐந்து முறையும் மற்றும் துணைநில் கடன் வசதி கிடைப்பனவை குறித்த நாளின் சட்டபூர்வ நியதி ஒதுக்கு விகிதத்தின் 90% இற்கும் வரையறுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் இலங்கை மத்திய வங்கி முறைமையினுள் திரவத்தன்மையை புகுத்தியது. எனவே, அதிக அளவிலான திரவத்தன்மை பொருளாதாரத்தை ஆதரிப்பதோடு ஊக்கப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கண்ணோட்டம்



பணச் சந்தையில் திரவ நிலைமைகள் மேம்படுவதால், கடன் மறுசீரமைப்பு அபாயங்கள் குறைவதால், தற்போதைய அதிகப்படியான அதிக வட்டி விகிதங்கள் எதிர்காலத்தில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்கத்திற்கான நெருங்கிய காலக் கண்ணோட்டத்தின்படி, பணவீக்க அழுத்தங்கள் கட்டுக்குள் இருக்கும் வரை இறுக்கமான பண நிலைமைகளை சரியானளவில் பேணும் போது சந்தை வட்டி விகிதங்கள் கீழ்நோக்கிச் சரியக்கூடும்.

வைப்புகளுக்கான அதிகரித்த வட்டி வீதங்கள், கடன் வீதம் உட்பட அனைத்து சந்தை வட்டி வீதங்களையும் அளவுக்கதிகமான சீராக்கத்திற்கு இட்டுச் செல்லும் என்பதால், வங்கி மற்றும் வங்கி அல்லாத துறை நிறுவனங்களுக்கிடையில் உள்ள ஆரோக்கியமற்ற போட்டியின் சிக்கலைத் தீர்க்க, வைப்புத்தொகையை உயர்த்த அதிக வட்டி விகிதங்களை வழங்குவதைத் தவிர்க்குமாறு இலங்கை மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது. திரவ நிலைமைகள் மேம்படுவதால், வைப்பு மற்றும் கடன் வட்டி விகிதங்கள் உட்பட சந்தை வட்டி விகித அமைப்பு மிதமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், போட்டித் தன்மையை ஊக்குவிக்கும் நடுத்தர முதல் நீண்ட கால சமநிலைகளுடன் இணைந்து பரிமாற்ற வீதத்தின் நிர்ணயம் மிகவும் நெகிழ்வானதாக மாறும். இந்த நடவடிக்கை நீண்ட காலத்திற்கு பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரச பிணையங்கள் சந்தை

இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் உயர்ந்த நிச்சயமற்ற நிலைகள் அரசாங்கப் பத்திரங்களுக்கான முதன்மை ஏலத்தை பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கி நிதியீட்டு இடைவெளியை நிரப்புவதற்கு தேவைப்படுத்தியது. சந்தை பங்கேற்பாளர்கள் நிச்சயமற்ற நிலைகள், அரசாங்கத்தின் பாரிய கடன் தேவைகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு நடைமுறைகள் ஆகியவற்றால் உந்தப்பட்டு அரசாங்கப் பத்திரங்களுக்கு அதிக வருமானத்தை தொடர்ந்து கோரினர். இதன் விளைவாக, கொள்கை வட்டி விகிதங்களின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், அரசாங்கப் பத்திரங்கள் மீதான விளைவுகள் கணிசமானளவு உயர்ந்த நிலைக்கு அதிகரித்தது.

திறைசேரி முறிகளுக்கான சந்தையானது, இறையியல் மற்றும் பேரண்ட பொருளாதார வளர்ச்சிகளுடன் தொடர்புற்று செறிவற்ற திரவ நிலைமைகளை அனுபவித்தது. ஏனெனில் முதனிலை சந்தை விளைவுகள் வரலாற்று நிலைகளுக்கு மேலாக உயர்ந்ததுடன், இரண்டாம் நிலை சந்தை திரவத்தன்மையற்றதாக இருந்தது. மேலும், இறையியல் ஏற்றத்தாழ்வுகளின் பெருக்கம், கடன் மறுசீரமைப்பு மீதான கரிசனைகள் மற்றும் பணவீக்க அதிகரிப்பு மீதான எதிர்பார்ப்பினால், முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்களிலும் அதிக திரும்பல்களை கோரினர். அதேவேளை, ஓரிரவு அழைப்பு பணச்சந்தையில் உள்நாட்டு வங்கிகள் மீது வெளிநாட்டு வங்கிகளுக்கான எதிர்த்தரப்பு இடர் உணர்வு அதிகரித்தமை மற்றும் சந்தை நடவடிக்கைகள் குறைவடைந்தமை, நிதியியல் முறைமை ஊடாக சீரான நிதியியல் பாய்ச்சலை பாதித்ததுடன், மத்திய வங்கியின் துணைநில் சேமிப்பு மற்றும் கடன் வசதிகளை வங்கிகள் பயன்படுத்த வேண்டிநின்றன.

கண்ணோட்டம்



2022 ஆம் ஆண்டில் தடைப்பட்ட தனியார் துறை கடன் வளர்ச்சி, உயர் சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் தளர்வு மற்றும் மேம்படுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வட்டி விகிதங்கள் குறைவதால், கடன் மற்றும் முற்பணங்களுக்கான தேவை அதிகரிக்கும் அதே வேளையில் வைப்பு விகிதங்களுக்கான தேவையும் குறையும்.

நிகர வட்டி வரம்பு குறைவது சாத்தியமானதாக இருந்தாலும், வருவாயில் ஒட்டுமொத்த தாக்கம் நேர்மறையாக இருப்பதோடு நிலையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

வங்கித் துறை மீதான பாதிப்பு

வழங்கப்பட்ட கடன் மற்றும் வைப்புத்தளத்தின் வளர்ச்சி

தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களின் வளர்ச்சி 2022 இல் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது. கடன் விகிதங்களில் சடுதியான மேல்நோக்கிய சீராக்கலுடன் தற்போதைய இறுக்கமான பணவியல் கொள்கை சுழற்சியில் முந்தைய இறுக்கமான சுழற்சிகளுடன் ஒப்பிடும்போது தனியார் துறைக்கான கடன் வளர்ச்சியில் சரிவு தற்போது அதிகமாக உள்ளது.

உரிமம் பெற்ற வங்கிகள் பணச் சந்தையில் மோசமான திரவ நிலைமைகளுக்கு மத்தியில், குறிப்பாக குறுகிய காலத்திற்கு அதிக வட்டி விகிதங்களில் வைப்புகளைத் தொடர்ந்து திரட்டின. அதன்படி, வைப்பு வட்டி விகிதங்கள், குறிப்பாக புதிய வைப்பு வட்டி விகிதங்கள், 2022 இல் அதிகரித்தன. உரிமம் பெற்ற வங்கிகளால் வழங்கப்படும் போட்டித்தன்மைமிக்க மற்றும் அதிக வைப்பு வட்டி விகிதங்களுடன், நிலுவையில் உள்ள வைப்புத்தொகைகளில் விரிவாக்கம் காணப்பட்டது.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

இறையியல் கொள்கை

உலகளாவிய தொழிற்பாட்டு சூழல்

2022 ஆம் ஆண்டில், அனைத்து பெரிய மற்றும் வளரும் பொருளாதாரங்களின் இறையியல் கொள்கையை செயற்படுத்துவது, முதன்மையாக கொவிட்-19 தொற்றுநோயிலிருந்து உலகளாவிய பொருளாதார மீட்சியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டது. வணிகங்கள், குடும்பங்கள் மற்றும் பொது சுகாதார அமைப்புகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டு விரிவாக்க இறையியல் கொள்கைகளை பல நாடுகள் அறிவித்தன.

2021 ஆம் ஆண்டில் அமெரிக்க மீட்புத் திட்டச் சட்டத்தை அமெரிக்கா நிறைவேற்றியது, இதில் தனிநபர்களுக்கான நேரடிப் பணம், நீட்டிக்கப்பட்ட வேலையின்மை நலன்கள் மற்றும் தடுப்பூசி விநியோகம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புக்கான நிதி ஆகியவை அடங்கும்.

பல வளரும் பொருளாதாரங்கள், குறிப்பாக ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில், வரையறுக்கப்பட்ட இறையியல் தளம் மற்றும் அதிக கடன் அளவுகள் காரணமாக இறையியல் கொள்கைகளை செயற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றன.

நீண்ட கால நிதி நிலைத்தன்மையை உறுதி செய்யும் அதே வேளையில் மீட்சியை ஆதரிக்கும் இலக்கு இறையில் நடவடிக்கைகளை செயற்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் நாடுகளை வலியுறுத்தியுள்ளது. வேலை உருவாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் பசுமை உள்கட்டமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு வலைகளில் முதலீடு போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

கண்ணோட்டம்

ஒட்டுமொத்தமாக, 2023 மற்றும் அதற்கு அப்பால் உலகளவில் இறையியல் கொள்கை நடைமுறைப்படுத்தலின் வெற்றியானது பயனுள்ள கொள்கை வடிவமைப்பு, பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கான ஆதரவு மற்றும் நீண்ட கால நிலைத்தன்மையில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றைப் பொறுத்தது.

வளர்ந்த பொருளாதாரங்கள்:

- வளர்ந்த பொருளாதாரங்களில், இறையியல் கொள்கைகள் பசுமையான உள்கட்டமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு முதலீட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, மிகவும் நிலையான மற்றும் நீண்ட கால கவனத்தை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சமத்துவமின்மையைக் குறைத்தல் மற்றும் தொற்றுநோயின் சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளை நாடுகள் செயல்படுத்த வேண்டியிருக்கலாம், குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுபான்மையினர்.
- இத்தகைய கொள்கைகளை செயல்படுத்துவது, அதிக அளவிலான அரசாங்கக் கடன்கள் மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம் பற்றிய நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கான தேவையுடன் சமநிலைப்படுத்தப்பட வேண்டும்.

வளரும் பொருளாதாரங்கள்:

- வளரும் பொருளாதாரங்கள் சமூக மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எடுத்துரைக்கும் அதே வேளையில், பொருளாதார போட்டித்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கட்டமைப்பு சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.
- கல்வி மற்றும் சுகாதாரத்தில் இலக்கு முதலீடு, அத்துடன் சமூக பாதுகாப்பு வலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை பொருளாதார மீட்சியை ஆதரிப்பதிலும் சமத்துவமின்மையைக் குறைப்பதிலும் முக்கியமானதாக இருக்கலாம்.
- எவ்வாறாயினும், இத்தகைய கொள்கைகளை செயல்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் பல வளரும் பொருளாதாரங்களில் அதிக அளவிலான அரசாங்கக் கடன்களை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கு இடையே ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை முக்கியமானதாக இருக்கும்.

இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம்

நீண்ட காலமாக நிலைத்திருக்கும் இறையியல் ஏற்றத்தாழ்வுகள் நீடித்து நிலைக்க முடியாத பொதுப்படு கடன் அளவுகளை ஏற்படுத்தி, பேரழிவு தரும் பேரண்ட பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தியது. எனவே, நிதித்துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், பேரண்ட இறையியல் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும் அரசாங்கம் இறை ஒருங்கிணைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்பு பாதையில் பயணம் செய்தது.

2022 ஆண்டின் முதல் அரையாண்டில் அரசாங்க வருவாய் திரட்டுதல், குறிப்பாக மிகை வரி, அதிகரித்த பெறுமதி சேர் வரி விகிதங்கள் மற்றும் தொலைத்தொடர்பு வரி ஆகியவற்றால் மேம்படுத்தப்பட்டது. அதிகரித்த உள்நாட்டு வட்டி விகிதங்கள், தேய்மானம் செய்யப்பட்ட நாணயமாற்று விகிதங்கள் மற்றும் உயர் பணவீக்கம் மற்றும் நெருக்கடி காலத்தில் பொதுத்துறை ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு ஆதரவாக 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சில செலவின நடவடிக்கைகளுடன் இணைந்து, பெயரளவிலான வகையில், அரசாங்கச் செலவுகள் அதிகரித்தன. இதன் விளைவாக, பாதீட்டு பற்றாக்குறை பெயரளவில், 2022 இன் முதல் அரையாண்டில், 2021 இல் அதே காலகட்டத்தில் காணப்பட்டதை விட அதிகரித்தது.

பேரண்ட பொருளாதார சீர்திருத்த திட்டத்தின் கீழ், நிறுவன சீர்திருத்தங்கள் மூலம் வருவாய் மற்றும் செலவு நடவடிக்கைகள் மூலம் வலுவான நிதி ஒருங்கிணைப்பு செயல்முறை செயற்படுத்தப்பட உள்ளது. அதே நேரத்தில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் மேற்கொள்ளப்படவுள்ள பயன்பாடுகள் ஏற்பாட்டில் சீர்திருத்தங்கள், செலவு-பிரதிபலிப்பு விலை நிர்ணய உத்திகளும், மற்ற சீர்திருத்தங்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. பெறுமதி சேர் வரி, தொலைத்தொடர்பு வரி மற்றும் நிறுவன வருமான வரி விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் தனிநபர் வருமான வரி விலக்கு குறைப்பு உள்ளிட்ட பல்வேறு வரி சீர்திருத்தங்கள் அரசாங்கத்தால் வருவாய் சேகரிப்பை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

ஏப்ரல் 2022 இல் கடன் நிறுத்தம் பற்றிய அறிவிப்பு மற்றும் சென்மதி நிலுவை நெருக்கடி முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்ததைத் தொடர்ந்து, வங்கிகள் தங்கள் வெளிநாட்டு நாணயப் பொறுப்புகளைத் திருப்பிச் செலுத்த முடியாததால், வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு அதிகரித்தது.

வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையானது, 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், நிகர அடிப்படையில், உள்நாட்டு ஆதாரங்கள் மூலம் முழுமையாக நிதியளிக்கப்பட்டது. இது கடன் நிறுத்தம் மத்தியில் உலகளாவிய மூலதனச் சந்தைகளில் கட்டுப்படுத்தப்பட்ட அணுகலை பிரதிபலிக்கிறது.

கண்ணோட்டம்

இதுவரை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இறையியல் கொள்கை நடவடிக்கைகளின் தாக்கம், இறையியல் துறையின் செயல்திறனில் இன்னும் முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை.

வங்கித் துறை மீதான பாதிப்பு

அரசானது 2020/21 மதிப்பீட்டு ஆண்டிற்கான, ரூ. 2 பில்லியனை விட அதிகமாக வரி விதிக்கத்தக்க வருமானத்தை பதிவு செய்த நிறுவனங்கள் மீது மிகை வரியை அமுல்படுத்தியது. பெரும்பாலான வங்கிகள் அவற்றின் அதிக லாபத்தின் அடிப்படையில் மிகை வரியை செலுத்தக்கூடிய வாய்ப்புள்ளது. குறைந்த வரையறை நிர்ணயத்தால், 1 ஏப்ரல் 2022 இலிருந்து அமுலுக்கு வந்த ரூ. 120 மில்லியனுக்கும் அதிகமான வருடாந்த வருமானம் மீது விதிக்கப்படும் 2.5% சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டை அனைத்து வங்கிகளும் செலுத்த வேண்டியிருக்கும். நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி 2022 இல் 15% இலிருந்து 18% ஆக அதிகரித்துள்ளது (இதை வாடிக்கையாளர்களின் மீது சுமத்த முடியாது).

கண்ணோட்டம்

துரதிர்ஷ்ட வசமாக, 2023 இற்க்கான பாதீட்டு முன்மொழிவுகளில் இருந்து மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளில் ஒன்றாக வங்கித் துறை மாறியது. பிடித்து வைத்தல் வரி, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு மற்றும் அதிகரித்த நிறுவன வரி விகிதம் மற்றும் நிதிச் சேவைகள் மீதான அதிகரித்த பெறுமதி சேர் வரி ஆகியவை வங்கித் துறையின் இலாபத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், வரிச் சீர்திருத்தங்கள் பொருளாதார முகவர்களின் ஐந்தொகைகளை, குறிப்பாக வீட்டுத் துறையில், கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைக் குறைத்து, நிதித்துறையில் அதிக செயற்படா கடன்களுக்கு (NPL) வழிவகுக்கும். மேலும் பலவீனமான நிதி நிலைகளைக் கொண்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களும் வங்கிகளை உயர் கடன் மற்றும் திரவத்தன்மை அபாயங்களுக்கு இட்டுச்செல்லும் அதே நேரத்தில் அரசாங்க கடன் மறுசீரமைப்பு செயல்முறையைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மைகள் நிதி ஸ்திரத்தன்மை கரிசனங்களை அதிகரிக்கின்றன.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

கடன்

உலகளாவிய தொழிற்பாட்டு சூழல்

இன்ஸ்டிடியூட் ஆ.ப்ப் இன்டர்நேஷனல் பைனான்ஸ் மதிப்பீட்டின்படி, உலகளாவிய ரீதியில் மொத்தக் கடன், வரலாற்று பதிவாக அமெரிக்க டொலர் 300 திரில்லியன் அல்லது ஜூன் 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 349% யை எட்டியது. உலகளாவிய ரீதியாக அரசாங்கங்கள், வீட்டுத்துறையினர், நிதி நிறுவனங்கள் மற்றும் நிதியல்லாத நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கடன்களை பிரதிபலிக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலகளாவிய கடன் விகிதம் 30% ஆல் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் உலகில் உள்ள ஒவ்வொரு நபரின் சராசரி கடன் 37,500 அமெரிக்க டாலர்களாகும். 2007 இலிருந்து 2022 வரை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரசாங்க கடன் 76% லிருந்து 102% ஆக அதிகரித்து காணப்பட்டது. (ஆதாரம்: S&P குளோபல்)

உலகின் ஏழ்மையான நாடுகளின் பொது மற்றும் பொது உத்தரவாதக் கடனுக்கான வெளிவாரிக் கடன் சேவைக் கொடுப்பனவுகள் 2022இல் 2021 இலிருந்து 35% அதிகரிப்புடன் அமெரிக்க டாலர் 62 பில்லியனாக அதிகரித்துள்ளது. கடன் சேவை கொடுப்பனவுகள் சுகாதாரம், கல்வி, சமூக உதவி மற்றும் உள்கட்டமைப்பு முதலீட்டில் இருந்து அரிதான இறையியல் வளங்களை பறித்துக் கொள்கின்றன. 2023 மற்றும் 2024 இல் திட்டமிடப்பட்ட கட்டணங்கள் அதிக வட்டி விகிதங்கள், முதிர்ச்சியடையும் முதல் மற்றும் கடன் சேவை நிறுத்த முன்முயற்சி ஒத்திவைப்புகளின் மீதான கூட்டு வட்டி ஆகியவற்றின் காரணமாக அதிகமானதாக இருக்கும். அதிக கடன் சுமை உள்ள நாடுகளில் அதிகரித்த திரவத்தன்மை அழுத்தங்கள், கடனைத் தீர்க்கும் சவால்களுடன் கைகோர்த்து, கடனை அதிகரிக்கச் செய்கிறது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கான உலக வங்கி-சர்வதேச நாணய நிதியக்கூட்டு கடன் நிலைத்தன்மை கட்டமைப்பிற்கு உட்பட்ட கிட்டத்தட்ட 60% நாடுகள் கடன் நெருக்கடியில் உள்ளன அல்லது ஏற்கனவே அதை அனுபவித்து வருகின்றன. (ஆதாரம்: சர்வதேச கடன் 2022 - உலக வங்கி குழு)

கண்ணோட்டம்

பொருட்களின் விலையில் இணையற்ற உயர்வு காணப்படுவதை தொடர்ந்து 2022ஆம் ஆண்டில் உலகளாவிய மத்திய வங்கிகள் வட்டி விகிதங்களை உயர்த்துவதன் பின்னணியில், 2023 இல் உலகளாவிய மந்தநிலை மீதான எதிர்பார்ப்பு அதிகரித்து வருகிறது, எனவே, விலைவாசி உயர்வு நுகர்வோர் செலவினங்களை ஊக்கப்படுத்துகிறது மற்றும் பொருளாதார மந்தநிலைக்கு வழிவகுக்கும். உலகளாவிய கடனுடன் தொடர்புடைய சுழல், வளரும் மற்றும் வளர்ந்து வரும் சந்தைகளில் நிதி பேரழிவுகளின் தொடர்ச்சியாக வரும் மந்தநிலையை உள்ளடக்கியது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியைக் குறைக்கும், இதன் விளைவாக பண கையிருப்பு குறைகிறது, மேலும் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைக் குறைத்து, பணம் செலுத்த முடியாத நிலைமையை மேலும் அதிகரிக்கும்.


நாடுகள் தங்கள் கடனைச் செலுத்த முடியாதபோது, அவை திவாலாகிவிடுகின்றன, இது நிதிச் சீர்குலைவுகளுக்கு வழிவகுப்பதுடன், இதனால் குடிமக்கள் தங்கள் நாணயத்தின் மதிப்பை இழப்பதால் இழப்புகளைத் தவிர்க்க பாதுகாப்பான முதலீடுகளை நாடுகின்றனர். ஆதன சந்தையின் விலைகள் அதிகரித்து வருவதால், பலர் தங்கள் பணத்தின் மதிப்பைப் பாதுகாக்க வேறு வழிகளை தேர்வு செய்கிறார்கள். இருப்பினும், இந்த போக்கு 2023 இல் தொடர்ந்து வளர்ந்தால், அது டொலரின் மதிப்பை அதிகரிப்பதுடன், பொருளாதார அழுத்தத்தில் இருக்கும் நாடுகளுக்கு மேலும் சுமையாக இருப்பதோடு அவர்களின் வளர்ச்சி வாய்ப்புகளைத் தடுக்கும். கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாமை மற்றும் புதிய கடன்களின் குவிப்பு ஆகியவை வளரும் அல்லது ஏழை நாடுகளில் பொதுமக்களின் கோபத்திற்கும் வெறுப்பிற்கும் வழிவகுப்பதுடன் அரசாங்கங்களின் கொள்கைகள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை பலவீனப்படுத்தலாம்.

உலகப் பொருளாதாரத்தின் இருண்ட கண்ணோட்டத்தின் பொருட்டு, குறிப்பாக சிக்கலான உலகளாவிய கடன் நெருக்கடியுடன் போராடும் வளரும் மற்றும் ஏழை நாடுகளுக்கு, இந்த நிலைமை வீதி போராட்டங்கள் மற்றும் உள்நாட்டு அமைதியின்மையாக அதிகரிக்கக்கூடும் என்ற அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. மேலும் சில நாடுகளில் ஆட்சி கவிழ்ப்புக்கும் வழிவகுக்கும். இது கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலை எனும் புதிய அலைக்கான அச்சத்தைத் தூண்டினாலும், உலகப் பொருளாதாரத்துடன் ஒப்பிடும்போது பாதிக்கப்பட்ட பொருளாதாரங்கள் ஒப்பீட்டளவில் சிறியதாக இருப்பதால், இது உலகளாவிய நிதி நெருக்கடியை ஏற்படுத்த வாய்ப்பில்லை. ஆயினும் கூட, இந்த பொருளாதாரங்களில் தற்போது நிலவும் நெருக்கடி, உணவுப் பாதுகாப்பின்மையைத் தூண்டி, அரசியல் மற்றும் சமூகக் கொந்தளிப்பை மோசமாக்கும் பொருளாதார விகாரங்களை அதிகப்படுத்தும்.

இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம்

முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக உள்நாட்டு நாணயத்தின் சடுதியான தேய்மானம், பெயரளவிலான குறிப்பிடத்தக்களவு வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் கடனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் தாக்கத்தை பிரதிபலிக்கும் வகையில், இலங்கையின் மொத்த நிலுவையில் உள்ள அரசாங்கக் கடன் 2022 இல் நிலையற்ற மட்டத்தை எட்டியது. 2022 ஆண்டிறுதியில் அரசின் கடன் ரூ. 27,492 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை (மொ.உ. உற்பத்தியில் 113.8%) 2021 இறுதியில் ரூ. 17,614 பில்லியன் ஆக காணப்பட்டது (மொ.உ.உற்பத்தியில் 100.1%). 2022 இறுதியில் மொத்த உள்நாட்டுக் கடன் 35.9% ஆல் அதிகரித்து ரூ. 15,034 பிலியனாக காணப்பட்ட அதேவேளை (மொ.உ.உற்பத்தியில் 62.3%), 2021 உடன் ஒப்பிடும்போது வெளிநாட்டுக் கடன் 91.0% ஆல் அதிகரித்து ரூ. 12,458 பில்லியனாக காணப்பட்டது. (மொ.உ.உற்பத்தியில் 51.6% ஆகும்).

மொத்த நிலுவையில் உள்ள கடன் வரைபடம் 6



ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

2021 உடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில், மொத்த கடன் சேவை செலுத்துதல்கள் 25.9% ஆல் அதிகரித்து ரூ. 2,997.6 பில்லியனாகக் காணப்பட்டது. இது அதிகரித்த கடன் தீர்செலவு மற்றும் உள்நாட்டு கடன் தொடர்பான வட்டி செலுத்துதல் காரணமாக ஏற்பட்டதாகும். உள்நாட்டுக் கடன் சேவைச் செலுத்தல்கள் 57.5%ஆல் ரூ. 2,510.3 பில்லியனாக அதிகரித்தது. இது கொள்கை விகித சீராக்கல்களை விட கூடிய அரசாங்க பிணையங்களிலிருந்தான விளைவினாலாகும். உள்நாட்டுக் கடனின் சாத்தியமான மறுசீரமைப்புடன் தொடர்புடைய உயர்ந்த இடரும் இந்த அதிகரிப்புக்கு பங்களித்தது. கூடுதலாக, பற்றாக்குறை நிதியுதவிக்கான உள்நாட்டு ஆதாரங்கள் மீதான அழுத்தமும், வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு நிதியுதவியும், அரசாங்கப் பிணைப் பத்திரங்களின் விளைவுகளை அதிகரிக்க வழிவகுத்தது. இருப்பினும், வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள் 38.0% ஆல் குறைந்து இடைக்காலக் கொள்கை அறிவிப்பின்படி, ஏப்ரல் 2022 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகளை அரசாங்கம் நிறுத்தியதன் காரணமாக, 2021 உடன் ஒப்பிடும்போது, 2022 இல் ரூ. 487.4. ஆக குறைவடைந்து காணப்பட்டது.

கடன் தரப்படுத்தல்கள் தரமிறக்கம்

தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவைக் கடமைகளின் முன்கூட்டிய இயல்நிலையுடன், சர்வதேச இறையாண்மைக் கடன் தரமதிப்பீட்டு நிறுவனங்கள் 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மதிப்பீடுகளைத் தொடர்ந்து தரமிறக்கின. ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் (S&P) குளோபல் ரேட்டிங்ஸ் இலங்கையின் தரப்படுத்தலை, ஏப்ரல் 13, 2022 அன்று "CCC (எதிர்மறை)" இலிருந்து "CC (எதிர்மறை)" க்கு தரமிறக்கப்பட்டது. மேலும் 25 ஏப்ரல் 2022இல் சர்வதேச முறிகளின் கூப்பன்கள் செலுத்தப்பாததைத் தொடர்ந்து "SD" (தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் செலுத்தா நிலைக்கு) என்ற மிகக் குறைந்த மதிப்பீட்டிற்கு தரமிறக்கப்பட்டன. ∴பிட்ச் தரப்படுத்தலும் 19 மே 2022 அன்று நாட்டின் இறையாண்மைக் கடன் தரப்படுத்தலை "C" இலிருந்து "RD" (கட்டுப்படுத்தப்பட்ட கடன் செலுத்தா நிலைக்கு) குறைத்தது. அதேபோன்று, 18 ஏப்ரல் 2022 அன்று. மூடிஸ் இன்வெஸ்டல் சேர்விசும் இலங்கையின் இறையாண்மைக் கடன் மதிப்பீட்டை "Ca (நிலையானது)" இலிருந்து "Ca2 (நிலையானது)" ஆகக் குறைத்தது.

கண்ணோட்டம்

இலங்கை வங்கிகளின் வெளிநாட்டு நாணய நிதியுதவிக்கான அணுகல், வெளிநாட்டு கடனை திருப்பி செலுத்தும் ஆற்றலில் காணப்பட்ட இயலாமை காரணமாக கட்டுப்படுத்தப்படுகிறது. உள்ளூர் நாணயத்தை அடிப்படையாக கொண்ட நிதிதிரட்டல் முக்கியமானதாகவுள்ள நிலையில் எந்தவொரு உள்ளூர் நாணயக் கடன் மறுசீரமைப்பும், நிதி மற்றும் திரவத்தன்மை அழுத்தத்தை உயர்த்தும். 2022ஆம் ஆண்டில் தடைப்பட்ட தனியார் துறை கடன் வளர்ச்சி, வரவிருக்கும் காலங்களில், மேம்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்துள்ளன சந்தை வட்டி விகிதங்களிலேற்படும் தளர்வு ஆகியவற்றால் வலுவடையும்.

அடையாளம் காணப்பட்ட பொதுக் கடனின் மறுசீரமைப்பை 2023ஆம் ஆண்டில் அரசாங்கம் நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை அடைவதற்கு, கடன் நிலைத்திருக்கும் தன்மை பகுப்பாய்வின் மூலம் சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த கடன் நிலைத்தன்மை இலக்குகளை சந்திக்கும் அதே வேளையில், நிலுவையில் உள்ள கடனை நிர்வகிக்கக்கூடிய அளவிற்கு கடன் மறுசீரமைப்புக்கான தெரிவுகளை அரசாங்கம் தற்போது மதிப்பிடுகிறது. இந்த மறுசீரமைப்பு செயல்முறையின் மூலம், நிலுவையில் உள்ள பொதுப்படுகடன் 2032ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95.0% க்கும் கீழே குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூடுதலாக, 2027 மற்றும் 2032ற்க்கு இடையில் சராசரி மத்திய அரசின் மொத்த நிதித் தேவைகளை மொ.உ.உற்பத்தியில் 13.0%க்கும் குறைவாக வைத்திருப்பதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், மத்திய அரசின் வெளிநாட்டு நாணயக் கடன் சேவைக் கொடுப்பனவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5% ஐ விட அதிகரிக்காமல் இருப்பதை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இலக்குகளை அடைவதன் மூலம், நாட்டின் கடன் நிலைத்தன்மையை மேம்படுத்தவும், நீண்ட கால பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்தவும் முடியும் என அரசாங்கம் நம்புகின்றது.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்


வெளிநாட்டு அபிவிருத்திகள்

உலகளாவிய தொழிற்படும் சூழல்

உலக வர்த்தகம் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலரின் நகர்வு

2022 ஆண்டில், அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்கள் இருந்த போதிலும், ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாட்டின் (UNCTAD) உலகளாவிய வர்த்தக புதுப்பிப்பின் (மார்ச் 2023) படி, உலக வர்த்தகம் 2.7% வளர்ச்சியைப் பதிவு செய்து ஐ.அ. டொலர் 32.0 திரில்லியனை எட்டியது. இருப்பினும், 2022 நான்காம் காலாண்டில் மோசமடைந்து வரும் பொருளாதார நிலைமைகள், பூச்சிய கொவிட் கொள்கைகளை நீக்குதல் மற்றும் பணவீக்க அழுத்தங்கள் பற்றிய நெருக்கடிகள் ஆகியவை வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க மந்தநிலையை விளைவித்துள்ளன.

உலகளாவிய வர்த்தக வளர்ச்சி — வரைபடம் 7



ஆதாரம்: உலக வர்த்தக அமைப்பு

அமெரிக்க மத்திய வங்கியின் இறுக்கமான கொள்கை சுழற்சிக்கு மத்தியிலும் அமெரிக்க டொலரின் பாதுகாப்பான முதலீடு எனும் நிலை உயர்வதால், DXY சுட்டெண் அமெரிக்க டொலர் வரலாற்றில் உயர்ந்த மட்ட அளவில் பெறுமதியேற்றம் அடைந்துள்ளதைக் குறிக்கிறது. அமெரிக்க டொலரின் மதிப்பு தொடர்ச்சியாக மதிப்பேற்றம் பெறுவதால் மேம்பட்ட மற்றும் வளர்ந்து வரும் மத்திய வங்கிகளுக்கு சவாலாக உள்ளது. பல கொள்கை வகுப்பாளர்கள் (சிலி, செக் குடியரசு, இந்தோனேசியா ,ஜப்பான், பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா) நாணயத்தின் பெறுமதியில் நிலையற்ற தன்மையை கட்டுப்படுத்தவும் அதிகரித்த இறக்குமதி பொருட்களின் விலைகளால் ஏற்படக் கூடிய பணவீக்கத்தை நிர்வகிப்பதை நோக்கமாக கொண்டு அந்நியச் செலாவணி சந்தையில் தலையிடத் தயாராக உள்ளனர் அல்லது சமிக்ஞை செய்கின்றனர். அமெரிக்க டொலரின் பெறுமதி நகர்வு, அமெரிக்காவின் சொத்துக் குறைப்பு எதிர்பார்ப்புகள் மற்றும் முன்னேறிய பொருளாதாரங்களால் எடுக்கப்பட்ட வட்டி விகிதம் தொடர்பான கொள்கைகள் ஆகியவற்றுக்கு பதிலளிக்கும் விதமாக, சமீபத்திய மாதங்களில் லேசான ஏற்ற இறக்கங்களுடன் தங்கத்தின் விலைகள் குறைந்து வருகின்றன.

கண்ணோட்டம்

தற்போதைய புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் இறுக்கமான நிதி நிலைமைகள் காரணமாக 2023 ஆம் ஆண்டில் உலக வணிகப் பொருட்களின் அளவு 1.7% வளர்ச்சிக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய விநியோகச் சங்கிலிகளின் பரிணாமம் மற்றும் பசுமையான உலகப் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றம் ஆகியவை வரவிருக்கும் ஆண்டில் வர்த்தக போக்குகளையும் பாதிக்கலாம்.

ஐரோப்பாவில், எரிசக்தி விலைகளின் ஏற்றத்தாழ்வு நிறுவனங்கள் மற்றும் குடும்பங்களின் வரவுசெலவுத் திட்டங்களைக் கட்டுப்படுத்துகிறது, அதே நேரத்தில், அமெரிக்காவில், பணவியல் கொள்கை இறுக்கமானது செலவளிக்கும் திறனை கட்டுப்படுத்துகின்றது.

சீன உற்பத்தித் துறையானது தொடர்ச்சியாக பூச்சிய - கொவிட் கொள்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்தி இடையூறுகள் காரணமாக பொருளாதார மந்தநிலையுடன் இணைந்து பலவீனமான வெளிப்புற தேவையுடன் தொடர்ந்து போராடியது. பல நாடுகளுக்கு, எரிபொருள், உணவு மற்றும் உரத்திற்கான இறக்குமதி கட்டணங்கள் அதிகரித்து வருவதால், கடன் சுமை அதிகரிப்பதை தவிர்க்க செலவினங்களை பகுப்பாய்வு செய்ய கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே, உலக வர்த்தக அமைப்பின் (WTO) கண்ணோட்டத்தின் படி 2023 இல் உலகளாவிய வர்த்தக வளர்ச்சி பலவீனமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க டொலர் குறியீட்டு எண் (DXY), ஏறக்குறைய இரண்டு வருடங்கள் தொடர்ந்து வலுப்பெற்றிருந்தாலும், உண்மையான மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விகித வேறுபாடுகள் தொடர்ந்து விரிவடைந்து வந்த போதிலும், செங்குத்தான வீழ்ச்சி காணப்பட்டது. அமெரிக்க டொலருக்கான தேவை குறைந்து வருவதே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

2023 ஆம் ஆண்டில், மிகவும் சிக்கலான இயக்கவியல் முறைகள் அமெரிக்க டொலரை இயக்கும். எதிர்காலத்தில், ஐரோப்பாவில் எரிசக்தி தேவைகள் அதிகரிப்பது யூரோ மீதான அழுத்தத்தை தொடர்ந்து குறைக்கும். ஐரோப்பா, இங்கிலாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள மத்திய வங்கிகள் அந்தந்த நாணயம் மற்றும் பிணையச் சந்தைகளில் அதிக அணுகுமுறையை எடுத்துக்கொள்வதால், உள்நாட்டு மாற்று விகிதத்தின் மீதான அழுத்தம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு குறையும். பணவீக்க சரிவு மற்றும் மெதுவான வளர்ச்சி காரணமாக அமெரிக்க டொலர் அழுத்தத்திற்கு உள்ளாக வாய்ப்புள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம்

நாணயமாற்று வீகித நகர்வுகள்

2021 வருட இறுதி மற்றும் 2022 இன் முற்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி ரூ.200-203 என்ற அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயங்களுக்குக்கான உள்நாட்டு சந்தையில் தலையீட்டின் காரணமாக நிலையானதாக காணப்பட்டது. எவ்வாறாயினும், உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தையில் திரவத்தன்மையின் கடுமையான பற்றாக்குறை நாணய மாற்று வீதத்தில் தொடர்ந்து அழுத்தங்களைச் செலுத்தியதன் காரணமாக, மார்ச் 2022 இன் தொடக்கத்தில் அனுமதிக்கப்பட்ட சீர்செய்தல் தேவைப்பட்டது. இதன் விளைவாக, சந்தை சக்திகளால் செலாவணி விகிதத்தின் மீதான பெருமளவு மிகைப்படுத்தல் காரணமாக, 2022 ஏப்ரல் இறுதிக்குள் இலங்கை ரூபாயின் அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி 41.4% என்ற கணிசமான அளவில் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. 13 மே 2022 இல் இலங்கை மத்திய வங்கி நிபுணர்களுடன் இணைந்து சந்தையில் மிகைப்படுத்தப்பட்ட ஊகத்தால் ஏற்படக்கூடிய நிலையற்ற தன்மையை குறைப்பதற்கு புதிய நாணய பரிமாற்ற ஏற்பாட்டை அறிமுகப்படுத்தியது.

அதன்படி, வங்கிகளுக்கிடையேயான சந்தையில் முதல்நாள் தீர்மானிக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி சந்தை செலாவணி விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு இருபக்கமும் மாறல்களின் வீச்சை அனுமதிக்கக்கூடிய உடன் சந்தை செலாவணி விகிதத்தில் ஏற்படும் தளம்பல்களின் அளவு மீது இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நாளாந்த வழிகாட்டியை வழங்கத்

வங்கித் துறை மீதான பாதிப்பு

சந்தைக்கான அணுகலை இழந்த நிலைக்கு மத்தியில் அந்நிய செலாவணி உள்வருகை இன்றி இலங்கை தனது வெளிவாரி கடனுக்கான கொடுப்பனவை கடன் கொடுப்பனவு இடைநிறுத்தம் அறிவிக்கப்படும் வரை செலுத்தி வந்ததோடு, வங்கித் துறையின் உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் மற்றும் வெளிநாட்டு சொத்துக்களைப் பயன்படுத்தி இறக்குமதிகளுக்கான கொடுப்பனவை செலுத்தியது.

பலவீனமான பேரண்ட பொருளாதார அடிப்படைகள், குறைந்து வரும் வெளிநாட்டு ஒதுக்கங்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய தெளிவின்மை ஆகியவற்றின் பின்னணியில் சர்வதேச தரமதிப்பீட்டு முகவர் நிலையங்கள் இலங்கையை தொடர்ந்து தரமிறக்கி வருகின்றன. நாட்டின் இறையாண்மை தரமிறக்கல் காரணமாக இலங்கைக் கடன் வழங்குனர்களுக்கான வெளிநாட்டு நிதியளிப்பு வழிகளை பெற்றுக் கொள்வதில் வரையறைகளை தோற்றுவித்தது. இலங்கையில் உள்ள வங்கிகள் கடந்த வருடத்தில் தமது வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை குறைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. எனவே, வங்கிகளின் சர்வதேச பிரிவுகள் நாணய கடிதங்களை திறப்பதிலும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளைக் கையாள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கின.


ஏறத்தாழ ரூ. 4.0 திரில்லியன் உள்நாட்டில் வழங்கப்பட்ட அரசாங்க கடன்களில் வங்கி துறையினரால் முதலீடு செய்யப்பட்டதோடு, இதில் பெரும்பாலானவை ஒழுங்குமுறை தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

கண்ணோட்டம்

சர்வதேச இறையாண்மை முறிகள் (ISB) மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் (SLDBs) வங்கிகள் முதலீட்டை கொண்டிருக்கும் போது, உச்சவரம்பானது (haircut) வங்கித் துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கு மீளெழுச்சியுடைய வங்கித் தொழில் பிரதானமான கருவியாக செயற்படுகின்றது. இந்த காரணத்திற்காக, உள்நாட்டுக் கடனுக்கான வரம்பை நிர்ணயிப்பது சாத்தியமற்றது என்றாலும் மாறாக கடன் மீள செலுத்தும் கால எல்லையை நீடிப்பது அல்லது கடனிற்கான விபரணத்தை மாற்றுவது சாத்தியமாகும்.

தொடங்கியது. அதன்படி, 2022 மே 13 முதல் 2022 செப்டெம்பர் இறுதி வரை, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் சிறிதளவு தேய்மானத்தையே பதிவு செய்தது. ஒட்டுமொத்தமாக, 2022 வருடத்தில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி 44.8% ஆல் குறைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஸ்டெர்லிங் பவுண்ட், யூரோ, ஜப்பானிய யென் மற்றும் இந்திய ரூபாய் ஆகியவற்றிற்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பும் சரிந்துள்ளது. அந்நிய செலவாணியிலான திரவ தன்மை பற்றாக்குறை மத்தியில் 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நாணயங்களுக்கான உள்நாட்டு பரிமாற்று சந்தை குறைவான செயற்திறனுடன் செயற்பட்டது.

அமெரிக்க டொலர் எதிர் ரூபாய் (ஜனவரி 2021 - ஜனவரி 2023) வரைபடம் 8



ஆதாரம்: உலக வர்த்தக அமைப்பு

வர்த்தக கணக்கு

வெளித்துறையின் அழுத்தங்கள் இலங்கையில் பொருளாதார நெருக்கடியாக உருவெடுத்தது. பொருட்களின் அதிக விலைகள் இறக்குமதி விலைகளை உயர்த்தி வர்த்தக பற்றாக்குறையை விரிவுபடுத்தியது.

2022இல் முதன்முறையாக ஒரு வருடத்திற்கான ஏற்றுமதி வருவாய் 13.0 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியது. சாதகமான மாற்று விகிதம் மற்றும் அதிகரித்த தொழில்துறை வருமானம் மற்றும் கனிம ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட வருவாய் ஆகியவற்றால் 2021 இல் பதிவு செய்யப்பட்ட அதிகபட்சத்திலிருந்து 4.9% அதிகரிப்பைப் பதிவு செய்தது, அவசரமற்ற இறக்குமதிகள், 2022 இன் பெரும் பகுதியில் நிலவிய திரவநிலை கட்டுப்பாடுகளின் விளைவாக குறைந்த தேவை நிலைமைகள், அதிக எண்ணெய் விலைகள் இருந்த போதிலும் மாற்று விகிதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க தேய்மானம் ஆகியவற்றின் விளைவாக, 2022 இல் இறக்குமதி செலவு 11.4% குறைந்து அமெரிக்கடொலர் 18.3 பில்லியனாக காணப்பட்டது. இதன் விளைவாக, வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2021 இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ 8.1 பில்லியனில் இருந்து 2010 இற்கு பின்னரான மிகக் குறைந்த நிலையான ஐ.அ.டொ 5.2 பில்லியனாக 2022 இல் குறைவடைந்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து பணிபுரிவோரால் அனுப்பப்படும் பணம்

வெளிநாட்டிலிருந்து பணிபுரிவோரால் அனுப்பப்படும் பணம், ஆண்டின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்க மீட்சி காணப்பட்டமையால் 2021 இன் ஐ.அ.டொ 5.5 பில்லியனில் இருந்து 2022 இல் 31.0% ஆல் (YoY) ஐ.அ.டொ 3.8 பில்லியனாக குறைவடைந்தது. மார்ச் 2022 இன் ஆரம்பத்தில் செலாவணி விகிதத்தில் ஏற்பட்ட சீராக்கமானது கணிசமான அளவு அதிகரிப்பை ஏற்படுத்தியதுடன், வங்கி முறைக்கு வெளியே உள்ளவர்களுடன் வங்கிகள் வழங்கிய மாற்று விகிதங்களை படிப்படியாக சீரமைத்து வங்கி முறைமையினூடாக தொழிலாளர் பணப்பெறுகைகளை பெற்றுக்கொள்ள வழிவகுத்தது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை

2021 இல் 194,495 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் ஒப்பிடுகையில் 2022 இல் மொத்தம் 719,978 சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவானது, இது 2019 இல் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பதிவு செய்துள்ளது. இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியவை 2022 இல் முதன்மையான சுற்றுலா சந்தைகளாக இருந்தன. சுற்றுலா துறையில் இருந்தான வருமானம் 2021 இல் காணப்பட்ட ஐ.அ.டொ 507 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2022 இல், ஐ.அ.டொ 1.1 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது.

நிதி பாய்ச்சல்கள்

அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் 51 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மொத்த நிகர உள்வருகையை பதிவு செய்தன. 2022 இன் போது, ஒட்டுமொத்த அடிப்படையில், கொழும்பு பங்குச் சந்தை (CSE) முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தை பரிவர்த்தனைகள் உட்பட, ஐ.அ.டொ 182 மில்லியன் அளவிலான வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சலை பதிவு செய்தது.

2022 ஆம் ஆண்டில், உட்பாய்ச்சல்கள் எல்லைக்குட்பட்டதாக இருந்த போதிலும், நிதிக் கணக்கில் இருந்து வெளியேறும் தொகை அதிகமாகவே இருந்தது. மேலும், 12 ஏப்ரல் 2022 அன்று கடன் நிறுத்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக 2022 இன் முதல் பாதியில் சர்வதேச முறிகளின் முதிர்வு உட்பட குறிப்பிடத்தக்க வெளிப்புறக் கடன் சேவை செலுத்துதல்கள் செய்யப்பட்டன.

சென்மதி நிலுவை மற்றும் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள்

நிகர சர்வதேச ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிக்கும் சென்மதி நிலுவையின் ஒட்டு மொத்த மீதி, தொடர்புடைய காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, 2022 இல் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையைப் பதிவு செய்தது.

மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய வரவுகளுக்கு மத்தியில் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்புகளைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கான பகுதி நிதி தொடர்ந்து செலுத்தப்பட்டது. அதன்படி, நிதியியல் கணக்கிற்கு குறைந்த உட்பாய்ச்சல், இலங்கை மத்திய வங்கியிடம் இருந்து உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தைக்கு நிகர விற்பனை மற்றும் குறிப்பிடத்தக்க உயர் கடன் சேவை செலுத்துதல் ஆகியவற்றின் விளைவாக மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு டிசம்பர் 2022 இன் இறுதியில் ஐ.அ.டொ 1.9 பில்லியனாக குறைந்தது. இது 2021 இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ 3.1 பில்லியனுடன் ஒப்பிடும்போது குறைவாகும். இதில் சுமார் ஐ.அ.டொ 1.4 பில்லியனுக்கு சமமான பயன்பாட்டிற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்ட, சீனாவின் மக்கள் வங்கியிடம் இருந்தான நாணய பரிமாற்ற வசதியும் அடங்கும்.

கண்ணோட்டம்

உலக வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள மந்தமான வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி மற்றும் பணப் பரிமாற்றங்கள் மூலம் வெளிநாட்டு நாணய வருவாய் சீராக வருவதைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக எதிர்வரும் காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு நிலை பாதிக்கப்படலாம். மேலும், அத்தகைய அந்நிய செலாவணி திரவநிலை இடர்கள் பொருண்மியமானதாக காணப்பட்டால், அது உள்நாட்டு அந்நிய செலாவணி சந்தையின் வெளிநாட்டு நாணய திரவநிலையை மோசமாக பாதிக்கும்.

வங்கித் துறை மீதான பாதிப்பு

வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள்

மொத்த வருடாந்தப் பணம் அனுப்புதல் தொடர்ந்து குறைந்து வந்தது, இது வெளிநாட்டு வரவு வழிகளைக் கட்டுப்படுத்தியதால் பணம் மடைமாற்றப்பட்டதைக் குறிக்கின்றது. தொடர்ச்சியான தேய்மானம் நாணயத்தின் மீதான நம்பிக்கையை குறைத்து, வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலை மட்டுப்படுத்தும். சந்தை மீதான நம்பிக்கை இழப்பானது, இறுக்கமான அந்நிய செலாவணி பரிமாற்ற கட்டுப்பாடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட கட்டாய திருப்பி அனுப்புதல் மற்றும் மாற்றுதல் விதிகள் என்பன மத்தியிலும் குறிப்பாக முறையான வழிகள் மூலம் இலங்கைக்கு ஏற்றுமதி வருமானம் மற்றும் பண அனுப்புதலில் சவால்களை உருவாக்கியது.

வெளிநாட்டு நாணய திரவநிலை

புதிய மூலதனம் மற்றும் நிதி உட்பாய்ச்சல் இல்லாத நிலையில், கட்டாய மாற்றலுக்குட்பட்ட வெளிநாட்டு பரிமாற்ற உட்பாய்ச்சல் (ஏற்றுமதி மற்றும் பணம் அனுப்புதல்), மற்றும் முன்னுரிமை அடிப்படையிலான இறக்குமதி முன்னுரிமை மற்றும் பங்கீடு உள்ளிட்ட இறுக்கமான அந்நியச் செலாவணி பரிமாற்ற நடைமுறைகள் சுமத்தப்பட்டன. வங்கி அமைப்பில் உள்ள நிகர வெளிநாட்டு சொத்துக்களின் தேய்வு பொருளாதார நடவடிக்கைகளுக்காக அந்நிய செலாவணி தேவைகளை பூர்த்தி செய்வதில் சவால்களை ஏற்படுத்தியது. இதன் விளைவாக எரிபொருள், சமையல் எரிவாயு, பால்மா மற்றும் கோதுமைமா ஆகியவற்றுக்கான பற்றாக்குறை கடுமையான சமூக-பொருளாதார இடையூறுகளை ஏற்படுத்தியது.

மேலும், உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தையில் திரவநிலை பற்றாக்குறை அதிகரித்ததால், தேய்மான அழுத்தங்கள் ஏற்பட்டன மற்றும் மார்ச் 2022 தொடக்கத்தில் மாற்று விகிதத்தை நிர்ணயிப்பதில் அதிக நெகிழ்வுத்தன்மையை அனுமதித்தது. இது நாணய பரிமாற்ற விகிதத்தில் கணிசமான தேய்மானத்தை ஏற்படுத்தியதோடு, வங்கிகளின் ரூபாய் அடிப்படையிலான நிதிநிலைமை கூற்று தயாரிப்பில் கணிசமான சீர்செய்தலுக்கு வழிவகுத்தது.

வர்த்தக நிதி

அந்நியச் செலாவணியின் கடுமையான பற்றாக்குறை மற்றும் இறக்குமதியாளர்கள் பொருட்களை இறக்குமதி செய்யும் திறனைக் கட்டுப்படுத்தியமை காரணமாக வர்த்தக நிதி வணிகம் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டது. வங்கிகள் பெறுமதி மற்றும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை ஆகிய இரண்டிலும் குறைவு ஏற்பட்டதை கண்ணுற்றது. அத்தகைய வங்கிகள் பொருட்களின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதியை வசதியளித்ததுடன் வெளிப்புறக் கொடுப்பனவுகளுக்கான தேவை, நாணயத்தின் இருப்பை விட அதிகமாக இருப்பதால், பங்கீடு அடிப்படையிலான இறக்குமதி நாணய கடிதங்களை கட்டாயப்படுத்தியது. வங்கி வழிகள் மூலம் உள்நோக்கி அனுப்பும் தொகை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு கட்டண அடிப்படையிலான வருமானத்தில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

அந்நியச் செலாவணி விகிதங்களில் ஸ்திரத்தன்மை, வணிகங்கள் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதன் மூலம் வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிக்க உதவும். கூடுதலாக, மாற்று விகிதங்களில் ஸ்திரத்தன்மை, குறைந்த அளவிலான அபாயத்தைக் குறிக்கும் என்பதால், வெளிநாட்டு முதலீட்டிற்கு நாட்டை மிகவும் கவர்ச்சிகரமான இடமாக மாற்றும்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான தாக்கங்கள்

வங்கிகளைப் பொறுத்தவரை, "கடுமையான பாதகமான" சூழ்நிலையின் கீழ் நிச்சயமற்ற பொருளாதார சூழலானது, வருவாய் வளர்ச்சி சாத்தியத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். முக்கிய இடர்களானவை கடன்கள் மற்றும் முற்பணங்களில் மெதுவான வளர்ச்சி குறிப்பாக முடக்கப்பட்ட சில்லறை கடன் நிறுவனங்கள் முதலீடு செய்யாதது மற்றும் குறைந்த பரிவர்த்தனை அளவுகள் வருவாய் வளர்ச்சியை எதிர்மறையாக பாதிக்கின்றமை உயரும் வட்டி விகிதங்களால் தொழிற்படா கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வேலை இழப்புகள் மற்றும் நிறுவன கடன்கள் செலுத்த இயலாத நிலை போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

எமது இடர்கள்

- நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான பொருளாதாரச் சூழல், தொழில்துறை முழுவதும் கடன் புத்தகங்களின் லாபத்தை தொடர்ந்து இழக்கச் செய்வதோடு. குறுகிய காலத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் கொடுப்பதால் ஏற்படும் சில இழப்புகளை வங்கி பொறுப்பேற்கும் நிலை ஏற்படும்.
- கொவிட்-19க்கு முந்தைய நிலைகளில் இருந்து ∴பிட்ச் மற்றும் S & P ஆகிய இரண்டும் இறையாண்மை கடன் செலுத்தா நிலைக்குத் தரமிறக்குவது, புதிய வெளிநாட்டு நிதியை அணுகுவதை ஏறக்குறைய இல்லாததாக்குகிறது.
- அதிக பணவீக்க நிலைகள் காரணமாக சொத்து தரத்தில் கணிசமான செலவு அழுத்தங்கள் மற்றும் அதிகரித்த அழுத்தங்கள்.
- அதிக பணவீக்க நிலைகளை எதிர்த்துப் போராட இலங்கை மத்திய வங்கியின் கொள்கை விகிதங்களின் அதிகரிப்பினால், கடன் புத்தகத்துடன் ஒப்பிடும்போது வைப்புத்தொகைகள் விரைவான வேகத்தில் மறுவிலை செய்யப்படுகின்றமையால் ஏற்பட்ட கணிசமான வருவாய் அழுத்தம்.
- அதிகரித்த கொள்கை விகிதங்களைத் தொடர்ந்து கடன் புத்தகம் மறுவிலை செய்யப்படுவதால் கடன் பெறுபவர்கள் கடனை மீள செலுத்தும் போது எதிர்கொள்ளும் சிரமங்கள்.
- நிகர வட்டி வரம்புகளில் அழுத்தத்தை நிர்வகித்தல் மற்றும் வாடிக்கையாளர் கடன்களை காலம் தாழ்த்தி செலுத்துதலை நிர்வகிக்கும் போது வாடிக்கையாளருக்கு ஏற்படும் சுமையை சமநிலைப்படுத்துதல்.
- ஸ்திரத்தன்மை, கடன் மீள செலுத்தும் ஆற்றல், விவேகமான இடர் மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தல்.
- பலவீனமான பொருளாதார சூழல் காரணமாக சமூக அமைதியின்மைக்கு மத்தியில் மோசமான சேவை வழங்கல்.

எமது வாய்ப்புக்கள்

- வணிக நம்பிக்கையை மீட்டெடுப்பது மற்றும் நுகர்வோர் நம்பிக்கையை படிப்படியாகக் கட்டியெழுப்புவது போன்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவது நிதி இலக்குகளை அடைவதற்கு துணைபுரியும்.
- எங்களின் சொத்துப்பட்டியல் வளர்ச்சி வாய்ப்புகளை மறுமதிப்பீடு செய்தல் மற்றும் சவாலான இயக்கச் சூழலில் மீள்நிலையை நிலைநிறுத்துவதற்கு செயற்படல்.
- எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்களோடு இயைந்து செயற்படுவதற்கு நெகிழ்ச்சியானதாக இருத்தல்.

குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை இடர்களிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை இடர்களிலான அதிகரிப்பு	2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எந்த மாற்றமும் இல்லை.

இடர்களைத் தணித்து வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கான எமது அணுகுமுறைகள்

- உலகளாவிய மற்றும் பிராந்திய வளர்ச்சிகளின் தற்போதைய மதிப்பீட்டின் அடிப்படையில் ஆபத்துக்களை அடையாளம் கண்டு அவற்றைக் குறைப்பதன் அடிப்படையில் இடர் உத்தி மற்றும் இடர் விருப்ப மதிப்புகளை கண்காணித்தல் மற்றும் முகாமை செய்தல்.
- பல வெளிப்புற மற்றும் உள் காரணிகளின் சாத்தியமான விளைவுகளை மதிப்பீடு செய்ய நிலைமைகளை பயன்படுத்துதல்.
- இடர் குறைப்பு உத்திகளை திறம்பட நிர்வகிப்பதற்கான நிச்சயமற்ற பொருளாதாரக் கண்ணோட்டத்தால் முன்வைக்கப்படும் எதிர்மறையான இடர்களைக் கண்காணித்தல்.
- பல்வகைப்படுத்தல் மற்றும் சந்தை மேம்பாட்டிற்காக வணிக மேம்பாட்டு உத்திகள் மற்றும் வணிக நிகழ்வுகளை உருவாக்குதல்.

செயற்பாட்டிலுள்ள ஆளுகை

வணிகத்தை நடத்துவதற்கு எம்மிடமுள்ள திறன்களை குறிப்பாக வருவாய் உருவாக்கல் திறன், போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மையைப் பேணுதல் போன்ற இடர்களுடன் தொடர்புடைய திறன்கள் மீதான எதிர்பாராத மற்றும் சமூக-அரசியல் நெருக்கடியின் தாக்கத்தினை பணிப்பாளர் சபை மிகவும் நெருக்கமாக ஆராய்ந்தது. பணிப்பாளர் சபையானது பொருளாதார தாக்கங்களை எதிர்கொள்வதன் பொருட்டு 2023ஆம் ஆண்டு தொடக்கம் 2025ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கான திருத்தப்பட்ட மூலோபாய வணிகத் திட்டத்திற்கும் 2023ஆம் ஆண்டு வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளித்துள்ளதுடன் அத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தடுத்த திருத்தங்களையும் கருத்திற்கொள்ளும்.

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) அதிகரித்த இடர் பிரிவுகளை முழுமையாக மதிப்பீடு செய்யவதற்கு அதிகபடியான அறிக்கைகள் உறுதுணையாகவிருந்தன. மேலும், இவ்விடர்களின் பெரும் பொருளாதார நிலைமைகளின் தாக்கத்தின் காரணமாக தொடர்புடைய கட்டுப்பாடுகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் செயற்பாட்டு இழப்புகள், மோசடி இடர்கள், முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் படிமுறைகள் ஆகியவை நெருக்கமாக கண்காணிக்கப்பட்டன. வங்கியின் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முகாமைத்துவ அனுமானங்கள், மதிப்பீட்டு முறைகள் மற்றும் முடிவுகளை பணிப்பாளர் சபையின் கணக்காய்வுக் குழு மதிப்பீடு செய்தது.

தொடர்புடைய பொருண்மிய விடயங்கள்

பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிச்சயமின்மைக்கிடையே வணிக மீளெழுச்சி

மக்கள் | இலாபம்

சூழல்/விளக்கம்	புவிசார் அரசியல் மற்றும் தொடர்புடைய ஏற்ற இறக்கம், சிக்கலான தன்மை மற்றும் நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளில் ஸ்த்திரமின்மை என்பன சமூக மற்றும் பொருளாதார ரீதியாக இடையூறான நிலைமைகளை உருவாக்குகின்றன. அத்துடன், செயற்பாட்டு சூழலை கணிசமாக மாற்றி போக்குகளை துரிதப்படுத்தி வங்கியின் கட்டமைப்பு சிக்கல்களை முன்னிலைப்படுத்துகின்றன.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	வாடிக்கையாளர்களுக்கு செலவின ஆற்றலை குறைப்பதோடு இலாபம் மற்றும் காசுப்பாய்வில் தாக்கத்தை ஏற்படுத்துவதன் ஊடாக எந்தவொரு பாரிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சீர்குலைவினாலும் எமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான கேள்வியை குறைவடையலாம். தடையற்ற சேவை, விவேகமான இடர் மேலாண்மை மற்றும் உறுதியான மூலதன நிலை ஆகியவற்றின் மூலம் எமது போட்டித் தன்மையையும் வங்கியின் நம்பகத் தன்மையையும் பாதுகாப்பதற்கான தூண்டுதலை வழங்குகிறது.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	பொருளாதாரச் சுருக்கம், அதிகரித்த வேலைவாய்ப்பின்மை, நாணய ஏற்ற இறக்கம், திரவத்தன்மை அதிகரிப்பு, அதிகரித்து வரும் சமூக அமைதியின்மை, அதிகரித்த நிர்வாகச் செலவுகள், பணவீக்கம், பெரும் பொருளாதார அடிப்படைகளை பலவீனப்படுத்துதல் போன்ற காரணிகள் வளர்ச்சி மற்றும் முதலீட்டுத் தடை போன்ற காரணிகள் கடனுக்கான கேள்வியைக் குறைத்து வணிகச் செலவினையும் வாடிக்கையாளர்கள் திருப்பிச் செலுத்தத் தவறுகின்றமையையும் அதிகரிக்கலாம்.
முகாமைத்துவ அணுகுமுறை	• பொருளாதாரம், துறை சார்ந்தவை, பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் நிகழ்வுகள் உட்பட உள்ளூர் மற்றும் உலகளாவிய நிலைமைகளைக் கண்காணித்தல். • செயல்திறன்மிக்க இடர் முகாமைத்து உத்திகளைப் பயன்படுத்தி வெளிப்புற மற்றும் உட்புற இயக்கிகளால் உருவாகும் மூலோபாய, செயற்படுத்தல் மற்றும் வணிக இடர்களைக் குறைத்தல். • நிறுவனத் திட்டமிடலும் வரவு செலவுத் திட்டம் ஆகியவை உத்திகளை மேம்படுத்துவதற்கும் மூலதனத்தை மறு முன்னுரிமைப்படுத்துவதற்கும் நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறன. • தற்போதைய நிலைமைகளைத் தாங்கும் வகையில் நிதிச் சொத்துகளை நிலைநிறுத்துதல் மற்றும் எதிர்கால சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தல். • மையப்படுத்தப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீடுகள் மூலோபாய இலக்குகளுடன் இணைந்துள்ளதோடு தற்போதைய சூழ்நிலைத் திட்டமிடல் மூலம் ஆதரிக்கப்படுகிறது. • பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை ஆதரிப்பதற்காக அரசாங்கம், சமூகங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான ஈடுபாட்டை அதிகரித்தல் • மூலோபாய மற்றும் பாரியளவிலான திட்டங்கள் சரியாக திட்டமிடப்பட்டு, செயற்படுத்தப்படுத்தப்படுவதுடன் அவை நெருக்கமாக கண்காணிக்கப்படுவதையும் உறுதிசெய்தல் • 2023ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பிறகான கண்ணோட்டத்திற்கு பதிலளிக்கும் வகையில் இடர் நிலையை அமைப்பதற்கான வலுவான அணுகுமுறையை பேணுதல்
இடர் வகை[2]	நிதியியல், செயற்பாட்டு, சந்தை, கடன்
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் தொடக்கம் நடுத்தரம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்

[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

நிதிசார் நிலைபேறான தன்மை மற்றும் இலாபத்தன்மை

இலாபம்

சூழல்/வீளக்கம்	பொருளாதார, நிதியியல் நெருக்கடிகளின்போது எமது நிதி வலிமையைப் பாதுகாத்தலும் எதிர்சுழற்சி நடவடிக்கைகளுக்கான பங்கினை வகித்தலும்
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	நிதி ஸ்திரத்தன்மையும் இலாபமும் எமது அக்கறைதாரர்களுக்கான மதிப்பை உருவாக்குவதற்கும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் எமது வணிகத்தை வளர்ப்பதற்கும் பிரதானமாக உதவுகின்றன.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	➔ நிச்சயமற்ற தன்மையின் காரணமாக சொத்து விலைகளில் (பரிமாற்ற வீதங்கள், வட்டி வீதங்கள், சொத்து மற்றும் பங்கு) ஏற்பட்ட மாற்றங்கள் இலக்கு வளர்ச்சி மற்றும் திரவத்தன்மை நிலைகளை அடைவதற்கான திறனை மோசமாக பாதிப்பதுடன் சொத்து மதிப்புகள் குறைவதற்கும் வழிவகுக்கும். ➔ மீள் விலையிடல் இடரின் காரணமாக சொத்து விலைகளின் அதிகரித்த ஏற்ற இறக்கமானது சொத்துக்களின் வருவாய் திறனை பாதிக்கலாம். ➔ மீள்நிதியளிப்பு இடருடன் பங்கு சந்தை முதலீடுகள், நிலையான வருமான முதலீடுகள் (வைப்புக்களில் 60% ஆனவை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன) மற்றும் பணச் சந்தை முதலீடுகள் ஆகியவை மீதான முதலீட்டு விலைகள் குறைவடைந்துள்ளன. ➔ வருவாய் ஈட்டுவதில் ஏற்படும் தாக்கம் சந்தை வளர்ச்சியை முடக்குகிறது. ➔ அதிகரித்த பணவீக்க நிலைமைகள் காரணமாக செயற்பாட்டு செலவும் பிற செலவுகளும் அதிகரிக்கும். ➔ வாடிக்கையாளர் திருப்பிச் செலுத்தத் தவறுவதன் காரணமாக காரணமாக அதிகரித்த கடன் வெளிப்பாடு. ➔ தேசிய சேமிப்பு வங்கியின் சட்ட வரையறைகளுடன் குறைவான வருவாய் பல்வகைப்படுத்தல் மற்றும் மீள் நிதியளிப்பு இடர்கள ➔ கடன் தரப்படுத்தல்கள் மற்றும் கடனுக்கான நிதியளிப்பில் அவற்றினது தாக்கம்
முகாமைத்துவ அணுகுமுறை	➔ கடுமையான மற்றும் நடுத்தரமான மூலதனப் போதுமான தன்மையும் பணப்புழக்க முகாமைத்துவமும் ➔ நிலையான செலவுச் சுருக்கமும் செயற்பாட்டு திறனும் ➔ ஆய்வுசெய்யப்பட்ட பாதீடு, எதிர்வுகூறல் மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு. ➔ நடுத்தர முதலீடுகளின் பல்வகைப்படுத்தல் மூலமான பன்முகப்படுத்தப்பட்ட வருவாய் துறைகளின் சாத்தியமான ஆய்வுகள். ➔ அனைத்து முதலீடுகளுக்குமான கடன் இடர் மதிப்பீடும் ஒருங்கிணைந்த விடாமுயற்சியும் ➔ வருவாய் உற்பத்திப் பற்றாக்குறை இடைவெளியை புதிய வணிக மேம்பாட்டு முயற்சிகளானவை குறைக்கின்றன. ➔ உயர் கடன் இடர் வெளிப்பாடுகளைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களைத் தொடர்ந்தும் கண்காணித்தல் ➔ பல்வேறு சூழ்நிலைகளிலும் வருமானத்தை ஈட்டும் சமநிலையான நிதிச் சொத்துகளை கொண்டு எமது ஐந்தொகையை வலுப்படுத்துதல்.
இடர் வகை[2]	நிதியியல், செயற்பாட்டு, சந்தை, கடன்
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் தொடக்கம் நடுத்தரம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] **இடர் வகைகள்:** நிதி, முலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்

[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

பாதிக்கப்பட்ட குறுங்காலம் முதல் இடைக்காலம் வரையான மூலோபாய முன்னுரிமைகள்

பாதிக்கப்பட்ட மூலதனங்கள்

பாதிக்கப்பட்ட முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்

தொடர்புடைய அக்கறைதாரர்கள்

தொடர்புடைய GRI மற்றும் எல்லைகள்

201 பொருளாதார செயற்திறன் – உள்ளேயும் வெளியேயும்
202 சந்தை இருப்பு
203 மறைமுக பொருளாதார தாக்கங்கள் – வெளியே

பாதிக்கப்பட்ட இரண்டாம் நிலை ஐ.நா.நி.அ.இலக்குகள்

2 குடியியல் கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் வேலையுலகின் தொடர்ச்சியான மாற்றங்கள்

இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பில் சமீபத்திய வருடங்களில் கணிசமானளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றங்கள், டிஜிற்றல், சுகாதாரம், தொற்றுநோய் என்பவற்றிலான மாற்றங்கள் மற்றும் தேர்ச்சியுற்றவர்களின் பற்றாக்குறை போன்ற காரணிகளால் எழுகின்ற சவால்களை எதிர்கொண்டு நிறுவனங்கள் தங்களது வியாபார மாதிரிகள் மற்றும் மக்கள் மீதான நடைமுறைகளை மதிப்பாய்வு செய்துவருகின்றன.

முதுமையுறும் சனத்தொகையின் அதிகரிப்பு

உலகளவில் முதியோர் சனத்தொகை விகிதம் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் குறைவான பொருளாதார வளர்ச்சி வீதங்களினால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளன. இலங்கை துரிதமாக அதிகரிக்கும் முதியோர் சனத்தொகையைக் கொண்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடாகும். தற்போது தென்கிழக்காசியாவில் அதிகரித்த முதியோர் சனத்தொகையைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதோடு எதிர்காலத்திலும் இந்நிலைமையே தொடரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 2000-2030ஆம் ஆண்டிற்குள் இலங்கையின் சராசரி வயதானது 26.9 இலிருந்து 39.2 ஆண்டுகள் வரை உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதியோர் சனத்தொகை அதிகரிப்பானது வளர்ந்துவரும் ஏனைய பொருளாதாரங்களைவிட விரைவாகவுள்ளது. தொழில்புரியும் வயதினரின் இறக்கத்தோடு இப்போக்கானது பிரமிட் வடிவிலிருந்து தூண் போன்ற வடிவத்திற்கு மாற்றமடைந்துள்ளது. அத்தோடு, 2030ஆம் ஆண்டிற்குள் தொழில்புரியும் வயதினரின் சனத்தொகை பாரியளவில் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மைய புலம்பெயர்வு

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து வெளிநாட்டில் பணிபுரிவதற்காக புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது (2021ஆம் ஆண்டில் 122,264 இலிருந்து 2022ஆம் ஆண்டு 311,056 வரை). தேர்ச்சியுற்ற தொழிலாளர்கள், தேர்ச்சியுறாத தொழிலாளர்கள் மற்றும் வீட்டுப் பணிப் பெண்கள் ஆகியோர் உயர்ந்த புலம்பெயர்வு மாற்றத்தைப் பதிவுசெய்துள்ளனர். இந்தப் போக்கு, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக இருக்கலாம். அத்துடன், இலங்கை அரசாங்கம் "வெளிநாட்டில் பணியாற்றுக" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி இத்திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்கள் ஐந்து வருடங்களுக்குச் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டில் பணிபுரிவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இவ்வாறு புலம்பெயர்ந்து பணியாளர்கள் தங்களது அந்நியச் செலவாணியின் ஒரு பகுதியை இலங்கை வங்கிக் கணக்கில் வைப்பிலிட வேண்டும் என்பது நிபந்தனையாகும். இருப்பினும், தேர்ச்சியுற்ற தொழிலாளர்களின் அதிகப்படியான வெளியேற்றத்தினால் நாட்டிலுள்ள உறவினர்கள் குறைவதனால் நாட்டிற்கான அனுப்பீடும் குறையலாம். இது இலங்கையின் பொருளாதார மீட்பு முயற்சிகளை எதிர்மறையாக பாதிக்கலாம்.

மனித மூலதனத்தில் மாற்றத்தை உருவாக்கும் பிற பெரும்சக்திகள்

எதிர்பாராத நேரங்களில் தொடருகின்ற நிச்சயமற்ற மற்றும் உறுதியற்ற தன்மை அதாவது கடந்த இரு ஆண்டுகளாக மக்கள் எவ்வாறு பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்ற அடிப்படை நகர்வானது நிறுவனங்களின் மனித மூலதன நிகழ்ச்சி நிரலில் குறிப்பாக நிதிச் சேவையில் தொடர்ந்தும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. எதிர்கால தொழிற் சந்தையை நாம் மதிப்பாய்வு செய்கின்றபோது உலகப் போக்குகள் தொழிற் சந்தையினதும் ஊழியர்களினதும் தேவைகளையும் நடைமுறைகளையும் வடிவமைத்துக் கொண்டிருக்கின்றன.

இதுபோன்றதோர் சவால்மிக்கத் தருணத்தில் வங்கித் துறை மீதான போட்டித்தன்மை அதிகரித்து வருகின்றது. நுண்ணறிவு தன்னியமயமாக்கல் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து தொழில்நுட்பத் திறன்களுக்கான தேவையையும் தீவிரப்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்களினால் எழும் அதிகரித்த போட்டியினால் முக்கியமான மற்றும் பற்றாக்குறையான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதிலும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதிலும் வங்கிகள் அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளன.

ஊழியர்களின் நலன் மற்றும் உற்பத்தித்திறனை ஆதரிக்கும் அதே வேளையில் வணிகச் செயற்பாடுகள் வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவதற்கு மாற்றியமைக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். பணி எதிர்பார்ப்புகளிலுள்ள தலைமுறை வேறுபாடுகளும் உறுதியற்ற வரிவிதிப்பு சூழலில் சனத்தொகையில் ஏற்படும் மாற்றமும் அதிக புரள்வுக்கு வழிவகுக்கும் மற்றும் உலகளவில் ஊழியர்கள் தங்களது தொழிலிருந்து வெளியேறுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர் அல்லது சாதனை வேகத்தில் தொழிலிருந்து வெளியேறியுள்ளனர். "பாரிய தேய்வு" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் போக்கு அனைத்து துறைகளிலும் வணிகங்களை சீர்குலைக்கின்றது.

வேலை உலகை வடிவமைக்கும் பேரினசக்திகள்	மனித மூலதனத்தில் எதிர்பார்க்கப்படும் மாற்றம
நுகர்வோர் எதிர்பார்ப்பும் கொவிட்-19 தொற்றுநோயும் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மேம்பட்ட தரவு பகுப்பாய்வு போன்ற டிஜிற்றல் மாற்றங்களின் தேவையை துரிதப்படுத்தியுள்ளது.	ஆரோக்கியத்திலும் உள நலத்திலும் கவனம் செலுத்தல்
"டிஜிற்றல் ரேஸ்" என்பது புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்கும் தொழில்நுட்ப திறன் பற்றாக்குறையின் தோற்றத்திற்கும் வழிவகுக்கிறது.	சுறுசுறுப்பான மற்றும் பல்துறை குழுக்களின் தேவை
கொவிட்-19 மாறுபாடுகளும் அதன் அடுத்த அலைகளும் 2024ஆம் ஆண்டு வரை நீடிக்க வாய்ப்புள்ளது.	நீதி, நிலைத்தன்மை மற்றும் தற்போதைய பிரச்சினைகள் போன்ற சமூகப் பொறுப்புகள் தொடர்பாக தொழில்தருநர்கள் மீதான எதிர்பார்ப்புகள்
பாரிய சமூக ஏற்றத்தாழ்வுகள், வருமான சமத்துவமின்மை, வறுமை மற்றும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பின்மை என்பன நீடிக்கிறது.	நிரந்தர ஊழியர்களைக் குறைத்தலும் டிஜிற்றல் தானியங்கி சேவையின் வளர்ச்சியும்
இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையும் உள்நாட்டு அமைதியின்மையும்	துரிதமாக திறன் வழக்கிழப்பினை தடுப்பதற்கு விரைந்து இயங்கும் ஆற்றல் திட்டமிடலும் மற்றும் கற்றல் அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது.
இலங்கை ஊழியர்களில் இனம் மற்றும் பாலின பிரதிநிதித்துவத்தில் ஏற்றத்தாழ்வு நீடிக்கிறது.	இணைப்பிற்கான எதிர்பார்ப்பும் நோக்கமும் வளர்ச்சியும் சார்ந்த ஊழியர்கள்
	திறன் பற்றாக்குறை, புலம்பெயர்வு மற்றும் நெகிழ்வான ஊழியர்களுக்கான கேள்வி
	தரவு செயன்முறையினால் வழிநடத்தப்படும் ஒருங்கிணைந்த திறன் நடைமுறைகள்.
	கலப்பின தொழில் மாதிரி, பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் முழுமையான முயற்சிகள்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான தாக்கங்கள்

சனத்தொகையானது ஓர் நாட்டினது பொருளாதாரம், சேமிப்புகள், முதலீடுகள், கடன் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றில் நீடித்த விளைவைக் கொண்டிருக்கிறது. சனத்தொகை மாற்றங்கள் உற்பத்திகளினதும் சேவைகளினதும் இயல்பு, வழங்கல் ஊடகங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பு முன்மொழிவுகளைப் பாதிக்கின்றன. வியாபார வளர்ச்சிக்கும் அடுத்தடுத்த திட்டமிடலுக்கும் உள்ளூரில் தேர்ச்சியுற்றவர்களை ஈர்ப்பதும் தக்கவைப்பதும் அவசியமாகும். மேலும் பற்றாக்குறையாகவுள்ள டிஜிற்றல் திறமையாளர்களுக்கான கேள்வி, எதிர்பார்க்கின்ற வியாபார மாதிரிகளை அடைவதனை பாதிக்கலாம். உழைக்கும் வயதினரின் வீழ்ச்சியும் முதியோர் சனத்தொகையும் ஓர் நாட்டின் வளர்ச்சித் திறனைத் தடுப்பதோடு உற்பத்தித்திறன், வரிகள், தேசிய வருமானம், வளர்ச்சி மற்றும் சேமிப்பு ஆகியவற்றின் இறக்கத்திற்கு இது வழிவகுக்கும். ஓய்வூதியம் பெறுபவர்களின் அதிகரித்த எண்ணிக்கையானது அரச ஓய்வூதிய துறை மீதான சுமையை அதிகரிப்பதோடு இது ஏற்கனவே நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 2% ஐ நுகர்கிறது. ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலத்திற்குள் இந்நிலைமை நிதி ரீதியாக நீடிக்க முடியாததாகிவிடும். அத்துடன் முதியோர் சனத்தொகையானது சுகாதார மற்றும் முதியோர் பராமரிப்பு சேவைகளுக்கான தேவையை அதிகரித்து கடுமையான பொருளாதார சிக்கல்களை எதிர்கொண்டுள்ள நாட்டின் சுகாதாரத் துறை மீதான அழுத்தத்தை அதிகரிக்கும்.

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

எமது இடர்கள்

- திறன்கள் மற்றும் கல்விசார் இடம்பெயர்வுகளின் அதிகரிப்பு, தேர்ச்சியுற்றவர்களை ஆட்சேர்ப்பு செய்து தக்கவைப்பதிலே அதிக செலவினை ஏற்படுத்துவதோடு சவால்மிக்கதாகவும் உள்ளது
- கொவிட்-19 தொற்றுநோயின் விளைவால் எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமூக மற்றும் பொருளாதார நெருக்கடியுடன் பணியிடத்தில் ஏற்படும் துரிதமான மாற்றமானது ஊழியர்களின் நலன், பாதுகாப்பு, ஈடுபாடு மற்றும் உற்பத்தித்திறனில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தல் மற்றும் இடர் மதிப்பீட்டு மாதிரிகளின் திருத்தம

எமது வாய்ப்புக்கள்

- பணியாளருக்கு முழுமையான மற்றும் மேம்பட்ட ஆதரவினை வழங்குவதற்காக எமது நலத்திட்ட மதிப்பு பரிந்துரைகளை விரிவாக்கம் செய்தல்
- மெய்நிகர்வாய்ந்த மற்றும் விரவிய ஊழியர்களை புதிய தலைமைத்துவ திறன்களுடன் வழிநடத்தக் கூடிய தலைவர்களுக்கு வலிமை சேர்ப்பதற்கான புதுமையான தலைமைத்துவ மேம்பாட்டு அணுகுமுறை
- வங்கியின் உற்பத்தி பட்டியலை விரிவுபடுத்தி அனைத்து வயதிலுள்ள வாடிக்கையாளர்களுக்கும் சேவை வழங்குவதற்கான திறன்கள்
- வங்கித்துறையில் இளம் தலைமுறையினரின் அறிவை மேம்படுத்துதல், புத்தாக்கமான உற்பத்திகள் மற்றும் சிறந்த சேவைகளுக்கு வழிவகுக்கிறது.
- திறன்களைத் தக்கவைத்து வளர்த்துக்கொள்வதில் முதலிடுவதானது தேசிய சேமிப்பு வங்கியின் வியாபார நாமத்தைக் கட்டியெழுப்பவும், தேசத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை இடர்களிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை இடர்களிலான அதிகரிப்பு	2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எந்த மாற்றமும் இல்லை.

இடர்களைத் தணித்து வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கான எமது அணுகுமுறைகள்

- திறன் அபிவிருத்தியிலும் தலைமைத்துவ திட்டங்களிலும் தொடர்ச்சியாக முதலீடு செய்து புதிய மற்றும் முற்போக்கான திறன்களை ஊழியர்களுக்கு வழங்குதல் மற்றும் எதிர்காலத்திற்கேற்ற வகையில் அவர்களை தயார்படுத்தல்
- எதிர்காலத் தொழில்களுக்குத் தயாராக இருக்கும் எமது ஊழியர்களின் திறன்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை பரிசோதித்தல்
- திறமைகளை உள்ளூரில் வளர்க்கவும் அணிதிரட்டவும் மெய்நிகர் கற்றலையும் பயிற்சி தீர்வுகளையும் தொடங்குதல். தேவைப்படும்போது பற்றாக்குறையான மற்றும் முக்கியமான திறன்களின் நிலையான வழங்கலை உறுதி செய்தல்.
- எமது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மற்றும் வங்கி முழுவதும் கலாசார மற்றும் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வழங்குதல்
- தனிப்பட்ட, உடனடி மற்றும் எளிதான முறையில் சிறந்த தொழில்நுட்பம் மற்றும் மனித தொடர்புகளை ஒன்றிணைத்து மிகவும் ஈர்க்கக்கூடிய வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க முயற்சித்தல்
- ஊழியர்களின் நலனை மேம்படுத்தும் திட்டங்களை செயற்படுத்துதல்.
- எமது வாடிக்கையாளர்களின் தேவைகள், விருப்பங்கள் மற்றும் நடத்தைகள் பற்றிய நுண்ணறிவை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளில் பரிந்துரைகளை வழங்குதல்.
- வெவ்வேறான வாடிக்கையாளர் பிரிவுகளுக்கான சேவைகளை வழங்கி வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எமது விரிவான வழங்கல் ஊடகங்கள் தயாரிப்புகள் மூலம் அவர்களின் தேவைகளை தொடர்ச்சியான பெறுமதி சேர்த்தலுடன் பூர்த்திசெய்து அதிக அணுகலை அதிகரித்தல்.

செயற்பாட்டிலுள்ள ஆளுகை

வங்கியின் பணிப்பாளர் சபை சனத்தொகையின் மாற்றங்களை நன்கு அறிந்து கொண்டது. ஆகவே மாறிவரும் ஊழியர்களினதும் வாடிக்கையாளர்களினதும் தேவைகளை நிவர்த்தி செய்து மாற்றங்களை எதிர்கொள்வதற்கான தீர்வுகளை வழங்குவதிலும் உரிய கவனம் செலுத்தியது. ஓய்வு பெறல் மற்றும் பதவி விலகல் போன்ற சிக்கல்களை எதிர்கொள்வதற்காக தொடர்ச்சியான திட்டமிடல் மற்றும் பதவி உயர்வுகளைச் செயற்படுத்த பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்தது. கொவிட்-19 தொற்றுநோயினால் வாடிக்கையாளர்களின் பரிவர்த்தனை செயற்பாடுகள் டிஜிற்றல் ஊடகங்களை நோக்கி தீவிரமாக மாற்றமடைந்தது. நீண்ட கால டிஜிற்றல் ஊடகங்களை ஏற்றுக்கொள்வதற்கான ஓர் உந்துதலாக இதனை கருதிய பணிப்பாளர் சபையானது இந்த மாற்றத்தை நிர்வகிப்பதில் உரிய கவனம் செலுத்தியது.

அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற வகையில் வங்கி சமூகத்திற்கு வழங்கும் செயலூக்கமான ஆதரவினால் வாடிக்கையாளர்களின் எதிர்கால கொள்வனவு தீர்மானங்கள் பாதிக்கப்படும் என்பதை பணிப்பாளர் சபை அறிந்திருந்தது. ஆகவே அனைத்திலும் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதோடு சமூகத்தின் நன்மைக்காகவே வங்கி செயற்படுகின்றது என்பதனை உறுதி செய்ய வேண்டும் என்பதை பணிப்பாளர் சபை கருத்திற்கொண்டது. வாடிக்கையாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு முன்னிலையில் செயற்பட்டு வங்கி ஆதரவளித்தது. அதாவது அரசாங்கத்தின் ஊக்குவிப்பு தூண்டுதல் தகவல்களையும் ஆதரவையும் வழங்குதல் மற்றும் நிவாரண முயற்சிகளுக்கான உதவி வழங்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். அவ்வாறு செய்யும்போது, தங்களுக்குத் தேவையான ஆதரவு கிடைக்கவில்லை என வாடிக்கையாளர்கள் கருதும்போது வங்கி எதிர்கொள்ளும் நற்பெயர் இடர் குறித்து கவனமாக இருக்க வேண்டும் என்பதில் பணிப்பாளர்சபை எச்சரிக்கையாக இருந்தது.

தொடர்புடைய பொருண்மிய விடயங்கள்

திறன்கள் மற்றும் ஆற்றல்கள்

மக்கள்


சூழல்/விளக்கம்	புதிய தொழில்நுட்பங்களின் முன்னேற்றம், மாற்றமடையும் பெரும் பொருளாதார நிலைமைகள் மற்றும் அதிகரித்த ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகள் என்பன புதிய மற்றும் வேறுபட்ட திறன்களுடனும் வங்கியியலில் நன்கு நிபுணத்துவம் பெற்ற ஊழியர்களின் தேவையை அதிகரிக்கின்றன. இது பங்குதாரர்கள் எதிர்பார்க்கும் செயற்திறனை வழங்குவதற்கு மிக அவசியமாகும்.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	எமது மூலோபாயத்தின் வெற்றிக்கு ஊழியர்கள் மிக அவசியமானவர்கள். அத்துடன் தேர்ச்சியுற்றவர்களையும் திறமையானவர்களையும் ஈர்க்கவோ அல்லது தக்கவைக்கவோ முடியவில்லை எனில் எமது நீண்ட கால இலக்குகளை அடைவதில் இடையூறுகள் ஏற்படலாம். குறிப்பாக பாரம்பரியமற்ற வங்கியியலில் நேரடியாக போட்டியிடுவதை நோக்கமாகக் கொண்ட தொழில்நுட்ப போட்டியாளர்களுடன் இத்திறன்களை ஈர்ப்பதும் தக்கவைத்துக்கொள்வதும் மிகவும் கடினமாக இருக்கலாம்.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	● நான்காவது தொழில்துறை புரட்சி வியாபார மாதிரிகளுக்கு முழுமையாக பதிலளிக்க போதுமான திறன்கள் மற்றும் திறன்களின் இடர் ● நீண்ட கால வியாபார நிலைத்தன்மை ● வியாபாரத்தினதும் சந்தையினதும் வளர்ச்சி ● ஊழியர்களின் திறன் பயிற்சி, பணி முறைகள் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் கொவிட்-19 தாக்கத்தினால் அதிகரிக்கப்பட்ட இடர்
முகாமைத்துவ அணுகுமுறை	● சிரேஷ்ட முகாமைத்துவம் உட்பட எமது ஊழியர்களை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சித் திட்டங்களை இலக்காகக் கொண்டுள்ளோம். ● ஊழியர்களின் நிபுணத்துவம், வாய்ப்புகள் மற்றும் விருப்பங்கள் போன்றவற்றை அங்கீகரிக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் எமது திறமை மற்றும் தொழில் அணுகுமுறை, உயர் திறன் கொண்ட ஊழியர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் முயல்கிறது. ● வங்கி முழுவதிலும் கலாசார மற்றும் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான திறன்களுடனும் அணுகுமுறைகளுடனும் எமது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள். ● எதிர்கால ஊழியர்படையை தயார் செய்யும் வகையில் எமது ஊழியர்களை திறன்களை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகளை நாம் உருவாக்கி வருகிறோம். ● பயிற்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் ஊழியர்களின் வகிபாகங்கள் மற்றும் தனிப்பட்ட அபிவிருத்தி தேவைகளுக்கு ஏற்ப இணைக்கப்பட்டுள்ளன. ● மெய்நிகர் கற்றல் மற்றும் பயிற்சி தீர்வுகள்
இடர் வகை[2]	மூலோபாயம், நிதி, செயற்பாட்டு, நற்பெயர்
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் முதல் நீண்ட காலம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்

[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்



ஊழியர் பெறுமதி மையப்படுத்தல்


மக்கள்

சூழல்/விளக்கம்	ஈர்க்கக் கூடிய ஊழியர் மதிப்பு முன்மொழிவுகளை உறுதி செய்வதற்கான எமது திறன்; மக்கள் தற்போதைய மற்றும் எதிர்கால வணிகத்திற்கான தேவையான திறன்களைத் தக்கவைத்தலும் ஈர்த்தலும்; எமது மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளில் தொகுக்கப்பட்ட உயர் செயற்திறன்மிக்க கலாசாரம்; அதிக அளவு ஈடுபாடு மற்றும் உற்பத்தித்திறனுடன் பேணுதல் முழுமையான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட முகாமைத்துவத்தை உறுதி செய்தல்; நிறுவன மாற்றத்தை நிர்வகித்தல் மற்றும் சிறந்த தொழிலாளர் தொடர்புகளை உறுதி செய்தல் (தொழிலாளர் நடவடிக்கைகள் அல்லது இடையூறுகளை உள்ளடக்கியது) என்பவற்றுடன் தொடர்புடைய இடர்களை உள்ளடக்குகின்றது.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	எமது திறனை அதிகரிப்பதற்கு சாதகமான சூழலில் செயற்படும் வெற்றிகரமான குழு ஒன்றினை உருவாக்குவதானது பகிரப்பட்ட மதிப்பின் தொடர்ச்சியான உருவாக்கத்திற்கும் எமது வணிக நோக்கங்களை அடைவதற்கான உத்திகளை திறம்பட செயற்படுத்துவதற்கும் மிக முக்கியமானதாகும்.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	➲ உளவியல், ஆன்மீகம், அறிவுசார் மற்றும் நிதியியல் கண்ணோட்டத்தில் ஊழியர்களின் நலன் பேணும் முழுமையான அணுகுமுறை (உள ஆரோக்கியத்திற்கான தேவையை அதிகரித்தல், நெகிழ்வான வேலை மாதிரிகள், தொழில் மற்றும் வாழ்க்கை இடையிலான சமநிலை, பாரம்பரியமற்ற ஆரோக்கிய வடிவங்களில் மன அழுத்த முகாமைத்துவம், மனதை ஒருமுகப்படுத்தல் அல்லது நிதியில் ஆரோக்கியம்). ➲ கொவிட்-19 இற்குப் பிறகு தொலைதூரத்தில் இருந்து பணியாற்றுவதற்கான போக்கு மற்றும் நெகிழ்வான பணி ஏற்பாடுகள் அதிகரித்துள்ளன. ➲ கலாசார நிலைமாற்றத்திற்கான பயணம் மற்றும் மாற்ற முகாமைத்துவத் திட்டங்களுக்கான அவசியம்.
முகாமைத்துவ அணுகுமுறை	➲ போட்டிகரமான ஊதியம், வெகுமதிகள் மற்றும் நலத்திட்ட கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் நல்வாழ்வு திட்டங்களை வழங்கி எமது மதிப்பு முன்மொழிவுகளில் தொடர்ந்தும் முதலீடு செய்கின்றோம். ➲ ஊழியர்களின் ஈடுபாட்டை எமது மூலோபாய நோக்கங்கள் ஆதரிக்கின்றது என்பதனை உறுதி செய்வதற்காக நாம் வங்கியின் ஊதிய கட்டமைப்பை தொடர்ந்து மதிப்பாய்வு செய்கிறோம். ➲ பாலினம் மற்றும் வயதுப் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்தி அதன்மூலம் நீண்ட கால வளங்கள் மற்றும் திறன்களின் தேவைகளைத் தீர்மானிப்பதற்கான ஊழியர் திட்டமிடல் முறை. ➲ எதிர்பார்ப்புகள் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் ஊழியர்கள் தெளிவாக இருப்பதனை உறுதி செய்வதற்காக எமது கலாசாரம் மற்றும் ஊதிய கட்டமைப்பை வலுப்படுத்துதல். ➲ ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர்களுடன் செயலூக்கமான ஈடுபாடு.
இடர் வகை[2]	மூலோபாயம், செயற்பாட்டு
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் தொடக்கம் நீண்ட காலம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்

[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.



கண்ணோட்டம்

தொழில்நுட்பமானது வணிக வளர்ச்சியின் இயக்கியாகவும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதற்கான மையமாகவும் விளங்குவதனால் வங்கியின் எதிர்காலம் பெரிதும் டிஜிற்றல் மாற்றத்திலேயே தங்கியிருக்கும். வங்கியியல் சேவையை மேம்படுத்தவும் வாடிக்கையாளர்களை சிறந்த முறையில் புரிந்துகொள்வதற்கும் வங்கிகள் தங்களது தளங்கள் மற்றும் தரவுகளை பயன்படுத்திக்கொள்வது அவசியமாகும். மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர்களுக்கு ஏற்ப வங்கிகள் அச்சுறுத்தல்கள் மற்றும் மோசடிகளை திறம்பட கண்டறிவதற்கு பகுப்பாய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற முற்போக்கான தொழில்நுட்பங்களைத் தழுவிக் கொள்ளவேண்டும். சேவை வழங்கல், ஒய்வூதியம், வேலைவாய்ப்பு மற்றும் பொது நிதி ஆகியவற்றில் இலங்கையின் முதியோர் சனத்தொகையானது நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு, 2050 ஆண்டளவில் முதியவர்களின் சனத்தொகை விகிதம் இளைஞர் சனத்தொகையை விஞ்சும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான தொழிலாளர் பங்கேற்பு வீதங்களிலுள்ள இடைவெளியைக் குறைத்தல், கல்வித் திறனை அதிகரித்தல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக சனத்தொகை வளர்ச்சியின் தாக்கத்தை குறைக்க முடியும்.

3 எண்ணியல் சீர்குலைவுகளும் அதிகரித்த போட்டியும்

உலகம் தொடர்ந்தும் டிஜிற்றல் மயமாக்கலுக்குள்ளாகி வருகின்றது. வங்கியியலின் பல்வேறு அம்சங்கள் விரைவாக முன்னேற்றம் கண்டுவரும் நிலையில் நிதி நிறுவனங்கள் இந்த மாற்றத்தை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. நிதிச் சேவைகளை டிஜிற்றல் மயமாக்கல், வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துதல், புதிய தயாரிப்புகள் மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றிலிருந்து மாற்றமடைந்து வரும் நிறுவன கட்டமைப்புகள் மற்றும் உள்ளகச் செயன்முறைகள், மனித மூலதனம் மற்றும் திறன் தேவைகள் நோக்கிய புதிய வாய்ப்புகளை உருவாக்கி ஊழியர்கள் தொலைதூரத்திலிருந்து தொழில் புரிவதனை வங்கிகள் இயலச் செய்கின்றன. கொவிட்-19 தொற்றுநோய் டிஜிற்றல் சேவைகளைத் துரிதப்படுத்தி ஆள் நகர்வது குறைவடைந்ததால் ஏற்பட்ட தாக்கத்தைக் குறைத்துள்ளது.

எண்ணியல் மயமாக்கலின் அதிகரித்த வளர்ச்சி

நிதிச் சேவைகளை டிஜிற்றல் மயமாக்குதலானது, பாரம்பரிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் புதிய வருவாய் வழிகள் மற்றும் வாய்ப்புகளைப் பின்தொடர்தலில் கைபேசி தொழில்நுட்பம், நிதியியல் தொழில்நுட்ப (fintech) பங்காளர்கள், கிளவுட் கம்ப்யூட்டிங், அதிகளவுத் தரவு, மேம்பட்ட பகுப்பாய்வு, இயந்திர கற்றல், பிளாக்செயின் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, ரோபாட்டிக்ஸ் மற்றும் பயோமெட்ரிக்ஸ் முறைமைகளை தழுவுதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. புத்தாக்கமான கண்டுபிடிப்புகளை விரைவாக வழங்குவதன் பொருட்டு வங்கிகள் fintechs தொழில்நுட்பத்துடன் (பரந்த சந்தை பங்கேற்பாளர்கள்) இணைந்து செயற்படுகின்றன. மேலதிகமாக, ஒத்துழைப்பு கருவிகள் ஊடாக நிறுவன ஊழியர்களுக்கான மெய்நிகர் காணொளி மாநாடுக்கான ஆதரவு உள்ளிட்ட பல்வேறு போக்குகள் வணிகங்கள் எவ்வாறு செயற்படுகின்றன, மக்கள் எவ்வாறு தொழில்நுட்பத்துடன் தொடர்பு கொள்கிறார்கள் மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்வது எவ்வாறு இயங்குகிறது என்பதை துரிதப்படுத்தியுள்ளன.

உலகளவில் வேகமாக அதிகரித்து வரும் கைபேசி ஊருடுவல் வீதத்தை இலங்கை கொண்டுள்ள சூழலை டிஜிற்றல் முறைக்கு நகரும் போது புரிந்து கொள்ளவது அவசியமாகும். அதிகரித்த கைபேசி சேவைகளால் உருவான உற்பத்தி மற்றும் செயற்திறன் மேம்பாடுகளால் பயனடைந்துள்ள டிஜிற்றல் பரிவர்த்தனையின் மதிப்புகளும் அளவுகளும் அதிகரித்து வருகின்றன.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

அதிகரித்துவரும் இணையவெளி இடர் அச்சுறுத்தல்

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பப் புரட்சியானது ஓர் இருண்ட பக்கத்தையும் கொண்டுள்ளது. இதற்கு நிதிக் குற்றங்களின் வியத்தகு அதிகரிப்பும் உயர்மட்ட இணையத் தாக்குதல்களின் எண்ணிக்கை, அடர்த்தி மற்றும் சிக்கல் தன்மையின் அதிகரிப்பும் ஆதாரமாகும். இது பொதுவாக முக்கியமான தகவல்களை அணுகுதல், மாற்றுதல் அழித்தல், தனிநபர்களிடமிருந்து பணம் பறித்தல் மற்றும் சாதாரண வியாபாரச் செயன்முறைகளுக்கு இடையூறு விளைவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளில் வங்கிகள் கொண்டுள்ள வகிபாகம், அவை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களின் முக்கியமான தகவல்களின் அளவு என்பனவற்றால் வங்கிகள் அதிக இணையவெளி தாக்குதல்களை எதிர்கொள்வதுடன் இவை வங்கிச் சேவைகளின் சீரான செயற்பாட்டிற்கு இடையூறு விளைவிப்பதால் மோசமான பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன. இன்றைய தொழில்நுட்பமானது பல சாதனங்களுக்கான அணுகலை தடையின்றியும், இலகுவாகவும் பாதுகாப்பாகவும் வழங்குகின்றது. அத்தோடு, நுகர்வோரினதும் ஊழியர்களினதும் நடத்தையானது டிஜிற்றல் உலகில் தொடர்ந்தும் மாற்றமடைந்து வருகிறது. தற்போதைய போக்குகளுக்கும் மாறிவரும் வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளிப்பதற்காக நாம் புதிய தயாரிப்புகள் மற்றும் திறன்களில் முதலிட்டு வருகின்றோம். இதுவோர் ஒருங்கிணைந்த மாதிரியை வலுப்படுத்தி வேறுபட்ட பெறுமதியை வழங்குவதோடு வசதியான வங்கியியல் மற்றும் நிதியியல் தீர்வுகளுக்கான அணுகலையும் வழங்கும்.

பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான தாக்கங்கள்

டிஜிற்றல் தொழில்நுட்பமானது சேவைகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான அணுகலை அதிகரித்து வங்கியியலை மாற்றிவருவதுடன் செயற்பாட்டு இடரின் எண்ணிக்கை மற்றும் போட்டிகளை அதிகரிக்கிறது. வாடிக்கையாளர்களை தங்களது உற்பத்திகளுக்கு பழக்கப்படுத்துதல், தயாரிப்பு விற்பனை மற்றும் சேவை வழங்குதல் என்பவற்றில் செலவு குறைந்த டிஜிற்றல் தீர்வுகளை நோக்கி வங்கிகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் வங்கிகள் தங்களுக்கு விருப்பமான தளங்கள் மற்றும் சூழலில் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொண்டு வருகின்றன. எவ்வாறாயினும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளில் வங்கிகள் வகிக்கும் முக்கிய பங்கு மற்றும் பெறுமதியான தகவல்களை இலக்காகக் கொண்டுள்ள அச்சுறுத்தல்களின் அதிகரித்த இடர் என்பவற்றைக் கருதி பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இடர்கள் பற்றிய ஊழியர்களின் புரிதலை மேம்படுத்துதல், முரண்பாடுகளைக் கண்காணிப்பதற்கான அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் சாத்தியமான அச்சுறுத்தல்களை முற்கூட்டியே ஆராய்தல் என்பவற்றை நோக்கி வங்கிகள் செயற்படுகின்றன.

வங்கித் துறையின் விரைவான வளர்ச்சிக்கு பெறுமதியான தகவல்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதோடு புத்தாக்கங்களைத் தழுவி இடர் முகாமைத்துவத்தை மேம்படுத்தி இலாபத்தையும் மேம்படுத்தும் டிஜிற்றல் மயமாக்கலினால் வலுவூட்டப்பட்ட வியாபார மாதிரி தேவைப்படுகிறது.

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

எமது இடர்கள்

- தொழில்நுட்பமானது பிரவேசிப்பதற்கான தடைகளை அகற்றி நிதிச் சேவைகளை மிகவும் போட்டித்தன்மையடையச் செய்கிறது.
- டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் விரைவான முன்னேற்றம் மற்றும் நிதி பரிமாற்றத்தின் மிகவும் செயற்திறனான ஊடகங்கள் மூலமான அதிகரித்த மோசடி மற்றும் ஊழல் இடர்கள்
- செயன்முறைக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் சேமிக்கப்பட்ட முக்கியமான தரவுகளின் எண்ணிக்கை மீதான ஈர்ப்பும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளில் வங்கிகள் வகிக்கும் முக்கியமான வகிபாகமும் இணையவெளி தாக்குதல்கள் குறித்த கவலைகளை அதிகரிக்கின்றன.
- மூன்றாம் மற்றும் நான்காம் தரப்பு வழங்குநர்களிடமிருந்து உருவாகும் சாத்தியமான தரவு கசிவுகளின் அதிகரித்த வெளிப்பாடு

எமது வாய்ப்புக்கள்

- இடையூறான தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிற்றல் தழுவல் மூலாமாக எமது வாடிக்கையாளர்களின் அனுபவங்களைத் தொடர்ந்து மேம்படுத்தி பரிவர்த்தனை எண்ணிக்கையையும் வருவாயையும் பெறுவதற்கான எமது இலக்கை அடைவது மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் செயற்திறனை மேம்படுத்துதல் (சேவைக்கான குறைந்த செலவு).
- கிளவுட் தொடர்பான உயர்தர பகுப்பாய்வுக் கருவிகளில் முதலீடு செய்வதானது வாடிக்கையாளரின் நடத்தை மற்றும் விருப்பங்களைப் பற்றிய ஆழமான புரிதலை இயலச் செய்வதுடன் தனிப்பயனாக்கப்பட்ட தலையீடுகளை சீராக்குதல் மற்றும் தொடர்புடைய வாடிக்கையாளர் ஈடுபாட்டு உத்திகளை உருவாக்குதலுக்கு வழிவகுக்கின்றன.
- Fintechs இன் வளர்ச்சியானது தொழிற்துறையில் அதிகரித்த போட்டியைக் கொண்டுவருவதுடன் எமது வாடிக்கையாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திறன்களை அணுகக்கூடிய பங்காளர்களை உருவாக்குவதற்கான வாய்ப்பைப் பிரதிபலிக்கிறது.

குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு

குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு

குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை இடர்களிலான அதிகரிப்பு

குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை இடர்களிலான அதிகரிப்பு

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எந்த மாற்றமும் இல்லை.

இடர்களைத் தணித்து வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கான எமது அணுகுமுறைகள்

- அவ்வவ் நிர்வாக செயன்முறைகளில் இடர் நாட்டத்தினை கண்காணிப்பதோடு வங்கி முழுவதிலும் வலுவான இடர் கலாசாரத்தை கட்டியெழுப்புவதனைத் தொடர்தல்.
- விரைந்து செயலாற்றும் திறனுடைய, பொறுப்பான, பொறுப்புக் கூறக்கூடிய மற்றும் செயற்திறமிக்கதான இடர் முகாமைத்துவத்தினை உறுதி செய்துவதோடு இடர் முகாமைத்துவத்தினை படிப்படியாகத் தோற்றுவித்தல்.
- நான்காவது தொழிற்துறை புரட்சியில் விரைவாக இணையவெளி தாக்குதலுக்கு பதிலளிப்பதன் பொருட்டு இணையவெளி தாங்குதிறனை வலுப்படுத்துதல்
- மூன்றாம் தரப்பினரையும் வழங்குநர்களையும் கருத்திற் கொண்டு முக்கிய பாதிப்புகளைக் கண்டறிந்து செலவு குறைந்த மற்றும் திறமையான தரவுப் பாதுகாப்பு உத்திகளை உருவாக்குவதனைத் தொடர்தல்
- எதிர்கால நிலைகுலைவுகளையும் அழுத்தங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கான பயனுள்ள செயற்பாட்டு தாங்குதிறனை உறுதி செய்தல்.
- தொடர்ச்சியான உள்ளகக் கட்டுப்பாட்டு சூழல் மதிப்பீட்டினையும் மற்றும் புதுப்பித்தலையும் மேற்கொள்ளுதல்

செயற்பாட்டிலுள்ள ஆளுகை

எமது வியாபார அணுகுமுறையில் மாற்றங்களை உருவாக்கி விரைவுபடுத்தவும், மூலோபாய நோக்கு மற்றும் செயற்பாட்டுத் திறன்களைக் கூர்மைப்படுத்துவதற்குமான வினையூக்கியை தேசிய சேமிப்பு வங்கியில் கொவிட்-19 தொற்றுநோய் உருவாக்கியுள்ளது. மைய வங்கியியல் அமுல்படுத்தல் மற்றும் டிஜிற்றல் மாற்றங்கள் (தகவல் பாதுகாப்பிற்கான மேம்பாடுகள் உட்பட) தொடர்பான பெரும்பாலான திட்டங்களுக்கே பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வியாபாரத்திற்கான ஆழமான ஒருங்கிணைப்புத் தேவையுடன் குறுகிய காலம் முதல் நடுத்தர காலம் வரையான மூலோபாயம் (2021 முதல் வடிவமைக்கப்பட்ட டிஜிற்றல் மயமாக்கலை விரைவுபடுத்துதல்) பற்றிய பணிப்பாளர் சபையின் கலந்தாய்வின் ஊடாக தொழிற்துறையில் தேவையான மாற்றத்தின் வேகத்தை எதிர்கொள்வதற்கான புத்தாக்கத் திறன்களை எவ்வாறு ஊக்கப்படுத்தலாம் என்பதில் கவனம் செலுத்தப்பட்டது. பொதுவாக டிஜிற்றல் மயமாக்கல் முயற்சிகளின் அதிகரிப்பு, சந்தர்ப்பவாத அச்சுறுத்தல்கள் மற்றும் தொலைதூரத்திலிருந்து பணியாற்றுவதற்கான நகர்வு போன்றவற்றினால் வங்கி முழுவதிலும் எழுகின்ற இணையவெளி அச்சுறுத்தல்களை ஒழிப்பதற்கான அளவீடுகளை பணிப்பாளர் சபையானது மேற்பார்வையிட்டது.

தொடர்புடைய பொருண்மிய விடயங்கள்

எண்ணியல் நிலைமாற்றம்

மக்கள்

சூழல்/வீளக்கம்	வாடிக்கையாளர்களின் வளர்ச்சியடைந்து வரும் தேவைகளைப் பூர்த்திசெய்தல், எமது செயன்முறைகளை மாற்றுதல் மற்றும் டிஜிற்றல் மற்றும் தரவு நிபுணத்துவம்பெற்ற ஊழியர்களின் புதிய திறன்களை மேம்படுத்துதல் ஆகியவற்றின் ஊடாக மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கு டிஜிற்றல்மயமாக்கலில் முதலிடுதல். மேலும், வங்கியல்லாத நிறுவனங்களும் தொழில்நுட்ப நிறுவனங்களும் நேரடியாக வங்கியியற் துறையில் போட்டியிடுவதனை எழுச்சியுறும் தொழில்நுட்பங்கள் எளிதாக்குகின்றன.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	● வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடனான ஒத்திசைந்த செயற்பாடு நிலையான நிதியியல் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் எமது வங்கியின் நிலைத்தன்மையைப் பலப்படுத்துகிறது. அத்தோடு, எமது சேவை வழங்கும் திறன்களையும் ஊழியர்களின் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதுடன் புத்தாக்கமான கலாசாரத்தையும் வளர்க்கிறது. ● டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் செயன்முறைகளின் தன்னியக்கத்தை புதிய தொழில்நுட்பங்களின் தோற்றமானது வழிநடத்துவதுடன் அவற்றை ஈர்த்து தக்கவைப்பதற்கு வேறுபட்ட திறன்கள் தேவைப்படுகின்றன. இது வங்கிக்கு கடினமானதாக இருக்கலாம். ● புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதென்பது வித்தியாசத்தை ஏற்படுத்தும் காரணியாக இருக்கலாம். இருப்பினும், டிஜிற்றல் அல்லது தகவல் தொழில்நுட்ப மாற்றத் திட்டங்களிலான தோல்வியானது வியாபார இழப்பு, மோசமான வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் நற்பெயருக்கு சேதம் ஏற்படலாம். வியாபார நன்மைகளை வழங்குவதில் தோல்வி ஏற்படுமாயின் செலவு அதிகரிப்பு, வரவு செலவு அதிகரிப்பு மற்றும் வாடிக்கையாளர்களின் புரள்வின் அதிகரிப்பு ஆகியவற்றுக்கு காரணமாவதுடன் எமது நிதிச் செயற்திறனையும் எதிர்மறையாக பாதிக்கலாம்.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

அதிகரித்ததற்கான காரணங்கள்	➔ முதிர்வடைந்த தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உட்கட்டமைப்பும் தொழில்நுட்பமும் (போதுமான வலையமைப்பு இணைப்பின்மை). ➔ இணையவெளி பாதுகாப்பு மற்றும் நான்காம் தொழிற்துறை புரட்சியை மெதுவாக ஏற்றுக்கொள்ளுதல் ➔ நிதி வழங்கல் கட்டுப்பாடுகள் ➔ முக்கியமான வணிக செயல்முறைகளின் தன்னியக்க செயன்முறையின் தாமதம். ➔ டிஜிற்றல் தீர்வுகளின் தாமதமான வணிகமயமாக்கல். ➔ தொலைதூரத்திலிருந்து தொழில் புரியும் நிலைமைகள் மற்றும் கொவிட்-19 முடக்கத்தின்போது டிஜிற்றல் இணைப்புக்கான அதிகரித்த விருப்பம்
முகாமைத்துவ அணுகுமுறை	➔ வங்கியின் குறுகிய முதல் நடுத்தர கால உத்தியே "டிஜிற்றல் மாற்றத்தை துரிதப்படுத்துதல்" ஆகும். புதிய டிஜிற்றல் சேவைகள், சந்தையிலுள்ள முன்னணி தொழில்நுட்பம், ஊடகங்கள் முழுவதிலும் தடையற்ற சேவைகள் மற்றும் தரவு சார்ந்த நுண்ணறிவுகள் என்பவற்றின் ஊடாக எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த டிஜிற்றல் வங்கியியல் அனுபவங்களை வழங்குவதற்காக நாம் தொடர்ந்து முதலீடு செய்கிறோம். ➔ டிஜிற்றல் வங்கியியல் நிலையான நிலையை அடைந்துகொள்வதற்காக பல ஆண்டுகளாக நாம் டிஜிற்றல் உட்கட்டமைப்பு மற்றும் சொத்துக்களில் முதலீடு செய்துள்ளோம். எமது இணைய வங்கியியல் சேவைகளை அணுகும் வாடிக்கையாளர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ➔ இடர்களையும் செலவினையும் குறைத்தல், முறைமை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் மீளுந்தன்மையை மேம்படுத்துவதன் பொருட்டு எமது முறைமைகளை நவீனமயமாக்கி எளிதாக்குவதோடு இரு முனைகளுக்கிடையான செயன்முறையை டிஜிற்றல் மயமாக்கி வருகின்றோம். ➔ தேசிய மற்றும் சர்வதேச தரநிலைகளை மேம்படுத்துவதில் தீவிரமாக ஈடுபடுகின்றதோடு பாதுகாப்பு மற்றும் செயற்பாடுகளில் அபாயமின்மையை ஏற்படுத்துவதற்கான கருவிகளையும் வழிகாட்டுதல்களையும் நாங்கள் உருவாக்கியுள்ளோம். ➔ எமது தொழில்நுட்பத் தலைமைத்துவத்தை பேணுவதற்காக நாம் புதிய மற்றும் புத்தாக்கமான திறன்களின் தழுவலை பரிசோதிப்பதோடு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சிகளை கண்காணிக்கின்றோம். ➔ எமது செயற்திட்டங்களின் ஆயுட்காலம் முழுவதற்கும் தெளிவாக வரையறுக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் முக்கிய செயற்றிறன் இலக்குகளுக்கு எதிரான தனிப்பட்ட திட்டங்களை நாம் கண்காணிக்கிறோம். புதிய அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து அவற்றை நிர்வகித்தலும் குறைப்பதுமே இதன் நோக்கமாகும். ➔ அளவிடக்கூடிய டிஜிற்றல் தீர்வுகளை தொடர்ந்து வழங்குவதற்குப் போதுமான முதலீட்டை உறுதி செய்து தற்போதுள்ள மற்றும் வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தேவைகளில் கவனம் செலுத்துதல். ➔ பௌதீக மற்றும் டிஜிற்றல் செயற்பாட்டுத் தாங்குதிறனில் கவனம் செலுத்துதல் மற்றும் இடர்களை முன்கூட்டியே கண்டறிந்து குறைத்தல்.
இடர் வகை[2]	மூலோபாயம், செயற்பாட்டு, நற்பெயர்
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் தொடக்கம் நடுத்தரம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது
[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்
[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.



புத்தாக்கம் மற்றும் விரைவுத் தன்மை

மக்கள்

சூழல்/வீளக்கம்	புதிய போக்குகள் அல்லது சூழ்நிலைக்கு துரிதமாகவும் நெகிழ்வாகவும் பதிலளிப்பதற்கும் செயற்பாடுகளில் புதுமையைத் தொடர்வதற்கு வங்கியை இயலச் செய்கின்ற செயற்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் செயன்முறைகள், புதிய தயாரிப்புகள் அல்லது சேவைகளை உருவாக்கி அபிவிருத்தி செய்து அமுல்படுத்தல்.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	விரைவாக வளர்ச்சியடைந்து வரும் சூழலமைவில் தற்போதைய, வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு புத்தாக்கமான மற்றும் துரிதமான நிறுவனமாக இருப்பது அவசியமாகும். இதனூடாக காலத்திற்கு ஏற்றவாறு செயற்பட்டு எதிர்கால வளர்ச்சியை உறுதி செய்யலாம்.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	சீர்குலைக்கும் தொழில்நுட்பத்தின் விரைவான முன்னேற்றமானது பாரம்பரிய வணிக மாதிரிகளுக்கு இடையூறு விளைவித்து புதிய சந்தைகளை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளன. எமது செயற்பாட்டு மாதிரியை தகவமைத்து மாற்றங்களுக்கும் சில நேரங்களில் எமது பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் முரண்பாடான கோரிக்கைகளுக்கு பதிலளித்து காலத்திற்கு ஏற்றவாறு செயற்பட வேண்டும்.
முகாமைத்துவ அணுகுமுறை	● புத்தாக்கமான கலாசாரத்தை அபிவிருத்தி செய்வதில் கவனஞ் செலுத்துவதன் மூலம் சுய சீர்குலைக்கும் அணுகுமுறையை ஏற்றுக்கொள்வது. ● எமது வணிகத்தின் அனைத்து அம்சங்களிலும் வளர்ந்து வரும் மற்றும் பிரபல்யமான தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல். ● நிகழ்நிலை மற்றும் மெய்நிகர் வங்கியியல் போன்ற நிலையான கண்டுபிடிப்புகள் மற்றும் அக்கறைதாரர் ஈடுபாட்டு ஊடகங்களுடன் எமது செயற்பாட்டு மாதிரியை மேம்படுத்துதல். ● மாறிவரும் சந்தைகள் மற்றும் நடத்தை போக்குகளை பகுப்பாய்வு செய்வதற்கும் போட்டித் தன்மையை பேணுவதற்குமான "பெருந் தரவை" கவனத்திலெடுத்தல். ● குறிப்பாக வள பற்றாக்குறை மற்றும் நிச்சயமற்ற சூழலில் நமது வள திறன் மற்றும் செயல்பாட்டு திறனை மேம்படுத்தும் நெகிழ்வான மற்றும் புதுமையான தீர்வுகளை செயல்படுத்துதல். ● குறிப்பாக வளப் பற்றாக்குறை மற்றும் நிச்சயமற்ற சூழ்நிலையில் எமது செயற்பாட்டு மற்றும் வள செயற்திறனை அதிகரிக்கும் நெகிழ்வான மற்றும் புத்தாக்கமான தீர்வுகளை செயற்படுத்துதல். ● தனித்துவமான வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கென வடிவமைக்கப்பட்ட புத்தாக்கமான வியாபாரச் செயன்முறைகள் மற்றும் தயாரிப்புகளை இலக்காகக் கொண்டு வெற்றிபெறும் வியாபார நாமத்தினை உருவாக்குதலும் உட்புகுத்தலும்
இடர் வகை[2]	மூலோபாயம், செயற்பாட்டு, நிதியியல
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் தொடக்கம் நடுத்தர காலம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது
[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்
[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

பாதிக்கப்பட்ட குறுங்காலம் முதல் இடைக்காலம் வரையான மூலோபாய முன்னுரிமைகள்

பாதிக்கப்பட்ட மூலதனங்கள்

பாதிக்கப்பட்ட முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்

4 QUALITY EDUCATION
8 DECENT WORK AND ECONOMIC GROWTH
9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE
11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES
12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

தொடர்புடைய அக்கறைதாரர்கள்

தொடர்புடைய GRI மற்றும் எல்லைகள்

401 வேலைவாய்ப்பு – உள்ளே
413 உள்ளூர் சமூகங்கள் – வெளியே
404 பயிற்சியும் கல்வியும் – உள்ளே

பாதிக்கப்பட்ட இரண்டாம் நிலை ஐ.நா.நி.அ.இலக்குகள்

17 PARTNERSHIPS FOR THE GOALS

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்



வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவம்

மக்கள்

சூழல்/விளக்கம்	புத்தாக்கமான மற்றும் பயனுறுதியுள்ள வாடிக்கையாளர் தீர்வுகள் மற்றும் வணிக நெறிமுறைகளுக்கு வலுவான அர்ப்பணிப்புடனான உயர்தர சேவை தரம் ஆகியவற்றை உள்ளடக்கிய தனித்துவமான வாடிக்கையாளர் மதிப்பு முன்மொழிவை வழங்குதல். இது வாடிக்கையாளரின் திருப்தியையும் வங்கி மீதான நம்பிக்கையையும் அதிகப்படுத்துகிறது.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	நம்பிக்கை, நிதியியல் ஆற்றல் மற்றும் ஸ்திரத்தன்மையை கட்டமைப்பதற்கு சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவது அவசியமாகும். மோசமான வாடிக்கையாளர் சேவையும் திறன் கட்டுப்பாடுகளும் வாடிக்கையாளர் தொடர்பிலும் வணிகத்திலும் இழப்பை ஏற்படுத்துகின்றன. நாம் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் புதிய வாடிக்கையாளர்களை பெறுவதற்கும் காலத்திற்கு ஏற்றவாறு புதுமையான மற்றும் செலவு குறைந்த தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குவது அவசியமாகும்.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	⊙ எமது வாடிக்கையாளர் உறவுகளை பாதிக்கக்கூடிய மாற்றுத் தொடர்பாடல் சேவைகள் அல்லது பல்வேறு தொடு நிலையங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு புதிய தொழில்நுட்பத் தளங்களினது அதிகரித்த போட்டி ⊙ கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் கடன் தரப்படுத்தல் குறைப்பினால் வாடிக்கையாளர்கள் மீதான நிதிக் கட்டுப்பாடுகள். ⊙ கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள். ⊙ வரலாற்று ரீதியான வாடிக்கையாளின் அதிருப்தி நிலை
முகாமைத்துவ அணுகுமுறை	⊙ தனிப்பட்ட, உடனடி மற்றும் இலகுவான முறையில் சிறந்த தொழில்நுட்பத்தினையும் மனித தொடர்புகளையும் இணைத்து மிகவும் ஈர்க்கக்கூடிய வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க முயற்சித்தல் ⊙ எமது வாடிக்கையாளர்களின் தேவைகள், விருப்பங்கள் மற்றும் நடத்தைகள் பற்றிய உட்பார்வையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளில் வழிநடத்துவதற்கான முன்மொழிவுகளை வழங்குதல். ⊙ புத்தாக்கமான தயாரிப்பு மற்றும் சேவை வழங்கல் ஊடாக போட்டித்தன்மையான வேறுபாட்டை கொண்ட நோக்கத்தால் வழிநடத்தப்படும் கலாசாரத்தை உட்புகுத்தல். இக்கலாசாரம் அனைவரையும் உள்ளடக்கிய டிஜிற்றல் சமுதாயத்தை செயற்படுத்துவதுடன் குறைந்த சூழலியல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. ⊙ புத்தாக்கமான புதிய கூட்டாண்மைகள் மூலமான டிஜிற்றல் ஊடகங்களில் அதிகரித்த முதலீடு, திறமையான மூலதன ஒதுக்கீடு, இலக்கு வாடிக்கையாளர் முன்மொழிவுகளுக்கான ஏற்பாடுகள், உயர் விருப்பமான விலை நிர்ணயங்கள் மற்றும்/அல்லது புதிய டிஜிற்றல் சலுகைகள் ⊙ சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவதற்காக எமது வழங்கல் பட்டியல்களை எளிதாக்குதல் மற்றும் டிஜிற்றல் மாற்றத்தை துரிதப்படுத்துதல்.
இடர் வகை[2]	மூலோபாயம், நற்பெயர், செயற்பாட்டு
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் தொடக்கம் நீண்ட காலம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்

[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

பாதிக்கப்பட்ட குறுங்காலம் முதல் இடைக்காலம் வரையான மூலோபாய முன்னுரிமைகள்



பாதிக்கப்பட்ட மூலதனங்கள்



பாதிக்கப்பட்ட முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்



தொடர்புடைய அக்கறைதாரர்கள்



தொடர்புடைய GRI மற்றும் எல்லைகள்

416 வாடிக்கையாளர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு - வெளியே
417 சந்தைப்படுத்தல் மற்றும் அடையாளமிடல் - வெளியே
404 பயிற்சியும் கல்வியும் – உள்ளே
418 வாடிக்கையாளர் தனியுரிமை – உள்ளே

பாதிக்கப்பட்ட இரண்டாம் நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்



கண்ணோட்டம்

பொருளாதாரமானது சரிவிலிருந்தபோதிலும், அக்கறைதாரர்களின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப டிஜிற்றல் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளுக்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப துறை தொடர்ந்தும் வளரச்சிபெறும் என நாம் எதிர்பார்க்கிறோம். கிளைகளுக்கு நேரில் வருவதற்கு விரும்பாத வாடிக்கையாளர்களின் அதிகரிப்பு, ஸ்மாட் கைபேசி சாதனங்களின் ஆழமான ஊடுருவல் மற்றும் மலிவான தரவு அணுகல் ஆகியவற்றால் உந்தப்பட்டு வழிநடத்தும் டிஜிற்றல் ஊடகங்களை ஏற்றுக்கொள்வதற்கான வளர்ச்சியை நாம் எதிர்பார்க்கின்றோம்.

வங்கியின் டிஜிற்றல் தழுவல் மூலோபாயமானது வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் மற்றும் காரணிகளையும் கருத்திற் கொள்கின்றது. செயற்திறனான முறைமைகள், தொடர்புடைய திறன்கள் மற்றும் டிஜிற்றல் நிபுணத்துவம் ஆகியவற்றின் சரியான கலவையோடு மூல திட்டமிடப்பட்ட செலவுகள் மற்றும் வியாபார நன்மைகளுடனும் இம்மாற்றத் திட்டங்களை நாம் வழங்க வேண்டும். தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் புவிசார் அரசியல் வளர்ச்சிகளுக்கேற்ப இணையவெளி இடர்கள் தொடர்ந்தும் வளர்ந்து வருகின்றன.

4 அதிகரிக்கப்பட்ட ஒழுங்குறுத்துகை பற்றிய நுண்ணாய்வு

ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள் பொறுப்பு மிக்க வங்கியியல் சேவைகளை ஊக்குவித்தல், பூகோளச் சமநிலையினைப் பேணுதல், மற்றும் அதிகரித்த போட்டித் தன்மை, தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் இடையூறு மிக்க வணிக மாதிரிகள் போன்றவற்றில் இருந்தான தாக்கத்திலிருந்து வாடிக்கையாளர்களையும் வங்கிகளையும் பாதுகாத்தல் போன்ற நோக்கங்களுக்காக புதிய ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தி வருகிறது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலம் துரித கதியுடன் கூடிய நிதி ஜனநாயகமயமாக்கல் நடைமுறையானது தயாரிப்புகளை பொதுமக்கள் அணுகுதல், நிதி சார்ந்த உறுதித் தன்மை, நுகர்வோர் பாதுகாப்பு, டிஜிடல் நிலைமாற்றம், இணையப் பாதுகாப்புகள், காலநிலை மாற்றம், செலுத்தல்கள், பன்முகத் தன்மையும் உள்ளடக்கமும் மற்றும் நிதி சார்ந்த துறைகளுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பன போன்ற பல்வேறு காரணிகளை ஒப்பீட்டு நோக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை மிகவும் அவதானமாக பரிசீலனை செய்வதற்கு ஒழுங்குறுத்துகை நிறுவனங்களுக்கு வழிகாட்டுகிறது. ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள் மிகவும் ஒத்துழைப்பும் ஆலோசனையும் மிக்க அணுகு முறை ஒன்றினை முன்னெடுத்து வருவதோடு, டிஜிடல் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் கட்டுப்பாட்டு விதிமுறைகளை விருத்தி செய்யும் நோக்கில், துறை சார்ந்த நிறுவனங்களுடனும் மற்றும் அக்கறைதாரர்களுடனும் நிதி சார்ந்த துறையினுள்ளும் மற்றும் அத்துறைக்கு வெளியிலும் ஈடுபட்டு வருகின்றது. நிதி சார்ந்த நிறுவனங்களின் நடத்தைகளை தொடர்ந்தும் கண்காணித்து இடைக் காலம் முதல் நீண்ட காலம் வரையான டிஜிடல் முகாமைத்துவம் குறித்தான தேவைப்பாடுகளை அதிகரிப்பதற்கு ஒழுங்குறுத்துகை நிறுவனங்களின் அண்மைக் கால முன்னெடுப்புக்கள் மூலம் பரிந்துரைக்கப்படுகின்றது.

இலங்கையில் வங்கித் துறையினை ஆளுகின்ற முதன்மைச் சட்டங்களும் மற்றும் ஒழுங்குவிதிகளும்

- வங்கியியல் சட்டம் மற்றும் நாணய விதிச் சட்டம் ஆகியன முதன்மைச் சட்டங்களாக விளங்குகின்றன. இலங்கை மத்திய வங்கி இந்தச் சட்டங்களின் கீழ் பணிப்புரைகளையும் சுற்றுநிருபங்களையும் வழங்கி வருகிறது. இப்பணிப்புரைகள் பங்குதாரர்கள் மற்றும் குறிப்பான உரிமங்களின் செயன்முறைகள் ஆகியவற்றின் எல்லைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.
- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சட்டமானது கொடுப்பனவுகள், வெளியாக்கல் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளை கண்காணித்து ஒழுங்குபடுத்தல், மற்றும் சம்பந்தப்பட்ட கொள்கைகளைப் பரிந்துரைத்தல் ஆகியவற்றுக்கான தத்துவத்தினை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு பிரிவுக்கு வழங்குகின்றது.
- வங்கிகள், கம்பனிச் சட்டத்தின் கீழ் அல்லது விசேட பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்றன அல்லது பதிவு செய்யப்படுகின்றன. இந்த சட்டமானது சிறுபான்மையான பங்குதாரர்களின் நலன்களையும் கட்டுப்படுத்துகின்றது.
- அந்நியச் செலாவணிச் சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் அந்நியச் செலாவணியுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை ஒழுங்குபடுத்துகின்றது.
- நிதி சார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம், பயங்கரவாதி நிதியளிப்பினை ஒடுக்குதல் சட்டம் மீதான சமவாயம் ஆகிய சட்டங்கள் பண மோசடியை எதிர்த்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை எதிர்த்தல் போன்றனவற்றை ஒழுங்குபடுத்துகிறது.
- 2022 இன் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமானது இலங்கையில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களைக் கையாளுகின்ற பிரதான சட்டமாக விளங்குகின்றது.
- இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படுவதற்கு முன்னதாக அது தற்போது வரைவு செய்யப்பட்டு வருகிறது.

2022 இல், பொருளாதார நெருக்கடிக் காலத்தின் பொழுது பொருளாதாரத்தினைத் தக்கவைத்துக் கொள்வதற்கு உதவும் வகையில் வங்கியின் இயலுமையினை உறுதி செய்வதற்கான தேவையினைக் கருத்திற் கொண்டு, விவேகம் மிக்க விடயங்களுடன் கூடிய பொருளாதாரத்தின் சமூக-அரசியல் காலநிலையினால் பாதிக்கப்படும் ஒரு ஒழுங்குறுத்துகைத் தோற்றப்பாட்டில் கீழ் வரும் விடயங்கள் முக்கிய இடத்தினைப் பிடிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியானது அண்மைக்கால அபிவிருத்திகளுக்கு இணங்க தற்போதுள்ள சட்டங்களைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அந்நியச் செலாவணிச் சட்டம், நிதித் தொழில் சட்டம், நிதி குத்தகைக்கு விடுதல் சட்டம் அத்துடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் ஆகிய சட்டங்களுக்கான திருத்தங்கள், நிதித் துறையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் புத்தாக்க அம்சங்களுக்கு அமைய அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. இலங்கையின் வங்கிகள் இணைய வங்கிச் சேவை, கொடுப்பனவு வழிமுறைகள் போன்றன உள்ளிட்ட டிஜிடல் வசதிகளையும் மற்றும் ஏனைய பணம் அற்ற கொடுக்கல் வாங்கல் வடிவங்களையும் அறிமுகம் செய்துள்ளது. தற்போது இலங்கையின் டிஜிடல் சட்டங்கள் வடிவமைக்கப்படும் கட்டத்தில் காணப்படுகின்றன.

தரவுப் பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு

கடந்த இரு ஆண்டுகளை நோக்கும் போது, தரவுத் தனியுரிமையானது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுவதை அவதானிக்க முடிகிறது. பல்வேறு அரசியல், சமூக மற்றும் நெறிமுறை சார்ந்த விடயங்கள் காரணமாக, எந்தவொரு நாட்டினதும் பிரஜைகள் தொடர்பில் அந்நாட்டின் மூலோபாயம் மிக்க சட்டம் இயற்றுகையில் தரவுப் பாதுகாப்பானது தற்போது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தினைப் பிடித்துள்ளது. இதனாலேயே தரவுப் பாதுகாப்புச் சட்டங்களைத் தயாரிப்பதில் அனேக நாடுகள் நம்ப முடியாத அளவு மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றமை ஆச்சரியம் தரக்கூடிய ஒரு விடயமல்ல. அந்த வகையில், 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றியதன் மூலம் இலங்கையும் அதனை அனுசரிக்கும் ஒரு நாடாக விளங்குகின்றது. இதுவே இலங்கையில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களைக் கையாளுகின்ற பிரதான சட்டவாக்கமாகத் திகழ்வதோடு, இது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்டு விளங்குகின்ற அதேவேளை, டிஜிடல் பொருளாதாரப் பின்னணியில் ஏற்படக் கூடிய வளர்ச்சி மற்றும் புத்தாக்கம் குறித்தான இணைய வழிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தகவல் வலையமைப்புக்களில் பேணப்படும் தகவல் தனியுரிமை தொடர்பில் நுகர்வோரின் நம்பிக்கைக்கு உறுதியளிப்பதுமாக விளங்குகின்றது.

ஒரு தேசிய இணையப் பாதுகாப்பு மூலோபாயம் (2019, இணையப் பாதுகாப்புச் சட்டமூலம்) பற்றிய அமுலாக்கத்தினை வழங்குவதற்கான சட்டத்திற்கான ஒரு வரைவுச் சட்டமானது தேசிய இணையப் பாதுகாப்பு மூலோபாயத்தின் (2019-2023) கீழ் வடிவமைக்கப்பட்டு வருவதோடு, இது இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு (CERT) என அறியப்படுகின்ற இணையப் பாதுகாப்பிற்கான தேசிய நிலையத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இணையப் பாதுகாப்பு சட்டமூலமானது இணையம் ஊடான அச்சுறுத்தல்களையும் நிகழ்வுகளையும் வினைத்திறன் மிக்க முறையில் தடுத்து அவற்றை நிர்வகிப்பதற்கான ஒரு விரிவான வேலைச்சட்டகத்தினை வழங்க உள்ளதோடு, முக்கிய தகவல் கட்டமைப்பிற்கான பாதுகாப்பினையும் வழங்கக் கூடியதாக விளங்கவுள்ளது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பயன்பாடு அதிகரித்து வருகின்றமையினால், இலங்கை மத்திய வங்கியானது இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளை மேலும் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் வாய்ப்புள்ள இடர்களைக் குறைப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், சர்வதேச தரநியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் கூடிய இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளுக்கு இசைவுறுவதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்ட அதேவேளை, நிதி சார்ந்த மோசடிகள் மற்றும் ஏமாற்றுச் செயல்களிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில், புதிய இலத்திரனியல் கொடுப்பனவுப் பொறிமுறைகள் தொடர்பிலும் அவற்றை பாதுகாப்பாக உபயோகிப்பது தொடர்பிலும் பொதுமக்களுக்கு அறிவூட்டப்பட்டது.

இதற்கிணங்க, கொடுப்பனவு அட்டைகள் மற்றும் மொபைல் கொடுப்பனவு முறைமை ஆகியவற்றுக்கான சேவை வழங்குனர் தொடர்பில் விதிக்கப்படக் கூடிய ஒழுங்குவிதிகளுக்கான இணக்கப்பாட்டினைக் கண்காணிப்பதன் மூலம் கொடுப்பனவு அட்டை மற்றும் மொபைல் கொடுப்பனவு முறைமைகளின் சேவைகள் சுமுகமாக இடம்பெறுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் நேரடியான மற்றும் மறைமுகமான மேற்பார்வைகளும் மேற்கொள்ளப்பட்டன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் ஒரு துரித கதியுடனும் மற்றும் செலவுச் சிக்கனம் மிக்கதுமான, கொடுப்பனவு முறைமைகளின் நவீனமயமாக்கம் என அழைக்கப்படக் கூடிய பொறிமுறைகள், அதிகரித்த போட்டித்தன்மை, மற்றும் தேசிய கொடுப்பனவு முறைமையில் ஈடுபடக்கூடிய வெளிநாட்டு

ஈடுபாடுகள் (வங்கிகள் தவிர்ந்தவை) மீதான கட்டுப்பாடுகள் போன்றன மீது அதிக அவதானம் செலுத்தப்படவுள்ளது. அத்தகைய ஈடுபாடுகளுக்கு மத்தியில் கொடுப்பனவுச் சேவைகளை வழங்குதல், வெளியாக்கல் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் போன்ற விடயங்கள் விதிமுறைகளுக்கு உட்பட உள்ளன அல்லது எதிர்காலத்தில் மேம்பட்ட விதிமுறைகளுக்கு உட்படவுள்ளன.

பணம் தூய்தாக்கல்-எதிர்ப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை எதிர்த்தல்

பணம் தூய்தாக்கம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் போன்ற செயற்பாடுகள் நிதி முறைமையின் ஸ்திரத்தன்மைக்கும் மற்றும் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க விரிவான பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். இதனால், இலங்கை மத்திய வங்கியானது, பணம் தூய்தாக்கல்-எதிர்ப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை எதிர்த்தல் தொடர்பிலான நாட்டின் சட்டத்தினை வலுவூட்டும் வகையில், இணக்கப்பாட்டினை வலுப்படுத்தல், வினைத்திறன் மிக்க கண்காணிப்பு, வழிகாட்டல், மற்றும் சர்வதேச இணக்கப்பாடுகளுக்கு ஏற்ப அக்கறைதாரர்களுக்கு இடையிலான விழிப்புணர்வினை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக, அதன் தொழிற்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை, தொற்று நோய்க்குப் பிந்திய சூழ்நிலையில் "புதிய இயல்புநிலை"யை அங்கீகரித்து அதனை சீர்படுத்தியது.

அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மீதான கண்காணிப்பு

இலங்கை மத்திய வங்கியானது, மீளாய்வுக் காலத்தின் போது அந்நியச் செலாவணிச் சந்தையில் நிலவிய அபிவிருத்திகளுக்கான தீர்வினை வழங்குவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டினை இலகுபடுத்துவதனை இலக்காகக் கொண்டு 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் பல்வேறு கொள்கை நடவடிக்கைகளை அறிமுகம் செய்த அதேவேளை, பல்வேறு அக்கறைதாரர்களின் பிரச்சினைகள்/அக்கறை மிக்க விடயங்களைத் தீர்த்து வைத்ததோடு, உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தையில் நிலவிய திரவத்தன்மைத் தடைகளுக்கு மத்தியில் அந்நியச் செலவாணிப் பரிமாற்றங்களை மேலும் இலகுபடுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

செலாவணி மாற்று வீதத்திலுள்ள அழுத்தத்தினை இலகுபடுத்துவதற்கும் மற்றும் உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயம் குறித்தான திரவத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்குமாக இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகம் செய்யப்பட்ட ஏனைய பல்வேறு நடவடிக்கைகளுக்கு அமைவாக, ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி வருமானங்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதனை வேண்டுகின்ற நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொண்ட பின்னர் அத்தகைய வருமானங்களை மாற்றிக் கொள்ளல் போன்ற நோக்கங்களுக்காக, 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுமதி வருமானங்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புதல் மீதான விதிமுறைகள் 2022 மார்ச் மாதத்தில் மீள விநியோகிக்கப்பட்டன. மேலும், சாத்தியம் மிக்க திடீர் மூலதன இழப்புடன் கூடிய செலாவணி மாற்று வீத ஸ்திரத்தன்மையில் ஏற்படக் கூடிய ஏதேனும் அசாதாரண விளைவுகளைக் குறைக்கும் நோக்கில், குறித்த சில மூலதனப் பரிமாற்றங்கள் தொடர்பில் வெளிச்செல்லும் பணம் அனுப்புதல்களை இடைநிறுத்துவதற்கான கட்டளை விநியோகிக்கப்பட்டது.

உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தையில் செலாவணி மாற்று வீதம் மற்றும் திரவத் தன்மை ஆகியவற்றின் ஸ்திரத் தன்மையினை பேணும் வகையில் அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற பொருட்களின் இறக்குமதியினை குறைக்கும் இலக்குடன், குறிப்பிட்ட இயைபுமுறைக் குறியீட்டின் கீழான இறக்குமதிகள், ஏற்றுக்கொள்கைக்கு எதிரான ஆவணங்களின் (DA) கீழான இறக்குமதிகள் மற்றும் கொடுப்பனவு நிபந்தனைகளுக்கு எதிரான ஆவணங்களின் (DP) கீழான இறக்குமதிகள் அத்துடன் கடன் அங்கீகாரப் பத்திரங்களின் (LCs) கீழான இறக்குமதிகள் போன்றவற்றுக்காக ஒரு 100 சதவீ வட்டியின்றிய-பண எல்லை வைப்புத் தேவையானது அறிமுகம் செய்யப்பட்டது.

பாசல் III மீதான சீர்திருத்தங்கள்

இது 2017 டிசம்பர் மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இது எந்தவொரு இழப்புக்களையும் எதிர்கொள்ளும் நோக்கில் போதுமான மூலதனத்தினை பேணுவதற்கான ஒரு முக்கிய குறிக்கோளினைக் கொண்டதாகும். வங்கித் துறையானது, ஒரு உறுதியான மற்றும் ஒரு தாக்குப் பிடிக்கக் கூடிய தன்மையில் வங்கிகள் இயங்குவதனை இயலச் செய்யும் நோக்கில் பல ஆண்டுகளாக மூலதனத்தினை கட்டியெழுப்பியுள்ளது. இது சவால் மிக்க காலப் பகுதிகளில் எதிர்பாரா இழப்புக்களை தாங்கிக் கொள்வதற்கு பெரிதும் உதவியதோடு, குறைந்த இடர் மட்டத்தில் நீண்ட கால நிதியிடல்களைத் திரட்டிக் கொள்வதற்கும் மற்றும் கடன் வீதங்களைப் பேணுவதற்கும் வங்கிகளுக்கு துணை நின்றுள்ளது.

இருப்பினும், 2022 மே மாதத்தில், தற்போது நிலவுகின்ற அசாதாரண பேரண்டப் பொருளாதார நிபந்தனைகளைக் கருத்திற் கொண்டு சில ஒழுங்குவிதிகள் சார்ந்த தேவைப்பாடுகள் தொடர்பில் வங்கித் தொழில் சட்டத்திற்கு அமைவான, பின்வருவன உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன:

- மூலதனப் பாதுகாப்பு இடையகத்தில் (CCB) வீழ்ச்சி
- இயக்கப்பாட்டு இடர் தொடர்பிலான தேவைப்பாட்டிற்காக இடர் மிக்க சொத்துக்களைக் கணிப்பிடும் நோக்கில் நியமதர அணுகுமுறையிலிருந்து மாற்றுவழி நியமதர அணுகுமுறைக்கு நகர்தல்.
- நிபந்தனைக்கு உட்பட்டு, 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான மூலதனப் போதுமை விகிதக் கணிப்பீட்டு நோக்கத்திற்காக 2024 இன் இரண்டாம் காலாண்டு வரையான நியாயமான பெறுமானத்தில் அளவிடப்பட்ட இலங்கை ரூபாய்களில் குறிப்பிடப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் மீது ஒரே இரவில் ஏற்பட்ட சந்தை இழப்புத் தளர்வு.
- மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிப்பிடுவதற்கான "பிற விரிவான வருமானம்" (OCI) குறித்தான மீளமைக்கப்பட்ட நடவடிக்கையானது சர்வதேச நியம தரங்களுக்கு அமைவாக அறிமுகம் செய்யப்பட்டது (இறுதியான கணக்காய்வின் பிரகாரம் 100 சதவீத திரண்ட OCI பெறுகைகள் உள்ளிட்டவை)
- திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மற்றும் நிகர நிலையான நிதியிடல் விகிதம் பற்றிய குறைந்தபட்ச தேவைப்பாட்டினை 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை 100 இலிருந்து 90 சதவீதத்திற்கு குறைத்தல்.
- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை மேம்படுத்துவதற்கான இறுதித் திகதியை 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடித்தமை.
- உரிமம் பெற்ற வங்கிகளின் அத்தியாவசியமற்ற/அவசரமற்ற செலவுகள் மற்றும் விருப்பக் கொடுப்பனவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் வங்கித் தொழில் சட்டம் சாராத பணிப்புரைகள் விடுக்கப்பட்ட அதேவேளை, தற்போது நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிபந்தனைகள் காரணமாக உரிமம் பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் ஏனைய முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளில் ஏற்படக் கூடிய சாத்தியம் மிக்க பாதகமான விளைவுகள் மற்றும் பொருத்தமான திரவத்தன்மை மட்டத்தினையும் மூலதன இடையகங்களையும் பேணுவதன் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்தில் மூலதனச் செலவினங்களை எதிர்கொள்ளும் போது மிகவும் விவேகம் மிக்க முறையில் எதிர்கொள்ளுமாறு உரிமம் பெற்ற வங்கிகள் வேண்டப்பட்டன.

நிதிசார் நுகர்வோர் பாதுகாப்பு

இலங்கை மத்திய வங்கியானது, வங்கியினால் ஒழுங்குறுத்தப்படுகின்ற நிறுவனங்களின் நிதி சார் நுகர்வோர் பாதுகாப்பு வேலைச்சட்டகத்தினை தொடர்ந்தும் வலுப்படுத்தி வருகின்றது. இது நிதி நுகர்வோரின் உரிமைகள் மற்றும் நலன்களை ஊக்குவிக்கின்ற அதேவேளை, நிதி நுகர்வோர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதிசார்ந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் நியாயம் மற்றும் வெளிப்படைத் தன்மை போன்ற அம்சங்களையும் ஊக்குவிக்கின்றது.

இலங்கை மத்திய வங்கியின் மூலம் ஒழுங்குறுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கான ஒரு விரிவான நிதி நுகர்வோர் பாதுகாப்பு வேலைச்சட்டகத்தினை இலகுபடுத்தும் நோக்கில் புதிய ஒழுங்குவிதிகளை/ வழிகாட்டல்களை வழங்கும் செயன்முறையினை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது. இது தொடர்பில், குறித்த ஒழுங்குவிதிகளின் முதலாவது வரைவானது அக்கறைதாரர்களின் ஆலோசனையைப் பெறுவதற்காக 2022 இன் இறுதியில் வழங்கப்பட்டது. மேலும், மேற்படி ஒழுங்குவிதிகளை வழங்குவதன் மூலம், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தை நடத்தை மேற்பார்வையினை தொடங்கி வைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

உரிமம் பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் பற்றி 2011 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரைக்கான அனுபந்தம் ஒன்று, அத்தகைய வாடிக்கையாளர்களின் நிதி நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கையினை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், விசேட தேவைகளை உடைய வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவை அணுகலை மேம்படுத்துவதற்கான தேவைப்பாட்டினை விரிவாக்கம் செய்து, விநியோகிக்கப்பட்டது.

நீடுறுதி மிக்க நிதிச் சேவை

இலங்கை மத்திய வங்கியானது, நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைந்து கொள்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதன் முக்கியத்துவத்தினையும் மற்றும் இலங்கையில் பசுமையான, உள்ளடங்கிய மற்றும் சமநிலையுடைய பொருளாதாரத்தின் தேவைப்பாட்டினையும் கருத்திற் கொண்டு, 2019 இல் நீடுறுதி மிக்க நிதிக்கான வீதி வரைபடத்தினை வெளியிட்டது. இந்த வீதி வரைபடமானது நிதி சார்ந்த ஒழுங்குறுத்துகையாளர்களுக்கும் மற்றும் நிதி சார்ந்த நிறுவனங்களுக்கும், அவர்களது நிதிக் கருத்திட்ட நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட சூழலிய, சமூக மற்றும் ஆளுகை இடர்களை வினைத்திறன் மிக்க முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு உதவும் வகையிலும் மற்றும் பசுமையான, காலநிலை நேயம் கொண்டு மற்றும் சமூக உள்ளடக்கத்துடனான வணிகத்திற்கான ஆதரவினை ஊக்குவிக்கும் நோக்கிலும், ஒரு விரிவான வழிகாட்டலை வழங்குகின்றது.

உரிமம் பெற்ற வங்கிகளின் நிலையான நிதியிடல் நடவடிக்கைகளுக்கான இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினையும் ஒரு ஆளுகையினையும் வழங்கும் நோக்குடன் இலங்கையின் பசுமை நிதி வகைப்பாடு மற்றும் வீதி வரைபடமானது, 2022 மே மாதம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டவாறாக நிலையான நடவடிக்கைகளுக்கான ஒரு வகைப்பாட்டு மற்றும் அளவீட்டு முறைமையினை தாபிக்குமாறு வேண்டுகிறது.

கொவிட்-19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள்/ வணிக நடவடிக்கைகளுக்கான நிவாரணங்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடியும்

கொவிட்-19 நோய்த் தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட செயலாற்றுகை குறைந்த மற்றும் செயலாற்றுகை கொண்ட கடன் வாங்கியோரை இனங்கண்டு அவர்களுக்கு உதவும் வகையிலும், தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் திறன் கொண்ட சாத்தியமான வியாபார நடவடிக்கைகளை புதுப்பித்து அதன் மூலம் நீடுறுதி மிக்க தன்மையில் அவர்களது தடைகளை நீக்கும் நோக்கத்தோடும், உரிமம் பெற்ற வங்கிகளில் கொவிட்-19 நோய்த் தாக்கத்திற்குப் பின்னரான மறுமலர்ச்சிப் பிரிவுகளை தாபிப்பதற்கான வழிகாட்டல்கள் பற்றிய ஒரு சுற்றுநிருபத்தினை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டிருந்தது.

தற்போதைய பேரண்டப் பொருளாதார நிபந்தனைகள் மற்றும் (அல்லது) கொவிட்-19 தொற்று நோய் காரணமாக தமது வருமானத்தில் அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கடன் பெற்றவர்களுக்கு ஆறு மாத காலம் கொண்ட ஒரு பொருத்தமான சலுகைக் காலத்தினை வழங்குமாறு உரிமம் பெற்ற வங்கிகள் வேண்டப்பட்ட அதேவேளை, வங்கித் துறையின் நீடுறுதித் தன்மை மீதான தேவையற்ற அழுத்தங்களைத் தவிர்ந்திருக்கவும் வேண்டப்பட்டன. இந்த சலுகைகள் தனி நபரின் திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் வியாபாரத்தின்/கருத்திட்டங்களின் நம்பகத் தன்மையின் பேரில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலுத்தித் தீர்ப்பதன் அடிப்படையில் வழங்கப்பட்டன.

புதிய மேற்பார்வை முறை

வங்கிகளுக்கான இடர்-மைய மேற்பார்வை வேலைச்சட்டகத்திற்கு வசதியளிக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியானது மேற்பார்வை மதிப்பீடு மாதிரி, வங்கித் தொழில் நீடுறுதித்தன்மை பற்றிய மதிப்பீட்டுச் சுட்டியை (BSRI) நடைமுறைப்படுத்தியுள்ள அதேவேளை, முன்னரான மேற்பார்வை ஈடுபாடு மற்றும் உடனடியான சரிப்படுத்தல் நடவடிக்கைகளையும் இயலச் செய்தது. தொற்று அபாயத்திலிருந்து வங்கியைப் பாதுகாத்தல் மற்றும் வங்கித் துறையினதும் நிதி முறைமையினதும் நீடுறுதித் தன்மை பேணுதல் மற்றும் பாதுகாப்பதற்கான தேவையினைக் கருத்திற் கொண்டு, வங்கித் தொழில் குழுமங்களின் ஒருங்கிணைந்த மேற்பார்வை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதற்கிணங்க, ஒருங்கிணைந்த மேற்பார்வை பற்றிய கட்டுப்பாட்டு வேலைச்சட்டகம் ஒன்று விருத்தி செய்யப்பட்டு வருவதோடு, இது பற்றிய ஏற்பாடுகள் புதிய வங்கித் தொழில் சட்டத்தில் கொண்டுவரப்படவும் உள்ளது.

வங்கிகள், பல்வேறு இடர் மதிப்பீடுகளின் கீழ் அவற்றை வகைப்படுத்தி வலுவிழந்த வங்கிகளின் ஸ்தானத்தினை மேம்படுத்துவதற்குத் தேவையான கட்டுப்பாட்டு மற்றும் மேற்பார்வை சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் உள்ளக மேற்பார்வை மதிப்பீடு முறைமையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. இது அளவு சார்ந்த நடவடிக்கைகள் [மூலதனப் போதுமை, சொத்து பற்றிய தர முகாமைத்துவம், வருமான ஈட்டல்கள், மற்றும் திரவத்தன்மை (அதாவது, CAMEL மாதிரி உள்ளடக்கங்கள்)] மற்றும் தரப்பண்பு சார்ந்த நடவடிக்கைகள் (சட்டவாக்க அல்லது ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுக்கான வங்கியின் இணக்கப்பாடு பற்றிய மதிப்பாய்வு, உள்ளகக் கட்டுப்பாடு, மற்றும் கூட்டுறவு அரசாங்கத்தின் நியமங்கள்) ஆகிய விடயங்கள் தொடர்பில் பரிசீலிக்கின்றது.

பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான தாக்கங்கள்

பாசல் சீர்திருத்தங்கள், கணக்கீட்டு நியமங்கள், நாணய மற்றும் நிதிக் கொள்கைகள், நிதி சார்ந்த குற்றச் செயல் ஒழுங்குறுத்துகைகள், மற்றும் தனியுரிமைச் சட்டங்கள் போன்ற ஒழுங்குறுத்துகை மற்றும் அறிக்கையிடல் சார்ந்த மாற்றங்கள், ஒரு நிதி நிறுவனத்தின் பெறுமதி உருவாக்கத் திறனைப் பாதிப்பதோடு, இணக்கப்பாட்டு இடர்கள் உருவாவதற்கும் வழியமைக்கின்றன. ஒழுங்குறுத்துகை மற்றும் சமூக-பொருளாதார காரணிகளின் ஒருங்கிணைப்பும் கூட நிதி நிறுவனத்தின் வணிக மாதிரியைப் பாதிக்கின்றது. சட்டம் மற்றும் நடத்தைகளுக்கு இணங்காமைக்கான அபராதங்கள் மற்றும் கட்டுப்பாட்டுத் தடைகளுக்கான வாய்ப்புகள், ஒழுங்குவிதிகளில் ஒரு விரிவான மற்றும் முன்னோக்கிய அணுகுமுறையினை அவசியமாக்கும் வகையில் அதிகரித்து வருகின்றன. சட்ட ரீதியான ஒதுக்க தேவைப்பாடுகள், வட்டி வீத ஏற்ற இறக்கங்கள், நாணயக் கொள்கை, நிதிக் கொள்கை, மற்றும் கடன் வழங்கும் வீதங்கள் மீதான வரம்புகள் போன்ற பிரதான ஒழுங்குறுத்துகை அக்கறை மிக்க விடயங்களும் வங்கியின் மூலோபாயம் மற்றும் பெறுமதி உருவாக்கச் செயற்பாடுகளை பாதிக்கின்றது. இறுதியில், ஒழுங்குறுத்துகை மாற்றங்களை எதிர்நோக்கி அவற்றுக்கு பதிலளிக்கும் நோக்கில், ஒரு ஒத்துழைப்புடன் கூடிய, விரிவான, மற்றும் முன்னோக்கிய

அணுகுமுறை ஒன்று வங்கிக்கு அவசியமாகின்ற அதேவேளை, வணிக மாதிரி மற்றும் மூலோபாய முன்னுரிமைப்படுத்தல்கள் மீதான அவற்றின் தாக்கத்தினையும் மதிப்பாய்வு செய்வது அவசியமாகின்றது.

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

எமது இடர்கள்

- அபிவிருத்திச் செயற்பாடுகளின் உச்ச நிலை மற்றும் ஒழுங்குவிதி மாற்றத்திலுள்ள சிக்கல் நிலைமை அத்துடன் சட்டத் தேவைப்பாடுகள் போன்றவற்றின் மூலம் எழக்கூடிய சவால்கள்.
- புதிய ஒழுங்குவிதிகள் சார்ந்த நியமங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சமூக எதிர்பார்ப்புக்களை எதிர்கொள்ளத் தவறுகின்றமையானது வாடிக்கையாளர் மற்றும் சமுதாயம் சார்ந்த பாதிப்புக்களுக்கும் அத்துடன் குறைவான பங்குதாரர் பெறுமதியாக்கத்திற்கும் வழியமைக்கக் கூடும் (உதாரணமாக, சூழலிய, சமூக மற்றும் ஆளுகை (ESG) அர்ப்பணிப்பு, இணைய அச்சுறுத்தல்)
- டிஜிடல் தொழில்நுட்பத்தின் துரித முன்னேற்றம் மற்றும் நிதிப் பரிமாற்றத்திற்கான அனேக வழிமுறைகள் மூலம் அதிகரித்து வரும் நிதி நடவடிக்கை சார்ந்த குற்றங்கள் எழுதல்.
- உயர் மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவத்திலான கடினங்கள்.
- உயர் இணக்கப்பாட்டுத் தேவைக்கு அமைய நிதி நிறுவனங்களின் இயக்கப்பாட்டுச் செலவும் அமுல்படுத்தல் செலவுகளும் அதிகரித்தல்.
- புதிய, குறைந்த கட்டுப்பாட்டு வகிபாகத்தினை உடையோருடனான மோசமான போட்டித் தன்மை

எமது வாய்ப்புக்கள்

- வங்கியின் ஆளுகைச் செயன்முறைகள் மற்றும் நன்னடத்தை சார்ந்த வேலைச்சட்டகத்தில் தொடர் முன்னேற்றம்.
- எமது அக்கறைதாரர்களைப் பாதிக்கும் வகையில் எழக்கூடிய இடர்களை தொடர்ந்தும் இனங்கண்டு அவற்றை முகாமை செய்தல்.
- ஒரு வலுவான ஆளுகை வேலைச் சட்டகம் மற்றும் விரிவான தரவுப் பகுப்பாய்வு மற்றும் முறைமைகளின் திறமை போன்றவற்றின் மூலம் அர்ப்பணிப்பு மிக்க ஆதரவினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.
- மூலதனம் மற்றும் திரவத்தன்மை பற்றிய திட்டமிடுதலுக்கான பாரிய நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருப்பதற்கான இயலுமை.
- வாடிக்கையாளர் மத்தியில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பக் கூடிய வலுவான ஒரு இணையப் பாதுகாப்பு மூலோபாயத்தினைக் கொண்டிருப்பதற்கான இயலுமை.

குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை இடர்களிலான அதிகரிப்பு	குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை இடர்களிலான அதிகரிப்பு	2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எந்த மாற்றமும் இல்லை.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

இடர்களைத் தணித்து வாய்ப்புக்களில் மூலதனம் செய்வதற்கான எமது அணுகுமுறைகள்

- ஒழுங்குறுத்துகை மற்றும் சட்டம் சார்ந்த மாற்றங்களை மதிப்பாய்வு செய்து, அவற்றுக்கு பதிலளித்து மற்றும் அவற்றைக் கண்காணிக்கும் வகையில் ஒரு முன்னோக்கிய இலக்கு கொண்ட அணுகுமுறையினை பேணுதல்.
- வங்கித் துறை மற்றும் பரந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமான வெளியீடுகளை உறுதிப்படுத்தும் நோக்கில் எதிர்கால ஒழுங்குவிதி மாற்றங்கள் தொடர்பில் ஒழுங்குறுத்துகை அதிகாரசபையுடனும் மற்றும் ஏனைய அக்கறைதாரர்களுடனும் ஈடுபடுதல்.
- துரித மாற்றங்களுக்கு இடமளிக்கின்ற அதேவேளை, எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வினைத்திறன் மிக்கதும் பாதுகாப்பானதுமான சேவைகளை வழங்குவதற்கு வங்கியினை இயலச் செய்தல்.
- ஏனைய நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் நுணுக்கமான மற்றும் விரிவான உள்ளக கட்டுப்பாட்டு வேலைச்சட்டகம் ஒன்றின் ஊடாக நிறுவனத்திற்குள் இணக்கப்பாட்டுக் கலாசாரத்தினை மேம்படுத்தல்.
- தொழில்நுட்பத்திலான முதலீடு, தரவுத் திறன் (வெளியக நிபுணத்துவம் உள்ளிட்டவை), வாடிக்கையாளர் விழிப்புணர்வு முன்னெடுப்பு மற்றும் துறை சார்ந்த ஒத்துழைப்பு போன்றன உள்ளிட்ட, பாதுகாப்புத் தளங்களில் தொடர்ந்தும் முதலீடு செய்தல் மற்றும் வாடிக்கையாளர் தகவல்களைப் பாதுகாக்கும் வகையில் தொடர் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- எமது இணக்கப்பாடு தொடர்பான அதிகாரத்தினை உறுதிப்படுத்துவதோடு, வணிக நடவடிக்கைகள் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இடம்பெறுவதை உறுதிப்படுத்தல்.
- வங்கியினுள் மக்கள், செயன்முறைகள், மற்றும் முறைமைகளில் தற்போது காணப்படுகின்ற முதலீட்டினூடாக ஒழுங்குவிதி சார்ந்த மாற்றங்களை மதிப்பாய்வு செய்து, பதிலளித்து மற்றும் அவற்றைக் கண்காணிப்புச் செய்யும் நோக்கில் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட, விரிவான மற்றும் முன்னோக்கிய இலக்குடைய அணுகுமுறையினை பேணுதல்.
- ஒழுங்குறுத்துகை அதிகாரசபை, அரசாங்கம் மற்றும் சட்ட ஆலோசனைக் குழுக்களுடன் ஒத்துழைப்புடன் இணைந்து பணியாற்றுதல்.

செயற்பாட்டிலுள்ள ஆளுகை

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மற்றும் சபை கணக்காய்வுக் குழு ஆகியன தமக்குரிய பணிப்பாணையினுள் சமகால மற்றும் எதிர்கால ஒழுங்குவிதி மாற்றங்களை கண்காணித்து வருகின்றன. 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற மீளாய்வுகளில் வங்கியின் மோசமடைந்து வரும் கடன் தரம், ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்ட சட்டம் மற்றும் பொருளாதார மூலதனத் தொகுப்புக்கள் மற்றும் மட்டங்கள், அழுத்த நிலைமைகள், பாசல் III திருத்தங்கள் (இடர் சுமை மிக்க சொத்துக்களின் தீர்மானிப்பதற்கான விதிகளை மீளமைத்தல்), மற்றும் வட்டி வீத சீர்திருத்தங்கள் போன்றனவும் வரையறை இன்றி உள்ளடங்குகின்றன.

தொடர்புடைய பொருண்மிய விடயங்கள்

ஆளுகை மற்றும் இணக்கப்பாடு — மக்கள்

சூழல்/விளக்கம்	தற்போதைய ஒழுங்குவிதிக் கட்டமைப்பானது முன்னொருபோதும் இல்லாத விகிதத்தில் மாற்றமடைந்து வருகின்றது. எமது வணிக நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட தற்போதுள்ள மற்றும் எதிர்கால சட்ட விடயங்களை இனங்காண்பதற்கான ஒரு பொறுப்பினை நாம் கொண்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட இடர்களை சிறப்பாகப் புரிந்துள்ளமையினையும் கட்டுப்பாடுகள் நிறுவனத்திற்குள்ளும் மற்றும் இயக்கப்பாட்டு மாதிரியினுள்ளும் பிணைக்கப்பட்டிருப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	வங்கியானது பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சட்டங்களுக்கும் ஏற்புடைய துறை சார்ந்த ஒழுங்குவிதிகளுக்கும் கண்டிப்பாக இணங்கியொழுகுதல் வேண்டும். சிறந்த ஆளுகை மற்றும் இணக்கப்பாடு ஆகியவை ஒரு வணிகத்தின் நற்பெயருக்கும் மற்றும் அது இயங்குவதற்கான அங்கீகாரம் பெறுவதற்கும் முக்கிய விடயமாக விளங்குகின்றன. இருப்பினும், ஒழுங்குவிதிக் கட்டமைப்பானது அதிகரிக்கும் கட்டாயத் தேவைப்பாடுகளுடன் முன்னெப்பொழுதும் இல்லாத ஒரு வீதத்தில் தொடர்ந்தும் மாற்றம் பெற்று வருவதனால், எமது சந்தைகளில் ஒழுங்குறுத்துகை மற்றும் கொள்கை அபிவிருத்திகள் ஒரு சவாலாகவே தொடர்ந்தும் விளங்குகின்றன.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

அதிகரித்ததற்கான காரணங்கள்	● இயக்கப்பாட்டுச் செலவுகளைப் பாதிக்கும் வகையில் ஒழுங்குறுத்துகையில் துரித மாற்றங்கள். ● ஒழுங்குவிதி மற்றும் இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகளிலான அதிகரிப்பு, விசேடமாக புதிய மற்றும்/ அல்லது திருத்தப்பட்ட சட்டவாக்க மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய வர்த்தமானி வெளியீடு மற்றும் கொவிட்-19 விளைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்கள். ● இணக்கம் இன்மையின் காரணமாக ஏற்படும் இடர்கள் மற்றும் விளைவுகள், நிதி சார்ந்த தடைகள் முதற்கொண்டு நிதி சாராத தடைகள் வரையான வேறுபடுகின்றன. இது தற்போதைய அக்கறை மிக்க விடயம் ஒன்றாக எமது நீடுறுதித் தன்மையில் ஒரு அடிப்படைத் தாக்கத்தினை பிரத்தியேகமாக மற்றும்/ அல்லது கூட்டாக கொண்டிருக்க முடியும். ● இந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணக்கமுறத் தவறுகின்றமையானது, நிறுவனத்தின் நற்பெயரை சிதைப்பதற்கு, நிதி சார்ந்த அபராதங்களுக்கு மற்றும்/ அல்லது நிறுவனத்தினை நடாத்துவதற்கான எமது உரிமத்தினை இடைநிறுத்துவதற்கு வழியமைக்கக் கூடும். ● மிகவும் நுட்பத்துடன் கூடிய முறையிலும் மற்றும் வாடிக்கையாளர்களையும் வங்கியையும் பெரிதும் பாதிக்கும் வகையிலும், அதிகரித்து வரும் சந்தர்ப்பவாத நிதிக் குற்றங்கள் மற்றும் இணையக் குற்றங்கள்.
முகாமைத்துவ அணுகுமுறை	● வங்கியில் ஒரு திடமான ஆளுகைச் செயன்முறையினை உறுதிப்படுத்தி ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டு முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதன் மீது வலுவான மைய அவதானம் செலுத்தப்பட்டது. ● வங்கியினுள் சிறந்த ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டுக் கலாசாரம் ஒன்றை வலுப்படுத்தல். ● இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத்தினை மேற்பார்வை செய்யும் நோக்கில் அர்ப்பணிப்பு மிக்க இடர் மற்றும் இணக்கப்பாட்டுத் திறனை முன்னெடுத்தல். ● அரசாங்கம் மற்றும் ஒழுங்குறுத்துகை நிறுவனம் ஆகியவற்றுடன் ஒரு முனைப்பான தொடர்பினை பேணுதல். ● அழைப்பு விடுக்கப்படும் பொழுது அரசாங்க ஈடுபாட்டுச் செயன்முறையில் பங்களிப்புச் செய்தல். ● குறித்த விடயம் சார்ந்த நிபுணத்துவம் மிக்க வல்லுனர்களை சட்டக் குழுக்கள் கொண்டிருத்தல் மற்றும் ஒரு வலுவான கொள்கை இணக்கப்பாட்டு வேலைச்சட்டகத்தினைக் கொண்டிருத்தல். ● நிறுவனத்திற்குள் எமது நன்னடத்தைக் கலாசார அம்சங்களுடன் தொடர்புபட்ட பயிற்சியளிப்பு மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் ஊழியர்கள் குறித்த இணக்கப்பாட்டு விடயங்களை உறுதிப்படுத்துவதில் தமது வகிபாகத்தினைப் புரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவுதல்.
இடர் வகை[2]	செயற்பாடு, நற்பெயர்
காலச் சட்டகம்[3]	குறுங்காலம் தொடக்கம் நீண்டகாலம் வரை.

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்

[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

பாதிக்கப்பட்ட குறுங்காலம் முதல் இடைக்காலம் வரையான மூலோபாய முன்னுரிமைகள்

பாதிக்கப்பட்ட மூலதனங்கள்

பாதிக்கப்பட்ட முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்

8 DECENT WORK AND ECONOMIC GROWTH
9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE
16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS

தொடர்புடைய அக்கறைதாரர்கள்

தொடர்புடைய GRI மற்றும் எல்லைகள்

404 பயிற்சி மற்றும் அறிவூட்டல் – உள்ளே
205 ஊழல் எதிர்ப்பு
206 போட்டித்தன்மைக்கு எதிரான நடத்தை

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

இணையவழி அச்சுறுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்பு

மக்கள்

சூழல்/விளக்கம்	சைபர் பாதுகாப்பானது தகவல் திருட்டு, ரேன்சம்வெயர் மற்றும் மால்வேயார் உள்ளிட்டவற்றை மீறி, தாக்குவதோடு, நற்பெயர் மற்றும், தொழிற்பாடுகளை பேணுவதற்கான எமது ஆற்றல் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாக உள்ளன
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	● வங்கிச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் வணிக செயல்முறைகளை தானியக்கமாக்குதல் போன்ற அதிகரித்து வரும் போக்குடன் ஹேக்கர்கள் மிகவும் அதிநவீனமாக மாறுவதால், சைபர் பாதுகாப்பு என்பது அதிக முன்னுரிமையாக உள்ளது. ● வெளிப்புற சைபர் தாக்குதல், உள் அச்சுறுத்தல் அல்லது வழங்குநர் மீறல் ஆகியவை வாடிக்கையாளருக்கு சேவை குறுக்கீட்டை ஏற்படுத்தலாம் வங்கி சேவைகள் அல்லது இரகசிய தரவு இழப்பு அல்லது வாடிக்கையாளர் தரவு தனியுரிமையை பாதிக்கலாம். சைபர் அச்சுறுத்தல்கள் எங்கள் சந்தைகள் அனைத்திலும் முக்கிய வாடிக்கையாளர், நிதி, நற்பெயர் மற்றும் ஒழுங்குமுறை தாக்கங்களுக்கு வழிவகுக்கும். ● கடன் வழங்குதல் முடிவுகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது போன்ற பகுதிகளில் மோசமாகப் பேணப்பட்ட அல்லது முகாமைசெய்யப்பட்டவை தரவு தனியுரிமை கரிசனைகளை உருவாக்கலாம் அல்லது மோசமான நிதி, ஒழுங்குமுறை மற்றும் தவறான முடிவுகளை வழங்குதல் நற்பெயர் முடிவுகள் என்பவற்றில் தவறான பெறுபேறுகளை வழங்கலாம்.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்துள்ளது.
அதிகரித்ததற்கான காரணங்கள்	● நிதிச் சேவைகளில் டிஜிட்டல் மயமாக்கலின் அதிவேக வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப மாற்றம் (பரிணாமம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, டிஜிட்டல் சேனல்களின் பயன்பாடு அதிகரிப்பு, தொலைதூரத்தில் வேலை செய்யும் உயர் நிலைகள்) அதிகரித்த நுட்பம், மற்றும் சைபர் குற்றவாளிகளின் பரந்த செயல்பாடுகள். ● நிறுவனங்களுக்குள்ளேயே பாதுகாப்பான நடைமுறைகள் மற்றும் கடுமையான கொள்கைகள் மீது ஒழுங்குமுறை கவனம் செலுத்துவதோடு வாடிக்கையாளர் நலன் பாதுகாக்கப்படுகிறது. ● சைபர் தாக்குதல்கள் நிதி அமைப்பு ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியம் உள்ளது.
முகாமைத்துவ அணுகுமுறை	● எங்கள் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை நாங்கள் தொடர்ந்து பலப்படுத்துகிறோம். ● எங்கள் இணையப் பாதுகாப்புத் திட்டம் மேம்பட்ட கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு உள்கட்டமைப்பில் பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் பாதிப்பு முகாமைத்துவ திறன்கள் என்பவற்றில் கவனம் செலுத்துகிறது. ● முறைமை மட்ட நிலைத்ததன்மையை வலுப்படுத்தவும், சைபர் தாக்குதல்களின் சாத்தியக்கூறுகள் மற்றும் மோசடி மற்றும் சமூகமோசடிகளின் தாக்கத்தை குறைக்கவும், பல்வேறு அரசு, சமூகம் மற்றும் தொழில் அமைப்புகளுடன் நாங்கள் ஒத்துழைக்கிறோம். ● வங்கி முழுவதும் எங்கள் தரவு முகாமைத்துவ கட்டமைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. எங்கள் வழிமுறைகள், கட்டிடக்கலை, கருவிகள், தரநிலைகள் மற்றும் அனைத்து வணிகப் பகுதிகளிலும் தரவின் தரம் மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றின் நடைமுறைகளை உறுதிசெய்து அவற்றை மேம்படுத்துவதை இது உள்ளடக்கியது. ● நமது கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு, தடுப்பு மற்றும் பாதுகாப்பு சிறந்த நடைமுறைகளில் தொடர் முதலீடு
இடர் வகை[2]	தொழிற்பாடு, நற்பெயர்
காலச் சட்டகம்[3]	குறுகிய காலம் முதல் நீண்டகாலம் வரை

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்

[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

பாதிக்கப்பட்ட குறுங்காலம் முதல் இடைக்காலம் வரையான மூலோபாய முன்னுரிமைகள்



பாதிக்கப்பட்ட மூலதனங்கள்



பாதிக்கப்பட்ட முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்



தொடர்புடைய அக்கறைதாரர்கள்



தொடர்புடைய GRI மற்றும் எல்லைகள்

404 பயிற்சி மற்றும் அறிவூட்டல் – உள்ளே
205 ஊழல் எதிர்ப்பு
418 வாடிக்கையாளர் தனியுரிமை – உள்ளே

நிதிசார் குற்றங்கள்

சமூகம்

சூழல்/விளக்கம்	வங்கியானது நிதி நிதி சார்ந்த குற்றங்களை (இலஞ்சம், ஊழல், மோசடி, பணம் மோசடியை எதிர்த்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்) எதிர்த்துப் போராடுதல் மற்றும் நிதி முறைமையின் ஒருமைப்பாட்டினை பாதுகாத்தல் போன்றன தொடர்பில் ஒரு முக்கியமான வகிபாகத்தினைக் கொண்டுள்ளது.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	நிதி சார்ந்த குற்றங்களை கண்டறியாது அல்லது தடுக்காது விடுவதானது எமது வாடிக்கையாளர்களுக்கும் எமது சமுதாயத்திற்கும் ஒரு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதோடு, அது வங்கிக்கு பொருள் சார்ந்த அபராதங்கள் மற்றும் தண்டனைகளை விளைவிக்கக் கூடும். தற்காலத்தில் நிதி சார்ந்த குற்றங்கள் தொடர்பில் உயர் இடர் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதோடு, இலகுவில் பாதிப்படையக் கூடிய மக்கள் கூட்டத்துடனும் வணிக நடவடிக்கைகளுடனும் கூடிய பல்வேறு நிதி சார்ந்த ஆதரவுப் பொதிகள் ஊடாக அத்தகைய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணமாகும்.
முக்கியத்துவத்தில் ஆண்டு வாரியான அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	➲ தொழில்நுட்ப முன்னேற்றங்களில் துரித கதியுடன் கூடிய மாற்றங்கள் ➲ புதிய முறைகளுடன் கூடிய டிஜிடல் குற்றங்கள் ➲ பொருளாதார அழுத்தங்களிலிருந்து எழக்கூடிய அதிக மோசடிகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய இடர்கள்
முகாமைத்துவ அணுகுமுறை	➲ மேம்படுத்தப்பட்ட நிதிக் குற்றம் பற்றிய கொள்கைகளும் நடைமுறைகளும் ➲ மேம்படுத்தப்பட்ட பரிவர்த்தனை கண்காணிப்பு முறைமைகள் மற்றும் நிதிக் குற்றங்களை கண்டறிவதற்கான செயன்முறைகள் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல். ➲ பிரதான முறைமைகள் மூலமாக வாடிக்கையாளர் தரவு ஒருமைப்பாட்டினை மேம்படுத்தும் நோக்கிலான பொறிமுறைகள் மற்றும் செயன்முறைகளை தாபித்தல். ➲ புதிய கருவிகளை விருத்தி செய்து வேலைச் சட்டகத்தினை அமுல்படுத்தக் கூடிய இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான கொள்கை மற்றும் நியமங்களை திருத்தியமைத்தல். ➲ விசேட நிதிக் குற்றம் பற்றிய இணக்கப்பாட்டுக் குழு உறுப்பினர்களில் ஒரு கணிசமான அதிகரிப்பு மற்றும் நிதிக் குற்றங்களைக் கண்டறிந்து அற்றைத் தடுக்கும் வகையிலான மேம்படுத்தப்பட்ட நிதிக் குற்றம் பற்றிய இணக்கப்பாடு தொடர்பிலான அறிவூட்டல் மற்றும் பயிற்சிகளை பணியாட்டொகுதியினருக்கு வழங்குதல்.
இடர் வகை[2]	தொழிற்பாடு, நற்பெயர், சந்தை
காலச் சட்டகம்[3]	குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரையானது

[1] **முக்கியத்துவத்தில் ஆண்டுக்கு ஆண்டான அதிகரிப்பு:** அதிகரித்தது/வளர்ந்து வரும்/நிலையானது/குறைக்கப்பட்டது
[2] **இடர் வகைகள்:** நிதி, மூலோபாயம், செயற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் நற்பெயர்
[3] **கால அளவு:** தேசிய சேமிப்பு வங்கியை கணிசமாக பாதிக்கும் என நாம் மதிப்பிடும் கால அளவையே ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும் குறிப்பிடுகின்றோம். இவ்வொருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலம் என்பது அடுத்துவரும் நிதியாண்டாகும் (2023 டிசம்பர் 31திகதியில் முடிவடையும்), நடுத்தர காலமானது 2025 டிசம்பர் 31திகதி வரையிலான காலப்பகுதியாகும். நீண்ட காலமானது 2025 டிசம்பர் மாதத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

பாதிக்கப்பட்ட குறுங்காலம் முதல் இடைக்காலம் வரையான மூலோபாய முன்னுரிமைகள்



பாதிக்கப்பட்ட மூலதனங்கள்



பாதிக்கப்பட்ட முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்



தொடர்புடைய அக்கறைதாரர்கள்



தொடர்புடைய GRI மற்றும் எல்லைகள்

205 ஊழல் எதிர்ப்பு – உள்ளேயும் வெளியேயும்
206 இணக்கப்பாட்டு எதிர் நடத்தை – உள்ளேயும் வெளியேயும்
418 வாடிக்கையாளர் தனியுரிமை – உள்ளே

கண்ணோட்டம்

ஒரு புதிய வங்கித் தொழில் சட்டம்

புதிய வங்கித் தொழில் சட்டமானது இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகம் செய்யப்பட உள்ள சட்டவாக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றது. இலங்கை மத்திய வங்கியானது, தற்போதுள்ள 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்தி அவற்றை சீரமைக்கும் நோக்கிலும் மற்றும் அதன் ஏற்பாடுகள் சர்வதேச நியமதரங்களுக்கு அமைய இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கிலும் மேற்படி புதிய வங்கித் தொழில் சட்டத்தினை இன்னமும் தொடர்ந்து வரைவு செய்து வருகின்றது. மேற்படி பிரேரிக்கப்பட்ட சட்டத்தின் மூலம், வங்கித் துறையுடன் சம்பந்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரங்கள் மேலும் மேம்படுத்தப்படவுள்ளதோடு, ஒரு கூட்டுறவு மிக்க ஆளுகை வேலைச்சட்டமும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

விநியோகிக்கப்பட்ட வங்கி உரிமங்களின் வகைகளுக்கான மாற்றங்கள், வங்கிக் கிளை அலுவலகங்கள் மற்றும் ஏனைய வங்கி நிலையங்களை தாபிப்பதற்கான ஒப்புதலை ஒழுங்கமைத்தல், நுகர்வோர் பாதுகாப்பு, காப்புறுதி வைப்பு, ஆளுகையை பலப்படுத்தல், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வங்கி அலகுகளின் இயக்கங்களை ஒரு தனியான வங்கித் தொழிலின் கீழ் கூட்டிணைத்தல், மற்றும் தீர்மானம், அமுலாக்கம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேம்படுத்தல் போன்ற அம்சங்களை தற்போதைய பிரேரணைகள் உள்ளடக்குகின்றன. மேற்படி பிரேரிக்கப்பட்ட சட்டமானது, கொழும்புத் துறைமுக நகரத்தினுள் வரவுள்ள கொழும்பு சர்வதேச நிதி நிலையத்தில் அமையப்பெறும் வங்கிகளின் வங்கித் தொழிலுக்கான உரிமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை கையாளுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நுண்பொருளாதாரம் மற்றும் கடன் ஒழுங்குறுத்துகைச் சட்டம்

இலங்கை மத்திய வங்கியானது, "நுண்பொருளாதாரம் மற்றும் கடன் ஒழுங்குறுத்துகைச் சட்டம்" எனும் பெயரிலான ஒரு புதிய சட்டவாக்கத்தினை பூர்த்தி செய்யும் படிமுறைகளை முன்னெடுத்துள்ளது. இது உரிமம் பெற்ற நுண் பொருளாதார நிறுவனங்கள் தொடர்பான ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகத்தினை மேம்படுத்த உள்ளதோடு, நாட்டின் கடன் வழங்கும் வணிக நடவடிக்கைக்கான ஒரு புதிய ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டத்தினையும் அறிமுகம் செய்ய உள்ளது. இந்த வரைவுச் சட்டமானது தற்போதுள்ள 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண் நிதியளிப்புச் சட்டத்தினை இரத்துச் செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளதோடு, ஒரு கடன் ஒழுங்குறுத்துகை அதிகாரசபையினை (CRA) தாபிப்பதற்குமானதாகும். மேலும், இந்த புதிய சட்டமானது கடன் வழங்குதல் மற்றும் நுண் பொருளாதார வணிக நடவடிக்கைகளுக்கான ஒரு ஒழுங்குறுத்துகை மற்றும் மேற்பார்வை வேலைச்சட்டகத்தினை பிரேரிக்கின்ற அதேவேளை, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆளுகைக் கோட்பாடுகளுக்கான சட்டவாக்க வேலைச்சட்டகத்தினை மேம்படுத்துகின்றது.

ஏனையவை

கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, பாதுகாப்பில் சமரசம் இன்றி நெகிழ்வுத் தன்மையினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் வகையில் வங்கியானது அணுகல் முகாமைத்துவம் சார்ந்த சில நெறிமுறைகள் மற்றும் கொள்கைகளை மாற்றியமைக்கக் கூடும். வங்கித் துறையானது அதன் தகவல் தொழில்நுட்ப இயக்கங்களின் ஒரு பாகத்தினை பொது கிளவுட் சேமிப்பகச் சூழமைவிற்கு நகர்த்தக் கூடும். அனேக வங்கிகள் தத்தமது பிரத்தியேக கிளவுட் சேமிப்பகத்தினையே தற்போது உபயோகித்து வருகின்றன. இருப்பினும், ஒரு முடக்கம் மற்றும் இது போன்ற ஏனைய அவசர நிலைமைகளின் போது, இவற்றைப் பராமரிப்பது ஒரு சவால் மிக்கதாக மாறக் கூடும். எதிர்காலத்தில் இணையப் பாதுகாப்பானது வங்கிகளுக்கான ஒரு பிரதான முன்னுரிமை மிக்க விடயமாக விளங்கக் கூடும். வங்கிகளின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு மீதான ஒழுங்குவிதிகள் எதிர்காலத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டிருக்க முடியும்.

மேலும், உரிமம் பெற்ற வங்கிகளையும் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களையும், அவர்களது ஐந்தொகைக் குறிப்புக்களிலிருந்து பாதகமான/மதிப்பிடக் கடினமான சொத்துக்களை தவிர்ப்பதற்கு சட்ட பூர்வமாக அனுமதிக்கும் நோக்கில், நிதிச் சொத்து முகாமைத்துவக் கம்பனிகள் பற்றிய புதிய சட்டம் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

5 காலநிலை மாற்றத்தினையும் நிலைபெறுதன்மையினையும் முகாமைசெய்தல்

காலநிலை மாற்றமானது உலகளவில் முக்கிய கரிசனையொன்றாக விளங்குவதுடன், சிறிய தீவான அத்துடன் அபிவிருத்தி அடைந்து வரும் தேசமொன்றாக இலங்கை, இயற்கை அனர்த்தங்களை விளைவிக்கின்ற, அனேகமாக அனைத்து பொருளாதர துறைகளையும் பாதிக்கின்ற அத்துடன் மக்களுக்கு அவர்களது வாழ்வாதாரங்களை இல்லாமல் செய்கின்ற கடுமையான வானிலை நிலைமைகள் போன்ற அதன் பாதகமான தாக்கங்களுக்கு அதிகம் பாதிக்கப்படக்கூடிய தன்மை மிக்கது. காலநிலையுடன் தொடர்புபட்ட அத்துடன் வேறு சூழல் மற்றும் சமூக இடர்நேர்வுகளுக்கும் நிதியியல் துறை ஆட்படுகின்றது, நிதிசார் மற்றும் நன்மதிப்புசார்ந்த இடர்நேர்வுகளை தணிப்பதற்கு அக்கறைதாரர்கள் மற்றும் ஒழுங்கமுறைப்படுத்தல் என்ற இருவகையான நோக்குகளிலிருந்தும் இது அவசரமாக தீர்க்கப்படவேண்டியுள்ளது.

காலநிலை மாற்றத்துடன் போராடுவதற்கான இலங்கையின் கடமைப்பொறுப்புக்கள்

உலகப் பொருளாதார மன்றத்தின் 2023 உலகளாவிய இடர்நேர்வுகள் அறிக்கையானது கண்டங்களின் சனத்தொகையின் வாழ்வாதாரங்களையும் எதிர்காலங்களையும் அச்சுறுத்தகின்ற இடர்நேர்வுகள் பற்றி அட்டவணைப்படுத்துகின்றது. இடம்பெற்று வருகின்ற பொருளாதார மந்தம், துரிதமாக அதிகரிக்கின்ற தொழிலின்மை மட்டங்கள், இன்றியமையாத உட்கட்மைப்பில் குறைபாடு அல்லது பொதுவான செயலிழப்பு, அதிகரிக்கின்ற வறுமை, சமூக இணக்கப்பாட்டில் பிளவு அத்துடன் மேலும் சமத்துவம் மற்றும் வசதிக்குட்படுதலில் பாரிய இடைவெளிகளை தோற்றுவிப்பதற்கு நோய்த்தொற்றுக்குப் பிந்திய மீட்சியானது விலகுவதற்கான வாய்ப்பு போன்ற பல வகையாக இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், நலிவடையக்கூடிய பொருளாதாரங்களை பாதுகாத்து மக்களுக்கான சமவாய்ப்புகளை தோற்றுவிக்கக் கூடியதான விதத்தில் காலநிலை மாற்ற இடர்நேர்வுகளை தணிப்பதற்கான கூட்டுமுயற்சியாக இருப்பதற்கான தேவையே மிகவும் அழுத்துகின்ற இடர்நேர்வாக விளங்குகின்றது.

காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு சமவாயத்திற்கு அதன் இற்றைப்படுத்தப்பட்ட தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDC) இலங்கை சுற்றாடல் அமைச்சு 2021 இல் சமர்ப்பித்தது. தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளானது, விவசாயம், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, சுகாதாரம், நீர், உயிர்பல்வகைமை, கரையோர மற்றும் கடல்சார், சுற்றுலா, நகரத்திட்டமிடல் மற்றும் மனித குடியிருப்பு துறைகளில் முக்கிய பாதிக்கப்படுதன்மைகளை எடுத்துக்காட்டுகின்றது. நிலைபெறத்தக்க அபிவிருத்தி முயற்சிகளினூடாக குறைவான காபன் பாதையொன்றுக்கான அதன் கடமைப்பொறுப்புகளுக்கு இசைவாக காலநிலை மாற்றத்திற்கான அதன் பாதிக்கப்படும் தன்மைகளை நிவர்த்திசெய்வதற்கான நாட்டின் கடமைப்பொறுப்பினை இலங்கையின் தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் வலியுறுத்துகின்றன. 2030 அளவில் வனப் போர்வையினை 32 சதவீதமாக அதிகரிப்பதற்கும் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தினை 14.5 சதவீதத்தால் குறைக்கின்ற அதேவேளை மின்சார உற்பத்தியில் 70 சதவீத மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியை அடைவதற்கும் 2030 இலக்குகளை நிர்ணயிப்பதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றது. 2050 அளவில் காபன் நடுநிலை பொருளாதாரமொன்றாக இலங்கை உருவாவதற்கான வழியினை இத்திட்டம் ஏற்பாடுசெய்கின்றது. இலங்கையின் வங்கியென்ற ரீதியில், பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரங்களை பாதுகாக்கின்ற அதேவேளை, அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை உருவாக்குகின்ற காலநிலையுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளை தீர்ப்பதற்கான முக்கியத்துவத்தினையும், பசுமைப் பொருளாதாரத்திற்கான மாறுதலை அடைவதற்கான கூட்டுமுயற்சிக்கான தேவையினையும் வங்கி அங்கீகரிக்கின்றது.

வங்கி மீதான ஒழுங்குபடுத்தல் மற்றும் வர்த்தகரீதியான அழுத்தங்களும்

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்கும் உலகளாவிய நிலைபெறுதன்மை நிகழ்ச்சிநிரலுடன் அணிசேர்வதற்கும் வங்கிகள் அதிகரித்த ஒழுங்குபடுத்தல் மற்றும் வர்த்தக ரீதியான அழுத்தங்களை எதிர்கொள்கின்றன. காலநிலை - இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான புதிய விதிகளை முறைமையாக்குதல், அழுத்தப்பரிசோதனைகளை செயலாற்றுதல், சுற்றாடல், சமூக மற்றும் நிறுவன ஆளுகைக் காரணிகளை முதலீட்டு தீர்மானங்களுக்குள் கூட்டிணைத்தல் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. நிலைபேறான நிதி வழங்கல்கள் மற்றும் மூலதன ஒதுக்கீடுகள், கடன் அனுமதிகள், சொத்துப்பட்டியல் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றினுள் காலநிலை காரணிகளை கூட்டிணைத்தல் என்பவற்றுக்கான வர்த்தக ரீதியான அழுத்தங்களுக்கும் வங்கிகள் முகங்கொடுக்கின்றன.

எதிர்கால பொருளாதாரங்களை வடிவமைப்பதில் நிதியியல் துறை இன்றியமையாத பங்காற்றுவதுடன் அதன் மூலதன ஒதுக்கீட்டுத் தீர்மானங்களே நிலைபேறான பொருளாதாரத்திற்கான மாறுதல் துரிதப்படுத்தப்பட வேண்டுமா என்பதனை நிர்ணயிக்கின்றன. வகிபாகத்தின் இப்பொறுப்பினை நிறைவுசெய்வதற்கு இத்துறை, அபாயமிக்க கைத்தொழில்களில் முதலீடுகளை குறைத்து, நிலைபேறான நிதி நடவடிக்கையினை அதிகரித்து, உயிர்சுவட்டு எரிபொருட்களிலிருந்து தவிர்ந்து, பொறுப்புமிக்க முதலீட்டுடன் அணிசேர்கின்ற தீவிரமான தீர்மானங்களை மேற்கொண்டு, காலநிலை தொடர்புபட்ட நிதியியல் வெளிப்படுத்தல்கள் மீதான செயலணியுடன் அணிசேர்ந்த வெளிப்படைதன்மை மிக்க வெளிப்படுத்தல் மற்றும் அறிக்கையிடுதலை உறுதிசெய்ய வேண்டும். பூச்சிய மட்டங்களுக்கு பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தினை குறைக்கும் பயணங்களுக்கு நிதியியல் சேவை நிறுவனங்கள் அர்ப்பணித்துள்ளதுடன் காலநிலை தணிப்பு தீர்மானங்களை பின்பற்றுதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றுக்கு நிதியங்களை வழங்குவதற்கு வாக்குறுதியளித்துள்ளன.

பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான தாக்கங்கள்

சமூகங்களின் நிலைபெறுதன்மை மீது காலநிலை மாற்றத்தின் சவால்களின் காரணமாக வங்கிகள் கொடுகடன் இடர்நேர்வுகளை எதிர்கொள்கின்றன. ஆகையினால், வங்கிகள், நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுடன் அணிசேர்வதற்கான நிலைபேறான நடத்தைகளை கடைப்பிடித்து, அரசாங்க ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுக வேண்டியுள்ளதுடன் அவ்வாறு செய்வதற்கு தவறுதல், நற்பெயர்சார்ந்த இடர்நேர்வுக்கு இட்டுச்செல்லலாம். நோக்கத்தை முன்னிலையாக கொண்ட வங்கி என்ற ரீதியில் சமூக மற்றும் சுற்றாடல் கரிசனைகளை நாம் எமது பெறுமதி உருவாக்க மாதிரியினுள் ஒன்றிணைத்து எமது நாடு குறைவான காபன் பொருளாதாரத்திற்கு மாறுதலடைவதில் முக்கிய பங்காற்றுகின்ற அதேவேளை சமூக மாற்றங்களை கரிசனையில் கொள்கின்றோம். சுற்றாடல், சமூக மற்றும் நிறுவன ஆளுகை இடர்நேர்வுகளும் வாய்ப்புகளும் நிலைபெறுதன்மையினை உறுதி செய்வதற்கு அத்தியாவசியமானதுடன் உள்நாட்டு சமூக பொருளாதார பின்னணிக்கும் காலநிலை பாதிக்கப்படும் தன்மைக்கும் உணர்வுத்தன்மை மிக்க விதத்தில் வங்கி காலநிலை மாற்றத்தினை கையாளுவதற்கு அர்ப்பணிப்புடன் காணப்படுகிறது.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

இடர்நேர்வும் வாய்ப்புகளும்

எமது இடர் நேர்வுகள்

- மிகவும் அவ்வப்போதான அத்துடன் கடுமையான வானிலை நிகழ்வுகள் மற்றும் காலநிலை விதங்களில் நீண்ட கால மாறுதல்கள் என்பவற்றுக்கு மத்தியில் பிணை உறுதியாக வைத்திருக்கப்படுபவை உள்ளடங்கலாக வங்கியின் சொத்துக்களின் சேதஇழப்பு.
- போதுமையற்ற காலநிலை கடப்பாடுகள் மற்றும் சுற்றாடலுக்கு சேதம் ஏற்படுத்துகின்ற/மனித உரிமைகளை மீறுகின்ற நிறுவனங்களுக்கு நிதியிடுதல் அல்லது அவற்றுடன் பங்குடமை சேர்தல் காரணமாக வங்கியின் நிதியியல் செயலாற்றுகை மற்றும் நற்பெயர் மீதான எதிர்மறையான தாக்கம்.
- வங்கிக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் காலநிலை மாற்றத்தின் எதிர்மறையான தாக்கங்களுடன் தொடர்புடைய அதிகரித்த செலவுகள் மற்றும் பொருளாதார இழப்புகள்.

எமது வாய்ப்புகள்

- போட்டி அனுகூலத்தினை உருவாக்குவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கு ஆதரவளித்தல்.
- நிறுவனசார் வாடிக்கையாளர்கள், நிறுவனங்கள் மற்றும் சிறிய தொழில்களுக்கு குறைந்த காபன் பயணப்பாதையினை பின்பற்றி முதலீட்டு மற்றும் நிதியிடல் தீர்வுகளை உருவாக்குதல்.
- காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை செயலாக்கத்துடன் முகாமைசெய்வதற்கான இயலுமை மற்றும் குறைவான சக்தியினை நுகர்கின்ற அல்லது எதிர்கால சூழல் அத்துடன் சமூக பிரச்சினைகளுக்கு தயாராகின்ற பொருளாதாரம் ஒன்றுக்கான தமது நடத்தையினை பின்பற்றுவதற்கு எமது வாடிக்கையாளர்களுக்கு புதிய தீர்வுகளை உருவாக்குதல்.
- புதிய பொருளாதார மாதிரிகளுக்கு பதிலிறுத்தி நிதியியல் புத்தாக்கம் (குறிப்பாக நிலைபேறான விவசாயம்).
- நிலைபேறான நிதி வழங்கலை உருவாக்குதல் அத்துடன் மூலதன ஒதுக்கீடுகள், கடன் அனுமதிகள் சொத்துப்பட்டியல் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றினுள் காலநிலை காரணிகளை கூட்டிணைத்தல்.

- குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு
- குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை வாய்ப்புகளிலான அதிகரிப்பு
- குறுங்காலம் முதல் இடைக் காலம் வரை இடர்களிலான அதிகரிப்பு
- குறுங்காலம் முதல் நீண்டகாலம் வரை இடர்களிலான அதிகரிப்பு
- 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எந்த மாற்றமும் இல்லை.

இடர்நேர்வுகளை தணிப்பதற்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளவும் எமது அணுகுமுறை

- வர்த்தக ரீதியாக வளம் பெறத்தக்க முதலீடுகளுக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை சமகாலத்தில் சமூக மற்றும் சுற்றாடல் சவால்களை தீர்த்து நாட்டின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளையும் 27ஆவது சமவாய உச்சிமாநாட்டின் (COP 27) வெளிவருவிளைவுகளை அடைவதற்கு உதவுதல்.
- எமது சேவை நாடிகளின் தேவைகள், வழங்கப்பட்ட உபாய வாய்ப்புகளின் அளவு, இத்துறையில் எமது போட்டி அநுகூலத்தை தொடர்ந்தும் பெறுவதற்கான எமது விருப்பம் என்பவற்றுடன் இசையும் விதத்தில் குறைவான காபன் பொருளாதாரத்தினுள் நிலைபெறத்தக்க அபிவிருத்தி நிதியினை மாறுதலடையச் செய்வதன் மீது அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்.
- எமது சுற்றாடல், சமூக மற்றும் நிறுவன ஆளுகைக் கொள்கைகளையும் செயன்முறைகளையும் வலுப்படுத்தல் அத்துடன் அவற்றை செயல்திறன் வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுத்தி எமது முன்னேற்றத்தை வெளிப்படுத்துவதை உறுதி செய்தல்.
- காலநிலை மாற்றத்துடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகளையும் வாய்ப்புகளையும் முகாமைசெய்வதற்கு எமது உபாயம், கொள்கைகள், செயன்முறைகள், உற்பத்திகள் மற்றம் சேவைகளை வலுப்படுத்தல்.

செயற்பாட்டிலுள்ள ஆளுகை

இடர்நேர்வின் உயர்வையும் சுற்றாடல் மற்றும் சமூக இடர்நேர்வுக் முகாமைத்தவ கட்டமைப்பொன்றுக்கான நிலைபெறுதன்மைக் கொள்கைகளையும் நிலைபெறுதன்மை இடர்நேர்வில் அதிகரிப்பையும் 2018இல் சபை அனுமதித்தது. இது 2022இல் மீளாய்வுசெய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வங்கியின் தொழிற்பாடுகளிலிருந்து நிலைபெறுதன்மை இடர்நேர்வுத் தாக்கத்தினை சபை தொடர்ந்தும் கண்காணிப்பதுடன் பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான தாக்கத்தினை குறைப்பதற்கு சகல வழிமுறைகளையும் எடுக்கின்றது.

தொடர்புடைய பொருண்மிய விடயங்கள்

எமது காபன் சுவடுகளை முகாமைசெய்தல்

பூமி

சூழல்/வீளக்கம்	வறட்சி, காட்டுத் தீ, வெள்ளப்பெருக்கு, சூறாவளி போன்ற அவ்வவ்போதான மற்றும் கடுமையான வானிலை நிகழ்வுகளை இலங்கை அனுபவித்து வருகின்றதை கருத்திற்கொண்டு வங்கியின் நீண்ட கால நிலைபெறத்தக்க பெறுமதி உருவாக்கத்தினை உறுதிசெய்வதற்கு எமது உயிர்ச்சூழலியல் சுவடுகளை குறைத்து எமது கோளை பாதுகாப்பதன் வாயிலாக குறைந்த காபன் பொருளாதாரமொன்றினை கட்டியெழுப்பதலை நோக்கி பங்களித்தல்.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	எமது நாளாந்த தொழிற்பாடுகளில் எமது அக்கறைதாரர்களுக்காக புவியினை பேணிக்காத்து சாத்தியமான நீண்டகால பெறுபேறுகளை உருவாக்குவது வங்கியின் நீண்ட கால நிலைபெறுதன்மைக்கு அத்தியாவசியமானதாகும். காலநிலை மாற்றத்தின் ஒன்றுடனொன்று இணையப்பெற்ற அத்துடன் நீடித்திருக்கின்ற தாக்கங்களானவை, வாடிக்கையாளர்கள் தமது காபன் தாக்கத்தினை குறைப்பதற்கான நடத்தைகளை நோக்கி நகரும்போது எதிர்கால தொழிற்படுத்தல் மாதிரிகள் தொடர்ந்தும் தொடர்புடையதாக இருத்தலை உறுதிசெய்யவும் காலநிலை மாற்றத்தினாலேற்படும் தாக்கத்தினை குறைப்பதற்கும் தொழில்கள் மீதான அழுத்தங்களை இடம்பெறச் செய்கின்றன.
முக்கியத்துவத்தில் வருடா வருட (YoY) அதிகரிப்பு[1]	அதிகரித்திருந்தது
அதிகரித்ததற்கான காரணங்கள்	• மீள்சுழற்சிப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான துரிதப்படுத்தல் என்பது அதேயளவான வெளியீட்டு மட்டத்திற்கு குறைந்த சக்தி தேவைகள் என்பதாகும். • அதிகரித்த கட்டணங்களும் சக்தி மூலங்கள் குறைவாக கிடைக்கப்பெறுகின்றமையும் (நீர், எரிபொருள், மின்சாரம் போன்றன) இடைத்தடங்களற்ற தொழில் தொடர்ச்சி மீது தாக்கம் செலுத்துகின்றன. • அதிகரிக்கின்ற பாரியளவிலான வானிலை நிகழ்வுகள் நேரிடக்கூடிய தன்மை வலுவான தணிப்பு பின்பற்றல் வழிமுறைகளை நோக்கி உலகளாவிய நடவடிக்கைகளை மாற்றுகின்றன. • குறைவான காபன் பொருளாதாரங்களை உருவாக்குவதை நோக்கிய அரசாங்கத்தின் முயற்சிகள்.
முகாமைத்துவ அணுகுமுறை	• கடதாசி, நீர், சக்தி நுகர்வை குறைத்து அத்துடன் வினைத்திறன்மிக்க கழிவு முகாமைத்துவம் மீது அறிவுசார்ந்த கவனம்செலுத்தி எமது மூலவளங்களை முகாமைசெய்தல். • எமது குறிக்கோள்களை அரசாங்கத்தின் சொந்த இலக்குகளுடனும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுடனும் அணிசேர்த்தல். • இயற்கை மூலவளங்களை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்துவதுடன் இணைந்த பசுமைக் கட்டிட எண்ணக்கருவூடாக பாதகமான சூழல் தாக்கங்களை குறைத்தல். • பசுமைத் தொழில்நுட்பத்தில் முதலிடுவதில் அக்கறைதாரர்களின் தேவைகளையும் கரிசனைகளையும் புரிந்துகொள்வதற்கு தொடர்ச்சியான ஈடுபாடு. • எமது பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை பதிவுசெய்தல் மற்றும் எமது காபன் சுவடுகளை தொடர்ந்தும் அவதானித்து அறிக்கையிடுதல்
இடர்நேர்வு வகை[2]	உபாய, தொழிற்பாட்டு, நற்பெயர்சார்
காலச் சட்டகம்[3]	குறுகிய தொடக்கம் நீண்டகாலம்

[1] ஆண்டு வாரியான முக்கியத்துவம் அதிகரிப்பு: அதிகரித்தது/வளர்ந்து வருகிறது/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] இடர் வகைகள்: நிதி, மூலோபாயம், செயல்பாட்டு, கடன், சந்தை, திரவநிலை மற்றும் நற்பெயர்.

[3] காலச்சட்டகம்: ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும், அது தே.தே.வங்கியை கணிசமாக பாதிக்கும் என்று மதிப்பிடும் காலவரையறையைக் குறிப்பிடுகிறோம். இந்த ஒருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலமானது அடுத்த நிதியாண்டாகும் (31 டிசம்பர் 2023 உடன் முடிவடைகிறது), நடுத்தர காலமானது 31 டிசம்பர் 2025 வரையிலான காலப்பகுதியாகும், மேலும் நீண்ட காலமானது டிசம்பர் 2025க்கு அப்பாற்பட்டதாகும்.

பொறுப்புமிக்க நிதியிடல்

பூமி

சூழல்/வீளக்கம்	சுற்றாடல் மற்றும் சமூகம் என்பன மீது எதிர்மறையான தாக்கத்தினை கொண்டிராத உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு நிலைபெறத்தக்க வங்கித்தொழில் மற்றும் நிதி உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்குதல்.
அது ஏன் பொருண்மியமாகவுள்ளது	நிதித்துறையின் மூலதன ஒதுக்கீட்டு தீர்மானங்கள் எதிர்கால பொருளாதாரங்களின் வடிவத்தினை நிர்ணயிக்கின்றன. வங்கி மூலம் நிதியிடப்படுகின்ற கைத்தொழில்களின் அல்லது கருத்திட்டங்களின் வளர்ச்சியானது அது தொழிற்படுகின்ற சூழல் மீதும் சமூகம் மீதும் அத்துடன் நாளாந்த வாழ்வின் மீதும் தாக்கத்தினைக் கொண்டிருக்கலாம். எமது வாடிக்கையாளர்களின் நீண்ட கால சௌபாக்கியத்திலும் வளர்ச்சியிலும் இது முக்கிய கூறாகும்.
முக்கியத்துவத்தில் ஆண்டுக்காண்டு அதிகரிப்பு	அதிகரித்துள்ளது.

நாம் தொழிற்படும் முறையை வடிவமைக்கும் பாரிய போக்குகள்

அதிகரிப்பிற்கான காரணங்கள்	● தூய மற்றும் மீள்சுழற்சிப் பொருளாதாரத்திற்கான தேவையினை துரிதப்படுத்தி 2030 மற்றும் 2050 ஆண்டுக்கான காலநிலை இலக்கினை அதிகரித்தல். ● காலநிலை மாற்ற இடர்நேர்வுகளை தணிப்பதற்கு உதவுகின்ற சுற்றாடல் ரீதியாக வளம்பெறத்தக்க கருத்திட்டங்களுக்காக நிதியிடல் கிடைக்கப்பெறச் செய்வதை நோக்கிய உலகளாவிய நடவடிக்கையினை மாற்றுகின்ற அடிக்கடி நிகழக்கூடிய அத்துடன் மிகத் தீவிரமான வானிலை நிகழ்வுகள் அதிகரித்தல். ● உலகளாவிய நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிகளிப்புகளுடன் அணிசேர்கின்ற கொள்கை.
முகாமைத்துவ அணுகுமுறை	● பாரிய கைத்தொழில்களுக்கு/உட்கட்டமைப்பு சார்ந்த நீண்டகால கருத்திட்டங்களுக்கு சுற்றாடல், சமூக மற்றும் நிறுவன ஆளுகை இடர்நேர்வுகளை மதிப்பிடுதல். ● சுற்றாடல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மீது எதிர்மறையான தாக்கத்தை கொண்டிருக்கின்ற கருத்திட்டங்களுக்கு நிதியிடுவதை தவிர்த்தல். ● குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு மாறுதலடைவதை செலுத்துகின்ற பசுமை மற்றும் நிலைபெறுதன்மை என்பவற்றுடன் இணையப்பெற்ற கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல். ● உற்பத்திகளின் மற்றும் சேவைகளின் எமது வகைகளை கருத்திற்கொண்டு, எமது உரிய விழிப்புக்கான செயன்முறைகளை வலுப்படுத்துவதன் மூலம் காலநிலை மாற்றத்துக்கான உபாய பதிலிறுப்புகளை விருத்திசெய்தல் அத்துடன் குறைந்த காபன் பொருளாதாரத்திற்கு மாறுதலடைவதற்கு ஆதரவளிப்பதற்கு உள்ளக மற்றும் வாடிக்கையார் இயலளகளை கட்டியெழுப்புதல். ● பசுமை தொழில்நுட்பத்தில் முதலிடுவதில் பங்குதாரர் தேவைகளையும் கரிசனைகளையும் புரிந்துகொள்வதற்கு தொடர்ச்சியான ஈடுபாடு. ● அரசாங்கத்தின் சொந்த இலக்குகளுடனும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுடனும் எமது குறிக்கொள்களை அணிசேர்த்தல்.
ஆபத்து வகை[2]	உபாய, தொழிற்பாட்டு, நற்பெயர்சார்
காலச் சட்டகம்[3]	குறுகிய தொடக்கம் நீண்டகாலம்

[1] ஆண்டு வாரியான முக்கியத்துவம் அதிகரிப்பு: அதிகரித்தது/வளர்ந்து வருகிறது/நிலையானது/குறைக்கப்பட்டது

[2] இடர் வகைகள்: நிதி, மூலோபாயம், செயல்பாட்டு, கடன், சந்தை, திரவநிலை மற்றும் நற்பெயர்.

[3] காலச்சட்டகம்: ஒவ்வொரு முக்கிய வெளிப்புறக் காரணிக்கும், அது தே.சே.வங்கியை கணிசமாக பாதிக்கும் என்று மதிப்பிடும் காலவரையறையைக் குறிப்பிடுகிறோம். இந்த ஒருங்கிணைந்த அறிக்கைக்கு, குறுகிய காலமானது அடுத்த நிதியாண்டாகும் (31 டிசம்பர் 2023 உடன் முடிவடைகிறது), நடுத்தர காலமானது 31 டிசம்பர் 2025 வரையிலான காலப்பகுதியாகும், மேலும் நீண்ட காலமானது டிசம்பர் 2025க்கு அப்பாற்பட்டதாகும்.

பாதிக்கப்பட்ட குறுங்காலம் முதல் இடைக்காலம் வரையான மூலோபாய முன்னுரிமைகள்



பாதிக்கப்பட்ட முலதனங்கள்



பாதிக்கப்பட்ட முதல்நிலை ஐ.நா.நி.அ. இலக்குகள்



தொடர்புடைய அக்கறைதாரர்கள்



தொடர்புடைய GRI மற்றும் எல்லைகள்

302 சக்தி – உள்ளக வெளியக
303 நீர் – உள்ளக வெளியக
203 நேரடியற்ற பொருளாதார தாக்கங்கள்

பாதிக்கப்பட்ட இரண்டாம் நிலை ஐ.நா.நி.அ.இலக்குகள்



எதிர்கால வாய்ப்புகள்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்கு காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றை மையக் கொள்கை நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பினுள் கூட்டிணைப்பதன் முக்கியத்தின் புரிதலுடன், இலங்கையில் காலநிலை மாற்றத்துடன் போராடுவதற்கு காலநிலை தாக்குப்பிடிக்கும் கருத்திட்டங்களுக்கான நிதியிடலை ஊக்குவிப்பதற்கு நிதியியல் முறைமையினை ஊக்குவித்து இலங்கை மத்திய வங்கியினால் "நிலைபேறான நிதிக்கான வழிகாட்டல்" தொடங்கி வைக்கப்பட்டது. நிதி நிறுவனங்கள் மூலம் நிதியளிக்கப்படுகின்ற கருத்திட்டங்களுடன் இணையப்பெற்ற அவற்றின் சுற்றாடல், சமூக மற்றும் நிறுவன ஆளுகை இடர்நேர்வுகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் முகாமைசெய்வதற்கு நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் பரந்த நோக்கொன்றினை இவ்வழிகாட்டல் வழங்குகின்றது. பசுமையான, காலநிலை, சிநேகம்மிக்க மற்றும் சமூக ரீதியாக வசதிக்குட்படுத்துகின்றவையாக காணப்படுகின்ற வியாபாரங்களுக்கு உதவியளிப்பதையும் இது ஊக்குவிக்கின்றது. மிகவும் தாக்குப்பிடிக்கவல்ல அத்துடன் நிலைபேறான பசுமைப் பொருளாதாரம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்கான நிதியியல் துறையின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கும் இவ்வழிகாட்டல் முனைகின்றது.

தொழிற்துறை கவரும்தன்மையும் போட்டித்தன்மையும்

உரு 6


இலங்கையின் வங்கித் தொழிற்துறையின் முக்கியமான செயற்பாட்டாளராக விளங்கும் பொருட்டு மைக்கல் போட்டர் மூலம் உருவாக்கப்பட்ட ஐந்து சக்தி பகுப்பாய்வினை நாம் உபயோகப்படுத்தினோம். இம்முறையானது எமது தொழிற்துறை சூழலுக்கு முக்கியமாக விளங்குகின்ற வெளிவாரி காரணிகளை இனங்கண்டு எமது வங்கி எதிர்கொள்கின்ற முக்கிய பிரச்சினைகளை தீர்மானித்து, உபாய முன்னுரிமைகளை நிறுவுவதற்கு எம்மை இயலச்செய்கின்றது. இக்கரிசனைகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் தீர்ப்பதற்கான எமது இயலுமை வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை பேணுவதில் இன்றியமையாததாகும். வங்கித் தொழிற்துறை சூழலில் ஐந்து சக்திகளினதும் தீவிரத் தன்மைகள் கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

1 புதிதாக நுழைபவர்களிடமிருந்துவரும் அச்சுறுத்தல்

புதிய செயற்பாட்டாளர்கள்

புதிய ஒழுங்குவிதிகள் மற்றும் இணங்குவித்தல் தேவைப்பாடுகள்

- வங்கியொன்றினை கூட்டிணைப்பதற்கு உரிமத்தினை பெற்றுக்கொள்வதில் உயர்வான மூலதன தேவைப்பாடு சவால்மிக்கதாகும்.
- பாசல் III தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு உயர்வான முதலீடுகளுக்கான தேவை
- மக்கள், தகவல்தொழில்நுட்பம் மற்றும் விநியோக வழிகள் என்பவற்றில் உயர்வான மூலதன முதலீடுகளுக்கான தேவைப்பாடு
- ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இணங்குவித்தல் நோக்குகளில் அதிகரிக்கின்ற தேவைப்பாடுகள்



2 வாடிக்கையாளர்களின் பேரம்பேசும் சக்தி

ஏற்கனவேயுள்ள மற்றும் சாத்தியமான வாடிக்கையாளர்கள்

- தனிப்பட்ட தேவைக்கேற்றவாறான அத்துடன் உயர்தரமிக்க சேவைக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து அதிகரிக்கின்ற கேள்வி
- சந்தையில் ஒரே மாதிரியான உற்பத்திகள் மற்றும் சேவைகள் கிடைக்கப் பெறுகின்றமை
- பாரிய செலவுகளை ஏற்காது வாடிக்கையாளர்கள் போட்டியாளர்களிடம் அத்துடன் பிரதியீடுகளிடம் செல்வதற்கு இயலுமானவர்களாக உள்ளனர்.
- புதிய தலைமுறை வாடிக்கையாளரகளிடம் விசுவாசம் இல்லாதுள்ளது.
- அதிக சொத்துக்களையுடைய வாடிக்கையாளர்கள் குறைவான வீதங்களை பேரம்பேசுவதற்கு இயலுமையைக் கொண்டுள்ளனர்.

3 வழங்குநர்களின் பேரம் பசும் சக்தி

பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்

ஊழியர்கள்

- உயர்வான ஆதாயங்கள் மற்றும் குறைவான இடரநேர்வுகளுக்கான வைப்பாளர்களிடமிருந்தான கேள்வி
- எண்ணியல் சேவை வழங்குநர்கள் மீது உயர்ந்தளவில் தங்கியிருக்கின்றமை
- தொழிற்சங்கங்கள் ஊடாக ஊழியர்களின் உயர்வான பேரம்பேசும் சக்தி
- காகிதாதிகள் வழங்குநர்கள், வெளியிலிருந்து சேவை பெறுதல் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் போன்ற வேறு வழங்குநர்கள் மீது குறைவாக தங்கியிருத்தல்

4 போட்டி மனப்பான்மை

- தொழிற்துறையில் செயற்பாட்டாளர்களின் அதிக எண்ணிக்கை (24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 06 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்)
- வாடிக்கையாளர்கள் குறைவான செலவைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் ஒரே மாதிரியான உற்பத்திகள் சேவைகளை வழங்குதல் காரணமாக செயற்பாட்டாளர் மத்தியில் தீவிரப் போட்டி

5 பிரதியீடுகளின் அச்சுறுத்தல்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள்

கொடுப்பனவு வசதி வழங்குநர்கள்

- வினைத்திறன்மிக்க கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்குகின்ற (நிதி தொழில்நுட்ப கம்பனிகள்) தொலைத்தொடர்பு கம்பனிகள் ஏனைய கொடுப்பனவு வழங்குநர்களிடமிருந்து அதிகரிக்கின்ற அச்சுறுத்தல்
- விலையிடல், தரம் அல்லது பண்புகள் என்பவற்றில் வேறுபாடின்றி குறைவான செலவில் ஒரே மாதிரியான உற்பத்திகள் கிடைக்கப்பெறுகின்றமை
- வழங்கப்படும் உற்பத்திகளின் வட்டி வீதங்களில் உள்ள மாற்றங்களுக்கு வைப்பாளர்களும் கடன்பெறுநர்களும் உயர்வான உணர்வுத்தன்மை மிக்கவர்கள்

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

வங்கியின் வணிக தந்திரோபாயம் வலுவான அடிப்படை பெறுமதிகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது, இது முக்கிய இலக்குகளை அடைவதற்கு வரையறுக்கப்பட்ட மற்றும் பெறுமதிமிக்க வளங்களை ஒதுக்குவதை பிரதிபலிக்கும், அதே நேரத்தில் போட்டித்தன்மையை மேம்படுத்தி அனைத்து அக்கறைதாரர்களுக்கும் நிலைபேறான மற்றும் நேர்க்கணிய விளைவுகளை உருவாக்கும்.

ஒருங்கிணைந்த சிந்தனை

அணுகுமுறை மூலம் தந்திரோபாயங்களை அடைதல்

ஒவ்வொரு ஆண்டும், நமது சிந்தனைக்கு புத்துயிர் அளித்து, நாம் எங்கிருக்கிறோம், எங்கு செல்ல விரும்புகிறோம், நம் நோக்கத்தை அடைய நமக்குள் என்ன இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த திட்டமிடல் செயற்பாட்டில் ஈடுபடும், அதே நேரத்தில் நமது வெற்றிக்கு பங்களிக்கும் வெளிப்புற தொழிற்பாட்டு சூழலில் கவனம் செலுத்துகிறோம். எமது தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறை, எமது பலதரப்பட்ட அக்கறைதாரர்களுக்கு பெறுமதியை உருவாக்குவதுடன், மாறும் வணிகச் சூழலில் நம்மைத் தக்கவைத்துக் கொள்ள உதவுகிறது என்பதையும் நாம் உறுதிசெய்கிறோம். எமது திட்டமிடல் செயன்முறை மூன்று முக்கிய படிகளைக் கொண்டுள்ளது.



தந்திரோபாய அடையாளங்காணல் மற்றும் விருத்தி

வங்கியின் தந்திரோபாயங்கள் அதன் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் பெறுமதிகளுடன் ஒத்துப்போகின்றன. செயன்முறை நன்கு சிந்திக்கப்பட்டு அனைத்து மட்ட ஊழியர்களின் பங்களிப்புடன் தொடங்கப்பட்டது. எமது வணிக மாதிரியை மதிப்பிடுவதன் மூலம் உள்ளக மற்றும் வெளிப்புற சூழல்கள் இரண்டுமே அங்கீகரிக்கப்பட்டு, வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களின் காரணிகள் மற்றும் திறமையான வணிக தந்திரோபாயத்தை உருவாக்க வங்கித் துறையில் போக்குகளின் செல்வாக்கைப் புரிந்துகொள்கின்றோம். இந்த அம்சங்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்படும் இடர்களுடன், வங்கி அதன் நிலைபேறான பெறுமதி உருவாக்கம் வணிக மாதிரிக்கு ஏற்ப குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால தந்திரோபாயங்களை நிறுவுகிறது.


தந்திரோபாய வரிசைப்படுத்தல் மற்றும் வள ஒதுக்கீடு

வணிக தந்திரோபாயமானது பணிப்பாளர் சபையினால் இயக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு, தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் காலக்கெடுவுடன் தனிப்பட்ட பிரிவுகள் மற்றும் துறைகளுக்கு அதிகாரவரிசை மூலம் வெளியிடப்படுகிறது. குறுகிய கால இலக்குகளை அடைவதன் மூலம் வங்கி அதன் நீண்ட கால தந்திரோபாயங்களை அடைவதற்கான பாதையில் செல்ல உதவும். இந்த குறுகிய கால இலக்குகளின் அடிப்படையில், வங்கி விருத்தி செய்து முகாமை செய்யும் ஆறு மூலதனங்களாகிய: நிதி, மனித, உற்பத்தி, புலமை, சமூக மற்றும் உறவுமுறை மற்றும் இயற்கை முலதனம் ஆகியன வங்கியில் உள்ள ஒவ்வொரு அலகும் சுமூகமாக செயற்பட்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு போதுமான வசதிகளை வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் வளங்கள் ஒதுக்கப்படுகின்றன.

தொடர்ச்சியான கண்காணிப்பு

தொடர்ச்சியான கண்காணிப்பு, அடையப்பட்ட முன்னேற்றத்திற்கு எதிரான தந்திரோபாய முன்முயற்சிகளின் உறுதியான தன்மையைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய வங்கிக்கு உதவுவதுடன், சாத்தியமான எதிர்கால சூழ்நிலைகளை பரிசோதிக்கிறது. முகாமைத் தகவல் அல்லது தளப்பலகைகள் மூலம் முகாமைக்கு வழங்கப்பட்ட பாதிடப்பட்ட செயற்திறன்களுடன் ஒப்பிடும் எமது மாதாந்த செயற்திறனை நாம் மதிப்பீடு செய்வோம். காலாண்டு அடிப்படையில், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் முக்கிய திட்டங்களின் நிலை ஆகியவற்றிற்கு எதிராக எமது தந்திரோபாய செயற்திறனை நாம் கண்காணிக்கிறோம். எமது செயற்திறனை மதிப்பாய்வு செய்வதற்காக சமநிலைப் பெறுபேற்று அட்டை அடிப்படையில் எங்களது முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளையும் (KPIs) வரையறுத்துள்ளோம். அவை நிதி மற்றும் நிதி அல்லாத குறிகாட்டிகள் மற்றும் அளவு மற்றும் பண்புசார் காரணிகளை உள்ளடக்கியுள்ளன. பின்னர், தொடர்ச்சியான கண்காணிப்பு பொறிமுறையானது, பொருத்தமான மற்றும் போட்டித்தன்மையுடன் இருக்க தந்திரோபாயம் மற்றும் வணிக மாதிரியை மீளாய்வு செய்ய எங்களுக்கு உதவுகிறது.

உரு 7


தொலைநோக்கு
பணிக்கூற்று
பெறுமதிகள்
தொழிற்பாட்டு சூழல்
வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள்
அக்கறைதாரர் எதிர்பார்ப்புக்கள் மற்றும் கரிசனைகள்
பலம் மற்றும்
பலவீனங்கள்
வணிக மாதிரி
Rs
பொருண்மை விடயங்கள்
தந்திரோபாய விருத்தி
கூட்டுவணிகத் திட்டம் (நீண்டகால)
தந்திரோபாய வணிகத் திட்டம் (நடுத்தர காலம்)
வருடாந்த வணிகத் திட்டம் மற்றும் பாதீடு
தந்திரோபாய வரிசைப்படுத்தல்
ஒருங்கிணைந்த இடர் முகாமை
அடையாளங்காணல்
மதிப்பீடு
இழிவாக்கல் மற்றும் கட்டுப்பாடு
மீளாய்வு மற்றும் கண்காணித்தல்
கண்காணித்தல் கட்டம்
தளப்பலகை மீளாய்வு
முகாமைத் தகவல் முறைமை (MIS)
நடவடிக்கைத் திட்ட மீளாய்வுக்கூட்டம்
சமப்படுத்திய பெறுபேற்று அட்டை

SWOT பகுப்பாய்வு

எமது உள்ளக பலங்கள் மற்றும் பலவீனங்கள் அதேபோல் வெளிவாரிச் சூழலின் வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியன தொடர்பாக ஆழ்ந்த விளக்கத்தினை வழங்குவதற்காக ஒரு SWOT பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பலங்கள்

- வைப்பு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் அரசாங்கத்தால் முழுமையாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளன.
- வலுவான வர்த்தக நாம விம்பம் – பிராண்ட்/பைனான்ஸ் நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி இலங்கையில் ஐந்தாவது மிக மதிப்புமிக்க வர்த்தக நாமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- 189 வருட வங்கியியல் பாரம்பரியம்
- 100% அரசுக்கு சொந்தமான வங்கி
- தீவு முழுவதும் 4,000 சேவை மையங்களைத் தாண்டிய விரிவான வாடிக்கையாளர் வருகை
- அதிக தக்கவைப்பு விகிதத்துடன் வலுவான ஊழியர் விசுவாசம்
- லங்கா ரேட்டிங் ஏஜென்சியின் AAA கடன் தரப்படுத்தல் (2023)
- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதிலும் சுத்தமான எரிசக்தி நிதியளிப்பதிலும் நிபுணத்துவம்
- தபால் வலையமைப்புடன் இணைந்து செயற்படுதல்
- POS சேவை

பலவீனங்கள்

- தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் மூலம் வணிக விரிவாக்கத்திற்கு விதிக்கப்பட்ட வரம்புகள் (நுண்நிதி, SME துறைக்கான கடன்)
- 60% வைப்புக்களை அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டிய கட்டாயத் தேவை
- கட்டண மற்றும் தரகு அடிப்படையிலான வருமானத்தை உருவாக்குவதற்கான வரையறைகள்
- தேசிய சேமிப்பு வங்கியின் பிணைய அடிப்படையிலான கடனைச் சார்ந்திருத்தல்
- நிதியீட்டத்துக்கான பிரதான மூலமாகக் கால வைப்புக்களைக் கொண்டிருத்தல்
- அதிகாரத்துவ செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள்
- முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட முறைமை காணப்படாமை நெகிழ்வுத்தன்மையைக் குறைக்கிறது
- இறுக்கமான வழிகாட்டுதல்கள் புதிய தொழிநுட்பங்களைப் பின்பற்றுவதை தாமதப்படுத்தல்
- பழமைவாத இடர் கலாச்சாரம் மற்றும் வணிகக் கொள்கை

வாய்ப்புகள்

- இலங்கையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை நிறைவேற்றுவதில் வங்கியின் வகிபாகம்.
- ஐ. நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு
- காலநிலை மாற்றத்தில் கவனம் செலுத்தும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கிய நகர்வு
- வங்கித்துறையில் மாறும் தொழிநுட்ப முன்னேற்றங்கள்
- சாதாரண மனிதனின் நிதி அறிவை மேம்படுத்துதல்
- அதிகரித்த இடம்பெயர்வு காரணமாக வெளிநாட்டு நாணயம் அனுப்புவதற்கான வளர்ந்து வரும் சந்தை

வாய்ப்புகளை அதிகரிக்க பலங்களைப் பயன்படுத்துதல்

- எமது விசேட விடய அறிவைக் கொண்டு அரசின் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுடன் ஒத்துழைத்தல்.
- பசுமைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக கடன் வழங்கல் உற்பத்திகளை வழங்குதல் மற்றும் சுத்தமான எரிசக்தி நிதியளிப்பில் விசேட திறன்களைப் பயன்படுத்துதல்.
- புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பணத்தை ஈர்ப்பதற்காக எமது வர்த்தக நாமம் மற்றும் 100% அரசாங்க உத்தரவாதத்தைப் பயன்படுத்துதல்.

பலங்களைப் பயன்படுத்தி அச்சுறுத்தல்களைக் குறைத்தல்

- எமது பரந்த அணுகல் வழிமுறைகள் மூலம் தனித்துவமான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்கும் விரிவான வாடிக்கையாளர் அணுகல்.
- எமது POS சேவை மூலம் வாடிக்கையாளர் வீட்டு வாசலுக்கே சேவை வழங்குதல், அதிக சேமிப்புக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது.
- ஒட்டுமொத்த தொழிற்துறையும் மோசமடைந்து வரும் பொருளாதார நிலைமைகள் மற்றும் நம்பிக்கை இழப்பின் தாக்கத்தை எதிர்கொள்வதால், 100மூ அரசாங்க ஆதரவுடன் பாதுகாப்பான வங்கியாக நம்மை சந்தைப்படுத்துகிறோம்.

வாய்ப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் பலவீனங்களை எதிர்த்துப் போராடுதல்

- அத்தகைய சந்தைகளை செயற்படுத்துவதற்கும் நிபுணத்துவம் பெறுவதற்கும் நாம் அனுமதிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட சேவைகளில் அதிக கவனம் செலுத்துதல் - முக்கியமாக, பணம் அனுப்புதல் சந்தையில் ஊடுருவி, கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரித்தல்.
- செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க தொழிநுட்பத்தை பின்பற்றுதல், அதன் மூலம் பிழைகளை குறைத்தல்.
- சேமிப்பு வைப்புகளை உச்சப்படுத்த செயன்முறைகளை தன்னியக்கமாக்கல்.

அச்சுறுத்தல்கள்

- மோசமான பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மை ஆகியவை வங்கி மற்றும் நிதித் துறைகளில் நம்பிக்கையை இழக்க வழிவகுக்கிறது
- சீரழிந்து வரும் பொருளாதார நிலைமைகளால் ஏற்படும் மூளை வரட்சி
- வட்டி விகிதங்கள் அதிகரிப்பதனால் கடன் கலாச்சாரம் மோசமடைந்து வருகிறது
- பணவீக்கம் காரணமாக குடும்ப சேமிப்பு தொடர்ந்து குறைந்து வருகிறது
- வணிக வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத போட்டியாளர்களிடமிருந்து கடுமையான போட்டி
- வங்கி மற்றும் நிதி சேவைகள் மீதான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை கட்டமைப்பை இறுக்குதல்
- பாரம்பரிய வணிக மாதிரிகளுக்கு சவால் விடும் சீர்குலைக்கும் தொழிநுட்பங்கள்
- வாடிக்கையாளர் விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளிலான மாற்றங்கள்
- வீழ்ச்சியடையும் கடன் தரப்படுத்தல்.

அச்சுறுத்தல்களைத் தவிர்க்க பலவீனங்களை அகற்றவும்

- தகவல் தொழிநுட்பம் மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற எதிர்கால வங்கித் துறைக்குத் தேவையான திறன்களுடன் புதிய திறமைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.
- வசதியான மற்றும் மேம்பட்ட வாடிக்கையாளர் சேவையை உறுதிப்படுத்த புதிய தொழிநுட்பங்களில் கவனம் செலுத்துதல்.
- தொழிற்துறையில் போட்டியிட நெகிழ்வான உற்பத்திகளை உருவாக்குதல்.

நிறுவன நிலைபேறான தன்மை கலாச்சாரம் மற்றும் வணிக மாதிரி

நமது நிதி இலக்குகளை சமநிலைப்படுத்தி சமுதாயத்திற்கு பெறுமதியை வழங்கும் முறையைப் பொறுத்து நமது வெற்றி தங்கியுள்ளதென நாம் நம்புகிறோம். நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகிய நமது முக்கிய பெறுமதிகள் வளமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் பங்களிக்கின்றன.

இலங்கையின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றாக, தேசிய சேமிப்பு வங்கி வலுவான சமூக மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தை உருவாக்கும் சக்தி நிலையில் உள்ளது, எமது பரவலான அணுகல் மற்றும் அதிகாரம் நிலைபேறான நிறுவனத்திற்கு ஆதரவளிப்பதில் எங்களை ஒரு முன்னணியில் நிறுத்துகிறது. நிலைபேறான போட்டி நன்மை, நிலைபேறான பங்குதாரர் முகாமை மற்றும் நிலைபேறான கூட்டுவணிக கலாச்சாரம் ஆகியவற்றிற்கு வலுவான அர்ப்பணிப்பை ஏற்படுத்தும் சமூகக் காரணிகள் தொடர்பில் எமது ஊழியர்கள் பொருளாதார மற்றும் சமூக காரணிகளை சமநிலைப்படுத்துவதில் ஒத்த உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

எமது நிலைபேறான கூட்டுவணிக கலாச்சாரம் எமது வணிக மாதிரியை வடிவமைக்கிறது

ஒருங்கிணைந்த சிந்தனை அணுகுமுறையின் மூலம் எமது வணிக மாதிரியை நிலைநிறுத்துவதற்கான எமது கூட்டுவணிக கலாச்சாரம் வடிவமைக்கிறது. வணிக மாதிரியில், வங்கி நேரடி மற்றும் மறைமுக நலன்களைக் கருதுகிறது. நிலைபேறான தன்மையின் மூன்று அடிமட்டத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் பங்குதாரர்கள், மூன்று அம்சங்களை சமநிலைப்படுத்துவதன் மூலம் நீண்ட கால அடிப்படையில் இலங்கையின் சேமிப்பு ஜாம்பவான் என்ற எமது நிலையை நிலைநிறுத்த முடியும் என நாம் நம்புகிறோம்.

நிலைபேறான தன்மை கொள்கைகளை தந்திரோயமாக்குதல்


உரு 8

நிலைபேறான சமூகங்களை உருவாக்குதல்

எமது ஊழியர்கள், பங்குதாரர்களின் மற்றும் வாடிக்கையாளரின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு நாம் எமது வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்.

உள்ளடக்க நிதிக்கு ஆதரவளித்தல்

பொருளாதார செழுமைக்காக நாம் நெறிமுறை இலாபம் ஈட்டுவதில் ஈடுபடுகிறோம்




சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மை

நமது சுற்றுச்சூழலுக்கு எந்தக் கிரயமுமின்றி வங்கிச் செயற்பாடுகளை நடத்துகிறோம்

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

உரு 9



வலுவான மூலதனம் மற்றும் திரவத்தன்மை இடையகங்களுடன் தேசிய சேமிப்பு வங்கி மிதமான இடர் சுயவிவரத்தை தொடர்ந்து பராமரிக்கிறது. உணர்வுள்ள சுற்றுச்சூழல் மற்றும் சமூக நடவடிக்கை மற்றும் கடுமையான அரசாங்கக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகளால் ஆதரிக்கப்படும் நிதி ஸ்திரத்தன்மை, எமது அக்கறைதாரர்களுக்கு நீண்டகால பெறுமதியை உருவாக்குவதற்கும் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் வங்கிக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் வழி வகுக்கும் என்று நாம் நம்புகிறோம்.

வங்கியின் நிலைபேறான தன்மைக் கொள்கைகள், வங்கியின் வணிக மாதிரியில் நிலைபேறான தன்மையின் கருத்தை தடையின்றி ஒருங்கிணைக்க அனுமதிக்கின்றன. சுற்றுச்சூழல் கொள்கை, மனித உரிமைகள் கொள்கை, கூட்டுவணிக சமூகப் பொறுப்பு (CSR) கொள்கை மற்றும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் இடர் முகாமை (ESRM) கொள்கை ஆகியவை நமது அன்றாட இலக்குகளை அடைவதில் சமூக மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பது பற்றிய ஒட்டுமொத்த புரிதலை வழங்குகிறது.

மேலும், ஆற்றல்மிக்க மற்றும் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்துறையில் நாம் செயற்படுவதால் இடர் முகாமை மற்றும் ஆளுகைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். தீர்மானங்களை மேற்கொள்ளும்போது எமது அக்கறைதாரர்களின் நலன்களை சமநிலைப்படுத்த மிகவும் பயனுள்ள முறைகளை நாம் கருதுகிறோம்.

வங்கியின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் (ESE) இடர்கள் மற்றும் தாக்கங்கள் சபையுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. வங்கியின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையானது, இந்த ESE விடயங்களை உட்பொதித்து, பெறுமதியை உருவாக்குவதற்கான அனைத்து விடயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, ஏனெனில் இவை சமநிலைபேறான பெறுபேற்று அட்டையில் இணைக்கப்பட்டு, பின்னர் வங்கி ஊழியர்களின் செயற்திறன் அளவீட்டிற்கு நகரும்.

வங்கியின் தந்திரோயத்தை செயற்படுத்துவது, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு சபையினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது, அவர் கூட்டுவணிக முகாமை குழுவிற்கு தலைமை தாங்குவதுடன், வங்கியின் அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொறுப்பை வகிக்கிறார். இந்த தந்திரோபாயங்களை செயற்படுத்துவது கூட்டுவணிக சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேறான தன்மைக் குழுவால் (CSRSC) கண்காணிக்கப்படுகிறது, இது சபை மற்றும் பிற அக்கறைதாரர்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடலைப் பராமரிக்கிறது.

நிலைபேறான தன்மையினை கூட்டுவணிகத் தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக ஒருங்கிணைத்தல்

தேசிய சேமிப்பு வங்கியில், பின்வரும் முறைகள் ஊடாக பெறுமதி உருவாக்கப்பட்டு பேணப்படும்.

மக்கள்

நிலைபேறான சமூகங்களை உருவாக்குதல்

- சமூகத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்காகவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவ-தற்காகவும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை ஆதரித்தல்.
- பங்குதாரர்களுடன் திறந்த உரையாடல் – "வாடிக்கையாளர் கரிசனைகளைத் தீர்த்தல்" மற்றும் "வினைத்திறனான தொடர்பாடல்", – எமது தொழிற்பாடுகளின் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கு, எமது அக்கறைதாரர்கள் அனைவருடனும் திறந்த உரையாடலைப் பேணுகிறோம்.
- வலுவான முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் – "வலுவான முறைமைகள் மற்றும் செயன்முறைகள்" – மோசடி, ஊழல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதைத் தடுக்கும் எமது வலுவான முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் மூலம் நிதி முறைமை மற்றும் எமது வாடிக்கையாளர்களின் நிதிகளின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல்
- சமமான வேலை வாய்ப்புகள் – "பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு" – பாகுபாடு இல்லாத வேலைவாய்ப்பை வழங்குதல்
- CSR திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல் – "வளர்ந்து வரும் சமூகங்களை உருவாக்குதல்" – பிள்ளைகளின் கல்வி மற்றும் திறன் விருத்தியை ஆதரிக்கும் CSR திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

இலாபம்

உள்ளடக்க நிதியை ஆதரித்தல்

- செலவு குறைந்த முன்மொழிவுகளை வழங்குதல் - "குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிதி வசதிகள்", "எமது எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துதல்" மற்றும் எமது நுழைவு நிலை வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வாடிக்கையாளர்களுக்கு "எமது அணுகலை அதிகரித்தல்" – புதுமையான, பொருத்தமான மற்றும் செலவு குறைந்த முன்மொழிவுகளை வழங்குதல்,
- அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட கடன் திட்டங்களை ஆதரித்தல் – "COVID-19 இன் போது வாடிக்கையாளர்களை ஆதரித்தல்", "வீட்டிற்கு அழைக்க ஒரு இடம்", மற்றும் "புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாராட்டு"
- பொறுப்பான கொள்முதல்
- நிதியியல் கல்வியறிவு, உள்ளடக்கிய அணுகல் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிக் கல்வி ஆகியவற்றின் மூலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நிதிச் சேவைகளுக்கான அணுகலைச் செயற்படுத்துதல் – "நிதிச் சேர்க்கைக்கு முன்னுரிமை" மற்றும் "எமது எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துதல்"
- தன்னிறைவு பெற்ற சமூகங்களை ஊக்குவித்தல் – "ஒரு நிலைபேறான உலகிற்கு பங்களிப்பு செய்தல்" – சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு கடன் வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் தன்னிறைவு பெற்ற சமூகங்களை மேம்படுத்துதல்.
- நிலைபேறான நிதியுதவி

பூமி

சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மை

- புதுப்பிக்கத்தக்க சக்தியை உருவாக்கும் செயற்திட்டங்களுக்கு கடன் வழங்குதல் மற்றும் நிதியளித்தல் – "நிலைபேறான நிதியீட்டம்" – புதுப்பிக்கத்தக்க சக்தியை உருவாக்கும் திட்டங்களுக்கு கடன் வழங்குதல் மற்றும் நிதியளித்தல், பசுமையான உற்பத்திகள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இலங்கை மின்சார சபையுடன் (CEB) நெருக்கமாக ஒத்துழைப்பதன் மூலம் சூரிய சக்தி திட்டங்களுக்கு ஆதரவளிப்பதே எமது முக்கிய கவனமாகவுள்ளது.
- மூலதன ஒதுக்கீடு முடிவுகளுக்கான மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்களைப் பயன்படுத்துதல் – பக்கம் 165 இல் உள்ள "ESRM கட்டமைப்பு" – காலநிலை மாற்றம், நேர்மறையான தாக்கம் மற்றும் நமது சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாகக் கடமைகளை உள்ளடக்கிய மூலதன ஒதுக்கீடு முடிவுகளுக்கு மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்களைப் பயன்படுத்துதல்.
- சக்தி வினைத்திறனாக இருத்தல் – பக்கம் 164 இல் "பொறுப்பான நுகர்வு" – தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான கட்டிடங்களில் சூரிய சக்தியை நிறுவுவதன் மூலம் சக்தி வினைத்திறன் கொண்டதாக இருத்தல்


தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான வளர்ச்சி இலக்குகளுக்கு (UN SDGs) பங்களிப்பு

எமது நீண்ட கால இலக்கு நமது இலாபத்தை அதிகரிப்பதாகும். இருப்பினும், நிதிப் பெறுமதி தனிமையில் உருவாக்கப்படவில்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். எமது வணிகத்தின் அனைத்து பகுதிகளிலும் ESG கரிசனைகளை உட்பொதிப்பதன் மூலம் மற்றும் எமது ஆழத்தை மேம்படுத்துவதன் மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டிய அடையாளம் காணப்பட்ட ஐ.நா. எஸ்டிஜிகளுக்கான அர்ப்பணிப்புடன் நாம் செயற்படும் சமூகங்களுக்கு பரந்த பெறுமதியை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை SDGகளை எமது வணிகத்திற்கு அவற்றின் பொருத்தத்தின் அடிப்படையில் நாம் கண்டறிந்துள்ளோம். எமது ஒன்பது முதன்மை SDGகள், பரந்த தொழிற்துறை மற்றும் தேசிய சூழலில் தேசிய சேமிப்பு வங்கியின் வணிகத்திற்கு மிகவும் பொருத்தமானவை. எமது எட்டு இரண்டாம் நிலை SDGகள், வங்கி அதன் பெறுமதி உருவாக்கும் செயற்பாட்டின் போது மறைமுக பங்களிப்பைச் செய்யும் இலக்குகளாகும். இந்த இரண்டாம் நிலை SDGகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன, ஏனெனில் அவை எமது பிரதான SDGகளை அடைய உதவும்.

முதன்மை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்



இரண்டாம்நிலை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்



இந்த இலக்குகளை அடைவதில் எங்களது பங்களிப்பு இந்த அறிக்கை முழுவதும் குறித்துக் காட்டப்படுகிறது.

நமது எதிர்காலத் தந்திரோபாயம்

தந்திரோயம் என்பது, இன்றைய தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து நாளைய வங்கி மிகவும் வித்தியாசமாக செயற்படும் என்பதாகும்.

கோவிட்-19-ஐத் தொடர்ந்து மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது, மேலும் நாம் செய்யும் ஒவ்வொரு அம்சத்தையும் மீட்டமைப்பதற்கான வாய்ப்பை எங்களுக்கு வழங்கியுள்ளது. மிகவும் சமமான மற்றும் நிலைபேறான தேசத்திற்கு பங்களிப்பதில் தேசிய சேமிப்பு வங்கியின் சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம் நமது நீண்ட கால பொருத்தப்பாடு மற்றும் நிலைபேறான தன்மையை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்ற மனநிலையுடன் நமது தந்திரோயத்தை மதிப்பாய்வு செய்வதும் இதில் அடங்கும்.

இது நமது நீண்ட கால தந்திரோயத்திற்கான பாதையை வகுத்துள்ளது. ஒரு 10 வருட எதிர்கால-சான்று பார்வை, இது நம்மை அதிகரிக்கும் முன்னேற்றத்திற்கு அப்பால் மாற்றும் மாற்றத்திற்கு நகர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எமது அனைத்து வணிகப் பகுதிகளிலும் பாயும் ஐந்து தந்திரோய பாதைகளை நாம் கண்டறிந்துள்ளதுடன், மேலும் எதிர்கால-வலு நோக்கினை அடைவதற்கும், இறுதியில், எமது தூரநோக்கு – தேசிய வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் அவசியமானதாகும்.

எமது எதிர்கால சான்று உறுதியளிக்கப்பட்ட தந்திரோபாயம்

எமது நோக்கம் தேசிய வளர்ச்சியைத் தூரிதப்படுத்துவதாகும்

எமது தொலைநோக்கு உங்கள் சேமிப்புக்களுக்கான மிக நம்பகமான மற்றும் நாடப்படும் தெரிவாக இருப்பதாகும்.

நாம் எதிர்கால சான்று உறுதியளிக்கப்பட்டவர்கள்

இந்தத் தசாப்தத்தில், நாம் உங்கள் தேவைக்கான வங்கியாளராக இருப்பதுடன், உங்களுடன் சேர்ந்து வளர விரும்புகின்றோம்

அக்கறைதாரர்களை மையப்படுத்தியது

அக்கறைதாரர்கள் மையமாக இருப்பது விளையாட்டை மாற்றலாம், ஏனெனில் பங்குதாரர்கள் வங்கி செயற்படும் சூழலுக்கான திறவுகோலைக் கொண்டிருப்பதால், அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதன் மூலம் இந்த வேறுபாட்டின் தந்திரோயம் உருவாக்கப்படுகிறது

நோக்கத்தால் இயக்கப்படும்

சமூகங்கள் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நேர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு, இதனால் நாம் போட்டியாளர்களிடமிருந்து வேறுபடுவதுடன், அக்கறைதாரர்களின் பெறுமதி மற்றும் எதிர்பார்ப்புகளுடன் இணைந்துள்ளோம்.

சுறுசுறுப்பான மற்றும் நெகிழ்ச்சிமிக்க

புதுமை மற்றும் தலைமைத்துவ கலாச்சாரத்தை உருவாக்குவதன் மூலம் சிக்கலான மற்றும் கணிக்க முடியாத சூழலைத் தழுவுதல்.

தரவு உந்தப்பட்ட

பெருந்தரவு, செயற்கை நுண்ணறிவு மற்றும் அக்கறைதாரர்களுக்கு மனித தொடர்புகளுடனான அனுபவங்களை வழங்குவதற்கான திறன்களை இணைத்தல்

புதுமை மற்றும் உள்ளடக்கம் வாய்ந்த

வரையறைகளைக் கடந்து சிந்தித்து, மாறுபட்டதாக, மற்றும் உள்ளடக்கமான அனைத்து அக்கறைதாரர்களுக்கும் உண்மையான பெறுமதியை வழங்குதல்.

எமது எதிர்கால சான்று உறுதியளிக்கப்பட்ட தந்திரோபாயம் எமது நீண்டகால வாடிக்கையாளர் மைய, வளர்ச்சி நிலைபேறானதன்மை, ஆளுகை மற்றும் நிலைமாறுகையில் மேன்மை ஆகியவற்றை பிரதிபலிக்கும்

எதிர்கால சான்றுறுதி யளிக்கப்பட்ட தந்திரோபாயத்தை அடைவதற்கான வழி

- வாடிக்கையாளர் மைய
- ஆளுகை மேன்மை
- நிலைபேறான வளர்ச்சி
- நிலைமாற்றத் தலைமை

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

தந்திரோபாய வரைபடம்

நீண்டகால தந்திரோபாயங்கள்



வாடிக்கையாளர் மைய

தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள நாம் எமது வாடிக்கையாளர்களை எமது செயற்பாடுகளுக்கு மையமாக நோக்குவதுடன், வாடிக்கையாளர்களின் முடிவுகள் ஒரு வங்கியாக எமது நடவடிக்கைகளைத் தீர்மானிக்கின்றன. "விருப்பத்துக்குரிய வங்கி" என்ற நிலையை அடைவதற்கான எமது இலக்கில், அனைத்து வாடிக்கையாளர் தொடர்புகளிலும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவமே எமது முதன்மையான முன்னுரிமையாக உள்ளது. வாடிக்கையாளர் தேவைகள்தான் எமது வள ஒதுக்கீடு உத்தியை வழிநடத்துவதாக இருப்பதுடன், நாம் எமது வாடிக்கையாளர்களைப் பாராட்டும், வாடிக்கையாளர் உறவுகளை வளர்ப்பது மற்றும் அவர்களுக்கான எமது உறுதிப்பாட்டை நிலைநிறுத்தும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வங்கியாகத் தொடர்ந்து இருப்போம்.



ஆளுகை மேன்மை

கூட்டுவணிக ஆளுகையில் மிக உயர்ந்த நியமத்தைப் பேணுவதற்கு தேசிய சேமிப்பு வங்கி அர்ப்பணிப்புடன் இருப்பதுடன், இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமையின் பணிக் கலாச்சாரத்தை வளர்க்க விரும்புகிறது. தேசிய சேமிப்பு வங்கி வணிகச் செயன்முறைகள் மற்றும் ஆளுகைச் சோதனைகள் திறம்பட, வேகமான, வீரியமான மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைக்கு இணங்குவதை உறுதிசெய்வதன் மூலம், தேசிய சேமிப்பு வங்கிக்கு தந்திரோய மற்றும் போட்டி வேறுபாட்டை வழங்க, ஆளுகை மேன்மையைப் பயன்படுத்துகிறோம்.



நிலைபேறான வளர்ச்சி

தேசிய சேமிப்பு வங்கியில், சக்திவாய்ந்த, அதே நேரத்தில் நிலைபேறான மற்றும் சமநிலைபேறான வளர்ச்சிக்காக நாம் ஏங்குகிறோம். இதை அடைய, நம்பகமான, போட்டித்தன்மை வாய்ந்த, இலாபகரமான மற்றும் பொறுப்பான பெறுமதி உருவாக்கத்தை நாம் இலக்காகக் கொண்டுள்ளோம். எனவே, நிதித் தீர்வை வலுப்படுத்துதல், நமது மூலதன நிலையை ஒருங்கிணைத்தல், வருமான வழிகளைப் பெருக்குதல், புதுமைகளை அதிகரித்தல் மற்றும் நிலைபேறான தன்மையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீண்ட கால பெறுமதியை அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம்.



வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துதல்

- தொலைநிலை மற்றும் எண்ணியல் வாடிக்கையாளர் சேவை மாதிரியை மேம்படுத்துதல்
- கிளைகளை நிதி ஆலோசனை மையங்களாக மாற்றுதல்
- வாடிக்கையாளர் பயணத்தின் பிரிவு மற்றும் பகுப்பாய்வு
- செயன்முறைகள் மற்றும் கட்டமைப்புகளை எளிதாக்குதல்
- வாடிக்கையாளர் தரவு பாதுகாப்பு



ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்துதல்

- சுறுசுறுப்பான வேலை முறையைப் பயன்படுத்தி குழுக்களை அதிகரித்தல்
- புதுமைக்கு வெகுமதி அளித்தல் மற்றும் ஊக்குவித்தல்
- தொழில்சார் திறன்களை வளர்த்தல்
- தகுதி மற்றும் பன்முகத்தன்மை கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்
- அதிகாரமளித்தலின் அடிப்படையில் முகாமை மாதிரியை ஊக்குவித்தல்
- பன்முகத்தன்மை, சம வாய்ப்புகள் மற்றும் வேலை-வாழ்க்கை சமநிலை



இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்

- ஊழியர் நடத்தை மற்றும் பெறுமதிகளில் வலுவான கவனம்
- நிதிக் குற்றம் மற்றும் இணைய இடர்களைக் குறைப்பதற்கான திறன்களை மேம்படுத்துதல்
- இணக்கமின்மைக்கான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை
- வெளிப்படைத்தன்மை கலாச்சாரத்தை ஊக்குவித்தல்



இயன்முறை வளர்ச்சியை ஊக்குவித்தல்

- சந்தை பங்கை அதிகரித்தல்
- வாடிக்கையாளர் கையகப்படுத்தல் மற்றும் தக்கவைத்தல்
- முக்கிய பகுதிகளில் நிலைபேறான வளர்ச்சி
- மூலதனச் செலவை விஞ்சும் இலாப அதிகரிப்பு
- ஐந்தொகையின் தரத்தை மேம்படுத்துதல், சொத்து-பொறுப்பு இணக்கமின்மையைக் குறைத்தல்.

குறுங்காலம் மற்றும் நடுத்தரளவு கால தந்திரோபாய முன்னுரிமைகள்

நிலைமாறு தலைமை

இலங்கையில் முதன்மையான அரசுரிமை விசேட வங்கி என்ற வகையில் எமது நிலையில், முன்மாதிரியாக வழிநடத்தும் அதே வேளையில் ஒரு முன்மாதிரியான தலைமை என்பதில் பெருமை கொண்டுள்ளோம். மேன்மை, நிதி உள்ளடக்கம், வாடிக்கையாளர் சேவை கட்டளைகள், வணிக நெறிமுறைகள் மற்றும் பணியிட ஒருமைப்பாடு ஆகிய விடயங்களில் தொழிற்பாட்டிற்கான நியமங்களை நாம் அமைத்துள்ளோம். எமது சேவைகள் மூலம் இலங்கை மக்கள் தொடர்ந்தும் தமது வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் கண்டு வருகின்றனர். அனைத்து வணிக செயன்முறைகள் மற்றும் விநியோக வழிமுறைகளில் புதுமைகளை ஊக்குவிக்க நாம் முயற்சி செய்வதன் மூலம் மக்கள் அதிகபட்ச பயன்களைப் பெறுவதை உறுதிசெய்வதற்காக வளர்ந்து வரும் வாய்ப்புகளைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்கிறோம்.

குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலம் வரையான தந்திரோபாய முன்னுரிமைகள்

எண்ணியல் மயமாக்கலை துரிதப்படுத்துதல்

- எண்ணியல் தீர்வுகளை திறம்பட வழங்குதல்
- வாடிக்கையாளர் எண்ணியல் அனுபவத்தை மேம்படுத்துதல்
- செயன்முறை மற்றும் முறைமைகளை எளிதாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்
- செயற்பாட்டு மேன்மையை அடைதல்
- எண்ணியல் பாதுகாப்பை வலுப்படுத்துதல்
- முழு வங்கிக்கும் பெருந் தரவுகளின் திறனைப் பயன்படுத்துதல்

உதாரணம் மூலம் தலைமை வகித்தல்

- நிதி உள்ளடக்கத்துக்கான அர்ப்பணிப்பு
- பொறுப்புமிக்க மற்றும் நிலைபேறான நிதியுதவியை ஊக்குவித்தல்
- "பசுமை" வணிகத்தை ஊக்குவித்தல்
- சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல் (சுற்றுச்சூழலுக்கு உகந்த முயற்சிகள் மூலம் கார்பன் தடயத்தைக் குறைத்தல்)
- அர்த்தமுள்ள சமூக ஈடுபாடு

2022 ஆம் ஆண்டுக்கான தந்திரோபாயங்களின் வெளியீடுகள்

- தொழிநுட்பம்
- இடர் முகாமை
- தலைமைத்துவம் மற்றும் ஆளுகை
- மக்கள் மற்றும் கலாச்சாரம்
- புத்தாக்கம்
- செயன்முறை

- 13 மில்லியன் தொழிற்படும் கணக்குகள்
- ஒருங்கிணைந்த தகவல் தொழிநுட்ப முறைமைகள்
- ஆரோக்கியமான ஐந்தொகை
- வருமான வளர்ச்சி
- குறைந்த மட்டத்திலான தொழிற்படா முற்பணங்கள்
- உயர் ஊழியர் தக்கவைப்பு
- அரச பிணையங்கள் மீதான இரண்டாவது பாரிய முதலீட்டாளர்

எமது குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்

எமது குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள் எமது நீண்டகாலத் தந்திரோபாயத்துடன் தொடர்புபட்டுள்ளன. எமது எமது குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலத்துக்கான தந்திரோபாய நோக்கங்கள் முன்னயை ஆண்டிலிருந்து மாற்றமின்றியிருப்பதுடன், நாம் அவற்றின் அமுலாக்கத்தினை வேகப்படுத்துவதில் நோக்கினைக் கொண்டுள்ளோம்.

வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துதல்

எமது இலாபத்தை விட வாடிக்கையாளர்கள் முக்கியமானவர்கள்

வாடிக்கையாளர்களை மையப்படுத்திய நீண்ட கால உத்தியை நோக்கி

ஏன்

எமது வாடிக்கையாளர்களிடம் நாம் எவ்வளவு அக்கறையுடன் செயற்படுகிறோம் என்பதைப் பொறுத்தே எங்களது உயிர்வாழ்வு தங்கியுள்ளது என்று நாம் நம்புகிறோம். எனவே, எமது வாடிக்கையாளர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகளைக் கையாளும் அதே வேளையில், எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததை வழங்குவதில் நாம் கவனம் செலுத்துகிறோம்.

எப்படி

எமது ஊழியர்கள் வாடிக்கையாளர் சேவை தொடர்பாக நன்கு பயிற்சி பெற்றிருப்பதை உறுதிசெய்கிறோம் மற்றும் வங்கிக்குள் வாடிக்கையாளர் சார்ந்த கலாச்சாரத்தை உருவாக்க முயற்சிக்கிறோம். நாம் வேறுபட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குவதை உறுதி செய்வதற்காக தொழிநுட்பம், உட்கட்டமைப்பு, உற்பத்திகள் மற்றும் சேவை கூறுகளில் முதலீடு செய்கிறோம்.

முன்னோக்கிய பாதை

எண்ணியல் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலம் எமது வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்த நாம் உத்தேசித்துள்ளோம்.

பொருண்மை விடயங்கள்



ஈடுபடுத்தப்பட்ட மூலதனங்கள்



பிரதான UN SDGகள்



எமது ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்துதல்

எமது ஊழியர்கள் எங்களுக்கு விலைமதிப்பற்றவர்கள்

நிலைபேறான வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட எமது நீண்ட கால உத்தியை நோக்கி

ஏன்

இணைக்கப்பட்டிருப்பதாக உணரும் ஊழியர்கள் வங்கியின் வெற்றிக்கு மேலும் பல சலுகைகளை வழங்குவார்கள் என்று நாம் நம்புகிறோம். ஈடுபட்டுள்ள எமது ஊழியர்கள், பிரத்தியேக வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக தங்கள் வேலையின் அடிப்படைத் தேவைகளைத் தாண்டி வேலை செய்கிறார்கள்.

எப்படி

எமது ஊழியர்களுக்கு நிதி மற்றும் நிதி அல்லாத வழிகளில் திருப்திகரமான இழப்பீட்டுத் தொகுப்புகள் வழங்கப்படுவதை நாம் உறுதிசெய்கிறோம். உருவாக்கும் அதே வேளையில் உந்துதல் மற்றும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களை உருவாக்க வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மூலம் அவர்களின் திறன்களை வளர்ப்பதிலும் பயிற்சியிலும் முதலீடு செய்கிறோம்.

முன்னோக்கிய பாதை

பயிற்சி மற்றும் ஊழியர்களை மேம்படுத்துவதற்கான எமது முயற்சிகளைத் தொடரும் அதே வேளையில், எமது ஊழியர்களின் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்துவதற்கு மிகவும் ஏற்ற இறக்கமான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் அவர்களின் இழப்பீட்டுத் தொகுப்புகளை மறுபரிசீலனை செய்யவும் நாம் உத்தேசித்துள்ளோம்.

பொருண்மை விடயங்கள்



ஈடுபடுத்தப்பட்ட மூலதனங்கள்



பிரதான UN SDGகள்



இரண்டாம் நிலை UN SDGகள்



இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்

நாம் எமது பாதுகாப்பு வலையை வடிவமைக்கிறோம்

ஆளுகை மேன்மையில் நமது நீண்ட கால தந்திரோபாயத்தை நோக்கி

ஏன்

அன்றாட நடவடிக்கைகளில் இடர்களைக் குறைத்து மதிப்பிடும் வலுவான இடர் கலாச்சாரம், தயார்நிலையை செயற்படுத்தி, ஸ்திரத்தன்மையை ஊக்குவித்து, போட்டித்தன்மையை அளிப்பதுடன், பயனுறுதிமிக்க இடர் முகாமையை ஆதரிக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

எப்படி

வகிபாகங்கள், பொறுப்புகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் ஆகியவற்றை நாம் தெளிவாக வரையறுத்துள்ளோம். நாம் இடர் விழிப்புணர்வு பயிற்சியை வழங்கி, அறிவைப் பகிர்ந்து கொள்வதுடன், மேலும் கண்டறிதல்களை அறிக்கையிடும் போது இடர் செயற்பாட்டைக் கண்காணிக்கிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அமைக்கப்பட்ட அனைத்து சட்டங்கள், ஒழுங்குமுறைகள், குறியீடுகள் மற்றும் நியமங்களுக்கு நாம் இணங்குகிறோம்.

முன்னோக்கிய பாதை

நிதி அம்சங்கள் மற்றும் நெறிமுறை மற்றும் பொறுப்பான வணிகத்திற்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்துத் தேவைகளுக்கும் நாம் தொடர்ந்து இணங்க விரும்புகிறோம்.

பொருண்மை விடயங்கள்



ஈடுபடுத்தப்பட்ட மூலதனங்கள்



பிரதான UN SDGகள்



இரண்டாம் நிலை UN SDGகள்





எண்ணியல் மயமாக்கலை துரிதப்படுத்துதல்

எல்லைகளற்ற வலையமைப்பு

நிலைபேறான வளர்ச்சி மற்றும் "நிலைமாற்றப் பயண" நீண்ட கால தந்திரோபாயத்தை நோக்கி

ஏன்

தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி வசதியான, தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் திறமையான சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்துவதால், எண்ணியல் மயமாக்கல் வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துகிறது மற்றும் எமது வர்த்தக நாமத்தின் மீது விசுவாசத்தை உருவாக்குகிறது என்று நாம் நம்புகிறோம்.

எப்படி

எமது நம்பகமான எண்ணியல் தளங்கள் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு எங்கும், எந்த நேரத்திலும் எமது சேவைகள் சீராக கிடைப்பதை உறுதிசெய்கிறோம், மேலும் வங்கியில் எண்ணியல் சிந்தனை கலாச்சாரத்தை மேம்படுத்துகிறோம்.

முன்னோக்கிய பாதை

எண்ணியல் கண்டுபிடிப்புகள் மற்றும் இணையப் பாதுகாப்பில் கவனம் செலுத்த நாம் உத்தேசித்துள்ளோம், 2023 ஆம் ஆண்டில் எமது மைய வங்கியியல் முறைமையை முழுமையாகச் செயற்படுத்தவும், சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க கூடுதல் அம்சங்கள் மற்றும் பாதுகாப்புடன் மேம்படுத்தப்பட்ட எண்ணியல் வங்கியியல் தளத்தை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

பொருண்மை விடயங்கள்



ஈடுபடுத்தப்பட்ட மூலதனங்கள்



பிரதான UN SDGகள்



இரண்டாம் நிலை UN SDGகள்





இயன்முறை வளர்ச்சியை ஊக்குவித்தல்

நாம் வளர்ச்சியை உருவாக்குகிறோம்

வளர்ச்சி மற்றும் நிலைபேறான தன்மையின் நீண்ட கால தந்திரோபாயத்தை நோக்கி

ஏன்

வங்கித் துறை திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மை ஆகியவற்றில் அழுத்தத்தை எதிர்கொண்டுள்ள தற்போதைய சூழலில், எங்களது சொந்த வளங்கள் மற்றும் உள்முக செயன்முறைகள் மூலம் எங்களது இலாபத்தை விரிவுபடுத்தவும், அதிகரிக்கவும் நாம் நம்புகிறோம்.

எப்படி

புதிய வங்கியியல் உற்பத்திகளை உள்நாட்டில் உருவாக்குதல், எமது தற்போதைய உற்பத்திகளின் அம்சங்களை மேம்படுத்துதல் மற்றும் எமது வங்கி அளவிலான, பல வழிமுறை முயற்சிகள் மூலம் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நாம் ஈடுபடும்போது வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்த எமது உள்முக வளங்களை நம்பியுள்ளோம்.

முன்னோக்கிய பாதை

புதுமையான வளர்ச்சித் தீர்வுகள், எமது கட்டிடங்களை பசுமையாக்குதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தீர்வுகளை செயற்படுத்துதல் ஆகியவற்றில் முதலீடு செய்வதன் மூலம், எமது செயற்பாட்டுச் செலவுகளைக் குறைக்க நாம் உத்தேசித்துள்ளோம்.

பொருண்மை விடயங்கள்



ஈடுபடுத்தப்பட்ட மூலதனங்கள்



பிரதான UN SDGகள்





உதாரணம் மூலம் தலைமை வகித்தல்

இலாபத்திற்கு அப்பால் சிந்திக்கிறோம்

நிலைபேறான வளர்ச்சி மற்றும் "மாற்றப் பயணம்" என்ற எமது நீண்ட கால தந்திரோபாயத்தை நோக்கி

ஏன்

பொறுப்பான வணிக தந்திரோயத்திற்கான அடித்தளம் பெறுமதி உருவாக்கத்தை உள்ளடக்கியது என்று நாம் நம்புகிறோம். நாம் வெளிப்படுத்தும் பெறுமதி ஊக்கமளிக்கும் ஊழியர்கள், திருப்தியான வாடிக்கையாளர்கள் மற்றும் பிராண்ட் பெறுமதியை அதிகரிக்கச் செய்கிறது.

எப்படி

வணிக நடவடிக்கைகளின் ஒவ்வொரு பகுதியிலும் நிலைபேறான தன்மையை ஒருங்கிணைக்கிறோம். எண்களுக்கு அப்பால் சிந்திக்கும் கூட்டுவணிக கலாச்சாரத்தை நாம் வளர்த்துள்ளோம், மேலும் எமது பங்குதாரர்கள் அனைவரையும் கையாளும் போது எங்களை பொறுப்பாகவும் மரியாதையுடனும் செய்யும் நெறிமுறைகளின் நெறிமுறையால் வழிநடத்தப்பட்டுள்ளோம்.

முன்னோக்கிய பாதை

எமது தந்திரோய முடிவுகளை எடுப்பதில் (சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) அம்சங்களில் கவனம் செலுத்தி எமது பயணத்தைத் தொடர உத்தேசித்துள்ளோம். பொறுப்புள்ள கூட்டுவணிக குடிமகனாக இருப்பதன் ஒரு பகுதியாக UN SDG களை அடைவதற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

பொருண்மை விடயங்கள்



ஈடுபடுத்தப்பட்ட மூலதனங்கள்



பிரதான UN SDGகள்



இரண்டாம் நிலை UN SDGகள்



தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

மூலதன விட்டுக்கொடுப்புக்களுடன் தந்திரோபாயங்களை சமநிலைப்படுத்துதல்



நிதி மூலதனம்

குறுகிய மற்றும் நடுத்தர கால தந்திரோய முன்னுரிமைகள் தொடர்பானது



பெறுமதியை உருவாக்கும் மற்றும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்தும் தந்திரோபாயங்கள்

- நிகர வட்டி வருமானம் மற்றும் லாபத்தில் நிலைபேறான வளர்ச்சியை பராமரித்தல்.
- சவால்களுக்கு மத்தியில் கடன் வழங்குதல் உட்பட ஐந்தொகை நிலையில் வலுவான வளர்ச்சியை உறுதி செய்தல்.
- முதலீடுகளுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்.
- வங்கியின் கடன் விபரத்தை விவேகமாக நிர்வகித்தல்.

விட்டுக்கொடுப்புக்கள்

- வருமானத்தை உருவாக்குவது வாடிக்கையாளர் தேவைகளை தொடர்ச்சியாகவும் நிலைபேறானதாகவும் பூர்த்தி செய்வதில் ஒரு சவாலாக உள்ளது.
- சமூக மற்றும் பொருளாதார அம்சங்களைக் கருத்தில் கொண்டு கடனளிப்பு வெளிப்பாடுகளை நிர்வகிப்பதில் இடர் தாங்குதிறனை இறுக்குவதற்கான ஒழுங்குமுறை தேவைகள் வாடிக்கையாளர் வளர்ச்சி மற்றும் வங்கியின் வருமானம் உழைக்கும் திறனைத் தடுக்கலாம்.



உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

குறுகிய மற்றும் நடுத்தர கால தந்திரோய முன்னுரிமைகள் தொடர்பானது



தந்திரோபாயங்கள் பெறுமதியை உருவாக்குதல் மற்றும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்துகின்றன

- நாடளாவிய வலையமைப்புகள் மற்றும் மாதிரிக் கிளைக் கருத்துக்கள் மூலம் எமது இருப்பை அதிகரிப்பது மற்றும் சென்றடைதல்.
- திறமையான செயலிகள் மற்றும் அதிநவீன வங்கியியல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் எமது எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துகிறோம்.
- ஒருங்கிணைந்த எண்ணியல் மற்றும் இயற்பியல் உட்கட்டமைப்பு மூலம் எமது செயற்பாட்டு செயன்முறையை மேம்படுத்துதல்.

விட்டுக்கொடுப்புக்கள்

- எண்ணியல்மயமாக்கல் மற்றும் புதுமையான தீர்வுகள் நமது மனித மூலதனத் தேவையைக் குறைப்பதுடன், எமது கிளைகளை மறுசீரமைக்கத் தேவைப்படுத்தும்.
- திறமையான செயற்பாடுகளிலிருந்து எழும் செலவு செயற்திறன், தொழிநுட்பம், ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் இணைய பின்னடைவு ஆகியவற்றில் முதலீடுகளால் ஓரளவு ஈடுசெய்யப்படுகிறது.



புலமை மூலதனம்

குறுகிய மற்றும் நடுத்தர கால தந்திரோய முன்னுரிமைகள் தொடர்பானது



தந்திரோபாயங்கள் பெறுமதியை உருவாக்குதல் மற்றும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்துகின்றன

- வங்கித் துறையில் தொழிநுட்ப அறிவின் வளமான பாரம்பரியத்தை முன்னோக்கி கொண்டு செல்வதன் மூலம் புகழ்பெற்ற அமைப்பை உருவாக்குதல்.
- நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, ஒருமைப்பாடு மற்றும் கூட்டுவணிக கலாச்சாரம் மற்றும் வங்கி முறை ஆகியவற்றில் பொறிக்கப்பட்ட படைப்பாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பு சார்ந்த நிறுவனமாக இருத்தல்
- தொழிநுட்பம் மற்றும் புதுமைகளைப் பயன்படுத்துவதற்கு வலுவான முறைமைகள் மற்றும் செயன்முறைகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்தல்.
- ஆளுகை மற்றும் இடர் கட்டுப்பாடுகளை மேம்படுத்தும் சிறந்த நடைமுறைகளை மாற்றியமைக்க முயற்சி செய்தல்.

விட்டுக்கொடுப்புக்கள்

- தொழிநுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துதல், வங்கியின் நற்பெயரைத் தக்கவைக்க இணக்கம் மற்றும் புதிய ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் இடர் தீர்வு ஆகியவற்றை ஈர்க்கும்.



மனித மூலதனம்

குறுகிய மற்றும் நடுத்தர கால தந்திரோய முன்னுரிமைகள் தொடர்பானது



தந்திரோபாயங்கள் பெறுமதியை உருவாக்குதல் மற்றும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்துகின்றன

- தற்போதுள்ள குழுவுடன் நன்றாக ஒருங்கிணைத்து, வங்கியின் நோக்கங்களை அடைவதற்காக தொடர்ந்து செயற்படும் சிறந்த திறமையாளர்களை ஈர்த்தல்.
- புதிய எண்ணியல் மயமாக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு ஏற்ப ஊழியர் திறன்களை மேம்படுத்துவதற்கு கடுமையான பயிற்சியின் மூலம் வெற்றிபெறும் குழுவை வளர்ப்பது மற்றும் மேம்படுத்துதல்.
- தரம் சார்ந்த விளம்பரங்களை வழங்குவதன் மூலமும், பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்புகளை கொண்டாடுவதன் மூலமும் எமது திறமையை நிர்வகித்தல்.
- உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்புடன் வேலை-வாழ்க்கை சமநிலையை மையமாகக் கொண்டு ஊழியர்களைத் தக்கவைத்தல்.
- உற்பத்தித்திறனை மேம்படுத்த நட்பு மற்றும் கூட்டுறவு பணிச்சூழலை நிறுவ திறம்பட தொடர்புகொள்வது.

விட்டுக்கொடுப்புக்கள்

- நாட்டிலுள்ள சிறந்த திறமையாளர்களை ஈர்க்க, பயிற்சி மற்றும் மேம்பாடு மற்றும் ஊழியர் நலனில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் செய்யப்பட வேண்டும். செயற்படும் சூழலின் சாதகமான தன்மை அத்தகைய முதலீடுகளை நடத்தும் வங்கியின் திறனை பாதிக்கிறது.
- எதிர்காலத்தில் தேவைப்படும் திறன்கள், தொழிநுட்பம் மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றில் நாம் தொடர்ந்து முதலீடு செய்து வரும் அதே வேளையில், சரியான நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகள் நடைமுறையில் இருக்க வேண்டும்.
- புதிய வளர்ச்சியடைந்த வேலை முறைகள் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் வழங்கலாம் ஆனால் வேலை-வாழ்க்கை சமநிலையை பாதிக்கலாம்.



சமூக மற்றும் உறவு மூலதனம்

குறுகிய மற்றும் நடுத்தர கால தந்திரோய முன்னுரிமைகள் தொடர்பானது



தந்திரோபாயங்கள் பெறுமதியை உருவாக்குதல் மற்றும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்துகின்றன

- சிறந்த வாடிக்கையாளர் அனுபவம், திறமையான தீர்வுகள் மற்றும் தரவு மற்றும் தனியுரிமையின் பாதுகாப்பு ஆகியவற்றின் மூலம் விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குதல்.
- பயனுறுதிமிக்க தொடர்பு மற்றும் தந்திரோய கூட்டணிகள் மூலம் வணிக கூட்டாளர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்குதல்.
- இணக்கம் மற்றும் விவேகமான இடர் முகாமை ஆகியவற்றில் நிலைபேறான தன்மையை பராமரிப்பதன் மூலம் ஒழுங்குமுறை இணக்கத்தை வலுப்படுத்துதல்.
- சமூகத்திற்குத் திரும்பக் கொடுப்பதில் கவனம் செலுத்துவதன் மூலமும் நிதிச் சேர்க்கைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும் செழிப்பான சமூகங்களைக் கட்டமைத்தல்.

விட்டுக்கொடுப்புக்கள்

- சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க எண்ணியல் தீர்வுகளுக்கு கூடுதல் தகவல் தொழிநுட்ப மேம்பாடு, அதிக பராமரிப்பு செலவுகள் மற்றும் அதிநவீன தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு தேவைப்படுகிறது.
- தொடர்ந்து உருவாகி வரும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இசைவாக இருப்பது திறமையான வாடிக்கையாளர் தீர்வுகளை வழங்குவதை மெதுவாக்கலாம்.



இயற்கை மூலதனம்

குறுகிய மற்றும் நடுத்தர கால தந்திரோய முன்னுரிமைகள் தொடர்பானது



தந்திரோபாயங்கள் பெறுமதியை உருவாக்குதல் மற்றும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்துகின்றன

- பசுமைக் கட்டிடங்கள் மற்றும் திறமையான வள முகாமை என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் ஒரு நிலைபேறான உலகிற்கு பங்களிப்பு செய்தல்.
- சுற்றுச்சூழலுக்கும் சமூகத்திற்கும் தீங்கு விளைவிப்பதைக் குறைக்க கடன் வழங்கும் நடைமுறைகளில் நிலைபேறான நிதியுதவியை ஒருங்கிணைத்தல்.

விட்டுக்கொடுப்புக்கள்

- காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட துறைகளில் கடன்களை மறுசீரமைப்பது வாடிக்கையாளரின் வணிகத்தின் நம்பகத்தன்மையை பாதிக்கிறது.

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

எமது தந்திரோபாய பெறுபேற்று பலகை

தந்திரோபாய குறிக்கோள்கள்	2022 க்கான முன்னுரிமைகள்	முக்கிய வெளிப்பாடுகள்	நிலை	உண்மை அடைவு 2022	உண்மை அடைவு 2021	குறிப்புக்கள்
	புதிய உற்பத்தி விருத்தி	புதிய குடும்ப உற்பத்தி தொகுப்பை அறிமுகப்படுத்துதல்	✗	–	–	மோசமடைந்து வரும் சேமிப்பு கலாச்சாரம் உள்ளிட்ட அசாதாரண பொருளாதார நிலைமைகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.
		முழுமையாக எண்ணியல் மயமாக்கப்பட்ட முதன்மை வங்கிக் கிளையைத் திறப்பதன் மூலம் முதன்மையான வங்கிக் கொள்கையை நிறுவுதல்.	✗	–	–	நிதி அமைச்சால் நிர்ணயிக்கப்பட்ட மூலதனச் செலவுத் தேவைகளைக் குறைக்கும் தேவைப்பாட்டால் ஒத்திவைக்கப்பட்டது.
	அணுகல் மற்றும் வசதியை அதிகரித்தல்	புதிய கிளைகளைத் திறத்தல்.	✓	1	1	2022 ஆம் ஆண்டில் மூன்று புதிய கிளைகளைத் திறக்க இலக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், நிதியமைச்சால் நிர்ணயிக்கப்பட்ட மூலதனச் செலவுத் தேவைக் குறைக்கும் அது ஒத்திவைக்கப்பட்டது.
		தன்னியக்கக் கூற்றுப்பொறிகளை நிறுவுதல்.		1	3	
	சுய சேவை வழிமுறைகளை இயக்குதல் மற்றும் வாடிக்கையாளர் காத்திருக்கும் நேரத்தை குறைத்தல்	காசு மீள்சுழற்சி இயந்திரங்களை அதிகரித்தல்	✓	5	20	மூலதனச் செலவினங்களைக் குறைத்ததால் இலக்கு 100% எட்டப்படவில்லை.
		இணைய வங்கியில் அதிக வாடிக்கையாளர்களை உள்வாங்குதல்.	✓	11,060	27,204	• வாடிக்கையாளர்களை அடைவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் (எரிபொருள் நெருக்கடி/அதிகரித்த போக்குவரத்துச் செலவுகள்). • நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கான செலவு குறைக்கப்பட்டது. • கிளை அளவிலான முயற்சிகள் வாடிக்கையாளர்களிடம் மோசமடைந்து வரும் சேமிப்புக் கலாச்சாரத்தை மீண்டும் பெறுவதில் கவனம் செலுத்தியது.

அடையப்பட்டது – ✓ பகுதியளவில் அடையப்பட்டது – ✓ அடையப்படவில்லை – ✗

அட்டவணை 4

2023க்கான முன்னுரிமைகள்

- பிரதானமாக எண்ணியல் உட்கட்டமைப்பைப் பயன்படுத்துவதுடன் வசதியான மற்றும் வினைத்திறனான சேவைகளை வழங்குவதன் மூலம் எமது தற்போதைய விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை பராமரித்தல்.
- வேறுபட்ட உற்பத்திகள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை மூலம் எங்கள் வாடிக்கையாளர் தளத்தை வளர்த்தல்
- அஞ்சலக வங்கியில் எமக்கு தனித்துவம் இருப்பதால், நமது தடத்தை வலுப்படுத்த தபால் வலையமைப்பை சீராக தரப்படுத்துதல்.

தந்திரோபாய குறிக்கோள்கள்	2022 க்கான முன்னுரிமைகள்	முக்கிய வெளிப்பாடுகள்	நிலை	உண்மை அடைவு 2022	உண்மை அடைவு 2021	குறிப்புக்கள்
	முக்கிய பகுதிகளில் வளர்ச்சி	தொழில்துறையுடன் ஒப்பிடும்போது வைப்புகளின் வளர்ச்சி (%) தே.சே.வங்கி தொழில்துறை	✗	3.4 18.8	15.5 13.7	பணவீக்கம் அதிகரித்து, கொள்வனவு சக்தி குறைந்தமை வாடிக்கையாளர்களின் சேமிப்புத் திறனைப் பாதித்துள்ளது.
		தொழில்துறையுடன் ஒப்பிடும்போது கடன் வழங்கலின் வளர்ச்சி (%) தே.சே. வங்கி தொழில்துறை	✗	2.6 5.7	17.7 13.5	அதிகரித்து வரும் கடன் விகிதங்கள் கடன் கலாச்சாரத்தை சுருக்கிவிட்டதால் கடன் வழங்குவது குறைந்துள்ளது.
	வைப்புச் சந்தைப் பங்கைத் தக்கவைத்தல்	வைப்புச் சந்தைப் பங்கைத் தக்கவைத்தல்.	✗	9.7	11.1	வாடிக்கையாளர்களின் கொள்வனவு சக்தி திறன் குறைதல் காரணமாக
	செலவுகளைக் குறைத்தல்	வருமானத்திற்கான செலவு விகிதம் (%)	✗	63.0	33.2	வருமானத்தின் சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும் போது செலவில் அதிக சதவீத அதிகரிப்பு காரணமாக.
	பங்குதாரர் பெறுமதி அதிகரிப்பு	நடுத்தர கால ROE இலக்கு வரம்பை 10% முதல் 15% வரை உயர்த்துவதன் மூலம் பங்குதாரர் வருமானத்தை மேம்படுத்துதல்.	✗	3.4	33.9	கொள்கை வட்டி விகிதங்களில் அசாதாரண அதிகரிப்பு மற்றும் வங்கியின் வட்டி தாங்கும் பொறுப்புகளில் அதன் தாக்கம் காரணமாக இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்துள்ளது.

அடையப்பட்டது – ✓ பகுதியளவில் அடையப்பட்டது – ✓ அடையப்படவில்லை – ✗

அட்டவணை 5

2023க்கான முன்னுரிமைகள்

- ஆராய்ச்சி நடவடிக்கைகளில் முதலீடு மற்றும் தற்போதைய சந்தை போக்குகளைப் புரிந்துகொள்ளல்
- பின்-அலுவலக செயன்முறைகளின் செயற்திறனை மேம்படுத்துதல் மற்றும் தொழிற்பாட்டுக் கிரயங்களைக் குறைத்தல்.
- கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரிக்க புதிய வழிகளை ஆராய்தல்.
- சக்தித் தேவைகளுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் கவனம் செலுத்துதல்.

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

தந்திரோபாய குறிக்கோள்கள்	2022 க்கான முன்னுரிமைகள்	முக்கிய வெளிப்பாடுகள்	நிலை	உண்மை அடைவு 2022	உண்மை அடைவு 2021	குறிப்புக்கள்
	தகவல் தொழிநுட்பம் தொடர்பான திட்டங்களை செயற்படுத்துதல்	அஞ்சல் கொடுப்பனவு செயலியை செயற்படுத்துதல்.	✓	–		
		மைய வங்கியியல் முறையை செயற்படுத்துதல்.	✓	–		
		எண்ணியல் வங்கியியல் தளம் மற்றும் இ-மாற்றல் தீர்வை செயற்படுத்துதல்.	✗	–		ஆரம்ப கட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது நிலவும் பொருளாதாரச் சூழல் காரணமாக நடைமுறைப்படுத்துவது பிற்போடப்பட்டுள்ளது.
		தரவு ஏரி/களஞ்சியம் மற்றும் வணிக நுண்ணறிவு தீர்வுகளை செயற்படுத்துதல்.	✓	–		ஆரம்ப கட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது நிலவும் பொருளாதாரச் சூழல் காரணமாக நடைமுறைப்படுத்துவது பிற்போடப்பட்டுள்ளது.
		மனிதவள முகாமை முறைமையை செயற்படுத்துதல் – கட்டம் I.	✓	–		
		சொத்து மற்றும் பொறுப்பு முகாமை முறைமையை (ALM) செயற்படுத்துதல்.	✗	–		நிலவும் பொருளாதாரச் சூழல் காரணமாக இந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

அடையப்பட்டது – ✓ பகுதியளவில் அடையப்பட்டது – ✓ அடையப்படவில்லை – ✗

அட்டவணை 6

2023க்கான முன்னுரிமைகள்

- மைய வங்கியியல் மற்றும் பிற முறைமைகளை முழுமையாக செயற்படுத்தல்
- புதிய எண்ணியல் வங்கியியல் தளத்தை செயற்படுத்துதல்.
- வாடிக்கையாளர் தகவலின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான இணையவழிப் பாதுகாப்பு.

தந்திரோபாய குறிக்கோள்கள்	2022 க்கான முன்னுரிமைகள்	முக்கிய வெளிப்பாடுகள்	நிலை	உண்மை அடைவு 2022	உண்மை அடைவு 2021	குறிப்புக்கள்
	பெறுமதி கூட்டுதலுக்கான ஊழியர் ஒன்றிணைவை மேம்படுத்தல்	முதல் முறையாக தே.சே.வங்கி நாட்காட்டிக்கான பங்களிப்பு முன்மொழிவுகளைப் பெறுதல்	✓	–	–	
		"நட்சத்திர கிளை" எண்ணக்கருவை செயற்படுத்தல்	✗	–	–	கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார சூழ்நிலை காரணமாக இந்த செயன்முறை 2023க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
		கிளை ஊழியர்களுக்கான ஊக்கம் மற்றும் மனப்பான்மை மாற்றப் பயிற்சி.	✗	–	–	நிதியமைச்சால் நிர்ணயிக்கப்பட்ட மூலதனச் செலவுத் தேவைகளைக் குறைப்பதன் காரணமாக, தொழிற்படாத அம்சங்கள் மீதான பயிற்சி குறைக்கப்பட்டுள்ளது.
	பயிற்சி மற்றும் விருத்தி	பயிற்சி மற்றும் விருத்தி மீதான செலவினம் (ரூ. மில்லியன்).	✓	12.8	11.0	
		வங்கிச் செயற்பாடுகள் மற்றும் நிதிச் சேவைகள் குறித்து பிரிவுகள் மற்றும் கிளைகளிலிருந்து வெளியக பயிற்சி.	✓	8.8	6.8	
		வெளிநாட்டு பயிற்சி திட்டங்களை வழங்குதல்	✓	6.0	–	
		மைய வங்கியியல் பயிற்சி.	✓	15.0	15.7	மைய வங்கியியல் முறைமையினை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் இலக்கை 100% அடைய முடியவில்லை.
	ஊழியர் பெறுமதி முன்மொழிவுகளை அதிகரித்தல்	ஊழியர்களுக்காக செலவிடப்பட்ட தொகை (ரூ. பில்லியன்)	✓	13.8	13.0	
		ஊழியர் தன்னார்வ புரள்வு (%).	✗	1.0	0.2	தற்போதைய எதிர்மறையான பொருளாதார நிலைமைகள் பல ஊழியர்களை இடம்பெயர்வதற்கு காரணமாகியுள்ளது.
		உற்பத்தித்திறன் மற்றும் ஊக்கத்தை மேம்படுத்த இலக்கு அடிப்படையிலான செயற்திறன் மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்துதல்.	✗	–	–	செயற்திறன் முகாமை தொகுதியின் UAT நிறைவடைந்தது.
	இ-கற்றல்	புதிய மனிதவள முறைமையை நடைமுறைப்படுத்தியதற்கு பின்பு ஊழியர்களுக்கு இ-கற்றல் தளத்தை அறிமுகப்படுத்துதல்.	✓	–	–	

அடையப்பட்டது – ✓ பகுதியளவில் அடையப்பட்டது – ✓ அடையப்படவில்லை – ✗

அட்டவணை 7 →

2023க்கான முன்னுரிமைகள்

- ஊதிய தொகுப்புகளை மறுபரிசீலனை செய்வதன் மூலம் ஊழியர் தக்கவைப்பு.
- ஊழியர்களின் திறன்களை மேம்படுத்த பயிற்சி மற்றும் விருத்தி.
- ஊழியர்களின் மனம் மற்றும் உடல் நலனை ஊக்குவித்தல் மற்றும் வழிநடத்துதல்.
- மேலதிக வேலை-வாழ்க்கை சமநிலை முன்முயற்சிகளுடன் ஊழியர் திருப்தி மற்றும் பணியில் விசுவாசத்தை மேம்படுத்தல்.

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

தந்திரோபாய குறிக்கோள்கள்	2022 க்கான முன்னுரிமைகள்	முக்கிய வெளிப்பாடுகள்	நிலை	உண்மை அடைவு 2022	உண்மை அடைவு 2021	குறிப்புக்கள்
	இணையவழிப் பாதுகாப்பு	PCI DSS சான்றுபடுத்தலைப் பேணுதல்	✓	–	–	
	வலுவான மூலதனப் போதுகை மட்டங்களைப் பேணுதல்	பாசல் III மூலதனப் போதுகை தேவைப்பாட்டு மட்டம் 1 உடன் இணங்குதல்	✓	15.8	18.6	இலாபத்தன்மையிலான வீழ்ச்சி காரணமாக இரு விகிதங்களிலும் முன்னைய ஆண்டுகளை விட வீழ்ச்சி காணப்பட்டது.
		பாசல் III மூலதனப் போதுகைத் தேவைக்கு இணங்குதல் - மொத்த மூலதனம்	✓	18.0	20.8	
	இணக்கமின்மைக்கான பூச்சிய சகிப்புத்தன்மை	ஒழுங்குவிதிமுறை அபராதங்கள் அல்லது தண்டங்கள் (ரூ. மில்லியன்)	✗	0.8	–	குறிப்பிடப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்புடைய பொருத்தமான அனைத்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் (UNSCR) தீர்மான பட்டியல்களையும் பராமரிக்க வங்கி தவறியதால் நிர்வாக அபராதம் விதிக்கப்பட்டது.
	கடன் இடர்களை முகாமை செய்தல்	மொத்த கடன்களுக்கான மட்டம் 3 கடன் (சேத இழப்பு நிகர)	✗	2.8	2.5	செலவிடத்தக்க வருமானம் குறைவதால் திருப்பிச் செலுத்துவதிலான வீழ்ச்சி.

அடையப்பட்டது – ✓ பகுதியளவில் அடையப்பட்டது – ✓ அடையப்படவில்லை – ✗

அட்டவணை 8

2023க்கான முன்னுரிமைகள்

- வலுவான மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்களைப் பேணும் முயற்சிகள்.
- நிதி குற்றங்களுக்கு இணங்குவதில் கவனம் செலுத்துதல்.
- கொந்தளிப்பான சூழலில் கடன் இடர் முகாமை மீதான முயற்சிகள்.
- சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைக் கொள்கைகளை செயற்படுத்துதல் மற்றும் வணிக நடவடிக்கைகளில் அவற்றை ஒருங்கிணைத்தல்.

தந்திரோபாய குறிக்கோள்கள்	2022 க்கான முன்னுரிமைகள்	முக்கிய வெளிப்பாடுகள்	நிலை	உண்மை அடைவு		குறிப்புக்கள்
				2022	2021	
	ஐ.நா.நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு அர்ப்பணிப்பதன் மூலம் நேர்க்கணிய வர்த்தக நாம விம்பத்தைப் பெறுதல்	81 தேசிய பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் ஆங்கில மொழியின் சித்தி விகிதத்தை அதிகரிக்க ஆசிரியர் பயிற்சி அமர்வுகள், மாணவர் அடிப்படையிலான போட்டிகள், கண்காணிப்பு மற்றும் செயற்திறன் மதிப்பீடுகள்.	✓	–	–	அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் வழிகாட்டுதலின்படி அத்தியாவசியமற்ற செலவினங்களைக் குறைத்ததன் காரணமாக.
	உள்நாட்டு சமூகங்களை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளை ஆதரித்தல்	உள்நாட்டு வழங்குனர்களுக்கான செலவினத்தின் விகிதம் (%).	✓	100	100	
	நமது அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் நமது சுற்றுச்சூழல் தடம் குறைத்தல்	சக்தி நுகர்வு (GJ)	✓	29,218	33,539	
		நீர் நுகர்வு (m^3)	✓	70,430	88,986	
	பொருளாதார ஆதரவு	செலுத்தப்படும் நேரடி மற்றும் மறைமுக வரிகள் (ரூ. பில்லியன்)	✓	5.2	12.4	
		செலுத்தப்பட்ட பங்கிலாபம் (ரூ. பில்லியன்)	✓	–	3.5	

அடையப்பட்டது – ✓ பகுதியளவில் அடையப்பட்டது – ✓ அடையப்படவில்லை – ✗

அட்டவணை 9 →

2023க்கான முன்னுரிமைகள்

- பாதகமான பொருளாதார நிலைமைகளால் அதிகமான சமூகங்கள் எதிர்மறையாக பாதிக்கப்படுவதால், சமூகப் பாதுகாப்பிற்கான அரசாங்க முயற்சிகளுக்கு ஏற்ப நிறுவன சமூக பொறுப்பு திட்டங்களுக்கான நிதியை அதிகரித்தல்.
- சக்தி நுகர்வைக் குறைப்பதற்கான அர்ப்பணிப்பு.
- சக்தித் தேவைகளுக்காக புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களில் கவனம் செலுத்துதல்.
- சூழல் நட்பு செயற்பாடுகளுக்கு பங்களித்தல்.

ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு

வங்கித் துறையானது ஒரு பண்டமாக்கப்பட்ட இடமாகும். தயாரிப்புக்களும் சேவைகளும் எமது பண்டங்களாக விளங்குகின்ற அதேவேளை, மக்கள் எமது வியாபாரமாகத் திகழ்கின்றனர். இதன் விளைவாக, நீடுறுதிமிக்க பெறுமதி உருவாக்கத்திற்காக மக்கள்-மைய மற்றும் அக்கறைதாரர்-உள்ளடக்கிய அணுகுமுறை ஒன்றினை நாம் முன்னெடுக்கின்றோம். அதாவது, அக்கறைதாரர் ஈடுபாடானது எமது பெறுமதி-உருவாக்கச் செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒருங்கிணைக்கப்படுகிறது என்பதே அதன் அர்த்தமாகும். பெறுமதியினை அளவிடுவதற்கு, நாங்கள் எமது அக்கறைதாரர்களுக்கான விடயங்களை உருவாக்குகின்றோம், எமது ஒவ்வொரு பிரதான அக்கறைதாரர்களுக்குமான இலக்குகளை இனங்கண்டு, பெறுமதி-உருவாக்கக் குறிகாட்டிகள் மற்றும் எமது உறவின் தரம் ஆகியவற்றினூடாக மேற்படி இலக்குகள் மீதான விநியோகத்தினை அளவிடுகின்றோம்.

எமது ஒருங்கிணைக்கப்பட்ட அக்கறைதாரர் ஈடுபாட்டு பற்றிய செயலாக்கம்

பெறுமதி உருவாக்கத்திற்கான எமது அக்கறைதாரர்-மைய அணுகுமுறையானது, அக்கறைதாரரின் தேவைகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு பதிலளித்தல் மற்றும் நீண்ட கால நீறுதித் தன்மை தொடர்பில் நாங்கள் நேர்மறையாகத் தாக்கம் செலுத்தக் கூடிய விடயங்களில் நடவடிக்கையினை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். நாங்கள் நீடுறுதித் தன்மை மீது மைய அவதானம் செலுத்துவதற்கும் மற்றும் பிரதான அக்கறைதாரர்களுடன் நீண்ட கால கூட்டுப் பங்காளித்துவங்களைக் கட்டியெழுப்புவதற்கும் எங்களுடைய தொகுதி முழுவதிலும் எமது முயற்சிகளை சீரமைத்து வருகின்றோம்.

எங்களுடைய அக்கறைதாரர் ஈடுபாட்டுச் செயன்முறையானது பின்வரும் படிமுறைகளை உள்ளடக்குகின்றது:

1. அக்கறைதாரரை இனங்காணல்
2. எங்களுடைய பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான செல்வாக்கு மிக்க விடயங்களின் அடிப்படையில் பிரதான அக்கறைதாரரை முன்னுரிமைப்படுத்தல்
3. அக்கறைதாரர் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஈடுபாட்டு முறைகளை வரையறை செய்தல்
4. அக்கறைதாரர் தொடர்புகளை மதிப்பாய்வு செய்யும் வகையில் ஒரு கண்காணிப்புப் பொறிமுறையினைத் தாபித்தல்.

நாங்கள் எமது எதிர்கால சான்றுறுதி மிக்க வங்கி மூலோபாயத்தினைக் கொண்டு எமது அக்கறைதாரர் இலக்குகளை சீர்படுத்தும் நோக்கில் எமது அக்கறைதாரர் பற்றிய தோற்றப்பட்டினை மேம்படுத்துவதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புச் செய்து வருகின்றோம்.

அக்கறைதாரரை இனங்காணல்

எங்களுடைய செயற்பாடுகள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் போன்றவை, நாங்கள் எங்களுடைய அக்கறைதாரர்களாக கருதுகின்ற ஒரு பல்வேறுபட்ட தனிநபர்கள் மற்றும் குழுவினர் மீது ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன. இந்த அக்கறைதாரர்கள் எங்களைப் மாற்றியமைக்கும் திறனைக் கொண்டுள்ளதோடு, அவர்களின் உணர்வுகள் மற்றும் செயற்பாடுகள் போன்றன எமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் மற்றும் எமது மூலோபாய இலக்குகளை அடைந்து கொள்வதற்குமான எமது ஆற்றல்களை பெரிதும் பாதிக்கக் கூடும்.

எங்களுடைய செயற்பாடுகள் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு தாக்கத்தினைக் கொண்ட பின்வரும் அக்கறைதாரர் குழுக்களை நாங்கள் இனங்கண்டுள்ளோம். இந்தக் குழுக்களுடனான சுமூகமான தொடர்புகளை விருத்தி செய்து அதனைத் தொடர்ந்தும் பேணுவதே எங்களது குறிக்கோள் ஆகும்.

- பங்குதாரர்/ முதலீட்டாளர்
- வாடிக்கையாளர்கள்
- ஊழியர்கள்
- ஒழுங்குறுத்து-கையாளர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள்
- வணிகப் பங்காளர்கள்
- சமூகமும் மற்றும் சுற்றுச் சூழலும்

எங்களுடைய பெறுமதி உருவாக்கச் செயன்முறை மீதான செல்வாக்கின் அடிப்படையில் பிரதான அக்கறைதாரர் முன்னுரிமைப்படுத்தல்


எங்களுடைய செயற்பாடுகள் அக்கறைதாரர்களைப் பாதிக்கும் விதம் மற்றும் அவர்களின் அக்கறை மிக்க விடயங்களைத் தீர்த்து வைப்பதிலான எங்களுடைய அணுகுமுறைகளின் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் நாங்கள் ஈடுபாடு மிக்க அக்கறைதாரர்களுக்கு முன்னுரிமை அறிந்துள்ளோம். தேசிய சேமிப்பு வங்கி மீது அக்கறைதாரர்களும் மற்றும் அக்கறைதாரர்கள் மீது தேசிய சேமிப்பு வங்கியும் கொண்டுள்ள குறிப்பிடத்தக்க தாக்கம் தொடர்பில், அவற்றினை வினைத்திறன் மிக்க முறையில் இனங்கண்டு அவற்றைத் தொடர்பாடல் செய்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். மேலும், எமது முதன்மை நிலை அக்கறைதாரர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம், உருவாக்கப்பட்ட பெறுமதிப் பகிர்வினைப் புரிந்து கொண்டு அவற்றைச் சமநிலைப்படுத்த முடிகின்ற அதேவேளை, அவர்களின் அக்கறை மிக்க விடயங்களுக்கான தீர்வினை வழங்கவும் முடிகின்றது.

எமது நிறுவனத்தில் ஒரு உடைமை ஆர்வத்தினைக் கொண்ட தனிநபர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் முன்னுரிமை அளிக்கும் நோக்கில், நாங்கள் பின்வரும் அளவுகோல் தொகுதியினை உபயோகிக்கின்றோம்.

- வங்கியின் நிலைத்திருப்புக்கு இன்றியமையாதவர்கள்
- சம்பந்தப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புக்களுடன் தொடர்புடையவர்கள்
- வங்கியின் நடத்தை மீது செல்வாக்குச் செலுத்தும் வகையில் ஒரு தார்மீக அல்லது சட்ட ரீதியான திறனைக் கொண்டவர்கள்.
- தங்களது சொந்த விருப்பத்தின் பேரில் தீர்மானம் எடுக்க முடியாதுள்ள பிறரை முடிவெடுக்கச் செய்வதில் செல்வாக்குச் செலுத்துவோராக விளங்குபவர்கள்.
- வங்கிக்கு மிகவும் முக்கியமெனக் கருதப்படுகின்ற தொடர்புகளைக் கொண்டோர்.

வங்கி தொடர்பில் அக்கறைதாரர்கள் கொண்டுள்ள ஆர்வத்தின் அளவு மற்றும் எமது செயற்பாடுகளைப் பாதிக்கும் வகையில் அவர்கள் கொண்டுள்ள திறன் ஆகியவற்றைக் கருத்திற் கொள்கின்ற ஒரு மெட்ரிக்ஸினை உபயோகித்து எமது பிரதான அக்கறைதாரர்களை நாங்கள் இனங்கண்டு வருகின்றோம்.

உரு 10



அக்கறைதாரர் தேவைப்பாடுகள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் ஈடுபாட்டு முறைகளை வரையறை செய்தல்

அக்கறைதாரர்களை முன்னுரிமைப்படுத்தி அவர்களைத் தரவரிசைப்படுத்துவதன் மூலம், மாதிரிகள், மட்டங்கள், தன்மைகள் மற்றும் ஈடுபாட்டின் அளவு போன்றன உள்ளிட்ட அவர்களின் குறிப்பான தேவைப்பாடுகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய வங்கியினால் ஈடுபாட்டுத் திட்டங்களை உருவாக்க முடியும். எங்களுடைய அக்கறைதாரர் குழுக்கள் எம்முடன் உறுதியான இணைப்பினைப் பேணும் வகையில் பல்வேறு முறைசார்ந்த பொறிமுறைகளை நாம் நடைமுறையில் கொண்டுள்ளதோடு, முக்கிய விடயங்களை இனங்கண்டு அவற்றைக்கான தீர்வினை வழங்கும் நோக்கில் உள்ளக மற்றும் வெளியக அக்கறைதாரர்களுடன் தொடர்ச்சியான மற்றும் முறையான உரையாடலைப் பேணுவதற்கு நாங்கள் அதிக முக்கியத்துவத்தினை வழங்குகின்றோம்.

தற்போது நடைமுறையிலுள்ளதும் மற்றும் விரிவானதுமான தொடர்பாடல் செயன்முறை ஊடாக எமது அக்கறைதாரர்களுடன் சாத்தியம் மிக்க உறவுகளைப் பேணுவதே எமது இலக்காக விளங்குகின்றது. நாங்கள் அவர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அக்கறை மிக்க விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான நேருக்கு நேரான சந்திப்புகள், மாநாடுகள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் போன்ற பல்வேறு வகையான வழிமுறைகளை உபயோகித்து வருகின்றோம். எமது அக்கறைதாரர்களின் பின்னூட்டல்கள் எமக்கு மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். ஏனெனில், அவை எமது பெறுமதி உருவாக்கத்திற்கான ஒரு வெற்றிகரமான மூலோபாயங்களை உருவாக்க எமக்கு உதவுகின்றன.

அக்கறைதாரருடனான தொடர்புகளை மதிப்பாய்வு செய்யும் வகையில் ஒரு கண்காணிப்புப் பொறிமுறையினை தாபித்தல்

தேசிய சேமிப்பு வங்கியில், வள ஒதுக்கீட்டிற்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களை வினைத்திறன் மிக்க முறையில் தீர்மானிப்பதற்கு அக்கறைதாரருடனான தொடர்புகளை மதிப்பாய்வு செய்வது ஒரு இன்றியமையாத அம்சமாக விளங்குகின்றது. அவ்வாறு செய்வதன் மூலம், பொருள் சார்ந்த பிரச்சினைகளை எங்களால் இனங்கண்டு கொள்ள முடிவதோடு, நாங்கள் எங்களுடைய இலக்குகளை நிலையாக அடைவதனையும் உறுதி செய்கிறது. முன்னேற்றம் மிக்க நகர்வினைப் பேணி, பெறுமதி உருவாக்கம் மற்றும் தொடர்பின் தரம் போன்றவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ள பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளை (KPIs) உபயோகிப்பதன் ஊடாக எங்களது அக்கறைதாரர் ஈடுபாடுகளையும் அவர்களுடனான தொடர்புகளையும் மேம்படுத்துவதையே நோக்காகக் கொண்டுள்ளோம். மேலும் வங்கி முழுவதிலும் மேற்படி சுட்டிகளை துல்லியமாகவும் சீராகவும் அளவிடுவது எமது இலக்காகும்.

அக்கறைதாரர்களுக்காக நாம் உருவாக்கும் பெறுமதிகள்


நாங்கள் எங்களது அக்கறைதாரர்களுடன் ஈடுபடுகின்ற மற்றும் அவர்கள் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்கின்ற விதமானது அவர்களுடன் நாங்கள் கொண்டுள்ள உறவின் தரத்தினை பாதிக்கின்றது. இதனால், முக்கியத்துவம் வாய்ந்த அக்கறைதாரர்களின் பிரத்தியேகமான பெறுமதி எதிர்பார்ப்புக்களுக்குத் தீர்வளிக்கும் வகையில் நாங்கள் வாடிக்கையாளர்-உருவாக்க ஈடுபாட்டுத் திட்டங்களைக் கொண்டுள்ளோம். எமது அக்கறைதாரர்களுடன் சிறந்த ஈடுபாட்டினை ஏற்படுத்தவும் வலுவான உறவுகளைக் கட்டியெழுப்பவும் ஏதுவாக அமையக்கூடிய வாய்ப்புக்களை இனங்காணும் வகையில், மீளாய்வுப் பெறுமதிகளுக்கு எதிரான எங்களது தற்போதைய ஈடுபாட்டு மூலோபாயங்களை மதிப்பாய்வு செய்வதனை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம். நாங்கள் ஒரு தகவல் வழங்கப்பட்ட மதிப்பாய்வினை மேற்கொள்ளும் நோக்கில் பல்வேறு பின்னூட்டல் பொறிமுறைகளின் ஊடாக வாடிக்கையாளர்களுடனான எமது உறவுகளின் தரத்தினை அளவிடுகின்றோம்.

எமது அக்கறைதாரர்களுடனான உறவுகள் பற்றிய உள்ளக தர மதிப்பாய்வு	உறவின் தரம் பற்றிய குறிகாட்டி
பரஸ்பர அனுகூலம் பற்றிய வலுவான உறவு	●●●●●
சிறந்த தரம், மேம்பாட்டிற்கான சில வாய்ப்புகளுடன் கூடிய பரஸ்பர அனுகூலம் சார்ந்த உறவு	●●●●●
தாபிக்கப்பட்ட உறவு, பெறுமதி-உருவாக்க இணைப்பு, இருப்பினும் மேம்பாட்டிற்கான வாய்ப்புடன் கூடியது.	●●●●●
ஸ்தாபிக்கப்பட்ட உறவு, இருப்பினும் உறவின் தரத்தினை மேம்படுத்துவதற்கு மேலும் உழைக்க வேண்டியுள்ளது.	●●●●●
எந்தவொரு உறவும் இல்லை	●●●●●

ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு

பெறுமதி - உருவாக்கச் செயன்முறையின் ஊடாக எமது முக்கிய அக்கறைதாரர்கள் பற்றிய விடயச் சுருக்கம்

உரு 11



2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உறவின் தரம் அதிகரித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உறவின் தரம் குறைவடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உறவின் தரம் மாறாதுள்ளது.

பங்குதாரர்கள் /முதலீட்டாளர்கள்

எங்களுடைய ஈடுபாடு எதற்கானது

- முதலீட்டாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் பெறுமதி உருவாக்கம் பற்றிய எதிர்பார்ப்பு போன்றவற்றை புரிந்து கொள்வதன் மூலம் அவர்களின் தேவைகளுக்கு சிறந்த திருப்தியை வழங்கல்.
- எங்களுடைய நிறுவனத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்புதல்
- செலவுச் சிக்கனம் மிக்க முறையிலான நிதி அணுகல்

எங்களது ஈடுபாட்டு மூலோபாயம்

- எங்களுடைய வர்த்தக வாக்குறுதியின் ஒரு வெளியீடாக எமது பெறுமதி பற்றிய முன்மொழிவினை தொடர்பாடல் செய்தல்.
- ஒரு ஒழுங்கு முறையான அறிக்கை செய்தல் மற்றும் இலக்குப் படுத்தப்பட்ட தொடர்பாடல்கள் ஆகியவற்றின் ஊடாக எமது பெறுமதி முன்மொழிவு மற்றும் மூலோபாயம் பற்றிய விரிவாக்கத்தினை நிரூபித்துக் காட்டுதல்.
- பிரச்சினைகளை/ அக்கறை மிக்க விடயங்களை புரிந்து கொள்ள முயற்சிப்பதோடு, அவற்றுக்கான தீர்வினை வழங்குவதில் வங்கி எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதையும் புரிந்து கொள்ளல்.

எங்களது ஈடுபாடு எவ்வாறானது

- வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுக்கள்
- வருடாந்த ஒருங்கிணைந்த அறிக்கை.
- நிறுவன இணையத்தளம்
- நிதி அமைச்சினதும் ஏனைய முதலீட்டாளர்களினதும் பிரதிநிதிகளுடனான பிரத்தியேகச் சந்திப்புகள்.
- அக்கறைதாரர் வெக்காஸ்ட்கள்.

பிரதான பங்குதாரர் எதிர்பார்ப்புகள்

- முதலீடு மீதான நீண்ட கால நீடுறுதி மிக்க திரும்பல்.
- தற்போதைய பொருளாதாரச் சூழமைவில் தற்காப்பாக இருக்கும் வகையில் நடைமுறையிலுள்ள சொத்துக்களை பேணுதல் அல்லது மேம்படுத்துவதன் முக்கியத்துவம்.
- நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதோடு, இடர்-சீர்படுத்தல் திரும்பல்களை வழங்கல்
- முதலீடுகள் மீதான நீண்டகால நிலையான திரும்பல்.

எமது மூலோபாய பதிலளிப்பு

- பங்கு, மூலதனம் மீதான பங்கிலாபம் செலுத்தல்கள் மற்றும் பிணைகள் மீதான வட்டி செலுத்தல்கள், மற்றும் கடன்கள் மீதான வட்டி செலுத்தல்கள் போன்றவற்றின் ஊடாக வழங்குனர்களின் முதலீடுகள் தொடர்பில் ஒரு நிலையான திரும்பலை வழங்குகிறது.
- பொருளாதார நெருக்கடி மிக்க காலப் பகுதியில் சேவை அணுகல், கடன்தீர் இசைவு, கடன் நிவாரணத் திட்டங்கள் போன்றவற்றின் பிரகாரம், வாடிக்கையார் தேவைப்பாடுகள் உரிய வேளையில் நிறைவுசெய்யப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் நிதி அமைச்சின் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடனான ஈடுபாடுகளை நாங்கள் அதிகரித்துள்ளோம்.
- ஒரு பாதுகாப்பான மற்றும் உறுதியான வங்கியியல் முறைமை, தூண்டுதல் மிக்க மாநாடுகள், மற்றும் எதிர்மறையான இடருக்கு எதிரான பாதுகாப்பு போன்றவற்றுக்கு பங்களிப்புச் செய்யும் ஒரு உறுதியான ஐந்தொகைக் குறிப்பினை பேணுதல்.

உசாத்துணை குறிப்புகள்

நிதி சார் மூலதனம் – பக்கம் 100 – 115

பொருள் சார் விடயங்கள்



சம்பந்தப்பட்ட மூலதனங்கள்



நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை (SDGs) இணைத்துக் கொள்ளல்

ஐ.நா. வின் முதல்நிலை SDGs



ஐ.நா. வின் இரண்டாம் நிலை SDGs



உறவின் பெறுமதி எதிர்பார்ப்புக்களைப் புரிந்து கொள்ளல் மற்றும் அதனை அளவிடுதல்

பெறுமதி உருவாக்க வெளியீடு

பங்குதாரர்களுடன்/முதலீட்டாளர்களுடன் பகிரப்பட்ட பெறுமதி

ரூ. 2.5 பில்.	2.0%	பங்குதாரர் களுக்கான மொத்த திரும்பல்	ரூ. 3.6 பில்.	AAA
பங்குதாரர் களுக்கு ஏற்ற இலாபம்	நிகர வட்டி எல்லை	3.4%	பிணைதாரர் களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி	கடன் தரவரை பேணல்

தே.சே. வங்கியின் பெறுமதி எதிர்பார்ப்பு

பங்கு மூலதன உட்செலுத்தல்	கடன் சந்தைக்கான அணுகல்	முதலீட்டாளர் நம்பிக்கை	நேர்மறையான கடன் தர வரிசை	அதிக பங்கு மூலதன மற்றும் திரவத் தன்மைக்கான அணுகல்.

சிறப்பாகவுள்ளது | பணி இடம்பெற்று வருகிறது | அவதானம் தேவையாகவுள்ளது

வாடிக்கையாளர்கள்

எங்களுடைய ஈடுபாடு எதற்கானது

- வங்கியுடனான தொடர் ஈடுபாட்டின் மூலம் நிலையான வணிக நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்
- வாடிக்கையாளர் தக்கவைப்பினை உறுதிப்படுத்தல்
- புதிய வாடிக்கையாளர்களை கவர்கின்ற அதேவேளை தற்போதுள்ள வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்ளல்

எங்களது ஈடுபாட்டு மூலோபாயம்

- வர்த்தக வாக்குறுதி மற்றும் பெறுமதி முன்மொழிவு தொடர்பில் தொடர்பாடல் செய்தல்
- ஒரு சீரான அனுபவத்தினை வழங்கும் நோக்கில் சிறந்த உத்தரவாதம் வழங்கி தொடர் மேம்பாட்டினை வழங்கல்.
- வாடிக்கையாளர் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் அவர்களின் அக்கறை மிக்க விடயங்களை புரிந்து கொள்ளும் நோக்கில் முனைப்பான தொடர்பாடல் மற்றும் ஈடுபாடு போன்றன உள்ளிட்ட (மூலோபாயம், வணிக இற்றைப்படுத்தல், இயக்கப்பாட்டு விடயங்கள் போன்றன தொடர்பான அம்சங்கள் உள்ளட்டவை) வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம் மற்றும் பின்னூட்டல் பொறிமுறை.
- தொடர்ச்சியான சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகள்.
- எமது அனைத்துச் செயற்பாடுகள் மீதுமான மூலோபாயம் மற்றும் பெறுமதி முன்மொழிவு விநியோகம் மீதான சந்தைப்படுத்தல்

எங்களது ஈடுபாடு எவ்வாறானது.

- கிளை அலுவலகங்கள் மற்றும் பிரிவுகள் ஊடான பிரத்தியேக இடைவினை.
- மின்னஞ்சல், கூட்டுறவு இணையத்தளம் மற்றும் தொலைபேசிகள் போன்றன உள்ளிட்ட பல்வேறு தளங்கள் ஊடாக தொடர்பாடல் செய்யப்பட்ட இயக்கப்பாட்டு விடயங்கள்.
- ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட வாடிக்கையாளர் திருப்தி பற்றிய தரப்படுத்தல்கள்.
- தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள், கூட்டுறவு இணையத்தளம், வெகுசன ஊடகம் மற்றும் சமூக ஊடகம் ஆகிய வழிமுறைகள் ஊடாக பகிரப்படுதல்.
- ஏனைய தொடர்பாடல் வழிமுறைகள்: அழைப்பு நிலையங்கள் பற்றிய கூட்டுறவு நிகழ்வுகள்.

பிரதான வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள்

- வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்தல் பற்றிய நெகிழ்வுத் தன்மை கொண்ட மற்றும் புதிய வழிமுறைகள்.
- மிகவும் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் மிகவும் வசதியான சேவைகளை மக்கள் வேண்டுதல்.
- பிற வங்கிகளின் இயக்கப்பாட்டுச் சுற்றாடல்.. தொழில்துறை மற்றும் சேவை விநியோகத்தில் உள்ள மாற்றங்கள்.
- வாடிக்கையாளர்களின் அதிகரித்த நிதி சார் அறிவு.

எமது மூலோபாய பதிலளிப்பு

- திரும்பல்களை அதிகரிக்கின்ற அதேவேளை, வைப்புகள் மற்றும் முதலீடுகளைப் பாதுகாத்தல்.
- வினைத்திறன் மிக்க வழிமுறைகளை ஆரம்பித்தல் மற்றும் செலவு குறைந்த, வசதியான வங்கிச் சேவைகளை வழங்கல்.
- எங்களுடைய வாடிக்கையாளர்களின் தேவைகளை உணர்ந்து பிரத்தியேகப் பயனுடைய மற்றும் விரிவான நிதி சார்ந்த தீர்வுகளை வழங்கல்.
- எப்போதும் ஒரு விதிவிலக்கான வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்கும் வகையில் எமது மக்களைத் தயார்படுத்தி அவர்களுக்கு வலுவூட்டுதல்.
- பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு டிஜிடல் மயப்படுத்தல் மற்றும் மேம்பட்ட புத்தாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- இணையத் திருட்டு பற்றிய அச்சுறுத்தலுக்கு பதிலளிக்கும் வகையில் முனைப்புடன் செயலாற்றுவதோடு, வாடிக்கையாளர் தனியுரிமை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- எங்களது தகவல் தொழில்நுட்ப முறைமை குறித்தான உறுதித் தன்மை, பாதுகாப்பு மற்றும் துரித வேகம் ஆகியவற்றை உறுதிப்படுத்திப் பேணுதல்.
- எமது தயாரிப்புகள், விநியோக வழிமுறைகள் மற்றும் சந்தைகள் ஊடாக நிதி சார்ந்த உள்ளடக்கத்திற்கு பங்களிப்புச் செய்தல்.
- வினைத்திறன் மிக்க செயலாக்கம் மற்றும் தானியக்கம் போன்றவற்றை அதிகரித்தல்.
- எமது அணுகல் மையத்தின் கொள்திறனை அதிகரித்து பல்வழிமுறை விநியோகத்தினை வலுவூட்டல்.

உசாத்துணை குறிப்புகள்

- நேர்மையான வாடிக்கையாளரைக் கட்டியெழுப்புதல் – பக்க இல. 150
- எமது இருப்பினையும் அணுகலையும் அதிகரித்தல் – பக்கம் 118
- எமது டிஜிடல் அடையாளத்தினை விரிவாக்கம் செய்தல் – 119
- எமது இயக்கப்பாட்டு செயன்முறையினை மேம்படுத்தல் – 120

பொருள் சார் விடயங்கள்



சம்பந்தப்பட்ட மூலதனங்கள்



நீடுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை (SDGs) இணைத்துக் கொள்ளல்

ஐ.நா. வின் முதல்நிலை SDGs



ஐ.நா. வின் இரண்டாம் நிலை SDGs



உறவு பற்றிய பெறுமதி எதிர்பார்ப்புக்களை புரிந்து கொள்ளலும் அவற்றை அளவிடலும்

	வாடிக்கையாளர்களுடன் பகிரப்பட்ட பெறுமதி			தே.சே.வங்கியின் பெறுமதி எதிர்பார்ப்பு			
பெறுமதி உருவாக்க வெளியீடு	13.0 மில்லியன் செயல் நிலையிலுள்ள வாடிக்கையாளர் கணக்குகள்	ரூபா. 133.2 பில். வைப்பாளர் களுக்கு செலுத்தப்பட்ட வட்டி	டிஜிடல் தளம் குறித்தான ஈடுபாடு மற்றும் விருத்தி – இணைய வங்கிச் சேவையில் 9.8% வளர்ச்சி.	வாடிக்கையாளர் களின் நிதி சார்ந்த தீர்வுகளை நிறைவேற்றல்/ வாடிக்கையாளர் களுக்கான வினைத்தின் மிக்க நிதி சார்ந்த தீர்வுகள்	மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவம்	வாடிக்கையாளர் களை அணுகிப் பெறலும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்ளலும்	சந்தைப் பங்கில் அதிகரிப்பு
	✓	✓	✓	✓	✓	●	●

✓ சிறப்பாகவுள்ளது ✓ பணி இடம்பெற்று வருகிறது ● அவதானம் தேவையாகவுள்ளது

ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு

ஊழியர்கள்

எங்களுடைய ஈடுபாடு எதற்கானது

- வணிகத்தை நிலைநிறுத்துவதற்கு ஊழியர்கள் இன்றியமையா மையப் பொருளாகும்.
- ஆக்கபூர்வமான, உந்துசக்தி கொண்ட மற்றும் ஈடுபாடு மிக்க தொழில் படை ஒன்றினை உருவாக்குவதற்கு ஊழியர் ஈடுபாடு இன்றியமையாத விடயமாகும்.
- வணிகக் குறிக்கோள்களை அடைவதன் மூலம் மூலோபாயம் மிக்க விநியோகத்தினை உறுதிப்படுத்தல்.

எங்களது ஈடுபாட்டு மூலோபாயம்

- ஊழியர் பெறுமதி பற்றிய முன்மொழிவினை தொடர்பாடல் செய்தல்
- வணிக மூலோபய விநியோகத்தையும் வர்த்தக வாக்குறுதி மற்றும் எமது பெறுமதியினது விநியோகத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கில் வணிகக் குறிக்கோள்களை தொடர்பாடல் செய்து அவற்றை அடைந்து கொள்ள எத்தனித்தல்.
- அக்கறை மிக்க விடயங்களைப் புரிந்துகொண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதோடு, ஊழியர் வாழ்க்கை வட்டத்தின் ஊடாக வாடிக்கையாளர் உறவுகளை மேம்படுத்தல்.

எங்களது ஈடுபாடு எவ்வாறானது

- செய்தித் தகவலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பல தளங்களைக் கொண்ட விரிவான உள்ளக தொடர்பாடல்கள்.
- ஊழியர் விருது மற்றும் அங்கீகார நிகழ்ச்சித்திட்டங்கள்.
- ஊழியர்களுக்கும் வரிசை முகாமையாளர்களுக்கும் இடையில் நபருக்கு-நபர் ஊடாட்டம்
- செயலாற்றுகை மதிப்பாய்வு மற்றும் நிறுவனத்தை விட்டும் வெளியேறுதல் பற்றிய நேர்காணல்.
- மனக்குறைகளை கையாளுவதற்கான பொறிமுறை
- நலனோம்புகை நிகழ்வுகளும் செயற்பாடுகளும்

பிரதான ஊழியர்கள் எதிர்பார்ப்புகள்	எமது மூலோபாய பதிலளிப்பு	உசாத்துணை குறிப்புகள்
● நியாயமான மற்றும் சந்தை சார்ந்த ஊதியம். ● பணி இடம் பற்றிய நெகிழ்வுத் தன்மை ● உள ஆரோக்கியம் தொடர்பில் அவதானம் செலுத்தல் - அத்தியாவசிய வளங்களை ஊழியர்களுக்கு வழங்குதல். ● செயலாற்றுகை மற்றும் பிரத்தியேக அபிவிருத்திக்காக அங்கீகாரம் வழங்கி விருதுகள் வழங்குதல். ● பல்வேறு தளங்கள் ஊடாக இரு வழி தொடர்பாடலுக்கான தேவை. ● தொழில் பாதுகாப்பு. ● கூட்டான பேச்சுவார்த்தைக்கான சுதந்திரம் ● கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ● நம்பிக்கை மற்றும் வெளிப்படைத் தன்மை பற்றிய ஒரு தொடர்பு. ● முரண்பாடற்ற மற்றும் பாதுகாப்பான பணியிடச் சூழமைவு.	● கூட்டான பேரம்பேசலுக்கு இணங்க போட்டித் தன்மைக்கு ஏற்ற ஊதியம். ● வங்கியின் கலாசாரம் மற்றும் வணிகத்துடன் பரிச்சயம் பெறும் வகையில் புதிய ஊழியர்களுக்கு புகுமுகப் பயிற்சிகளை வடிவமைத்து வழங்கல். ● சம்பந்தப்பட்ட அம்சங்களைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் எமது ஊழியர்களின் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக ஆதரவினையும் ஊக்குவிப்பினையும் அவர்களுக்கு வழங்குவதோடு, உள்ளக தொழில் அபிவிருத்திக்கும் அவர்களை ஊக்குவித்தல். ● நல்வாழ்வுத் திட்டங்களை வழங்குதல்: தொழிலில் உள்ள போதும் மற்றும் ஓய்வு பெற்ற பின்னரும் நிதி, உடல் மற்றும் உளம் சார்ந்த ஆதரவினை வழங்குதல். ● எதிர்காலத் தேவைக்காகவும் ஊழியரின் அபிவிருத்திக்காகவும் திறன் கட்டியெழுப்புகைக்கு உதவும் வகையில் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கல். ● அனைத்து தொழிலாளர் சட்டங்களையும் ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு இணங்கியொழுகுதல் மற்றும் மனித உரிமைகளை நிலைநாட்டுதல். ● பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வு மூலம் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் முரண்பாடுகளை வினைத்திறன் மிக்க முறையில் தீர்த்து வைத்தல்.	மனித மூலதனம் – பக்கம் 147

பொருள் சார் விடயங்கள்



சம்பந்தப்பட்ட மூலதனங்கள்



நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை (SDGs) இணைத்துக் கொள்ளல்

ஐ.நா. வின் முதல்நிலை SDGs



ஐ.நா. வின் இரண்டாம் நிலை SDGs



உறவு பற்றிய பெறுமதி எதிர்பார்ப்புக்களை புரிந்து கொள்ளலும் அவற்றை அளவிடலும்

பெறுமதி உருவாக்க வெளியீடு

ஊழியர்களுடன் பகிரப்பட்ட பெறுமதி

ரூபா. 13.8 பில்.	45% ஆண் மற்றும் 55% பெண் ஊழியர்கள்	சரியான நடத்தையினை முன்னிறுத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தி எமது கலாசாரத்தை மேம்படுத்தல்.	22,603 மணித்தியால பயிற்சி
ஊதியம் மற்றும் நலன் களுக்காக செலுத்தப்பட்டது			

தே.சே.வங்கியின் பெறுமதி எதிர்பார்ப்பு

திறமைகளைக் கவர்ந்து அவற்றைத் தக்கவைத்துக் கொள்ளல்.	புத்தாக்கமும் அர்ப்பணிப்பும் மிக்க தொழிற்படை	உற்பத்தித் திறன், வினைத்திறன் மற்றும் போட்டித் திறன் கொண்ட தொழிற்படை	தொழில் நெறிமுறைகள் மற்றும் தொழில்வாண்மை ஆகியவற்றை நிலைநிறுத்துதல்.

✓ சிறப்பாகவுள்ளது ✓ பணி இடம்பெற்று வருகிறது ✓ அவதானம் தேவையாகவுள்ளது

ஒழுங்குறுத்துகை நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களும்

எங்களுடைய ஈடுபாடு எதற்கானது

- ஒழுங்குறுத்துகை நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களும் வணிகத்தை முன்னெடுப்பதற்கான செலவு மற்றும் முதலீட்டில் நியாயமான திரும்பலைப் பெற்றுக் கொள்வதற்கான எமது இயலுமை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கொள்கைகள், சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றை வெளியிடுகின்றது.
- இந் நிறுவனங்கள் சட்டவாக்கங்களுக்கும் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இணக்கமுறாமைக்காக விதிக்கப்படும் அபராதங்கள் ஊடாக அபராதங்கள் விதிப்பதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றன
- முதலீட்டாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் நம்பிக்கையூட்டும் ஒழுங்குறுத்துகை மற்றும் வெளிப்படைத் தன்மை வேலைச்சட்டகம்

எங்களது ஈடுபாட்டு மூலோபாயம்

- இணக்கப்பாடின்மை அற்ற மூலோபாயப் பிரயோகம்
- சர்வதேச மற்றும் உள்நாட்டு துறை சார்ந்த சிறந்த நடைமுறைகளைப் பொருந்திக் கொள்ளல்
- ஒழுங்கு படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுங்குறுத்துகை மாற்றம் போன்றவற்றுடன் பயனுறுதி மிக்க இணக்கப்பாடு
- உறுதியான மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்கள
- ஒழுங்குறுத்துகை திரும்பல்கள் மீதான பின்னூட்டல் மற்றும் மேற்பார்வைகள்

எங்களது ஈடுபாடு எவ்வாறானது

- சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சுற்றுநிரூபங்கள் மற்றும் பணிப்புரைகள் போன்றவற்றுக்கு இணக்கமுறுதல்.
- அரசாங்க மற்றும் ஒறுங்குறுத்துகை நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பிரத்தியே சந்திப்பு மற்றும் ஈடுபடல்கள்
- வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுகள்
- கைத்தொழில் மற்றும் பொது கருத்துக் களமன்றங்களில் பங்கேற்றல்.
- ஒழுங்குறுத்துகை மற்றும் அரசாங்க நிறுவனங்கள் மேற்கொள்ளும் நியாயாதிக்க சோதனைகளுக்கு பதிலளித்தல்.
- வரைவு ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் தொடர்பில் ஈடுபடல்.
- பல்வேறு சமூக நிகழ்ச்சித் திட்டங்களில் கூட்டுப் பங்காளராதல்.

பிரதான ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள்

- சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுக்கும் இசைவுறுதல்.
- வேலை உருவாக்கம் மற்றும் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகள்.
- சேவையின் தரம், செலவுகள், மற்றும் தனியுரிமை போன்றன மீதான வாடிக்கையாளர் நலன்களைப் பாதுகாத்தல்.
- தேசிய வரி அடிப்படை/வருமானத்திற்கு நிலையான பங்களிப்பினை வழங்குதல்.
- கைத்தொழில் மற்றும் ஒழுங்குறுத்துகை சார் பணிக் குழுக்களில் முனைப்புடன் பங்கேற்று அவற்றுக்குப் பங்களிப்புச் செய்தல்.
- பொருளாதார நெருக்கடி மிக்க காலப் பகுதியிலும் கூட பொதுமக்களுக்கான ஒரு அத்தியவசியச் சேவை என்ற வகையில் எமது வங்கிச் சேவையினை இடையறாது வழங்கல்.
- பொருளாதாரத்திற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட கொவிட்-19 நிவாரணப் பொதிகள் மற்றும் நாணய ஊக்குவிப்பு குறித்தான அனுகூலங்கள் பற்றிய சவால்களுக்கு முகங்கொடுத்தல்.

எமது மூலோபாய பதிலளிப்பு

- தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் மூலம் வேண்டப்பட்டவாறாக அரசாங்க பிணைகளிலான முதலீடானது சமூகப் பொருளாதார அபிவிருத்தி சார்ந்த பொருளாதாரத் தேவைகளுக்கு நிதியிடுவதற்கு ஆதரவளிக்கின்றது.
- பங்கிலாபம், வரி, திறைசேரிக் கட்டணங்கள், மற்றும் விசேட அறவீடுகள் போன்ற நிதிப் பங்களிப்புகள் மூலம் அரசாங்க வரவுசெலத்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்தல்.
- வங்கியியன் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஊடாக அரசாங்கத்தின் சமூக மற்றும் பொருளாதார ஆணைக்கு பங்களிப்புச் செய்தல் (உதா: நிதி உள்ளடக்கம், டிஜிடல் உள்ளடக்கம், பெண்களின் சமூக மற்றும் பொருளாதார பங்களிப்பினை அதிகரித்தல்.)
- உள்நாட்டு பொருட் கொள்வனவு மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை, கூட்டுறவுச் சமூக பதிலளிப்பு முன்நகர்வுகளுக்கு பெறுமதி சேர்த்தல்.
- நீடுறுதி மிக்க வங்கியியல் நடைமுறைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இணக்கப்பாடுகளைப் பொருந்திக் கொள்வதன் மூலம் பாதுகாப்பான மற்றும் நிலையான வங்கியியல் முறைமை ஒன்றினை இயலச் செய்தல்.

உசாத்துணை குறிப்புகள்

ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டினை வலுப்படுத்தல் - பக்கம் 157-158

பொருள் சார் விடயங்கள்



சம்பந்தப்பட்ட மூலதனங்கள்



நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை (SDGs) இணைத்துக் கொள்ளல்

ஐ.நா. வின் முதல்நிலை SDGs



ஐ.நா. வின் இரண்டாம் நிலை SDGs



உறவு பற்றிய பெறுமதி எதிர்பார்ப்புக்களை புரிந்து கொள்ளலும் அவற்றை அளவிடலும்

பெறுமதி உருவாக்க வெளியீடு

ஒழுங்குறுத்துகை மற்றும் அரசாங்க நிறுவனங்களுடன் பகிரப்பட்ட பெறுமதி

ரூபா. 5.2 பில்.
அரசாங்கத்திற்கு வரி செலுத்தப்பட்டது.

18.0%
மொத்தமான CAR
(குறைந்தபட்ச ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடு – 12.0%)

பூச்சியம்
இணக்கப்பாடு இன்மைக்கான சகிப்புத்தன்மை.

தே.சே.வங்கியின் பெறுமதி எதிர்பார்ப்பு

வங்கியின் வணிக நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்ற நியாயமான ஒழுங்குவிதி.

✓ சிறப்பாகவுள்ளது ✓ பணி இடம்பெற்று வருகிறது ✓ அவதானம் தேவையாகவுள்ளது

ஒருங்கிணைந்த அக்கறைதாரர் ஈடுபாடு

வணிகப் பங்காளர்கள்

எங்களுடைய ஈடுபாடு எதற்கானது

- எங்களுடைய உயர்-தரச் சேவை வழங்கலில் விநியோகஸ்தர்கள் ஒரு முக்கியமான வகிபாகத்தினைக் கொண்டுள்ளனர்.
- ங்கியின் ESG மூலோபாயத்திற்கு அமைவான விநியோகஸ்தர் ஈடுபாடு.

எங்களது ஈடுபாட்டு மூலோபாயம்

- வணிக கொடுக்கல் வாங்கல்களில் வெளிப்படைத் தன்மை
- வணிகப் பங்காளர்களின் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் அக்கறை மிக்க விடயங்களை புரிந்து கொள்வதற்கான செயலூக்கம் கொண்ட (எமது வர்த்தக வாக்குறுதி, மூலோபாயம், வணிக இற்றைப்படுத்தல்கள் மற்றும் இயக்கப்பாட்டு அம்சங்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை கூட்டிணைத்தல்) மற்றும் பின்னூட்டல் பொறிமுறைகள்
- திட்டமில் மற்றும் கூட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் தகவல்களை பகிர்தல்.

எங்களது ஈடுபாடு எவ்வாறானது

- பொருள் கொள்வனவு மற்றும் இலகுபடுத்தல் முகாமைத்துவத்துடன் பிரத்தியேக சந்திப்புகள்.
- விநியோகஸ்தர் உள்வாங்குகை மற்றும் புகுமுக நிகழ்ச்சித்திட்டங்கள்
- சேவை மட்ட உடன்படிக்கை முகாமைத்துவம் மற்றும் சேவை விநியோக பின்னூட்டல் மற்றும் விநியோகஸ்தரின் நன்னடத்தைக் கோவைக்கான இணக்கப்பாடு உள்ளிட்ட கண்காணிப்பு
- தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய பயிற்சி அமர்வுகள்
- நடைமுறையிலுள்ள கள விஜயங்கள்.

பிரதான வணிகப் பங்காளர் எதிர்பார்ப்புகள்	எமது மூலோபாய பதிலளிப்பு	உசாத்துணை குறிப்புகள்
● அனைத்து வணிகப் பங்காளர்களுக்கும் நியாயமானதும் சமமானதுமான பேணுகை ● செலவுச் சேமிப்பு மற்றும் குறிக்கோள் சார்ந்த செயலாற்றுகை. ● வணிகப் பங்காளித்துவ முகாமைத்துவத்தை மேம்படுத்தல்.	● விநியோகஸ்தர் உடன்படிக்கைகள் தொடர்பிலான தொடர் மீளாய்வு மற்றும் மேம்பாடுகள். ● சாத்தியமான குறைந்தபட்ச காலப் பகுதியினுள் ஒப்பந்தங்களை வழங்கல் மற்றும் குறித்த காலத்தில் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல். ● உள்நாட்டு வணிகத் துறைக்கு உதவும் வகையில் நியாயமான விதிமுறைகளுக்கு ஏற்ப தயாரிப்புகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்.	வலுவான பங்காளித்துவத்தினை கட்டியெழுப்புதல் – பக்கம் 155 – 156

பொருள் சார் விடயங்கள்

சம்பந்தப்பட்ட மூலதனங்கள்

நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை (SDGs) இணைத்துக் கொள்ளல்

ஐ.நா. வின் முதல்நிலை SDGs

ஐ.நா. வின் இரண்டாம் நிலை SDGs

உறவு பற்றிய பெறுமதி எதிர்பார்ப்புக்களை புரிந்து கொள்ளலும் அவற்றை அளவிடலும்

பெறுமதி உருவாக்க வெளியீடு

வர்த்தகப் பங்காளருடன் பகிரப்பட்ட பெறுமதி

ரூபா. 906.1 மில்.
உள்நாட்டு பொருட் கொள்வனவிற்காக அனுப்பி வைக்கப்பட்டது

ரூபா. 370.1 மில்.
தகவல் தொழில்நுட்ப வேவை வழங்கல் நிறுவனங்களிடம் இருந்தான பொருட் கொள்வனவு

தே.சே.வங்கியின் பெறுமதி எதிர்பார்ப்பு

உள்நாட்டு பொருட் கொள்வனவிற்கு ஆதரவளிப்பதோடு, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களைக் கட்டியெழுப்புதல்.

சிறப்பாகவுள்ளது | பணி இடம்பெற்று வருகிறது | அவதானம் தேவையாகவுள்ளது

சமூகம் மற்றும் சூழமைவு

எங்களுடைய ஈடுபாடு எதற்கானது

- பரஸ்பர அனுகூலம் கொண்ட உறவுகளைப் பேணும் நோக்கில் எமது சமுதாயத்தின் சவால்கள் மற்றும் அவர்களது அக்கறை மிக்க விடயங்கள் பற்றிய புரிந்துணர்வு.
- எடுத்துக் காட்டுக்களைக் கொண்டு முன்னணி வகிக்கும் வகையில் எமது மூலோபாய வழிமுறைக்கு இணங்க, எமது சமுதாயங்களில் சாத்தியம் மிக்க சமூக-பொருளாதார தாக்கங்களை மேற்கொள்வதற்கு நாங்கள் உழைக்கின்றோம்.
- ஊடகம், கருத்து உருவாக்குனர், செல்வாக்குச் செலுத்துனர், மற்றும் கருத்துக் களமன்றங்கள் போன்றன எமது இயக்கப்பாட்டில் தாக்கம் செலுத்தக் கூயடினவாகும்.

எங்களது ஈடுபாட்டு மூலோபாயம்

- எமது பெறுமதி பற்றிய நிலைப்பாட்டினை தொடர்பாடல் செய்வதோடு, வர்த்தக வாக்குறுதிகள் பற்றியும் தொடர்பாடல் செய்தல்.
- செயலூக்கம் கொண்ட தொடர்பாடல் மற்றும் சமூகத்துடனான ஈடுபாடு போன்றன உள்ளிட்ட தொடர் உறவு முகாமைத்துவம்.
- வங்கியின் இயக்கப்பாடுகள் தொடர்பில் நடைமுறையிலுள்ள சூழமைவு சார்ந்த பகுப்பாய்வு மற்றும் தாக்க மதிப்பாய்வு.

எங்களது ஈடுபாடு எவ்வாறானது

- பல்வேறு தளங்கள் மூலம் சமூகத்துடனான நேரடியான மற்றும் மறைமுகமான தொடர்பாடல்கள்.
  - நேரடியானவை: கூட்டுறவு இணையத் தளங்கள், சமூக ஊடகங்கள், விளம்பரங்கள், நேர்காணல்கள், பிரசுரங்கள், அறிவித்தல்கள், வருடாந்த அறிக்கைகள், மற்றும் நிதிக் கூற்றுக்கள்.
  - மறைமுகமானவை: திறன் விருத்தி அமர்வுகள், சுற்றாடல் விழிப்புணர்வு அமர்வுகள், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள்

பிரதான சமூக மற்றும் சூழமைவு சார்ந்த எதிர்பார்ப்புகள்	எமது மூலோபாய பதிலளிப்பு	உசாத்துணை குறிப்புகள்
● சமூகத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு. ● எங்களது முன்னெடுப்புகள் மீதான தாக்கத்தினை அளவிடுவதற்கான அவதானம் செலுத்துகை.	● அனைவருக்கும் வழங்கக் கூடிய தயாரிப்புகள் மற்றும் சேவைகள். ● வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் தகவல்களுக்கான அணுகல். ● உள்நாட்டு வியாபாரங்களுக்கு உதவும் வகையில் நியாயமான விதிமுறைகளின் கீழ் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல். ● நிதி சார்ந்த ஆதரவு ● தொழில் உருவாக்கம் மற்றும் வணிக வாய்ப்புகள் ● வங்கியினதும் மற்றும் வணிகத்தினதும் நீடுதித் தன்மை. ● பூகோள மற்றும் தேசிய அபிவிருத்தி இலக்குகளை வழங்குதல். ● செயலாற்றுகை மற்றும் ஆளுகை பற்றிய வெளிப்படைத் தன்மை ● வகைப் பொறுப்பு மிக்க முதலீடு மற்றும் வங்கியியல் நடைமுறைகள். ● கொவிட்-19 தொற்று நோய் காலப் பகுதியின் பொழுது நிதி சார்ந்த உதவி மற்றும் தொடர் சேவைகளை வழங்கியமை.	சமூகத்தின் வளர்ச்சியினைக் கட்டியெழுப்புதல் – பக்கம் 158-161 நிறுவன நீடுறுதித் தன்மைக் கலாசாரம் மற்றும் வணிக மாதிரி – பக்கம் 73-76

பொருள் சார் விடயங்கள்



சம்பந்தப்பட்ட மூலதனங்கள்



நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகளை (SDGs) இணைத்துக் கொள்ளல்

ஐ.நா. வின் முதல்நிலை SDGs



ஐ.நா. வின் இரண்டாம் நிலை SDGs



உறவு பற்றிய பெறுமதி எதிர்பார்ப்புக்களை புரிந்து கொள்ளலும் அவற்றை அளவிடலும்

பெறுமதி உருவாக்க வெளியீடு

சமூகம் மற்றும் சுற்றாடலுடன் பகிரப்பட்ட பெறுமதி

18,556 m^3 நீர் நுகர்வில் குறைவு	344,347 kWh நீர் நுகர்வில் குறைவு

தே.சே.வங்கியின் பெறுமதி எதிர்பார்ப்பு

"சிறந்த கூட்டுறவுப் பிரஜை" எனும் நிலை	இளைஞர் மற்றும் யுவதிகளை வலுவூட்டல்	சமூகங்களுடனான பங்கேற்றல்கள்

✓ சிறப்பாகவுள்ளது ✓ பணி இடம்பெற்று வருகிறது ✓ அவதானம் தேவையாகவுள்ளது

முகாமைத்துவ உரையாடல் மற்றும் பகுப்பாய்வு

நிதியியல் மூலதனம் 100

தொழிற்பிரிவுகள் பற்றிய மீளாய்வு 111

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் 116

புலமை மூலதனம் 123

மனித மூலதனம் 130

சமூக மற்றும் உறவுசார் மூலதனம் 148

இயற்கை மூலதனம் 162



நிதியியல் மூலதனம்

எமது நிதியியல் மூலதனத்தின் முக்கிய கூறுகள்

எமது வலுவான நிதியியல் மூலதனமானது நிலைபெறத்தக்க பெறுமதி உருவாக்கத்திற்காக ஈடுபடுத்துவதற்கு கிடைக்கப்பெறுகின்ற நிதியங்களைக் கொண்ட தொகுதியாகும். தேசிய சேமிப்பு வங்கியில், எமது நிதியியல் மூலதனமானது பொதுத் திறைசேரியினால் பங்களிக்கப்பட்ட நிதிசார் வளங்களையும் எமது தொழில் நடவடிக்கைகள் ஊடாக உருவாக்கப்பட்ட நிதியங்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு வங்கிக்குக் கிடைக்கப்பெறுகின்ற நீண்ட கால நிதியங்களை இது கொண்டிருப்பதுடன் பங்குரிமைமூலதன நிதியிடல், பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகள், மற்றும் தகைமைபெறுகின்ற நிபந்தனைகளை நிறைவுசெய்கின்ற படுகடன் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. எமது வங்கித்தொழில் தொழிற்பாடுகள் எமது நிதியியல் மூலதனத்தின் அளவிலேயே அதிகளவில் தங்கியிருக்கின்றது என்ற ரீதியில் எமது நிதியியல் மூலதனத்தை முகாமைசெய்வதை பாரிய பொறுப்பொன்றாக நாம் கருதுகின்றோம்.

முக்கிய உள்ளீடுகள்

- காசும் காசுக்கு சமமானவைகளும்
- பங்கு மூலதனமும் ஒதுக்குகளும்
- வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த வைப்புகள்
- நீண்ட மற்றும் குறுகிய கால கடன்பெறுதல்கள்

முக்கிய சவால்கள்

- தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியில் மந்தநிலை
- பொருளாதார நெருக்கடி
- மூலதனத்தின் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் அழுத்தங்கள்
- அரசாங்கப் பிணையங்களில் கட்டாய முதலீட்டில் இருந்து ஈட்டப்பட்ட மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களை பகிர்ந்தளித்தலில் இருந்தான வருமானத்திற்கிடையில் உயர் விட்டுக்கொடுப்புகள்
- அதிகரித்து வரும் குறைந்த செலவு நிதியிடல்
- அதிகரித்த வரிகள்
- கடன் வழங்குவதற்கான குறைவடைந்த வாடிக்கையாளர் கேள்வி

முக்கிய வாய்ப்புகள்

- வட்டி வீத உயர்வுகள் காரணமாக வருவாயில் அதிகரிப்பு
- தொழிற்பாட்டு உன்னதத்தை அடைவதற்கான இயலுமை
- புதிய வருமானம் ஈட்டும் வழிகளைக் கண்டறியும் வாய்ப்பு

முக்கிய உள்ளீடுகள்

உபாயச் செயலாற்றம்

வட்டி வருமான வளர்ச்சி
31.6%
(2021 – 7.3%)

வட்டி வருமானம்
ரூ. 172.9 பில்லியன்
(2021 – ரூ. 131.4 பில்லியன்)

வருமாத்திற்கான – செலவு விகிதம்
62.95% (2021 – 33.17%)

பங்குதாரர்களுக்கான பெறுமதி

பங்குரிமைமூலதனம் மீதான ஆதாயம்
3.40% (2021 – 33.92%)

பங்கொன்றிற்கான பங்கிலாபம் –
ஏதுமில்லை (2021 – ரூ. 3.72)

உயர் சாத்தியமிக்க இடர்நேர்வுத் தொகுப்பு

ஏற்பாட்டு உள்ளடக்க விகிதம் (கட்டம் 3): **38.9%**
(2021 – 31.5%)

செயலாற்றமற்ற கடன் விகிதம்
3.98%
(2021 – 2.97%)

வைப்புகள் மற்றும் கடன்களில் வளர்ச்சி

கடன்கள் மற்றும் முற்பணங்கள் வளர்ச்சி: **2.6%**
(2021 – 4.3%)

திரட்டப்பட்ட வைப்புகள்
ரூ. 15.8 பில்லியன்
(2021 – ரூ. 192.6 பில்லியன்)

வலுவான மூலதனமும் திரவத்தன்மையும்

மொத்த மூலதனப் போதுமை விகிதம்
18.00%
(2021 – 20.83%)

அனைத்து நாணய திரவத்தன்மை உள்ளடக்க விகிதம்
193.49%
(2021 – 240.43%)

எமது நிதியியல் மூலதனத்தை நாம் எவ்வாறு வளர்க்கின்றோம்

1. வருவாய் ஈட்டும் வழிகளை மேம்படுத்துதல் மற்றும் செலவு மட்டங்களை உகந்ததாக்குதல் ஊடாக இலாபத்தன்மையில் நிலையான வளர்ச்சியைப் பேணுவதன் மூலம் வலுவான உபாய செயலாற்றத்தை அடைந்துகொள்ளுதல்.
2. சவால்களுக்கு மத்தியில் கடன் வழங்குதல், முதலீட்டு வாய்ப்புகளை அநுகூலமிக்கவாறு பயன்படுத்துதல் மற்றும் முன்மதிமிக்க படுகடன் தொகுப்பை முகாமைசெய்தல் என்பன ஊடாக ஐந்தொகை வளர்ச்சியினை உறுதிசெய்தல்.
3. மூலதன அளவுகளை ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்கு மேல் அத்துடன் வங்கியின் இடர்நேர்வு ஏற்பினுள் பேணுதல்.
4. வங்கியின் தொழிற்பாடுகளின் சீரான இயக்கத்தையும் நிதியியல் முறைமையினுள் நம்பிக்கையினையும் உறுதிசெய்வதற்கு போதுமான நிதியிடலைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் திரவத்தன்மை மட்டங்களை முகாமைசெய்தல்.

எமது நிதியியல் மூலதனத்தை நாம் எவ்வாறு அநுகூலமிக்க விதத்தில் பயன்படுத்துகின்றோம்

புலமை மூலதனம்

பல காலமாக நிதியியல் செயலாற்றுகையில் நிலையான முன்னேற்றம், தொழில்துறையில் வங்கியின் நம்பகத்தன்மையினையும் நற்பெயரையும் மேம்படுத்த உதவுகிறது. வர்த்தகநாமம் பற்றிய எண்ணப்பாங்கினை உருவாக்குவதற்கான நிதியிடல் முயற்சிகளும் ஊழியர் திறன்களும் வலுவான புலமை மூலதனத்தை உருவாக்குகின்றன.

மனித மூலதனம்

வலுவான நிதியியல் பெறுபேறுகள், சராசரிக்கும் அதிகமான சம்பளங்கள் மற்றும் சலுகைகள் வாயிலாக ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்ட செல்வத்தை அதிகரிப்பதற்கும் அதன் மூலம் ஊக்கத்தையும் ஊழியர் திருப்தியையும் அதிகரித்து, அத்துடன் ஊழியர் புரள்வை குறைவடையச்செய்வதற்கு வங்கியை இயலச் செய்வதுடன் பயிற்சி மற்றும் அபிவிருத்திகளில் முதலிடுதல் ஊழியர் திறன்களையும் வினைத்திறனையும் அதிகரிக்கின்றது.

சமுக மற்றும் உறவு மூலதனம்

அனைத்து முக்கிய அக்கறைதாரர்களின் தேவைகளையும் நிறைவுசெய்வதற்கு மூலவளங்களை ஒத்திசைவான விதத்தில் ஒதுக்கீடுசெய்வதற்கு சிறந்த நிதியியல் பெறுபேறுகள் வங்கிக்கு உதவும். நிறுவன சமுக பொறுப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பது வங்கிக்கும் சமுகத்திற்கும் இடையிலான இணைப்பை வலுப்படுத்துகின்றது. அதேவேளை, பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பு வசதிகள் இரண்டிலும் முதலிடுவது வலுவான வாடிக்கையாளர் இணைப்புகளை உருவாக்குவதுடன் வினைத்திறன்மிக்க வழங்குநர் வலையமைப்புகளையும் இயலச்செய்கின்றது.

இயற்கை மூலதனம்

நிலைபெறுதன்மை முயற்சிகளுக்கான நிதியியல் ஆதரவளித்தலானது வங்கியின் காபன் சுவடுகளை குறைக்கின்றது.

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முதலீடுகள் வங்கியின் சொத்துத் தளத்தை வலுப்படுத்துகின்றன.

சாத்தியமான விட்டுக்கொடுத்தல்கள்

- நிதியிடல் தேவைப்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு சொத்துகள் மீது போதுமான ஆதாயத்திற்கான தேவையுடன் மூலதனச் செலவினத்தை பொறுப்பேற்பதற்கான வங்கியின் இயலுமையை சமநிலைப்படுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.
- ஆளுகையினையும் உள்ளக கட்டுப்பாடுகளையும் மேம்படுத்துவதன் மீது செலவிடப்படும் முயற்சிகளும் வளங்களும் மூலதனச் செலவினத்தை நாம் பேணுவதை அல்லது குறைப்பதை உறுதிசெய்யும்.

நிதியியல் மூலதனம்

ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

முதன்மை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

8 DECENT WORK AND ECONOMIC GROWTH — சமூகத்தில் பொருளாதார அபிவிருத்தியையும் சிறந்த வாழ்க்கைத் தரங்களையும் கொண்டு வரவல்ல கல்வியையும் சம வாய்ப்புகளையும் ஊழியர்களுக்கு வழங்குவதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலிடுதல்

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE — எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு ஊடாக உற்பத்திகள் மற்றும் சேவைகளில் புத்தாக்கத்திற்கு ஆதரவளித்தல்

இரண்டாம்நிலை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES — மனிதநேயக் கருத்திட்டங்கள் அதேபோன்று கண்டறிதல் மற்றும் வெளியிலிருந்து சேவைபெறுதல் ஊடாகத் தாக்குப்பிடிக்கும்தன்மை மூலமாக பொருளாதாரரீதியாக நிலைபெறத்தக்க சமூகங்களை கட்டியெழுப்புதல்.

உருவாக்கப்பட்டு பகிரப்பட்ட நேரடி பொருளாதாரப் பெறுமதி

அட்டவணை 10

உருவாக்கப்பட்டு பகிரப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி	2022 ரூ. மில்லியன்	2021 ரூ. மில்லியன்
பின்வருவனவற்றுக்கு உருவாக்கப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி:	174,557	134,939
தொழிற்படுத்தல் செலவுகள்	12,206	10,297
வைப்பாளர்கள்	140,477	76,809
ஊழியர்கள்	13,791	12,970
மூலதன வழங்குநர்கள்	–	3,500
அரசாங்கம் (பங்கிலாபங்கள் நீங்கலாக)	5,578	12,965
பிடித்துவைக்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி	2,504	18,398
பகிர்ந்தளிக்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி	172,053	116,541

பொருண்மை, அக்கறைதாரர்கள், குறுகியதிலிருந்து நீண்ட கால உபாய முன்னுரிமைகள் உடனான தொடர்புகை

பொருண்மை விடயங்கள்



தொடர்புடைய அக்கறைதாரர்கள்



குறுகியதிலிருந்து நீண்ட கால உபாய முன்னுரிமைகள்



அட்டவணை 10

1 உபாயரீதியான செயலாற்றம்

தொகுக்கப்பட்ட வருமானக் கூற்று

விபரம்		2022 ரூ. மில்லியன்	2021 ரூ. மில்லியன்	2020 ரூ. மில்லியன்	2022 எதிர் 2021 ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%)
A	மொத்த வருமானம்	174,557.2	134,939.4	127,547.1	29.4
B	தேறிய வட்டி வருமானம்	32,462.9	54,629.6	34,890.2	(40.6)
C	தேறிய வட்டியில்லா வருமானம்	1,357.2	3,293.5	4,880.5	(58.8)
	மொத்த தொழிற்படுத்தல் வருமானம்	33,820.2	57,923.1	39,770.7	(41.6)
D	சேத இழப்பு அறவீடுகள்	4,862.2	4,304.4	4,873.8	13.0
	தேறிய தொழிற்படுத்தல் வருமானம்	28,958.0	53,618.6	34,896.9	(46.0)
E	தொழிற்படுத்தல் செலவுகள்	21,195.2	19,074.9	15,465.6	11.1
	வரிகளுக்கு முந்திய தொழிற்படுத்தல் இலாபம்	7,762.7	34,543.8	19,431.3	(77.5)
F	நிதியியல் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி	3,185.9	6,162.4	3,786.7	(48.3)
	நிதியியல் சேவைகள் மீதான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	67.3	–	–	–
G	வருமான வரிக்கு முந்திய இலாபம்	4,509.6	28,381.4	15,644.6	(84.1)
F	கழிக்குக: வருமான வரிச் செலவுகள்	1,979.9	6,261.8	5,536.7	(68.4)
G	**ஆண்டுக்கான இலாபம்**	**2,529.7**	**22,119.6**	**10,107.9**	**(88.6)**


அட்டவணை 11

அ மொத்த வருமானம்

வங்கியின் மொத்த வருமானமானது வட்டி வருமானம், தேறிய கட்டணம் மற்றும் தரகு அடிப்படையிலான வருமானம், வர்த்தகப்படுத்தலிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்), இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களில் இருந்து தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/(நட்டம்), நிதியியல் சொத்துகளில் இனங்காணாமையிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் ஏனைய தேறிய தொழிற்படுத்தல் வருமானம் ஆகியவற்றை கொண்டமைந்தது. 2022ஆம் ஆண்டுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் மொத்த வருமானம் 2021 ஆம் ஆண்டின் ரூ. 134.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 174.6 பில்லியனாக காணப்பட்டது. வங்கியின் மொத்த வருமானத்தில் 99.1% சதவீதத்திற்கு வட்டி வருமானம் வகைகூறியதுடன் படுகடன் சாதனங்களில் முதலீட்டில் இருந்து கிடைத்த வட்டி வருமானத்தில் அதிகரிப்பு மற்றும் மிதக்கும் வீதத்தில் அமைந்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் வட்டி வீதங்களில் அதிகரிப்பு என்பவற்றினால் முதன்மையானதாக ஆதரவளிக்கப்பட்டு, 2021ல் அறிக்கையிடப்பட்ட ரூ. 131.44 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 172.94 பில்லியனாக உயர்வடைந்து 31.6% சதவீதம் கொண்ட வளர்ச்சியினை பதிவுசெய்தது.

ஆ தேறிய வட்டி வருமானம்

தேறிய வட்டி வருமானம் எதிர் தேறிய வட்டி எல்லை — வரைபடம் 9




மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூ. 32.5 பில்லியனாக முன்னைய ஆண்டின் தொகையான ரூ. 54.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 40.6% சதவீதம் கொண்ட வீழ்ச்சியினை எடுத்துக்காட்டியது. தேறிய வட்டி வருமானத்தில் இவ்வீழ்ச்சியானது வட்டி வீதங்களில் எதிர்பாராத உயர்வின் விளைவாக வட்டிச் செலவுகளின் அதிகரிப்பு காரணமாக அமைந்தது. உயர்வான வட்டி வீதங்களின் விளைவாக நிலையான வைப்புகள் மீதான வட்டி வீதங்களை உயர்த்துவதற்கு வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் ஏற்கனவே குறைவான வட்டி வீதங்களில் காணப்பட்ட தமது நிலையான வைப்புகளை உயர்வான வட்டி வீதங்களுக்கு நகர்த்தியதன் மூலம் இதன் அனுகூலத்தை வாடிக்கையாளர்கள் பெற்றமையாள் வட்டிச் செலவுகள் 2022 இன் ரூ. 140.5 பில்லியனாக 82.9% சதவீதத்தினால் அதிகரிக்க காரணமாக அமைந்தது.

இக்கடன்களில் பெரும்பலானவை குறைவான வட்டி வீதங்களைக் கொண்ட காலப்பகுதியில் நிலையான வீதங்களில் வழங்கப்பட்டிருந்தமையால் 2022 இன் இறுதிவரையிலும் அதன் கடன்கள் மற்றம் முற்பணங்கள் சொத்துப்பட்டியலின் வட்டி வீதங்களை சீராக்குவதற்கு வங்கிக்கு இயலாதிருந்தது. இதற்கு மேலதிகமாக, வங்கி அதன் வைப்புகளின் 60% சதவீதமானவற்றை அரசாங்கப் பிணையங்களில் முதலிடுவதற்கு வேண்டப்பட்டிருந்ததுடன் 2019 தொடக்கம் 2022 ஏப்பிரல் வரை குறைவான வட்டி வீத சூழலின் காரணமாக, நியாயமான இலாபத்தினை ஈட்டும் பொருட்டு குறைவான விளைவைத் தரும் திறைசேரி உண்டியல்களை விட உயர்வான விளைவுகளை வழங்கிய நீண்ட காலங்களுடன் கூடிய திறைசேரி முறிகளில் அது முதலிட வேண்டியிருந்தது. எனினும், வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்ட போது திறைசேரி முறைகளில் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால முதலீடுகள், வைப்புகளை போன்று அதேவேகத்தில் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. இச்சவால்களுக்கு மத்தியில், 2022 ஆம் ஆண்டுக்கான வங்கியின் வட்டி வருமானம் ரூ. 172.9 பில்லியனாக அதிகரித்து, முன்னைய ஆண்டிலிருந்து 31.6% சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டிய அதேவேளை வட்டிச் செலவுகள் 82.9% சதவீதத்தில் உச்சம் தொட்டன. இதன் விளைவாக, வட்டி வருமானத்தின் அதிகரிப்பை விஞ்சிச் சென்ற வட்டிச் செலவுகளின் அதிகரிப்புடன் வங்கியின் தேறிய வட்டி எல்லை 2021 இன் 3.71% சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 2.03% சதவீதமாகக் குறைவடைந்தது.

இ வட்டியல்லா வருமானம்

வட்டியல்லா வருமானத்தின் உள்ளமைப்பு — வரைபடம் 10




A – கட்டணம் மற்றும் தரகு வருமானம்
B – வர்த்தகப்படுத்தலிலிருந்து தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்)
C – நிதியியல் சொத்துகளை இனங்காணாமையில் இருந்து தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்)
D – தேறிய ஏனைய தொழிற்படுத்தல் வருமானம்

2022 இல் அதன் தேறிய வட்டியல்லா வருமானத்தில் வங்கி குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினை அனுபவித்து, 2021 இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 3.29% பில்லியனிலிருந்து 58.8 சதவீதத்தினால் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. வர்த்தகப்படுத்தல் நடவடிக்கையில் இருந்து உருவான ரூ. 971.43 மில்லியன் கொண்ட நட்டம் அத்துடன் தேறிய கட்டணம் மற்றம் தரகு வருமானத்தில் ரூ. 902.76 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி என்பன உள்ளடங்கலாக பல காரணிகள் இவ்வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன. ரூ. 26.2 மில்லியன் பெறுமதியான மதிப்பிழப்பு செலவில் நிதியில் சொத்துகளை இனங்காணாமையில் இருந்தான நட்டங்கள் மற்றும் தேறிய தொழிற்படுத்தல் வருமானத்தில் ரூ. 103.79 மில்லியன் குறைவு என்பனவும் தேறிய வட்டியல்லாத வருமானத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு பங்களித்தன.

நிதியியல் மூலதனம்

சேதஇழப்பு அறவீடுகள்

சேதஇழப்புச் செலவு வரைபடம் 11




நாட்டின் வெளிநாட்டு பொதுப் படுகடனை மறுசீரமைப்பதற்கான அரசாங்கத்தின் அறிவித்தலை தொடர்ந்து, வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட அரசாங்க பிணைய சாதனங்கள் மீதான சாத்தியமான உச்ச வரம்புகளை எதிர்பார்த்து பல வங்கிகள் கணிசமான ஏற்பாடுகளை மேற்கொண்டமை மூலம் சேதஇழப்பு அறவீடுகளுக்கான தொழிற்துறை சராசரியில் பரந்த அடிப்படையிலான உயர்வொன்றுக்கு மத்தியில், ஆண்டு காலப்பகுதியில் தேசிய சேமிப்பு வங்கியின் சேதஇழப்பு அறவீடுகள் மிதமான மட்டத்தில் பேணப்பட்டது. வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட அரசாங்க பிணையங்களில் வங்கியின் மொத்த முதலீடு, முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூ. 14.2 பில்லியன் தொகையுடையதாக இருந்து, 2021 டிசம்பர் 31 அன்றுள்ளதன்படி ரூ. 9.4 பில்லியனாக குறைவடைந்தது. தொழிற்துறையின் சராசரியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட அரசாங்க பிணைய முதலீடுகளின் வங்கியின் சிறியளவான சொத்துப்பட்டியலின் காரணமாக அதன் சேதஇழப்பு செலவுகள் 12.96% சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்து, கடன்கள் மற்றும் முற்பணங்கள் கணக்கு மீதான ஏற்பாடு மேற்கொள்ளலின் முதன்மைக் காரணமாக ஒப்பிடத்தக்க ஆண்டின் ரூ. 4.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாயப்படுகின்ற ஆண்டிற்காக ரூ. 4.9 பில்லியனை எட்டியது.

வங்கிக்கான மொத்த தேறிய செயலாற்றமற்ற கடன் விகிதம் 2021 இல் 2.97 வீதத்தில் இருந்து 2022 இல் 3.98 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்கள் நியதிகளில் (சேதஇழப்பை கழித்து), வங்கியானது 2.82 சதவீதம் கொண்ட விகிதத்தை பேணக்கூடியதாக இருந்தது இது 6.5 சதவீதம் கொண்ட தொழிற்துறை சராசரியை விட குறைவாக இருந்தது. பொருளாதார அடிப்படைகள் சீர்குலைந்தமை, சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் உறுதிப்பாடின்மை போன்ற காரணிகளை உள்ளடக்கியிருந்த அதிகம் நிச்சயமற்ற மற்றும் தளம்பல் மிக்க சூழ்நிலையின் கீழ், உயர் சாத்தியம்மிக்க இடர்நேர்வு துறைகளில் எதிர்பார்த்திராத இடர்நேர்வு காரணிகளை வங்கி கருத்தில்கொண்டது. இதன் விளைவாக வங்கி இத்தகைய நிலைமைகளுக்கு கூடுதல் ஏற்பாடுகளை மேற்கொண்டது.

தொழிற்படுத்தல் செலவுகள்

செலவு முகாமைத்துவம் வரைபடம் 12



செலவை மீதப்படுத்தும் உபாயங்கையும் முன்முயற்சிகளையும் நடைமுறைப்படுத்துகின்றதற்கு மத்தியிலும், ஆளணிச் செலவு, தேய்மானம் மற்றும் மதிப்பிழப்பு அத்துடன் ஏனைய மேந்தலைச் செலவுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்த தொழிற்படுத்தல் செலவுகள் பரந்தளவிலான விலை அதிகரிப்பின் காரணமாக 2021 இன் ரூ. 19.1 பில்லியனிலிருந்து 2022 இல் ரூ. 21.2 பில்லியனுக்கு 11.12% சதவீதத்தினால் அதிகரித்தன. தொழிற்படுத்தல் செலவுகளின் 65.06% சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஆளணிச் செலவுகள் முன்னைய ஆண்டின் 13 பில்லியனிலிருந்து ரூ. 13.8 பில்லியனாக ரூ. 6.32% சதவீதத்தினால் உயர்வடைந்தன. தொழிற்படுத்தல் செலவுகளின் 6.67% சதவீதத்தினைக் கொண்ட தேய்மானம் மற்றும் மதிப்பிழப்புச் செலவுகள் முன்னைய ஆண்டின் ரூ. 1.39 பில்லியனிலிருந்து

ரூ. 1.41 பில்லியனுக்கு 2.08% சதவீதத்தினால் அதிகரித்தன. நிருவாகம் மற்றும் தாபனச் செலவுகள் அத்துடன் பணிப்பாளர்களின் ஊதியங்கள் எனபவற்றை உள்ளடக்குகின்ற எனைய தொழிற்படுத்தல் செலவுகள், ரூ. 6 பில்லியனுக்கு 26.94% சதவீத்தினால் அதிகரித்தன. இதன் விளைவாக, வங்கியின் வருமானத்திற்கான செலவு விகிதம் (வரிகள் இன்றி), குறைவான தொழிற்படுத்தல் வருமானம் (சேத இழப்பிற்கு முன்னர்) பணவீக்க நிலமைகள், இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம் என்பன காரணமாக 2021இன் 33.17% சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 62.95% சதவீதத்தில் குறிப்பிடத்தக்களவு உயர்வாக காணப்பட்டது.

உ வரிவிதிப்பு

GRI 207-3

2022 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொத்த வரிச் செலவுகள் ரூ. 5.2 பில்லியனாகவிருந்ததுடன் வருமான வரிகள் (ரூ. 2.0 பில்லியன்), நிதியில் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (ரூ. 3.2 பில்லியன்) மற்றும் நிதியியல் சேவைகள் மீதான சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (ரூ. 67.3 மில்லியன்) ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. நிதியியல் செலவுகள் மீதான பெறுமதிசேர் வரி மற்றும் வருமான வரி மீதான வரி வீதங்கள் அதிகரித்த போதிலும், குறைவான இலாபத்தன்மை காரணமாக 2022 காலப்பகுதியில் வரிச்செலவுகள், 2021 அறிக்கையிடப்பட்ட ரூ. 12.4 பில்லியனிலிருந்து 57.9% சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

குறைவான தொழிற்படுத்தல் இலாபம் அதேபோன்று முன்னைய ஆண்டுகளிலிருந்து மிகை ஏற்பாடுகளின் திரும்பல்கள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து நடு ஆண்டில் வருமான வரி வீதம் 24% சதவீதத்திலிருந்து 30% சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையால் மொத்த விளைவு வட்டி வீதம் கடந்த ஆண்டில் அவதானிக்கப்பட்ட 22.06% சதவீதத்திலிருந்து 2022 இல் 43.90% சதவீதத்திற்கு அதிகரித்தது.

ஏற்புடைய வரிவிதிப்பு வீதங்களில் மாற்றங்கள்


விபரம்	2022 %	2021 %
நிதியியல் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி	18	15
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	2.5	–
வருமான வரி வீதம்	30	24

அட்டவணை 12

எ இலாபத்தன்மை

வரிக்கு முந்திய இலாபம் எதிர் வரிக்கு பிந்திய இலாபம்

வரைபடம் 13



2022 இல் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் ரூ. 4.51 பில்லியனாக இருந்து 2001 இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 28.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 84.1% சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஒன்றாக இருந்தது. அதேபோன்று ஆண்டுக்கான வரிக்கு பிந்திய இலாபமும் முன்னைய ஆண்டின் ரூ. 22.1 பில்லியனில் இருந்து ரூ. 2.5 பில்லியனுக்கு குறைவடைந்தது. இலாபங்களின் வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணிகள் காரணமாக அமையக்கூடியதாகவிருந்தது. அதாவது, வட்டி வருமான வளர்ச்சியினை விஞ்சிச் சென்ற வட்டிச் செலவுகளில் கணிசமான அதிகரிப்பு, வட்டியல்லா வருமானத்தில் வீழ்ச்சி மற்றும் சேதஇழப்பு ஏற்பாடுகள் உள்ளடங்கலாக தொழிற்படுத்தல் செலவுகளில் அதிகரிப்பு என்பனவாகும். வங்கியின் இலாபத்தன்மையின் வீழ்ச்சிக்கு விளைவு இலாப எல்லை முகாமைத்துவம், சொத்துப்பட்டியல் தரம், செலவு வினைத்திறன்கள் மற்றும் கடன்வழங்கல் வாய்ப்புகள் மீது பயன்பெறுவதற்கான வங்கியின் இயலுமை என்பனவற்றுக்கான சாத்தியமான அச்சுறுத்தலின் காரணமாக அமைந்தது.

வரிக்கு பிந்திய இலாபத்தில் பதிவான வீழ்ச்சியின் விளைவாக சொத்துகள் மீதான ஆதாயமும் 2021 இன் இறுதியில் உள்ளவாறு அறிக்கையிடப்பட்ட 1.93% சதவீதத்திற்கு எதிராக 2022 இல் 0.28% சதவீதத்திற்கு சீர்குலைந்தது. அதேபோன்று பங்குரிமைமூலதனம் மீதான ஆதாயமும் கடந்த ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட 33.92% சதவீதத்திலிருந்து 2022இல் இறுதியில் உள்ளவாறு 3.40% சதவீதமாக மோசமடைந்தது.

நிதியியல் மூலதனம்

2 ஐந்தொகை வளர்ச்சி

*தொகுக்கப்பட்ட நிதியியல் நிலமைக் கூற்று


		2022 ரூ. மில்லியன்	2021 ரூ. மில்லியன்	2020 ரூ. மில்லியன்	2022 எதிர் 2021 ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%)
A	**மொத்த சொத்துகள் இதில் அடங்குவன**	1,616,686.1	1,579,097.7	1,363,808.4	
B	கடன்களும் முற்பணங்களும்	553,027.3	538,941.8	516,795.2	2.6
C	சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள்	14,173.9	19,572.9	11,221.7	(27.6)
	படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்	919,129.4	935,350.1	754,233.3	(1.7)
	ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்	27,662.8	13,817.6	15,271.8	100.2
	துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகள்	7,311.0	4,811.0	4,811.0	52.0
D	ஏனைய சொத்துகள்	56,306.9	33,655.3	23,033.8	67.3
E	**மொத்த பொறுப்புகள் இதில் அடங்குபவன**	1,543,793.9	1,503,085.0	1,309,394.5	2.7
F	வைப்பாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	1,476,739.8	1,428,467.4	1,237,123.8	3.4
G	ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	16,766.0	7,719.5	8,159.6	117.2
	படுகடன் பிணையங்கள் வழங்கல்	23,778.3	37,529.0	31,773.8	(36.6)
	வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை	4,086.7	7,686.6	12,862.3	(46.8)
H	**மொத்த பங்குரிமைமூலதனம்**	72,892.2	76,012.8	54,413.9	(4.1)
	மொத்த பங்குரிமைமூலதனமும் பொறுப்புகளும்	1,616,686.1	1,579,097.7	1,363,808.4	2.4

அட்டவணை 13

அ மொத்த சொத்துகள்

தேசிய சேமிப்பு வங்கியானது தேசிய பொருளாதாரம் அத்துடன் குறிப்பாக வங்கித் தொழிற்துறை சந்தித்த பேரளவிலான சவால்களுக்கு மத்தியிலும் வெறுமனே 50 ஆண்டுகளில் மொத்த சொத்துகளில் ரூ. 1.6 ரில்லியனை பதிவுசெய்ததன் மூலம் முக்கிய மைல் கல்லினை அடைந்தது. 2022 இறுதியில் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளம் முன்னைய ஆண்டின் ரூ. 1.58 ரில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 1.62 ரில்லியனை எய்தி 2.4% இனால் பெயரளவில் வளர்ச்சியடைந்தது. கடன்கள் மற்றும் முற்பணங்களில் சிறிதளவு அதிகரிப்பு அதேபோன்று அரசாங்க பிணையங்கள், தொகுதிக்கடன்கள் என்பவற்றில் முதலீடுகள் மற்றும் திறைசேரியிடம் இருந்து கிடைக்கப்பெறத்தக்க வட்டி என்பனவற்றில் சிறிதளவான அதிகரிப்பு என்பன இதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், இவ்வளர்ச்சியானது 2021இல் பதிவாகிய 15.8% சதவீதத்தை விட குறைவாகவிருந்தது. மறுபுறம், வங்கியின் வைப்பு தளமானது, முன்னைய ஆண்டின் ரூ. 1.43 ரில்லியன் கொண்ட தளத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ரூ. 1.48 ரில்லியனை எய்தி 3.4% சதவீதத்தால் அதிகரித்தது.

மொத்த சொத்துகள் வரைபடம் 14



ஆ கடன்களும் முற்பணங்களும்

வீடமைப்பு கடன்கள், அடகு, தனிப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய கடன்களை உள்ளடக்குகின்ற வங்கியின் கடன்கள் மற்றும் கிடைக்கப் பெறத்தக்கவைகள் சொத்துப்பட்டியலானது 2021 இன் ரூ. 538.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் தற்போதைய ஆண்டில் ரூ. 553.0 பில்லியன் ஆகவிருந்தது. ஆண்டு முழுவதும் தொடர்ந்து காணப்பட்ட நலிவான பொருளாதார நிலமைகளுக்கு மத்தியில் வங்கி 2022 இல் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ரூ. 14.1 பில்லியன் கொண்ட வளர்ச்சியினை பதிவுசெய்ததுடன் இது முன்னைய ஆண்டை விட 2.6% சதவீத அதிகரிப்பினை காட்டியது.

ஆண்டு காலப்பகுதியில் எதிர்கொண்ட பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில், வங்கியானது 2.82% சதவீதம் கொண்ட மொத்த கடன்களுக்கான தேறிய கட்டம் 3 கடன்கள் விகிதாசாரத்தை அதிக கவர்ச்சிமிக்களவில் பேணக்கூடியதாக இருந்தது. இது 6.50% சதவீதம் கொண்ட தொழிற்துறை சராசரியை விட குறிப்பிடத்தக்களவு சிறந்ததாகும். அதிக இடர்நேர்வுமிக்க துறைகளுக்கு கடன்வழங்குவதை தவிர்ப்பதன் மீது கவனம்செலுத்தியிருந்த வங்கியின் முன்மதிமிக்க கடன்வழங்கல் அணுகுமுறையின் ஊடாக இச்சாதனை அடையப்பெற்றது. வங்கியின் வலுவான செயற்பாடற்ற கடன் விகிதாசாரத்திற்கு கடுமையான கட்டுப்பாட்டு வழிமுறைகள், செயலூக்கமிக்க சேகரிப்பு மற்றும் அறவீட்டு உபாயங்கள் அத்துடன் முன்மதிமிக்க ஏற்பாட்டு ஒதுக்குக் கொள்கைகளை கடைப்பிடித்தல் என்பன காரணமாக அமைந்திருக்கக் கூடும்.

வங்கியின் கட்டம் 3 சேதஇழப்பு ஏற்பாட்டு உள்ளடக்க விகிதமானது வங்கி பின்பற்றிய முன்மதிமிக்க ஏற்பாட்டு ஒதுக்கு கொள்கைகள் காரணமாக 2021 இன் 31.5% சதவீதத்திலிந்து 2022 இன் 38.9% சதவீதத்தினை அடைந்து, 734 அடிப்படை புள்ளிகளால் மேம்பட்டது. மேலும் 2022 இன் இறுதியில் உள்ளவாறு மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான மொத்த சேதஇழப்பு எற்பாடுகளின் விகிதம் கடந்த ஆண்டின் 73.2% சதவீதத்திலிருந்து 75.2% சதவீதமாக மேம்பட்டது.

இ முதலீடுகள்

பங்குரிமைமூலதனத்திலும் படுகடன் பிணையங்களிலுமுள்ள முதலீடு

பங்குரிமைமூலதனம் மற்றும் படுகடன் சாதனங்களை உள்ளடக்குகின்ற வங்கியின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது 2021 இன் ரூ. 968.7 பில்லியன் கொண்ட அறிக்கையிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 2022 இன் இறுதியளவில் ரூ. 961.0 பில்லியனை அடைந்து, 0.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியினை அனுபவித்தது. சொத்துப்பட்டியலின் பெரும்பாலானவை, அதாவது 99.6% சதவீதமானவை அரசாங்க பிணையங்கள், நிறுவனப் படுகடன் சாதனங்கள் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்கள் போன்ற படுகடன் சாதனங்களை உள்ளடக்கியிருந்த அதேவேளை பங்குரிமைமூலதன பிணையங்கள் எஞ்சிய பாகத்தை கொண்டமைந்திருந்தன. எனினும், வங்கியின் பங்குரிமைமூலதன சொத்துப்பட்டியலானது பங்குரிமைமூலதனச் சந்தையில் காணப்பட்ட சாதகமற்ற நிலமைகளின் காரணமாக 2021 இல் ரூ. 5.2 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ. 4.3 பில்லியனுக்கு 18.3% சதவீத்தினால் வீழ்ச்சியடைந்தது.

துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகள்

தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்து கம்பனி லிமிட்டெட்டிலுள்ள ரூ. 4.2 பில்லியன் முதலீடுகளையும் அதேபோன்று முழுமையாக சொந்தமான துணை நிறுவனம் ஒன்றான இலங்கை சேமிப்பு வங்கியில் முதலிடப்பட்ட ரூ. 3.1 பில்லியன் தொகையினையும் உள்ளடக்குகின்றன. தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிட்டெட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 2.5 பில்லியன் மேலதிக முதலீடு காரணமாக துணை நிறுவனங்களில் உள்ள முதலீடுகள் முன்னைய ஆண்டின் இறுதியில் இருந்த ரூ. 4.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 52.0 சதவீத இனால் வளர்ச்சியடைந்து 2022 இன் இறுதியில் ரூ. 7.3 பில்லியனுக்கு அதிகரித்தது.


ஈ ஏனைய சொத்துகள்

மொத்த ஏனைய சொத்துகளின் 60.7% சதவீதத்திற்கு வகைகூறுகின்ற திறைசேரியில் இருந்து கிடைக்கத்தக்க வட்டியில் அதிகரிப்பின் பிரதான காரணமாக வங்கியின் ஏனைய சொத்துகள் 67.3% சதவீதத்தினால் அதிகரித்தன.

உ மொத்தப் பொறுப்புகள்

ஆண்டு காலப்பகுதியில் முதிர்ச்சிகளின் விளைவாக வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களில் 36.6 சதவீத வீழ்ச்சியுடன் ஒன்றிணைந்து, வங்கியின் கடன்பெறுதல்களில் 46.8% சதவீத குறைவடைதலுக்கு மத்தியில் வைப்புகளில் 3.4% சதவீத வளர்ச்சியும் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்பெறுதலில் 117.2 சதவீத அதிகரிப்பு மூலம் மொத்தப் பொறுப்புகள் ரூ. 1.54 ரில்லியனாக 2.7% சதவீதத்தினால் அதிகரித்தன.


மொத்த பொறுப்புகள் வரைபடம் 15



ஊ வைப்புகள்

வங்கியின் வைப்புத் தளமானது 2021 இல் உள்ளவாறான 1.43 ரில்லியன் கொண்ட அறிக்கையிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில், 2022இலுள்ளவாறு ரூ. 1.48 ரில்லியனுக்கு ரூ. 48.3 பில்லியனால் அல்லது 3.4% சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 ஏப்பிரலில் 700 அடிப்படை புள்ளிகளைக் கொண்ட மத்திய வங்கி கொள்கை வீத உயர்வுக்கு இசைவாக வங்கி வைப்பு வட்டி வீதங்களை உயர்த்தியதுடன் பல வைப்பு உரிமையாளர்கள் தமது ஏற்கனவே காணப்படுகின்ற நிலையான வைப்புகளை முதிர்ச்சிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கும் உயர்வான வட்டி வீதங்களில் முதலிடுவதற்கும் இட்டுச்சென்றது. இதற்கு மேலதிகமாக, நிலவுகின்ற உயர்வான பணவீக்க கட்டமைப்பானது சேமிப்பதற்கான வாடிக்கையாளர்களின் இயலுமையினை குறைத்த அதேவேளை நிலையான வைப்புகளுக்காக வழங்கப்பட்ட உயர்வான வட்டி வீதங்கள் சேமிப்புகளில் இருந்து நிலையான வைப்புகளுக்கு நிதியங்கள் மாறுவதற்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, நிலையான வைப்புத் தளம் ரூ. 1.21 ரில்லியனை எய்தி, 9.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை, சேமிப்புத் தளம், 2021 இன் இறுதியில் ரூ. 325.6 பில்லியனில் இருந்து 2022 இறுதியில் ரூ. 264.5 பில்லியனாக 18.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வைப்பு வளர்ச்சி வரைபடம் 16



ஏ படுகடன் விபரத்தொகுப்பு

நிதியியல் நிறுவனங்களிடம் இருந்தான கடன்பெறுதல்கள், மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனைசெய்யப்பட்ட பிணையங்கள்(ரெபோ), பின்நிகழ்வுப் பொறுப்புகள் மற்றும் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் என்பவற்றை வங்கியின் மொத்த கடன்பெறுதல்கள் உள்ளடக்குகின்றன. 2022 இல் உள்ளவாறு வங்கிகளிடம் இருந்தான கடன்படுதல்கள் மற்றும் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் என்பவற்றில் குறைவு காரணமாக மொத்த கடன்பெறுதல்கள் 2021 இல் உள்ளவாறான ரூ. 52.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 44.6 பில்லியனாக 15.7% சதவீதம் கொண்ட வீழ்ச்சியினை காண்பித்தன. எனினும், ஏனைய கடன்பெறுதல்களின் காரணமாக கடன்பெறுதல்களில் ரூ. 9. பில்லியன் (117.2%) அதிகரிப்பொன்று காணப்பட்டது.

வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை

மேலதிக பற்றுகள், அழைப்புப் பண கடன்பெறுதல்கள் மற்றும் மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்ற ஏனைய வங்கிகளிடம் இருந்தான வங்கியின் கடன்பெறுதல் 2021 இன் ரூ. 7.7 பில்லியனிலிருந்து 2022 இல் ரூ. 4.1 பில்லியனுக்கு 46.8% கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினை பதிவுசெய்தது. இவ்வீழ்ச்சிக்கு மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனைசெய்யப்பட்ட கடன்பெறுதல்களின் அதிகரிப்புக்கு மத்தியில் 2021 காலப் பகுதியில் இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் ஓவசீஸ் வங்கி என்பவற்றிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஐ.அ.டொலர் 35.0 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கடன்பெறுதல்களின் முழுமையான தீர்ப்பனவு காரணமாக அமைந்தது.

ஏனைய கடன்பெறுனர்களுக்குச் செலுத்தப்படவேண்டியவை

"வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை" இன் கீழ் இனங்காணப்பட்டவற்றின் பாகம் நீங்கலாக ரெபோ கடன்களை உள்ளடக்குகின்ற ஏனைய கடன்பெறுதல்கள் காரணமாக ஏனைய கடன்பெறுனர்களுக்க செலுத்தப்படவேண்டியவை முன்னைய ஆண்டின் ரூ. 7.7 பில்லியனுக்கு எதிராக 2022 இல் ரூ. 16.8 பில்லியனாக 117.2 % சதவீதத்தினால் கணிசமாக உயர்வடைந்தது.

வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்

வங்கியினால் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களானவை பிணையளிக்கப்படாத பின்நிகழ்வுசெய்யப்பட்ட மீட்கத்தக்க தொகுதிக்கடன்களையும் பிணையளிக்கப்படாத பின்நிகழ்வுசெய்யப்பட்ட நிலையான தொகுதிக்கடன்களையும் உள்ளடக்குகின்றன. வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களின் சொத்துப்பட்டியலானது 2019 இல் வழங்கப்பட்ட ரூ. 13.7 பில்லியன் பெறுமதியான பிணையளிக்கப்படாத தொகுதி கடன்களின் மீட்பின் காரணமாக 2022 இறுதியில் முன்னைய ஆண்டின் ரூ. 37.5 பில்லியனிலிருந்து ரூ. 23.8 பில்லியனுக்கு 36.6% சதவீதத்தினால் குறைவடைந்தது.

ஏனைய பொறுப்புக்களில் வீழ்ச்சி


ஓய்வு நலக் கடப்பாடு

ஓய்வு நலக் கடப்பாடுகள், கடந்த ஆண்டின் நேரொத்த காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ. 8.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 டிசம்பரின் இறுதியில் ரூ. 12.49 பில்லியனாக 45.4% சதவீதத்தினால் அதிகரித்தன. 2021 உடன் ஒப்பிடுகையில் கணிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட உயர்வான கழிவு வீதம் இதற்கு காரணமாக அமைந்தது, இது திட்டச் சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் விழ்ச்சிக்கு வழிவகுத்தது.

ஏ மொத்த பங்குரிமை மூலதனம்

வங்கியின் மொத்த பங்குடமையாளர்களின் பங்குரிமை மூலதனமானது முன்னைய ஆண்டின் ரூ. 76.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் இறுதியளவில் ரூ. 72.9 பில்லியனை அடைந்து ரூ. 3.12 பில்லியனால் குறைவடைந்தது. குறைவான பிடித்துவைத்தல் உழைப்புகள் அதேபோன்று 25 சதவீத மிகை வரியின் கொடுப்பனவில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டு சீராக்கம் என்பன இவ்வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன. பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகள் 2022 இன் இறுதியளவில் ரூ. 11.4 பில்லியனுக்கு குறைவடைந்து ஒரு ஆண்டுக்கு முன்னர் அறிக்கையிடப்பட்ட ரூ. 13.7 பில்லியனிலிருந்து 17.3% சதவீத வீழ்சியை எடுத்துக்காட்டின. 2021 இன் ரூ. 23.53 இலிருந்து 2022 இல் ரூ. 2.69 ஆகப் பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்புகள் குறைவடைவதற்கு குறைவடைந்த இலாபத்தன்மை வழிவகுத்தது.

மொத்த பங்குரிமைமூலதனம் வரைபடம் 17



3 மூலதன மட்டங்கள்

அனைத்து சவால்களுக்கு மத்தியில், மூலதனமாக்கல் மட்டங்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு நன்கு மேலும் வங்கியின் இடர் ஏற்பிற்கு இசைவாகவும் இருந்தமை மூலம் வங்கியின் ஐந்தொகை வலுவானதாக காணப்படுகின்றது.

வங்கியானது அதன் குறுங்கால மற்றும் நீண்டகால குறிக்கோள்களுக்கு ஆதரவளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள அதன் மூலதன முகாமைத்துவ அணுகுமுறையின் ஊடாக பங்குதாரர் பெறுமதியினை அதிகரிப்பதை வங்கி இலக்காககொள்கின்றது. அதன் மூலதன மட்டங்களை பேணுகின்ற போது வங்கியின் தொழிற்பாடுகளின் இடர்நேர்வு தொகுப்பு, தரப்படுத்தல் முகவராண்மைகளின் எதிர்பார்க்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் அத்துடன் பங்குதாரர்

ஆதாயங்கள் என்பன உள்ளடங்களாக பல்வேறு காரணிகளை வங்கி பரிசீலனை செய்கிறது. இதற்கு மேலதிகமாக, மூலதன தள நிதியியல் வினைத்திறனையும் இழப்புகளை ஈர்ப்பதற்கான இயலுமையினையும் உகப்பாக்கம் செய்வதற்கு பல்வேறு வகையான மூலதனச் சாதனங்கள் மற்றும் முகாமைத்துவ நுட்பங்களை பயன்படுத்துவதற்கு வங்கி நாடுகின்றது.

மூலதன முகாமைத்துவக் குறிக்கோள்கள்

மூலதன முகாமைத்தின் முக்கிய நோக்கங்கள் வங்கியின் தொழில் உபாயத்திற்கு ஆதரவளிப்பதும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை மீறாது கடுமையான பின்னடைவுக் காலங்களிலும் கூட ஈடுகொடுப்பதற்கு போதுமான மூலதன மட்டங்களை உறுதிசெய்வதுமாகும்.

வங்கியின் மூலதன முகாமைத்துவ குறிக்கோள்கள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன.

- குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு போதுமான மூலதனத்தை பேணுதல்
- வங்கியின் உபாயக் குறிக்கோள்களுக்கு ஆதரவளிப்பதற்கு தொழில்களுக்கான மூலதனத்தை ஒதுக்கீடுசெய்தல்
- வங்கியின் உபாயக் குறிக்கோள்களுக்கு ஆதரவளிப்பதற்கு தொழில்களுக்கான மூலதனத்தை ஒதுக்கீடுசெய்தல்
- படுகடன் தரப்படுத்தல் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டும் சாத்தியமான தாக்கத்திற்கு ஈடுகொடுப்பதற்கும் வங்கி மூலதனத்தைப் பேணுகின்றது என்பதை உறுதிசெய்கின்றது.

மூலதனப் போதுமை விகிதங்கள் வசதியான மட்டத்தில் காணப்படுகின்றன

அசாதாரணமாக சவால்மிக்க தொழிற்படுகின்ற சூழலுக்கு மத்தியில், வங்கியானது மேலதிக மூலதனச் உட்செலுத்தலுக்கான தேவை எதுவுமின்றி ஆண்டு முழுவதும் வலுவான மூலதன விகிதங்களை வெற்றிகரமாக பேணியது. அனைத்து முக்கிய மூலதன விகிதங்களும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்கு மேலாக காணப்பட்டன. 2022 இல் உள்ளவாறு அடுக்கு I மூலதன விகிதமும் மொத்த மூலதன விகிதமும் முறையே 15.78% சதவீதமாகவும் 18.00% சதவீதமாகவும் இருந்து 8.0% சதவீதம் மற்றும் 12.0% சதவீதம் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்ச அளவை விஞ்சியிருந்தன. 2022 இறுதியில் வங்கியின் முடுக்கு விகிதம் 7.43% சதவீதமாக இருந்தது, இது 3% சதவீதம் கொண்ட குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு கணிசமாக மேலே காணப்பட்டது.

வங்கியின் மூலதன முகாமைத்துவம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு 223 ஆம் பக்கத்தில் இடர்நேர்வு மீளாய்வு அறிக்கையினை பார்க்க.

4 நிதியிடல் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம்

குறுங்கால வைப்புகளை நீண்ட கால கடன்களாக மாற்றுவதன் மூலம் வங்கியானது நிதியியல் இடையீட்டில் முக்கிய பங்காற்றுகின்றது. எவ்வாறாயினும், இச்செயன்முறை திரவத்தன்மை பொருத்தமின்மைகளுக்கு வங்கிகளை பாதிக்கப்படக்கூடியவையாக ஆக்குவதுடன் நிதியிடல் மற்றும் சந்தைத் திரவத்தன்மை இடர்நேர்வுகளுக்கு அவற்றை ஆட்படுத்துகின்றன. இவ்விடர்நேர்வுகளை தணிப்பதற்கு வங்கி ஆற்றல்வாய்ந்த திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை தாபித்துள்ளது. இக்கட்டமைப்பின் பிரதான குறிக்கோள், நிதியிடல் மற்றும் சந்தை திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமைசெய்வதும் சாதாரண மற்றும் அழுத்தம்மிக்க நிலமைகளின் கீழ் வங்கியின் தொழிற்பாடுகள் சீராக இடம்பெறுகின்றன என்பதனை உறுதிசெய்வதுமாகும். இக்கட்டமைப்பின் முக்கிய குறிக்கோள்கள், எல்லா நேரங்களிலும் நிதியியல் சந்தை நம்பிக்கையினை பேணுதல், முக்கிய அக்கறைதாரர்களின் நலன்களை பாதுகாத்தல் அத்துடன் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் என்பனவாகும்.

வங்கியிலும் நிதியியல் சேவைகள் துறையிலும் பொதுமக்களின் நம்பிக்கையினை பேணுவதற்கு வங்கி நம்பகமான நிதியியல் மூலங்களையும் போதிய திரவத்தன்மையினையும் கொண்டுள்ளது என்பதனை உறுதிசெய்வதற்கு அது நிதியிடல் மற்றும் திரவத்தன்மை மீதும் அதேபோன்று மூலதனத்திற்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கின்றது. தேசிய சேமிப்பு வங்கியானது பங்குதாரர்களுக்காக ஆதாயங்களை உருவாக்குவதுடன் இணைந்து திரவத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதுடன் அதன் திரவத்தன்மை நிலை மீது விட்டுக்கொடுப்புக்களை கொண்டிருப்பதில்லை.

திரவத்தன்மை இடர்நேர்வை முகாமைசெய்கின்ற செயன்முறையானது சொத்து – பொறுப்பு குழு மூலமான திரவத்தன்மை நிலமை பற்றிய தொடர்ச்சியான பகுப்பாய்வு மற்றும் கண்காணித்தல் அதேபோன்று சந்தை பெறுவழியினை உறுதிசெய்தல் போன்றவற்றை ஈடுபடுத்துகின்றது. இதனை நிறைவேற்றுவதற்கு, கிரமமான காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்கள், திரவத்தன்மை விகிதங்கள் மற்றும் முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு போன்ற பல்வேறு பகுப்பாய்வு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, திரவத்தன்மை மற்றும் நிதியிடல் இடர்நேர்வினை அளவிடுவதற்கு திரவத்தன்மை உள்ளடக்க விகிதம், தேறிய நிலையான நிதியிடல் விகிதம் உள்ளடங்களாக பல வகையான அளவுருக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அழுத்தம்மிக்க சந்தை நிலமைகளை கொண்ட காலப்பகுதியின் போது திரவத்தன்மை இடர்நேர்வு பற்றிய அதன் மதிப்பீட்டின் அடிப்படையில் வங்கி பொருத்தமான திரவத்தன்மை காப்பு மட்டங்களை பேணியது. தளம்பல்மிக்க மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட திரவத்தன்மை சூழ்நிலைகளை எதிர்கொண்டதற்கு மத்தியிலும், தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டி, அதன் நிதி எதிர்கால வளர்ச்சிக்கான வலுவான அத்திவாரத்தை உருவாக்கி வங்கி அதன் ஐந்தொகை வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு போதுமான திரவத்தன்மையினை பேணக்கூடியதாக இருந்தது.

விபரம்	வங்கி		
	2022 %	2021 %	மாற்றம் (அடிப்படை புள்ளிகள்)
நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதம் – குறைந்தபட்ச தேவைப்படுத்தல் 20%	**40.62**	59.63	-19.01
ரூபா திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் – குறைந்தபட்ச தேவைப்படுத்தல் 100%	**195.44**	240.84	-45.40
அனைத்து நாணய திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் – குறைந்தபட்ச தேவைப்படுத்தல் 100%	**193.49**	240.43	-46.94
தேறிய நிலையான நிதியிடல் விகிதம் – குறைந்தபட்ச தேவைப்படுத்தல் 100%	**180.51**	160.78	19.73

அட்டவணை 14

நிதியியல் மூலதனம்

திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு 208 தொடக்கம் 236 வரையான பக்கங்களில் இடர்நேர்வு மீளாய்வு அறிக்கையினைப் பார்க்க

எதிர்காலத்தை நோக்கி

நீண்டகால மீட்சியை நோக்கி பொருளாதாரத்தை வழிநடாத்துவதற்கு, குறுங்காலம் தொடக்கம் நடுத்தர காலத்தில் அவசியமான கொள்கை வழிமுறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளமையின் காரணமாக பேரண்டப்பொருளாதார அழுத்தங்கள் தவிர்க்க முடியாதமையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இக்குறுங்காலந் தொடக்கம் நடுத்தர கால கொள்கைகள் வரவிருக்கும் மாதங்களில் பொருளாதார வளர்ச்சி மீது தாக்கமொன்றினை கொண்டிருக்ககூடும்.

அரசாங்கப் பிணையங்கள் மீதான சேத இழப்புக்கள் மற்றும் நலிவடைந்த கொடுகடன் தரம் என்பன அண்மைய எதிர்காலத்தில் செயலாற்றத்துக்கான முக்கிய இடர்நேர்வுகள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாம் 2023 ஆம் ஆண்டினுள் நுழைவதனால், எமது முன்னுரிமை எமது ஐந்தொகையினை முகாமைசெய்வதற்கான பொறுப்புமிக்க அணுகுமுறையொன்றினை பேணுவதாகும். இது எதிர்கால வளர்ச்சிக்கு வழியமைக்கும். தற்போதைய மூலதன பற்றாக்குறையினையும் உயர்வான செலவினையும் கருத்திற்கொண்டு, நாம் எமது நிதியிடல் மாதிரியினை தொடர்ந்தும் உகப்பாக்கம் செய்வோம் என்பதுடன் எமது திரவத்தன்மை மட்டங்களை கவனமாக திட்டமிடுவோம். இவ்வழிமுறைகள் நிலைபெறத்தக்க மூலதனத் தளமொன்றினை எய்துவதற்கும் மூலதனத்திற்கான எமது பெறுவழியினை அதிகரிக்கின்ற அதேவேளை எமது மூலதனச் செலவை குறைப்பதற்கு இயலச்செய்யும் எனவும் நாம் நம்புகின்றோம்.

2023 மற்றும் அதனைத் தாண்டிய எதிர்கால வாய்ப்புக்கள்

குறுங்காலம்

- வட்டி மற்றும் தொழிற்படுத்தல் செலவுகளை குறைத்தல்
- எமது ஐந்தொகையினை வலுப்படுத்துகின்ற அதேவேளை இலங்கை இடர்நேர்வை முகாமைசெய்து போதுமான திரவத்தன்மை மற்றும் மூலதனத்தை பேணுவதன் மீது கவனம் செலுத்துதல்

நடுத்தரகாலம்

- நிதியியல் உறுதிப்பாட்டினை பேணி, வரவுசெலவுத் திட்ட மற்றும் உபாய தொழில் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிதியியல் இலக்குளை அடைதல்
- தொழிற்பாட்டு வினைதிறன் மற்றும் சேவையின் தரம் என்பன மீது கவனம் செலுத்துதல்

நீண்டகாலம்

- **எதிர்காலச் சான்றுறுதி** வங்கியொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு வங்கி மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கிசைவாகவிருக்கின்ற, புதிய தொழில்நுட்பம், எண்ணியல்படுத்தல் அத்துடன் செய்முறை வினைத்திறன்கள் என்பவற்றில் தெரிவுசெய்து முதலிடுதல், இதனூடாக அனைத்து அக்கறைதாரர்களுக்கும் நிலைபெறான பெறுமதியினை உருவாக்குதல்.

எமது **எதிர்காலச் சான்றுறுதி** உபாயத்தின் பங்களிப்பு

நம்பத்தகுந்த மற்றும் அசாதாரண அதிர்வுகளுடன் ஈடுகொடுக்கும் வகையில் நிலைபேறான வளர்ச்சியினை அடைவதற்கு நிதியியல் வசதிக்கு உட்படுத்துகின்ற தீர்வுகளை வழங்குதல்

தொழிற்பிரிவுகள் பற்றிய மீளாய்வு



சில்லறை வங்கித் தொழில்

தேசிய சேமிப்பு வங்கியின் சில்லறை வங்கித் தொழில் பிரிவானது சேமிப்பு கணக்குகள், தவணை வைப்புகள், ஈடு, தனிப்பட்ட கடன்கள், சிறிய வியாபார கடன்கள் மற்றம் முதலீட்டு ஆலோசனை என்பன உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களின் தனிப்பட்ட தேவைகளை நிறைவுசெய்வதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய வகையான உற்பத்திகளை வழங்குகின்றது. இதன் இறுதி இலக்கு ஒவ்வொரு இடைத்தொடர்பிலும் உன்னதமான அனுபவத்தினையும் உறுதியான நிலையியல் முன்னேற்றத்தை உருவாக்குவதில் அவர்களுக்கு உதவியையும் வழங்குவதாகும்.

தொழிற்படுகின்ற சூழல்

- சாதகமற்ற பொருளாதார நிலமைகள், அரசியல் மற்றும் சமூக அமைதியின்மை
- பணவீக்க அழுத்தங்கள் மற்றும் வட்டி வீதங்களில் சடுதியான அதிகரிப்பு
- வழங்கல் பக்க இடையூறுகள் மற்றும் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள்

தாக்கம்

- சில்லறை வங்கித் தொழில் நடவடிக்கைகள் மெதுவடைதல்
- நிதியிடல் செலவுகளில் சடுதியான அதிகரிப்பும் கொடுகடனுக்கான கேள்வியில் மெதுவடைதலும் சில்லறை வங்கித் தொழில் துறையின் இலாபத்தினை பாதித்தது.
- மக்களின் வருவாய் ஈட்டுதலையும் செலவிடுதல் இயலளவினையும் தடைபடுத்தியதுடன் கடன்பெறுநர்களின் மீள்கொடுப்பனவு இயலளவினை வெகுவாக பாதித்து, சொத்து தரத்தில் சீர்குலைதலுக்கு வழிவகுத்தது.

செயலாற்றுகையும் உபாயமும் வைப்புகள்

2022 ஏப்பிரலில் இருந்து தொடங்கி கொள்கை வட்டி வீதங்களில் அதிகரிப்பின் மூலம் வங்கியின் வைப்பு திரட்டுதல் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு பாதித்தன. வங்கி அதன் திரவத்தன்மை நிலையினை மேம்படுத்தவதற்கும் வைப்பு திரட்டுதலில் சாதகமான மற்றும் உயர்ந்தபட்ச வளர்ச்சியினை உறுதிசெய்வதற்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

- உயர்வான வட்டி வீதங்களின் நலன்களை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்வதை இயலச்செய்யும் விதத்தில் நிகழ்வுமிக்க காலத் தெரிவுகள் தொடரொன்றுடன் சேர்த்து (4 மாதங்கள் மற்றும் 7 மாதங்கள் வைப்புகள்) அனைத்து தவணை வைப்பு உற்பத்திகளுக்கும் போட்டிமிகு விகிதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- நீண்ட காலங்களுக்கு உயர்வான வீதத்தில் சேமிப்பதற்கு வாடிக்கையாளர்களை இயலச்செய்யம் வகையில் பிரார்த்தனா சேமிப்பு கணக்கை அறிமுகப்படுத்தி பிரார்த்தனா சேமிப்புகளை ஊக்கவித்தல்.
- வெளிநாட்டில் இருந்து பண வரவுகளை அதிகரிப்பதற்கு U-Trust "அங்கிருந்து பணம் இங்கிருந்து பரிசு" என்ற நிகழ்ச்சிதிட்டத்தை ஊக்கவித்தல்.
- வெளிநாட்டு அனுப்பல்களில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வெளிநாட்டு பண அனுப்பல்கள், முறைமை செயலிழத்தல், NSBpay செயலிடன் தொடர்புடைய பிரச்சினைகள், இணையத்தள கொடுக்கல்வாங்கல்கள், பரிமாற்று இல்லங்கள் போன்றன தொடர்பில் ஏதேனும் தகவல் தொழில்நுட்ப பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதற்கு பிரத்தியேகமான ஆளொருவர் நியமிக்கப்பட்டார்.
- ஸ்தீரி உற்பத்தி, எண்ணியல் வங்கித்தொழில், பசுமைச் சூழல் என்பவற்றை மையப்படுத்தி வங்கியின் 50 ஆவது ஆண்டுநிறைவுக் கொண்டாடத்தில் "NSB Senehase Dayada" தொடங்கி வைக்கப்பட்டது.
- தே.சே.வ. பற்றுஅட்டைகளுக்கு பல பண மீளளிப்பு ஊக்குவிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டளவில் மெய்நிகர் (செல்லிட அடிப்படையில் அமைந்த) கொடுப்பனவு சாதனங்களை தொடங்குவதில் இலங்கையின் முதலாவது வங்கியாக விளங்குவதை நோக்காககொண்டு மெய்நிகர் அட்டை கருத்திட்டம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது.

சில்லறைக்கடன்கள்

- சில்லறை கடன்வழங்கலை நோக்கி எச்சரிக்கை மிக்க அணுகுமுறையை பின்பற்றுதல் அத்துடன் மிகவும் கண்டிப்பான உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் பரிசோதனை நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வாயிலாக அதிகரிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு வங்கி பதிலிறுத்தியது.
- பிணைஉறுதி அடிப்படையிலமைந்த கடன் வழங்கலை நோக்கி கவனம் இடமாற்றப்பட்ட அதேவேளை, தனிப்பட்ட உத்தரவாதங்கள் மீது வழங்கப்படும் கடன்களுக்கான கடன் அளவை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அடகு கடன்கள் ஊக்குவிப்பினையும் வங்கிக்கு தீவிரப்படுத்தியது.
- தொழிலுக்காக புறப்படுவதற்கு முன்னர் ஆரம்ப செலவுகளை சமாளிப்பதற்கு வாய்ப்புமிக்க புலம்பெயர் ஊழியர்களுக்காக விசேட தனிப்பட்ட கடன் திட்டம் ஒன்று அிறமுகப்படுத்தப்பட்டது.
- "புறவர சரசர" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கணினி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- வாடிக்கையாளர் எதிர்கொண்ட அதிகரிக்கின்ற மீள்கொடுப்பனவு அழுத்தம் காரணமாக சொத்துப்பட்டியல் தரம் பலவீனமடைந்தமையால், சேதஇழப்புகள் சடுதியாக அதிகரிக்கப்பட்டது. இது, தொழிற்துறை முழுவதும் காணப்பட்ட நிகழ்வாகவிருந்தது. எனினும், வங்கியானது சில்லறை கடன் வழங்கலுக்கான தேறிய செயற்பாட்ற கடன்வழங்கல் விகிதத்தை 3.6 சதவீதமாக பேணியது.
- நாட்டில் பேரண்ட பொருளாதார சூழ்நிலைகளால் பாதிகப்பட்டவர்களுக்காக தமது மீள் கொடுப்பனவு கடப்பாடுகளை பிற்போடுவதற்கு 2022 இன் இறுதிவரை மத்திய வங்கி கட்டாயமாக்கிய படுகடனை காலந்தாழ்த்திச் செலுத்தலின் கீழ் தகமையுடைய வாடிக்கையாளர்களுக்கு நீடிப்பு வழங்கப்பட்டது.
- சேவையின் தரத்தினையும் தொழிற்பாட்டு வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக வங்கி வாடிக்கையாளர் சேவைக்காக புதிய அம்சங்களுடன் கூடிய புதிய காத்திருத்தல் முகாமைத்துவ முறையினை அறிமுகப்படுத்தியது.

எண்ணியல் வங்கிதொழில்

எந்தவொரு சாதனத்திலும், எவ்விடத்திலும், எந்நேரத்திலும் அணுகத்தக்க பயனர் சிநேகமிக்க இடைமுகங்கள் ஊடாக தனிப்பட்ட தேவைக்கேற்றவாறான அத்துடன் குறிப்பிடத்தக்க அனுபவங்களை விரும்புகின்ற வாடிக்கையாளர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவேற்றுவதற்கு வங்கி அதன் எண்ணியல் சேவைகளை மேம்படுத்தி வருகின்றது. இம்முயற்சியின் ஒரு பாகமாக அடகுக் கொடுப்பனவுகள், அஞ்சல் நிலைய வைப்புகள், வீடமைப்பு மற்றும் தனிப்பட்ட கடன்

தொழிற்பிரிவுகள் பற்றிய மீளாய்வு

கொடுப்பனவுகள், நிலையான வைப்புக்கு எதிரான கடன் கொடுப்பனவுகள் மற்றும் Easy Cash கொடுப்பனவுகள் போன்ற எமது எண்ணியல் தளத்திற்கான புதிய அம்சங்களை வங்கி சேர்த்துள்ளது. NSBPay செயலி, இலத்திரனியல் உங்கள் வாடிக்கையாளர்களை அறிந்துகொள்ளுங்கள் (eKYC) மற்றும் இணைய வழி வங்கிச்சேவை போன்ற வங்கிதொழில்கள் ஊடாக நிதியங்களை திரட்டுவது இதன் நோக்கமாகும். 2022 இல் இணைய வங்கிச்சேவை வலையமைப்புடன் 13,054 புதிய வாடிக்கையாளர்கள் இணைந்துகொள்வதற்கு இது வழிவகுத்தது.

இடர்நேர்வு மற்றம் வாய்ப்புகளுடனான எதிர்கால நம்பிக்கை

பணவீக்கத்தை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினை பேணுவதற்கு அரசாங்கம் முனைகின்றது. எனினும், பணவீக்க அழுத்தங்களின் நீண்ட கால தாக்கங்கள் வாடிக்கையாளர் கொள்வனவு சக்தியினை சாத்தியமாக குறைத்து நுகர்வுக்காக தமது சேமிப்புக்கள் மீது தங்கியிருப்பதற்கு கட்டயாப்படுத்துகின்றது. இதன் விளைவாக, குறைந்த செலவிலான நிதியங்களை கவர்வது வங்கிக்கு சவால்மிக்கதாக அமையலாம். இவ் அழுத்தத்தினை தணிப்பதற்கு வங்கியானது விற்பனை மைய கொடுக்கல்வாங்கல்கள், ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களை எண்ணியல் ரீதியாக சேவைபெறத் தொடங்கச்செய்தல், மற்றும் புதிய வாடிக்கையாளர்களை விசேடமாக புதிய தலைமுறையினரை இலக்குவைத்தல் என்பவற்றை அதிகரிப்பதற்கு திட்டமிடுகின்றது. பொருளாதார நிலமைகள் படிப்படியாக மேம்படுவதற்கேற்ப வங்கி அதன் வைப்பு சொத்துபட்டியலை அதிகரிப்பதற்கும் வட்டி வீதங்களை நிலைநிறுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றது. 2022 இல் பின்பற்றப்பட்ட எச்சரிக்கைமிக்க கடன் வழங்கல் அணுகுமுறையானது அண்மைய எதிர்காலத்தில் தொடர்ந்திருக்கும் சாத்தியமுள்ளது.

மாற்றமடைந்து வருகின்ற வாடிக்கையாளர் தேவைகளுக்கு அதன் எண்ணியல் ரீதியான சேவை வழங்கலை மேம்படுத்துகின்ற அதேவேளை விதிவிலக்கான வாடிக்கையாளர் சேவை மற்றும் சௌகரியம் ஊடாக சுயமாகவே தனித்துவம்பெறுவதற்கு வங்கி வாடிக்கையாளர் உறவுகளுக்கு முன்னுரிமையளித்து தொடர்ந்தும் மேம்படுத்தும். இதற்கு மேலதிகமாக, அதன் வாடிக்கையாளர்களுக்கு வங்கித்தொழில் அனுபவத்தை அதிகரிக்கவல்ல புதிய பங்குடமை மற்றம் கூட்டுமுயற்சிகளை நாடுவதன் வாயிலாக கொடுப்பனவு தொழிற்துறையில் அதன் பிரசன்னத்தை விரிவுபடுத்தவதற்கு வங்கி எதிர்பார்க்கின்றது.

எமது முன்னுரிமைகள்

- சந்தைப் பங்கினை பேணுகின்ற அதேவேளை இனங்காணப்பட்ட துறைகளில்/உற்பத்திகளில் இலக்கிடப்பட்ட வளர்ச்சியினை எய்துதல்.
- கொடுகடன் தரத்தினை முகாமைசெய்தல்.
- தொழிற்பாடுகளை எளிமைப்படுத்தல் மற்றும் சீரமைத்தல் அத்துடன் எண்ணியல் இயலளவில் முதலிடுதல் வாயிலாக வினைத்திறன்களை இயக்குதல்.

2023 ஆம் ஆண்டுக்கான மையப்படுத்தல்கள்

- சில வகைகளில் நியாயமான வளர்ச்சியாயினும் சந்தைப் பங்கினை பேணுதல்.
- தேறிய வட்டி வருமானம் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை மீது வலுவாக கவனம் செலுத்துதல்.
- மரபுசார்ந்த கொடுகடன் கொள்கை, மற்றும் சேகரிப்புக்கள் மற்றும் சேதஇழப்புகளில் கவனம் செலுத்துதல்
- வலுப்படுத்தப்பட்ட எண்ணியல் சேவை வழங்கும் வழிகள் ஊடாக உன்னதமான வாடிக்கையாளர் சேவையினை வழங்குதல்.
- ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கு வேறுபட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகள் விற்பனை வாய்ப்புக்களை முன்னெடுப்பதன் ஊடாக புதிய வாடிக்கையாளர்களை பெற்றுக்கொள்வதன் மீது அதிக கவனம்செலுத்துதல்.

நிறுவன நிதி

GRI 203-1

நிறுவன நிதி தொழில் பிரிவானது இடர்நேர்வு முகாமைத்துவ உற்பத்திகளை வழங்குவதுடன் சேர்த்து நிறுவனங்களுக்கான கடன்வழங்கல், பல்துறை நிதியிடல், கூட்டுக்கடன்கள் மற்றும் படுகடனை உருவாக்குதல் என்பனவற்றை உள்ளடக்குகின்ற பல வகையான தொழிற்பாடுகளை செயலாற்றுகின்றது. பாரிய கூட்டுநிறுவனங்கள், வங்கிகள் நிதியியல் நிறுவனங்கள். அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் அரசுக்கான சொந்தமான தொழில்முயற்சிகள் என்பனவற்றிற்கு நிதியிடல் மூலங்களை வழங்குவதன் மீது அது அடிப்படையில் கவனம் செலுத்துகின்றது.

- நிதியியல் கடன் வசதிகளை மறுசீரமைத்தல் (சேவைநாடிகளுக்கான பெறுதி உற்பத்திகள்)
- கடன்வழங்குனர்களுக்கும் பெறுனர்/ பெறுனர்களுக்கும் இடையிலான தீர்ப்பனவு மற்றும் கொடுக்கல்வாங்கல்களை ஒருங்கிணைக்கின்ற கூட்டாகச்சேர்ந்த வசதிகளுக்கான முகவரின் வகிபாகத்தினை செயலாற்றுதல்
- நம்பிக்கைச் சான்றிதழ்கள், தனிப்பட்ட வைப்புகள் மற்றும் தொகுதிக்கடன்களில் முதலிடுதல்
- உட்கட்டமைப்பு வசதி கருத்திட்டங்களுக்காக நிதியிடுவதில் தொழிற்துறை நிபுணத்துவத்தை கடன்வழங்குதல்.

தனியார் துறை நிறுவனங்கள், அரசாங்கம், அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் பாரியளவிலான கருத்திட்டங்கள் என்பவற்றுக்கான பாரிய கடன்வழங்குநர்களில் ஒரு நிறுவனமாக, பொருளாதார செயற்பாட்டினை செலுத்துவதில் எமது கொத்தணி இன்றியமையாத வகிபாகம் ஒன்றினை ஆற்றுகின்றது. தயாரித்தல், மருந்துப்பொருட்கள் மற்றும் நிலைபெறத்தக்க சக்தி போன்ற பல்வேறு துறைகளிலுமுள்ள கலப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கும் பாரியளவிலான உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் நிதியிடலானது நாம் கவனம்செலுத்தும் முக்கிய துறைகளாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது. ஆண்டு காலப்பகுதியில் வங்கியானது அரசாங்க உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்கென கடன்களினதும் முற்பணங்களினதும் ரூ. 1.5 பில்லியனை பகிர்ந்தளித்துள்ளது.

நிறுவன நிதி குழு, சேவைநாடிகளின் நிதியியல் தேவைப்பாடுகளை அறிந்துகொள்வதற்கு அவர்களுடன் ஒத்துழைத்து அவர்களது தொழில்களை முகாமைசெய்வதிலும் விரிவுபடுத்துவதிலும் அவர்களுக்கு உதவுவதற்காக நிபுணத்துத்தையும் அறிவினையும் பகிர்ந்துகொள்கின்றது. தொழிற்துறையிலுள்ள முகாமையாளர்கள், விசேடநிபுணர்கள், பரந்தளவிலான குழு உறவுகள் மூலம் விதிவிலக்கான வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதன் மீது நாம் கவனம் செலுத்துவதுடன் நம்பகமான ஆலோசனை வழங்குதல், வியாபார கடன் வழங்குதல் மற்றும் வைப்புகள் என்பவற்றில் முன்னணி செயற்பாட்டாளராக நாம் திகழ்வதற்கு வழியமைத்துள்ளது.

தொழிற்படுகின்ற சூழல்

- சாதகமற்ற பொருளாதார நிலமைகள், அரசியல் மற்றும் சமூக அமைதியின்மை
- பணவீக்க அழுத்தங்களும் வட்டி வீதங்களில் சடுதியான அதிகரிப்பும்
- வழங்கல் பக்க இடையூறுகள் மற்றும் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள்
- மத்திய வங்கியின் படுகடனை காலந்தாழ்த்தி செலுத்தும் திட்டத்தின் நீடிப்பை தொடர்ந்து மீள அட்டவணைப்படுத்தல் மற்றும் சீரமைத்தல் திட்டங்கள் தொடர்தல்

தாக்கம்

- எரிபொருள் பற்றாக்குறைகள், ஏற்பாட்டுச் சேவை பிரச்சினைகள் மற்றும் நிறுவன நடவடிக்கைகள் மீது மின் வழங்களில் இடையூறுகள் என்பவற்றின் உள்ளார்ந்தங்கள்.
- சேவைநாடிகளின் செயலாற்றுகையினை எதிர்மறையாக பாதித்து, கடன் மீள்கொடுப்பனவுகளில் இன்னல்களுக்கு வழிவகுத்தல்
- இறக்குமதிகளுடன் தொடர்புபடுகின்ற வியாபாரங்கள், வெளிநாட்டு செலாவாணி திரவத்தன்மை நெருக்கடி மூலம் பாதிக்கப்பட்டமை (நிர்மாணம், சுற்றலா மற்றும் விவசாயம் போன்ற சில துறைகளில் மெதுவடைதல்)

செயலாற்றுகையும் உபாயமும்

பொருளாதார மந்தம் மற்றும் உயர்வான வட்டி வீதங்கள் என்பவற்றின் பின்னணியில், வங்கியானது மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உள்ளடங்கலாக பல்வேறு துறைகளுக்குமான கடன்வழங்குதலை வங்கி வேண்டுமென்றே குறைத்தது. உயர்வான வட்டி வீத சூழலினுள் ஆற்றல்மிக்க சொத்துப்பட்டியலினை பேணும் பொருட்டு வங்கி முன்மதியினை செயற்படுத்தியது. எவ்வாறிருப்பினும், வங்கியானது அதன் சொத்துப்பட்டியல்களை திறமையான விதத்தில் முகாமைசெய்து ஆற்றல்வாய்ந்த சொத்துத் தரத்தினை உறுதிப்படுத்தியதுடன் உரியகால அறவீடுகள் மற்றும் வாடிக்கையாளர் காசுப் பாய்ச்சல்களை பகுப்பாய்வுசெய்வதில் விடாமுயற்சியினை மேற்கொண்டது. வாடிக்கையாளர்களின் வியாபார தொழிற்பாடுகள் பற்றி புரிந்துகொள்வதன் ஊடாக தனிப்பட்ட தேவைக்கேற்ப தீர்வுகளை வங்கி வழங்கக்கூடியதாக இருந்தது.

இடர்நேர்வு மறறும் வாய்ப்புகளுடனான எதிர்கால நம்பிக்கை

- எதிர்பார்க்ககூடிய எதிர்காலத்தில் இடம்பெறும் சவால்களை எதிர்கொள்வதில் சொத்துப்பட்டியல் கடன்அளவுகள் மிக முக்கியமாக அமைந்திருக்கும் என்பதை தேசிய சேமிப்பு வங்கி அங்கீகரிக்கின்றது. அதற்கமைய, அடுத்த ஆண்டுக்காக வங்கியானது தற்போதைய சந்தை நிலமைகளில் தாக்குப்படிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டுகின்ற தெரிவுசெய்ப்பட்ட துறைகளுக்கு கடன்வழங்குவதை முன்னுரிமைப்படுத்தும்.
- புதிய வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளுக்கு இசைவாக, வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி போன்ற அரசாங்கம் வசதியளிக்கின்ற புதிய கைத்தொழில்கள் மீது வங்கி தொடர்ந்தும் கவனம்செலுத்தும். அரசாங்கத்தின் தூய சக்தி கொள்கையின் காரணமாக ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (சூரியசக்தி மற்றும் காற்று) என்பவற்றுக்காக மின்சார மற்றும் எரிசக்தி துறைகளில் கடன்வழங்கும் வாய்ப்புக்களை வங்கி எதிர்பார்க்கின்றது. இதற்கு மேலதிகமாக, உள்நாட்டு தயாரிப்பு பற்றிய அரசாங்கத்தின் முனைப்பான ஊக்குவிப்பும் ஆடை, விவசாயம் மற்றும் சுரங்கத்தொழில்களில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழிற்முயற்சிகளுக்கு கடன்வழங்கும் வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- சர்வதேச நாணய நிதியத்தின் மீட்பு திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நடைமுறைப்படுத்தலுடன் 2023 இன் உறுதியான நிதியிடல் வாய்ப்புகள் கைகூடி, பொருளாதார நடவடிக்கைகளை தொடங்குவதற்கு தேவையான ஊக்கத்தினை வழங்கி முதலீட்டாளர் நம்பிக்கையினை தூண்டி பரந்தளவிளான கடன்வழங்கல் மீளத் தொடங்குவதற்கான சூழலுக்கு வழிவகுக்கும் என வங்கி எதிர்பார்க்கின்றது.

எமது முன்னுரிமைகள்

- உயர் இடர்நேர்வுக்கு ஆட்படுகின்ற துறை மீது அவதானம்செலுத்தி, இயளலவுகளை வர்த்தகமயமாக்குவதன் ஊடாக முக்கிய வளர்ச்சித் துறைகள் மீது கவனம்செலுத்துதல்
- கொடுகடன் தரத்தை முகாமைசெய்தல்
- குறைந்த செலவிலான நிதியிடல் வாய்ப்புகளை நாடுதல்
- தொழிற்பாடுகளை எளிமைப்படுத்தல் மற்றும் சீரமைத்தல் அத்துடன் எண்ணியல் இயலளவில் முதலிடுதல் வாயிலாக வினைத்திறன்களை இயக்குதல்.

2023 ஆம் ஆண்டுக்கான மையப்படுத்தல்கள்

- உயர்வான வளர்ச்சியுடன் கூடிய ஆயினும் குறைவிலிருந்து நடுத்தர இடர்நேர்வு தொகுப்புடன் கூடிய துறைகளுக்கான கடன்வழங்கல்.
- ஒன்றிணைந்த சுழற்சி மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் மற்றும் மீள்புதுப்பிக்கத்தகக் சக்தி (சூரியசக்தி, காற்று) என்பவற்றுக்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி துறைகளுக்கு தூ ய சக்தி கடன்வழங்கல் வாய்ப்புகள் மீதான தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையுடன் இது கைகூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது
- உள்நாட்டு தயாரித்தலை அரசாங்கம் முனைப்புடன் ஊக்குவிப்பதன் மூலம் ஆடை, வேளாண்மை மற்றும் சுரங்கத் துறைகளிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கும் வாய்ப்புகள்
- இலங்கையில் எமது சுவடுகளை விரிவுபடுத்துவதற்கு உறவுவினையும் மற்றும் முதலீட்டுப் பங்காளர்களையும் வலுவூட்டல்
- கொடுகடன் சொத்துப்பட்டியல் தரத்தினை பேணிக்காத்தல்
- கடன் கோவைகளை காப்புதொகுப்பாக்கி எண்ணியல்படுத்தவதற்கும் அனைத்து தரவுகளையும் எடுத்துச்செல்லக்கூடிய சேமிப்பு சாதனத்தினுள் சேமிப்பதற்கும் விரிவு வழிமுறைகளை தொடங்கியுள்ளது. மேலும், தொலைவிலிருந்து பணியாற்றும் சூழல் தேவையான நிகழ்வுகளில் மெய்நிகர் தனிப்பட்ட வலையமைப்புடன் (VPN) கூடிய மடிக்கணினிகளுக்கான உரிமங்கள் கோரப்படவுள்ளன.

தொழிற்பிரிவுகள் பற்றிய மீளாய்வு



சர்வதேச வங்கிச்சேவை

வெளிநாட்டு நாணயம், ஐ.அ.டொலர், யூரோ, ஸ்ரேலிங்பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென் போன்ற நாணயங்களில் வெளிநாட்டு நாணய வைப்புகள் நடவடிக்கைகளில் (சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகள்) ஈடுபடுதல், உள்முக மற்றும் வெளிமுக வெளிநாட்டு பண அனுப்பல்கள், வெளிநாட்டு நாணய பரிமாற்றம், இறக்குமதி நாணய கடிதங்களை வழங்குதல், இறக்குமதி விலைப்பட்டியல்களை கையாளுதல் மற்றும் கப்பல் அத்துடன் விமான சரக்கு உத்தவாதங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய பல்வேறு தீர்வுகளை வழங்குகின்றது.

தொழிற்படுகின்ற சூழல்

- சாதகமற்ற பொருளாதார நிலமைகள் அரசியல் மற்றும் சமூக அமைதியின்மை
- வெளிநாட்டு நாணய செலாவணி திரவத்தன்மை நெருக்கடி மற்றும் இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்
- முக்கிய மூல சந்தைகளிலிலிருந்து வெளிநாட்டு செலாவணி வருவாய்கள் வீழ்ச்சியடைதல்
- வெளிநாட்டு செலாவணி தொடர்பில் அவ்வப்போதன ஒழுங்குமுறைபடுத்தல் மாற்றங்கள்
- பணவீக்க அழுத்தங்கள் மற்றும் வட்டி வீதங்களில் சடுதியான அதிகரிப்பு

தாக்கம்

- வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட இறக்குமதியுடன் தொடர்புடைய வியாபாரம் (நிர்மாணம், சுற்றுலா மற்றும் விவசாயம் போன்ற சில துறைகளில் மெதுவடைதல்)

செயலாற்றுகையும் உபாயமும்

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபாவின் பெறுமதி இறக்கத்தின் பிரதான காரணமாக வங்கி வெளிநாட்டு நாணய வைப்புகளில் 2021 இல் அறிக்கையிடப்பட்ட ரூ. 0.02 பில்லியனுக்கு எதிராக ரூ. 10.5 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நடைமுறை வைப்புகளை திரட்டியது. வங்கித் தொழில் வழிகள் ஊடாக 2022 இல் வெளிநாட்டு பண அனுப்பல்கள் 10 ஆண்டு குறைவிற்கு வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கி ரூ. 71.8 பில்லியன் பெறுமதியுடைய வெளிநாட்டுப் பண அனுப்பல்களைப் பெற்றுக்கொண்டது. இதன் விளைவாக, வெளிநாட்டு பண அனுப்பல்களின் சந்தைப் பங்கு 2021 டிசம்பரில் 5.25% சதவீதத்திலிருந்து 2022 டிசம்பரில் 5.73% சதவீதத்திற்கு அதிகரித்தது.

தொழிற்துறையில் உள்ள வேறு செயற்பாட்டாளர்களை போன்று சந்தையின் டொலர் பற்றாக்குறை மூலம் வங்கி பாதித்தது. இது வங்கி ஊடாக வழிப்படுத்தப்படும் வணிகத்தின் அளவு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. எனினும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சி பல சேவைநாடிகளின் வணிக தொழிற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து வங்கியின் வர்த்தக நிதி வியாபாரத்தில் மேலும் பாதித்தது.

இடர்நேர்வு மற்றும் வாய்ப்புகளுடனான எதிர்கால நம்பிக்கை

பொருளாதார மீட்சியானது கொள்கை இடைத்தலையீடுகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் என்பன காரணமாக அண்மைய மாதங்களில் எதிர்பார்த்த வேகத்தை விட மெதுவாக நகர்ந்து வருகின்றது. எனினும், சர்வதேச நாணய நிதியிடத்திடமிருந்தான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் நிதி கிடைப்பனவு, சுற்றுலாத்துறை அத்துடன் வெளிநாட்டு தொழிலாளர் பண அனுப்பல் என்பவற்றிலிருந்தான அதிகரிக்கப்பட்ட உட்பாய்ச்சல்கள் என்பன மிகவும் குறிப்பிடத்தக்க மீட்சியினை தூண்டும் என்ற சாதகமான எண்ணப்பாங்கு நிலவுகின்றது. அரசாங்க செலவுகளுக்கு நிதியிடுவதற்கு தேவை மூலம் உருவான அரச வங்கிகளில் பற்றாக்குறையின் பெருமளவிலான காரணத்தினால் ரூபா திரவத்தன்மை கிடைக்கப்பெறும் தன்மை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, வட்டி வீதங்கள் மிதமிஞ்சி உயர்வாக இருந்து வருகின்றன. ஆயினும் திரவத்தன்மை நிலைமைகள் மேம்பட்டு படுகடன் மறுசீரமைப்பு பற்றிய கரிசனைகள் குறைவடைவதற்கு ஏற்ப இது தளர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வீத உறுதிப்பாட்டினை அடைவதும் ரூபா மீதான மேலதிக அழுத்தத்தினை தடுப்பதும் இதன் நோக்கமாகும்.

இறக்குமதி தொடர்புபட்ட வர்த்தக நிதியிடல் நடவடிக்கைகள் ரூபாவின் பெறுமதியிறக்கம் மற்றும் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளின் வீழ்ச்சியினால் புதிய இறக்குமதி கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் என்பன மூலம் பாதிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்கின்றது. அண்மைய காலத்தில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை பற்றாக்குறைகள் தொடர்ந்திருக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதனால் வெளிநாட்டு நாணய பண வைப்புகளையும் வெளிநாட்டு பண அனுப்பல்களையும் விரிவுபடுத்தவதன் மூலம் அதன் டொலர் திரவத்தன்மை நிலமையினை மேம்படுத்தவதற்கு வங்கி எதிர்பார்க்கின்றது. இலங்கையில் இருந்தும் இலங்கைக்கு வெளியிலும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பவற்றின் இடைத்தடங்களற்ற பாய்ச்சலை உறுதிசெய்வதற்கு வர்த்தக வசதியளித்தல் தீர்வுகளை வழங்க இது வங்கியினை இயலச்செய்யும்.

எமது முன்னுரிமைகள்

- வெளிநாட்டு பண அனுப்பல்களுக்காக முக்கிய மூல சந்தைகளுக்குள் ஊடுவல் மற்றும் சந்தை அபிவிருத்தி

2023 ஆம் ஆண்டுக்கான மையப்படுத்தல்கள்

- வளர்ச்சியினைத் தூண்டும் முக்கிய சந்தைகள் மீது தொடர்ந்தும் கவனம்செலுத்துதல்
- பயனடையாத சந்தைகளுள் ஊடுருவதன் மூலம் சந்தைப்பங்கினை அதிகரித்தல்.
- ஏற்றுமதி வர்த்தக நிதி தொழிலுக்கு அதிக கவனம் செலுத்துதல்
- தொழிற்பாடுகளை எளிமைப்படுத்தல் மற்றும் சீரமைத்தல் அத்துடன் எண்ணியல் இயலளவில் முதலிடுதல் வாயிலாக வினைத்திறன்களை இயக்குதல்.



திறைசேரி மற்றும் வணிக நடவடிக்கை

சொத்து மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவத்தை உகப்பாக்கம் செய்தல் ஊடாக வட்டி வீதம் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு போன்ற வங்கியின் சந்தை இடர்நேர்வுகளை முகாமைசெய்வதில் திறைசேரி மற்றும் வணிக நடவடிக்கை இன்றியமையாத பங்காற்றுகின்றது. அரசாங்கப் பிணையங்கள், பங்குரிமைமூலதனங்கள், வெளிநாட்டு

செலாவணி ரெப்போ கடன்பெறுதல்கள், நேர்மாற்று ரெப்போ கடன்வழங்கல் என்பவற்றில் முதலீடு உள்ளடங்கலாக இக்குழு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இதற்கு மேலதிகமாக, வங்கியின் திரவத்தன்மை தேவைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு தொகுதிக்கடன்கள் மற்றும் முறிகள் ஊடாக இக்குழு நிதியங்களை திரட்டுகின்றது.

தொழிற்படுகின்ற சூழல்

- வெளிநாட்டு செலாவாணி, பணச் சந்தைகள் மற்றும் நிலையான வருமான சந்தைகள் என்பவற்றில் எதிர்பாராத இடையூறுகள்
- தளம்பல்களை காணக்கூடியதாக இருந்தமைக்கு மத்தியிலும், குறுங்கால அரசாங்க பிணையங்களின் விளைவுகள் அதன் மேல் நோக்கிய உத்வேகத்தடன் தொடர்ந்து சென்றன.
- 2022 ஏப்பிரலில் அரசாங்கம் அதன் இருதரப்பு மற்றம் வர்த்தக கடன்கள் மீது வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவை நிறுத்துவதை அறிவித்ததுடன் மீட்பு வசதி ஒன்றுக்காக சர்வதேச நாணய நிதியத்தை அணுகியது.
- பணவீக்க அழுத்தங்கள் மற்றும் வட்டி வீதங்களில் சடுதியான அதிகரிப்பு

தாக்கம்

- 2022 ஆம் ஆண்டு முழுவதும் திரவத்தன்மை மற்றும் சந்தைப் பங்கேற்பாளர்கள் பற்றாக்குறையின் காரணமாக நிலையான வர்த்தகப்படுத்தலில் வர்த்தக வாய்ப்புகள் மோசமாக பாதிக்கப்பட்டன
- ஒரு ஆண்டு மற்றும் நீண்டகால பிணையங்கள் மீதான குறைவான விளைவை கருத்திற்கொண்டு, அதிக திரவத்தன்மைமிக்க குறுங்கால பிணையங்களை நோக்கி முதலீட்டாளர்களை ஈர்த்தல்.
- உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை பற்றிய நிச்சயமின்மையும் நிலையான வருமான பிணையங்களில் முதலீடு பற்றிய தாக்கமும்

செயலாற்றுகையும் உபாயமும்

வங்கியின் நிலையான வருமான பிணையங்கள் சொத்துப்பட்டியலானது 2022 இல் கலந்த செயலாற்றுகையினைக் கொண்டிருந்தது. ஆண்டின் முதல் அரைக் காலப்பகுதியில் முதனிலை சந்தை நடவடிக்கை 2022 ஏப்பிரலில் மத்திய வங்கி மூலமான கொள்கை வீதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் செல்வாக்கிற்குள்ளானது. இவ்வறிவித்தல், திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் வட்டிவீதங்களை சடுதியான உயர்வுக்கு இட்டுச்சென்றது. அண்மைக் காலங்களில் நாடு அதிகூடியளவு எதிர்கொண்ட 30% சதவீதம் வரை அரசாங்க பிணையங்களின் வீதங்களில் அடுக்கடுக்கான அதிகரிப்பை இவ்வாண்டு அவதானித்தது. எவ்வாறாயினும், குறைவான வட்டி வீத காலப்பகுதியில் கொள்வனவுசெய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீது வங்கி சில குறிப்பிடத்தக்க நடப்புச் சந்தை விலை இழப்புகளையும் பதிவுசெய்தது. இதன் விளைவாக, திடீர் வட்டி உயர்வின் தாக்கத்தினால் வங்கியின் தேறிய வட்டி இலாப எல்லை கணிசமாக குறைவடைந்தது.

திறைசேரி பின்னரங்கு அலுவலகத்துக்கும் கிளைகளுக்குமிடையிலான நிதியியல் மாற்றல்களின்/கிடைப்பனவுகளின் தீர்ப்பனவை வசதிப்படுத்தவதற்கு தற்போதைய மத்திய கொடுங்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமைக்கு நீடிப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய முறைமையானது அனைத்து உள்ளக நிதியியல் மாற்றல்களினதும் அதே நேர இணையவழி தீர்ப்பனவை இயலச்செய்து மேம்பட்ட சேவை மட்டங்களை விளைவித்து மாறுதல்களில் உள்ள நிதியங்களின் மாதாந்த தொகைகளை குறைவடையச்செய்தது.

இடர்நேர்வு மற்றம் வாய்ப்புகளுடனான எதிர்கால நம்பிக்கை

- நாட்டின் இடர்நேர்வு தொகுப்பினை கருத்திற்கொண்டு வெளிநாட்டு நிதியிடலை அணுகுவதில் உள்ள சவால்கள் தளரத்தப்பட்டுள்ளன.
- குறைவடைகின்ற வெளிநாட்டு ஒதுக்குகள், உயர்வடைகின்ற நாணய வெளிநாட்டு படுகடன் மீள்கொடுப்பனவு தேவைப்பாடுகள், மட்டுப்படுத்தப்பட்ட சந்தை நிதியிடல் மூலங்கள் மற்றும் அண்மைய பாதகமான உலகளாவிய அபிவிருத்திகள் அத்துடன் உச்சத்தை தொடுகின்ற பண்ட விலைகள் என்பன அரசாங்கப் பிணையங்களின் விளைவுகள் மீது அதிக அழுத்தத்தைச் செலுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்படிக்கையின் பின்னணியில் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் மேம்படுவதன் மீது பங்குரிமைமூலதனச் சந்தைகளுக்கான எதிர்கால வாய்ப்பு சாதமாக இருக்கக்கூடும்.

எமது முன்னுரிமைகள்

- புதிய குறைவான செலவிலான நிதியிடல் பிரிவுகளை கண்டறிதல்
- தொழிற்பாடுகளை எளிமைப்படுத்தல் மற்றும் சீரமைத்தல் அத்துடன் எண்ணியல் இயலளவில் முதலிடுதல் வாயிலாக வினைத்திறன்களை இயக்குதல்.

2023 ஆம் ஆண்டுக்கான மையப்படுத்தல்கள்

- முதலீடு மீதான ஆதாயத்தை உட்படுத்தல் மற்றும் சொத்து திரவத்தன்மை முகாமைத்துவ தொழிற்பாட்டை வலுப்படுத்தல்
- திறைசேரி முகாமைத்துவ முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்தல்
- வணிகர் நேரடி பங்கேற்பு நிலையினைப் பெற்றுக்கொள்ளல்
- காசு அமைப்பு முறையினை மாறுதலடையச்செய்தல் மற்றும் முக்கிய நிருவாகச் செயற்பாடுகளை இல்லாதொழித்தல், எளிமைப்படுத்தல் அல்லது மத்தியமயப்படுத்தல் மூலம் எமது முன்னணி கிளை ஊழியர்களின் கணிசமாக அதிகரிக்கப்பட்ட இயலளவு.

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

எமது உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் முக்கிய கூறுகள்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் என்பது வங்கியின் தந்திரோபாயத் திசைமுகத்திற்கு உதவும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நிலைபேறான பெறுமதி உருவாக்கத்துக்கு வழிவகுக்கும் அனைத்து பௌதீக மற்றும் எண்ணியல் வளங்களினையும் உள்ளடக்கும்.

முக்கிய உள்ளீடுகள்

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
- மூலதனச் செலவினம்
- பௌதீகத் தொடுபுள்ளிகள்
- மெய்நிகர் தொடுபுள்ளிகள் அல்லது எண்ணியல் வழிகள்
- எண்ணியல் உட்கட்டமைப்பு

முக்கிய சவால்கள்

- பௌதீக மற்றும் எண்ணியல் வழிமுறைகளுக்கு இடையில் சமநிலையை ஏற்படுத்துதல்.
- தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பின் தொடர்ச்சியான முதலீடுகள் மற்றும் நிதியீட்டு சாத்தியக்கூற்றுக்கான மதிப்பீடுகள்
- புவியியல் ரீதியிலான விரிவாக்கங்களை கட்டுப்படுத்தும் வெளிப்புற காரணிகள்
- சில வாடிக்கையாளர் பிரிவுகளிலிருந்து சில புதிய தொழிநுட்பங்களுக்கான எதிர்ப்பு
- வாடிக்கையாளரின் தனிப்பட்ட விருப்பங்களிலான தொடர்ச்சியான வளர்ச்சி

முக்கிய வெளியீடுகள்

வாடிக்கையாளர் தொடுபுள்ளிகள்

கிளைகளின் எண்ணிக்கை
262 (2021 – 261)

திறன் வலயங்களின் எண்ணிக்கை
97 (2021 – 92)

ATM களின் எண்ணிக்கை
293 (2021 – 292)

CRM களின் எண்ணிக்கை
97 (2021 – 92)

புதிய இணையவழி வங்கியியல்

வாடிக்கையாளர்கள்: **11,060** (2021 – 27,204)

நிலையான சொத்துக்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நிகர ஏட்டுப் பெறுமதி
ரூ. 14,756 மில்லியன்
(2021 – ரூ. 15,046 மில்லியன்)

எண்ணியல் மூலதனம் மீதான முதலீடு
ரூ. 370.1 மில்லியன்
(2021 – ரூ. 534.8 மில்லியன்)

முக்கிய வாய்ப்புக்கள்

- இலங்கை முழுவதும் அதிக நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல்
- தேசியசேமிப்பு வங்கியின் விரைந்து செயற்படும் தன்மையை அதிகரித்தல்
- மேம்பட்ட உற்பத்தித்திறனுடன் தொழிற்பாட்டுத் திறனை மேம்படுத்தும் இயலுமை

நாம் எமது உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தினை வளர்க்கும் முறை

1. நாடளாவிய வலையமைப்புக்கள் மற்றும் மாதிரிக் கிளை எண்ணக்கருக்கள் மூலம் எமது இருப்பை அதிகரித்தல் மற்றும் சென்றடைதல்.
2. திறமையான செயலிகள் மற்றும் அதிநவீன வங்கிப்பணியில் கவனம் செலுத்தி நமது எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துதல்.
3. ஒருங்கிணைந்த எண்ணியல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு மூலம் எமது தொழிற்பாட்டு செயன்முறையை மேம்படுத்துதல்.

நாம் எமது உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தினை இணைக்கும் முறை

புலமைச்சொத்து மூலதனம்

வர்த்தக நாமத் தெரிவுநிலையானது கிளை விரிவாக்கங்கள் மூலம் ஊக்குவிக்கப்படும், அதே நேரத்தில் எண்ணியல் உட்கட்டமைப்பு செயற்திறனை ஊக்குவிக்கிறது.

மனித மூலதனம்

செயன்முறை விருத்திகள் மற்றும் புதிய முறைமைகளை செயற்படுத்துதல் புதிய வேலை வாய்ப்புகள், பயிற்சி மற்றும் திறன் விரிவாக்கத்தை உருவாக்குகிறது.

சமூக மற்றும் உறவுசார் மூலதனம்

பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பின் விரிவாக்கம் வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குனர்களுடன் வலுவான இணைப்புகளை ஏற்படுத்துகிறது.

இயற்கை மூலதனம்

நிலைபேறான பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பின் மீதான முதலீடு கார்பன் தடத்தைக் குறைக்கிறது.

நிதிசார் மூலதனம்

அதிகரித்த செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஒட்டுமொத்த செலவுகளை குறைக்கிறது.

பொருண்மை, அக்கறைதாரர்கள், குறுகியதிலிருந்து நீண்ட கால உபாய முன்னுரிமைகள் உடனான தொடர்புகை

பொருண்மை விடயங்கள்

தொடர்புபட்ட அக்கறைதாரர்

குறுகியதிலிருந்து நீண்ட கால உபாய முன்னுரிமைகள்

சாத்தியமான விட்டுக்கொடுப்புக்கள்

- உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தில் முதலீடு செய்வதற்கு கணிசமான நிதி மூலதன முதலீடு தேவைப்படுகிறது. பராமரிப்பு செலவில் நிதி மூலங்களைப் பயன்படுத்துதல் அல்லது மேம்படுத்துவதற்கான விரிவாக்க மூலதனச் செலவினங்களுக்கு இடையே விட்டுக்கொடுப்புக்கள் காணப்படுகின்றன.
- உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தை அதிகரிக்கும் செயற்பாட்டில், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவித்தல் மற்றும் இயற்கை மூலதனத்தை சீர்குலைப்பதன் மூலம் நாம் செயற்படும் சமூகங்களை எதிர்மறையாக பாதிக்கலாம். பொறுப்புடன் கூடிய கழிவு முகாமை மற்றும் சுற்றுச்சூழலை சீராக்கும் கொள்கைகளை செயற்படுத்த நாங்கள் முயற்சி செய்கிறோம்.
- தற்போதுள்ள வசதிகளின் சுற்றுச்சூழல் தடம் குறைப்பதற்கான நமது முதலீடுகள் இயற்கை, புலமைச்சொத்து, மனித மற்றும் சமூக மற்றும் உறவுசார் மூலதனத்திற்கு பயனளிக்கும்.

ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

முதன்மை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

7 AFFORDABLE AND CLEAN ENERGY

கிளை சக்தித் தேவைகளுக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்தல்

11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

சக்தி வினைத்திறனுள்ள, அணுகக்கூடிய பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்புகள் மற்றும் புதுமையான, உள்ளடக்கப்பட்ட உற்பத்தகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

எண்ணியல் வங்கியியலை ஊக்குவிப்பதன் மூலம் காகித நுகர்வைக் குறைத்தல்.

இரண்டாம்நிலை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

10 REDUCED INEQUALITIES

பரந்த சமூகத்தினரிடையே கிளை வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம், தீவு முழுவதும் திறன் வலயங்களை அதிகரிப்பதன் மூலம் வங்கிச் சேவைகளுக்கு எளிதான அணுகலை வழங்குதல்.

13 CLIMATE ACTION

வங்கியின் கார்பன் தடத்தைக் குறைக்க சக்தி வினைத்திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க (சூரிய) ஆற்றல் திட்டங்களை செயற்படுத்துதல்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

1 எமது பிரசன்னம் மற்றும் அடைவைப் பெருக்குதல்

இலங்கையின் வங்கித் துறையில் எமது அந்தஸ்தை மேம்படுத்தும் வகையில், தீவின் ஒவ்வொரு மாகாணம் மற்றும் மாவட்டத்திற்கும் விரிவடையும் எமது வலையமைப்புக்கள் மூலம் தீவு முழுவதும் எமது புவியியல் தடத்தை விரிவுபடுத்தியுள்ளோம். இது ஒவ்வொரு சமூகத்திற்கும் மற்றும் சமூகத்தின் ஒவ்வொரு அடுக்குக்கும் எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை சென்றடைய உதவுகிறது. எமது வலையமைப்பு 262 கிளைகள், 8 பிராந்திய அலுவலகங்கள், 3,996 தபால் நிலையங்கள் மற்றும் துணை அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் விசா மற்றும் மாஸ்டர் வரவு அட்டை வசதிகளுடன் கூடிய 390 தன்னியக்கக் கூற்றுப்பொறி (ATM)/காசு மீள் சுழற்சி இயந்திரங்களை (CRM) உள்ளடக்கியது. நாடு முழுவதிலும் உள்ள பண வைப்பு இயந்திரங்கள் (CDM) மற்றும் CRMகள் உட்பட 5,800 க்கும் மேற்பட்ட இயந்திரங்களை இணைக்கும் வலையமைப்பிற்கான அணுகலை வழங்கும் லங்காபே பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளியுடன் நாம் இணைந்து செயலாற்றியுள்ளோம்.


	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
வட மாகாணம்	20	28	8
1. யாழ்ப்பாணம்	14	20	6
2. கிளிநொச்சி	1	2	1
3. மன்னார்	2	2	–
4. முல்லைத்தீவு	2	2	–
5. வவுனியா	1	2	1

	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
வட மத்திய மாகாணம்	15	19	2
6. அனுராதபுரம்	12	16	2
7. பொலநறுவை	3	3	–

	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
வடமேல் மாகாணம்	27	38	8
8. புத்தளம்	8	13	4
9. குருணாகல்	19	25	4

	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
மேல் மாகாணம்	82	152	51
10. கொழும்பு	43	89	29
11. கம்பஹா	27	46	17
12. களுத்துறை	12	17	5

	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
தென் மாகாணம்	39	52	12
13. காலி	15	20	5
14. மாத்தறை	13	18	4
15. அம்பாந்தோட்டை	11	14	3



	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
மத்திய மாகாணம்	28	36	5
16. மாத்தளை	4	6	2
17. நுவரெலியா	7	8	1
18. கண்டி	17	22	2

	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
கிழக்கு மாகாணம்	17	20	2
19. திருகோணமலை	2	2	–
20. அம்பாறை	8	9	1
21. மட்டக்களப்பு	7	9	1

	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
ஊவா மாகாணம்	13	18	3
22. பதுளை	6	12	3
23. மொனராகலை	7	6	–

	கிளைகள்	த.கூ.இ/ கா.மீ.இ	திறன் வலயங்கள்
சப்ரகமுவா மாகாணம்	21	27	6
24. கேகாலை	10	13	3
25. இரத்தினபுரி	11	14	3

எமது கிளைகள் மற்றும் வலைப்பின்னல் தொடர்பில் மேலும் விபரங்களை பார்வையிட ஸ்கேன் செய்யவும்
https://www.nsb.lk/about-us/ournetwork/

உரு 12

அரச வங்கியாக எமது விரும்பத்தக்க நிலையைக் கருத்திற் கொண்டு, எமது வங்கிச் சேவைகள் பரவலாகக் கிடைப்பது மட்டுமல்லாமல், திறமையாகவும், தொழிநுட்பத்திலும் முன்னணியில் இருப்பதை உறுதிசெய்ய நாங்கள் முயற்சி செய்கிறோம். 2022 ஆம் ஆண்டில் இந்த இலக்கை நோக்கி நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளமை பின்வரும் சாதனைகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய வலையமைப்பு

எமது வர்த்தக நாமம் கட்புலனாகும் மற்றும் உறுதியான வெளிப்பாடாக இருக்கும் அதே வேளையில் வாடிக்கையாளர்களுக்கு பௌதீக தொடு புள்ளிகளாக சேவை செய்வதில் கிளைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சமீபத்திய ஆண்டுகளில் வங்கிச் சேவைகளுக்கான எண்ணியல் தளங்களை நோக்கி வாடிக்கையாளர்களின் விருப்பம் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காட்டியுள்ளது. இதன் விளைவாக, வங்கியானது, நாடு முழுவதும் பௌதீக தொடுப்புள்ளிகளை நிறுவுவதன் மூலமும், எண்ணியல் உட்கட்டமைப்பை விரிவுபடுத்துவதன் மூலமும் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட மற்றும் எண்ணியல் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்துள்ளது.

எமது பெறுமதியை உருவாக்கும் செயற்பாட்டில், நாடளாவிய ரீதியிலான நமது பௌதீக தொடுபுள்ளிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. எமது எண்ணியல் உட்கட்டமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்தும் அதே வேளையில், தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் புதிய கிளைகளைச் சேர்ப்பதன் மூலம் எமது கிளை வலையமைப்பைப் பெருக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். 2022 ஆம் ஆண்டில், பொல்பிட்டிகமவில் ஒரு புதிய கிளையைத் திறந்ததுடன், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், எமது ஊழியர்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் உற்பத்திச் சூழலை வழங்குவதற்கும் ஆண்டு முழுவதும் கிளைகளை இடமாற்றம், விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றைத் தொடர்ந்தோம். கஹட்டகஸ்திகிலிய, இப்பாகமுவ, இங்கிரிய ஆகிய இடங்களில் உள்ள கிளைகள் விசாலமான இடங்களுக்கு மாற்றப்பட்டதுடன், ஹொரவப்பொத்தானை, யக்கல, பண்டாரவளை, கிரிந்திவல, கண்டி மற்றும் தலைமை அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள கிளைகளில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

"மாதிரிக் கிளை" எண்ணக்கரு

2017 இல் அறிமுகப்படுத்தப்பட்ட "மாதிரிக் கிளை" திட்டம், வாடிக்கையாளர்களுக்கு அதிநவீன வங்கி சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு வங்கி உத்தியாகும். நிலையான வர்த்தகநாமம் மற்றும் எண்ணியல் ஒப்பத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட ஒவ்வொரு கிளையும், எண்ணியல் வங்கியியலுக்காக ATM மற்றும் CRM ஆகியவற்றுடன் "திறன் வலயத்தைக்" கொண்டுள்ளன. ஒருங்கிணைந்த எண்ணியல் ஊடக ஒப்பம் (IDMS) "NSB Connect" வர்த்தக நாமத்தை ஆதரிக்கிறது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், வங்கி நாடு முழுவதும் 40 திறன் வலயங்களை நிறுவியுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகல்

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சமமான மற்றும் தடையற்ற அணுகலை வழங்குவதற்கான எமது உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, ஊனமுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நாடளாவிய ரீதியில் உள்ள அதன் அனைத்து கிளைகளிலும் அணுகலை வழங்க வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், வங்கிக்குச் சொந்தமான 47 கிளைக் கட்டிடங்களும், வாடகைக்கு எடுக்கப்பட்ட 90% ஆன கிளைகளும் ஊனமுற்றோருக்கான அணுகலுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. முன்னோக்கிச் செல்லும்போது, இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அனைத்து புதிய கிளைகளும் கட்டப்படும், மேலும் எதிர்காலத்தில் ஒவ்வொரு தேசிய சேமிப்பு வங்கிக் கிளையும் சமமான அணுகல் வசதிகளுடன் இருப்பதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

சக்தி வினைத்திறனுள்ள கட்டடங்கள்

நமது சுற்றுச்சூழல் பொறுப்புகள் பற்றிய விழிப்புணர்வுடன் கூடிய பார்வையை நாங்கள் கொண்டுள்ளோம், மேலும் செலவைக் குறைக்கவும், சக்தியைப் பாதுகாக்கவும் மற்றும் நமது கார்பன் தடத்தை குறைக்கவும் பல சக்தித்திறன் திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம். சக்தித் திறனுள்ள கட்டடங்களை நிர்மாணிப்பதில் எமது கவனமானது, அனைத்து புதிய கிளைகளும் இயற்கையான ஒளி மற்றும் காற்றை மேம்படுத்துவதற்காக கட்டப்பட்டிருப்பதை உறுதிசெய்கிறது, இதன் விளைவாக சக்தி நுகர்வு குறைகிறது. இதன் விளைவாக, நாங்கள் 46 கிளைகளை சூரிய சக்தி முறைமைகளுடன் பொருத்தியுள்ளோம், மேலும் எமது கிளை வலையமைப்பில் 18% புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் செயற்படுகிறது. எமது கதிர்காமம் சுற்று பங்களா, இயற்கை ஒளி மற்றும் காற்றை திறமையாகப் பயன்படுத்துவதன் காரணமாக, ஆற்றல் சேமிப்புக்கு பங்களித்து, குறைந்த மின் நுகர்வு கொண்ட ஆற்றல் திறன் கொண்ட கட்டிடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
எமது சுற்றுச்சூழலுக்கு உகந்த முயற்சிகள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு பக்கம் 164ஐப் பார்க்கவும்.

2 எமது எண்ணியல் தடத்தை விரிவுபடுத்துதல்

வங்கிப் பரிவர்த்தனைகளில் ஈடுபடும் போது வாடிக்கையாளர்கள் அதிகரித்த எண்ணியல் நுட்பத்தைக் காட்டுவதால், வங்கித் துறையில் வாடிக்கையாளர் தொடர்புகளில் தற்போதைய போக்கு எண்ணியல் மயமாக்கலின் திசையில் சீராக நகர்கிறது. வங்கிச் சேவையை மிகவும் திறமையாகவும், வசதியாகவும், நெகிழ்வாகவும் மாற்றும் சுய-சேவை வழிமுறைகளை நோக்கி ஒரு தெளிவாக உணரக்கூடிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஊழியர்கள் எண்ணியல் செயன்முறைகள் மிகவும் திறமையானதாக இருப்பதைக் கண்டறிந்துள்ளனர், இதன் விளைவாக அதிக உற்பத்தித் திறன் ஏற்பட்டுள்ளது. இந்த இலக்கினை நோக்கி, நாங்கள் சுய சேவை முன்மொழிவுகள், பணம் செலுத்துதல் மற்றும் எண்ணியல் தீர்வுகள் மற்றும் தகவல் பாதுகாப்பை மேம்படுத்துவதில் முதலீடு செய்துள்ளோம். எமது முயற்சிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பான அட்டை கட்டணங்கள்

வங்கியானது வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான தனது பொறுப்பை மிகவும் முக்கியமாகக் கொள்வதுடன், நாட்டின் பணமில்லா முயற்சியைத் தொடர புதுமையான மற்றும் பாதுகாப்பான கட்டண விருப்பங்களைப் பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

வங்கி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளாவன:

- மோசடியை எதிர்த்துப் போராட, இலத்திரனியல் சில்லு (Chip) மூலம் இயக்கப்படும் EMV (ஐரோப்பா, மாஸ்டர் அட்டை மற்றும் விசா) வரவு அட்டைகளை உள்நாட்டில் அச்சிடுதல் தொடர்கிறது.
- வங்கியின் அட்டைத்தொகுப்பு 84% EMV இணக்கமானது.
- அட்டை நிலையம், அழைப்பு நிலையம் மற்றும் ATM துணைச் சேவை அலகு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தடங்காணல் முறைமைகள் மூலம் வரவு அட்டை தொடர்பான சிக்கல்களைக் கையாளலாம்.
- சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அட்டைதாரர் தரவு பாதுகாப்பு நியமமாகிய தரவுப் பாதுகாப்பு நியமங்கள் PCI-DSS சான்றிதழைக் கொண்டிருப்பதுடன், வங்கி 2022 இல் மறுசான்றளிக்கப்பட்டது.

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

பாதுகாப்புத் தொழிற்பாட்டு மையம் (SOC)

தொழிநுட்ப இடர் மீள்தன்மை குறித்த இலங்கை மத்திய வங்கி ஆலோசனைத் தாளில் உள்ள தேவைகளை அடைவதற்கான ஆயத்தத்தைப் பொறுத்தவரை, வங்கி 2022 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட தேவைகளை அடைந்துள்ளது. இது தகவல் பாதுகாப்பு முகாமை முறைமையை மேம்படுத்தி, வழக்கமான முகாமைக் குழு மதிப்பாய்வுகள் மற்றும் தொழிற்திறன் மதிப்பாய்வுகள் மூலம் செயற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் தொடரும்.

கட்டண செயலி

2021 ஆம் ஆண்டில், iOS, Android மற்றும் Huawei போன்ற பிரபலமான கையடக்கத் தொலைபேசிப் பயன்பாட்டுத் தளங்களில் கிடைக்கும் கையடக்கத் தொலைபேசிக் கட்டண செயலியான "NSBPay" இனை அறிமுகப்படுத்தினோம். வாடிக்கையாளர்கள் தங்கள் வழக்கமான வங்கிப் பரிவர்த்தனைகளை வசதியாகவும், பாதுகாப்பாகவும், விரைவாகவும் செயற்படுத்துவதே பயன்பாட்டின் முதன்மையான குறிக்கோளாகும். வைப்புக்கள், வங்கி அல்லது பிற வங்கிகளில் உள்ள பிற கணக்குகளுக்கு நிதிப் பரிமாற்றம், கடன் தவணை செலுத்துதல், பட்டியல்களை செலுத்துதல், QR குறியீடு செலுத்துதல், எங்கள் அழைப்பு நிலையத்துக்கு உடனடி இணைப்பு மற்றும் பல அம்சங்கள் உட்பட பல அம்சங்களை இந்த செயலி வழங்குகிறது.

கையடக்கத் தொலைபேசிக்

விபரம்	2022	2021
ஆண்டில் வழங்கப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை	161,467	291,318
31 டிசம்பரில் பாவனையிலுள்ள மொத்த அட்டைகள்	2,203,309	2,041,842
ஆண்டின் போதான மொத்த பரிவர்த்தனைகளின் அளவு	9,831,714	7,639,929
ஆண்டின் போதான மொத்த பரிவர்த்தனைகளின் பெறுமதி (ரூ. மில்.)	26,235	18,424
பாவனையிலுள்ள ATM இயந்திரங்களின் எண்ணிக்கை	293	292
பாவனையிலுள்ள CRM இயந்திரங்களின் எண்ணிக்கை	97	92
இணையவழி வங்கியியல் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை	123,591	112,531
இணைய வங்கி – ஆண்டின்போதான மொத்த பரிவர்த்தனை அளவு	1,651,209	1,705,045
இணைய வங்கி – ஆண்டின்போதான மொத்த பரிவர்த்தனை பெறுமதி (ரூ. மில்.)	56.6	38.7


அட்டவணை 15

பிற கொடுப்பனவுத் தீர்வுகள்

பாதுகாப்பான மின்னியல்-பணம் செலுத்துதலை ஊக்குவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகளுக்குப் பதிலிறுக்கும் வகையில், வங்கி பல வருடங்களாக LankaPay-CEFTS, LankaPay இணையவழிக் கொடுப்பனவுத் தளம் (LPOPP), JustPay மற்றும் USD இணையவழித் தீர்ப்பனவு முறை போன்ற பல கட்டண தீர்வுகளை உருவாக்கியுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி 2023 ஆம் ஆண்டளவில் இலங்கையில் மெய்நிகர் (கைத்தொலைபேசி அடிப்படையிலான) கட்டணக் கருவிகளை வழங்கத் தொடங்கும் முதல் வங்கியாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3 எமது தொழிற்பாட்டு செயல்முறையை மேம்படுத்துதல்

எண்ணியல் மயமாக்கலை நோக்கிய உலகளாவிய மாற்றத்தை நாங்கள் அங்கீகரித்தல், மிகவும் திறமையான தொழிற்பாட்டு செயன்முறைகளை வழங்குவதற்கு எமது பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பு தடையின்றி இணைந்து செயல்படுவதை உறுதி செய்துள்ளது. எண்ணியல் டிஜிட்டல் யுகத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு விரைவாகப் பதிலளிப்பதற்காகவும், மற்றவர்களைவிட முன்பாக இருக்கவும் எமது முறைமைகளையும் செயன்முறைகளையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம். இது சம்பந்தமாக எங்கள் முன்முயற்சிகள் பின்வருமாறு:



உரு 13

ஒருங்கிணைந்த மைய வங்கியியல் தீர்வு

எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த மைய வங்கித் தீர்வு, வைப்புத்தொகை, கடன்கள், காசோலைகள், கடன்கள், பிணையங்கள், சேகரிப்புகள் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தையும் ஒரே தளத்தில் உள்ளடக்கும். இது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துகிறது:



வாடிக்கையாளர் நெகிழ்வுத்தன்மைக்கான சமீபத்திய மென்பொருளுக்கு தகவல் தொழிநுட்பக் கட்டமைப்பு மற்றும் முறைமைகளைப் புதுப்பித்தல்

மாற்றங்களுக்கு எளிதாக மாற்றியமைக்கத்தக்கவாறு உற்பத்திகள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை எண்ணியல் முறையில் மாற்றியமைத்தல்,

நாளாந்தத் தொழிற்பாடுகளுக்கும் வாடிக்கையாளர் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கும் சமீபத்திய தொழிநுட்பத்தைப் பயன்படுத்துதல்

எமது தொழிற்பாட்டின் வேகம், செயற்திறன் மற்றும் வலிமையை மேம்படுத்தும் தன்னியக்க செயன்முறைக்கு பின்-இறுதி செயற்பாடுகளை எண்ணியல் முறையில் புதுப்பித்தல்

மைய வங்கியியல் தீர்வு, அதிநவீன ஒருங்கிணைந்த வங்கித் தேவைகளைக் கையாளும் போது அதிக அளவிலான தன்னியக்கம் மற்றும் இடரற்ற வரிசைப்படுத்தலை ஏற்படுத்தும். ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கும்போது இது பயன்படுத்த எளிதானதாகவும், உயர் தொழிற்பாட்டு செயற்திறனை வழங்குகிறது. இந்த அணுகுமுறை ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் இருவருக்கும் உடனடி பலன்களை வழங்குகிறது, அதே நேரத்தில் வங்கியை தரவு சார்ந்த நிறுவனமாக மாற்றுகிறது, மேலும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு மற்றும் நீண்ட காலத்திற்கு சந்தைக்கு விரைவான நேரக் கிடைப்பனவை உறுதி செய்யம். மேலும், பணத் தூயதாக்கல் மோசடித் தடுப்பு (AML) தீர்வு, திறைசேரி முகாமை முறைமை (TMS) மற்றும் மனித வள முகாமை முறைமை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு இந்த முறைமையை வலுப்படுத்தி, தொழிற்பாட்டு முகாமைக்கான ஒரு முழுமையான அணுகுமுறையை வழங்குகிறது.

பணத் தூயதாக்கல் தடுப்பு (AML) தீர்வு

தொகுதிச் சங்கிலி தொழிநுட்பத்துடன் கூடிய E-KYC

2018 ஆம் ஆண்டில், இலங்கையின் நிதிச் சேவைகளுக்கான தொகுதிச்சங்கிலி தொழிநுட்பத்தின் சாத்தியமான நன்மைகளை இலங்கை மத்திய வங்கி கண்டறிந்து வங்கிகள் மற்றும் தகவல் தொழிநுட்பத் துறையின் தன்னார்வ பங்கேற்புடன் தொழிற்துறைக்கு இடையிலான ஆய்வை ஆரம்பித்தது. இலங்கை மத்திய வங்கி இலங்கையில் தொகுதிச்சங்கிலி தொழிநுட்ப அடிப்படையிலான நிதிச் சேவை தீர்வுகளுக்கு வழி வகுக்க, பகிரப்பட்ட KYC தீர்வை உருவாக்கி, தொகுதிச் சங்கிலி தொழிநுட்ப அடிப்படையிலான பகிரப்பட்ட வாடிக்கையாளரை அறிதலை (KYC) உருவாக்க ஆரம்பிக்கும் ஒப்பந்தங்களில் ஈடுபட முடிவு செய்தது. அதன்படி, தொகுதிச்சங்கிலி தொழிநுட்பத்துடன் கூடிய e-KYC தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை வங்கி மேற்கொண்டுள்ளது. AML ஆனது மைய வங்கி முறைமையை முழுமைப்படுத்துவதுடன், பின்வரும் தொழிற்பாடுகளை செயற்படுத்தியுள்ளது:

- மோசடி மற்றும் பணத் தூய்மையாக்கல் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் பரிவர்த்தனைகளை கண்காணித்தல் மற்றும் தொடர்தல்.
- உங்கள் வாடிக்கையாளரை அறிதல் (KYC) மற்றும் வாடிக்கையாளர் முன்னெச்சரிக்கை செயற்பாடு தொடர்பான தொடர்ச்சியான வாழ்க்கைச் சுற்றோட்ட உள்ளடக்கம்.
- தடைப் பட்டியல்களுக்கு எதிராக வாடிக்கையாளர்கள் அல்லது பரிவர்த்தனைகளைத் திரையிடும் இயலுமை
- அனைத்து AML விதிமுறைகளுக்கும் இணங்குதல்.
- முறைமையினால் இயக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் தடுப்புப்பட்டியலில் உள்ள வாடிக்கையாளர்களைக் கண்காணித்தல் ஆகியவற்றின் காரணமாக மேம்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை ஆய்வு.

மனித வள முகாமை முறைமை

மனித வள செயற்பாடுகளை தன்னியக்கமாக்கும் நோக்கில், வங்கி மனித வள முகாமை முறையை செயற்படுத்தியது. இந்த முறைமை முற்றடக்கமான மனிதள முகாமை செயன்முறையை நிவேற்றுவதுடன், பின்வரும் முறையில் மனிதவள செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துகிறது:

- ஊழியர் தகவல்களை சேகரித்தல், சேமித்துவைத்தல் மற்றும் மதிப்பிடுதல்.
- ஆட்சேர்ப்பு மற்றும் தொழிலில் இணைத்தலை முகாமை செய்தல்.
- ஊதியம் மற்றும் செயற்திறன் மதிப்பீட்டைக் கண்காணித்தல்.
- ஊழியர் நலன்களின் முகாமையை நிர்வகித்தல்.
- ஊழியர் கற்றல் மற்றும் விருத்தி பற்றிய பதிவுகளை பராமரித்தல்.
- 2022 ஆம் ஆண்டில், புதிய மனிதவள முறைமையின் முதல் கட்டம் செயற்படுத்தப்பட்டது.

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

Cash @ Ease முறைமை

வங்கியின் பண முகாமை செயன்முறையை சீரமைக்க Cash@Ease முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. திறைசேரிப் பிரிவு மற்றும் கிளைகள் முழுவதும் பண முகாமை செயன்முறை ஆகியவற்றில் அதிக தொழிற்பாட்டு வினைத்திறனை இது அனுமதித்துள்ளது, மேலும் பின்வருவனவற்றையும் செயற்படுத்தியுள்ளது:

- தினசரி பண நிலைகளை அறிதல்.
- திறைசேரியிலிருந்து பணத்தைக் கோருதல்.
- நிலுவைகளை முகாமை செய்தல்.
- பரிவர்த்தனைகளின் உறுதிப்படுத்தலை இணையவழியில் அனுப்புதல்.
- பண முகாமை செயன்முறைகளில் அதிகரித்த துல்லியம்.
- அதிக அளவிலான செயற்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவை.

2023 மற்றும் அதனைத் தாண்டிய எதிர்கால வாய்ப்புக்கள்

குறுங்காலம்

- ஒரு தனியான எண்ணியல் வங்கி அலகினை நிறுவுதல் மற்றும் எண்ணியல் உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் சேமிப்பு மற்றும் கடன் உற்பத்திகளுக்கு முதலிலிருந்து இறுதி வரையான எண்ணியமயமாக்கல்.
- மனிதவள மற்றும் திறைசேரி முகாமை முறைமைகளுடன் மைய வங்கியியல் தீர்வை ஒருங்கிணைத்தல்.

நடுத்தரளவு காலம்

- தற்போதுள்ள வாடிக்கையாளர் தளத்தை எண்ணியல் வழிமுறைகளாக மாற்றுதல் மற்றும் 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இரு மடங்காக விரிவாக்குதல்.
- தபால் துறையை எண்ணியல் மயமாக்குதல்

நீண்ட காலம்

- வேகமான மற்றும் தரவு சார்ந்த அமைப்பாக மாறுதல்.

எமது **எதிர்காலச் சான்றுறுதி** உபாயத்தின் பங்களிப்பு

நம்பத்தகுந்த மற்றும் அசாதாரண அதிர்ச்சிகளைத் தாங்கும் வகையில் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான உள்ளடக்கமான நிதித் தீர்வுகளை வழங்குதல்.



புலமை மூலதனம்

எமது புலமை மூலதனத்தின் முக்கிய கூறுகள்

புலமை மூலதனம் என்பது எமது அக்கறைதாரர்களுக்கான பெறுமதி முன்னோக்கம் மற்றும் அடையாளத்துக்கான முக்கிய பகுதியை உருவாக்கும், ஒன்றுசேர்ந்த அறிவு மற்றும் புலமை வளங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். புலமை மூலதனமானது, உள்முக அறிவு, புற அறிவு, வாடிக்கையாளர் விசுவாசம், வர்த்தகநாமம் மற்றும் நற்பெயர், முறைமைகள் மற்றும் செயன்முறைகள், வணிக நெறிமுறைகள், கூட்டுவணிகப் பெறுமதிகளின், கொள்கைகள், மற்றும் கூட்டுவணிகக் கலாச்சாரம் போன்ற அக்கறைதாரர்களுக்குப் பெறுமதியை உருவாக்க அவசியமான அருவச் சொத்துக்களை உள்ளடக்கியதாகும்.

முக்கிய உள்ளீடுகள்

- ஒருங்கிணைந்த வணிகத் தந்திரோபாயம்
- சிறந்த ஆளுகை நடைமுறை
- தந்திரோபாய உருவாக்கம் மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகளின் நிறைவேற்றம் ஆகியவற்றுக்கான துரித அணுகுமுறை
- தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் இணைப்பு
- கூட்டுவணிகக் கலாச்சாரம்

முக்கிய சவால்கள்

- விரைவாக மாற்றமடையும் தொழிற்பாட்டு சூழலில் வணிகத் தொடர்ச்சித்தன்மையை உறுதிசெய்தல்
- மூலதன ஒதுக்கீட்டு வரையறைகள் காரணமாக பரஸ்பரம் புறநீங்கும் செயற்றிட்டங்கள்
- நிலைத்துநிற்கும் வர்த்தகநாமப் பெறுமதி
- இணையவழி மீள்தகமை மற்றும் தகவல் பாதுகாப்பு

முக்கிய வெளியீடுகள்

வர்த்தகநாம மதிப்பு
ரூபா. 30.4 பில்
(2021 - ரூ. 30.7 பில்)

கடன் தரப்படுத்தல்
AAA **(2021 -** AAA)

வர்த்தகநாம தரம்
AA **(2021 -** AA)

10 ஆண்டுகளுக்கும் அதிக சேவையிலுள்ள ஊழியர்
1,648 (2021 – 1,469)

முக்கிய வாய்ப்புக்கள்

- எண்ணியலாக்கம்
- புத்தாக்கம் மற்றும் துரிதத்தன்மை
- மேம்பட்ட தகவலளித்த தீர்மானம் மேற்கொள்ளல்
- பயனுறுதிமிக்க அக்கறைதாரர் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பு

நாம் எமது புலமை மூலதனத்தை வளர்க்கும் முறை

1. வங்கித் துறையில் செழுமைமிக்க அறிவினைக் கொண்ட பெருமையைக் கொண்டு மதிப்புமிக்க நிறுவனத்தைக் கட்டியெழுப்புதல்
2. கூட்டுவணிக கலாச்சாரம் மற்றும் வங்கியியல் நடைமுறைகளில் நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, நாணயத்தன்மை மற்றும் புத்துருவாக்க இயலுமை கொண்ட அடிப்படையில் பெறுமதி இயக்கும் நிறுவகமாக இருத்தல்
3. தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கத்தை ஒருங்கிணைக்க பொருத்தமான முறைமைகள் மற்றும் செயன்முறைகள் காணப்படுதலை உறுதிசெய்தல்
4. ஆளுகை மற்றும் இடர் கட்டுப்பாடுகளை மேம்படுத்தும் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதை நிலைபேறாக்கல்

புலமை மூலதனம்

நாம் எமது புலமை மூலதனத்தினை இணைக்கும் முறை

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

மேம்படுத்தப்பட்ட வணிகப் பெறுபேறுகளை விளைவாகத் தரத்தக்க வகையில் உட்கட்டமைப்பு, முறைகைள் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்தல்

மனித மூலதனம்

தொழிற்பாட்டு மேன்மைக்குப் பங்களிக்கும் வகையில் எமது ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவத்தினை மேம்படுத்தத்தக்கவாறு பயிற்சியளித்தல் மற்றும் விருத்தி மீது முதலீடு செய்தல்

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

நம்பிக்கையை ஏற்படுத்தத்தக்க, விளக்கமாக அமைந்த வகையில் எமது பெறுமதிகள், வணிக நெறிமுறைகள் மற்றும் இடர் முகாமை சட்டகம் ஆகியன சீரமைக்கப்பட்டுள்ளன.

இயற்கை மூலதனம்

அக்கறைதாரர் நம்பிக்கையை மேம்படுத்தும் வகையில், எமது விஞ்ஞான அடிப்படை அணுகுமுறையில் நிலைபேறானதன்மை முன்முயற்சிகள் மீதான எமது கவனம் குவிக்கப்பட்டுள்ளது.

நிதி மூலதனம்

வர்த்தகநாமம் மற்றும் ஊழியர் விருத்தி மீதான அதிகரித்த முதலீடு மேம்படுத்தப்பட்ட கூட்டுவணிக நற்பெயர் மற்றும் அக்கறைதாரர் நம்பிகைக்கு வழிவகுக்கும்.

பொருண்மை, அக்கறைதாரர்கள், குறுகியதிலிருந்து நடுத்தரகால உபாய முன்னுரிமைகள் உடனான தொடர்புகை

பொருண்மை விடயங்கள்:



தொடர்புபட்ட அக்கறைதாரர்கள்:



குறுங்காலம் முதல் நடுத்தர காலம் வரையிலான தந்திரோபாய முன்னுரிமைகள்



சாத்தியமான விட்டுக்கொடுப்புக்கள்

- உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தில் முதலீடு செய்வதற்கு கணிசமான நிதி மூலதன முதலீடு தேவைப்படுகிறது. பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு பராமரிப்பு செலவு அல்லது விரிவாக்க மூலதனச் செலவினங்களில் நிதி மூலங்களைப் பயன்படுத்துவதற்கு இடையே விட்டுக்கொடுப்புக்கள் உள்ளன.
- உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தை அதிகரிக்கும் செயற்பாட்டில், அது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் இயற்கை மூலதனத்தை சீர்குலைக்கும் வகையில் நாம் செயற்படும் சமூகங்களை எதிர்மறையாக பாதிக்கலாம். பொறுப்புடன் கூடிய கழிவு முகாமை மற்றும் சுற்றுச்சூழலை சீர்படுத்தும் கொள்கைகளை செயற்படுத்த நாங்கள் முயற்சி செய்கிறோம்.
- தற்போதுள்ள வசதிகளின் சுற்றுச்சூழல் தடயத்தைக் குறைப்பதற்கான நமது முதலீடுகள் இயற்கை, அறிவுசார், மனித மற்றும் சமூக மற்றும் உறவு மூலதனத்திற்கு பயனளிக்கும்.

ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

முதன்மை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

8 DECENT WORK AND ECONOMIC GROWTH

வாழ்க்கைத் தரம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க ஊழியர்களின் புலமை மூலதனத்தைக் கண்டறிந்து மேம்படுத்துதல்.

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE

தொழிநுட்பம் மற்றும் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலம் புதுமை சார்ந்த கலாச்சாரத்தை ஊக்குவித்தல்.

16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS

வங்கி மற்றும் தொழில்துறை முழுவதும் நெறிமுறை நடத்தை, நல்ல நிர்வாகம் மற்றும் இணக்கத்தை ஊக்குவித்தல்.

இரண்டாம்நிலை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

10 REDUCED INEQUALITIES

ஊழியர்களிடையே சமத்துவமின்மையைக் குறைக்க அறிவுசார் மூலதனத்தில் முதலீடு செய்தல், அதன் மூலம் வெற்றிக்கான சம வாய்ப்புகளை உருவாக்குதல்.

1 நற்பெயர்மிக்க அமைப்பை உருவாக்குதல்

ஒருங்கிணைந்த சிந்தனை எமது தந்திரோபாய முன்னுரிமைகளை இணக்குகின்றது.

பெறுமதியை உருவாக்குவதும் பாதுகாப்பதும் தனித்தனியாக நடக்காது என்பதுடன், இன்று நாம் மேற்கொள்ளும் தந்திரோபாயத் தெரிவுகள் மற்றும் தீர்மானங்கள் நீண்டகால விளைவுகளைக் கொண்டிருக்கின்றன, இது எமது புலமை மூலதன முகாமையைப் பாதிப்பதுடன், எமக்கு வேறுபடுத்தப்பட்ட போட்டித்தன்மையை அளிக்கிறது.


முந்தைய தசாப்தங்களின் வணிகத்தின்-வழக்கமான பொருளாதார மாதிரியானது அதிகரித்து வரும் சமூகப் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள் பற்றிய வளர்ந்து வரும் உலகளாவிய விழிப்புணர்வால் சீர்குலைந்துள்ளது. இதன் விளைவாக, நிறுவனங்கள் தங்கள் வணிக மாதிரிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது, பங்குதாரர்களை விட பரந்த அக்கறைதாரர்களின் தேவைகளை கணக்கில் எடுத்துக்கொள்கிறது. இதை மனதில் கொண்டு, எமது அக்கறைதாரர் ஈடுபாடு உத்தியானது, எமது பெறுமதிச் சங்கிலி முழுவதும் அக்கறைதாரர்களை அங்கீகரிக்கிறது. இந்த உத்தி நமது புலமை மூலதனத்தின் இன்றியமையாத பகுதியாகும், மேலும் வேகமாக மாறிவரும் சூழலில் எமது வணிக மாதிரியின் பின்னடைவைக் கையாள்வதற்கு முக்கியமானது. எமது கடுமையான மற்றும் உள்ளடக்கிய வருடாந்த தந்திரோபாய மீளாய்வு செயன்முறையானது, எமது பரந்த தொழிற்பாட்டுச் சூழலுடன் தொடர்புடைய இடர்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் இவை நமது முதலீட்டுத் தீர்மானங்கள், குத்தகை உத்திகள், மூலதனச் செலவினங்களின் வரிசைப்படுத்தல் மற்றும் அன்றாட தொழிற்பாடுகளின் முகாமை ஆகியவற்றைப் பாதிக்கின்ற முறை ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளும். இந்த செயன்முறைகள், நிகழ்காலத்தில் மற்றும் பெருகிய முறையில் நிச்சயமற்ற எதிர்காலத்தில் நமக்கும் நமது அக்கறைதாரர்களுக்கும் பெறுமதியை உருவாக்க இந்த உத்தியை செயற்படுத்துவதை உறுதி செய்கிறது.

எமது முன்னேற்றத்திற்கும், பெறுமதியை உருவாக்கும் பயணத்தின் போது நாம் உருவாக்கும் தாக்கத்திற்கும் பொறுப்பான பல நடவடிக்கைகளை நாங்கள் கண்காணிக்கிறோம். இவை அர்த்தமுள்ள முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை (KPIs) பயன்படுத்தி நமது தந்திரோபாய நோக்கங்களுக்கு எதிராக மதிப்பிடப்படுகிறது.

வணிகத்திற்கான எமது ஒருங்கிணைந்த அணுகுமுறையின் ஆழமான புரிதலுக்கு பக்கங்கள் 4 முதல் 5 வரை பார்க்கவும்.

மறைமுக அறிவு


1972 ஆம் ஆண்டு முதல் 50 ஆண்டுகால தொழிற்பாடுகளுடன், எமது போட்டி நன்மையின் அடிப்படைக் கூறெனக் கருதத்தக்கவாறு தேசிய சேமிப்பு வங்கியில் தனித்துவமான செயன்முறைகள், வேலை செய்யும் பாணிகள் மற்றும் தொழிற்திறன் நிபுணத்துவம் ஆகியவற்றை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இத்தகைய மறைமுக அறிவு என்பது நமது வளமான மரபு மற்றும் பல காரணிகளின் விளைவாக இருப்பதுடன், நாம் எமது தரவுத்தளத்தை தொடர்ந்து புதுப்பித்து, வங்கித் துறையில் முன்னணியில் இருக்க, அத்தகைய அறிவை குழு முழுவதும் பகிர்ந்து கொள்கிறோம்.



வர்த்தக நாம விம்பத்தை மேம்படுத்துதல்

2021 காலப்பகுதியில், கொவிட்-19 இன் விளைவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக செலவினங்களைக் கட்டுப்படுத்த இலங்கை அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மத்தியிலும், அதன் பின்னர் குறைந்த செலவினங்களைக் கட்டுப்படுத்திய போதிலும், வர்த்தக நாம அபிவிருத்தி மற்றும் வணிக விநியோகத்தில் வங்கி அதன் தெளிவான கவனம் செலுத்தியது. இத்தகைய தடைகள் இருந்தபோதிலும், எமது கூட்டுவணிக விம்பத்தை நிறுவுவதற்கும், எமது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நாம் தொழிற்படும் சமூகங்களின் வாழ்க்கையில் நேர்க்கணியத் தாக்கங்களை உருவாக்கும் வகையில் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாக மாற்றுவதற்கான எமது இலக்கை செயற்படுத்துவதற்கும் நாம் எமது சமூக ஊடக சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களைத் தொடர்ந்தோம்.

வங்கியானது இலங்கையின் 5வது பெறுமதியான வர்த்தக நாமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இதன் வர்த்தக நாம மதிப்பு ரூ. 30.4 பில்லியனாக, கடந்த ஆண்டின் ரூ. 30.7 பில்லியன் பெறுமதியிலிருந்து 1% குறைந்து (Brand Finance Sri Lanka 100, ஏப்ரல் 2022) பதிவாகியிருந்தது.



உரு 14

2 பெறுமதிகள் மற்றும் நெறிமுறைகள்

விம்பம் மற்றும் மேம்பட்ட பொது உறவுகள்

நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, ஒருமைப்பாடு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் அடித்தளத்தில் எமது செயற்பாடுகளை உருவாக்கி, பெறுமதி சார்ந்த நிறுவனமாக எம்மைக் கருதுகிறோம். கடந்த 50 ஆண்டுகளில் செம்மைப்படுத்தப்பட்ட இந்த மதிப்புகளால் எமது நிறுவன தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் எமது செயற்பாடுகளுக்குப் பின்னால் உள்ள உந்து சக்தி ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்புகள் நமது கூட்டுவணிகக் கலாச்சாரத்தை மட்டும் பாதிக்கவில்லை, ஆனால் நமது நெறிமுறைகள், அடையாளம் மற்றும் தத்துவத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒட்டுமொத்தமாக, அக்கறைதாரர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அதே வேளையில் நிதித் தீர்வுகளை வழங்குவதற்கான எமது பரந்த நோக்கத்திற்கு அவை பங்களிக்கின்றன.

நாம் எவ்வளவு தூரம் மதிப்புகளால் இயக்கப்படுகிறோமோ, அதே அளவுக்கு தேசிய சேமிப்பு வங்கியில் நெறிமுறைகளால் ஆளப்படுகிறோம். இலங்கையில் முதன்மையான சேமிப்பு வங்கியாக, எமது அனைத்து உறவுகளிலும் பரிவர்த்தனைகளிலும் நெறிமுறை ஒருமைப்பாடு முதன்மையாக உள்ளதுடன், எமது அக்கறைதாரர்களை ஒரு சமூகப் பொறுப்பாக நாங்கள் கருதுகிறோம். இந்த பரிந்துரைக்கப்பட்ட நியமங்களை ஊழியர்கள் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக வங்கி முழுவதும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் செயல்படுத்தப்படுகின்ற வகையில் நெறிமுறை நடத்தைக்கான நியமங்களை சபை நிறுவுகிறது.

தேசிய சேமிப்பு வங்கியில், அனைத்து ஊழியர்களும் ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் நெறிமுறை நடத்தையில் மிக உயர்ந்த விதிமுறைகளை நிலைநிறுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்துறையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை அதிகார ஆணைகளுடன் சீரமைப்பதை உறுதி செய்வதற்காக வங்கி அவ்வப்போது உள்ளக நியமங்கள், குறியீடுகள் மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகள், அத்துடன் ஒழுங்குமுறை மற்றும் இணக்கத் தேவைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்கிறது. சபையானது இடர் முகாமை மற்றும் இணக்கத்தை முக்கிய தந்திரோபாய முதலீடுகளாகக் கருதுவதுடன், வங்கிக்குள் இடர்-விழிப்புணர்வு கலாச்சாரத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பாதுகாப்பின் மூன்று கோடுகள் வலுவான மதிப்புகள் அடிப்படையிலான இடர் விழிப்புணர்வு கலாச்சாரத்தை நிறுவி, பொறுப்புக்கூறல் மற்றும் இணக்கத்திற்கான அடித்தளமாக செயற்படுகிறது. கூட்டாண்மை ஆளுகையை மேம்படுத்துதல், மீள்திறன்மிக்க இடர் முகாமைக் கட்டமைப்பை பராமரித்தல் மற்றும் இணக்கத்தை உறுதி செய்தல் ஆகியவற்றால் இவை தொடர்ந்து வலுப்படுத்தப்படுகின்றன.

3 வலுவான முறைமைகள் மற்றும் செயன்முறைகள்

தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கத்தைப் பயன்படுத்துதல்

தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவை நமது எதிர்கால அறிவுசார் மூலதனத்தின் முக்கிய கூறுகளாக இருப்பதுடன், "நாளைய தேசிய சேமிப்பு வங்கி" நமது அக்கறைதாரர்களுக்கு எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை தீர்மானிக்கிறது. உள்முக தகவல் தொழிநுட்ப வழிகாட்டுதல் குழு (ITSC) சபையின் மேற்பார்வையுடன் இந்த முயற்சியை வழிநடத்துகிறது. ITSC ஆனது தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் ICT சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பை வழங்க முயற்சிக்கிறது, அதே நேரத்தில் திறமையான செயல்பாட்டு நிர்வாகத்தையும் உறுதி செய்கிறது. இந்த நோக்கத்திற்காக, ICT முகாமை நியமங்கள் மற்றும் உத்திகள் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க, வங்கியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்குச் சேவை செய்யும், மேலும் மிகவும்

பொருத்தமான, பாதுகாப்பான, வணிக-பயனுள்ள மாதிரி மற்றும் இறுதி-பயனர் அனுபவத்தை ஊக்குவிக்கும் வகையில் வங்கி முழுவதும் செயற்படுத்தப்படுகிறது. தொழிநுட்பம் மற்றும் புதுமைக்கான எமது அர்ப்பணிப்பு, "எண்ணியல் மயமாக்கலை துரிதப்படுத்துவதில்" கவனம் செலுத்தும் குறுகிய முதல் நடுத்தர கால தந்திரோபாய நோக்கங்களில் தெளிவாகத் தெரிகிறது. எமது ICT தந்திரோபாய அணுகுமுறை தொழிநுட்ப கண்டுபிடிப்புகளை தழுவி, இணைப்பு வழிகளில் எமது வணிக மாதிரியின் மையத்தை மறுவடிவமைத்து, நாம் எவ்வாறு தொழிற்படுகிறோம் மற்றும் வாடிக்கையாளர்கள் எங்களை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்பதை மறுபரிசீலனை செய்கிறது.

தொழில்நுட்பம் சார்ந்த திட்டங்கள்

நீண்ட காலப் பெறுமதி உருவாக்கம் தொழிநுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளால் வலுவாக பாதிக்கப்படுவதுடன், இது நம்மை தொடர்புடையதாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்கும் முக்கிய தந்திரோபாய இயக்கிகளாக நாம் கருதுகிறோம். எனவே, வங்கி தொழில்நுட்ப திறன்களை விரிவுபடுத்துதல், தற்போதுள்ள எண்ணியல் செயற்பாடுகளை நிர்வகித்தல், முறைமைகள் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துதல் மற்றும் தரவு பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

- மையவங்கியியல் முறைமை முன்முயற்சி - நாங்கள் தற்போது T24 ஊடுசெயல் மையவங்கியியல் முறைமையை செயற்படுத்தி வருகிறோம், இது 2023 இல் நடைமுறைக்குவர எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புதிய முறைமையின் மூலம், வங்கி வலுவான முன்-இறுதி எண்ணியல் தளங்களை உருவாக்கி, இறுதி வரை உருவாக்க முடிவதுடன். பின்-அலுவலக செயன்முறைகளை தன்னியக்கமாக்கும் மற்றும் ஒழுங்குபடுத்தும் முடிவு தீர்வுகளை செயற்படுத்தும். இந்த வரிசைப்படுத்தலின் ஒரு பகுதியாக, அனைத்து தகவல் தொழிநுட்பத்தால் இயக்கப்பட்ட வங்கி சேவைகளும் தொழிற்துறை ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்கவும் பல்வேறு சர்வதேச நியமங்களுக்கு இணங்கவும் மறுவடிவமைக்கப்படுகின்றன.
- கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகள் - 2021 இல் செயற்படுத்தப்பட்டது, இந்த செயலிகள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் iOS, Android மற்றும் Huawei போன்ற முன்னணி கைத்தொலைபேசி பயன்பாட்டு தளங்களில் கிடைக்கின்றன.
- மனித வள தகவல் முறைமையின் (HRIS) முதல் கட்டத்தை செயற்படுத்துதல், இது விடுகை, வருகை மற்றும் ஊழியர் தகவல் முறைமை ஆகியவற்றை தன்னியக்கமாக்கும்.
- PCI-DSS சான்றிதழ் - தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளை கடைபிடித்தல், வங்கி 2019 இல் PCI-DSS சான்றிதழைப் பெற்று, 2022 ஆம் ஆண்டிலும் இணக்க நிலை தொடர்கிறது.
- பாதுகாப்பு தொழிற்பாட்டு மையம் (SOC) - 2020 இல் ஒரு திறமையான மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர் ஆதரவுடன் செயற்படுத்தப்பட்டு, SOC 2022 இலும் அதன் சேவையைத் தொடர்ந்தது.
- தரவு கசிவு தடுப்பு (DLP) - 2022 ஆம் ஆண்டில் வங்கியின் அனைத்து தகவல் முறைமை தொழிநுட்ப அமைப்புகளையும் உள்ளடக்கும் வகையில் தன்னியக்க தரவு வகைப்பாடு வசதியுடன் கூடிய DLP முறைமையை வங்கி செயற்படுத்தியது.
- தொகுதிச்சங்கிலி தொழிநுட்பத்துடன் e-KYC தொடங்கப்பட்டது.

4 சிறந்த நடைமுறை ஆளுகை மற்றும் இடர் முகாமைக்காகப் பாடுபடுதல்

ஆளுகை மற்றும் இடர் முகாமைக்கான எமது அணுகுமுறை எமது புலமை மூலதனம் ஒரு பகுதியாக இருப்பதுடன் நமது ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கும் செயல் முறையை ஆதரிக்கும். சிறந்த நடைமுறை ஆளுகையை நிலைநிறுத்துதல், பெறுமதி உருவாக்கத்தை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும், அதே போல் எமது அக்கறைதாரர்களுடனான நம்பிக்கையின் முறிவின் காரணமான பெறுமதி அழிவைத் தடுப்பதற்கும் வங்கியின் தொடர்ச்சியான முயற்சியாகும்.

நிலைபேறான பெறுமதி உருவாக்கத்தை அடைவதற்கு, எமது அக்கறைதாரர்களுடன் நம்பிக்கையை கட்டியெழுப்புவதும் பராமரிப்பதும் முக்கியமானதென நாம் கருதுகிறோம். ஆளுகையை எமது வணிக உத்தியின் ஒரு அங்கமாக மாற்றாமல் இதை அடைய முடியாது. வங்கியின் ஆளுகைக் கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகள் பயனுறுதிமிக்க கட்டுப்பாடுகளை நிறுவவும், நெறிமுறை தலைமையை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. சிறந்த ஆளுகைக்கான எமது அர்ப்பணிப்பு எமது உள்முக கொள்கை கட்டமைப்பில் தெளிவாக உள்ளதுடன், இது எமது வணிக நடைமுறைகளுடன் நெறிமுறைகளை ஒருங்கிணைத்து எமது வழங்குநர்கள் தங்கள் செயற்பாடுகளில் சிறந்த ஆளுகையை நிலைநிறுத்துவதை கட்டாயப்படுத்தும் எமது வழங்குனர் நடத்தை நெறிமுறைகளைப் பின்பற்றுவதைக் கட்டாயமாக்கும்.

எமது ஆளுகை செயன்முறைகள் மற்றும் பயிற்சியளித்தல் மற்றும் விருத்தி செயன்முறைகள் மூலம் நாம் பெறுமதியை உருவாக்கும் செயன்முறை பற்றிய மேலதிக தகவலுக்கு பக்கம் 178 முதல் 198 வரை கூட்டாண்மை ஆளுகையைப் பார்க்கவும், அத்துடன் மனித மூலதனத்தை பக்கம் 130 முதல் 147 வரை பார்வையிடவும்.

தற்போதைய மற்றும் சாத்தியமான இடர்களைக் கண்டறிவதன் மூலம் இடர் முகாமைக்கு ஒரு செயலூக்கமான அணுகுமுறையை நாங்கள் மேற்கொள்கிறோம். இடர் முகாமைத் தந்திரோபாயம் எமது கூட்டுவணிக தந்திரோபாயத்துடன் உருவாக்கப்பட்டுள்ளதுடன், எமது இடர் இயல்திறன் எமது நோக்கங்களை அடைவதில் நாம் எதிர்கொள்ள விரும்பும் இடரின் வகை மற்றும் அளவை வழிநடத்துகிறது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எமது ஒருங்கிணைந்த இடர் முகாமைக் கட்டமைப்பு, இடர்களை முகாமை செய்யப் பயன்படுத்தப்படுவதுடன், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு (BIRMC) முழுமையான கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை மேற்கொள்கிறது.

இடர் முகாமை பற்றிய எமது கலந்துரையாடலுக்கு பக்கங்கள் 208 முதல் 236 வரை பார்க்கவும்.

புலமை மூலதனம்

விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

வங்கித் துறையில் சிறந்து விளங்குவதையும் வாடிக்கையாளர் தளத்தை திருப்திப்படுத்துவதையும் நோக்கிய எமது பயணத்தில், எமக்கு ஏராளமான விருதுகள் மற்றும் பாராட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இது ஒரு வங்கியாக எமது வெற்றியின் தெளிவான குறியீடாக இருக்கும் என்று நாங்கள் நம்புவதுடன், மேலும் எமது பயணத்தைத் தொடரவும், வங்கியை மேலும் மேம்படுத்தவும் நாங்கள் ஊக்குவிக்கப்படுகிறோம்.

- சட்டின் சஞ்சிகை மற்றும் CMA Sri Lanka வினால் பெண்களுக்கு ஏற்ற பணியிடமாக அங்கீகரிக்கப்பட்டது (தொடர்ச்சியாக இரண்டாவது முறை).
- CA Sri Lankaவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைபேறானதன்மை TAGS விருதுகள் 2022 இல் அரச வங்கிகள் பிரிவின் கீழ் வெள்ளி விருது.
- ஆண்டறிக்கை போட்டி விருதுகள் 2022இல் Infographics பிரிவில் பிரமாண்ட விருது வெற்றியாளர்.



- Lankapay Technovation விருதுகள் 2022 இல் வாடிக்கையாளர் வசதி மற்றும் சிறந்த பொதுவான ATM தொழிற்படுத்துனருக்கான தங்க விருது.
- இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CMA) சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் துறையில் வங்கி மற்றும் நிதி வகையின் கீழ் சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கை.

- ICT விருதுகள் 2022 இல் ஆண்டின் பிரதம தகவல் அதிகாரி (CIO) விருது NSB இன் CIO க்கு வழங்கப்பட்டது.
- மிகவும் பிரபலமான வங்கி மற்றும் நிதி இணையதளம்.
- சிறந்த வங்கி மற்றும் நிதி இணையதளத்திற்கான கௌரவ விருது.
- இலங்கையில் 5வது மிகவும் பெறுமதியான வர்த்தகநாமம் (வர்த்தகநாம மதிப்பு ரூ. 30.4 பில்லியன்).
- தே.சே. வங்கியின் தலைவர், சிறந்த 50 தொழில்சார் நபர்கள் மற்றும் தொழில்சார் பெண்கள் விருதுகள் 2022 இல் வங்கித் துறையில் சிறந்த நிபுணராக அங்கீகரிக்கப்பட்டார்
- தே.சே. வங்கியின் பிரதிப் பொது முகாமையாளருக்கு (தொழிற்பாடுகள்) இலங்கைப் பணியிடங்களில் மிகச் சிறந்த பெண்மணி விருது.

உரு 15

2023 மற்றும் அதனைத் தாண்டிய எதிர்கால வாய்ப்புக்கள்

குறுங்காலம்

- எமது வர்த்தகநாம உரிமையை மேம்படுத்துதல்.
- எண்ணியல் மாற்றத்தை விரைவுபடுத்துவதன் மூலமும், எமது முறைமைகள் மற்றும் செயன்முறைகளை வலுப்படுத்துவதன் மூலமும் நாம் செய்யும் செயல்களின் அனைத்து அம்சங்களிலும் தொழிற்பாட்டு மேன்மையை அடைதல்.

நடுத்தரவு காலம்

- சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை உருவாக்குவதற்கு தொழிநுட்பத்தை வளமாகப் பயன்படுத்தல்.
- எமது எதிர்கால சான்றுறுதி தந்திரோபாயத்தின் மூலம் புதுமை மற்றும் ஆய்வு கலாச்சாரத்தை உருவாக்குதல். ளவசயவநபல.

நீண்ட காலம்

- இணையம்தொழிநுட்பம் விடயங்களின் மூலம் உருவாக்கப்பட்ட நமது சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள தரவைப் பற்றிய சிறந்த நுண்ணறிவைப் பெற செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றலைப் பயன்படுத்தல்.

எமது எதிர்கால சான்றுறுதி தந்திரோபாயத்துக்கான எமது பங்களிப்பு

நம்பத்தகுந்த மற்றும் அசாதாரண அதிர்ச்சியைத் தாங்கும் வகையில் நிலைபேறான வளர்ச்சியை அடைய உள்ளடக்கிய நிதித் தீர்வுகளை வழங்குதல்



மனித மூலதனம்

எமது மனித மூலதனத்தின் முக்கிய கூறுகள்

மனித மூலதனம் என்பது எமது தந்திரோபாயத் திசைமுகத்துடன் இணைவதன் மூலம் நமது நோக்கத்தை நோக்கி நம்மை இயக்கும் மனிதர்கள் என்னும் வங்கியின் மிகப்பெரிய சொத்தை குறிக்கிறது. இது எமது ஊழியர்களிடம் தனித்த வகையிலும் கூட்டாகவும் காணப்படும் அறிவு, திறமைகள், திறன்கள், இயலுமைகள், அனுபவம், விவேகம், பயிற்சி, சுயதீர்ப்பு மற்றும் ஞானம் போன்றவற்றைக் குறித்து நிற்கின்றது.

முக்கிய உள்ளீடுகள்

- பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- நேர்க்கணிய பணிச்சூழல்
- உறுதியான ஊழியர் உறவுகளை நிறுவுதல்
- முக்கிய திறன்கள் மற்றும் தொடர்ச்சித்தன்மைத் திட்டமிடல் ஆகியவற்றை உருவாக்குதல்
- செயற்திறன் மற்றும் திறமையை முகாமை செய்தல்
- சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்

முக்கிய சவால்கள்

- நாட்டில் நிலவும் எதிர்மறையான பொருளாதார சூழ்நிலையில், ஊழியர்களின் பதவி விலகல்கள் மற்றும் ஊதியம் இல்லாத விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் செல்லும் ஊழியர்கள், ஊழியர்களிடையே திறன் இடைவெளிகளை ஏற்படுத்தக்கூடிய இடருடன் வங்கிக்கு திறமைகளைத் தக்கவைத்துக்கொள்வதில் சவாலாக உள்ளனர்.
- தகுதி வாய்ந்த திறமையின் பற்றாக்குறை, குறிப்பாக தொழிநுட்பத்தின் புதிய போக்குகளில் மற்றும் வயதான ஊழியப்படை.
- பாரம்பரியம் குறைந்த, அதிக தொழிநுட்ப அறிவு மற்றும் இலட்சியம் கொண்ட புதிய தலைமுறை ஊழியர்கள், வங்கியின் இலக்குகளுடன் அவர்களை இணைப்பதை கடினமாக்குகிறது.
- அதிக தகுதி, பல திறன்கள் மற்றும் திறமையான ஊழியர்கள் அதிக ஊதியம் மற்றும் நன்மைகளை எதிர்பார்க்கக்கூடும், இது சிறந்த திறமைகளை ஈர்ப்பதில் வங்கிக்கு மிகவும் சவாலானதாக இருக்கும்.
- தொடர்ச்சியான இணைப்புகள், கையகப்படுத்துதல்கள் மற்றும் தந்திரோபாய இணைவுகள் மூலம் நிறுவன மாற்றத்தைத் தூண்டும் இலாபத்தன்மை மற்றும் அரச கொள்கைகளுக்கான இடைவிடாத அழுத்தம்.
- அரச வங்கியாக இருப்பது, தொழிற்சங்கம் மற்றும் அரசியல் தாக்கங்கள் மனித வள முகாமையின் சிறந்த நடைமுறைகளை சீர்குலைக்கலாம்.
- நாட்டின் மோசமான பொருளாதார நிலைமை மற்றும் வரிகள் மீதான அரசாங்கத்தின் கடுமையான கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஊழியர்களின் உத்வேகத்தையும் ஊக்கத்தையும் பேணுதல் சவாலாக உள்ளது.

முக்கிய வெளியீடுகள்

ஊழியர் ஈடுபாடு

ஊழியர் எண்ணிக்கை
4,528
(2021 – 4,616)

தலா ஊழியருக்கான சராசரி வருமானம்
ரூபா 38.6 மில்லியன்
(2021 – ரூபா 29.2 மில்லியன்)

தக்கவைத்தல் விகிதம்
98.1% (2021 – 98.6%)

ஊழியர் புரள்வு விகிதம்
1.9% (2021 – 1.4%)

பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி

பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு
ரூபா 12.8 மில்லியன்
(2021 – ரூபா 11.0 மில்லியன்)

ஊழியர் ஒருவருக்கான சராசரி பயிற்சியளித்தல் மணித்தியாலங்கள்
5.0
(2021 – 9.4)

சம வாய்ப்பு

பெண் ஊழியர்களின் எண்ணிக்கை
2,481
(2021 – 2,518)

முக்கிய வாய்ப்புகள்

- ஈடுபாட்டுடனான, தக்கவைக்கப்பட்டுள்ள தரம் வாய்ந்த ஊழியர்கள் மூலம் உயர் உற்பத்தித்திறன்.
- எமது மாறுபட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் மூலம் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் திறன்.
- எமது மக்கள் உத்வேகமானவர்களாகவும், தகவமைத்துக் கொள்ளக்கூடியவர்களாகவும், வேகமாக வளர்ந்து வரும் சூழல் மற்றும் வேலைச் சந்தையில் பொருத்தமானவர்களாகவும் இருக்க, மனித திறன்கள் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு.
- நேரம் மற்றும் வளங்களை திறம்பட பயன்படுத்த மனிதவள செயன்முறைகள் மற்றும் ஆவணங்களை உருவாக்குதல்.
- ஆரோக்கியமான வேலை-வாழ்க்கை சமநிலைக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஊழியர் அனுபவம் மற்றும் விசுவாசத்தை மேம்படுத்துதல்

நாம் எமது மனித மூலதனத்தை வளர்க்கும் முறை

1. தற்போதுள்ள குழுவுடன் நன்றாக ஒருங்கிணைத்து, வங்கியின் நோக்கங்களை அடைவதற்காக தொடர்ந்து செயல்படும் சிறந்த திறமையாளர்களை ஈர்த்தல்
2. புதிய எண்ணியல் மயமாக்கப்பட்ட செயற்பாடு-களுக்கு ஏற்ப ஊழியர் திறன்களை மேம்படுத்துவதற்கு கடுமையான பயிற்சியளித்தல் மூலம் வெற்றிபெறும் குழுவை விருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.
3. தரம் அடிப்படையில் பதவியுயர்வுகளை வழங்குவதன் மூலமும், பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்புகளை கொண்டாடுவதன் மூலமும் எமது திறமையை நிர்வகித்தல்.
4. உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்புடன் வேலை-வாழ்க்கை சமநிலையை மையமாகக் கொண்டு ஊழியர்களைத் தக்கவைத்தல்.
5. உற்பத்தித்திறனை மேம்படுத்த நட்பு மற்றும் கூட்டுறவு பணிச்சூழலை உருவாக்கும் வகையில் வினைத்திறனான முறையில் தொடர்பாடல்களை மேற்கொள்ளல்.

நாம் எமது மனித மூலதனத்தைப் பயன்படுத்தும் முறை

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

சாதகமான பணியிடங்களை உருவாக்குதல், மனிதவள செயன்முறைகளை தன்னியக்கமாக்கல் மற்றும் வங்கியை எண்ணியல்மயமாக்கல் ஆகியவற்றின் மீதான முதலீடுகள் வங்கியின் ஊழியர் திருப்தி மற்றும் உயர் செயற்திறனை உறுதி செய்கின்றன.

புலமை மூலதனம்

பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான முதலீடுகள் வங்கிக்கு பயனளிக்கும் ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் வணிகப் பயிற்சி ஆகியவற்றை மேம்படுத்துகின்றன.

சமூக மற்றும் உறவு மூலதனம்

வேலை வாய்ப்புகளை வழங்குவது வங்கியின் வர்த்தக நாமத்துக்கு உகந்த சமூக இணைப்புகளை உருவாக்குகிறது.

இயற்கை மூலதனம்

நிலைபேறானதன்மை முன்முயற்சிகள் ஊழியர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதுடன், பசுமை உணர்வு கலாச்சாரத்தை ஊக்குவிக்கின்றன.

நிதி மூலதனம்

மனித மூலதனத்தைக் கட்டியெழுப்புவதற்கான முதலீடுகள், அதிகரித்த உற்பத்தித்திறன், செயற்திறன் மற்றும் இணையற்ற வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதன் மூலம் நீண்ட கால நிதி ஆதாயத்திற்கு பங்களிக்கின்றன.

பொருண்மை, அக்கறைதாரர்கள், குறுகியதிலிருந்து நடுத்தரகால உபாய முன்னுரிமைகள் உடனான தொடர்புகை

பொருண்மையான விடயங்கள்



தொடர்புபட்ட அக்கறைதாரர்கள்



குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலம் வரையான தந்திரோபாய முன்னுரிமைகள்



சாத்தியமான விட்டுக்கொடுப்புக்கள்

- எமது மக்களுக்கான தொழிற்பாட்டுச்சூழலை மேம்படுத்த முதலீடு செய்யப்படும் நேரம், முயற்சி மற்றும் வளங்கள் ஆரம்பத்தில் தூய்மையான உற்பத்தி திறன் விருத்தியிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பக் கூடும், ஆனால் நிறுவனத்தின் நீண்டகால நிதி ஆரோக்கியம், நமது மக்கள் சிறந்து விளங்கக்கூடிய மற்றும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய சாதகமான சூழலைச் சார்ந்துள்ளது.
- வேலை வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் புதிய நபர்களை ஆட்சேர்த்தல் ஆகியவை குறுகிய காலத்தில் நிதி மூலதனத்தை குறைக்கலாம், ஆனால் நீண்ட காலத்திற்கு புலமை மூலதனம் மற்றும் சமூக மற்றும் உறவு மூலதனத்தை அதிகரிக்கலாம்.
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி மூலம் வாடிக்கையாளர் சேவை, புத்தாக்கம், தொழிற்பாட்டு மேன்மை மற்றும் கூட்டுவணிகக் கலாச்சாரம் மற்றும் பெறுமதி ஆகியவற்றின் மீதான திறன்களை வளர்ப்பது நிதி மூலதனத்தை ஆரம்பத்தில் குறைக்கலாம், ஆனால் நீண்ட காலத்திற்கு மனித, புலமை மற்றும் நிதி மூலதனத்தை மேம்படுத்தலாம்.

மனித மூலதனம்

ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

முதன்மை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

- 1 NO POVERTY — வேலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்
- 4 QUALITY EDUCATION — வேலைவாய்ப்புக்கான புதிய வழிகளை உருவாக்கும் நோக்கில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மூலம் திறன்களை வளர்த்துக் கொள்ளல்.
- 5 GENDER EQUALITY — பணியிடத்தில் அதிக பெண்களை ஊக்குவிக்கும் வாய்ப்புகளை வழங்குதல்
- 8 DECENT WORK AND ECONOMIC GROWTH — ஊழியர்களுக்கு பாதுகாப்பான, சாதகமான மற்றும் பலனளிக்கும் பணியிடத்தை உறுதி செய்தல்.

இரண்டாம்நிலை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

- 2 ZERO HUNGER — நேரடி வேலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- 10 REDUCED INEQUALITIES — எமது ஊழியர்களில் அதிக பெண்கள் பங்கேற்பதற்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்குதல்.

1 மிகவும் பொருத்தமான திறனாளர்களை ஈர்த்தல்


GRI 401-1

தேசிய சேமிப்பு வங்கி அணி


தேசிய சேமிப்பு வங்கியில், எமது நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றி மற்றும் நிலைத்தன்மையின் பின்னணியில் எமது ஊழியர்கள் ஒரு குறிப்பிடத்தக்க உந்து சக்தியாக இருக்கிறார்கள் என நாம் உறுதியாகக் கருதுகிறோம். 31 டிசம்பர் 2022 நிலவரப்படி, எம்மிடம் 4,528 ஊழியர்கள் காணப்பட்டிருப்பதுடன், இதில் 4,489 நிரந்தர ஊழியர்கள் மற்றும் 39 ஒப்பந்தத் தொழிலாளர்கள் அடங்குவர். 2022 இல், 14 புதிய ஊழியர்களை நாம் வரவேற்றோம், அதில் 8 பேர் பெண்கள் ஆவர். எமது உயர் தக்கவைப்பு விகிதம் 98.1% என்பது எமது பயனுறுதிமிக்க மனிதவள கொள்கைகள் மற்றும் சாத்தியமான ஊழியர் பெறுமதி முன்மொழிவுக்கு ஒரு சான்றாகும். மேலும், எமது ஊழியர்களில் 17% பேர் 15 ஆண்டுகளுக்கும் மேலாக சேவையாற்றியிருப்பது எமது நிறுவனம் மீதான விசுவாசத்தை எடுத்துக்காட்டுகிறது. எமது மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 4,528 (2022) ஆகும்.




உரு 16



ஊழியர் தரக் கட்டமைப்பு வரைபடம் 19



பால் ரீதியான வயதுக் கட்டமைப்பு வரைபடம் 20



சிறந்த பொருத்தத்தை பணியில் அமர்த்துதல்

GRI 202-2, 401-1

வங்கியின் நீண்ட கால வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ளும் திறன், திறமையான ஊழியர்களை ஈர்த்தல், தக்கவைத்தல் மற்றும் விருத்தி செய்தல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இந்த இலக்கினை நோக்கி, பால், இனம், மதம் அல்லது வேறு ஏதேனும் வரையறுக்கும் காரணிகளைக் கருத்தில் கொள்ளாமல், தகுதிகள், திறன்கள் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுக்கும் கொள்கையை வங்கி கொண்டுள்ளது. ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு செய்தல் செயற்பாட்டின் போது, வங்கி தற்போதுள்ள அணியுடன் இணக்கமாக பணியாற்றக்கூடிய நபர்களைத் தேடுவதுடன், அர்ப்பணிப்பு, உற்சாகம், முன்முயற்சி மற்றும் நிபுணத்துவத்துடன் வங்கியின் கூட்டுவணிக நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் பங்களிப்பதற்கும் அதிக ஊக்கமளிக்கிறது. இது வங்கியின் வெற்றிக்கு பங்களிக்கும் ஆற்றலைக் கொண்டு, அதே வேளையில் தங்கள் சொந்த தொழிலை முன்னேற்றுவதிலும் கவனம் செலுத்துவதை உறுதி செய்கிறது. இதன் விளைவாக, தனிநபர் மற்றும் வங்கி இருவரும் முன்னோக்கிய திசையில் முன்னேற்றம் அடைவது உறுதியாகின்றது.

தேசிய சேமிப்பு வங்கி உள்நாட்டு ஆட்சேர்ப்புக்கு கணிசமான முக்கியத்துவத்தை அளிப்பதுடன், 100% உள்நாட்டில் இருந்து ஒரு சிரேஸ்ட முகாமை அணியினைக் கொண்டிருப்பதில் பெருமை கொள்கிறது. எமது ஊழியர்கள் ஆட்சேர்ப்பு உத்தியானது, எமது வாடிக்கையாளர் தளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு பின்னணியிலிருந்து தனிநபர்களைக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துகிறது. பகிரப்பட்ட அனுபவங்கள் மூலம் எமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், சமூக-பொருளாதார மற்றும் கலாச்சாரப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் பொதுவான தன்மையிலும் நாங்கள் தொடர்புடையதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் இருப்பதை இந்த அணுகுமுறை உறுதி செய்கிறது. இந்த பன்முகத்தன்மை ஒரு முழுமையான கண்ணோட்டத்தை வளர்க்கிறது என்று நாங்கள் உறுதியாக நம்புவதுடன், இது தீர்மானங்களை மேற்கொள்ளவும் முடிவெடுப்பதற்கும், புதுமையான சிந்தனைக்கும் மற்றும் வளத்திற்கும் வழிவகுக்கும்.


இளைஞர்கள் மதிப்புமிக்க வங்கி அனுபவத்தைப் பெற உதவுவதற்கான எமது உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, 2022 இல் 42 பயிலுனர் வாய்ப்புக்களை வழங்கினோம், இது முந்தைய ஆண்டை விட அதிகமாகும். இந்தப் பயிலுனர் வாய்ப்புக்கள் தேசிய சேமிப்பு வங்கியின் கலாச்சாரம், பெறுமதிகள், நெறிமுறைகள், தொழிற்பாட்டு செயன்முறைகள், முறைமைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விரிவான புரிதலை வழங்கும் ஒரு தூண்டுதலளித்தல் திட்டத்துடன் தொடங்கியது. அடுத்த தலைமுறை வங்கியியல் வல்லுநர்களுக்கு தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குவதே எமது குறிக்கோளாகவுள்ள அதே நேரத்தில் அவர்களின் புதிய முன்னோக்குகள் மற்றும் இளம் ஆற்றல் ஆகியவற்றிலிருந்து பயனடைவதாகும்.

ஆண்டு முழுவதும் சவாலான தொழிற்பாட்டு நிலைமைகள் மற்றும் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியதன் காரணமாக, ஆட்சேர்ப்பு மிகுந்த விவேகத்துடன் மேற்கொள்ளப்பட்டதுடன் கண்டிப்பாக வங்கியின் கட்டாயத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இத்தகைய தடைகள் இருந்தபோதிலும், இணையத்தளம் மற்றும் காணொளி மாநாடு வசதிகளைப் பயன்படுத்தி நேர்காணல்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, எண்ணியல் மயமாக்கல், வாடிக்கையாளர்களை மையப்படுத்துதல் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு ஆகிய முக்கியமான பகுதிகளில் 14 புதிய ஊழியர்களை நியமிக்க முடிந்தது, இதற்கு அதிக திறன் கொண்ட விண்ணப்பதாரிகள் தேவைப்பட்டனர்.

மனித மூலதனம்

புதிதாக ஆட்சேர்க்கப்-பட்டவர்களின் கட்டமைப்பு


வரைபடம் 21



● ஆண் ● பெண்

வயது மற்றும் தர அடிப்படையில் புதிதாக ஆட்சேர்க்கப்-பட்டவர்கள்


வரைபடம் 22



● நிறைவேற்றுநர்கள
● ஊழிய உதவியாளர்கள்
● அலுவலக உதவியாளர்கள்

தரம் மற்றும் பால் அடிப்படையில் புதிதாக ஆட்சேர்க்கப்-பட்டவர்கள்


வரைபடம் 23



● ஆண் ● பெண்

ஊழியர்களின் பூகோளப் பரம்பல்


வரைபடம் 24



● மத்திய
● தலைமை அலுவலகம்
● கிழக்கு
● வடமேல்
● வடக்கு
● சப்பிரகமுவ
● தெற்கு
● மேற்கு 1
● மேற்கு 2

பால் அடிப்படையில் ஊழியர்களின் பூகோளப் பரம்பல்

வரைபடம் 25



● ஆண் ● பெண்

A மத்திய
B தலைமை அலுவலகம்
C கிழக்கு
D வடமேல்
E வடக்கு
F சப்பிரகமுவ
G தெற்கு
H மேற்கு 1
I மேற்கு 2

2 வெற்றி பெறும் அணியை வளர்த்து வலுப்படுத்தல்

GRI 404-1, 404-2


மக்கள் விருத்தியை நியமப்படுத்துதல்

தேசிய சேமிப்பு வங்கியில் ஊழியர்கள் அவர்களின் அன்றாட நடவடிக்கைகளில் திறமையாகவும் பயனுறுதி மிக்கவர்களாகவும் இருப்பதற்கும் மேலாக பொருத்தமான மற்றும் தற்போதைய தொழிநுட்பம் மற்றும் தொழில்சார் திறன் மற்றும் அறிவுள்ளவர்களாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் கடுமையான பயிற்சி அட்டவணைக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இலக்கு வைக்கப்பட்ட பயிற்சியளித்தல், ஊழியர்களுக்கு அவர்களின் வேலைத் தேவைகளைப் புரிந்துகொண்டு அவற்றைத் தேவையான முறையில் கையாள்வதற்கு வழிவகுக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். பயிற்சிக்கான இந்த கவனம் செலுத்தும் அணுகுமுறையானது, அனைத்து ஊழியர்களும் வங்கியில் உள்ள அவர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதன் மூலம் செயற்திறன் முகாமையினை மேம்படுத்துகிறது.

எமது கற்றல் திட்டங்கள் ஊழியர்கள் எங்கும், எந்த நேரத்திலும், எந்த பொருத்தமான சாதனத்திலும், தங்கள் சொந்த வேகத்திலும் அணுகத்தக்க வகையில் ஊடாடும், சுயமாக இயக்கப்பட்ட மற்றும் முக்கியமாக எண்ணியல் அனுபவத்திற்கு மாறியுள்ளன. எமது முதன்மையான குறிக்கோள், பணியின் எதிர்காலத்திற்காக ஊழியர்களை மறுதிறன் மற்றும் திறன்களை மேம்படுத்துவது, அதே நேரத்தில் வாழ்நாள் முழுவதும் கற்றல் கலாச்சாரத்தை வளர்ப்பதும் ஆகும்.


எமது ஊழியர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காணும் வகையில், பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி பயிற்சியளித்தல் தேவைப்பாடுப் பகுப்பாய்வுகளை நடாத்தினோம். இந்த முறைகளில் வருடாந்த பயிற்சியளித்தல் தேவைகள் கணக்கெடுப்பு, குழு தலைவர்களுடனான நேர்காணல்கள், பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்களுடனான ஆலோசனைகள் மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாடுகள், செயற்திறன் மதிப்பீடுகள் மற்றும் வினாக் கொத்துக்கள் ஆகியவை அடங்கும்.

பயிற்சியளித்தல் முறையின் அடிப்படையில் பயிற்சியளித்தல் நேரம் (மணி) — வரைபடம் 26




- வங்கியினுள்
- வெளிவாரி
- பிராந்திய ரீதியாக
- வெளிநாட்டு

பயிற்சியளித்தல் நேரத்தின் அடிப்படையில் பயிற்சியளித்தல் வகைகள் — வரைபடம் 27



- தகவல் தொழிநுட்பம்
- மைய வங்கியியல்
- தொழிற்பாடுகள், உற்பத்தி மற்றும் சேவைகள்
- கணக்காய்வு மற்றும் கணக்குகள்
- இடர் மற்றும் இணக்கப்பாடு
- சட்டம்
- ஏனையவை



உரு 17


மனித மூலதனம்

பயிற்சியளித்தல் வகைகள்	திட்டங்களின் எண்ணிக்கை	மொத்த மனித்தியாலங்கள்	மொத்த பங்குபற்றுநர்கள்	ஆண்கள்	பெண்கள்	தரரீதியாக									
						சிரேஷ்ட தரம்	சிரேஷ்ட தரம் (மனித்தியாலங்கள்)	முகாமையாளர்	முகாமையாளர் (மனித்தியாலங்கள்)	நிறைவேற்றுனர்கள்	நிறைவேற்றுனர்கள் (மனித்தியாலங்கள்)	ஊழிய உதவியாளர்கள்	ஊழிய உதவியாளர்கள் (மனித்தியாலங்கள்)	அலுவலக உதவியாளர்கள்	அலுவலக உதவியாளர்கள் (மனித்தியாலங்கள்)
தகவல் தொழிநுட்பம்	7	467	35	21	14	8	109	18	273.5	9	84.5	–	–	–	–
மைய வங்கியியல்	15	5,335	710	362	348	30	234	49	356	245	1,799	386.00	2,946.00	–	–
தொழிற்பாடுகள், உற்பத்தி மற்றும் சேவைகள்	25	6,098.5	794	296	498	5	58	86	678.25	199	1,479.25	503.00	3,875.00	1	8.00
கணக்காய்வு மற்றும் கணக்குகள்	26	2,128.25	236	103	133	6	37.75	65	688.5	30	289.75	135.00	1,112.25	–	–
இடர் மற்றும் இணக்கப்பாடு	4	108.75	8	2	6	1	16.25	4	53.75	2	32.5	1.00	6.25	–	–
சட்டம்	6	863	102	58	44	10	80	39	342	27	226.5	26.00	214.50	–	–
ஏனையவை	45	7,602.75	1,208	825	383	34	234.5	165	839.5	229	1,131.25	451.00	3,130.25	329	2,267.25
மொத்தம்	128	22,603	3,093	1,667	1,426	94	770	426	3,232	741	5,043	1,502	11,284	330	2,275

அட்டவணை 16

தர அடிப்படையிலான பயிற்சியளித்தல் நேரம் (மணி)


வரைபடம் 28



A சிரேஸ்ட மட்டம்
B முகாமையாளர்கள்
C நிறைவேற்றுனர்கள்
D ஊழிய உதவியாளர்கள்
E அலுவலக உதவியாளர்கள்


பால் மற்றும் பயிற்சியளித்தல் வகை அடிப்படையிலான பயிற்சியளித்தல் நேரம் (மணி)

வரைபடம் 29



A தகவல் தொழிநுட்பம்
B மைய வங்கியியல்
C தொழிற்பாடுகள், உற்பத்தி மற்றும் சேவைகள்
D கணக்காய்வு மற்றும் கணக்குகள்
E இடர் மற்றும் இணக்கப்பாடு
F சட்டம்
G ஏனையவை

பயிற்சியளித்தல் வகையின் அடிப்படையில் பங்குபற்றுனர்கள் வரைபடம் 30



A தகவல் தொழிநுட்பம்
B மைய வங்கியியல்
C தொழிற்பாடுகள், உற்பத்தி மற்றும் சேவைகள்
D கணக்காய்வு மற்றும் கணக்குகள்
E இடர் மற்றும் இணக்கப்பாடு
F சட்டம்
G ஏனையவை

எமது ஊழியர்களின் தொழில்சார் மற்றும் தனிமனித விருத்திக்கு ஆதரவளிப்பதற்கும், அவர்களின் வாழ்க்கையில் முன்னேற உதவுவதற்கும் எமது உறுதிப்பாட்டிற்கு இணங்க, எமது ஊழியர் மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைப்பதிலும், வங்கி முழுவதும் உயர் செயற்திறன் கொண்ட ஊழியர்களை உருவாக்குவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை மேற்கொண்டோம். பணியிடத்தில் பயிற்சி, உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சி, உள்நாட்டு மற்றும் சர்வதேச அனுசரணைகள் மற்றும் கல்வி ஊக்குவிப்பு உள்ளிட்ட பல்வேறு வகையான தொழில்சார் விருத்தி வாய்ப்புகளுக்கான அணுகலை எமது ஊழியர்கள் பெற்றுள்ளனர். தேசிய சேமிப்பு வங்கி எண்ணியல் தளங்கள் மற்றும் இணையக் கருத்தரங்குகளை பயிற்சி திட்டங்களுக்கு அதிகளவில் பயன்படுத்துவதன் மூலம் எண்ணியல் யுகத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைத்துள்ளது. எமது எண்ணியல் மற்றும் பௌதீக பயிற்சித் திட்டங்கள் இரண்டும் சம அளவில் வெற்றி பெற்றுள்ளது, வடிவமைப்பில் மாற்றம் இருந்தாலும், கற்றலில் ஊழியர்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எமது ஊழியர்களுக்கு அவர்களின் தொழிற்பாட்டு மற்றும் தொழிநுட்ப நிபுணத்துவத்தை மேம்படுத்த அவர்களின் வாழ்க்கைச் சுற்றோட்டங்கள் முழுவதும் பல்வேறு வகைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தூண்டல், உள்ளகப் பயிற்சி, பின்னூட்டம் மூலம் கற்றல், தொழிநுட்பம் மற்றும் தலைமைத்துவ திறன் விருத்தி போன்ற திட்டங்கள், நீண்ட காலமாக வங்கியில் பணியாற்றிய ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தும் அதே வேளையில், புதிய ஆளணியினர் பெறுமதிமிக்க அனுபவத்தையும், வேலை சார்ந்த திறன்களையும் பெறுவதில் கவனம் செலுத்துகிறது.

2023 ஆம் ஆண்டில் ஊழியர்கள் முழுமையாகத் தயாராகி, செயற்படுத்துவதற்குத் தயாராக இருப்பதை உறுதி செய்வதற்காக, இந்த ஆண்டில் மைய வங்கியியல் பயிற்சியில் வங்கி அதிக கவனம் செலுத்தியது. இதற்கு ஆதரவளிப்பதற்காக ஆண்டுக் காலத்தின் போது பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன:

- மைய வங்கியியல் பயிற்சியை எளிதாக்குவதற்கும் ஊழியர் பயிற்சிக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் உருக்குக் கட்டடத்தில் இரண்டு கணினி ஆய்வகங்களை அமைத்தல்.
- தேசிய சேமிப்பு வங்கி மைய வங்கியியல் நிலைமாற்றல் செயற்திட்டம் - 2021 ஆம் ஆண்டில் விரிவான காலவரையறை பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு இந்த ஆண்டிலும் தொடரப்பட்டது.
- பயிற்சியளித்தல் பிரிவு மற்றும் மைய வங்கியியல் செயற்திட்டத்தின் வணிகக் குழு சகல கிளை ஊழியர்களுக்கும் தயார்நிலை பயிற்சி, மாற்ற முகாமைப் பயிற்சி, கிளை அல்லது பிரிவுகளில் இருந்து அடையாளம் காணப்பட்ட ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பவர் பயிற்சி, பிராந்திய அளவில் மாற்ற முகாமை பிரதிநிதிகளுக்கான ஊக்கமளிப்பு பயிற்சி மற்றும் கிளை ஊழியர்களுக்கான தொகுதி பயிற்சி ஆகியவற்றை நடத்தியது.
- இந்த ஆண்டில் 710 பங்கேற்பாளர்களுடன் 5,535 பயிற்சி மணித்தியால நேரம் மைய வங்கியியலில் செலவிடப்பட்டது.

2022 ஆம் ஆண்டில், நாம் உள்நாட்டுப் பயிற்சியளித்தல் செயற்திட்டங்களுக்கென முந்தைய ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ. 1.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா. 12.8 மில்லியன் தொகையினை செலவிட்டுள்ளோம். 2022 ஆம் ஆண்டில் எமது ஊழியர்கள் 22,603 பயிற்சி மணிநேரத்தை பதிவு செய்துள்ளதுடன், ஒரு ஊழியருக்கு சராசரியாக 5.0 மணிநேர பயிற்சி நேரங்கள் பதிவுசெய்யப்பட்டது.

3 எமது திறமையை முகாமை செய்தல்

வினைத்திறனான முயற்சிகள்

2022 ஆம் ஆண்டில், ஒவ்வொரு ஊழியருக்கும் தனிப்பயனாக்கப்பட்ட அணுகலுக்கான உள்நுழைவு வழங்கப்படும் ஒரு சுய சேவை தொகுதி மூலம் விடுமுறை, வருகை மற்றும் ஊழியர் தகவல் முகாமை ஆகியவற்றை தன்னியக்கமாக்கும் மனித வளத் தகவல் முறைமையின் (HRIS) முதல் கட்டத்தை மனிதவள பிரிவு வெற்றிகரமாக செயற்படுத்தியது. இதன் விளைவாக, கைமுறை விடுப்பு விண்ணப்பங்கள் ஜனவரி 1, 2023 அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. ஊழியர்களின் பணி திருப்தியைப் பராமரிக்கும் அதே வேளையில், ஊழியர்களின் இடமாற்றங்களைச் சீராக்க, ஒரு புதிய இடமாற்றக் கொள்கையை வங்கி இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

தர அடிப்படையிலமைந்த பதவியுயர்வுகள்


சாத்தியமான போதெல்லாம் தொழில் வளர்ச்சி மற்றும் உள்ளக பதவி உயர்வுகளுக்கு வங்கி முன்னுரிமை அளிக்கிறது. விண்ணப்பதாரரின் தகுதிகள், திறன்கள் மற்றும் கடந்தகால பணி செயற்திறன் ஆகியவற்றின் ஒப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் பதவி உயர்வுகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் போது, வேலை தொடர்பான காரணிகள் மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகின்றன. பதவி உயர்வுகள் உட்பட அதன் அனைத்து வேலைவாய்ப்பு தொடர்பான செயல்முறைகளிலும் அனைத்து தனிநபர்களுக்கும் சம வாய்ப்புகளை உறுதி செய்ய வங்கி முயற்சிக்கிறது.

வங்கியின் ஊக்குவிப்பு நாட்காட்டியானது, வங்கியின் வருடாந்த மனிதவளத் திட்டத்தின் அடிப்படையில், அதன் படிநிலையில் ஒவ்வொரு நிலைக்குமான பதவி உயர்வுகளுக்கான நேர்காணல்களை திட்டமிடுகிறது. உள்ளக பதவி உயர்வுகள் மூலம் நிரப்பப்படும் வங்கி மற்றும் வங்கி அல்லாத பிரிவுகளில் தொடர்புடைய மட்டங்களில் வெற்றிடங்கள் ஏற்படும் போதெல்லாம், வங்கியின் அக இணையத்தில் விண்ணப்பங்கள் வெளிப்படையாக அழைக்கப்படும். தனித்தனி சுற்றறிக்கைகள் வங்கி மற்றும் வங்கி அல்லாத துறைகளில் ஒவ்வொரு தரத்திற்குமான பதவியுயர்வுத் திட்டங்களைக் கூறுகின்றன. இயக்குநர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு திட்டங்களின்படி பதவி உயர்வுக்கான விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்தத் திட்டங்களுக்கு ஏற்ப தெரிவுசெய்தல் செயன்முறை இருக்கும்.

2022 ஆம் ஆண்டில், வங்கி அல்லாத பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களின்படி 14 ஊழியர்களை வங்கி நியமித்தது. மேலும், வங்கி மற்றும் வங்கி அல்லாத பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களின்படி 71 உள் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. அரசாங்கப் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கையாக வங்கி சில உள்முகத் தேர்வுகள் மற்றும் நேர்காணல்களை தாமதப்படுத்த வேண்டியிருப்பதால், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளின் எண்ணிக்கை முன்பு காணப்பட்டதை விட சற்று குறைவாகவே உள்ளது.


பதவியுயர்வுகளின் கட்டமைப்பு

வரைபடம் 31




மட்டம் மற்றும் பால் அடிப்படையில் புரள்வு

வரைபடம் 33



மட்டம் மற்றும் வயது அடிப்படையில் பதவியுயர்வுகள்

வரைபடம் 32



நிரந்த ஊழியப்பிரிவிலுள்ள தொழில்சார் தராதரம் கொண்ட ஊழியர் எண்ணிக்கை

விபரம்	2022
கணக்கியல் மற்றும் கணக்காய்வு	31
தகவல் தொழிநுட்பம்	81
சட்டம்	23
தொழிற்திறன்	20
ஏனையவை	4,334
கூட்டு மொத்தம்	4,489

அட்டவணை 17

பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு


GRI 401-3, 405-1, 405-2

வங்கி பாகுபாடுகளற்ற கொள்கையைப் பின்பற்றுவதுடன், அனைத்து நபர்களுக்கும் அவர்களின் இனம், மதம், பாலினம், வயது, திருமண நிலை, தேசிய வம்சாவளி அல்லது பூர்வீகம் அல்லது அங்கவீனம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் நியாயமான வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. இந்தக் கொள்கையின்படி பின்வரும் நடைமுறைகளை உறுதியாகப் பின்பற்ற வங்கி உறுதி பூண்டுள்ளது:


- வாய்மொழி மற்றும் உடல்ரீதியான தொல்லைகள் இல்லாத பணியிடத்தை பராமரித்தல்.
- ஆட்சேர்ப்பு, பணியமர்த்தல், இழப்பீடு, பயன்கள், இடமாற்றங்கள், பயிற்சி மற்றும் விருத்தி, கல்வி உதவி, பொழுதுபோக்குத் திட்டங்கள் மற்றும் பதவி உயர்வு உள்ளிட்ட அனைத்து வேலை தொடர்பான செயன்முறைகளும் உண்மையான தொழில் தகுதிகளைக் கருத்தில் கொண்டு எந்தவிதமான சார்புகளுமற்று மேற்கொள்ளப்படும்.
- வேலை தொடர்பான தெரிவுசெய்தல் மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் இருக்கும் அதே வேளையில், சமமான வேலை வாய்ப்புக் கொள்கையை மேலும் எளிதாக்கும் விதத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.
- ஒரு சம வாய்ப்புத் தொழில்தருனர் என்ற வகையில், எமது குழுவில் (நிரந்தர ஊழியர்கள்) பெண் பிரதிநிதித்துவம் 55% ஆகவுள்ள அதே நேரத்தில் 2022 இல் புதிதாகப் பணியமர்த்தப்பட்டவர்களில் 57% பெண்களாவர். சிரேஸ்ட முகாமை மற்றும் மத்திய முகாமையில் முறையே 48% மற்றும் 56% ஆனவர்கள் பெண்களாவர்.
- அனைத்து பெண் ஊழியர்களும் 84 வேலை நாட்கள் மகப்பேறு விடுப்புக்கு முழு நன்மைகளுடன் தகுதியுடையவர்களாகும் அதே நேரத்தில் அனைத்து ஆண் ஊழியர்களும் மூன்று நாட்கள் மகப்பேறு விடுப்பு எடுக்கலாம். 2022 ஆம் ஆண்டில், 252 பெண் ஊழியர்கள் மகப்பேறு விடுப்பைப் பயன்படுத்தினர், 99.6% ஆனவர்கள் விடுமுறை முடிந்த நிலையில் பணிக்குத் திரும்பிய அதே சமயம் 123 ஆண் ஊழியர்கள் மகப்பேறு விடுப்பு எடுத்துள்ளனர்.
- சமமான வேலை வாய்ப்புக் கொள்கையின் மீறல்கள் குறித்த அனைத்து புகார்களும் உடனடியாக விசாரிக்கப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில், வங்கியில் சமமான வேலை வாய்ப்புக் கொள்கையை மீறியதாக முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை.

பால் அடிப்படையில் சிரேஸ்ட முகாமை வரைபடம் 34



பெண் தலைமைத்துவம் வரைபடம் 35



மிக உயர்ந்த தொழில்முறை மற்றும் நெறிமுறை தரநிலைகளை நிலைநிறுத்துதல்

GRI 406-1

தேசிய சேமிப்பு வங்கி நடத்தை விதிகள் நெறிமுறைகள், நடத்தை மற்றும் இணக்கம் தொடர்பாக நமது மக்களிடம் எதிர்பார்க்கப்படும் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை நடத்தை கொள்கைகளை நிறுவுகிறது. தகுதி அடிப்படையிலான, சமமான வேலை வாய்ப்புகளுக்கான நமது உறுதிப்பாட்டை கோவை பிரதிபலிப்பதுடன், பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் இல்லாத பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்ய தேவையான நியமங்களை வரையறுக்கிறது. புதிதாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் வங்கியில் சேர்ந்தவுடன் நடத்தை விதிகளின் கீழ் அவர்களது கடமைகள் மற்றும் உரிமைகள் குறித்து தெரிவிக்கப்படுகிறார்கள்.

ஒழுக்கம் தொடர்பான விடயங்களில் ஊழியர்களுக்கு வழிகாட்ட வங்கி ஒரு ஒழுங்கு நடத்தை விதியைக் கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இந்த கோவை மதிப்பாய்வு செய்யப்பட்டது, அரசு நிறுவனங்களின் கோவை தொகுதி II இன் விதிகளைக் கருத்தில் கொண்டு, வங்கியின் தேவைகளைப் பூர்த்தி

செய்ய தனிப்பயனாக்கப்பட்டது. எந்த விதமான ஊழல், லஞ்சம் மற்றும் மிரட்டி பணம் பறிக்கும் நடைமுறைகளுக்கு வங்கி "பூச்சிய சகிப்புத்தன்மை" கொள்கையைப் பின்பற்றுகிறது. ஒழுங்கு முறைக் கோவை, நிறுவப்பட்ட நியமங்கள், கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான ஏதேனும் முரண்பாடுகளுடன் மதிப்பான அக்கறை தனிப்பட்ட நடத்தையில் ஏதேனும் முரண்பாடுகளிருப்பின் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான முறையான மற்றும் வெளிப்படையான நடைமுறைகளை வழங்குகிறது.

செயற்திறன் முகாமை

GRI 404-3

வங்கி அதன் செயற்திறன் மதிப்பீட்டு முறை மூலம் ஊழியர் செயற்திறனை மதிப்பிடுவதற்கான தொடர்ச்சியான செயன்முறையைப் பின்பற்றுகிறது. அனைத்து ஊழியர்களுடனும் செயற்திறன் மதிப்பீடுகளை தவறாமல் மேற்கொள்வது வங்கியின் கொள்கையாகும், இது ஊழியர்களின் முழு திறனை அடைய உதவும் ஒரு மேம்பாட்டு கருவியாக செயற்படுகிறது. செயற்திறன் மதிப்பீட்டு முகாமை முறைமைக்கான வழிகாட்டுதல்களை நிறுவுவதற்கும் நெறிப்படுத்துவதற்கும், பின்வரும் முக்கிய கூறுகளை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயல்திறன் முகாமை கொள்கையை வங்கி கொண்டுள்ளது:

- வங்கியின் ஒட்டுமொத்த நோக்கங்களை அடைவதற்காக செயற்திறன் இடைவெளிகளைக் கண்டறிந்து ஊழியர் செயல்திறனை மேம்படுத்துதல்.
- தனிப்பட்ட ஊழியர்கள் மற்றும் குழுக்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காணல்.
- ஊழியர்களின் ஊதியப் பொதிகள் மீதான அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் மதிப்பாய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் செயற்திறன் மதிப்பீட்டைப் பற்றிய பின்னூட்டத்தை வழங்குதல்.

வங்கி, ஊழியர்களுக்கு அந்தந்த வேலை மட்டங்களின் அடிப்படையில் அவ்வப்போது செயற்திறன் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. இந்த நோக்கத்திற்காக, முகாமை, மேற்பார்வை, தொழிற்பாட்டு மற்றும் சிறு ஊழியர்களுக்கு தனி மதிப்பீட்டு படிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. முன்னரே தீர்மானிக்கப்பட்ட மூலப்பிரமாணங்களின்படி வருடாந்த ஊழியர் மதிப்பீடுகளை உள்ளடக்கிய எமது பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான மதிப்பீட்டு முறைமையில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். கூட்டுவணிக முகாமையானது முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளில் (KPI) சமநிலைப்படுத்திய பெறுபேற்று அட்டை முறைமை மூலம் மதிப்பிடப்படுகிறது. இலக்கு அடிப்படையிலான செயல்திறன் முகாமை முறைமை அகநிலை சார்புகளை அகற்றவும் புறநிலை மதிப்பீடுகளை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.


4 ஊழியர்களைத் தக்கவைத்தல்

GRI 401-1


2022 இல், தேசிய சேமிப்பு வங்கியில் நிரந்தர ஊழியர்களுக்கான தக்கவைப்பு விகிதம் 2021 இல் காணப்பட்ட 98.6% இலிருந்து 98.1% ஆக ஒரு சிறிய சரிவைப் பதிவு செய்தது, இது 2021 இல் 1.4% ஆக இருந்த ஊழியர்களின் புரள்வு விகிதம் 2022 இல் 1.9% ஆக உயர்ந்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும், தேசிய சேமிப்பு வங்கி தொழில்துறையில் மிக உயர்ந்த தக்கவைப்பு விகிதங்கள் மற்றும் குறைந்த ஊழியர் புரள்வு விகிதங்களில் ஒன்றைப் பேணுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 2022 இல், மொத்தம் 85 ஊழியர்கள் வங்கியை விட்டு வெளியேறினர், இதில் 51% ஆண்கள் மற்றும் 44% பேர் 55 வயதுக்கு மேற்பட்டவர்கள். சேவையின் முடிவில் ஓய்வு பெறப்பட்ட, முகாமை மட்டம் 2022 இல் 36% எனும் உயர்ந்த புரள்வு விகிதத்தை எதிர்கொண்டது.

இந்த புள்ளிவிவரங்கள், ஊழியர்களை வளர்க்கும் எமது மிகுந்த ஈடுபாடு, வெகுமதி மற்றும் நிலையான பணி கலாச்சாரத்தின் வலுவான பிரதிபலிப்பாகும். மிகவும் திறமையான மற்றும் ஊக்கமளிக்கும் ஊழியர்களை நாம் தக்கவைத்துக்கொள்வதை உறுதிசெய்ய நாங்கள் உறுதிபூண்டுள்ளோம், இது எமது ஊழியர் பராமரிப்பு முயற்சியில் முழுமையான அணுகுமுறையை எடுக்க வழிவகுத்து, அவர்களின் உடல், சமூக, உளவியல் மற்றும் பொருளாதார நல்வாழ்வு வங்கியில் கவனிக்கப்படுவதை உறுதிசெய்கிறது.


புரள்வின் கட்டமைப்பு வரைபடம் 36




புரள்வுக்கான காரணங்கள் வரைபடம் 37



மட்டம் மற்றும் பால் அடிப்படையில் புரள்வு வரைபடம் 38



பால் அடிப்படையில், புரள்வுக்கான காரணம் வரைபடம் 39



ஊழியர்கள் மீதான முழுமையான கவனம்

GRI 401-2, 403-9

தேசிய சேமிப்பு வங்கியில் ஊழியர்களைத் தக்கவைத்தல் ஒரு முக்கிய முன்னுரிமையாக உள்ளதுடன் பணி-வாழ்க்கை சமநிலையை மேம்படுத்துதல் மற்றும் ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் ஆகியவை இந்த இலக்கை அடைவதில் முக்கியமான காரணிகள் என்று நாங்கள் நம்புகிறோம். எமது ஊழியர்கள் செழிக்க மற்றும் அவர்களின் உயர்ந்த திறனை அடைய உதவும் நேர்க்கணிய மற்றும் ஆதரவான பணி சூழலை உருவாக்க நாங்கள் முயற்சி செய்கிறோம். இந்த நோக்கத்திற்காக, சரியான வேலை-வாழ்க்கை சமநிலையை பராமரிக்கவும், எமது ஊழியர்களிடையே நல்ல பணி உறவுகளை வளர்க்க உதவும் சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை நாங்கள் ஊக்குவிக்கிறோம். எமது சமூக நாட்காட்டியில் NSB Colours Night, வெசாக் பக்தி கீ, கிறிஸ்துமஸ் கரோல்கள் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகள் உள்ளன, அதே நேரத்தில் வங்கியின் தலைமை அலுவலகத்தில் உள்ள எமது முழு வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சி கூடம் உடற்பயிற்சி செயற்பாடுகளை ஊக்குவிக்கிறது. மேலும், பின்வருவனவற்றை உள்ளடக்கிய முன்முயற்சிகளுடன் எமது ஊழியர்கள் நன்கு கவனிக்கப்படுவதை உறுதிசெய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்:

- ஊழியர்கள் சிறப்பு நிபுணர் ஆலோசனையுடன் மருத்துவ அமர்வுகளைப் பயன்படுத்துதல்.
- அனைத்து புதிய தாய்மார்களுக்கும், குழந்தைக்கு ஒரு வருடம் ஆகும் வரை, பாலூட்டும் நேரத்தை ஒரு நாளைக்கு இரண்டு மணிநேரமாக உயர்த்தி, காலை மற்றும் மாலை அமர்வுகளுக்கு இடையில் பிரிக்கப்படும் நெகிழ்வான பணி ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன.
- பொதுநலப் பிரிவின் ஒட்டுமொத்த நிர்வாகத்துடன் அங்கீகரிக்கப்பட்ட முன்னணி தனியார் மருத்துவமனையால் உள்ளக மருத்துவ மையம் நடத்தப்படுகிறது.
- மருத்துவ மையத்தில் சிறப்பு மருத்துவர்களின் மாதம் இருமுறை வருகை.
- முன்னணி தனியார் மருத்துவமனைகளால் நடத்தப்படும் மருத்துவ சிகிச்சை நிலையங்கள்.

மனித மூலதனம்

- மன அழுத்த முகாமை, கண் பராமரிப்பு மற்றும் இருதய நோய் தடுப்பு ஆகிய துறைகளில் நலன்புரி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகள்.
- நீண்ட கால சேவையை அங்கீகரிக்கும் வருடாந்த பாராட்டு விழா.
- ஊழியர்களின் பிள்ளைகளுக்கான வருடாந்த "சாதனையாளர் விருது வழங்கும் விழா".
- உணவு மற்றும் குடிபானங்களுக்கான சலுகை விலைகளை வழங்கும் தலைமை அலுவலக உணவுச்சாலை.
- தலைமை அலுவலகத்தில் உள்ள தேசிய சேமிப்பு வங்கி விளையாட்டுக் கழகம் மற்றும் உடற்பயிற்சி கூடம்.
- தேசிய சேமிப்பு வங்கி கலை வட்டம்.
- நூலக வசதிகள்.
- ஊழியர்களுக்காக நாட்டின் பல்வேறு இடங்களில் 15 சுற்றுவட்ட பங்களாக்களை பேணுதல்.
- கிளைகள் மற்றும் பிரிவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நாள் பயணங்களுக்கு நீட்டிக்கப்பட்ட பண உதவி.

நாடு தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் எரிபொருள் மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பற்றாக்குறையை அனுபவித்தபோது வங்கி ஊழியர்களுக்கு பின்வரும் வசதிகளை வழங்கியது:

- ஊழியர்கள் எளிதாக வேலைக்குச் செல்லத்தக்கவாறு பல்வேறு இடங்களை தலைமை அலுவலகத்துடன் இணைக்கும் விசேட பேருந்து சேவை ஏற்பாடு செய்யப்பட்டது.
- போக்குவரத்து சிரமங்களின் போது தாமதமாக வருகை தருவது கருத்தில் கொள்ளப்படாததுடன், ஊழியர்கள் முன்கூட்டியே வேலையை விட்டு வெளியேறவும் அனுமதிக்கப்பட்டனர்.
- நாட்டில் நிலவும் போக்குவரத்து சிரமங்களைக் கருத்தில் கொண்டு மறு அறிவிப்பு வரும் வரை ஊழியர்கள் வங்கியின் உத்தியோகபூர்வ டி-சர்ட் மற்றும் அல்லது அலுவலக உடைகளை அணிய அனுமதிக்கப்பட்டனர்.
- போக்குவரத்து சிரமங்கள் காரணமாக பணிக்கு வருகைதரும் ஊழியர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியது.
- முடிந்த வரையில், சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடல்கள் இணையவழியில் நடாத்தப்பட்டன.

பணியிடத்தில் அனைத்து தொழில்சார் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் (OSH) நிபந்தனைகளை செயற்படுத்துவதன் மூலம் அதன் மனிதவள கொள்கை கையேடுக்கு ஏற்ப, வங்கி தனது ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கிறது. இந்த அர்ப்பணிப்பை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் முகாமை மற்றும் ஊழியர்கள் ஆகிய இருவரின் பொறுப்புகளையும் கையேடு கோடிட்டுக் காட்டுகிறது. அத்துடன் ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை உறுதி செய்வதில் சுகாதாரக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. அக்கொள்கை பின்வரும் குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது:

- தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை மற்றும் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டம் ஆகியவற்றின் விதிகளுக்கு இணங்க வங்கியில் ஒரு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைப்பை நிறுவுதல்
- அந்தந்த கிளை அல்லது பிரிவில் பாதுகாப்பான பணிச்சூழல் போன்றவற்றை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு கிளையிலிருந்தும் இரு ஊழியர்களை நியமித்தல்.
- பணியில் இருக்கும் ஊழியர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் நலனைப் பாதுகாத்தல்.
- பணியிடத்தில் ஊழியர்களுக்கு சாத்தியமான இடர்களை அடையாளம் காணல்.
- ஊழியர்களுக்கு அவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்கு ஏற்றவாறு அலுவலக சூழலை மேம்படுத்துதல்.

2022 ஆம் ஆண்டில், வங்கியின் வளாகத்திற்குள் ஐந்து சிறிய விபத்துக்கள் மட்டுமே பதிவாகியுள்ளன.

நியாயமான மற்றும் பொறுப்பான ஊதியம் மற்றும் நன்மைகள்

GRI 201-3, 202-1, 401-2, 405-2

வங்கியின் சமமான மற்றும் நெறிமுறையான இழப்பீடு மற்றும் நன்மைகள் திட்டங்கள் ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கான மற்றொரு முக்கிய அங்கமாகும். ஒட்டுமொத்த கவர்ச்சிகரமான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த இழப்பீட்டுத் தொகுப்பை வழங்கும் போட்டித் தன்மை வாய்ந்த, ஈடுபாடு மற்றும் சமமான இழப்பீட்டு கட்டமைப்பை வழங்குவதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் வகிபாகங்கள் மற்றும் நிறுவனத்தில் செயற்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நியாயமான ஊதியம் வழங்கப்படுவதை வங்கி உறுதி செய்கிறது.

தொழிற்சங்கங்களுடனான வங்கியின் கூட்டு ஒப்பந்தம் சம்பளம் மற்றும் பிற நிதி நன்மைகளை நிர்ணயிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கோடிட்டுக் காட்டுகிறது. இந்த ஒப்பந்தம் பிரதான முகாமையாளர் தரம் வரையிலான ஊழியர்களை உள்ளடக்கியதுடன், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக சம்பள அளவுகள் வங்கியின் அக இணையத்தில் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளன. பொதுவாக மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதங்களின்படி, சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத நன்மைகள் ஒப்பந்தங்கள் இரண்டையும் வங்கி அவ்வப்போது மதிப்பாய்வு செய்கிறது. சேவைக்காலம் அந்த வரம்பிற்குள் சம்பளத்தை பாதிக்கும் அதே சமயம், ஒரே மாதிரியான வகிபாகங்களைக் கொண்ட தனிநபர்கள் அதே சம்பள வரம்பிற்குள் ஒப்பிடத்தக்க சம்பளத்தைப் பெறுவதை உறுதி செய்வது வங்கியின் கொள்கையாகும்.

ஒவ்வொரு ஊழியரின் ஊதியத்திலும் நன்மைகள் ஒரு முக்கிய பகுதியைக் குறிக்கின்றன. வங்கியில் தனது வேலையைத் தொடர ஒரு ஊழியர் பெறும் அனைத்து நிதிக் கொடுப்பனவுகளாக அவை வரையறுக்கப்படலாம். அனைத்து வழக்கமான முழுநேர ஊழியர்களும் தங்கள் சேவையில் உறுதி செய்யப்பட்ட பிறகு பின்வரும் நிதி நன்மைகளை அனுபவிக்க தகுதியுடையவர்கள்:


பயன்கள்	விளக்கம்
நிலையான மற்றும் மாறக்கூடிய நிதிவடிவ பயன்கள்	➔ போட்டித் தன்மை மிக்க சம்பளங்கள் ➔ அடையப்படும் இலாப இலக்குகளுக்கு உட்பட்டு சபையின் ஒப்புதலுடன் ஏப்ரல் மற்றும் டிசம்பரில் வெகுமதிக் கொடுப்பனவுகள் ➔ சிறப்புரிமை மற்றும் மருத்துவ விடுப்புகளை ஆண்டு இறுதியில் அதிகபட்சம் ஏழு நாட்கள் வரை பணமாக்குதல் ➔ கடந்த 12 மாதங்களில் திருப்திகரமான செயற்திறனைக் கொண்ட ஊழியர்களுக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பு ➔ எரிபொருள், பயணச் செலவு, தங்குமிட உதவி, வாழ்வாதாரம் மற்றும் கடமைப் பயணத்திற்கான ஒதுக்கீடு ➔ வேலை சார்ந்த கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு ➔ பங்களிப்பு அல்லாத ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்புடனான விதவை மற்றும் அனாதைகளுக்கான திட்டம்.
செலவின மீளளிப்புக்கள்	➔ தொழில்சார் நிறுவன உறுப்புரிமைக் கட்டணங்களின் மீளளிப்பு ➔ தொடர்புடைய கற்கைகளுக்கான அனுசரணை ➔ இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் வங்கியியல் மற்றும் நிதியியல் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கைகளின் நிறைவில் கௌரவக் கொடுப்பனவு ➔ பங்களிப்பு அல்லாத ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்புடனான விதவை மற்றும் அனாதைகளுக்கான திட்டம்.
மானியக் கடன் சலுகைகள்	➔ வீடு, வாகனக் கடன்கள், நுகர்வு மற்றும் துன்பக் கடன்கள், திருவிழா முன்பணம் மற்றும் பிற மானியக் கடன்கள்.
மருத்துவ உதவித் திட்டங்கள் வங்கியின் ஊழிய மருத்துவ உதவித் திட்டத்தில் பதிவு செய்வதானது பின்வரும் நலன்களை வழங்குகின்றது	➔ நிரந்தர மற்றும் தகுதிகாண் ஊழியர்களுக்கு வங்கியின் ஊழியர் மருத்துவ உதவித் திட்டத்தில் பதிவுசெய்தல்: விசேட நிபுணர் அல்லது வெளி நோயாளர் மருத்துவக் கட்டணங்கள், மருத்துவமனையில் அனுமதித்தல், தீவிர நோய்கள், கண் மற்றும் பல் பராமரிப்பு ஆகியவற்றுக்கான பாதுகாப்பு ➔ உடல் காயம் மற்றும் இறப்பு ஏற்பட்டால் அதிகபட்சமாக ரூ. 1.5 மில்லியன் வரையான இழப்பீடு
ஓய்வூதிய பயன்கள் அனைத்து நிரந்தர ஊழியர்களும் நியமனம் தேதியில் நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தைப் பொறுத்து பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் பங்களிப்பு அல்லாத ஓய்வூதிய திட்டத்தில் பங்கேற்க தகுதியுடையவர்களாவர். ஓய்வூதிய நிதி பயன்கள் கடுமையான முதலீட்டு கொள்கைகளுடன் கவனிப்பு, முன்னெச்சரிக்கை, விவேகம் பொருத்தமான திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றுடன் முகாமை செய்யப்படுகிறது.	➔ ஓய்வூதிய நிதி (திட்டம் I மற்றும் திட்டம் II) ➔ மேலே உள்ள திட்டம் முழுமையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், திட்டமிடப்பட்ட அலகுச் செலவு புள்ளியியல் மதிப்பீட்டு முறையில் நிர்ணயிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நலன் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பலன்களை வழங்குவதற்கான செலவு உறுதி செய்யப்பட்டுள்ளது. ➔ வங்கியின் ஓய்வூதிய நிதி (திட்டம் I) 1 அக்டோபர் 1995 க்கு முன் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கும் பிரயோகமாவதுடன், 2022 இல் அதற்காக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு ரூ. 948 மில்லியன் ஆகும். அதேவேளை நிதியில்லாத பொறுப்பு ரூ. 8,764.7 மில்லியன் ஆகும். ➔ ஊழியரின் மொத்த சம்பளத்தில் 12% வங்கியால் ஓய்வூதிய நிதிக்கு (திட்டம் II) பங்களிப்பு செய்யப்படுகிறது, இது அக்டோபர் 1, 1995 அன்று அல்லது அதற்குப் பிறகு பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்குப் பொருந்தும். ஓய்வூதியத் திட்டம் II 31 டிசம்பர் 2021 இல் உள்ள உண்மையான மதிப்பீட்டின்படி ரூ. 2,365.4 மில்லியன் தொகை மிகையாகப் பங்களிக்கப்பட்டுள்ளது. ➔ பங்களிப்புடனான விதவைகள் மற்றும் அனாதைகள் நிதி (திட்டம் II க்கு மாத்திரம்) பங்களிப்புகள் ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தால் தீர்மானிக்கப்படுவதுடன், உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் அவர்களின் அடிப்படை மாத சம்பளத்தில் 5% இனைப் பங்களிக்க வேண்டும். ➔ பங்களிப்புடனான ஓய்வூதிய மருத்துவத் திட்டம் ➔ ஊழியரின் வயதின் அடிப்படையில் மாதாந்த பங்களிப்பு தீர்மானிக்கப்படுகிறது. வங்கி ரூ. 668.5 மில்லியனை இந்த திட்டத்திற்கு பங்களித்திருக்கும் அதே வேளை, நிதியல்லா பொறுப்பு ரூ. 3,724.2 மில்லியன் என ஆண்டு இறுதியில் மதிப்பிடப்பட்டுள்ளது

அட்டவணை 18 ➔

மனித மூலதனம்

ஊழியர்களின் சேவை ஆண்டுகள்

வரைபடம் 40




மட்டங்களின் அடிப்படையில் சேவை ஆண்டுகள்

மட்டம்	5 வருடங்களுக்கு கீழ்	5-10 வருடங்கள்	11-15 வருடங்கள்	16-20 வருடங்கள்	21 வருடங்களுக்கு மேல்
சிரேஸ்ட மட்டம்	3	5	5	3	13
முகாமையாளர்கள்	24	173	117	113	263
நிறைவேற்றுனர்கள்	21	282	498	199	98
ஊழிய உதவியாளர்கள்	457	1,280	278	3	45
அலுவலக உதவியாளர்கள்	470	126	1	1	11
கூட்டு மொத்தம்	975	1,866	899	319	430

அட்டவணை 19

பால் அடிப்படையில் சேவை ஆண்டுகள்

வரைபடம் 41



5 வினைத்திறனான தொடர்பாடல்

- தேவையான தகவல்களை தெளிவாகவும் சரியான நேரத்தில் வழங்குவதும் வங்கியில் சுமூகமான தகவல்தொடர்பு வழிகளைப் பராமரிப்பதில் முக்கியமானது. முகாமை மற்றும் ஊழியர்கள் இடையிலான திறந்த, இருவழித் தொடர்பாடல், நட்பு மற்றும் கூட்டுறவு பணிச்சூழலுடன், முரண்பாடுகளை அகற்றவும், வேலை திருப்தியை மேம்படுத்தவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் உதவுகிறது. வங்கியானது தொடர்பாடலுக்காக பல்வேறு வழிமுறைகளை நிறுவியுள்ளதுடன், முடிந்தவரை ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் பயன்படுத்துகிறது. இந்தத் தொடர்பாடல் வழிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்ட கிளைகளுக்கிடையில் நேரடித் தொடர்பு மற்றும் திறந்த கலந்துரையாடல்களை எளிதாக்குவதற்கான இணையக் கருத்தரங்குகள், மனிதவள விருத்திப் பிரிவானது "இணையக் கருத்தரங்கு" எண்ணக்கருவைத் தொடங்கி திறந்த கலந்துரையாடல்களை ஆதரிக்கும் நேரடி அமர்வுகளை அனுமதிக்கிறது. பிரச்சனை தீர்க்கும், இந்த அமர்வுகள் 2022 இல் வெற்றிகரமாகத் தொடரப்பட்டன, குறிப்பாக கொவிட்-19 தொற்றுநோய்களின் போது பயனுள்ள தொடர்பாடல் வழிமுறைகளை வழங்கியதுடன் பௌதீக ரீதியாகத் துண்டிக்கப்பட்ட நேரத்தில் ஊழியர்களை எண்ணியல் முறையில் இணைக்க முடிந்தது.

- அக இணையங்கள்
- சுற்றறிக்கைகள்
- ஊழியர் அறிவிப்புப் பலகை
- முகாமையின் மின்னஞ்சல்கள்
- மனிதவளத் துறையின் முறைசார்ந்த கடிதங்கள்

தொழிற்சங்கங்களுடனான உறவு - ஒன்றுகூடுதல் மற்றும் கூட்டுப் பேரம் பேசுதலுக்கான சுதந்திரம்

வங்கியின் நீண்ட கால இருப்பை உறுதி செய்வதற்காக தொழிற்சங்கங்கள் மற்றும் பிற பிரதிநிதி சங்கங்களுடன் ஊழியர்களுக்கும் வங்கிக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் நேர்க்கணிய மற்றும் சிறந்த நல்லுறவைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வங்கி அங்கீகரிக்கிறது. ஒரு இணக்கமான மற்றும் வெற்றிகரமான உறவைப் பேணுவதற்கு, தொழிற்சங்க உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அல்லாதவர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுடனும் முகாமை நேரடி மற்றும் அடிக்கடி தொடர்பாடல்களை மேற்கொள்கிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான வழக்கமான தொடர்பாடல், தகவல்களை வழங்குவதற்கு அனுமதிப்பதுடன், வங்கியின் வணிக நடவடிக்கைகள் மற்றும் இலக்குகள் பற்றிய முழுமையான புரிதலை அவர்களின் உறுப்பினர்கள் மற்றும் பிற பிரதிநிதி சங்கங்களால் ஊக்குவித்து, இதன் மூலம் பரஸ்பர புரிதலை வளர்க்கிறது.

வங்கியானது ஜாதிக சேவக சங்கமய, இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை சுதந்திர வங்கி ஊழியர் சங்கம், நிறைவேற்று அதிகாரிகள் சங்கம், சமகி சேவக சங்கமய மற்றும் அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கம் உள்ளிட்ட வங்கிக்குள் இயங்கும் அனைத்து தொழிற்சங்கங்களுடனும் வங்கி மிகவும் ஆரோக்கியமான உறவுகளை தொடர்ந்து கொண்டுள்ளது.


வங்கி அதன் ஊழியர்களின் சங்க சுதந்திரத்தை மதிப்பதுடன், கூட்டுப் -பேரம் பேசுவதற்கான அவர்களின் உரிமையை அங்கீகரிக்கிறது. தொழிற்சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சம்பளம் மற்றும் பிற நிதி நன்மைகளைப் பாதிக்கின்றன. 2021-2023 காலப்பகுதிக்கான சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத பயன்களுக்கான கூட்டு ஒப்பந்தம் 2021 இல் வங்கியின் முகாமைக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் வெற்றிகரமாக கையெழுத்திடப்பட்டது.

ஊழியர் குறைகளைக் கையாளும் பொறிமுறைகள்

வங்கியானது குறைகளைத் தீர்க்க இரண்டு முறைமைகளைப் பயன்படுத்துகிறது: படி ஏணி அமைப்பு மற்றும் திறந்த கதவு கொள்கை. முதலாவது முறை ஒரு படிநிலை மூலம் குறைகளை நிவர்த்தி செய்வதை உள்ளடக்கியதுடன், இரண்டாவது முறை ஊழியர்கள் தங்கள் குறைகளை நேரடியாக மனிதவளக் குழுவால் பரிந்துரைக்கப்படும் ஒரு சுயாதீன கட்சிக்கு அனுப்புவதற்கான தெரிவை வழங்குகிறது. முடிந்தவரை படி ஏணி முறையைப் பயன்படுத்த வங்கி ஊழியர்களை ஊக்குவிக்கிறது. இரண்டு முறைமைகளிளதும் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மேலே குறிப்பிட்டுள்ள படி ஏணி முறைமை மூலம் அவர்களது குறையை தீர்க்க முடியாது என்று ஒரு ஊழியர் கருதினால், அதை நேரடியாக மனிதவள மேம்பாட்டுப் பிரிவுக்கு அனுப்பலாம், அது கீழே கொடுக்கப்பட்டுள்ள "திறந்த கதவுக் கொள்கையை" பின்பற்றும்.


1. படி ஏணி முறைமைகள்



உரு 18

மனித மூலதனம்

2. திறந்த கதவுக் கொள்கை



உரு 19

பணியிட பாலியல் துன்புறுத்தலைக் கையாள்வதில் குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகள்

எந்தவொரு துன்புறுத்தலும் இல்லாத வேலை மற்றும் கற்றல் சூழலை வழங்க வங்கி உறுதிபூண்டுள்ளது. துன்புறுத்தல் ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகள் மற்றும் தனிப்பட்ட கண்ணியத்தை மீறுகிறது. வங்கி அனைத்து வடிவங்களிலும் துன்புறுத்தலை ஒரு கடுமையான குற்றமாக கருதுகிறது. ஒப்பந்த மற்றும் புற வழங்கல் ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும்.

பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள், இடமாற்றங்கள் அல்லது அதுபோன்ற வாக்குறுதிகளுக்குப் பதிலாக விருப்பமில்லாத கீழ்நிலை அதிகாரியை (பாலியல் சலுகைகள் உட்பட) துன்புறுத்தும் அல்லது உதவி கோரும் ஊழியர், வங்கியின் ஒழுங்கு விதிகளின்படி கையாளப்படுவார்.

வங்கியின் வளாகத்தில் துன்புறுத்தல் சம்பவங்கள் நடந்தாலும் இல்லாவிட்டாலும், வேலை நேரத்தில் சம்பவங்கள் நடந்தாலும் இல்லாவிட்டாலும், வங்கியின் அனைத்து ஊழியர்கள் மற்றும் அக்கறைதாரர்கள் போன்ற பிற நபர்களைத் துன்புறுத்துவது ஊழியர்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. வழங்குனர்கள், வருகைதருனர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் விருந்தினர்கள் கூட வங்கியின் வளாகத்தில் இருக்கும்போது மற்ற நபர்களைத் துன்புறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ளபடி தான் துன்புறுத்தப்படுவதாகவோ அல்லது பாகுபாடு காட்டப்படுவதாகவோ ஒரு ஊழியர் உணர்ந்தால், அந்த விடயத்தை உரிய பிரிவுத் தலைவர் அல்லது கிளை முகாமையாளருடன் கலந்துரையாட முடியாவிட்டால், அவர் துன்புறுத்தல் அல்லது பாகுபாட்டின் அளவு மற்றும் தன்மையை எழுத்துப்பூர்வமாக ஆளணி முகாமையாளருக்குத் தெரிவிக்க வேண்டப்படுவதுடன், அதன் பிறகு ஊழியருக்கும், ஆளணி முகாமையாளருக்கும் இடையே கலந்துரையாடல் நடாத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண் குறைகளைக் கையாளும் குழு

2022 இல் பெண் ஊழியர்களின் குறைகளைக் கையாள, குறிப்பாக வங்கியின் பெண் ஊழியர்களின் மன மற்றும் உடல் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒரு குறைகளைக் கையாளும் குழு உருவாக்கப்பட்டது. முகாமையின் பெண் அதிகாரிகள் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்களை உள்ளடக்கிய குழு, மனிதவள பிரதிப் பொது முகாமையாளரால் தலைமை வகிக்கப்படுகிறது. பெண் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பாரபட்சம் அல்லது துன்புறுத்தல் தொடர்பான முறைப்பாடுகளை குழுவின் தலைவருக்கு அனுப்பலாம்.

2023 மற்றும் அதனைத் தாண்டிய எதிர்கால வாய்ப்புக்கள்

குறுங்காலம்

- மனிதவள சேவைகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதியை மேம்படுத்தும் மனிதவளத் தொழிற்பாடுகளினை தன்னியமாக்கும் மனிதவள முறைமையின் இரண்டாம் கட்டத்தின் அமுலாக்கம்

- மின்னியல் கற்றல் மற்றும் ஊழியர் விருத்தி மீது விசேட நோக்கினைக் கொண்ட கற்றல் கலாச்சாரத்தை உருவாக்குல்

- சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதற்காக முன் அலுவலகத்தில் ஒரு மாறும்திறன்மிக்க ஊழியப்படையினை உருவாக்குதல்

நடுத்தரளவு காலம்

- தடைகளை நீக்கி, மதிப்பீடுகளின் பயனுறுதியை மேம்படுத்தும் இலக்கு அடிப்படையிலான செயற்றிறன் மதிப்பீட்டு முறைமையை (முக்கிய செயற்றியன் குறிகாட்டி அடிப்படையிலான) உருவாக்குதல்.

- மனிதவள தொழிற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதியை மேம்படுத்துவதற்காக நிலைபேறான தகவல் தொழிநுட்ப தீர்வுகள்.

நீண்ட காலம்

- வங்கித் தொழிலை தொடர விரும்புவோருக்கான முதல்நிலை தொழில்தருனராக இருத்தல்.

- அனைத்து தருணங்களிலும் எமது ஊழியர்களின் பௌதீக மற்றும் உள நலனை உயர்த்தி நிற்கும் வேலைச் சூழலை உருவாக்குதல்.

எமது எதிர்காலச் சான்றுறுதி தந்திரோபாயத்துக்கான பங்களிப்பு

எதிர்பாராத மற்றும் வழக்கத்துக்கு மாறான அதிர்ச்சிகளைத் தாங்கி, நீடித்து நிற்கத்தக்க வளர்ச்சியை அடைவதற்கான உள்ளடக்கமான நிதியியல் தீர்வுகளை வழங்குதல்.



சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

எமது சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்தின் முக்கிய கூறுகள்

நிதித்துறையில் சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் என்பது வலுவான பொருளாதார பங்கேற்பை ஊக்குவிக்கவும், பரந்த சமூகம் முழுவதும் நிதி சேர்க்கையை வளர்க்கவும் ஒரு வங்கிக்கும் அதன் வெளிப்புற அக்கறைதாரர்களுக்கும் இடையே உருவாக்கப்பட்டு, வளர்த்து, பலப்படுத்தப்பட்டு, நீடித்து நிலைத்திருக்கும் உறவுகள் மற்றும் வலையமைப்புக்களின் பெறுமதியை உள்ளடக்கும்.

தேசிய சேமிப்பு வங்கியில், முக்கிய அக்கறைதாரர் குழுக்களுடன் அர்த்தமுள்ள ஈடுபாட்டின் மூலம், அவர்களின் தேவைகள் மற்றும் கரிசனைகளைப் புரிந்துகொண்டு, அவர்களின் மாறிவரும் முன்னோக்குகளுக்குப் பதிலிறுப்பதன் மூலம், ஒரு அரசுக்கு சொந்தமான வங்கியாக இலங்கையர்களுக்கான நிலையான நிதி முறைமையைக் கட்டியெழுப்புவதற்கான எமது பெரும் சமூகக் கடமையை நாங்கள் அறிவோம். நம்பிக்கை, ஒருமைப்பாடு மற்றும் பெறுமதிப் பகிர்வு ஆகியவற்றில் நாங்கள் உறவுகளை உருவாக்கியுள்ளதுடன், தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறோம். எமது உறவுகளின் வலிமையானது செயற்படுவதற்கான நமது சமூக உரிமத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு முக்கியமானது.

முக்கிய உள்ளீடுகள்

- எமது பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டு சமூகத்தின் தொடர்ச்சியான நம்பிக்கை
- நீண்ட கால வாடிக்கையாளர் உறவுமுறைகள்
- ஆக்கபூர்வமான ஊழியர் ஈடுபாடு
- அரசு மற்றும் ஒழுங்குமுறையாளர்களுடனான நேர்க்கணிய உறவுமுறைகள்
- ஊடகங்கள் மற்றும் சமூகங்களுடன் செயலூக்கமான ஈடுபாடு
- வணிகப் பங்காளர்கள் மற்றும் வழங்குனர்களுடனான கூட்டுச் செயற்பாடுகள்

முக்கிய சவால்கள்

- பொருளாதார நெருக்கடியால் வணிகத்தில் இடையூறுகள்
- அக்கறைதாரர்களின் எதிர்பார்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அக்கறைதாரர்களின் அக்கறை முரண்பாட்டை ஏற்பிசைத்து முகாமை செய்தல்
- பல்வேறு அக்கறைதாரர் தேவைகளை பூர்த்தி செய்ய வளங்களை ஒதுக்குவதில் வினைத்திறன்
- நல்லுறவு பேணப்படாத போது நற்பெயருக்கு சேதம் ஏற்படும் சாத்திய இடர்

முக்கிய உள்ளீடுகள்

வாடிக்கையாளர் கையகப்படுத்தல்

செயற்படும் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை

12.98 மில்.

(2021 – 12.91 மில்.)

பயன்பாட்டிலுள்ள அட்டைகளின் எண்ணிக்கை

2,203,309

(2021 – 2,041,842)

பொறுப்புணர்வுமிக்க கொள்முதல்

பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் எண்ணிக்கை

184 (2021 – 351)

சமூகத்துக்கான பங்களிப்பு

உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதியீட்டம்

ரூ. 1.5 பில். (2021 – ரூ.28.0 பில்.)

முக்கிய வாய்ப்புகள்

- எமது வணிகத்தில் அக்கறைதாரர்களின் தேவைகளை கட்டியெழுப்பவும் வெற்றிகரமான கடப்பாடுகளை வழங்கவும் முடியும்
- அக்கறைதாரர்களின் மாறுபட்ட கரிசனைகளில் ஈடுபடும் மற்றும் பதிலிறுக்கும் திறன்
- சமூகத்தில் நேர்க்கணிய நீண்ட கால தாக்கத்தை உருவாக்கும் வாய்ப்பு

எமது சமூக மற்றும் உறவு மூலதனத்தை நாம் வளர்த்துக் கொள்ளும் முறை

1. சிறந்த வாடிக்கையாளர் அனுபவம், புதுமையான உற்பத்திகள் மற்றும் தீர்வுகள் மற்றும் தரவு மற்றும் தனியுரிமையின் பாதுகாப்பு ஆகியவற்றின் மூலம் விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குதல்.
2. பயனுறுதிமிக்க தொடர்பாடல் மற்றும் தந்திரோபாய இணைவுகள் மூலம் வணிகப் பங்காளர்களுடன் வலுவான கூட்டிணைவை உருவாக்குதல்.
3. இணக்கப்பாடு மற்றும் விவேகமான இடர் முகாமை ஆகியவற்றில் நிலைத்த தன்மையை பராமரிப்பதன் மூலம் ஒழுங்குமுறை இணக்கப்பாட்டை வலுப்படுத்துதல்.
4. சமூகத்திற்குத் திரும்பக் கொடுப்பதில் கவனம் செலுத்தி, நிதிச் சேர்க்கைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் செழிப்பான சமூகங்களைக் கட்டியெழுப்புதல்.

எமது சமூக மற்றும் உறவு மூலதனத்தை பயன்படுத்தும் முறை

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

அக்கறைதாரர்களின் ஈடுபாடு மற்றும் பின்னூட்டம் அக்கறைதாரர்களின் தேவைகளுடன் எமது பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பை சிறப்பாகச் சீரமைக்க பங்களிக்கின்றன.

மனித மூலதனம்

அக்கறைதாரர்கள், வலையமைப்புக்கள் மற்றும் பரந்த சமூகங்களுடன் ஆழமான உறவுகளை வளர்ப்பது வர்த்தக நாம உரிமையை பலப்படுத்துகிறது, இது உயர் செயற்திறன் கொண்ட நிபுணர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது.

புலமை மூலதனம்

வாடிக்கையாளர் மையத்தன்மை, ஒழுங்குமுறை சிறந்த நடைமுறைகள், பொறுப்பான வளங்கள் மற்றும் நாம் செயற்படும் சமூகங்களில் முதலீடுகள், இவை அனைத்தும் எமது வாடிக்கையாளர் விசுவாசம், வர்த்தகநாமம் மற்றும் நற்பெயரை மேம்படுத்த பங்களிக்கின்றன.

இயற்கை மூலதனம்

சமூகக் கடமையுடன் இணைந்த ஒழுங்குமுறை இணக்கம் இயற்கை வளங்களின் பொறுப்பான பயன்பாடு மற்றும் பாதுகாப்பிற்கு பங்களிக்கிறது.

நிதி மூலதனம்

சமூக மற்றும் உறவு மூலதனத்தை கட்டியெழுப்புதல் மற்றும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட முதலீடுகள் ஆரம்பத்தில் நிதி மூலதனத்தைக் குறைக்கலாம், இதன் விளைவாக வரும் வர்த்தகநாம விசுவாசம் மற்றும் வர்த்தகநாம உரிமை நீண்ட கால இலாபத்தன்மைக்கு வழிவகுக்கும்.

பொருண்மை, அக்கறைதாரர்கள், குறுகியதிலிருந்து நடுத்தர கால உபாய முன்னுரிமைகள் உடனான தொடர்புகை

பொருண்மையான விடயங்கள்



தொடர்புபட்ட அக்கறைதாரர்கள்



குறுங்காலம் முதல் நடுத்தரளவு காலம் வரையான தந்திரோபாய முன்னுரிமைகள்



ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

முதன்மை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

நிதி உள்ளடக்கம் மூலம் வறுமை மற்றும் சமத்துவமின்மையை குறைத்தல்

சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கல்வி தொடர்பான நிதி உற்பத்திகள் மற்றும் தீர்வுகள் மூலம் கல்வி மற்றும் எழுத்தறிவை மேம்படுத்துதல்

பரோபகார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வளம் மற்றும் புற வழங்கல் வாய்ப்புகள் மூலம் நெகிழ்ச்சியான, பொருளாதார ரீதியாக நிலையான சமூகங்களை உருவாக்குதல்

கடுமையான கொள்முதல் செயல்முறை மூலம் நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திக்கு ஒப்புதல் அளித்தல்

இரண்டாம்நிலை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

நிதி உள்ளடக்கம் மூலம் வறுமை மற்றும் சமத்துவமின்மையை குறைத்தல்

கூட்டுவணிக சமூகப் பொறுப்பு முயற்சிகள் மூலம் அக மற்றும் புற அக்கறைதாரர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்தல்

சாத்தியமான வீட்டுக்கொடுப்புக்கள்

- எண்ணியல் தளங்களின் ஊடுருவலுக்கு நிதி மூலதனம் தேவைப்படுகிறது, ஆனால் உற்பத்தி மற்றும் வாடிக்கையாளர் மூலதனத்தை உருவாக்குகிறது.
- கூட்டுவணிக சமூகப் பொறுப்பு திட்டங்களில் முதலீடு செய்வது நிதி மூலதனத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது, ஆனால் சமூக மூலதனத்தையும் புலமை மூலதனத்தையும் ஒரு நேர்க்கணிய வர்த்தகநாம மதிப்பு மூலம் நீண்ட காலத்திற்கு உருவாக்குகிறது.
- வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்பை விஞ்சுதல்.
- சமூக மேம்பாட்டு திட்டங்களில் ஈடுபடுதல்
- ஒழுங்குவிதிமுறை தேவைகளுக்கு இணங்குதல்
- வணிகப் பங்குடமைகளை உருவாக்குதல்

1 ஒரு விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குதல் – வாடிக்கையாளர் மூலதனம்

நிறுவனத்தின் நிதி செயல்திறன் மீதான கணிசமான தாக்கம் காரணமாக வாடிக்கையாளர் மூலதனம் ஒரு நிறுவனத்தின் போட்டி நன்மைக்கான முக்கிய மூலமாகக் கருதப்படுகிறது. வாடிக்கையாளர் மூலதனம் வங்கிகளுக்கு மிகவும் பொருத்தமானது, ஏனெனில் வங்கிகள் வாடிக்கையாளர் உறவுகளின் பின்னடைவு மற்றும் நீண்ட காலத்திற்கு வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக்கொள்ளும் திறனைப் பொறுத்து அவற்றின் தற்போதைய மற்றும் எதிர்கால வருவாயின் மதிப்பைக் கொண்டு உறவாடப்படுகின்றன.

வாடிக்கையாளர் மூலதனத்திற்கான எமது அணுகுமுறை

முன்மாதிரியான வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவத்தை வழங்க அனைத்து தொடர்பூடக அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலம் வாடிக்கையாளர்களுடனான எமது உறவுகளை நாங்கள் தொடர்ந்து ஆழப்படுத்துகிறோம். 262 கிளைகள், மற்றும் 390 தன்னியக்க பணம் செலுத்தும் இயந்திரங்கள், பண வைப்பு இயந்திரங்கள் மற்றும் பண மறுசுழற்சி இயந்திரங்கள் (ATMs/CDMs/CRMs) இலங்கை முழுவதும் பரவியுள்ள சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில், கைத்தொலைபேசி மற்றும் இணைய தளங்களுடன் எந்த நேரத்திலும் அணுகக்கூடிய வகையில், வாடிக்கையாளர்களுக்கு அணுகலை வழங்குகிறோம். அவர்களின் சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பயனுள்ள மற்றும் மலிவு நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகளின் விரிவான சேர்க்கை, மேம்படுத்தப்பட்ட பதிலளிப்பு நேரத்துடன் தொடர்பாடல் வழிமுறைகள் மூலம் பெறுமதிமிக்க பின்னூட்ட வடிவமாக வாடிக்கையாளர் ஈடுபாட்டை நாங்கள் எளிதாக்குகிறோம், மேலும் பல ஆண்டுகளாக நாங்கள் வளர்த்து வந்த பல தலைமுறை வாடிக்கையாளர் உறவுகளில் அதிக அளவு திருப்தியை அளவிடவும் பேணவும் சமீபத்திய கருவிகளைப் பயன்படுத்துகிறோம்.

பெறுமதியை உயர்த்துவதற்கான உத்திகள்

- எண்ணியல் வாடிக்கையாளர் சேவை மாதிரியை மேம்படுத்தல்
- மதிப்பை உருவாக்குவதை முன்னுரிமையாக கொண்டு விநியோக வலையமைப்பை மீளமைத்தல்
- ஒரு உண்மையான அனைத்து தொடர்பூடக வழிமுறை வாடிக்கையாளர் அனுபவத்தை உருவாக்குதல்
- இலக்கு பெறுமதியை உருவாக்குவதற்காக வாடிக்கையாளர் பயணங்களில் தனிப்பட்ட கவனம் செலுத்துவதற்கான சூழல் சார்ந்த தரவைச் சேகரித்து மேம்படுத்தல

விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குவதற்கான பெறுமதியை உருவாக்கும் இயக்கிகள்

- புதிய உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட அம்சங்களை அறிமுகப்படுத்துதல்.
- பலதரப்பட்ட, பல தலைமுறை வாடிக்கையாளர் தளத்திற்கு சேவை செய்தல்
- எண்ணியல் நிலைமாற்றம் மூலம் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல்.
- வாடிக்கையாளர் முறைப்பாடுகளை வினைத்திறனாகத் தீர்த்தல்.
- வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல்
- பொறுப்புடன் தகவல்களைப் பகிர்தல் மற்றும் வங்கி நடைமுறைகள் குறித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வை ஏற்படுத்தல்

2022 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட அம்சங்கள்

தவணை வைப்புக்கள்

- 3-மாத, 4-மாத மற்றும் 7-மாத விசேட நிலையான வைப்புத் திட்டங்கள்
- புதிய சிரேஸ்ட பிரஜை குடிமக்கள் நிலையான வைப்புத் திட்டம் – "தே.சே.வ சிரேஸ்ட பிரஜைகள் நிலையான வைப்பு"
- பிரார்த்தனா சேமிப்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நீண்ட காலங்களுக்கு உயர் வீதங்களில் சேமிக்க வாய்ப்பளிக்கும் பிரார்த்தனா சேமிப்பை மேம்படுத்துதல்.

கடன்கள் மற்றும் முற்பணங்கள

- "புத்தி உயர் கல்விக் கடன்கள்" கடன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு கடன் வழங்குவதற்காக, சர்வதேச திறன் விருத்தி மற்றும் பயிற்சியளித்தல் நிறுவனத்துடன் (SDTI) புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- "புரவர சரிசர" தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கணினி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டங்கள்

பிரபல வெகுமதிகள


- 2022 ஆம் ஆண்டில் வங்கியின் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாட விசேட மேம்படுத்தல் திட்டம் "தே.சே.வ செனஹசே தயதா"

ஆதரவு சேவைகள்

- வங்கியின் உற்பத்திகள் மற்றும் தீர்வுகள் குறித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வை அதிகரிக்க குருநாகல் மற்றும் அநுராதபுரத்தில் நடைபெற்ற வாடிக்கையாளர் மன்றங்கள்
- மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களில் நடாத்தப்பட்ட ஊழியர் மன்றங்கள்.

பலதலைமுறை, பலதரப்பட்ட வங்கியியல் தீர்வுகள்

எமது வாடிக்கையாளர்களின் வளர்ச்சி மற்றும் பரிணாம வளர்ச்சியுடன், அவர்களின் வங்கித் தேவைகளும் அதிகரிக்கின்றன. தேசிய சேமிப்பு வங்கியில், எமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதன் மூலமும், மக்கள் தொகையின் மாறிவரும் முன்னுரிமைகளை உன்னிப்பாக அவதானிப்பதன் மூலமும் அவர்களின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப விரைவாக மாற்றியமைக்கிறோம். இன்று, தேசிய சேமிப்பு வங்கியானது சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் பரந்த அளவிலான உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட அம்சங்களை வழங்குகிறது, இதன்மூலம் எமது பல்வேறு வாடிக்கையாளர் தளம் அவர்களின் வயது, பாலினம் மற்றும் வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு வங்கித் தீர்வைக் கண்டறிய முடியும். எமது பல தலைமுறை உற்பத்திகளின் விபரத்தை கீழே காணலாம்:



உரு 20

புலம்பெயர்ந்த தொழிலாளர் வாடிக்கையாளர் தளத்தை வலுப்படுத்துதல்

2022 ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் தொடர்ந்து மற்றும் கணிசமாக அதிகரித்து வரும் அதே வேளையில், அந்நிய செலாவணி வரவுகள் ஆண்டுக்கு ஆண்டு 31% குறைந்துள்ளது. இந்த எண்ணிக்கை இவ்வாறு இருந்த போதிலும், தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டுப் பண மாற்றல்கள் மதிப்பாய்வு செய்யப்படும் ஆண்டிற்கு ரூ. 71.8 பில்லியனாக, 2021 இன் 5.25% உடன் ஒப்பிடும் போது, ஊழியர்கள் பண அனுப்புகையில் எமது சந்தைப் பங்கை 5.73% ஆக உயர்த்தியது, முக்கியமாக நாணயத் தேய்மானம், அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பணம் அனுப்பும் வழிகள் மீதான ஆய்வு மற்றும் தொழிற்துறையின் பணப் பரிமாற்றங்களில் ஒட்டுமொத்த அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டது.

விசேட தேவைகளைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்தல்

எண்ணியல் அணுகலைத் தவிர, ஊனமுற்றோர் அல்லது குறைபாடுகள் உள்ளவர்களுக்கு எமது நிதிச் சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதில் வங்கி உறுதியுண்டுள்ளதுடன் இலாபத்தன்மைக்கு அப்பாற்பட்ட தனிநபர் தேவைகளை மதிக்கும் மேலும் உள்ளடக்கிய சமூகத்தை நாங்கள் தொடர்ந்து வெற்றி கொள்கிறோம். எமது கிளை வலையமைப்பு முழுவதும் அங்கவீனம் அல்லது விசேட தேவைகள் உள்ள வாடிக்கையாளர்களுடன் ஈடுபடுவதற்கான சிறந்த நடைமுறைகளை நாம் செயற்படுத்தியுள்ளோம் வங்கிக்கு சொந்தமான ஆதனங்களில் அமைந்திருக்கும் 47 கிளைகளும், வாடகை அலுவலக இடங்களில் இருக்கும் 90% கிளைகளும் ஊனமுற்றோருக்கான அணுகலைக் கொண்டுள்ளன. அனைத்து புதிய அல்லது இடமாற்றம் செய்யப்பட்ட வங்கிக் கிளைகளும் கட்டாயத் தேவையாக ஊனமுற்றோர் அணுகல் மற்றும் சேவைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

எண்ணியல் நிலைமாற்றம் மூலம் சிறந்த வாடிக்கையாளர் அனுபவம்

இலங்கையர்களிடையே ஆரோக்கியமான சேமிப்பு மற்றும் முதலீட்டுப் பழக்கங்களை வளர்த்தெடுக்கும் நிதித் தீர்வுகளுக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக, தேசிய சேமிப்பு வங்கி தனது எண்ணியல் நிலைமாற்றத்தை 2022 இல் தொடர்ந்தது. வங்கியை எளிமையாகவும், பாதுகாப்பானதாகவும், வேகமானதாகவும், மேலும் தனிப்பயனாக்குவதற்காகவும், முறைமைகள், மறு-வடிவமைக்கப்பட்ட செயன்முறைகள், குறைக்கப்பட்ட செயன்முறை நேரம், மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் செழுமைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் பயணங்களை அந்தங்களிடையிலான தன்னியக்கத்துடன் ஒருங்கிணைத்தோம். மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பல எண்ணியல் முயற்சிகளில் நாங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளோம்:

- Temenos Transact (முன்னர் T24 என அழைக்கப்பட்டது) மைய வங்கியியல் முறையை செயற்படுத்தும் செயற்பாடுகள் தற்போது செயற்பாட்டில் உள்ளதுடன் 2023 இல் இது பயன்பாட்டுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.
  - நடைமுறைக்கு வந்ததும், இந்த மைய முறைமை செயற்படுத்தப்படும் வங்கி சக்திவாய்ந்த முன்-இறுதி அந்த எண்ணியல் தளங்களை உருவாக்க மற்றும் வினைத்திறனான முடிவு-இறுதி தீர்வுகளை உருவாக்குகிறது, அங்கு பின்-அலுவலக செயல்முறைகளும் தன்னியக்கமாக்கப்படுவதுடன் நெறிப்படுத்தப்படும்.
  - அனைத்து தகவல் தொழிநுட்பத்தினால் இயக்கப்படும் வங்கி சேவைகளும் ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் நியமங்கள் சர்வதேச தரங்களுக்கு இணங்க மறு-வடிவமைக்கப்படும்.
- "NSB Pay" அதிநவீன கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவுத் தீர்வு, இது iOS, Android மற்றும் Huawei போன்ற முன்னணி கையடக்கத் தொலைபேசிப் பயன்பாட்டு தளங்களில் கிடைக்கிறது.
- எந்த நேரத்திலும் தேசிய சேமிப்பு வங்கி E-Connectக்கு அடகு பணம் செலுத்தும் வசதி
- விடுமுறை, வருகை மற்றும் ஊழியர் தகவல் முகாமை ஆகியவற்றை தன்னியக்கமாக்கும் புதிய மனித வள தகவல் முறைமையின் (HRIS) முதல் கட்டத்தின் அமுலாக்கம்.

எமது வாடிக்கையாளர்களின் முதன்மைப் பங்காளியாக இருப்பதில் பெற்ற அங்கீகாரம்

- தேசிய சேமிப்பு வங்கி நிறுவன இணையதளம் (nsb.lk) LK Domain Registry 2022 இல் BestWeb.lk இல் சிறந்த வங்கி மற்றும் நிதி இணையதளத்திற்கான சிறந்த வங்கி மற்றும் நிதி இணையதளம் மற்றும் சிறப்பு விருதை வென்றது.
- தேசிய சேமிப்பு வங்கி எண்ணியல் வங்கி முயற்சியின் மூலம் இலங்கையின் குடிமக்களுக்கு சிறந்த தரமான சேவைகளை வழங்குவதற்காக அதன் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சூழலை அறிமுகப்படுத்துதல், வளர்ப்பது மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியை அங்கீகரிப்பதற்காகவும் பாராட்டுவதற்காகவும் வங்கிக்கு பொதுத்துறையின் மிகச்சிறந்த தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சாதனை விருது வழங்கப்பட்டது.
- LankaPay Technnovation விருதுகள் 2022 இல் தேசிய சேமிப்பு வங்கி வென்ற விருதுகளாவன:
  - தங்க விருது – வாடிக்கையாளர் வசதி மேன்மை
  - தங்க விருது – ஆண்டின் சிறந்த பொது தானியக்க கூற்று பொறிமுறை (ATM) தொழிற்படுத்துனர்.

வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல்

GRI 418-1

எமது வாடிக்கையாளர்களுடன் நம்பகமான உறவுகளை வளர்ப்பதில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இந்த உறுதிப்பாட்டை நிலைநிறுத்த, வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுடன் மட்டுமல்லாமல் தொடர்புடைய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணக்கமான, பாதுகாப்பான, பொறுப்பான முறையில் வாடிக்கையாளர் தரவைப் பயன்படுத்துகிறோம். தேசிய சேமிப்பு வங்கியின் விரிவடைந்து வரும் எண்ணியல் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் தடம் ஆகியவற்றுடன், அதிகரித்து வரும் இணைய குற்றங்களின் ஈர்ப்பை நாங்கள் அங்கீகரித்து, இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் தகவல் பாதுகாப்பை முக்கியமான பொருண்மைமிக்க விடயங்களாகக் கருதுகிறோம். அதிகரித்த இணைய இடர்களை முன்கூட்டியே முகாமை செய்வதற்காக, தேசிய சேமிப்பு வங்கி சட்டம், வாடிக்கையாளர் சாசனம் மற்றும் எமது தகவல் முறைமை பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தியுள்ளோம். எமது வளர்ந்து வரும், எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் முறைமைகளின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்கும் உறுதி செய்வதற்கும் வழக்கமான சோதனைகள் நடத்தப்படுகின்றன. இணையப் பாதுகாப்பு இடர் முகாமை தொடர்பாக எடுக்கப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளை சபைக்கு சுயாதீனமாக கண்காணிக்கவும் தெரிவிக்கவும் ஒரு பிரத்தியேக தகவல் பாதுகாப்பு அதிகாரியை (ISO) வங்கி பயன்படுத்துகிறது.

2022 ஆம் ஆண்டில் நாங்கள் பல புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ள, அதே சமயம் அறிக்கையிடல் காலத்தில் ஏற்கனவே பின்பற்றப்பட்ட பின்வருவன போன்ற தரவு பாதுகாப்பு நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து வருகிறோம்:

- உயிரியல் அளவீடுகள் மூலம் பாதுகாக்கப்பட்ட பயன்பாட்டுப் பட்டியல் கட்டணத் தெரிவுகள் மற்றும் பணமல்லா பரிவர்த்தனைகளுக்கான QR குறியீடு ஸ்கேனிங் ஆகியவற்றுக்காக தேசிய சேமிப்பு வங்கி கைத்தொலைபேசி வங்கியியலை வசதியளித்து மேம்படுத்துதல்
- 2022 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான வருடாந்த இணக்கப்பாட்டு சான்றளிப்புடன், 2019 இல் கட்டண அட்டை தொழில் தரவு பாதுகாப்பு நியமம் (PCI DSS) சான்றிதழைப் பெறுதல். தொழிநுட்ப இடர் நிலைத்ததன்மை குறித்த மத்திய வங்கியின் ஆலோசனைத் தாளில் தேவைகளை அடைவதற்கான தயார்நிலையைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட தேவைகளை வங்கி அடைந்துள்ளது. இது தகவல் பாதுகாப்பு முகாமை முறைமையை மேம்படுத்தியதுடன், வழக்கமான முகாமை குழு மதிப்பாய்வுகள் மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுகள் மூலம் செயற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் மேலும் தொடரும்.
- ஒரு வினைத்திறனான மூன்றாம் தரப்பு சேவை வழங்குநரின் ஆதரவுடன் 2020 இல் நிறுவப்பட்ட மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு செயற்பாட்டு மையத்தின் (SOC) தொடர்ச்சியான செயற்பாடு, சமீபத்திய இணைய அச்சுறுத்தல் நுண்ணறிவு மற்றும் சமீபத்திய பாதுகாப்பு தீர்வுகள் மற்றும் தொழிநுட்பங்களைப் பற்றிய புதுப்பித்த நிலையில் உள்ளது.
- தொகுதிச் சங்கிலி தொழிநுட்பத்துடன் E-KYC தொடங்கப்பட்டது. புதிய வாடிக்கையாளர்களுக்கு வங்கிக் கிளைக்குச் செல்லாமலே இணைய வழியில் விரைவாகப் பதிவுசெய்யும் வகையில், எண்ணியல் தரையிறக்கம், கணக்குப் புத்தகம் இன்றியே கணக்கைத் திறக்க உதவுகிறது. இந்தச் செயற்பாட்டில் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுதல் (KYC) நடைமுறைகள், தரவு சேகரிப்பு, அடையாளச் சரிபார்ப்புகள், ஆவணச் சேகரிப்பு மற்றும் வருங்கால வாடிக்கையாளருடன் காணொளி மாநாடு ஆகியவை உள்ளடங்கும்.
- தரவுக் கசிவு தடுப்பு (DLP) – தகவல் பாதுகாப்புப் பிரிவு (ISD) தகவல் தொழிநுட்பப் பிரிவின் ஆதரவுடன் 2020 ஆம் ஆண்டில் தரவைப் பாதுகாத்துப் பேணவும் விதிமுறைகளுக்கு இணங்கவுமென DLP மற்றும் தரவு வகைப்பாடு தீர்வைச் செயற்படுத்தியது. 2022 ஆம் ஆண்டில், வங்கியின் அனைத்து தகவல் தொழிநுட்ப முறைமைகளையும் உள்ளடக்கும் வகையில் DLP தீர்வுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.
- மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படும் வகையில் முழு வலையமைப்பினையும் இடரில் ஆழ்த்துவதைத் தவிர்ப்பதற்காக வலையமைப்பில் உள்ள அனைத்து முறைமைகளுக்கான நியமங்களான அடிப்படை பாதுகாப்பு நியமங்கள் (BSS) கிளை வலையமைப்பு முழுவதும் செயற்படுத்தப்பட்டன. இந்த அடிப்படைகள் வங்கியானது திறமையான மற்றும் தரப்படுத்தப்பட்ட முறையில் முறைமைகளை செயற்படுத்த உதவும்.

2022 ஆம் ஆண்டில் எமது பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்ட எமது வாடிக்கையாளர்களின் தகவல் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதன் மூலம் எமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை நிலைநிறுத்துவதற்கான எமது தொடர்ச்சியான, உயர்ந்த முயற்சிகளின் விளைவாக, வாடிக்கையாளர் தனியுரிமை மீறல் அல்லது வாடிக்கையாளர் தரவு இழப்பு அல்லது பிற முறைப்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வங்கி மீது எந்த அபராதங்களும் விதிக்கப்பட்டவில்லை.

வாடிக்கையாளர் பின்னூட்டங்களை மதிப்பிடுதல்

வாடிக்கையாளர்களின் பின்னூட்டங்களை நாங்கள் மதிப்பதுடன், வாடிக்கையாளர் பயணத்தின் போது அவர்களின் கருத்துக்களை செவிமடுத்து, அவர்களின் கரிசனைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் அவர்களின் வங்கி அனுபவங்களை மேம்படுத்த முயல்கிறோம். பெறப்பட்ட அனைத்து பின்னூட்டங்களும் வினைத்திறனாகக் கையாளப்பட்டு நியாயமான முறையில் தீர்க்கப்படுவதை நாங்கள் உறுதி செய்கிறோம். எமது வாடிக்கையாளர்கள் தங்கள் கரிசனைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ள திறந்த வழிமுறைகளை நாங்கள் பராமரிப்பதுடன், அனைத்து வாடிக்கையாளர் முறைப்பாடுகளையும் வினைத்திறனான முறையில் நிவர்த்தி செய்வதற்கான வலுவான முறைமையை செயற்படுத்தியுள்ளோம்.

வாடிக்கையாளர்கள் தங்களின் வினாக்கள், முறைப்பாடுகள், குறைகள் மற்றும் பிற பின்னூட்டங்களை 24*7 செயற்படும் தேசிய சேமிப்பு வங்கி அழைப்பு நிலையத்துக்கு அனுப்பலாம் - இதுவே வாடிக்கையாளர் ஈடுபாட்டின் பிரதான முறைமையாகவுள்ளது. அனைத்து வினாக்களையும் கையாளும் உயர் பயிற்சி பெற்ற வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகள் எம்மிடம் உள்ளனர், அவர்களால் அவை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்படும். ஆரம்ப அழைப்பின் போது உருவாக்கப்பட்ட ஒரு குறிப்பு எண்ணைக் கொண்டு வாடிக்கையாளர்கள் தங்கள் வினவல்களைப் பின்தொடரலாம். வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகள் மற்றும் அவற்றைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை ஒவ்வொரு மாதமும் தொகுக்கப்பட்டு முகாமைக்கு சமர்ப்பிக்கப்படும்.

“வங்கி முழுவதும்” பயிற்சித் திட்டத்தின் மூலம் தரமான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கும், வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கவனிப்பதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், எம்முடன் ஆழமான உறவுகளை ஏற்படுத்துவதற்கும் அவர்களுக்குத் தேவையான திறன்களை வழங்குவதற்காக, எமது நாடு தழுவிய கிளை வலையமைப்பு முழுவதும் எமது ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளோம். எமது செயற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த கருத்துக்கான பரிந்துரை பெட்டிகளுடன் கிளைகளும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், எமது அதிகாரப்பூர்வ இணையதளமான www.nsb.lk, உத்தியோகபூர்வ சமூக ஊடகங்கள் மற்றும் மின்னஞ்சல், ஸ்கைப் மற்றும் இணைய அரட்டை போன்ற பிற எண்ணியல் வழிமுறைகள் உட்பட வாடிக்கையாளர் குறைகளை முன்னோக்கி அனுப்ப ஏராளமான எண்ணியல் தளங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

வாடிக்கையாளர் ஈடுபாட்டுப் புள்ளிவிபரங்கள்



பெறப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை

252 (2021 – 269)

தீர்க்கப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை

194 (2021 – 228)



அழைப்பு ஒன்றுக்குப் பதிலளிக்கத் தேவைப்பட்ட சராசரி நேரம்

< 30 செக்கன்ஸ்

(2021 < 30 செக்.)



தொலைபேசி மூலம் பெறப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை

378,856 (2021 – 441,569)

மத்திய வங்கிக்கான முறைப்பாடுகளின் எண்ணிக்கை

ஏதுமில்லை (2021 – ஏதுமில்லை)



பயன்பாட்டிலுள்ள அட்டைகளின் எண்ணிக்கை

2,203,309

(2021 – 2,041,842)

பொறுப்புணர்வு மிக்க வங்கியியல்

GRI 417-2,3

செழிப்பை உருவாக்கும் பின்வரும் பொருளாதார நடவடிக்கைகளை செயற்படுத்துகிறோம்:

- வாடிக்கையாளர் மற்றும் சமூக தேவைகளுடன் இணைந்த உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குதல்
- பயனுறுதிமிக்க மற்றும் பொருத்தமான முறையில் பின்னூட்டங்களுடன் தொடர்புபடுதல்
- வாடிக்கையாளர்களைப் புரிந்து கொள்வதற்கும், தரமான சேவையினை வழங்குவதற்குமான வகையில் எமது ஊழியப்படையின் திறன்தேர்ச்சியினை கட்டியெழுப்புதல்.
- நன்றாக தரவளிக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்காக பல்வேறு வழிமுறைகள் மூலமாக எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்புபட்ட தகவல்களை உரிய நேரத்தில், தெளிவான மற்றும் பொருத்தமான வகையிலான தொடர்பாடல்களை மேற்கொள்ளுதல
- வட்டி விகிதங்கள், நாணயமாற்று விகிதங்கள் மற்றும் கடன் வழங்கல் விகிதங்கள் போன்ற கடன் மற்றும் வைப்பு தொடர்பான அனைத்துப் பொருத்தமான தகவல்களையும் கிளைகளில் காட்சிப்படுத்தல், மின்னணு ஊடகங்கள் மற்றும் நிறுவன இணையதளம் போன்றவற்றின் மூலம் காட்சிப்படுத்தல்
- உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு பொருந்தக்கூடிய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகள் ஆகியன மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின்படி முறையாக வாடிக்கையாளர்களுக்குத் தொடர்பாடல் செய்யப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, நிதிக் குறைகேள் அதிகாரி மூலமான வங்கியின் குறை முறைப்பாடு நிவர்த்தி செயன்முறை அனைத்து கிளைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்தல் மற்றும் குறியிடல்

வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, நிதிக் குறைகேள் அதிகாரி மூலமான வங்கியின் குறை முறைப்பாடு நிவர்த்தி செயன்முறை அனைத்து கிளைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு (RTI) இணங்க வங்கியிடமிருந்து தொடர்புடைய தகவல்களைப் பெறுவதற்கு எமது அனைத்து அக்கறைதாரர்களுக்கும் பொது மக்களுக்கும் உரிமை இருப்பதை உறுதி செய்வதற்காக தேசிய சேமிப்பு வங்கியினால் பொதுத் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த விதிமுறைகளுக்கு இணங்க, தேசிய சேமிப்பு வங்கியின் அனைத்து விளம்பரங்களும் பின்வரும் தகவல்களைக் கொண்டுள்ளன:

- எமது அழைப்பு நிலையம் மற்றும் நிறுவன இணையத்தள முகவரியின் தொடர்பு விபரங்கள்
- வங்கியின் கடன் தரப்படுத்தல் – லங்கா ரேட்டிங் ஏஜென்சி (பிரைவேட்) லிமிடெட்.
- தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவமான அம்சம் – 100% அரச உத்தரவாதம், வங்கி இலச்சினை லோகோ மற்றும் தாரக மந்திரம் ஆகியவை

2022 ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் சேவைத் தகவல் குறியிடல் தொடர்பான இணக்கமின்மை சம்பவங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களின் இணக்கமின்மை சம்பவங்கள் எதுவும் பதிவாகியிருக்கவில்லை.

2 வலுவான பங்குடமைகளை உருவாக்குதல் - வணிக பங்காளர் மூலதனம்

வணிக பங்காளர் மூலதனம் என்பது நிறுவனத்திற்கு பெறுமதி சேர்க்கும் பரஸ்பர உறவுகள் மற்றும் கூட்டணிகளை உள்ளடக்கியிருப்பதுடன், அதன் மூலம் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வெற்றிகரமாக வழங்குவதற்கு பங்களிக்கிறது. நிதிச் சேவைத் துறையில், வணிகப் பங்காளர்கள் என்பது நிருபர் வங்கிகள், பரிமாற்ற வீடுகள், புறவழங்கல் சேவை வழங்குநர்கள் மற்றும் பிற வழங்குநர்களை உள்ளடக்கும்.

வணிகப் பங்காளர் மூலதனத்திற்கான எமது அணுகுமுறை

வணிகப் பங்குடமைகள் தேசிய சேமிப்பு வங்கியில் வளர்ச்சிக்கான பாதைகளாக கருதப்படுகின்றன. எமது வணிகப் பங்காளர்களுடன் நிலைபேறான உறவுகளைப் பேணுவதற்கும், தொழிற்பாட்டு ஒருங்கிணைவு விளைவுகள், சந்தை அணுகல் மற்றும் வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றின் மூலம் பரஸ்பர பெறுமதியை உருவாக்கவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம், இவை அனைத்தும் வர்த்தகநாம ஒருங்கிணைப்பை உருவாக்குவதற்கு பங்களிக்கின்ற அதே நேரத்தில் வங்கியின் ஒட்டுமொத்த இலாபத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிக்கும். வங்கிக்கும் அதன் பங்காளர்களுக்கும் இடையிலான அனைத்து பரிவர்த்தனைகளும் நெறிமுறை, நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில், ஒட்டுமொத்த செயன்முறையை நிர்வகிக்கும் கூட்டாண்மை ஆளுகைக் கொள்கைகளுக்கு இணங்க நடத்தப்படுகின்றன.

பெறுமதியை உயர்த்துவதற்கான உத்திகள

- ஒத்துழைப்புகள் மூலம் புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்குதல்
- உலகளாவிய மூலப்பிரமாணங்களுடன் இணைந்த வெளிப்படையான மற்றும் நிலைபேறான கொள்முதல் நடைமுறைகளைத் தொடர்தல்
- சேவை வழங்கப்படாத மக்கள் குழுக்களிடையே பரந்த அடைவை ஏற்படுத்தத்தக்க வகையில் தந்திரோபாய இணைப்புக்களைக் கட்டியெழுப்புதல்.

பலமான பங்குடமைகளை கட்டியெழுப்புவதற்கான பெறுமதியை உருவாக்கும் இயக்கிகள்

- பெறுப்புணர்வுமிக்க கொள்முதல்
- புறவழங்கல் மூலமாக தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்
- தந்திரோபாயக் கூட்டிணைவுகளைப் பலப்படுத்தல்
- தொழிற்துறை உறுப்புரிமைகள்

பொறுப்புணர்வுமிக்க கொள்முதல்

GRI 204-1

பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டணிகளை உருவாக்குதல் மற்றும் வாய்ப்பை உருவாக்குவதன் மூலம் பெறுமதியைச் சேர்த்தல் என்பன தேசிய சேமிப்பு வங்கி ஒரு நம்பகமான பங்காளராக உறுதியான நற்பெயருக்கு உத்தரவாதம் அளித்துள்ளதுடன், ஆழமான வேரூன்றிய வணிக கூட்டணிகளுக்கு பங்களிக்கிறது. இதன் விளைவாக, தரம், சேவை மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றின் மிக உயர்ந்த நியமங்களைக் கடைப்பிடிக்கும் கொள்முதல் செயல்முறையால் ஆதரவளிக்கப்படும் நிலைபேறான வழங்கல் சங்கிலியை தேசிய சேமிப்பு வங்கி உருவாக்கியுள்ளது. அறிக்கையிடல் காலத்தில், பின்வருவனவற்றை விளைவாகத் தரக்கூடிய எமது வலுவான கொள்முதல் செயன்முறை மூலம் நாங்கள் தொடர்ந்து மூலங்களை வழங்கியிருந்தோம்:

- பொருளாதார பெறுமதியை மற்றும் கொள்முதலில் வினைத்திறனை உச்சப்படுத்தல்
- அனைத்து வழங்குநர்களும் இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட தேசிய கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை உறுதிசெய்யும் அதேவேளை தொடர்புடைய நியமங்கள், விபரக்குறிப்புகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்குதல்
- ஆர்வமுள்ள தரப்பினருக்கு கொள்முதலில் பங்கேற்பதற்கு நியாயமான மற்றும் சமமான வாய்ப்பை வழங்குதல்
- பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை விரைவாக நிறைவேற்றுதல்
- கேள்வி கோருனரால் வழங்கப்படும் தகவல்களை இரகசியத்தன்மை வாய்ந்த வகையில் பேணும் அதேவேளை, வெளிப்படையான முறையில் வழங்குனர்களை ஆய்வு செய்து தெரிவு செய்தல்

வெவ்வேறு கொள்முதல் தேவைகளுக்கு பின்பற்ற வேண்டிய பல்வேறு நடைமுறைகளை வங்கி தெளிவாக குறிப்பிடுகிறது. வங்கியின் வழங்கல் பிரிவு கொள்முதல்களை மேற்கொள்ள, கொள்முதல் நடைமுறைகள் இயக்குநர்கள் குழு, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது பிரதிநிதித்துவ அதிகாரத்தால் நியமிக்கப்பட்ட அந்தந்த கொள்முதல் குழுக்கள், தொழிற்திறன் மதிப்பீட்டுக் குழு மற்றும் கேள்வி திறத்தல் குழு ஆகியவற்றால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. ஆரம்ப சூழல் மதிப்பீடுகள் (IEE), சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIA) ஆகியவற்றைக் கண்காணித்து உறுதிப்படுத்துதல் மற்றும் தேவைப்படும்போது அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெறுதல் ஆகியவை கொள்முதல் பிரிவின் பொறுப்பாகும். எமது கொள்முதல் செயன்முறையில் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பரிசீலனைகளை ஒருங்கிணைத்துள்ளதுடன், மற்றைய மூலப்பிரமாணங்கள் சேவைகள் அல்லது உற்பத்திகளின் தரம், போட்டி விலை நிர்ணயம், அனுபவம் மற்றும் திறன், நிதி உறுதிப்பாடு, நெகிழ்வுத்தன்மை மற்றும் திறன் மற்றும் சட்டத் தேவைகளுக்கு இணங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.


வங்கியின் தொடர்பாடல் கொள்கையானது அனைத்து வணிகப் பங்காளர்களுக்கும் பொருந்தும் வெளிவாரி தொடர்பாடல் நெறிமுறைகளை வினைத்திறனாகக் கோடிட்டுக் காட்டுகிறது. அனைத்து வணிகப் பங்காளர்களுடனும் நாங்கள் எமது பரிவர்த்தனைகளை வெளிப்படையான, பொறுப்பான, பொறுப்புணர்வு மற்றும் நிலைபேறான முறையில் கையாளுகிறோம்.

2022 ஆம் ஆண்டில், உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து 100% ஆன பொருட்கள் மற்றும் சேவைகளைத் தொடர்ந்து கொள்வனவு செய்து, மொத்தம் ரூ. 906.1 பில்லியனைக் கொள்முதலில் செலவிட்டுள்ளோம். 2022 இல் வங்கியின் மாறிவரும் தேவைகளை முகம் கொடுப்பதன் மூலம் எமது கொள்முதல் திட்டத்தின் வருடாந்த புதுப்பிப்பை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

புற வழங்கல் மூலம் தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்

GRI 302-1, 303-5

வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களைத் தவிர, நிலையான சொத்துக்கள், நுகர்வுப் பொருட்கள், பரிசுப் பொருட்கள், அச்சிடுதல், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் கட்டுமான சேவைகள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் ஆலோசனை உதவி ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தேசிய சேமிப்பு வங்கி வெளிவாரி வழங்குனர்களின் சேவைகளைப் பெறுகிறது.



மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், நாங்கள் ரூ. 450.8 மில்லியன் தொகையினை ஒப்பந்த அடிப்படையில் வங்கியில் பணிபுரியும் ஊழியர்களை உள்ளடக்கிய எமது புறவழங்கல் சேவை வழங்குநர்களுக்காக செலவிட்டுள்ளோம். புறவழங்கல் குறித்த வழிகாட்டுதல்களை வழங்குவதற்கென புறவழங்கல் கொள்கையொன்றினை நாங்கள் வைத்திருப்பதுடன், புறவழங்கல் செயற்பாடு, சேவை, செயன்முறை அல்லது செயற்பாடு மற்றும் அதைச் செயற்படுத்துவதற்கான தேவையை மதிப்பிடுவதற்கான மூலப்பிரமாணம் ஆகியவற்றை அது குறித்துரைக்கும்.

தந்திரோபாய இணைப்புக்களை வலுப்படுத்தல்

தேசிய சேமிப்பு வங்கி நியோ வரவு அட்டைகளுக்கான பண மீளளிப்பு சலுகையை மேம்படுத்துதல்

- தேசிய சேமிப்பு வங்கியின் 50வது பொன்விழாவை ஒட்டி, இலத்திரனியல் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும்போது பண மீளளிப்பு மற்றும் கழிவு வழங்கல் திட்டமானது, தேசிய சேமிப்பு வங்கி வரவு அட்டைகளின் விற்பனைப் புள்ளி (POS) மற்றும் இலத்திரனியல் வணிக பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படுகிறது.

தொழிற்துறை உறுப்புரிமைகள்

பல ஆண்டுகளாக, இலங்கையின் வங்கித் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் எமது பங்கைக் கருத்தில் கொண்டு, நிதிச் சேவைகள் மற்றும் இடைநிலையை மிகவும் திறமையாக வழங்குவதற்காக, தொழில்துறையினருடன் நீண்டகால உறவுகளை தேசிய சேமிப்பு வங்கி வளர்த்து வருகிறது. தொழில்துறை சவால்களைத் தீர்ப்பதற்கும் சாதகமான செயற்பாட்டு சூழலை உருவாக்குவதற்கும் பின்வரும் நிறுவனங்களில் நாங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளோம்:

- தேசிய வர்த்தக சம்மேளனம்
- லங்கா கிளியர் பிறைவேற் லிமிட்டட
- இலங்கை தொழில்தருனர் சம்மேளனம்
- உலகளாவிய வங்கியிடை சமூகம்
- நிதிசார் தொடர்பாடல் (SWIFT)
- இலங்கை SWIFT பயனர் கழகம்
- Eurogiro பூகோளக் கொடுப்பனவு சமூகம்
- உலக சேமிப்பு வங்கி நிறுவனம்

3 ஒழுங்குமுறைசார் இணக்கப்பாட்டை வலுப்படுத்துதல் – ஒழுங்குமுறை மூலதனம்

ஒழுங்குமுறை மூலதனம் என்பது வெளிப்படும் இடர்களைத் தவிர்ப்பதற்கும், இழப்புகளைப் பரவலாக்கவும், அக்கறைதாரர்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கும், அதிகப்படியான சொத்து வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கும், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும் அதன் நிதி ஒழுங்குவிதிமுறையாளர்களினால் தேவைப்படுத்தப்படும் நிதி வளங்களின் பெறுமதியாகும்.

ஒழுங்குமுறை மூலதனத்துக்கான எமது அணுகுமுறை

அரசுக்குச் சொந்தமான உரிமம் பெற்ற விசேட வங்கியாக அனைத்து ஒழுங்குமுறைத் தேவைகளைப் பின்பற்றுவதற்கும், வாடிக்கையாளர் நம்பிக்கையை வளர்ப்பதற்கும், நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பதற்கும் சிறந்த நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு வங்கி உறுதிபூண்டுள்ளது. வணிக நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச நியமங்களுடன் வங்கி இணங்குகிறது, இதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் நிலையான மற்றும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

பெறுமதியை அதிகரிப்பதற்கான உத்திகள்

- ஒழுங்குமுறை மாற்றங்களைக் கண்டறிதல், மதிப்பிடுதல் மற்றும் பதிலிறுப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்
- தொழிற்பாட்டு மீள்திறனை வலுப்படுத்துதல்
- அழுத்த சோதனை நியமங்களை மதிப்பாய்வு செய்தல்
- தாக்க சகிப்புத்தன்மையை மேம்படுத்துதல்
- செயற்பாட்டு அளவீடுகளை சீராக்குதல்
- தொழிற்துறை ஒழுங்குவிதி நடவடிக்கைகளில் பங்குபற்றல் (ஆலோசனை ஆய்வுகள்)

ஒழுங்குவிதி இணக்கப்பாட்டை பலப்படுத்துவதற்கான பெறுமதி சேர்க்கும் இயக்கிகள்

- ஒழுங்குவிதிகளுடன் நிலைத்த இணக்கப்பாடு
- பணத்தூய்மையாக்கலுக்கு, ஊழல் மற்றும் இலஞ்சத்துக்கு எதிரான நடவடிக்கைகள்
- வலுவான ஆளுகை மற்றும் விவேகமான இடர் முகாமை
- அரசுக்கான பங்களிப்புகள்

GRI 205-2, 205-3, 206-1

ஒழுங்குவிதிமுறைகளுடன் தொடர்ந்து இணங்குதல்:

- பின்வரும் சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றல்
  - 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
  - 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
  - நிதி பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டம்
  - செலாவணி கட்டுப்பாட்டு சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் (CBSL) பிறப்பிக்கப்பட்ட அனைத்து ஒழுங்குமுறைகளும்.
- பின்வரும் சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றல்
  - நிதி அமைச்சு
  - உள்நாட்டு இறைவரி திணைக்களம்
  - கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்
  - சட்டமா அதிபர் திணைக்களம்
  - இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை
  - பாராளுமன்றம்
- பணமோசடி, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான கண்டறிதல் தொடர்பான வங்கியின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுடனான இணக்கப்பாடு பற்றிய காலரீதியான தகவல்களை சமர்ப்பித்தல்.

பணமோசடி, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள்

- எண்ணியல் மயமாக்கல் காலத்தில் மூன்று முக்கிய இடர் பகுதிகள்:
  - இணையவழிப் பாதுகாப்பு
  - மோசடி தடுப்பு
  - பணத்தூய்மையாக்கல் எதிர்ப்பு
- வாடிக்கையாளர்களை மோசடியில் இருந்து பாதுகாக்க வலுவான இடர் முகாமை முறைமை,
- இணையவழிக் குற்றம், பணத்தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வது தொடர்பான சந்தேகத்திற்கிடமான செயல்களை கண்டறிந்து அறிக்கையிடுவதன் மூலம் ஒழுங்குவிதியாளர்களுக்கு உதவுதல்.
- ஊழல், போட்டி-எதிர்ப்பு நடத்தை, நம்பிக்கை-எதிர்ப்பு, ஏகபோக நடைமுறைகள் மற்றும் உற்பத்தி மற்றும் சேவைகளின் பயன்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்காமை காரணமாக அபராதம் விதிக்கப்பட்ட அல்லது கண்காணிப்பு அல்லாத தடைகள் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் எதுவுமே மதிப்பாய்வுக்கு உட்படும் ஆண்டின்போது பதிவாகவில்லை.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

பலமான ஆளுகை மற்றும் விவேகமான இடர் முகாமை

- இறுக்கமான ஆளுகை முறைமை மற்றும் கடுமையான இடர் முகாமைக் கொள்கையைப் பேணுதல்
- குறுகிய முதல் நடுத்தரகால தந்திரோபாய முன்னுரிமையாக இடர்க் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்
- அக மற்றும் புற சூழல்களில் இருந்து எழும் இடர்களை திறம்பட முற்துணியும், முகாமை செய்யும் மற்றும் குறைக்கும் வலுவான இடர் கலாச்சாரத்தை பின்பற்றல்

இலங்கை அரசுக்கான பங்களிப்புக்கள்

- அரசு சார்பில் வரிகளை செலுத்துதல் மற்றும் வசூலித்தல்.
- எமது ஊழியர்களின் சார்பாக மற்றும் அவர்கள் பெயரில் செலுத்த வேண்டிய அனைத்து தொடர்புடைய வரிகளையும் செலுத்துதல்
- அரசு மற்றும் பிற தொடர்புடைய ஒழுங்குமுறை மற்றும் சட்டப்பூர்வ அதிகாரசபைகளுக்கு பொருந்தக்கூடிய அனைத்து சட்டரீதியான நிலுவைகளையும் செலுத்துதல

4 வளரும் சமூகங்களை உருவாக்குதல் – சமுதாய மூலதனம்

GRI 203-1, 413-1

சமுதாய மூலதனம் என்பது நிலைபேறான வளர்ச்சிக்காக உள்நாட்டு சமூகங்கள் ஈர்க்கக்கூடிய பகிரப்பட்ட பெறுமதிகள் மற்றும் வளங்களின் தொகுப்பாகும். இது பெரும்பாலும் பரோபகாரத்துடனான உறவுகளுடன் பொது நல்லெண்ணமாக பார்க்கப்படுவதுடன், பரஸ்பர நன்மைக்காக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவனத்தை எளிதாக்குவதற்கு சமூகங்களுக்குள் நம்பிக்கை, இணைப்பு மற்றும் பரஸ்பரத்தை வளர்க்க உதவுகிறது.

சமுதாய மூலதனத்திற்கான எமது அணுகுமுறை

அரசுக்குச் சொந்தமான வங்கியாக எமது பொறுப்பை உணர்ந்து, எமது சமூகங்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த முயலும் பல வழிகளில் நாம் அதிக அளவில் முதலீடு செய்கிறோம். பின்தங்கிய சமூகங்களுக்கு அவர்களின் சேமிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதிச் சேவைகளுக்கான அணுகலை வழங்குவதற்கு மேலாக, பிற பரோபகார முயற்சிகளில் கல்வி, கலை மற்றும் கலாச்சாரம் மற்றும் சமூக நலன் ஆகியவற்றில் வெற்றி பெறுவதன் மூலம் நிலைபேறான சமூக வளர்ச்சிக்கு நாம் ஆதரவளிக்கிறோம்.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை ஒரு வழிகாட்டுதலாகக் கொண்டு, நீண்டகால சமூகத் தாக்கத்தை உருவாக்க சமூக முயற்சிகளை நாங்கள் வகுத்து செயற்படுத்துகிறோம், அதே நேரத்தில் எமது நோக்கம் மற்றும் எமது வர்த்தக நாமத்துடன் இந்த முயற்சி ஒத்துழைப்பதன் அடிப்படையில் பரந்த அளவிலான வெளிப்புற முறைமைகளையும் நாம் ஆதரிக்கிறோம். எமது பங்களிப்புகள் பெரும்பாலும் நிதி உதவியாக வழங்கப்படுவதுடன், தேவையான போது, எமது துறைசார் நிபுணத்துவத்தால் நிரப்பப்படுகிறது. வங்கி அதன் சமூக மேம்பாட்டுத் திட்டங்களின் செயற்திறன் மற்றும் தாக்கத்தை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

பெறுமதியை உயர்த்துவதற்கான தந்திரோபாயங்கள்

- தொண்டு முயற்சிகள் மற்றும் முதலீடுகளுக்கான சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளைக் கவனத்திற்கொள்ளல்
- தன்னார்வத் தொண்டு செய்வதற்கும் சமூகத் திட்டங்களைத் தொடங்குவதற்கும் ஊழியர்களை ஊக்குவித்தல்
- சிறுபான்மையினர் மற்றும் வங்கியியலிலீடுபடாத, குறைந்த வங்கி வசதியுள்ள மற்றும் பின்தங்கிய குழுக்கள் மீது அதிக கவனம் செலுத்துதல்
- தொழிற்பாட்டு உள்நாட்டு சமூகங்களுக்குள் குடியியல் ஈடுபாட்டை மேம்படுத்துதல்

சமுதாய மூலதனத்தை மேம்படுத்துவதற்கான இயக்கிகளை உருவாக்குதல்

- தேசிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான தந்திரோபாயக் கூட்டணி
- கலைகள், கலாச்சாரம் மற்றும் ஆன்மீக செயல்பாடுகளின் தேசிய மறுமலர்ச்சிக்கு ஆதரவு அளித்தல்
- அக மற்றும் புற அக்கறைதாரர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்தல்
- அதிகாரமளித்தல் மற்றும் /அல்லது உதவிக்கான சமூக சேவைத் திட்டங்களை ஆரம்பித்தல்

GRI 203-1, 413-1

நிகழ்ச்சித்திட்டம்	குறிக்கோள்கள்	விளக்கம் / கட்டம்	முதலீடு	பயன்பெறுனர்கள் மற்றும் விளைவு	ஊழியர் ஈடுபாடு
தேசிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான தந்திரோபாயக் கூட்டணியை உருவாக்குதல்					
"ஆங்கிலம் இலகுவானது" – இலங்கை கல்வி அமைச்சின் ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பிரிவின் ஒத்துழைப்புடனான தரமான கல்வி முன்முயற்சியின் கீழ்	பாடசாலை மாணவர்களது (தரம் 8-11) ஆங்கில வாசிப்பு, எழுத்து, அவதானித்தல் மற்றும் பேச்சுத் தின்களை வளர்க்க, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழிப் பெறுபேற்றை மேம்படுத்த. ஆங்கில மொழி மூலமான போட்டிகளில் மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்க. மாணவர்களை அவசியமான மொழித்திறன் மட்டங்களுக்கு விருத்தி செய்ய தேவையான வழிகாட்டல் மற்றும் உபகரணங்களை ஆசிரியர்களுக்கு வழங்கி அவர்களது இயலளவையும் அறிவையும் அதிகரித்தல்	11 அக்டோபர் 2019 அன்று கல்வி அமைச்சுடன் தேசிய சேமிப்பு வங்கி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கியதுடன், 29 அக்டோபர் 2019 அன்று நாடளாவிய அனைத்து கல்விப் பணிப்பாளர்களுக்கும் செயற்திட்ட விளக்கம் அளிக்கப்பட்டது. **2022 தேர்ச்சி** ஒரு நிபுணர் வளவாளர் குழு ஐந்து கருத்தமர்வுகளில் பாடத்திட்டத்துக்கான உள்ளடக்கத்தை (செயற்பாடுகள், மாதிரிப் பரீட்சைகள் மற்றும் கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்) தயாரித்தது. பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் மாதிரிப் பரீட்சை புத்தகம் ஆகியன அச்சுக்குத் தயாராகவுள்ளன. புத்தகத்தின் நிகழ்நிலைப் பிரதி கல்விக்கான தேசிய கற்றல் தளமான "இ-தக்சலாவ" வில் கிடைக்கத்தக்கதாகவுள்ளது.	ரூபா 8 மில்லியன், 3 ஆண்டுகளுக்கு	81 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 8, 9, 10 மற்றும் 11 இலுள்ள 40,000க்கு மேற்பட்ட மாணவர்கள் மற்றும் 500 ஆசிரியர்கள் அடையப்பட்டனர். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழிக்கான சித்திவீதம் அதிகரிக்கப்பட்டது.	சந்தைப்படுத்தல் பிரிவுக்கு நியமிக்கப்பட்டவர்கள் பின்வருவனவற்றை ஒழுங்குபடுத்தி பாடத்திட்டத்தைத் தயாரிப்பதில் ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பிரிவினைத் தொடர்புகொண்டனர்: • ஆசிரியர் பயிற்சியளித்தல் • அமர்வுகள் • தொடர்பாடல் முறைகளை உருவாக்கல • மாணவர் அமர்வுகள் நடைமுறைப்படுத்தல் கட்டத்தில், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அண்மையிலுள்ள கிளை முகாமையாளர்கள் செயற்றிட்டத்தின் காலரீதியான மதிப்பீட்டிற்கு தகவல்களை வழங்குவதில் பங்கேற்பர்.
அக மற்றும் புற அக்கறையுள்ள தரப்பினரிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தல்					
2022 தமிழ், சிங்களப் பத்தாண்டு காலத்தில் *"நெகத்தட்ட பலயக்"* தேசிய மரநடுகை முன்முயற்சியில் பங்கேற்றல்	இலங்கையில் நகர்ப்புற வனவாக்கத்தை அதிகரிக்கும் தேசிய முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்	ஒரு நேர்க்கணிய சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் கார்பன் தடத்தைக் குறைப்பதில் வங்கியின் ஈடுபாட்டைக் காட்டும் முயற்சியை தேசிய சேமிப்பு வங்கி தொடர்ந்தது.	ரூபா 3.2 மில்லியன்	தேசிய பசுமை முயற்சிகளில் பொது சமூகம் மற்றும் நிகழ்ச்சிப் பங்கேற்பாளர்களைப் பயனடையச் செய்தல். சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுமிக்க வங்கி என்ற வகையில் நாம் வர்த்தகநாம உரிமையைப் பெற்றோம்.	தொடர்பற்றது
வலுவாக்கம் மற்றும்/அல்லது உதவிக்காக சமுதாய சேவை செயற்றிட்டங்களை உருவாக்குதல்					
கொழும்பு மாவட்டத்தில் ப்ரக்ன ப்ரதீப நிலையத்தில் மாணவர்களுக்கு இலவச நூல்கள் மற்றும் சீருடைகளை வழங்குதல் நிகழ்ச்சித்திட்டம்	உள்ளடக்கமான மற்றும் சமத்துவமான தரம் வாய்ந்த கல்வியை வழங்குவதை உறுதிசெய்தல் குறிக்கோள்கள்			தொடர்பற்றது	தொடர்பற்றது

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

நிகழ்ச்சித்திட்டம்	குறிக்கோள்கள்	விளக்கம் / கட்டம்	முதலீடு	பயன்பெறுனர்கள் மற்றும் விளைவு	ஊழியர் ஈடுபாடு
முழுமையான அபிவிருத்திக்காக, கலை, கலாச்சார மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளின் தேசிய மீளெழுச்சிக்கு ஆதரவளித்தல்					
இலங்கையின் பாதுகாப்பு அமைச்சினால் 2022 இல் ஒழுங்குபடுத்தப்பட்ட வருடாந்த *ஜய பிரித்* ஓதுதல் நிகழ்வு	இலங்கை மீது ஆசிகளைப் பெறுதல் இறந்த போர்வீரர்கள், அங்கவீனமுற்ற போர்வீரர்கள் மற்றும் முப்படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆசியைப் பெறுதல் இராணுவ உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆன்மீக மற்றும் உளவியல் நலத்தைப் பெறுதல்	*"ஜய பிரித்"* ஓதும் நிகழ்வு நாடு முழுவதிலும் இருந்து வரவழைக்கப்பட்ட மகாநாயக்க மற்றும் அனுணாயக்க தேரர்களை உள்ளடக்கி 1,000 பிக்குமாரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.		இலங்கை இராணுவ உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர் இந் நிகழ்வில் பயனடைந்தனர் நாம் பாதுகாப்பு அமைச்சுடன் நெருக்கமான உறவுகளை உருவாக்கியதுடன், தே.சே.வங்கியின் சவிபல கணக்கு பற்றிய விழிப்புணர்வை இராணுவ உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர்களிடையே அதிகரித்தோம்.	தொடர்பற்றது
களனி *ரஜமகா* விகாரையின் 2022 துருது வருடாந்த பெருநாள்	இலங்கையின் நீண்டகால கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் மீளெழுச்சி, தொடர்ச்சி மற்றும் பின்பற்றலுக்கு ஆதரவளித்தல்	கொவிட் 19 தொற்றுநோய்க்கால சமூக விலகல் வரையறைகள் தளர்த்தப்பட்ட காலத்தில் நாடுமுழுவதும் பல கலாச்சாரப் பாரம்பரியங்களின் மீளெழுச்சிக்கு தே.சே.வ ஆதரவளித்தது. நிதிப் பங்களிப்புக்களை வழங்கியதுடன், கோவில் வளாகங்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் சமய செய்திகளுடன் கூடிய வங்கியின் பெயர்ப்பலகைகளை காட்சிப்படுத்தியது.		சமுதாயங்களுடன் இணைப்பைப் பலப்படுத்தல் மற்றும் பொது மக்களிடையே வர்த்தக நாம உரிமையை மேம்படுத்தல்	தொடர்பற்றது
கொழும்பு கங்காராமை ஆலயத்தின் 43வது நவம் மகா பெரஹர 2022					தொடர்பற்றது
கொள்ளுப்பிட்டி ஸ்ரீ வாலுக்காராமையின் 59வது வருடாந்த எசல மகா பெரஹர 2022					தொடர்பற்றது
ஸ்ரீ சசனலங்கார மகா விகாரையின் 27வது குளியாப்பிட்டி துருது மகா பெரஹர 2022					தொடர்பற்றது
சதகம் சிசில பௌத்த நிலையத்தில் நின்றநிலை புத்தர் சிலை உருவாக்குவதற்கான பங்களிப்பு	இலங்கையின் சமய மற்றும் கலாச்சார விருத்திகள் மற்றும் பாதுகாப்புக்கு ஆதரவளித்தல்			பக்தர்கள் மற்றும் வருகை தருவோரின் நன்மைக்காக பௌத்த நிலையத்தில் புதிய நின்றநிலை புத்தர் சிலை உருவாக்கப்பட்டது	தொடர்பற்றது
வாதுவை, தல்பிட்டிய போதி ரஜமகா விகாரையின் கட்டுமானங்களுக்கான பங்களிப்பு				சமயத்தவர், பக்தர்கள் மற்றும் வருகை தருவோரின் நன்மைக்காக போதி மரத்தை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.	தொடர்பற்றது

முற்றுமுழுதான அபிவிருத்திக்கான கலைகள், கலாச்சாரம் மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளுக்கான வலுவாக்கம் அல்லது உதவியளித்தல் சேவை செயற்றிட்டத்தின் உருவாக்கத்திற்காக அக மற்றும் புற அக்கறைதாரர்களது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான மொத்த முதலீடு ரூபா 3.2 மில்லியனாகும்.

அட்டவணை 20

2023 மற்றும் அதனைத் தாண்டிய எதிர்கால வாய்ப்புக்கள்

குறுகிய காலம்

- புதிய மைய வங்கியியல் முறைமை, கைத்தொலைபேசி கொடுப்பனவு செயலி மற்றும் புதிய தீர்வுகளின் நடைமுறைப்படுத்தலுடன், தொழிற்துறை நியமங்களுடன் இணங்கி, வாடிக்கையாளர் வசதித்தன்மை மற்றும் அடைதிறனை அதிகரிக்கும் நோக்கில் முற்றிலும் தன்னியக்கமாக்கப்பட்ட பாதுகாப்பான எண்ணியல் தளங்கள்

நடுத்தர காலம்

- வாடிக்கையாளர்களது பரிவர்த்தனைகளை இலகுபடுத்தும் வகையில் முற்றிலும் நெகிழ்வான எண்ணியல் வங்கியியல் தீர்வினை நடைமுறைப்படுத்தல்
- பொருளாதாரத்திலுள்ள வங்கியியலில் ஈடுபடாத மற்றும் வங்கி வசதி குறைவான மக்களுக்கு நிதியியல் உள்ளடக்கத்தை வழங்குதல்
- தெரிவு செய்யப்பட்ட ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைய உதவும் நிலைபேறான நிதி நடவடிக்கைகளைப் பின்பற்றல்

நீண்ட காலம்

- பாதுகாப்பான மற்றும் நிலைத்த நிதியியல் சூழல்முறைமைக்கு வசதியளித்தல்
- சமுதாயத்தில் நேர்க்கணிய தாக்கத்தை ஏற்படுத்தல்

எதிர்காலச் சான்றுறுதி மிக்க தந்திரோபாயத்துக்கான பங்களிப்பு

எதிர்பாராத மற்றும் வழக்கத்துக்கு மாறான அதிர்ச்சிகளைத் தாங்கி, நீடித்து நிற்கத்தக்க வளர்ச்சியை அடைவதற்கான உள்ளடக்கமான நிதியியல் தீர்வுகளை வழங்குதல்



இயற்கை மூலதனம்

GRI 201-2

எமது இயற்கை மூலதனத்தின் முக்கிய கூறுகள்

இயற்கை மூலதனமானது, நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து, அதன்மூலம் அதன் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பெறுமதியை உருவாக்கும் இயலுமைக்கு உறுதுணையாக இருக்கும் மீளுருவாக்கத்தக்க மற்றும் மீளுருவாக்க முடியாத வளங்கள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றைக் குறிக்கும். இது வளி, நீர், நிலம் மற்றும் அனைத்து உயிரினங்கள் மற்றும் சுற்றுச்சூழல் முறைமைகள் உள்ளடங்கலான உலகின் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச் சூழல் முறைமைகளினை உள்ளடக்கும்.

எமது சுற்றுச்சூழல் நோக்குப் பரப்பு



காலநிலை மாற்றம் மற்றும் மீண்டெழுதகமை



காபன் தடங்கள்



சக்தி



நீர்



கழிவு



பசுமைக் கட்டடம்



உயிர்ப் பல்வகைமை

முக்கிய உள்ளீடுகள்

- வளி
- நிலம்
- காடுகள்
- நீர்
- கனியங்கள்
- உயிர்ப் பல்வகைமை மற்றும் சுற்றுச்சூழல் முறைமை

முக்கிய சவால்கள்

- இயற்கை மூலதனம் மற்றும் பசுமைத் திட்டங்களை முகாமை செய்வதன் முக்கியத்துவம் தொடர்பில் அக்கறைதாரருக்கு விழிப்பூட்டல்
- அதிக மூலதனத்தைத் தேவைப்படுத்தும் பசுமை முன்முயற்சிகள்
- வங்கியின் சுற்றுச்சூழல் தாக்கங்களை அளவிடுவதிலான சிக்கல்
- வங்கியின் காபன் தடத்தைக் குறைப்பதிலுள்ள இடர்பாடுகள்
- எண்ணியல் மயமாக்கப்பட்ட வங்கி நடவடிக்கைகளைப் பின்தொடர்வதில் சில வாடிக்கையாளர்கள் குழுக்கள் எதிர்கொள்ளும் சவால்கள்
- விரும்பத்தகாத விளைவை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்கள்

முக்கிய வாய்ப்புக்கள்

- பசுமை உற்பத்திகள், பசுமை நிதி மற்றும் பசுமை கட்டிடங்கள் போன்ற பசுமை முயற்சிகளை ஊக்குவிக்க முடியும்
- வங்கியின் நீண்ட கால நிலைபேறான தன்மையைப் பேண வேண்டியதன் அவசியம், சுற்றுச்சூழல் தடம் குறைவதற்கான காரணத்தை வழங்குகிறது
- முன்கூட்டிய திட்டமிடல் தொழிற்பாடுகளின் குறைந்த சுற்றுச்சூழல் தாக்கங்களையே அனுமதிக்கும்.
- வினைத்திறன்மிக்க வளப் பயன்பாடு மூலம் செலவுகள் குறைக்கப்பட்டு வலுவான நிதி நிலைத்தன்மை ஏற்படும்

நாம் எமது இயற்கை மூலதனத்தை வளர்க்கும் முறை

1. சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டிடங்கள் மற்றும் பயனுறுதிமிக்க வள முகாமை ஆகியவற்றின் எண்ணக்கருவைத் தழுவி ஒரு நிலைபேறான உலகிற்குப் பங்களிப்பு செய்தல். நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, ஒருமைப்பாடு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் கொள்கைகளை நிலைநிறுத்தி, எமது நிறுவன கலாச்சாரம் மற்றும் வங்கி அணுகுமுறையில், பெறுமதிகள் அடிப்படையிலான நிறுவனமாக இருக்க முயற்சி செய்கிறோம்.
2. பொறுப்பான நுகர்வு
3. சுற்றுச்சூழலுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் எதிர்மறையான தாக்கத்தை குறைக்க எங்கள் கடன் நடைமுறைகளில் நிலைபேறான நிதியீட்டத்தை இணைத்தல்

முக்கிய வெளியீடுகள்

காபன் குறைந்த பொருளாதாரத்திற்கு ஆதரவு

வலை அளவீட்டிற்கு இணைக்கப்பட்ட கிளைகள்

46%

(2021 – 42%)

தேசிய மின் கட்டமைப்பிற்கு ஏற்றுமதி

344,347 kWh.

(2021 – 277,328 kWh)

பொறுப்புமிக்க நுகர்வு

தலா ஊழியருக்கான சக்தி நுகர்வு

6.45 GJ

(2021 – 7.27 GJ%)

தலா கிளைக்கான சக்தி நுகர்வு

111.52 GJ

(2021 – 128.50 GJ)

நீர் நுகர்வு

70,430 m^3

(2021 – 88,986 m^3)

நிலைபேறான நிதியீட்டம்

வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் கடன்களின் எண்ணிக்கை

3

(2021 – 9)

வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் கடன்களின் பெறுமதி

Rs. 5.8 மில்.

(2021 – Rs. 3.8 மில்.)

இயற்கை மூலதனம்

நாம் எமது இயற்கை மூலதனத்தை இணைக்கும் முறை

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

பாரம்பரிய வங்கி மாதிரிகளை விருத்தி அல்லது பதிலீடு செய்ய புதுமையான அல்லது புதிய தீர்வுகளை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. நிலைபேறான கட்டடங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகியவற்றில் முதலீடு செய்வது வங்கியின் பௌதீக சொத்துக்களை பலப்படுத்துகிறது.

மனித மூலதனம்

நிலைத்தன்மை மற்றும் பசுமை உணர்வை ஊக்குவிப்பது ஆரோக்கியமான மற்றும் பரந்த சூழலை அறிந்த ஊழியர்களை உருவாக்குகிறது.

சமூக மற்றும் உறவு மூலதனம்

வழங்குனர்களுடன் நீண்ட கால இணைப்புகளைப் பேணுவதன் மூலம் நிலையான பெறுமதிச் சங்கிலிகளை உருவாக்குதல்.

புலமை மூலதனம்

நிலைபேறான தொழிற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வங்கியாக தேசிய சேமிப்பு வங்கியின் நற்பெயரை மேம்படுத்துகிறது. பசுமையான முன்முயற்சிகள் வங்கிக்கு தெரிவுநிலையை வழங்கி, அதன் வர்த்தக நாம மதிப்பை அதிகரிக்கின்றன.

நிதி மூலதனம்

புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் நிலைபேறானதன்மை முயற்சிகளில் முதலீடு நீண்ட கால செலவுகளைக் குறைக்கிறது. பசுமை நிதியுதவியில் அதிக சந்தைப் பங்கு நீண்ட காலத்திற்கு வருவாய் மற்றும் இலாப இலக்குகளைத் தொழிற்படுத்த உதவும்.

பொருண்மை, அக்கறைதாரர்கள், குறுகியதிலிருந்து நடுத்தர கால உபாய முன்னுரிமைகள் உடனான தொடர்புகை

பொருண்மை விடயங்கள்



தொடர்புபட்ட அக்கறைதாரர்



குறுகிய முதல் நடுத்தரகால தந்திரோபாய முன்னுரிமைகள்



சாத்தியமான வீட்டுக்கொடுப்புக்கள்

- தூய்மையான எரிசக்தி பயன்பாட்டை நோக்கி நகர்வது, மக்கள் பணிபுரியும் விதம் மற்றும் மிகவும் பொருத்தமான சக்திச் சேர்க்கையைப் பின்பற்றுவதில் தொடர்புடைய செலவுகள் ஆகியவற்றில் விட்டுக்கொடுப்புக்களை ஏற்படுத்தும். இருப்பினும், நீண்ட கால நிதி மூலதனம் மற்றும் சமூக மற்றும் உறவு மூலதனம் மேம்படும்.
- எமது சில செயற்பாடுகளுக்கு இயற்கை வளங்கள் தேவைப்படுவதுடன், பழமையான சூழலில் தொழிற்படுகின்றன. அபிவிருத்திக்கான எமது அணுகுமுறையில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகளால் நாங்கள் வழிநடத்தப்படுகிறோம்.
- இயற்கை மூலதனத்தை அதிகரிப்பதற்கான முதலீடு நிதி மூலதனத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது, ஆனால் நீண்ட காலத்திற்கு மனித, புலமை மற்றும் நிதி மூலதனத்தை உருவாக்கும்.
- காலநிலை மற்றும் இயற்கை பேரழிவுகளில் ஏற்படும் மாற்றங்கள் நிதி மூலதனத்தையும் உற்பத்தி மூலதனத்தையும் சீர்குலைக்கும்.

ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

முதன்மை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

7 AFFORDABLE AND CLEAN ENERGY

கிரயம் குறைந்த மற்றும் சுத்தமான சக்தியை உருவாக்க பசுமை கட்டிடங்கள் மற்றும் சூரியகலக் கிளைகளை உருவாக்குதல்.

11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

சுற்றுச்சூழலுக்கு உகந்த இடங்களை அடைய தே.சே.வங்கி வேளாண் காடு வளர்ப்பு திட்டத்தை ஊக்குவித்தல்.

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

வங்கிச் செயன்முறைகளை எண்ணியல் மயமாக்குவதன் மூலம் காகித நுகர்வைக் குறைத்தல்

இரண்டாம்நிலை ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்

6 CLEAN WATER AND SANITATION

நீர் பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் பொறுப்பான நுகர்வு மூலம் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

13 CLIMATE ACTION

பசுமை முயற்சிகள், எண்ணியல் மயமாக்கல், பொறுப்புக் கடன் வழங்குதல் மற்றும் சிறந்த வள முகாமை ஆகியவற்றின் மூலம் இயற்கை மூலதனத்தை நிர்வகிப்பதற்கான ஒட்டுமொத்த பொறுப்பான அணுகுமுறையைப் பயிற்சி செய்தல்

இயற்கை மூலதனம்

1 ஒரு நிலைபேறான உலகத்திற்கான பங்களிப்பு

பசுமைக் கட்டடங்கள்

நிலைபேறான வள முகாமை மற்றும் ஊழியர் நல்வாழ்வுக்கான பசுமை கட்டடங்கள்

தேசிய சேமிப்பு வங்கி, பசுமையான இடங்கள் மூலம் ஊழியர்களின் நல்வாழ்வு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அதே வேளையில் சக்தி, நீர் மற்றும் இயற்கை வளங்களை திறம்பட முகாமை செய்வதற்கான ஒரு வழியாக பசுமைக் கட்டடங்கள் என்ற எண்ணக்கருவை ஏற்றுக்கொண்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் 18% ஆனவை இப்போது புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் செயற்படுகின்றன. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், 46 சூரியகலக் கிளைகள் நெட் மீற்றர் முறையில் இணைக்கப்பட்டன.

சக்தி திறன் மற்றும் வசதியான பணியிடங்களுக்கு முன்னுரிமை அளித்தல்

அனைத்து தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளிலும் சக்தி செயல்திறனை மேம்படுத்துவதற்காக மெருகூட்டப்பட்ட ஜன்னல்கள் பொருத்தப்பட்டுள்ள, அதே நேரத்தில் புதிய கிளைகள் பசுமை எண்ணக்கருக்களின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகின்றன, அவை இயற்கையான ஒளி மற்றும் காற்றைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கின்றன, இதன் விளைவாக உகப்பான பணியிடங்கள் உருவாக்கப்படுகின்றன. கதிர்காமத்தில் உள்ள வங்கியின் புதிய சுற்றுவட்ட பங்களா, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் (UDA) கண்காணிக்கப்படும் பசுமைக் கட்டிடங்களின் எண்ணக்கருவின்படி கட்டி முடிக்கப்பட்டது.

சக்தித் திறன் கொண்ட மின் சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

சக்தி நுகர்வை மேலும் குறைக்க, அனைத்து தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளிலும் சக்தித் திறன் கொண்ட மின் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மின்னல் தடுப்புகளை நிறுவுவது கிளைகளுக்கு மேலதிகப் பாதுகாப்பை வழங்குகிறது.

நிலைபேறான செயற்பாடுகளுக்கான கழிவு நீர் மற்றும் கழிவுநீர் வடிகாலமைப்பு

திட்டமிட்டபடி அனுராதபுரத்தில் புதிய கட்டிடத்திற்கு கழிவு நீர் மற்றும் கழிவுநீர் வடிகாலமைப்பை வங்கி நிறுவியுள்ளது. இந்த நிலைபேறான நடைமுறைகள், வங்கி தனது ஊழியர்களுக்கு வசதியான மற்றும் பாதுகாப்பான பணியிடங்களை வழங்கும் அதே வேளையில் அதன் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதில் உறுதியுடன் இருப்பதை உறுதி செய்கிறது.

2 பொறுப்பான நுகர்வு

GRI 302-1, 303-5

குறைந்தபட்ச வளப் பயன்பாடு மற்றும் குறைக்கப்பட்ட கார்பன் தடம் ஆகியவற்றிற்கான எண்ணியல் மயமாக்கல்

எண்ணியல் மயமாக்கலானது, இயற்கை வளங்களின் குறைந்தபட்ச பயன்பாடு மற்றும் விரயத்தைத் வேண்டிநிற்கின்றமையால் நமது கார்பன் தடத்தைக் குறைத்து இயல்பாகவே நிலைபேறான தன்மையை ஆதரிக்கும் திறன் கொண்டது என்பதை தேசிய சேமிப்பு வங்கியானது இனங்கண்டுள்ளது. வங்கியானது பரந்த அளவிலான எண்ணியல் உற்பத்திகள் மற்றும் சேவைகளை செயற்படுத்தியுள்ளது, இது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வணிக பரிவர்த்தனைகளுக்கு தொலைபேசி மற்றும் இணைய வங்கியை பயன்படுத்த ஊக்கமளிக்கிறது.

எமது எண்ணியல் முயற்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு பக்கம் 152 ஐப் பார்க்கவும்.

காகித பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் மக்கும் பொருள்களை ஊக்குவித்தல்

அச்சிடப்பட்ட அறிக்கைகளுக்கு மாறாக, காகித பயன்பாட்டைக் குறைக்க வழிவகுத்த மின்-புதுப்பித்தல் கடித முறையை வங்கி செயற்படுத்தியுள்ளது. தனிப்பட்ட அடையாள எண்கள் (PIN) இப்போது குறுஞ்செய்தி தகவல் முறைமை (SMS) மூலம் வழங்கப்படுகின்றன, அச்சிடப்பட்ட பொருட்களின் தேவையை மேலும் குறைக்கிறது. தேசிய சேமிப்பு வங்கி, மக்கும் பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்புத் திட்ட பணிகளில் ஊக்குவிக்கும் அதே நேரத்தில் சமூக ஊடகங்கள் மற்றும் எண்ணியல் தளங்களில் அதிகளவில் நகர்ந்து, அதன் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கான வங்கியின் முயற்சிகளுக்கு உதவுகிறது.



சக்தி நுகர்வு

தேசிய சேமிப்பு வங்கியில் சக்தி நுகர்வுக்கான முக்கிய வளங்கள் மின்சாரம் (தேசிய மின் கட்டமைப்பு மூலம் மற்றும் வங்கியின் பல கிளைகளில் நிறுவப்பட்ட சூரியகல முறைமைகள் மூலம் உருவாக்கப்படுகிறது), டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றை உள்ளடக்கும். எதிர்கால சந்ததியினருக்கான வளங்களை பாதுகாக்கும் நோக்குடன் பொறுப்பான நுகர்வுக்கு வங்கி உறுதிபூண்டுள்ளது. இந்த இலக்குகளை அடைய பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்:

- குளோரோ புளோரோ காபன் இல்லாத மின்சேமிப்புக் கருவிகளால் இயக்கப்படும் குளிரூட்டிகளை நிறுவுவது மின் நுகர்வைச் சேமிக்க உதவுவதோடு கார்பன் வெளியேற்றத்தையும் குறைக்கிறது.
- குளிரூட்டி உபயோகத்தை வழக்கமான வங்கி நேரங்களுக்கு வரையறுத்தல்.
- விடுமுறை நாட்களில் வங்கி வளாகத்தில் பணிபுரிய ஊழியர்களை ஊக்கமிழக்கச்செய்தல்.
- LED மின்குமிழ்கள் மற்றும் CFL மின்குமிழ்களை நிறுவுதல்.
- LED கணினித் திரைகளைப் பயன்படுத்துதல்.
- மீள்சுழற்சியை கடுமையாக ஊக்குவித்தல்.
- சக்தி சேமிப்பின் முக்கியத்துவம் குறித்து ஊழியர்களுடன் தொடர்ச்சியாகத் தொடர்பாடல் செய்தல்

இயற்கை மூலதனம்

நீர் பயன்பாடு

தேசிய சேமிப்பு வங்கியின் நீர் நுகர்வு 2022 இல் 70,430 கன மீட்டராக ஆக இருந்ததுடன், வரும் ஆண்டில் இதை மேலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீரை விவேகமாகப் பயன்படுத்துவதற்கும், வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுடன் அதன் ஊழியர்கள் இருப்பதை உறுதி செய்வதற்கும் வங்கி புதுமையான வழிகளைக் கண்டறிந்துள்ளது.

புதிய கிளைகள் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மூலங்களில் இருந்து புதிய நீரை பயன்படுத்துவதற்கு மாற்றாக மழைநீர் சேகரிப்பு முறைமைகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், பொறுப்பான நீர் அகற்றல் நடைமுறைகளுக்கு வங்கி உறுதிபூண்டுள்ளது. வெள்ளநீர் பொது வடிகால் வழியாக வெளியேற்றப்படும் அதே நேரத்தில் கழிவுநீர் வளாகத்திற்குள் நிலைபேறான ஊறவைக்கும் குழிகளின் மூலம் வெளியேற்றப்படுகிறது.

- தலா ஊழியருக்கு 15.55 (லீட்டர்கள்) நீர் நுகர்வு
- தலா கிளைக்கு 268.82 (வீட்டர்கள்) நீர் நுகர்வு

கழிவு முகாமை

உயிர்ப் பல்வகைமை மற்றும் மனித ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் பயனுறுதிமிக்க கழிவு முகாமையின் முக்கியத்துவத்தை வங்கி அங்கீகரிக்கிறது. இதை உறுதி செய்யும் வகையில், வினைத்திறனான கழிவு முகாமை முறையை அமுல்படுத்தியுள்ளோம். மேலும், இந்த முறைமைகளின் முக்கியத்துவம் குறித்து எமது ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நாங்கள் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளோம், அவை பின்வருமாறு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன:

- கழிவு சேகரிக்கும் அனைத்து இடங்களிலும் கழிவுகளை பிரித்தல்.
- தொடர்புடைய மாநகர அல்லது நகராட்சி சபை மற்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆணைக்குழு (CEA) மூலம் அகற்ற மூன்றாம் தரப்பு மறுசுழற்சி சேவை வழங்குநர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மீள்சுழற்சி செய்வதற்காக காகிதக் கூட்டுத்தாபனத்திடம் கழிவு காகிதம் சமர்ப்பிக்கப்படும்.
- உணவு மற்றும் பொலித்தீன் கழிவுகள் நகராட்சி திண்மக்கழிவு முகாமைத் திட்டத்திடம் ஒப்படைக்கப்படும்.
- மற்ற கழிவு பொருட்கள் வழங்கல் பிரிவு மூலம் ஏலம் விடப்படும்.

3 நிலைபேறான நிதியீட்டம்

நிலைபேறான தன்மைக்கான எமது அர்ப்பணிப்பு எமது பொறுப்பு வாய்ந்த கடன் வழங்கும் நடைமுறைகளில் பிரதிபலிக்கப்படுவதுடன், அங்கு நமது கடன் நடவடிக்கைகள் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தக்கூடிய எதிர்மறையான தாக்கத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். நீண்ட கால நிலைபேறான வளர்ச்சிக்காக, சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) கருத்திற் கொள்ளல்களை எமது கடன் மற்றும் இடர் மதிப்பீட்டு செயன்முறைகளில் கடன் வழங்கும் போது இணைத்துள்ளோம். அதிக ESG இடர்களைக் கொண்ட கொடுக்கல்வாங்கல்கள் மேலும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. எமது கூட்டுவணிகக் கடன்வழங்கல் கொள்கையில் ஒரு விலக்கு பட்டியல் உள்ளது, இது வங்கிக் கடன் வழங்குவதற்குத் தகுதியற்ற செயற்பாடுகளைக் குறிப்பிடுகிறது, தீங்கு விளைவிக்கும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கொண்ட எந்தவொரு செயலுக்கும் நாங்கள் நிதியளிக்க மாட்டோம் என்பதை இது உறுதிசெய்கிறது. அனைத்து வாடிக்கையாளர்களும் உள்நாட்டு ESG தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க வேண்டும் என்பதுடன், கடன் வாங்கும் போது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை வழங்குமாறு கடன் வாங்குபவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

இந்த வருடத்தின் போது, சுற்றுச்சூழலைக் கருத்தில் கொண்டு எந்தக் கடன்களையும் வசதிகளையும் நாங்கள் நிராகரிக்கவில்லை.

எங்கள் நோக்கம் வாடிக்கையாளர்களை உயர் ESG தொழில் நியமங்களுடன் ஒத்துப்போகும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு படிப்படியாக ஊக்குவிப்பதாகும்.

அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் ஆளுகை விடங்களையும் உள்வாங்கிய எமது முற்றடக்கமான சுற்றுச்சூழல் சமூக இடர் முகாமை (ESRM) பின்வருமாறு விளக்கப்படலாம்:



இயற்கை மூலதனம்

எமது கடுமையான மதிப்பீட்டு செயன்முறைக்கு மேலாக, சமூக அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டமான சூரிய பால சங்கமாயாவை ஆதரிக்கும் தே.சே.வங்கி சுற்றுச்சூழல் கடன் மூலம் பசுமைக் கடன்களின் எண்ணக்கருவை நாங்கள் ஊக்குவிக்கிறோம். 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த முயற்சியானது, மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் இலங்கை மின்சார கம்பனி பிரைவேட் லிமிடெட் (LECO) ஆகியவற்றுடன் ஒத்துழைப்பான செயற்பாடாகும். வீடுகள், மத நிறுவனங்கள், ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் உட்பட பல்வேறு வகையான கூரைகளில் சிறிய சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதே இதன் நோக்கமாகும். இந்த மானியக் கடன் திட்டம் வாடிக்கையாளர்களை புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாற ஊக்குவிக்கிறது, அதன் மூலம் அவர்களின் கார்பன் தடம் குறைகிறது. வாடிக்கையாளர்கள் தங்கள் மின்சார பயன்பாட்டைப் பொறுத்து, நிகர அளவீட்டுத் திட்டம், நிகர கணக்கியல் திட்டம் மற்றும் நெட் பிளஸ் திட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கலாம்.

ஆண்டு	வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (மில்லியன்)
2019	222	193.2
2020	8	5.41
2021	9	3.80
2022	**3**	**5.78**

அட்டவணை 21

காலநிலை மாற்றத்தின் தாக்கம்

மோசமான காலநிலையால் எமது வணிகம் நேரடியாக பாதிக்கப்படுகிறது. காலநிலை மாற்றம் தொடர்பான பேரழிவுகள் உற்பத்தி அளவுகளை குறைக்கலாம் மற்றும் அதன் விளைவாக, குறைந்த வருமான நிலைகள் ஏற்படலாம். மேலும், இத்தகைய நிகழ்வுகள் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த செலவினங்களில் ஒரு எதிர்க்கணிய விளைவை ஏற்படுத்தக்கூடும், இது கடன் வாங்குபவர்களின் திருப்பிச் செலுத்தும் திறனை பாதிக்கலாம். இதையொட்டி, வங்கித் துறை முழுவதும் தனிநபர் வீட்டுவசதி மற்றும் வணிகக் கடன்களின் தொழிற்படாக் கடன் (NPL) அளவுகள் அதிகரிக்கலாம்.

2023 மற்றும் அதனைத் தாண்டிய எதிர்கால வாய்ப்புக்கள்

குறுங்காலம்

- எண்ணியல் தொழிநுட்பத்தின் அதிகரித்த பாவனை மற்றும் பொறுப்புணர்வுமிக்க நுகர்வு மற்றும் முகாமை மூலம் சக்தி, நீர் மற்றும் காகிதப் பாவனையைக் குறைத்து காபன் தடத்தைக் குறைத்தல்
- எண்ணியல் தளங்களுக்கு நகர வாடிக்கையாளர்களை ஊக்குவித்தல்

நடுத்தரளவு காலம்

- வங்கியின் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் ஆளுகை முகாமையைப் பலப்படுத்தி, நிலைபேறான நிதி மீது நோக்கினை ஸ்திரப்படுத்தல்
- காபன் குறைந்த பொருளாதாரத்திற்காக, பசுமைக் கடன் வழங்கலை ஊக்குவித்தல்

நீண்ட காலம்

- சுற்றுச்சூழல் மற்றும் சமூக ரீதியாக பொறுப்புணர்வுமிக்க உற்பத்திகளை உருவாக்குதல்
- நீண்டகால சுற்றுச்சூழல் முறைமைப் பாதுகாப்புத் திட்டங்களில் முதலீடு செய்தல்

எமது **எதிர்காலச் சான்றுறுதி** உபாயத்தின் பங்களிப்பு

எதிர்பாராத மற்றும் வழக்கத்துக்கு மாறான அதிர்ச்சிகளைத் தாங்கி, நீடித்து நிற்கத்தக்க வளர்ச்சியை அடைவதற்கான உள்ளடக்கமான நிதியியல் தீர்வுகளை வழங்குதல்

நிறுவன ஆளுகை பற்றிய அறிக்கை


வங்கித் தொழில்துறையில் காணப்படுகின்ற ஆளுகையானது வெறுமனே ஒழுங்குவிதிகளுடன் இணைங்கியொழுகுவதை விடவும் தாண்டிச்செல்கின்றது என தேசிய சேமிப்பு வங்கியில் நாம் நம்புகின்றோம். எமது பெறுமதி உருவாக்கச் செயன்முறையின் அனைத்து மட்டங்களிலும் தாக்கம் செலுத்துகின்ற பொறுப்புமிக்க மற்றும் நெறிமுறைசார்ந்த முகாமைத்துவத்தின் முக்கிய அம்சமாக ஆளுகையினை நாம் நோக்குகின்றோம். அது எமது **ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனை** அணுகுமுறையுடன் பின்னிப்பிணைந்துள்ளதுடன் நீண்டகால பெறுமதி உருவாக்க மையப்படுத்தலுடன் கூடிய எமது விழுமியங்கள் மற்றும் உபாய இலக்குகளுடன் அணிசேர்கின்ற ஒழுக்கநெறிமுறை சார்ந்த, பொறுப்புமிக்க, அத்துடன் ஒழுக்கம் சார்ந்த மற்றும் ஆற்றல்வாய்ந்த தெரிவுகளை எடுக்கின்றோம் என்பதை உறுதிசெய்து எமது திர்மானம் மேற்கொள்ளலுக்கு வழிகாட்டுகின்றது. பொதுவாக, நிறுவனம் என்ற வகையில் ஆளுகையானது அனைத்து கொடுக்கல்வாங்கல்களிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இரண்டுக்கும் உத்தரவாதமளிக்கின்றது.

இதனை அடைந்துகொள்வதற்கு, தேசிய சேமிப்பு வங்கியின் ஆளுகை கட்டமைப்பிற்கு அனைத்தும் உறுதியான ஒழுக்கநெறி சார்ந்த அத்திவாரத்தை அடிப்படையாக கொண்ட வலுவான தலைமைத்துவம், பக்கச்சார்பற்ற மேற்பார்வை, முகாமைத்துவப் பொறுப்புக்கூறல் என்பன மூலம் துணையளிக்கப்படுகின்றது. ஆளுகைக்கான இறுதிப் பொறுப்புடமையினை சபை கொண்டிருந்து, அத்துடன் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமை வகிக்கின்ற சபை குழுக்களுக்கும் நிறுவன முகாமைத்துவத்துக்கும் உபாயரீதியான பணிப்பரைகளுக்கான அதிகாரத்தை ஒப்படைக்கின்றது என்பதுடன் கூடிய ஆளுகை இடம்பெறுகின்ற தெளிவான எல்லைகளை தேசிய சேமிப்பு வங்கியின் பொறுப்பாணை நிர்ணயிக்கின்றது. சபையின் முக்கிய வகிபாகம், பொருளாதாரரீதியாக, சமூகரீதியாக அத்துடன் சுற்றாடல்ரீதியாக நிலைபெறுதன்மையினை அவை உறுதிசெய்கின்ற அதேவேளை பங்குதாரர்களின் நலன்களை நிறைவேற்றுகின்றன என்பதை உறுதிசெய்கின்ற, வங்கியின் விவகாரங்களை மேற்பார்வைசெய்வதாகும்.

அனைத்து பங்குதாரர்களுக்கும் சமநிலையான பெறுமதியினை உருவாக்குவதை மையப்படுத்தி வங்கியின் உபாய மற்றும் தொழிற்பாட்டு குறிக்கோள்களை நிர்ணயித்து அனுமதிப்பது சபையின் பொறுப்புடமையாகும். ஒருமைப்பாடு, வினைத்திறன், பொறுப்புகூறல், பக்கச்சார்பின்மை, அத்துடன் வெளிப்படைத்தன்மை என்பன போன்ற பண்புகள் மீது வலுவான கவனம் செலுத்தலுடன் கூடிய நெறிமுறைசார்ந்த அத்துடன் செயல்திறன்வாய்ந்த வங்கித்தொழில் தொழிற்பாடுகள் தேசிய சேமிப்பு வங்கியில் பேணப்படுகின்றன என்பதனையும் அவை உறுதி செய்யவேண்டும். தொழிற்துறை விதிகள், ஒழுங்குவிதிகள், கொள்கைகள் மற்றும் சட்டங்கள் எனபவற்றுடனான இணங்குவித்தலானது நெறிமுறைசார்ந்த நிறுவனப் பிரசைக்கான தேசிய சேமிப்பு வங்கியின் அர்ப்பணிப்பு பற்றிய வெளிப்படையான குறிகாட்டியாக விளங்குகின்றது.

அனைத்தையும் நோக்குகையில், தேசிய சேமிப்பு வங்கியின் ஆளுகையானது உபாயக் குறிக்கோள்களை அடைதல், பங்குதாரர்களின் நலன்களை பாதுகாத்தல் மற்றும் பரந்தளவில் சமூகத்திற்கு நெறிமுறைசார்ந்த மற்றும் நிலைபேறான சேவைகளை வழங்குதல் என்பன ஊடாக தொழில் இயலச்செய்யப்படுகின்றது என்ற பல்நோக்கு செயற்பாடாக விளங்குகின்றது. ஆகையினால் ஆளுகையானது தேசிய சேமிப்பு வங்கிக்கு உயர்வான முன்னுரிமையாக தொடர்ந்தும் இருந்துவரும்.

தேசிய சேமிப்பு வங்கியின் நிறுவன ஆளுகை மற்றும் இணங்குவித்தல் நிலமைகள் பற்றிய விரிவான மீளாய்வுக்கு 178-198 வரையான பக்கங்களைப் பார்க்க.



வரைபடம் 21 எமது பெறுபேறு அடிப்படையிலமைந்த அணுகுமுறை

இடர் முகாமைத்துவம் பற்றிய அறிக்கை

எமது நிறுவனத்தின் குறுகிய மற்றும் நீண்ட ஆகிய இரு காலங்களிலும் நிலைபெறுதன்மையைப் பேணிக்காப்பதில் இடர்நேர்வு முகாமைத்தவத்தின் பெறுமதியினை தேசிய சேமிப்பு வங்கியில் நாம் புரிந்துகொள்கின்றோம். இடர்நேர்வு முகாமைத்துவமானது பல காலமாக பெறுமதி உருவாக்கத்திற்கான எமது இயலுமை மீது நேரடியான தாக்கத்தினைக் கொண்டிருப்பதனால் அது, எமது நிறுவன உபாயத்தினதும் தொழில் மாதியிரினதும் அத்தியாவசிய கூறாக விளங்குகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவத்தை நோக்கிய எமது அணுகுமுறை, தேசிய சேமிப்பு வங்கியினையும் அதேபோன்று அதற்கு சொந்தமான துணை நிறுவனங்களான இலங்கை சேமிப்பு வங்கி மற்றும் என்எஸ்பி நிதி முகாமைத்தவ கம்பனி இரண்டையும் உள்ளடக்கிய தொகுதி முழுவதும் நன்கு அறியப்பட்ட இடர்நேர்வு மதிப்பீட்டினை இயலச்செய்கின்றது.

நிதிசார் மற்றும் நிதிசாரா இடர்நேர்வுகள் இரண்டினையும் முகாமைசெய்கின்ற அதேவேளை பங்குதாரர்களின் நலன்களையும் பாதுகாப்பதில் உதவுகின்ற எமது இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டினை பின்னிருந்து செலுத்தும் சக்திகளாக செம்மையும் வெளிப்படுந்தன்மையும் காணப்படுகின்றன. இடர்நேர்வுகளை இனங்கண்டு, கணிப்பிட்டு, அளவிட்டு, ஒன்றுசேர்த்து முகாமைசெய்வதற்கும் அதேபோன்று மூலதன ஒதுக்கீடுகளை அனுகூலமிக்க மட்டத்தில் மேற்பார்வை செய்வதற்குமென இது வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழிற்துறையினுள் எமது வர்த்தகநாம எண்ணப்பாங்கு, கடன்தீராற்றல், தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றை நிலைநிறுத்தும் பொருட்டு, பெறுமதி உருவாக்குதலில் இடர்நேர்வுக்கும் ஆதாயத்திற்கும் இடையிலான விட்டுக்கொடுப்புகள் நன்கு சமநிலையாகப்பட்டுள்ளன என்றும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன என்றும் நாம் உறுதிசெய்கின்றோம். இடர்நேர்வு முகாமைத்துவத்துவமானது வங்கித் தொழிற்துறையில் உத்தரவாதமளிப்பதனால் அதனை நாம் தீவிரமாகவும் கடுமையாகவும் எடுத்துக் கொள்கின்றோம்.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்துவ உபாயத்துடனும் இடர்நேர்வு ஏற்புடனும் எமது தொழில் உபாயம் அணிசேர்கின்றது என்பதனை உறுதிசெய்வதற்கு சபையானது இடர்நேர்வு ஏற்பினை நிர்ணயித்து எமது இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்களின் வினைத்திறன் மற்றும் உறுதிப்பாடு என்பவற்றில் உதவுவதற்கு சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ குழுவினை நியமிக்கின்றது. தேசிய சேமிப்பு வங்கியின் ஒட்டுமொத்தமும் இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையில் ஈடுபட்டுள்ளது என்பதனை இவ் ஈடுபாடு உறுதிசெய்கின்றது.

எதிர்கால வாய்ப்பு


2022 இல் நாட்டில் சமூக பொருளாதார நெருக்கடிமிக்க சவால்களுக்கு மத்தியில், தொழில் நடவடிக்கைகளில் உபாய ரீதியான மாற்றங்களுக்கு தங்குதடையற்ற ஆதரவை வழங்குவதற்கு எமது எண்ணியல் உட்கட்டமைப்பு வசதியினை தரமுயர்த்துவதன் மூலம் எமது ஒருங்கிணைந்த இடர்நேர்வுக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் விளங்கினோம். வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பில் காணப்படும் அனைத்து அபிவிருத்திகளும் சர்வதேச சிறந்த நடத்தைகளுடனும் இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல்களுடனும் இணங்கியொழுகுகின்றன என்பதனை இது உறுதிசெய்யும்.

தேசிய சேமிப்பு வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம்

உரியகால சீராக்க/தடுப்பு நடவடிக்கைகளுக்காக தோன்றுகின்ற இடர்நேர்வுகளை இனங்காண்பதை வசதிப்படுத்துகின்ற ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை நாம் செயல்முறைப்படுத்தியுள்ளோம்.

தொழில்களுக்கு சவால்மிக்க சூழ்நிலைகளைக் கொண்ட சூழலின் காரணமாக தோன்றுகின்ற இடர்நேர்வுகளை தீர்ப்பதற்கு எமது கட்டமைப்பினை ஏற்றதாக்கி முற்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட இடர்நேர்வு ஏற்பு வரையறைகளுக்கு எதிராக எமது நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகையினை நாம் கிரமமாக கண்காணிக்கின்றோம் இங்கு வருவாய்கள் மற்றும் மூலதனம் மீதான எதிர்மறையான தாக்கத்தினை குறைப்பதற்கு சூழலில் உள்ள மாற்றங்கள் நன்கு அவதானிக்கப்பட்டு கையாளப்படுகின்றன. 2022 இல் இலாபத்தன்மை தவிர்ந்த எமது கடன் தீராற்றல் குறிகாட்டிகளின் இடர்நேர்வு ஏற்பு மட்டங்களை நிறைவுசெய்வதற்கு எமக்கு இயலுமாக இருந்தது.

வங்கியின் இடர்நேர்வு மீளாய்வு பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு 208- 236 வரையான பக்கங்களை பார்க்க.



நிதிசார் இடர்நேர்வுகள் | நிதிசாரா இடர்நேர்வுகள் | இடர்நேர்வு முகாமைத்துவ கருவிகள்

வரைபடம் 22 இடர்நேர்வுக் கலாசாரம்

ஆளுகை

பணிப்பாளர் சபை 170

நிறுவன முகாமைத்துவம் 173

நிறைவேற்று முகாமைத்துவம் 174

பிரதான முகாமையாளர்கள் 176

நிறுவன ஆளுகை 178

சபைக் கணக்காய்வு குழுவின் அறிக்கை 199

சபை மனிதவளங்களும் ஊதியங்களும் குழு அறிக்கை 202

சபை நியமன குழுவின் அறிக்கை 204

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கை 205

சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவின் அறிக்கை 207

இடர் மீளாய்வு 208

பணிப்பாளர் சபை



கலாநிதி ஹர்ஷ கப்ரால்

சனாதிபதி சட்டத்தரணி தலைவர்
சுயாதீன நிறைவேற்றுதரமற்ற பணிப்பாளர்

நியமனத் திகதி

2023 மே 02

திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

கலாநிதி கப்ரால், புலமைச் சொத்துச் சட்டம், கம்பனிச் சட்டம், வணிகச் சட்டம், வணிக நடுத்தீர்ப்பு, பிணையங்கள் சட்டங்கள், சர்வதேச வர்த்தகச் சட்டம் போன்ற சட்டத் துறைகளில் சிவில் மற்றும் குற்றவியல் நோக்கு இரண்டினையும் உள்ளடக்கி முப்பத்தைந்து (35) வருட அனுபவத்துவுடன் கூடிய இலங்கையின் சனாதிபதி சட்டத்தரணி ஒருவராவார். இவர் பதினேழு (17) ஆண்டுகளாக சனாதிபதி சட்டத்தரணியாக இருந்துவருவதுடன் இலங்கையின் மேல் நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றங்கள் போன்றவற்றில் அவரது பரந்த சட்டத்தொழில் அனுபவத்துடன் கூடிய அவரின் கீழ் 16 கனிஷ்ட சட்டத்தரணிகள் பணியாற்றி வருகின்றனர். கலாநிதி கப்ரால் அவுஸ்திரேலியாவின் கன்பரா பல்கலைக்கழக்திலிருந்து நிறுவனச் சட்டத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றவராவார். 2021 வரை 06 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கு இவர் பரிசில் உள்ள வணிக சர்வதேச நடுத்தீர்ப்பு நீதிமன்றத்தின் சர்வதேச சம்மேளனத்தின் அமர்வு உறுப்பினராக இருந்தார். ஒருங்கிணைக்கப்பட்ட நெருக்கடி முகாமைத்துவ மன்றத்தினதும் அதேபோன்று சர்வதேச வணிக பிணக்குகள் நியாயசாபையின் பிரதிநிதி உறுப்பினரொருவருமாவார். கலாநிதி கப்ரால் பட்டயம்பெற்ற ஆளுகை நிறுவனத்தின் (ஐக்கிய இராச்சியம் மற்றும் அயர்லாந்து) சக உறுப்பினருமாவார்.

இலங்கையில் கம்பனிச் சட்டம் மீதான ஆலோசனை ஆணைக்குழு உறுப்பினர் என்ற வகையில், கலாநிதி கப்ரால் தற்போதைய சட்டமாகவுள்ள 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தை வடிவமைப்பதிலும் ஒருவராக விளங்கினார்.

கலாநிதி கப்ரால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல பலகலைகழங்களில் சிரேஷ்ட வருகைதரு விரிவுரையாளராக இருப்பதுடன் பொது கருத்தரங்குளில் கிரமமான பேச்சாளரும் பல புத்தகங்களின நூலாசிரியருமாவார். நிறுவனச் சட்டம், புலமைச் சொத்துச் சட்டம், வர்த்தக நடுத்தீர்ப்பு, சர்வதேச வர்த்தகச் சட்டம் போன்றன பற்றி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல கட்டுரைகளை இவர் சமர்ப்பித்துள்ளார். நீதிமன்றங்களில் செயலூக்கம்மிக்க தொழில்புரிதலுக்கும் விரிவுரைகளை நடாத்துவதற்கும் மேலதிகமாக, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல நடுத்தீர்ப்புகளில் இவர் சட்டத்தரணியாக இருந்துவருவதுடன் தனி நடுத்தீர்ப்பாளர், இணை நடுத்தீர்ப்பாளர் மற்றும் தலைவர் போன்ற பதவிகளில் பல எண்ணிக்கையான பாரிய நடுத்தீர்ப்புகளில் அங்கம் வகித்துள்ளார். கலாநிதி கப்ரால் பின்வரும் நூல்களை வெளியிட்டுள்ளார்.

- நிறுவனச் சட்டம், பெறுதி நடவடிக்கைகள்: ஒரு ஒப்பீட்டு அணுகுமுறை
- இலங்கையில் புலமைச் சொத்துச் சட்டம்
- இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் நிறுவனச் சட்டம்.
- இலங்கையில் கம்பனி பணிப்பாளர்களின் கடமைகளும் நிறுவன ஆளுகையும்
- இலங்கையில் வணிக நடுத்தீர்ப்புகளில் சட்டமும் சட்டத்தொழிலும்
- கப்ராலின் நடுத்தீர்ப்பு சட்ட அறிக்கைகள் (தொகுதி I) (1895-2020)
- கப்ராலின் புலமைச் சொத்துச் சட்ட அறிக்கைகள் (தொகுதி I) (1888-1995)
- கப்ராலின் புலமைச் சொத்துச் சட்ட அறிக்கைகள் (தொகுதி II) (1995-2020)
- கப்ராலின் கம்பனிச் சட்ட அறிக்கைகள் (தொகுதி I) (1881-1982)
- கப்ராலின் கம்பனி சட்ட அறிக்கைகள் (தொகுதி II) (1983-1993)
- கப்ராலின் கம்பனி சட்ட அறிக்கைகள் (தொகுதி III) (1994-2012)
- கப்ராலின் கம்பனி சட்ட அறிக்கைகள் (தொகுதி IV) (2013-2021)

பிற தற்போதைய நியமனங்கள்

கலாநிதி கப்ரால் இலங்கைச் சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினரும், இலங்கை புலமைச் சொத்து ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும் அத்துடன் நிதி அமைச்சின் புலமைச் சொத்துச் சட்ட மறுசீரமைப்பு கருத்திட்டத்தின் தலைவரும் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் நிறுவன ஆளுகை பீடத்தினதும் நிறுவன ஆளுகை குழுவினது உறுப்பினரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பெயர்குறிக்கப்பட்டவருமாவார். கலாநிதி கப்ரால், புதிய தேசிய விளையாட்டுகள் சட்டத்தை வரைவதில் விளையாட்டு அமைச்சிற்கான சிரேஷ்ட ஆலோசகரொருவராகவும் புதிய நீதித்துறை வீடமைப்புக் கருத்திட்டம் மீதான நிதி அமைச்சுக்கான சிரேஷ்ட ஆலோசகராகவும் (தலைவர்), நீதி அமைச்சின் வர்த்தக சட்ட மறுசீரமைப்பிற்கான சிரேஷ்ட ஆலோசகராகவும் இருந்து வருகின்றார். கலாநிதி கப்ரால் இலங்கையில் சீமெந்துக்கான பாரிய சந்தைப் பங்கினைக் கொண்டிருக்கும் டோக்கியோ சீமென்ட் குழுமத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். கலாநிதி கப்ரால் தற்போது டிமோ பீஎல்சி, ஹேலிஸ் பீஎல்சி, எலுமெக்ஸ் பீஎல்சி, டோக்கியோ சிமென்ட் கம்பனி (லங்கா) பீஎல்சி, டோக்கியோ சீமென்ட் பவர் லங்கா (பிரைவட்) லிமிடெட், டோக்கியோ ஈஸ்டர்ன் சீமென்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், டோக்கியோ சுப்பர் எக்கிரிகேற் (பிரைவட்) லிமிடெட், டோக்கியோ சுப்பர் மிக்ஸ் (பிரைவட்) லிமிடெட், வேர்ல்ட் எக்ஸ்போர்ட் சென்டர் லிமிடெட், செவரோன் லுப்ரிகன்ட் லங்கா பீஎல்சி, செலிங்கோ லைப் இன்சூரன்ஸ் (பிரைவட்) லிமிடெட், டார்லி புரெபேர்டி ஹோல்டிங் (பிரைவட்) லிமிடெட், சீசீசீ – ஐசீஎல்பி இன்டநேஷனல் ஏஆர்டி சென்டர் (கரண்டீ) லிமிடெட், தேசிய ஒலிம்பிக் குழு, ஒழுக்கநெறிக் குழு (தலைவர்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (உத்தரவாதம்) லிமிடெட் (SLIIT), SLIIT இன்டநேஷனல் (பிரைவட்) லிமிடெட், நணதிரிய (கரண்டீ) லிமிடெட் (தலைவர்) போன்றவற்றின் சுயாதீன நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளராகவும் கடமையாற்றுவதுடன் இவர் பல்வேறு கணக்காய்வு குழுக்கள், பெயர்குறித்தல் குழுக்கள், ஊதிய குழுக்கள், அறவீட்டு குழுக்கள் மற்றும் தொடர்புடைய தரப்பு கொடுக்கல்வாங்கல் குழுக்கள் போன்ற அநேகமானவற்றில் தலைவர் பதவியை வகிக்கின்றார்.

முன்னைய முக்கிய நியமனங்கள்

கலாநிதி கப்ரால் இலங்கை முதலீட்டு சபையின் முன்னாள் உறுப்பினராக இருந்தார். இவர் இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையத்தின் தாபக உறுப்பினராகவிருந்ததுடன் தற்போதைய சட்டமான 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத்தீர்ப்பு சட்டத்தினை வரைவதிலும் ஈடுபட்டார்.

இலங்கையில் பாரிய நிதி நிறுவனங்களில் ஒன்றான LOLC பினான்ஸ் பீஎல்சியின் முன்னாள் தலைவராகவும் இருந்தார். LOLC இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட், கொமர்'ல் லிசீங் பினான்ஸ் லிமிடெட், ரிச்சட் பீரிஸ் டிஸ்ரிபியுட்டர்ஸ் லிமிடெட், (ஆர்பிகோ சிறப்பு அங்காடி) ஆகியவற்றின் பணிப்பாளராகவும் இவர் இருந்தார். இவர் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சியின் முன்னால் பதில் தலைவராகவும் பணியாற்றினார். இதற்கு மேலதிகமாக, கலாநிதி கப்ரால் இலங்கை யூனியன் வங்கியின் சிரேஷ்ட பணிப்பாளராகவும் இருந்தார். தேசிய வர்த்தக கொள்கை மீதான அமைச்சரவை நியமித்த குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டதுடன் இலங்கையின் சட்டங்களை மறுசீரமைத்தல் மீது நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்.



BAC, BHRRC

திரு. ஜுட் நிலுக்ஷன்

பதவிவழிப் பணிப்பாளர்
சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

நியமனத் திகதி

2 மார்ச் 2022

திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

திரு. நிலுக்ஷன் அவர்கள் தென் கொரியாவின் Kyung Hee University இடமிருந்து சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு முதுமாணி பட்டத்தினையும் ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டாம் உயர் வகுப்பு முகாமைத்துவ சிறப்பு இளமாணி (BSc) பட்டத்தினையும் பெற்றுள்ளார். பொது நிதி முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச மதிப்பு மிக்க நிறுவனங்களிலிருந்து பயிற்சி பெற்றுள்ளார். இவர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திடமிருந்து (SLIDA) இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான பொது நிர்வாக சான்றிதழ் மற்றும் பொது முகாமைத்துவம் மற்றும் இயற்திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்ட சான்றிதழ் ஆகியவற்றையும் பெற்றிருக்கிறார்.

திரு. நிலுக்ஷன் அவர்கள் பொது துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட இலங்கை நிர்வாக சேவையில் சிறப்பு தர அலுவலகர் ஆவார். அவரது பொது சேவைகள் காலத்தில் பல்வேறுபட்ட பொது திறைசேரி, பாராளுமன்ற அமைச்சர்களுக்கான அலுவலகம் போன்ற சிரேஸ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார்.

பிற தற்போதைய நியமனங்கள்

பொதுப்பணிப்பாளர், தேசிய பாதீட்டுத் திணைக்களம், சபை உறுப்பினர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) மற்றும் தேசிய திரைப்படவாக்கல் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபைக்கு பிரேரிக்கப்பட்டுள்ளமை.

முன்னைய முக்கிய நியமனங்கள்

2015 முதல் 2020 வரை பாராளுமன்ற அமைச்சர்களுக்கான அலுவலக சிரேஸ்ட உதவி செயலாளர், பொது திறைசேரி பணிப்பாளர், பிரதி பணிப்பாளர்/உதவிப்பணிப்பாளர், பணிப்பாளர், பிரதி பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் கலால் வரி இலங்கைச்சுங்கம், சர்ம வாசனா நிதியத்தின் சபைத்தலைவர். இலங்கை மின்சார சபை (CEB), நிதி கற்கை கலைக்கூடம் (MILODA), இலங்கை மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் (SPMC), தேசிய தாவரவியல் பூங்கா நம்பிக்கை நிதியம், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு (ITN), கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை உள்ளுர் அரச கடன் சபை, இலங்கை இளைஞர் கூட்டுத்தாபனம், தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் (NBRO) பொது ஊழியர் சேமலாப நிதியம் (PSMPA) உள்ளடங்கலான பல்வேறுபட்ட அரச நிறுவனங்களில் பொது திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.



BHRRC

திரு. எஸ் ஆர் டபுள்யூ எம் ருவன் பாலித சத்குமார

பதவிவழிப் பணிப்பாளர்
சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

நியமனத் திகதி

27 மார்ச் 2023

திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

திரு. சத்குமார களனி பல்கலைக்கழகத்தில் இருந்து பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்றவர் மற்றும் முகாமைத்துவத்தில் இளமாணி பட்டத்தினை இரண்டாம் வகுப்பு மேல்நிலையுடன் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்றவர். அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலிருந்து முயற்சியாண்மை மேம்பாடு மற்றும் நிபுணர்களுக்கான ஆங்கிலத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். திரு சத்குமார பொது கொள்முதல் மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலிருந்து வளர்ச்சி நிர்வான உயர்தேசிய டிப்ளோமாவை பெற்றுள்ளார்.


திரு. சத்குமார இலங்கை நிர்வாக சேவை பொதுத்துறையில் 20 வருட அனுபவம் முடித்துள்ள சிறப்பு தர அதிகாரி.

பிற தற்போதைய நியமனங்கள்

அஞ்சல் அதிபர், அஞ்சல் திணைக்களம்.

முன்னைய முக்கிய நியமனங்கள்

இலங்கையின் அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், உதவியாளர் உரிமைப்பதிவு ஆணையாளர் காணி நிர்ணய திணைக்கள உதவி பிரிவு செயலாளர் – பிரதேச செயலகம் – கணேவத்த, பிரதேச செயலாளர் – பிரதேச செயலகம் உடுபத்தாவ, இலங்கை அமைச்சக பிரதிநிதி/ சபை உறுப்பினர் – ரூபவாஹினி கூட்டுத்தாபனம், பிரதேச செயலாளர் – பிரதேச செயலகம் – இப்பலோகம, இயக்குனர் – முகாமைத்துவ சேவைகள் துறை (பொது திறைசேரி) துணை பணிப்பாளர்/பணிப்பாளர் – இலங்கை சுங்கம், மூத்த துணைச் செயலாளர்/பணிப்பாளர் (விளையாட்டு மேம்பாடு) மேலதிக செயலாளர் – வெகுஜன ஊடக அமைச்சு, மாந்தை சால்ட் லிமிடட் – சபை உறுப்பினர், காணி சீர்திருத்த ஆணைக்குழு – உறுப்பினர், திறன் மேம்பாடு நிதி லிமிடட் – சபை உறுப்பினர், பதில் தலைவர் சுயேட்சை தொலைக்காட்சி நெட்வேர்க் (ITN) சபை உறுப்பினர் – புகையிலை மற்றும் மதுபான தேசிய ஆணையம் (NATA), அமைச்சு பிரதிநிதி – இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சபை உறுப்பினர் – செலசின் ரூபவாஹினி நிறுவனம்.



BAC, BHRRC

திரு. எச் கே டி லக்ஸ்மன் காமினி

சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

நியமனத் திகதி

14 டிசெம்பர் 2020

திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

திரு காமினி ஒரு சர்வதேச வங்கியியல் மற்றும் கிளை வங்கியியல் அனுபவம் மிக்க வங்கியாளர், மூன்று தசாப்தங்களுக்கு மேல் மக்கள் வங்கியில் பணியாற்றி 2014 இல் ஓய்வு பெற்றார்.

பணிப்பாளர் சபை

பிற தற்போதைய நியமனங்கள்

பணிப்பாளர் – த்ரீ ஸ்டார் லாஜ்ஸ்டிக் (தனியார்) நிறுவனம்

பணிப்பாளர் – என்எஸ்பி நிதி முகாமைத்துவ கோ லிமிடட்

புதிய பணிப்பாளர் – கடன் தகவல் பணியகம் (CRIB)

முன்னைய முக்கிய நியமனங்கள்

அரச அச்சக கூட்டுத்தாபன துணைத்தலைவர், திறன் மேம்பாட்டு நிதியத்தின் பணிப்பாளர், திறன் மேம்பாடு மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சகம்.



BAC

திரு. துசியந்த பஸ்நாயக

சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

நியமன திகதி

31 மார்ச் 2023

திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

திரு. பஸ்நாயக முகாமை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் CIMA, UK மற்றும் பட்டய உலகளாவிய முகாமைக் கணக்காளர் நிறுவனத்தின், முதுநிலை அங்கத்தவராவார். சான்றழிக்கப்பட்ட உறுப்பினர் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் மற்றும் பட்டய நிபுணத்துவ முகாமையாளர் நிறுவனத்தின் (இலங்கை) முதுநிலை அங்கத்தவராவார்.

திரு. பஸ்நாயக லண்டன் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக இளமாணி பட்டம் பெற்றுள்ளதுடன் அவர் PIM நிறுவனம், ஸ்ரீறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் எக்சகட்டிவ் முதுமாணி பட்டமும் பெற்றுள்ளார். கார்டிப் மெட்ரோபொலிடன், UK பல்கலைக்கழகத்தில் சர்வதேச வர்த்தகம் இலங்கை சட்ட முதுகலைபட்டம் (LLB) பெற்றவர்.

திரு. பஸ்நாயக தனது கணக்கீட்டுத் தொழிலை, உலகத்திலுள்ள பாரிய நிபுணத்துவ சேவை வழங்கும் வலையமைப்புக்களில் ஒன்றான ஏர்ஸ். அன். யங் நிறுவனத்தில் ஆரம்பித்தார். 35 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தையும் பரந்துபட்ட திறன்களையும் கொண்டு பலதரப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டு வணிக கம்பனிகளில் நிறைவேற்று தர நிலைகளில் பணிபுரிந்துள்ளார்.

பிற தற்போதைய நியமனங்கள்

தலைவர் – ஆயு வென்சர் (தனியார்) கம்பனி மற்றும் மீடியாமார்கெட் (தனியார்) கம்பனி

பணிப்பாளர் – மிடாஸ் செயலாளர் சேவைகள் (தனியார்) கம்பனி மற்றும் ஏசியன் முகாமைத்துவ (தனியார்) கம்பனி

முன்னைய முக்கிய நியமனங்கள்

முகாமைத்துவ பணிப்பாளர் – இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், தலைவர் சிலோன் லங்கா ஹொட்டல்ஸ் அன் ஸ்பா (தனியார்) கம்பனி, நிதி பணிப்பாளர் – அசோசியேட்டட் நியுஸ்பேர்ப்பஸ் ஆப் சிலோன் லிமிடட், பணிப்பாளர் – கல்ஓயா தோட்டம் (தனியார்) நிறுவனம், பணிப்பாளர் (தனியார்) நிறுவனம், நிறைவேற்று பணிப்பாளர் – அபோஜி குழும நிறுவனம், மற்றும் சிலோன் நியுஸ்பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனம்.

திரு. எம் பி ஏ டபுள்யூ பீரிஸ்

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

நியமன திகதி

12 ஒக்டோபர் 2020

திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

திரு பீரிஸ் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து இயற்பியல் அறிவியல் இளமாணி முதல்தர பட்டம் பெற்றவர், மற்றும் தொழில் முறை வங்கியாளர்கள் சங்கம், இலங்கை வங்கியாளர் நிறுவனம் இலங்கை கடன் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவன உறுப்பினர் ஆவர்.

பிற தற்போதைய நியமனங்கள்

பணிப்பாளர் – என்எஸ்பி நிதி மேலாண்மை தனியார் நிறுவனம், பணிப்பாளர் – இலங்கை வங்கியாளர் நிறுவனம் (IBSL), பணிப்பாளர் – இலங்கை வங்கிகள் சங்கம் (SLBA), பணிப்பாளர் – இலங்கை குறைகேள் நிறுவனம் (FOSL).

முன்னைய முக்கிய நியமனங்கள்

திரு. பீரிஸ் தொழில்ரீதியில் தகுதிபெற்ற வங்கியாளர். அவர் 1988 இல் என்எஸ்பியில் பயிற்சி நிர்வாகமாக சேர்ந்ததிலிருந்து 34 ஆண்டுகளுக்கு மேலக அனுபவம் பெற்றவர். பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமனம் பெறுவதற்கு முன்னர், அவர் வங்கி கிளைச்செயற்பாடுகள் உட்பட கிளை நிர்வாகம், சில்லறைக்கடன், சர்வதேச வங்கி, கிளை மேலாளர் என்ற நிலையில் அஞ்சல் வங்கி, வலய முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், துணை பொது முகாமையாளர்.

திருமதி அனுபாமா முகாந்திரம்

சபையின் செயலாளர்

நியமன திகதி

06 டிசெம்பர் 2016

திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

ஒரு வழக்கறிஞராகிய திருமதி அனுபாமா முகாந்திரம் அவர்கள் இங்கிலாந்தின் கார்டி.ப் மெட்ரொபொலிடன் பல்கலைக்கழகத்தின் சட்ட முதுமாணிப் பட்டம் (LLM), மணிப்பால் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுமாணி (MBA) பட்டம் மற்றும் இலங்கை சட்டக் கல்வியின் கூட்டிணைத்த குழுமத்தின் வங்கி மற்றும் காப்புறுதி சட்டப் பட்டத்தின் பின்னான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அவர் தற்போது இலங்கை பட்டயம் பெற்ற கூட்டுவணிக செயலாளர் நிறுவகக் கற்கையினை மேற்கொண்டுள்ளார்.

6 டிசம்பர் 2016 அன்று தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, அவர் நவம்பர் 2015 முதல் டிசம்பர் 2016 வரை பணிப்பாளர் சபையின் உதவி செயலாளராக பணியாற்றியுள்ளார். அவர் வரையறுத்த என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனியின் கம்பனி செயலாளராக 2015 முதல் 2017 வரை பணியாற்றியுள்ளார். வங்கி மற்றும் நிதித் துறையிலான தனது 24 ஆண்டுகால அனுபவத்தில், மக்கள் வங்கியில் சட்ட அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபையின் உதவி செயலாளராக 18 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியுள்ளார்.

திருமதி முகாந்திரம் அவர்கள் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளர் (வணிகச் சட்டம்) ஆவார். மேலும் அவர் இலங்கையின் வங்கி சபை/கம்பனி செயலாளர்கள் அமையத்தின் ஸ்தாபக செயலாளர் ஆவார்.

BAC சபை கணக்காய்வு குழு தலைவர்	BAC சபை கணக்காய்வு குழு அங்கத்தவர்
BHRRC சபை மனிதவள மற்றும் ஊதிய குழு தலைவர்	BHRRC சபை மனிதவள மற்றும் ஊதிய குழு அங்கத்தவர்

நிறுவன முகாமைத்துவம்



திரு எம் பி ஏ டபிள்யூ பீரிஸ்
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி



திரு. கே ரவீந்திரன்
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்



செல்வி. ஜி வீ ஏ டி டி சில்வா
பிரதிப் பொது முகாமையாளர் (திறைசேரி)



திரு. ஜீ டபிள்யூ ஈ ஜெயவீர
பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)



செல்வி. எம் என் ஏ பெர்னாண்டோ
பிரதிப் பொது முகாமையாளர்
(மனித வள அபிவிருத்தி)



கலாநிதி. ஏ கே எல் இளேசிங்க
பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிரதான தகவல் அதிகாரி)



திருமதி எம் ஏ கோமஸ்
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்)



திரு. டபிள்யூ எம் ஆர் பீ வீரக்கோன்
பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்)



திருமதி. கே. டீ. ஜெயதிலக
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)/
பிரதம சட்ட அலுவலர்



திரு. ரீ எச் எஸ் அத்தபத்து
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி, நிறுவன திட்டமிடல், மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்ப முறைமை)

நிறைவேற்று முகாமைத்துவம்



திரு. கே எம் டபிள்யூ எச் கருணாரத்ன
உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்)



திரு. ஜே எச் ரீ சந்திரரத்ன
உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்)



திரு. ஏ எல் ஏ ஹலீம்
உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)



திருமதி. டபிள்யூ பீ யூ ஏ டீ சில்வா
உதவிப் பொது முகாமையாளர் (நிறுவன நிதி)



திருமதி. ஆர் ஏ என் என் விஜேசிங்க
உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)



திருமதி. ஐ கே எல் சசி மகேந்திரன்
இணக்குவிப்பு அலுவலர்



திருமதி. ஆர் பி ஏ எம் பீ ராஜநாயக்க
பிரதம இடர் அலுவலர்



திருமதி. சீ டபிள்யூ பத்திரன
உதவிப் பொது முகாமையாளர்
(துணைச் சேவைகள்)



திருமதி. எஸ் டபிள்யூ ஏ வீரசிங்க
உதவிப் பொது முகாமையாளர் (திறைசேரி)



திரு. எல் சீ சேனநாயக்க
உதவிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)



திருமதி. அனுபமா முகாந்திரம்
சபை செயலாளர்



திரு. எம் டீ சுரஞ்ஜன
உதவிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)



திரு. எச் எம் ஜீ பீ ஜே ஹேரத்
உதவிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்)



திரு. எஸ் சிவசொரூபன்
உதவிப் பொது முகாமையாளர்
(அஞ்சல் வங்கியியல்)



திரு. டீ எம் சீ பீ பீ திஸாநாயக்க
உதவிப் பொது முகாமையாளர்
(மைய - வங்கியியல் மற்றும் சர்வதேச வங்கியியல்)



திருமதி. எஸ் எச் ஏ எஸ் குமாரி
உதவிப் பொது முகாமையாளர் (மீட்பு)



திரு. டீ எல் பீ அபயசிங்க
பிரதம நிறைவேற்று அதிகாரி, தே.சே.வ
நிதி முகாமைத்துவ கம்பனி

பிரதான முகாமையாளர்கள்

திரு. டீ சீ ஒலபொடுவ
பிராந்திய முகாமையாளர் (மேற்கு 1)
பிராந்திய அலுவலகம் (மேற்கு 1)

திருமதி. சீ என் ஏக்கநாயக்க
பிராந்திய முகாமையாளர் (மேற்கு 2)
பிராந்திய அலுவலகம் (மேற்கு 2)

திரு. எஸ் பி சுரங்க
பிராந்திய முகாமையாளர் (சப்ரகமுவ)
பிராந்திய அலுவலகம் (சப்ரகமுவ)

திருமதி ஜே எம் கே ஜெயசிங்க
பிராந்திய முகாமையாளர் (வடமேற்கு)
பிராந்திய அலுவலகம் (வடமேற்கு)

திரு. என் பகீரதன்
பிராந்திய முகாமையாளர் (வடக்கு)
பிராந்திய அலுவலகம் (வடக்கு)

திரு. எச் டீ யூ சுசந்த குமார
பிராந்திய முகாமையாளர் (தெற்கு)
பிராந்திய அலுவலகம் (தெற்கு)

திரு. கே சன்சயன்
பிராந்திய முகாமையாளர் (கிழக்கு)
பிராந்திய அலுவலகம் (கிழக்கு)

திரு. எச் என் ஆர் சேனாதீரா
பிராந்திய முகாமையாளர் (மத்திய)
பிராந்திய அலுவலகம் (மத்திய)

திரு. ஏ பி சீ ஆர் விஜயபால
பிரதான முகாமையாளர்
கிளை முகாமைத்துவப் பிரிவு

திரு. எம் வீ ஜீ சுசில் குமார
பிரதான முகாமையாளர் (சர்வதேச வங்கியியல்)
சர்வதேச வங்கியியல் பிரிவு

திரு. கே டி எஸ் எஸ் குணவர்தன
பிரதான முகாமையாளர் (பாதுகாப்பு)
பாதுகாப்பு பிரிவு

திரு. எம் டபிள்யூ கே சி டீ சில்வா
பிரதான முகாமையாளர்
ஒய்வூதிய நிதியப் பிரிவு

திரு. கே டீ கே கே விஜயவர்த்தன
பிரதான முகாமையாளர்
அட்டை நிலையம்

திரு. ஏ பி ஆர் டீ சொய்சா
பிரதான முகாமையாளர் (தகவல் முறைமைப் பாதுகாப்பு) தகவல் தொழில்நுட்ப பிரிவு

திருமதி. எஸ் எஸ் ஜே பி எஸ் டீ சில்வா
பிரதான முகாமையாளர் (நிதி)
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு

திரு. எச் எஸ் பி ரணவீர
பிரதான முகாமையாளர் (நிதி)
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு

திரு. எஸ் ஏ ஏ பட்டுவந்துடாவ
பிரதான முகாமையாளர்
கடன் பிரிவு

திருமதி. எஸ் ஏ எம் ஏ சீ ஜே எஸ் கே சேனாரத்ன
பிரதான முகாமையாளர் (சட்டம்)
சட்டப் பிரிவு

திருமதி. என் ஐ குணதிலக
பிரதான முகாமையாளர்
கடன் பிரிவு

திருமதி. டீ ஏ வீ விஜேவந்த
கிளை முகாமையாளர்
கிரிபத்கொட கிளை

திருமதி. கே பி என் சீ குமாரி
பிரதான முகாமையாளர் (நிதி)
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு

திரு. எம் டி ஹுசைன்
பிரதான முகாமையாளர் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழிற்பாடுகள்)
தகவல் தொழில்நுட்ப பிரிவு

திருமதி. எம் டி டீ பெரேரா
பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)
சந்தைப்படுத்தல் பிரிவு

திருமதி. டபிள்யூ ஈ சீ பெரேரா
பிரதான முகாமையாளர்
இடர் முகாமைப் பிரிவு

திரு. ஜே எல் பி மஞ்சுள
பிரதான முகாமையாளர்
இடர் முகாமைப் பிரிவு

திரு. டீ டி டீ பெரேரா
பிரதான முகாமையாளர் (மனிதவளம்)
மனிதவள அபிவிருத்தி பிரிவு

திருமதி. கே சீ தயானந்தன்
கிளை முகாமையாளர்
யாழ்ப்பாணம் கிளை

திரு. ஏ எம் ஜீ அழககோன் பண்டா
கிளை முகாமையாளர்
கம்பஹா கிளை

திரு. என் டீ சீ டீ குலரத்ன
கிளை முகாமையாளர்
நீர்கொழும்பு கிளை

திரு. ஆர் டீ சுபசிங்க
கிளை முகாமையாளர்
ஹோமாகம கிளை

திரு. எச் எம் ஜி ஹேரத்
கிளை முகாமையாளர்
பத்தரமுல்ல கிளை

திரு எச் ஜி எச் பீ கே பியரத்ன
கிளை முகாமையாளர்
தலைமை காரியாலய கிளை

திரு. கே வீ டபுள்யூ எச் தர்ஸன
கிளை முகாமையாளர்
களுத்துறை கிளை

திரு.எஸ் எம் ஆர் புஸ்பகுமார
கிளை முகாமையாளர்
குளியாபிட்டிய கிளை

திருமதி. டீ ஏ டி என் அனுருத்தி
கிளை முகாமையாளர்
காலி கிளை

திரு. ஈ ஏ ஆர் அபேயசிங்க
பிரதான முகாமையாளர்
கடன் பிரிவு

திருமதி. ஜி ஏ டி கொடமுல்ல
பிரதான முகாமையாளர்
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு

திரு. ஐ என் எச் ஏ நாணயகார
கிளை முகாமையாளர்
நுகேகொட கிளை

திரு. டபுள்யூ எம் எம் ஆர் பீ பெரேரா
கிளை முகாமையாளர்
நகர கிளை

திரு. ஆர் எம் சி கே ராஜபக்ச
பிரதான முகாமையாளர்
(அஞ்சல் வங்கி நிர்வாக பிரிவு)

திருமதி. ஏ டி தர்மபிரியா
பிரதான முகாமையாளர் (சட்டம்)
கண்டி பிரிவு

திரு. டபுள்யூ ஏ யு நந்தன
கிளை முகாமையாளர்
பிலியந்தலை கிளை

திரு. பீ வீ ஆர் சிசிர குமார
கிளை முகாமையாளர்
குருணாகல கிளை

திரு. ஏ பி வீமலதாஸ
கிளை முகாமையாளர்
மகரகம கிளை

திரு. டி ஜி எச் ஜெயதிஸ்ஸ
கிளை முகாமையாளர்
பதுளை கிளை

திரு. எஸ் எல் எச் வீஜேசிங்க
பிரதான முகாமையாளர் (நிதி)
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு

திரு. ஈ ஏ ஏ சந்திம
பிரதான முகாமையாளர் (வளாக)
வளாகப் பிரிவு

திருமதி. பி எம் எம் சி கே பஸநாயக்க
பிரதான முகாமையாளர் (தகவல்
தொழில்நுட்பம்) தகவல் தொழில்நுட்ப பிரிவு

திருமதி. யு ஜி மல்லிகா
பிரதான முகாமையாளர் (தகவல்
தொழில்நுட்பம்)
தகவல் தொழில்நுட்ப பிரிவு

திரு. தனீஸ்வரன்
கிளை முகாமையாளர்
வெள்ளவத்தை கிளை

திரு. பி ஏ பேமரத்ன
பிரதான முகாமையாளர்
கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவு

திரு. கே எச் ஏ சுனில்
கிளை முகாமையாளர்
மாத்தறை கிளை

திரு. யு ஏ டி அக்குயனாஸ்
பிரதான முகாமையாளர் (வழங்கல்)
வழங்கல் பிரிவு

திரு. எச் ஏ டி பீ குணவர்தன
பிரதான முகாமையாளர்
பயிற்சி பிரிவு

திருமதி. எம் டி ஏ பீ குணதிலக
பிரதான முகாமையாளர்
தகவல் தொழில்நுட்ப – மின் வங்கியியல் பிரிவு

திருமதி. கே ஜே ரணசிங்க
கிளை முகாமையாளர்
பாணந்துறை கிளை

திரு. எச் பீ டீ எஸ் ஜெயசூர்ய
பிரதான முகாமையாளர்
மீட்பு பிரிவு

திரு. எச் ஏ ஏ சௌமியகாந்த
பிரதான முகாமையாளர்
கிளை முகாமைத்துவப் பிரிவு

திரு. ஐ எஸ் ஜெயசூரிய
பிரதான முகாமையாளர்
கிளை முகாமைத்துவப் பிரிவு

திரு. என் எச் என் எல் நவரத்ன
பிரதான முகாமையாளர் (நலன்)
நலப் பிரிவு

நிறுவன ஆளுகை



தலைவரின் செய்தி

2022 ஆம் ஆண்டு முழுவதும் பல்வேறுபட்ட சவால்களால் இலங்கை பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. CBSL இன் கொள்கை வீதம் ஏப்ரல் 2022 இல், 700bps இனால் அதிகரிக்கப்படதால் வங்கி பாரிய தாக்கத்தினை எதிர்நோக்கியது.

அதற்கு பதிலளிக்கும் வகையில், சபையானது, தாங்கி கொள்ளும் தன்மை, ஏற்புடைய தன்மை, மற்றும் நிலைத்திருத்தல் என்பவற்றில் கவனம் செலுத்தி வங்கியினை கடுமையான மற்றும் மாறுபடும் பேரினப் பொருளாதாரத்தில் வங்கி மூலோபாயத்தினை முன்னேற்ற மற்றும் புதிய குறிக்கோள்களை மதிப்பான வகையில் உருவாக்குவதற்கும் துணைபுரிந்தது.

முன்னோக்கிப் பார்க்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக இன்னுமொரு கடுமையான வருடத்தினை இலங்கை எதிர்நோக்குகிறது. சபையானது நல் ஆளுகை மற்றும் அக்கறையுடையோர் இணக்கப்பாடு என்பவற்றில் தொடர்ந்தும் கவனம் செலுத்துகிறது. குறித்த வருடத்தில் சபை ஈடுபட்ட பிரதான நிறுவன ஆளுகை நடவடிக்கைகள் வருமாறு.

மதிப்பினை பாதுகாக்க வலுவான நிர்வாக முறைமையினை உறுதிப்படுத்தல்

நெருக்கடியான காலங்களில் சிறந்த நிர்வாகம் முக்கியத்துவம் பெறுகிறது. நெருக்கடிகள் ஒரு எதிர்வினை அணுகுமுறையினை உறுதிப்படுத்தலாம். ஒரு நிறுவனத்துக்கு நீண்டகால நிலைத்த தன்மை மிக முக்கியமானது எனினும் ஒரு தெளிவான வெளிப்படுத்தப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ற நிர்வாகக் கட்டமைப்பு, அதில் அடங்கும் கடுமையான இடர் மேலாண்மை, தகவல் அடிப்படையிலாக முடிவெடுத்தலுக்கு ஆதரவளிக்கும். எமது நிர்வாக கட்டமைப்பை செயற்படுத்துகின்ற நிர்வாகத்துக்கு இடையேயான சீரமைப்பு மற்றும் வங்கி தொடர்பான சபை மதிப்பு உருவாக்கம் நோக்கியதாகும். ஆக ஒரு சூழலில் சீரமைப்பு முக்கியமானது அதற்கு விரைவாக முடிவெடுக்க வேண்டும். எங்கள் நிர்வாகக் கட்டமைப்பு தன்னை நிலை நிறுத்தும் மற்றும் தொற்றுநோயின் பரவலின் போது ஆதரவளித்தது என நான் உறுதியாக நம்புகிறேன். நிர்வாக கட்டமைப்பு சுறுசுறுப்பான முடிவெடுத்தலை உறுதிப்படுத்தி வங்கி மற்றும் அதன் பங்குதாரர்களை உடனடித் தாக்கங்களிலிருந்து பாதுகாத்தது. எம்மை எதிர்காலத்தில் வழிநடத்திச் செல்லக்கூடிய தந்திரோபாய வழிமுறையினை நாம் கொண்டுள்ளோம்.

சபை பன்முகப்படுத்தல் மற்றும் சுதந்திரத்தினை பலப்படுத்தல்

நாட்டின் மாபெரும் சேமிப்பு வங்கியாக, இலங்கையரிடையே சேமிப்பு பழக்கத்தினை உருவாக்குதலை நோக்காகக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கி அதன் சபை பன்முகப்படுத்தல் மற்றும் சுதந்திரத்தினை அதிகரிக்கும் பயணத்திலுள்ளது. நாம் திறன், அனுபவம் மற்றும் பால் தொடர்பில் பன்முகப்படுத்தப்பட்ட சபையினைக் கொண்டுள்ளோம். பெறுமதியினை அதிகரிப்பதற்காக தனித்துவமான திறன்கள் மற்றும் அனுபவமுள்ள பணிப்பாளர்களை எமது குழுக்களில் கொண்டுள்ளோம். 2022 ஆம் ஆண்டுக்கான சபையின் விபரங்கள் பக்கம் 184 முதல் 186 இல் வழங்கப்பட்டுள்ளது. ஒரு தலைவராக சபையின் உரையாடல் விவாதங்களில் ஈடுபாடு மற்றும் தரம் பற்றி நான் பெருமைகொள்கிறேன். எமது பங்குதாரர்கள் மீதான கூட்டு பொறுப்பினை பாராட்டி, பரஸ்பர ஆழமான மரியாதையினை அடிப்படையாக கொண்டு பிரச்சினைகள் தொடர்பில் வலுவான விவாதங்கள் நடாத்தப்படும். புதிய தலைவராக சபையின் ஈடுபாடு மற்றும் கூட்டங்கள் பற்றி நான் அறிவிக்கப்பட்டேன். பிரச்சனைகள் தொடர்பில் சபையில் குறித்த வருடத்தில் அலுவலகத்திருந்த அங்கத்தவர்கள் எமது வங்கியில் அக்கறை கொண்டுள்ளோரின் பொறுப்புக்களை கருதி வாதாடினார்கள்.

புதிய பல்வகைப்பட்ட சபையானது உறுதியான வர்த்தக மற்றும் தொழில்நுட்ப திறன்கள் உடன் பொருத்தமாக வாதாட, அறிவுரை வழங்க, பொருத்தமான விடயங்களில் முடிவுகளை எடுக்க மற்றும் ஆளுமை பங்கு மற்றும் பொறுப்புகளை நிறைவேற்ற நியமிக்கப்பட்டனர். (சபையின் விபரங்கள் பக்கம் 170 முதல் 172 இல் வழங்கப்பட்டுள்ளது)

அக்கறைதாரர்களின் ஈடுபாடு

பெறுமதி உருவாக்கத்தின் போது அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தினை சபை அறிந்துள்ளது. எமது நோக்கத்தில் மத்தியஸ்தம் வகிப்பது பங்குதார்களுக்கான வங்கியின் பொறுப்பினை அடைதல் மற்றும் கடமைகளை நிறைவேற்றல் என்பனவாகும். மேலும் அக்கறைதாரர்களின் ஈடுபாட்டை வங்கி எவ்வாறு கருத்தில் கொள்கிறது என்பது பக்கம் 90 - 98 வரை வழங்கப்பட்டுள்ளது.

புதிய தந்திரோபாயம் தொடர்பில் சபையின் பார்வை

வங்கியின் புதிய தந்திரோபாயத்தினை உருவாக்குவதில் சபை ஆழமாக ஈடுபட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான பிரதான சபை கலந்துரையாடல்கள் பற்றிய மேலதிக விபரங்கள் பக்கம் 70 மற்றும் 89 இல் உள்ளது.

கலாச்சரத்தில் முன்னிற்றல்

பெறுமதிசேர் மற்றும் ஆரோக்கியமான கலாச்சாரத்தினை உருவாக்க சபையானது இந்த வருடம் முன் நின்றுள்ளது. பொறுமதி நோக்கிய கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு சபையின் ஆய்வு, மேற்பார்வை மற்றும் பார்வை பற்றிய விபரங்கள் பக்கம் 179 உள்ளது.

சபை மற்றும் சபை உப குழுக்களின் மதிப்பீடு

குறித்த வருடத்தில் சபை வருடாந்த சபை மற்றும் சபை உப குழுக்களின் மதிப்பீட்டினை நடாத்தியது. இந்த செய்முறை பற்றிய மேலதிக விபரங்கள் பக்கம் 198 காணப்படுகிறது.

நிறுவன ஆளுகை பணிப்புரை


2007ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் நிறுவன ஆளுகைப் பணிப்புரைக்கு அமைவான இணக்கப்பாடுகள் பக்கம் 410 முதல் 429 வரை வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை தொடர்பான திருத்தப்பட்ட சிறப்பு நடைமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.



கலாநிதி ஹர்ஷ கப்ரால் பீசி

தலைவர்

17 மே 2023
கொழும்பு



உரு 23 எமது வெளிப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஆளுகை முறைமை

பெறுமதி உருவாக்கத்துக்கான எமது ஆளுகைத் தத்துவம்

ஒருங்கிணைந்த சிந்தனை

தேசிய சேமிப்பு வங்கியில் ஆளுகை மற்றும் தலைமைத்துவத்திற்கான எங்கள் அணுகுமுறை இணக்கத்திற்கு அப்பாற்பட்டது. எங்கள் வியாபாரத்தில் ஆளுகை மற்றும் தலைமைக்கான எங்கள் அணுகுமுறை மேம்பட்ட பொறுப்புக்கூறல், வினைத்திறனான தலைமைத்துவம், வலுவான இடர் முகாமைத்துவம், தெளிவான செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் பரந்தளவிலான வெளிப்படைத்தன்மை என்பவற்றின் ஊடாக பதிலளிக்கக்கூடிய சிந்தனை மற்றும் பொறுப்பான நடத்தை ஆகியவற்றின் மூலம் பகிரப்பட்ட மதிப்பை உருவாக்குகின்றது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். நிலையான மதிப்பை அடைவதற்காக முன்னோக்கி செல்லும் வழியில், இப்போதும் எதிர்காலத்திலும் எங்கள் நலன்விரும்பிகளுடன் நம்பிக்கையை தக்கவைத்துக்கொள்வதற்கு வியாபார இயலுனராக ஆளுகையை சபை மற்றும் சபை குழுக்கள் ஏற்றுக்கொள்கின்றன.

சபையானது தனது மேற்பார்வை செயற்பாட்டின் போது ஒருங்கிணைந்த சிந்தனை தத்துவத்திற்கமைய ஆளுகைக்கு பல்வேறுபட்ட மூலதன அணுகுமுறையை பின்பற்றுகிறது.

எப்போதும் உரு மலர்சியுறுகின்றதும் சிக்கலானதுமான ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலில், ஒழுங்குமுறை பரப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு முன்கூட்டியே செயல்படும் அதேவேளையில், சிறந்த ஆளுகை நடைமுறைகளைச் செயற்படுத்த வங்கிகள் அந்த மாற்றங்களை விரைவாக மாற்றியமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எங்கள் நலன்விரும்பிகளின் சிறந்த நலனுக்காக செயல்பட உலகத்தரம் வாய்ந்த வங்கி நடைமுறைகள் மற்றும் வலுவான நிறுவனக் கட்டடமைப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதை உறுதிப்படுத்த எங்கள் நிர்வாக கட்டமைப்பை நாங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கின்றோம்.

நாங்கள் மிக உயர்ந்த ஆளுகையை மற்றும் அந்த பெறுமதிகளும் வெகுமதிகளும் முன்மாதிரியான நெறிமுறை நியமங்கள்,

தனிப்பட்ட மற்றும் கூட்டிணைந்த ஒருமைப்பாடு மற்றும் ஏனையவர்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு காலாச்சாரத்தை வளர்க்கும் முயற்சியை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடனுள்ளோம். பொறுப்பான கூட்டிணைந்த பிரஜையாக இருக்க வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தில், ஒழுங்குமுறைத் தேவைகள், தன்னார்வ ஒழுக்கநெறிகள் மற்றும் வங்கிக்கு பொருந்தக்கூடிய நிறுவன ஆளுகையின் உள்ளக கூறுகளைப் பின்பற்றுகின்றோம்.

ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் தொடர்பிலான எமது அணுகுமுறை

நன்கு கட்டமைக்கப்பட்ட ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் வங்கி நன்கு நிர்வகிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுவதையும் ஒருங்கிணைந்த சிந்தனையையும் உறுதி செய்கின்றது. தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகாரக் குழுவுடன் வங்கி நன்கு வரையறுக்கப்பட்ட நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த ஆளுகை நடைமுறை இப்போதும் எதிர்காலத்திலும் நமக்கும் எங்கள் அக்கறைதாரர் பெறுமதிகளை உருவாக்குவதற்கு இந்த உபாயமார்க்கத்திற்கு எதிராக வழங்குவதை உறுதிசெய்கின்றது. பணிப்பாளர் சபையின் பொறுப்புகள் பணிப்பாளர் சபைக் குழுக்கள், முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் நிர்வாகத்திற்கு வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் சபைக் குழுக்களின் உதவியுடன் பணிப்பாளர் குழு வங்கியின் உபாயமார்க்கத்தை அடைவதற்கு நெறிமுறை மற்றும் பயனுள்ள தலைமையை ஒப்புக்கொள்ளப்பட்ட இடர் நாட்டத்திற்குள் வங்கி நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்கின்றது. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் வழிகாட்டப்பட்ட உபாயமார்க்கங்களை செயற்படுத்தும் பொறுப்பு முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவக் குழுக்களைச் சார்ந்ததாகும்.

எமது சபையினால் அங்கிகரிக்கப்பட்ட ஆளுகை செய்முறையானது அனைத்து வங்கித் தொழிற்பாடுகளிலும் உள்வாங்கப்பட்டுள்ளதோடு பொறுப்பான முடிவெடுத்தலுக்கான தெளிவான நோக்கு மற்றும் பொறுப்பான நடத்தைக்கு உதவியளிக்கிறது. நமது செயல்முறையினை பின்வருவனவற்றுக்காக அமுல்படுத்துகின்றோம்:

- சபையினால் அங்கிகரிக்கப்பட்ட இடர்நிலை மற்றும் இடர் மற்றும் வருவாய் நடுநிலைமைக்கு ஏற்ப தந்திரோபாய வாய்ப்புக்களில் ஈடுபடுதல்
- தவறான நடத்தையினால் ஏற்படக்கூடிய நிதி இழப்பு மற்றும் நன்மதிப்பிற்கான பாதிப்பினை தடுக்க வினைத்திறனான கட்டுப்பாடுகளை வழங்கல்
- எமது சந்தைகளில் சரியான நடத்தைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த சரியான வணிகத்தினை, சரியான முறையில் நடாத்துதல்
- எமது வங்கி, பங்குதாரர் மற்றும் சமூகத்திற்கு எதிர்கால நன்மையினை ஏற்படுத்த சிறந்த ஒரு பிரஜையாக வளங்களை மேம்படுத்தல், வினைத்திறனான வள ஒதுக்கீடு மற்றும் உறவுகளை பேணுதல்.

நாம் எப்படி ஆளுகிறோம்

வெகுமதிகள், நியாயமான நடைமுறை, தனிப்பட்ட மற்றும் நிர்வாக நேர்மை மற்றும் ஏனையோரை மதித்தல் என்பவற்றை கொண்ட கலாச்சாரத்தினை மேம்படுத்தும் உயர்தர ஆளுகைக்கு முக்கியத்துவமளிக்கிறார். சிறந்த நிறுவன பிரஜையாக திகழ்வதற்கு ஒழுங்குவிதிசார் தேவைப்பாடு, வங்கிக்கான தன்னிச்சையான விதிகள் மற்றும் உள்ளக கூறுகளை நாம் பின்பற்றுகிறோம்.

ஒழுங்கு விதிசார் தேவைப்பாடுகள்

- 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்.
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்.
- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்
- 1954 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் காரியாலயங்கள் சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்
- இலங்கையின் பொதுத் துறை ஸ்தாபனங்களின் நிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறை விதிகள்.
- வங்கி பணிப்பாளர்களுக்கான இலங்கை பட்டயக்கணக்காய்வாளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டில் பணிப்பாளர் வாக்கியம்
- இலங்கை மத்திய வங்கியினால், மிகப் பிரத்தியேகமாக, 2007 ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் நிறுவன ஆளுகை தொடர்பான உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கு வழங்கப்படும் அனைத்து வழிகாட்டல்களும்

(பக்கம் 410 முதல் 429)

வங்கிக்கான தன்னிச்சையான விதிகள்


- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு.

(பக்கம் 430 முதல் 434)

உள்ளக கூறுகள்

- பணிப்பாளர் சபை பட்டயம் மற்றும் சபை உபகுழுக்களின் பட்டயம்.
- ஊழியர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை.
- பணிப்பாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை.
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள்.

தேசிய சேமிப்பு வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பு



நியமனப் பாய்வு பொறுப்பு பாய்வு நிர்வாகப் பாய்வு கலந்துரையால்

CMC	நிறுவன முகாமைத்துவக் குழு	BOSC	கிளை தொழிற்பாட்டு உந்துதல் குழு	CPC Major	நிறுவன பெறுகைக் குழு – பாரிய
ALCO	சொத்துக்கள் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு	MKTC	சந்தைப்படுத்தல் குழு	CPC Minor	நிறுவன பெறுகைக் குழு – சிறிய
CC	கடன் குழு	ITSC	தகவல் தொழில்நுட்ப உந்துதல் குழு	EPC	நிறைவேற்றுப் பெறுகைக் குழு
IC	முதலீட்டுக் குழு	ORMC	தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு	CSC	நிறுவன நிலைத்திருத்தல் குழு
EC	உரிமைப்பங்குக் குழு	PDC	பண்ட அபிவிருத்திக் குழு	SMC	சிரேஷ்ட முகாமைத்துவக் குழு
TNIC	கேள்விமனு மற்றும் புதிய முதலீட்டுக் குழு	HRC	மனித வளக் குழு	ISC	தகவல் பாதுகாப்புக் குழு
PRC	செயலாற்றுகை மீளாய்வுக் குழு				

உரு 24

சிறந்த நடைமுறைகளைத் தழுவிய ஒரு நன்கு நிர்வகிக்கப்படும் வங்கி நலன்விரும்பிகளின் நம்பிக்கையைத் தூண்டுகின்றது, மூலதனங்களின் ஆகுசெலவைக் குறைக்கின்றது, அனைத்தையும் உள்ளடக்கிய ஆளுகை கட்டமைப்பை உருவாக்குகின்றது மற்றும் நிலையானதாக இருக்க விரும்புகின்றது என்பதை பணிப்பாளர் சபை அறிந்திருக்கின்றது.

வங்கியை வழிநடத்துவதில் பணிப்பாளர் சபை எடுக்கும் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளால் வங்கியின் வடிவம் மற்றும் வாய்ப்புகள் மற்றும் நீண்டகால நம்பகத்தன்மை தீர்மானிக்கப்படும். பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கி வங்கி முழுமையாக உறுதியளித்திருப்பதை பணிப்பாளர் சபை உறுதி செய்கின்றது. இது உபாயமார்க்க அமுல்படுத்தலுடன் முன்னோக்கிச் செல்கையில் பொறுப்பான நிறுவன பிரஜையாக இருக்க உதவும். செயற்திட்டத்தின் ஊடாக வங்கியின் உபாயமார்க்கத்தின் அமுலாக்கத்தை பணிப்பாளர் சபை கண்காணிக்கின்றது, இது உத்திகளை செயற்படுத்துகின்றதுடன் உபாயமார்க்கத்தை பூர்த்திசெய்தலினுள் தொடர்புடைய சாதனைகள் மற்றும் இடர்களைத் தவிர்த்துவிடுகின்றது. நீண்டகால நிலைத்திருப்பு என்பது பணிப்பாளர் சபையின் பிரதான முன்னிருத்தலாக இருப்பதுடன் இது பொருளாதார, சமூக, ஆளுகை மற்றும் சூழல் பெறுபேறுகளை தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கின்றது.

சபையானது நாளாந்த முகாமைத்துவ நடவடிக்கைகளை பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் பகிர்ந்தளித்துள்ளது. சபையினால் அங்கிகரிக்கப்பட்ட மூலோபாயங்களை அமுல்படுத்தல் மற்றும் வழங்கல் என்பன நிர்வாக முகாமை மற்றும் முகாமைக்குழுக்களின் பொறுப்பாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர்களுக்கு அமைவாக தொழிற்பாடுகளை நடத்துதல் மூலோபாய வணிக துறைகளின் பொறுப்பாகும்.


ஆளுகை கட்டமைப்பு பற்றிய விடயங்கள் 181 ஆம் பக்கத்தில் உரு 24 இல் பார்க்கவும்.

பணிப்பாளர் சபை

தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையானது வங்கியினுடைய உச்சமட்ட தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தை கொண்ட பகுதியாக இருப்பதுடன், இணைக்கப்பட்ட இடர் ஏற்பு மட்டத்தின் அடிப்படையில் உபாயமார்க்க திசைமுகப்படுத்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் அத்தகைய தீர்மானங்களை தந்திரோபாயங்களை அடைந்து கொள்வதற்கான கொள்கை சட்டத்தினை உருவாக்கல் ஆகியவற்றுக்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கு பாதகம் ஏற்படுத்தாத வகையில் வங்கியினுடைய நாளாந்த தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கும் உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி கண்காணிப்பதற்குமான பொறுப்பினை பணிப்பாளர் சபை கூட்டு வணிக முகாமைத்துவதற்கு பகிர்ந்தளித்து இருக்கின்றது. இந்த ஏற்பாடுகள் யாவும் பரஸ்பர கௌரவம் மற்றும் நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுகின்றன.

1971 ஆம் ஆண்டு 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களுக்கு அமைவாக சபை அமைக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை பட்டயத்தில் பணிப்பாளர் சபைக்கான அதிகாரங்கள் மற்றும் அதன் வகிபாகங்களும் பொறுப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. வங்கியின் தொழிற்பாட்டு செயற்றிறன், நிதி செயற்றிறன் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முகாமைத்துவ முறைமை மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்கு பொறுப்பானது மற்றும் முகாமைத்துவம் சபையிடம் வெளிப்படையானது. நிறுவன முகாமைத்துவம் மற்றும் சபைக்கு இடையிலான ஆழமான இணக்கப்பாடுகள் வங்கி முடிவெடுத்தல்களை உறுதிப்படுத்தகிறது மற்றும் சமநிலையான அதிகாரத்தினை உறுதிப்படுத்தும். இணக்கப்பாடுகள் பரஸ்பர மரியாதை மற்றும் நேர்மை அடிப்படையில் இடம்பெறும்.

சபையின் வகிபாகங்கள், பொறுப்புகள், மற்றும் அதிகாரங்கள்



உரு 25

பணிப்பாளர் சபை பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக்கான அதிகாரங்கள் மற்றும் அதன் வகிபாகங்களும் பொறுப்புகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

சபைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

- பணிப்பாளர் சபை பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அல்லது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டு வங்கி தொடர்பான எந்தவொரு விடயத்திலும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரமாக செயற்படுவது.
- வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைக் கையேடு மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டு நிதி தொடர்பான விடயங்களில் பொருத்தமான முடிவுகளுக்கு வருவது.
- அனைத்து மட்டங்களிலும் மிகவும் சாதகமான வணிக முயற்சிகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக வங்கியின் அனைத்து நடவடிக்கைகளையும் நிர்வகிப்பதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.
- அறிக்கைகள், ஒரு குழுவை நியமித்தல் அல்லது பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் படி பொருத்தமான எந்தவொரு முறையினையும் அழைப்பதன் மூலம் வங்கியின் செயற்திறன், முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் விசாரித்தல்.

பணிப்பாளர் சபையின் வகிபாகங்கள் மற்றும் சபையின் பொறுப்புகள்

- பணிப்பாளர் சபையிடமிருந்து பணிப்புரைகள் வழிகாட்டல்களை கோரும் அனைத்து மட்ட விடயங்களில் ஈடுபடுதல்.
- வங்கியின் முழுமையான தொழிற்பாடுகள் தொடர்பாக வழமையான கண்காணிப்பையும் மேற்பார்வையையும் பேணுதல்.
- எந்தவொரு பணிப்பாளர் சபை உப குழு, எந்தவொரு பணிப்பாளர், பொதுமுகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி அல்லது பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தும் வேறு எந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது.
- வங்கியினதும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி உள்ளடங்களாக பிரதான முகாமைத்துவ நபர்களின் செயலாற்றுகைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- சபையின் மனித வள ஊதியங்கள் குழு மற்றும் சபையின் நியமனக் குழுவின் நியதிகளின் படி பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி நியமித்தல் மற்றும் பதவியமர்த்தல்கள் மற்றும் பதவியுயர்வுகள்.


பணிப்பாளர் சபையின் அமைப்பு

வயது, பால், கலாச்சாரம், கல்வித்தகைமை, திறன்கள், அனுபவம், மற்றும் அறிவு தொடர்பாடல் பல்வகைப்பட்ட ஒரு சபையினை நாம் கொண்டுள்ளோம். இது கலந்துரையாடல், விவாதம், உள்ளீடு, சவால் மற்றும் தோற்றப்பாடான வெளியீடுகளை வழங்கக்கூடிய சூழலை கொண்டுள்ளது. நாம் தொழிற்படும் சூழல் தொடர்பிலான ஆளுகை, சமூக மற்றும் சட்ட கடப்பாடுகள் என்பவற்றை சபை உறுதி செய்ய அற்பணிப்புடன் செயலாற்றுகிறது.


2022 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையானது தமது நிபுணத்துவம் மற்றும் திறன்கள் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்கு முன் வைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அனுபவமிக்க தொழில்சார் நபர்களான ஏழு பணிப்பாளர்களை கொண்டுள்ளது. நிதியாண்டின் நிறைவின் போது, தற்போதைய பணிப்பாளர் சபையின் ஏழு பணிப்பாளர்களில் இரண்டு பணிப்பாளர்கள் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்றவர்களாக இருக்கும் அதேவேளை ஐந்து பணிப்பாளர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்றவராக இருக்கின்றார். பணிப்பாளர் சபையின் தலைமைத்துவத்திற்கும் அதன் செயற்திறனை உறுதி செய்வதற்கும் தலைவருக்கு ஒட்டுமொத்த பொறுப்பு உள்ளது. பணிப்பாளர் சபை வங்கி இடரை திறம்பட நிர்வகிக்கின்றது, நிதியியல் செயலாற்றுகை மற்றும் அறிக்கையிடலை கண்காணிக்கின்றது மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் அவற்றின் உரிய இடங்களில் உள்ளதென்பதை உறுதி செய்கின்றது.

2022 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் தகவல்கள் பக்கம் 184 முதல் 186 வரை மற்றும் சபையின் முக்கியமான அங்கத்துவங்கள் மற்றும் பதவிகள் பக்கம் 190 இல் வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய சபை அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து பணிப்பாளர்கள் (முழு சபை ஏழு பணிப்பாளர்களைக் கொண்டது) அவர்கள் சபையின் தன்னிச்சையான விடயங்களை மேற்கொள்ள தமது துறைகளில் சிறப்பு தேர்ச்சி மற்றும் திறன்களை கொண்டவர்கள். தற்போதைய சபையின் மூன்று பணிப்பாளர்கள் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள். தற்போதைய பணிப்பாளர்களின் தகைமை மற்றும் சபை உபகுழுக்களில் அங்கத்துவம் பற்றிய விபரங்கள் பக்கம் 170 முதல் 172 இல் வழங்கப்பட்டுள்ளது.

பால் பல்வகைமை வரைபடம் 42



பணிப்பாளர்களின் சுயாதீன தன்மை வரைபடம் 43





நிறுவன ஆளுகை

வயது ஆய்வு

வரைபடம் 44

சராசரி வயது 56 வருடங்கள





2022 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபை



திருமதி கேசிலா ஜயவர்தன

தலைவர்
சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

26 டிசெம்பர் 2019 – 26 டிசெம்பர் 2022

திறன்கள் மற்றும் அனுபவம்

- இளமாணி (ஹனர்ஸ்) மற்றும் முதுகலை அரசியல் அறிவியல் பட்டம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 15 வருடங்களாக அறிவியல் அரசியல் விரிவுரை
- இரண்டு அபிவிருத்தி வங்கிகளில் தலைவராக எட்டு ஆண்டுகள்

முந்திய முக்கிய நியமனங்கள்

- தலைவர் – கதுரட்ட அபிவிருத்தி வங்கி
- தலைவர் – பிராந்திய அபிவிருத்தி வங்கி
- மாகாணசபை உறுப்பினர்



திரு எரங்க ஜயவர்தன

சிரேஷ்ட பணிப்பாளர்
சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

பணிப்பாளர்:
2 ஜனவரி 2020 – 2 ஜனவரி 2023

சிரேஷ்ட பணிப்பாளர்:
15 ஜூன் 2020 – 2 ஜனவரி 2023

திறன்கள் மற்றும் அனுபவம்

- இளமாணி அறிவியல் பட்டம் மின் பொறியியல் – ரென்சீலர் பாலிடெக்னிக் நிறுவனம், அமெரிக்கா
- முதுகலைப்பட்டம் மின் பொறியியல் - ஸ்டான்பேர்ட் பல்கலைக்கழகம், அமெரிக்கா
- உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் முழுவதும் மின்பொறியியல் தொழில் அனுபவம்
- பதிப்பு எழுத்தாளர்

முந்திய முக்கிய நியமனங்கள்

- பணிப்பாளர் - டிஜிடல் மயமாக்கல் மாஸ் இன்டிமேட்ஸ் (தனியார்) கம்பனி
- தலைமை நிரிவாக அதிகாரி – சிலுடா (தனியார்) கம்பனி
- பொது முகாமையாளர்/பணிப்பாளர் – மாஸ் இனவேஷன்ஸ்
- பொது முகாமையாளர் கொள்முதல் விநியோகம் – மாஸ் இன்டிமேட்ஸ் (தனியார்) கம்பனி
- மூத்த முகாமையாளர் – திட்டமிடல் கொள்முதல் மற்றும் விநியோகம் – அப்பிள் இன்க், கூப்பர்டினோ, சிஏ, யுஎஸ்ஏ
- தேவை திட்டமிடல் முகாமையாளர் – சிஸ்கோ சிஸ்டம்ஸ் சான் ஜோஸ் - சிஏ
- ஆராட்சி விஞ்ஞானி – தேசிய தரநிலைகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் – கெய்தெஸ்பர்க், எம்டி, யுஎஸ்ஏ



திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன

பதவிவழிப் பணிப்பாளர்
சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

31 ஆகஸ்ட் 2018 – 3 ஜனவரி 2023

திறன்கள் மற்றும் அனுபவம்

- வணிகவியல் இளமாணி, முதுகலை சமூகவியல், முதுகலை டிப்ளோமா -பிராந்திய திட்டமிடல் – களனிப் பல்கலைக்கழகம்
- கல்வியில் முதுகலை டிப்ளோமா – பேராதனைப் பல்கலைக்கழகம்
- பொது நிர்வாகச் சான்றிதழ், பொது மேலாண்மை சான்றிதழ் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டம் வகுப்பு 1 அதிகாரி – இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA)
- இலங்கை நிர்வாக சேவையில் 28 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம்

முந்திய முக்கிய நியமனங்கள்

- மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம் - பொலனறுவை
- கூடுதல் செயலாளர் (சமூக அபிவிருத்தி), கூடுதல் செயலாளர் (கிராமிய அபிவிருத்தி) – அமைச்சகம் சமூக அதிகாரம் மற்றும் நலன்
- மேலதிக அரசு அச்சுப்பதிப்பாளர் (நிர்வாகம்) அரச அச்சக திணைக்களம்
- பணிப்பாளர் நாயகம் – தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை
- சிரேஷ்ட உதவிச்செயலாளர் (நிலம்) காணி அமைச்சு
- நிர்வாக பணிப்பாளர்/பொது துணை பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)
- இலங்கை மகாவலி அதிகார சபை
- பிரதி தபால் மா அதிபர் (வட மேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம்.) தபால் திணைக்களம்
- பிரதேச செயலாளர் – பிரதேச செயலகம், மாவத்தகமை
- உதவி/துணை ஆணையாளர் (குருணாகல்) – விவசாய சேவைகள் திணைக்களம்
- செயலாளர் – கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு, வடமேல் மாகாணம்
- மாகாண ஆணையாளர் (வட மத்திய மாகாணம்) – நன்னடத்தை துறை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம்.
- உதவி பிரதேச செயலாளர் – பிரதேச செயலகம், ராஜங்கனை, திருப்பனை
- உதவி ஆணையாளர் – காணி ஆணையாளர் திணைக்களம்



கலாநிதி எம் கே சி சேனாநயக

பதவிவழிப் பணிப்பாளர்
சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

11 ஜனவரி 2020 – 28 பெப்ரவரி 2022

திறன்கள் மற்றும் அனுபவம்

- பொருளாதாரத்தில் கலாநிதி பட்டம் – நியு சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா
- பொது கொள்கை முதுகலை பட்டம் – வணிக தந்ரோபாயபள்ளி ஹிடொவுபாஸி பல்கலைக்கழகம், ஜப்பான்
- வணிகவியல் இளமாணி (சிறப்பு) இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) ஸ்ரீ ஜெயவர்தன புர பல்கலைக்கழகம்
- முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா மற்றும் நிர்வாகம் – இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) மற்றும் இலங்கை அறக்கட்டளை நிறுவனம்.
- இலங்கை நிர்வாக சேவையில் விரிவான வருட அனுபவம் மற்றும் ஒரு கல்வியாளர்

முந்திய முக்கிய நியமனங்கள்

- பணிப்பாளர், துணைப் பணிப்பாளர் (பதில்) மற்றும் உதவி பணிப்பாளர் – நிதிக் கொள்கைத் திணைக்களம்
- உதவி பணிப்பாளர் – தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
- ஆணைக்குழு உறுப்பினர் (திறைசேரி பிரதிநிதி) – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
- சபை உறுப்பினர் – இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டத்தின் பின்னரான ஆங்கில கல்வி நிறுவகம், இலங்கை உள்ளாட்சி ஆளுகை நிறுவகம், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை மற்றும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு.



திருமதி மனோஹரி அபயசேகர

பணிப்பாளர்
சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

2 ஜனவரி 2020 – 2 ஜனவரி 2023

திறன்கள் மற்றும் அனுபவம்

- இளமாணி அறிவியல் பட்டம் உயிரியல் அறிவியல் (முதல் வகுப்பு) வணிக நிர்வாக முதுகலை – கொழும்பு பல்கலைக்கழகம்.
- முதுகலை அங்கத்துவர் – பட்டய முகாமை கணக்காளர் நிறுவனம் (CIMA – UK) மற்றும் (CA) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்.
- வாரிய தலைமை திட்டம் (GSLID) – இலங்கை பணிப்பாளர் நிறுவனம் சர்வதேசத்துடன் இணைந்த நிதி நிறுவனம் (IFC)
- சர்வதேசத்தில் முதுகலை டிப்ளோமா உறவுகள் – பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம்
- நிர்வாக கல்வி – இந்தியப்பள்ளி வணிகம் (ISB) ஹைதராபாத் ஆசிய மேம்பாட்டு வங்கி, மணிலா மற்றும் BHF வங்கி ஜேர்மனி
- 18 ஆண்டுகளுக்கும் மேலாக பலதுறைகள் மற்றும் நிறுவனங்களில் தொழில் மற்றும் தலைமைத்துவ அனுபவம்.

முந்திய முக்கிய நியமனங்கள்

- கணக்காளர் – நீண்ட தூரம் திட்டமிடல் பகுதி
- பணிப்பாளர் – மூலோபாய வணிக அபிவிருத்தி – ஹேலிஸ் பிஎல்சி
- பணிப்பாளர் – ஹேலிஸ் குழுமம் சேவைகள் மற்றும் பென்டொன்ஸ் லிமிடட் (31 ஒக்டோபர் 2020 வரை)

நிறுவன ஆளுகை



திரு எம் டி ஜே பெரெரா

சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

21 பெப்ரவரி 2020 – 21 பெப்ரவரி 2023

திறன்கள் மற்றும் அனுபவம்

- நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தேசிய சேமிப்பு வங்கியில் கிளை வங்கியியலில் பணியாற்றினார் பரந்த அளவிலான செயற்பாடுகள் சேவை விநியோகத்தில் பரவலாக ஈடுபட்டுள்ளார்.

முந்திய முக்கிய நியமனங்கள்

- குழு உறுப்பினர் – ஜனதா தோட்ட அபிவிருத்தி வாரியம் (JEDB) 2010 முதல் 2013 வரை.



திரு எச் கே டி லக்ஸ்மன் காமினி

சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

14 டிசெம்பர் 2020 முதல் இன்றுவரை

திறன்கள் மற்றும் அனுபவம்

- சர்வதேச வங்கி மற்றும் கிளை வங்கி அனுபவம் மிக்க வங்கியாளர், மக்கள் வங்கியில் மூன்று தசாப்தங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

முந்திய முக்கிய நியமனங்கள்

- துணைத்தலைவர் – அரச அச்சக கூட்டுத்தாபனம்
- பணிப்பாளர் – திறன் மேம்பாட்டு நிதி, திறன் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் தொழில் பயிற்சி



திரு ஜுட் நிலுக்சன்

பதவிவழிப் பணிப்பாளர்
சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பதவிக்காலம்

28 பெப்ரவரி 2022 முதல் இன்று வரை

திறன்கள் மற்றும் அனுபவம்

- சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் – தெற்கு கொரிய கியுங் சீ பல்கலைக்கழகம்
- முகாமைத்துவ இளமாணி பட்டத்தில் இரண்டாம் வகுப்பு மேல்நிலை – ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்
- பொது நிர்வாக சான்றிதழ் பொது முகாமை மற்றும் திறன் உருவாக்கம் – இலங்கை நிர்வாக மேம்பாட்டு நிறுவனம் (SLIDA) சான்றிதழ் பெற்றுள்ளார்
- நிர்வாக சேவை சிறப்பு தர அதிகாரியாக, பொதுத்துறையில் 20 வருட அனுபவம்

முந்திய முக்கிய நியமனங்கள்

- மூத்த துணைச்செயலாளர் – அலுவலகம், பொது அமைச்சர்கள் அமைச்சரவை 2015 – 2020
- பணிப்பாளர், துணை பணிப்பாளர்/உதவி பணிப்பாளர் – தேசிய பாதீட்டுத்துறை துணை இயக்குனர்.
- பணிப்பாளர்/துணை பணிப்பாளர் – மது வரி, இலங்கைச் சுங்கம்
- தலைவர் – சிரம வாசனா நிதிச்சபை
- பொது திறைசேரி மற்றும் பல முக்கிய அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் இலங்கை மின்சார சபை (CEB), அகடமி நிதி ஆய்வுகள் (MILODA), இலங்கை மருத்துவ உற்பத்தி நிறுவனம் தேசிய தாவரவியல் பூங்கா, அறக்கட்டளை நிதி, சுயாதீன தொலைக்காட்சி நெட்வேர்க் லிமிடட் (ITN), கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம், உள்ளூராட்சி கடன் சபை, இலங்கை இளைஞர் கார்ப்ஸ், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) மற்றும் பொது ஊழியர்கள் பரஸ்பர வருங்கால வைப்பு சங்கம் (PSMPA).

நிறுவன ஆளுகை

சபை திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

ஒரு நிதி இடைத்தரகராக, அனைத்து நலன் விரும்பிகளின் நலனுக்காக பெறுமதி சேர்ப்பினை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபைக்கு பரந்தளவிலான திறன்கள் அவசியமாகும். விரைவாக மாறிவரும் சூழலுக்கும் வங்கியின் நீண்டகால உபாயமார்க்க இடப்பெயர்வுக்கும் பதிலளிக்கும் விதமாக தேவையான திறன்களின் தொகுப்பை பணிப்பாளர் சபை தீர்மானிக்கின்றது. சரியான திறன்களும் நிபுணத்துவமும் கலந்திருப்பது ஒரு ஒன்றிணைந்த குழுவாக வங்கியின் மூலோபாயத்தை முன்னோக்கி செல்லும் வழியிலும், மதிப்பு உருவாக்கும் செயற்பாட்டிலும் வழிநடத்தவும் இயங்கவும் நன்கு பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்கின்றது. எங்கள் பணிப்பாளர் சபை 2022 இல் குறிப்பாக வங்கி, நிதி, பொருளாதாரம், ஆராய்ச்சி, திட்டமிடல், மூலோபாய மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு, மனித நேயம், முகாமை, நிர்வாகம் மற்றும் சர்வதேச உறவுகள் போன்ற துறைகளில் திறன்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் தகைமை மற்றும் திறன்கள், ஏனைய முக்கியமான அங்கத்துவங்கள் மற்றும் பதவிகள் பக்கம் 184 முதல் 186 வரை வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய சபையின் தகைமை மற்றும் திறன்கள் பக்கம் 170 முதல் 172 வரை வழங்கப்பட்டுள்ளது.

தலைமைத்துவம்

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

தலைவர், பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி அல்லது அதற்கு சமனான தரங்களை பெரிய மற்றும் சிக்கலான நிறுவனங்களில் வகித்துள்ளமை.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

தந்திரோபாயங்களை தீட்டுதல் மற்றும் பிரதான முகாமைத்துவ அதிகாரிகளின் செயற்றிறனை மதிப்பீடு செய்தல்.

நிறுவன திட்டமிடல் மற்றும் தந்திரோபாயம்

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

தந்திரோபாய திட்டமிடல் மற்றும் வணிக இலக்குகளை முன்னெடுத்தல், உருவாக்கல் அல்லது அமுல்படுத்தல் சார் அனுபவம்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

நிறுவன தந்திரோபாயம் மற்றும் திட்டமிடல் முறைமையினை உருவாக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

நிதிச்சேவைகள்

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

தனிநபர் மற்றும் நிறுவன வங்கி சேவைகள் உள்ளடங்கலான நிதிச் சேவைகள் மற்றும் அதற்கு நெருக்கமான துறை மற்றும் சட்டங்கள் தொடர்பில் அனுபவம்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

துறைசார் தொழிற்பாடுகள், வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் பற்றி விளங்கிங்கொள்தல்.

ஆளுகை

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

இலங்கையில் பட்டியலிடப்பட்ட கம்பனி அல்லது அரச வங்கியில் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக மற்றும் அல்லது நிறுவன ஆளுகையினை நிர்ணயிக்கும் சட்ட முறைமை பற்றிய அனுபவம்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

பணிப்பாளரின் பங்கினை வினைத்திறனாக செயற்படுத்த சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பினை விளங்கிக்கொள்ளல்.

நிதிசார் அறிவு

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

நிதிக் கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் மற்றும் மூலதன முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் தொடர்பிலான தேர்ச்சி.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

சிக்கலான நிதி மற்றும் மூலதன முன்னெடுப்புகளை மதிப்பீடு செய்தல்.

நிறுவன ஆளுகை

இடர் முகாமைத்துவம்

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

முறைசார், தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் நிதி மற்றும் நிதி சாரா இடர்களை அடையாளம் காணுதல், ஆராய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

இடர் தாங்கி கொள்ளும் தன்மை, இடர் தன்மையினை ஆராய்தல் மற்றும் வளர்ந்து வரும் முன்னேற்றங்களை தழுவுதல்.

அக்கறைதாரர் ஈடுபாடு

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

அரசாங்கம், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் சமூகத்துடன் நம்பிக்கையான மற்றும் ஒருங்கிணைந்த உறவு முறையினை உருவாக்கல் மற்றும் நடாத்தும் அனுபவம்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் வினைத்திறனான ஈடுபாட்டு திட்டமிருப்பதை உறுதிப்படுத்தல்.

டிஜிடெல் மற்றும் தொழில்நுட்பம்

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பில் அனுபவம் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

வங்கியின் டிஜிடெல் தந்திரோபாயத்திற்கு உதவுதல்.

மக்கள் மற்றும் கலாச்சாரம்

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

நிறுவன கலாச்சாரம், எதிர்கால திட்டமிடல், மற்றும் சம்பளம் மற்றும் வெகுமதி கட்டமைப்பு பற்றிய விளக்கம்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

வங்கியின் கலாச்சாரத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் நடைமுறைகளுக்கான நியமத்தினை உறுதிப்படுத்தல்.

மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் வெளிப்பாடு

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

வாடிக்கையாளரின் மாற்றமடையும் தேவைகளை அவர்களின் நிதி நல்வாழ்வு மற்றும் வாடிக்கையாளர் அனுபவ மேம்படுத்தலை விளங்கிக் கொள்ளுதல்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

வாடிக்கையாளர் தேவைகளை அடைவதை ஆக்கபூர்வமான சவால்கள் மூலமாக உறுதிப்படுத்தல்.

சூழல் மற்றும் சமூக நிலையான தன்மை

திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

சூழல், சமூக மற்றும் நிலைத்திருத்தல் தொடர்பிலான இடம்பெறக்கூடிய இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய விளக்கம்.

தேசிய சேமிப்பு வங்கியுடனான சம்பந்தம்

நிலைத்திருக்கும் நடைமுறைகள், கொள்கைகள் மற்றும் சூழல் மற்றும் சமூக வெளிப்பாடுகளுக்கு உதவும் முடிவுகளில் தாக்கம் செலுத்துதல்.

● அதிக திறன் அறிவு மற்றும் அனுபவம் ● நடைமுறையான/நேரடியான அனுபவம்

பணிப்பாளர் சபையின் செயன்முறை

பணிப்பாளர் சபையானது தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பரிந்துரைகளின் பிரகாரம், இணங்கப்பட்ட கூட்ட அட்டவணையின் அடிப்படையில் குறைந்தபட்சம் ஆறு வாரங்களுக்கு ஒரு முறை கூடுகின்றது. தேவைகளின் அடிப்படையில் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படும். பணிப்பாளர்கள் ஒழுங்காக கூட்டங்களுக்கு சமூகமளிப்பதுடன் கலந்துரையாடல்களில் உத்வேகமாக பங்கு பெறுவர். 2022 ஆண்டில் கூட்டங்களுக்கான சமூகமளித்தல் தொடர்பான விபரங்கள் பக்கம் 190 இல் வழங்கப்பட்டுள்ளன. பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் உடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில் பணிப்பாளர் சபை செயலாளரது உதவியுடன் கூட்ட நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் பொறுப்பு தலைவரைச் சாரும். கூட்டத்துக்கு ஒரு வாரம் முன்பாக பணிப்பாளர் சபையின் செயலாளரினால் பொருத்தமான பணிப்பாளர் சபை ஆவணங்களுடன் கூட்ட நிகழ்ச்சி நிரலானது பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த செயன்முறையானது பணிப்பாளர் சபை உரிய காலத்தில் கூட்டத்திற்கு தயாராவதுடன் கலந்துரையாடல்கள் மற்றும் முறை சாந்த தீர்மானங்களை மேற்கொள்வதைத் தயார்படுத்த உதவும். வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் மிகக் குறுகிய அறிவிப்புடன் அல்லது கூட்டங்கள் இடம்பெறும் போது அவசரமான பணிப்பாளர் சபை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும். போதுமான அளவு விபரமான கூட்ட அறிக்கைகள் மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பான விபரங்கள் பணிப்பாளர்கள் அணுகக் கூடிய விதத்தில் பேணப்படுகின்றன. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கலந்துரையாடல் மற்றும் முடிவெடுப்பதற்கான நிகழ்ச்சி நிரலின் சில ஆவணங்களைச் சேர்க்குமாறு கோரலாம்.

அக்கறை முரண்பாடுகள்

பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் வங்கி மீதான மிகச்சிறந்த அக்கறையுடன் உச்ச நம்பிக்கையில் நிதிசார் அல்லது வேறு எந்த வகையிலுமான தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்க்கும் வகையில் செயற்படுவதற்கான அர்பணிப்பினைக் கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட வியாபாரம் தொடர்பாக அவர்கள் கொண்டிருக்கக்கூடிய முரண்பாடுகள் அல்லது உத்தேச முரண்பாடுகள் குறித்து பணிப்பாளர்கள் உடனடியாக பணிப்பாளர் சபைக்கு தெரிவிக்க வேண்டும். எந்தவொரு விடயத்திலும் அவர்கள் ஆர்வமுள்ள முரண்பாடுகளைக் கொண்ட முடிவுகளின் விவாதங்களிலிருந்து அவர்களை மன்னிக்க பணிப்பாளர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்கள் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி நிரலில் ஒரு விடயத்தில் முரண்பாடு ஏதேனும் உள்ளதா என்பதை அறிவிக்க ஒரு நிலையான நிகழ்ச்சி நிரல் உருப்படி சேர்க்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைவாக குறிப்பெடுக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு வசதிகளும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்துடன் இணங்குகின்றன.

ஆண்டுதோறும் தங்கள் விருப்பத்தை அறிவிக்கின்றார்கள் மற்றும் அக்கறை முரண்பாடுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த தேவையான நடைமுறைகள் உள்ளன.

வங்கியின் தொடர்புபட்ட நபர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது, வங்கி மற்றும் தொடர்புபட்ட நபர்களுக்கிடையிலாக கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படையான தன்மை மற்றும் குறித்த கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான தொடர்புபட்ட நபர்களுக்கிடையே இடம்பெறக்கூடிய முரண்பாடுகள் என்பவற்பவற்றை தவிர்பதை நோக்காக கொண்டு வழிகாட்டல்கள் வழங்குகிறது. பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வங்கிச் சேவைகள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரங்களுக்க இணங்குகிறது. 2022 ஆம் ஆண்டில், நிதி அறிக்கைகளின் பக்கம் 361, குறிப்பு 49.5.2 இல் வெளிப்பட்டுள்ளதைத் தவிர வங்கி அல்லது அதன் துணை நிறுவனங்களினால் எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது ஏற்பாட்டிலும் எந்த பணிப்பாளருக்கும் குறிப்பிடத்தக்க அக்கறை இல்லை.

பணிப்பாளர் சபை கூட்டங்கள்

2022 முடிவடைந்த ஆண்டின் போது 21 திட்டமிடப்பட்ட கூட்டங்களை கூட்டி இருந்தது. இவற்றுக்கான வருகை தகவல்கள் பக்கம் 190 இல் தரப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு சட்டத்தின் பரிந்துரைகளுக்கு அமைய சபை ஒவ்வொரு ஆறு கிழமைகளுக்கும் ஒரு தடைவ சபை கூட்டங்களை நடத்துவதுடன் தேவையேற்படுமிடத்து சிறப்புக்கூட்டங்களை நடாத்துகின்றது. சபையானது மாறுபடும் நிலைமகளுக்கு ஏற்ப ஏற்புடைய தன்மை மற்றும் நெகிழ்ச்சித்தன்மையின் தேவையினை அறிகிறது. தொற்று நிலைமையினை தொடர்ந்த எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மாறுபடும் வணிக தேவைப்பாடுகளுக்கு ஏற்ப இணையவழி கூட்டங்கள் மூலம் பிரச்சனைகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தது, இது பொருளாதார நெருக்கடியின் தாக்கம், வங்கியின் உள்நாட்டு கடன் உச்சப்படுத்தல் (னுனுழு) மற்றும் அதற்கான பொருத்தமான வங்கியின் உத்திகளை உள்ளடக்கும்.

உத்திகளுக்கு எதிராக வழங்குவதற்கான ஆளுகை செயற்பாட்டில், வங்கியின் 2023 முதல் 2025 மூன்று ஆண்டு மூலோபாய வணிகத் திட்டத்தை வகுப்பதில் நிறைவேற்று முகாமைத்துவத்திற்கு தெளிவான வழிமுறைகளை வழங்குவதில் பணிப்பாளர் சபை தங்கள் நேரத்தை அர்ப்பணித்ததன் விளைவாக பணிப்பாளர் சபை மதிப்பாய்வு செய்து அதற்கு ஒப்புதல் அளித்தது. இந்த ஆண்டில் பணிப்பாளர் சபை மூலதன நிர்வாகத்தில் தொடர்ந்து நேரத்தை ஒதுக்கியது. உபாயமார்க்க வியாபாரத் திட்டத்தின் செயற்திறன் மற்றும் செயற்பாட்டை மதிப்பாய்வு செய்ததுடன் மேலும் கவனம் இடர் முகாமைத்துவம், இணக்கம் மற்றும் கூட்டிணைந்த ஆளுகை போன்ற விடயங்களில் விவாதங்களை நடாத்தியது.

நிறுவன ஆளுகை

சபை, சபை உப குழுக்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான சமூகமளித்தல்

பணிப்பாளரின் பெயர்	நியமன திகதி	வயது	பணிப்பாளர் தகைமை	பங்குபற்றிய/பங்குபெற தகுதியுடைய						சபை காலம் (வருடங்களில்)
				சபை	ச.க.கு.	ச.ம.வ.ஊ.கு.	ச.நி.கு.	ச.ஒ.இ.மு.கு.	சதொதகு	
திருமதி கேசிலா ஐயவர்தன – தலைவர்	26 டிசெம்பர் 2019	63	NED/NID	20/21		11/11				2+
திரு எரங்க ஐயவர்தன – சிரேஷ்ட பணிப்பாளர்	2 ஜனவரி 2020	44	NED/ID	15/21		9/11			5/5	2+
திரு யூ ஜீ ஆர் ஆரியரத்ன – பதவி வழிப்பணிப்பாளர்	31 டிசெம்பர் 2018	57	NED/ID	20/21		9/11	3/3	7/7	5/5	4
கலாநிதி எம் கே சி சேனநாயக்க – பதவி வழிப்பணிப்பாளர் (28 பெப்ரவரி 2022 வரை)	11 ஜனவரி 2020	50	NED/NID	3/3	2/2			1/1		2+
திருமதி மனோஹரி அபேயசேகர – பணிப்பாளர்	14 ஜனவரி 2020	47	NED/NID	21/21	14/14					2+
திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்	21 பெப்ரவரி 2020	66	NED/NID	20/21				7/7	5/5	2+
திரு. எச் கே டீ லக்ஷ்மன் காமினி – பணிப்பாளர்	14 டிசெம்பர் 2020	68	NED/NID	19/21	14/14		3/3	6/6		1+
திரு. ஜுட் நிலுக்ஷன் - பதவிவழிப் பணிப்பாளர்	28 பெப்ரவரி 2022	52	NED/NID	14/17	10/12		3/3			<1

NED – நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் NID – சுயாதீனமற்ற பணிப்பாளர் ID – சுயாதீன பணிப்பாளர்

அட்டவணை 22

தற்போதைய சபையின் ஒருங்கிணைப்பு

பணிப்பாளரின் பெயர்	நியமன திகதி	வயது	பணிப்பாளர் தகைமை	சபை காலம் (வருடங்களில்)
கலாநிதி ஹர்ஷ கப்ரால் பிசி தலைவர்	2 மே 2023	63	NED/ID	<1
திரு ஜுட் நிலுக்ஷன் பதவிவழிப் பணிப்பாளர்	28 பெப்ரவரி 2022	52	NED/NID	1+
திரு எஸ் ஆர் டபல்யூ எம் ஆர் பி சத்குமார பதவிவழிப் பணிப்பாளர்	27 மார்ச் 2023	52	NED/ID	<1
திரு எச் கே டீ லக்ஸ்மன் காமினி பணிப்பாளர்	14 டிசெம்பர் 2020	68	NED/NID	1+
திரு துஸ்யந்த பஸ்நாயக்க பணிப்பாளர்	31 மார்ச் 2023	58	NED/ID	<1

NED – நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் NID – சுயாதீனமற்ற பணிப்பாளர் ID – சுயாதீன பணிப்பாளர்

அட்டவணை 23

சபையின் உப குழுக்கள்

எந்தவொரு குழு அல்லது குழுக்களுக்கும் அதன் அதிகாரங்கள், தனிவிருப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களை ஒப்படைக்க பட்டயத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்படுகின்றது. ஏனெனில் பிரதிநிதிகளின் சுயாதீன தீர்ப்பை ஊக்குவிப்பதை உறுதி செய்வது பொருத்தமானது என்று கருதுவதுடன், அதிகார சமநிலை மற்றும் கடமைகளை திறம்பட நிறைவேற்ற உதவுகின்றது. முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் அந்தந்த அதிகாரிகள் தொடர்பான விடயங்களை மேற்பார்வையிடுவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும், இருப்பினும் பணிப்பாளர் சபை தொடர்ந்தும் குழுக்களின் தீர்மானங்களுக்கான பொறுப்பை தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைக்கேற்ப சபை கணக்காய்வுக் குழு (BAC), சபை மனித வளம் மற்றும் ஊதியக் குழு (BHRRC), சபை நியமனக் குழு (BNC), மற்றும் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), எனும் கட்டாயக் குழுக்கள் நான்கும் மற்றும் வங்கின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT), கட்டமைப்பினை சுமூகமாக நடத்துவதனை நோக்காக கொண்ட சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாயக்குழு (BITSC), நிறுவப்பட்டது. சபை செயலாளரே அனைத்து உப குழுக்களுக்கும் செயலாளராவர். கூட்டங்களின் குறிப்புகள் தகவல், மீளாய்வு, கருத்து மற்றும் தேவையான அனுமதிக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள், அமைப்பு, வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள், அங்கத்தவர்களின் வருகை, 2022 ஆம் ஆண்டில் கொண்டு நடாத்தப்பட்ட நடவடிக்கைள்இ 2023 இற்கான கண்ணோட்டம் என்பன அந்தந்த குழுக்களின் அறிக்கைகள் அமைந்துள்ள 199 இருந்து 207 வரையுள்ள பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவக் குழுக்கள்

சபைக் குழுக்களுக்கு மேலதிகமாக, வங்கி முகாமைத்துவக் குழுக்களை நிறுவியுள்ளது. இது பணிப்பாளர் சபையின் முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட உப குழுக்களின் பட்டயத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிற்பாட்டு பரப்பெல்லைகளுக்கு இணக்கமாக பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் முகாமைத்துவக் குழுக்களின் தலைவராக செயற்படுவார். இந்தக் குழுக்கள் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கியமான விடயங்களில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும், அவை வருமாறு:

முகாமைத்துவக் குழு	நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள்	கட்டமைப்பு
நிறுவன முகாமைத்துவ குழு (CMC)	கொள்கை மற்றும் உபாயமார்க்க உருவாக்கம், கொள்கை மற்றும் உபாயமார்க்க உருவாக்கங்களை தொழில்பாட்டு மட்டங்களில் நடைமுறைப்படுத்தல் தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்தல்.	பிரதி பொது முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் தொழிற்படும் அனைத்து அதிகாரிகளும்.
சொத்து மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு (ALCO)	திரும்பலை உச்சப்படுத்தும் வகையில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட இடர் ஏற்பு வரம்புக்கு உட்பட்டு சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்களை பேணுதல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
கடன் குழு (CC)	வங்கியினுடைய கடன் கொள்கையினை கால ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தல், கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வங்கியினுடைய இடர் ஏற்பு மட்டத்திற்கு உட்பட்ட வகையில் திரும்பல்களை உச்சப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு ஆரோக்கியமான சேர்க்கையைப் பேணுதல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
முதலீட்டுக் குழு (IC)	வங்கியினுடைய முதலீட்டு கொள்கையினை கால ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தல் மற்றும் வங்கியினுடைய ஒட்டுமொத்த இடர் ஏற்பு மட்டத்தில் வங்கியின் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
பெறுபேற்று மீளாய்வுக் குழு (PRC)	நிதிசார் பெறுபேறு, தொடர்ந்து செல்லும், கைவிடப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறுபேற்றுக்கு வசதியளிக்கும் ஏதேனும் துணைத் தொழிற்பாடுகள் ஆகியவற்றின் விருத்திநிலை முதலியவற்றை மீளாய்வு செய்தல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள், அனைத்துப் பிரிவுகளினதும் தலைவர்கள் மற்றும் ஆலோசகர்கள், அனைத்து உதவிப் பொது முகாமையாளர்களும், இணக்கப்பட்டு அதிகாரி மற்றும் குழுக்களால் நியமிக்கப்பட்ட பிற உறுப்பினர்கள்.

நிறுவன ஆளுகை

முகாமைத்துவக் குழு	நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள்	கட்டமைப்பு
கிளைத் தொழிற்பாடுகள் உந்துதல் குழு (BOSC)	பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிசார் அதிகாரங்களுடன் கிளைகளின் தொழிற்பாடுகளை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சட்டம் மற்றும் வளாகங்களின் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்
தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் குழு (ITSC)	வங்கியின் வியாபார உபாயமார்க்கங்களுடன் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கங்கள் சமாந்தரமாக செல்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி, சட்டம், மனித வள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், இணக்கம் மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
சந்தைப்படுத்தல் குழு (MKTC)	பணிப்பாளர் சபை மற்றும் நிறுவன வணிக முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு சந்தைப்படுத்தல் ஆலோசனை நிபுணத்துவம் மற்றும் உதவிகளை வழங்குதல் வங்கியினுடைய சந்தைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான படிவங்களில் முதல் ஆய்வு மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் தொழிற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு (ORMC)	தொழிற்பாட்டு இடர்முகாமைத்துவ நுட்பங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உள்ளக கட்டுப்பாடுகள் ஊடாக நாணயத் தன்மையினை பாதுகாத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளல், வங்கியின் இடர்களை முகாமை செய்தல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழிற்பாடுகள், மனித வள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், துணைச் சேவைகள், ஆதன முகாமை, சட்டம், இணக்கம் மற்றும் இடர் முகாமைத்துவ இணக்கப்பாடு மற்றும் தகவல் பாதுகாப்பு பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
உற்பத்தி விருத்திக் குழு (PDC)	அதிகரித்துச் செல்லும் போட்டிக்கு முகம் கொடுக்கும் வகையில் புத்தாக்கம் மிக்க உற்பத்திகளை விருத்தி செய்வதன் மூலம் நீண்டகால பெறுமதி சேர்த்தலை மேற்பார்வை செய்தல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழிற்பாடுகள், சர்வதேச தொழிற்பாடுகள், தகவல் பாதுகாப்பு, சில்லறைக் கடன், சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
மனித வளக் குழு (HRC)	வங்கியின் உபாயமார்க்க நோக்கங்களுடன் இணக்கமாக மனித வளத்தினை விருத்தி செய்தல்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், மனித வள அபிவிருத்தி, கடன் மற்றும் சட்டப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள்.
நிறுவன பெறுகைக் குழு (சிறியவை)	வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல்	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், தொழிற்பாடுகள் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள், நிதி அமைச்சின் பிரதிநிதி.
நிறுவன பெறுகைக் குழு (பாரியவை)	வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல்	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், தொழிற்பாடுகள் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள், நிதி அமைச்சின் பிரதிநிதி
நிறைவேற்றுத்தர பெறுகைக் குழு (EPC)	வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல்	சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (கடன்), பிரதான முகாமையாளர் (நிதி)

முகாமைத்துவக் குழு	நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள்	கட்டமைப்பு
நிறுவன நிலைத்திருத்தல் குழு (CSC)	நிலையான செயற்திறன் மற்றும் மேம்பாட்டுடன் இணைக்கப்பட்ட கூட்டிணைந்த நோக்கங்களால் வரையறுக்கப்பட்டுள்ள படி, தினசரி வியாபார நடவடிக்கைகளில் நெறிமுறை, சமூக மற்றும் சுற்றுச் சூழல் பொறுப்பை ஒருங்கிணைப்பதன் மூலம் முக்கிய நலன்விரும்பிகளுக்கான ஆதரவு மதிப்பு உருவாக்கம்.	பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், கடன் சர்வதேசம் சந்தைப்படுத்தல, தொழிற்பாடுகள், மனிதவளம் மற்றும் நிதி மற்றும்திட்டமிடல் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ அதிகாரிகள்.
சிரேஷ்ட முகாமைத்துவ குழு (SMC)	மனிதவளம் தொடர்பான விடயங்களை ஆராய்தல்.	பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (கடன்), பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி), மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு).
தகவல் பாதுகாப்புக் குழு (ISC)	வங்கியின் தகவல் பாதுகாப்பினை முகாமை செய்தல் மற்றும் தேவையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்தல் மற்றும் வங்கியின் தகவல் பாதுகாப்பினை அதிகரிக்க மற்றும் இணக்கப்பாடுகளை முன்னேற்ற குறித்த கட்டுப்பாடுகளின் செயற்றிறனை மதிப்பீடு செய்தல்.	பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்), சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு அலுவலகர் (CISO), தகவல் தொழில்நுட்பம், மனித வளம் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ அதிகாரிகள்

அட்டவணை 24

மீள் தேர்வு மற்றும் இராஜினாமா

அரசுக்கு சொந்தமாகிய வங்கியாக, தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்களை நியமித்தல் 1971 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, அரசுக்கு பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஏழு பணிப்பாளர்களில் ஒருவர் திறைசேரி செயலாளராகவோ அல்லது அவரது பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், மற்றவர் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி தபால் மா அதிபராகவோ அல்லது அவரது பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், அந்த நியமனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஒப்புதல் அளிக்கின்றது. 2007 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் நிறுவனத ஆளுகைப் பணிப்பரைக்கு அமைவாக ஒரு பணிப்பாளரின் சேவைக் காலம் ஒன்பது ஆண்டுகளுக்கு வரையறுக்கப்படுகின்றது. பணிப்பாளர்களின் இராஜினாமாக்கள் மற்றும் மீள்தேர்தல் இலங்கை மத்திய வங்கிக்கு உரிய முறையில் அறிவிக்கப்பட்டு 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் பிற்பட்ட அதன் திருத்தங்களின்படி செய்யப்படுகின்றது. பணிப்பாளர் பற்றிய விபரங்கள் மற்றும் மாற்றங்கள் பக்கம் 190 இல் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை புகுமுகம் மற்றும் பயிற்சி

புதிய பணிப்பாளர்களை பணிப்பாளர் சபையின் முழுமையான விவாதங்களுக்கு பங்களிப்பு செய்வதற்கு இயலுமானதாக்க, வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகள் தொடர்பாக அவர்கள் போதியளவு அறிவூட்டப்பட்டுள்ளார்கள் மற்றும் அவசியமான அறிவினைக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சரியான முறையில் முன்னிறுத்தப்பட்ட புகுமுகம் மற்றும் பயிற்சியின் அவசியத்தை வங்கி அடையாளம் கண்டுள்ளது. அத்துடன் இது பணிப்பாளர்களின் நம்பகமான மற்றும் சட்டரீதியான கடமைகளை மேலும் கோடிட்டுக் காட்டுகின்றதுடன் சட்ட மற்றும் நிர்வாகம் தொடர்பான அனைத்துக் கடமைகளுக்கும் வழிகாட்டுதலை வழங்குகின்றது. புதிய பணிப்பாளர்களுக்கு பயிற்சியுடன் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் தீர்வுத் தொகுதி மற்றும் கையேட்டு அணுகல், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகள், பணிப்பாளர் சபையின் பட்டயம், பணிப்பாளர் சபையின் உப குழுக்களின் பட்டயங்கள், ஏனைய பொருத்தமான சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய நியமனங்கள் தொடர்பான ஆவணங்கள் வழங்கப்படுகின்றது. பணிப்பாளர்கள் பொருளாதாரம், ஒழுங்குமுறை மற்றும் தொழில்துறை போக்குகளில் பணிப்பாளர்களை நிலையொத்து வைத்திருப்பதற்கு உதவும் பணிப்பாளர் சபை செயலாளரிடமிருந்து தங்கள் காலவரையறை முழுவதும் தகவல் புதுப்பிப்புகள் மற்றும் பயிற்சியினைப் பெறுகின்றார்கள். பணிப்பாளர்கள் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் அல்லது ஏதேனும் ஏனைய அதிகாரசபைகளினால் ஒழுங்குபடுத்தப்படும் பயிற்சி/அறிந்துகொள்ளல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள்.

தகவல்களை அணுகுதல்

பணிப்பாளர்கள் அனைத்து தகவல்களுக்கும் கட்டுப்பாடற்ற அணுகலைக் கொண்டுள்ளதுடன், அவர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றத் தேவையான ஆதாரங்களும் உள்ளன. 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் ஆண்டின் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையின் திருத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் செலவில் வெளிநிபுணர் ஆலோசனைக்கான அணுகல் பணிப்பாளர்களுக்கு கிடைக்கின்றது. பணிப்பாளர்களுக்கு அவசியமான விவாதங்களை மேற்கொள்வதற்கு போதிய நேரம் கிடைப்பதற்காக முறைமையின் ஊடாக பணிப்பாளர் சபைப் பத்திரங்களை சுற்றுநிருபம் செய்வதற்கு அவர்களுக்கு இலத்திரனியல் பணிப்பாளர் சபைப் பத்திர முறைமை கிடைக்கப் பெறுகின்றது.

நிறுவன ஆளுகை

2022 இல் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகள்

மிக மோசமான நாட்டின் பொருளாதார நெருக்கடியானது நிறுவன ஆளுகைக்கு முக்கியத்துவம் பெற்றதந்ததுடன் சபையானது எவ்வாறு தனது கடமைகளை நிறைவேற்றி மதிப்பினை உருவாக்க ஒரு பன்முக மூலோபாயம் தேவைப்பட்டது. வெளிப்படையான தன்மை, சிறந்த செயற்றிறன், வினைத்திறனான கட்டுப்பாடுகள், நேர்மையான மற்றும் சிறந்த வங்கி தொழிற்பாடுகளுக்கிடையிலான கலாச்சாரம் என்பன ஊடாக ஆளுகை கட்டமைப்பின் உயர்தரத்தினை அடைதலினையும் நிதி செயற்றிறன் மற்றும் திரவத்தனமையிடையே சமநிலையினை பேணுவதை சபை உறுதிப்படுத்தல். வணிகத்தின் வழமையான ஆளுகை தேவைப்பாடுகளை முகாமை செய்வதோடு, ஒருங்கிணைந்த விரிவான மற்றும் ஏற்புடைய பதில்களை வழங்க கூடிய நடைமுறையான அணுகுமுறையினை கொண்டிருந்தது. வங்கியின் மீள் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள், மறுஅளவிடுதல் மற்றும் மாற்றங்களுடனான இடர் முகாமைத்துவம் மேற்பார்வை செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டுக்கான சபையின் பிரதான நோக்குகள் மற்றும் அக்கறைதாரர் குழுக்கள், குறுங்கால மற்றும் இடைக்கால நோக்கங்கள் மற்றும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

2022 இன் சபை நடவடிக்கைகள்	பெறுபேறு	குறுகிய மற்றும் இடைக்கால தந்திரோபாய இலக்குகள்	அக்கறைதாரர்	2022 ஆளுகை இலக்குகள்
நிறுவக தந்திரோபாயம், செயற்பாடு மற்றும் அறிக்கையிடல் • வங்கியின் தந்திரோபாயங்களை தீர்மானிக்க ஆழமான கலந்தரையாடல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி மற்றும் வங்கி தொழிற்படும் சூழலில் அதன் மூலதனம், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு, திரவத்தன்மையினை பாதுகாத்தல் மற்றும் வாடிக்கையாளருக்கு உதவும் வகையில் 2023-2025 க்கான தந்திரோபாய வணிக திட்டத்தினை அங்கிகரித்தமை. இந்த பொருளாதார நெருக்கடி யின் தாக்கங்கள் சில காலத்திற்கு தொடரும் என்பதால் தந்திரோபாயம் மற்றும் திட்டங்கள் மற்றும் அதன் அமுல்படுத்த மேற்பார்வை செய்யும். மேலதிக விபரங்களுக்கு பக்கம் 70 முதல் 89 வரை வாசிக்கவும். • திருத்தப்பட்ட 2022 மற்றும் 2023 பாதீட்டினை அங்கிகரித்தமை • அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால நிதி அறிக்கைகள மற்றும் வருடாந்த நிதி அறிக்கைகள் • பொருளாதாரம் மற்றும் நிதி தாக்கங்கள் பற்றி ஆழமாக ஆராய்தல்	• சிறப்பாக முகாமை செய்யப்படும் வங்கி நோக்கத்திற்காக மற்றும் பெறுமதி உருவாக்கம் மற்றும் வழங்கலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. • வங்கியின் இலக்கு மற்றும் மதிப்புகள் தந்திரோபாயத்தினால் அடையப்பட்டமை • மதிப்பு உருவாக்கத்திற்கு அக்கறைதாரர்களின் நம்பிக்கை பங்களிப்பினை அளிக்கிறது.			• தொழிற்பாட்டு சூழலில் அங்கீகரிக்கப்பட்ட 2023-2025க்கான தந்ரோபாய வணிக திட்டத்தின் அமுலாக்கத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் பேரின பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளை கருத்தில் கொள்ளல். • 2024-2026 க்கான தந்ரோபாய வணிக திட்டத்தினை அங்கீகரித்தல் • திருத்தப்பட்ட 2023 மற்றும் 2024 பாதீட்டினை அங்கீகரித்தல்

2022 இன் சபை நடவடிக்கைகள்	பெறுபேறு	குறுகிய மற்றும் இடைக்கால தந்திரோபாய இலக்குகள்	அக்கறைதாரர்	2022 ஆளுகை இலக்குகள்
தொழில்நுட்பம் ● தொழில்நுட்ப மாற்றம் மற்றும் டிஜிடெல் பயணத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் அந்த நோக்கத்துடன் வங்கியில் நடைபெறுகின்ற சேவைகளை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்தல், ஒரு உகந்த வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் நிலையான தன்மைளை உணர்த்தல்.	● தொழில்நுட்பம் நிறைந்த சூழலில் சுறுசுறுப்பாக இருப்பது			● தொழில்நுட்பம் மற்றும் டிஜிடெல் பயணம் என்பவற்றை வங்கி மேற்பார்வையிட்டு நிலையான விநியோகம் சேவைகள். ஒரு பாதுகாப்பான மற்றும் நிலையான வாடிக்கையாளர் அனுபவம் (வித்தியாசமான வாடிக்கையாளர் பிரிவுகளை) இனம்காணல் மற்றும் நிலையான மதிப்பு உருவாக்கம் என்பதனை உறுதி செய்ய வேண்டும்.
வாடிக்கையாளர்கள் ● தொற்றுநோய் காலங்களின் போது வாடிக்கையாளர்கள் ஆதரவு, தடையற்ற சேவைகள் மற்றும் விநியோக சேவைகள் வழங்கப்பட்டது ● தகவல் தொடர்பு பற்றி வாடிக்கையாளரிடம் வங்கியின் அணுகுமுறை பற்றி தொடர்பாடப்பட்டது.	● தந்திரோபாய இலக்குகளை அடைய வாடிக்கையாளர் மையமாக இருத்தல்.			● வாடிக்கையாளர் மையமாக வங்கியின் முன்னேற்றத்தை கண்காணித்து மதிப்பிடுதல்.
இடர் முகாமைத்துவம் ● இடர் நாட்ட தன்மை ● இடர் நாட்ட தன்மை அளவீடுகள் ● ஒருங்கிணைந்த இடர் முகாமை கட்டமைப்பு ● சைபர் பாதுகாப்பு இடர் மதிப்பீடு ● கட்டுப்பாட்டு செயற்றிறன் மதிப்பாய்வு ● வழக்கமாக இடர் அறிக்கைகள் ● சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவினால் வழங்கப்படும் இடர் அறிக்கைகள் ● 2022 இன் உள்ளக மூலதன போதுமான தன்மை மதிப்பீட்டுச் செயன்முறை அறிக்கையை (ICAAP) அங்கீகரித்தல்	● இடர் மற்றும் இணங்குவிப்பு முகாமை நடைமுறைகள் உள்ளதன் மூலம் வங்கி அதன் தந்திரோபாயத்தை அடைவதற்கு முன்னுரிமை படுத்தப்பட்டுள்ளது. ● தகவல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் பொறுப்பு மற்றும் நெறிமுறை பயன்பாடு.			● செயற்றிறனுக்கான அணுகுமுறை இடர் முகாமை பற்றி அறிந்திருத்தல் மற்றும் பேரின பொருளாதாரம், அதன் பொருளாதாரத்தின் காரணிகளை வங்கி கண்காணிக்கிறது.

நிறுவன ஆளுகை

2022 இன் சபை நடவடிக்கைகள்	பெறுபேறு	குறுகிய மற்றும் இடைக்கால தந்திரோபாய இலக்குகள்	அக்கறைதாரர்	2022 ஆளுகை இலக்குகள்
ஒழுங்குறுத்துகை இணக்கப்பாடு				
● ஏதேனும் ஒழுங்குறுத்துகை திருத்தங்களை கருதல்	● ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இணங்குதல்			● வங்கியானது ஒழுங்குறுத்துகை தேவைப்பாடு மற்றும் துறைசார் சிறந்த நெறிமுறைகளுடன் 100% இணங்கல்
அக்கறைதாரர் உறவுகள்				
● அக்கறைதாரர்களை அடையாளம் கண்டு வழிநடத்தியது. அக்கறைதாரரின் உருவாக்கம் மற்றும் செயற்படுத்தல் ஈடுபாட்டு உத்திகள் ● வழக்கமான மற்றும் எளிதாக்கும் நிர்வாகத்தை இயக்கி பங்குதாரருடன் தொடர்புடைய தொடர்பு	● அக்கறைதாரரை உள்ளடக்கிய அணுகுமுறை செயல்படுத்துவதில் நிர்வாக தந்திரங்கள் மற்றும் பொறுப்புகள் ● வங்கியின் நியாயமான சமநிலை தேவைகளுக்கு இடையில் ஆர்வங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் அக்கறைதாரர் தேவைகள் மற்றும் சிறப்பு ஆர்வம் ● ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாகம் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் வங்கியின் உத்தி நீண்டகால செயற்படுத்த மதிப்பு உருவாக்கம்			● செயன் முறை மேம்பாடுகளை தேவையான அக்கறைதாரரின் ஈடுபாட்டினை மேற்பார்வை செய்தல்
நிறுவன ஆளுகை				
● ஒழுங்குறுத்துனர்களால் வெளியிடப்பட்ட நிறுவன ஆறுகைக்கான பணிப்புரைகளை கருத்திற்கொண்டு அதனுடனான இணங்குவிப்பு நிலையை மதிப்பாய்வு செய்தல்.	● தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் சபையின் செயற்றிறன் ● இணக்க ஒழுங்குமுறை திசைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்			● சிறந்த ஆளுகை தர நிலைகளின் இணக்கப்பாட்டை வங்கி மேற்பார்வை செய்தல்

அட்டவணை 25

இடர் முகாமைத்துவத்தில் பணிப்பாளர் சபையின் வகிபாகம்

வங்கியின் வணிக உபாயமார்கத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இடர் முகாமைத்துவத்தை சீரமைப்பதை பணிப்பாளர் சபை அடையாளம் காட்டுகின்றது. இடர் முகாமைத்துவம் குறித்த விவேகமான மேற்பார்வை பணிப்பாளர் சபைக்குள் ஆழமாக வேரூன்றியுள்ளதுடன், மேலும் இது வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடு தொடர்பாக தனது கடமைகளை நிறைவேற்றுவதில் அதன் பொறுப்பை பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவிற்கு வழங்கியுள்ளது. அந்த வகையில் வங்கியானது பலமான இடர் முகாமைத்துவ சட்டகத்தினை உருவாக்கியுள்ளதுடன், வங்கியினுடைய இடர் அளவினைக் கையாளுவத்கான இடர் ஏற்பு வரம்புகள், சகிப்புத்தன்மை மட்டங்கள் மற்றும் இடரினைக் கண்காணிப்பதற்கான பொறிமுறைகள் ஆகிய உருவாக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையானது சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவினால் சீரான கால இடைவெளிகளில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் இடர் தொடர்புபட்ட விடயங்களைக் கண்காணிக்கின்றது. ஒப்புக் கொள்ளப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களில் இருந்து ஏதேனும் விலகல்களுக்கு நிர்வாகத்திடம் தெளிவுபடுத்தல் கோரப்பட்டதுடன் அதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டது. நீண்டகால வணிகத் திட்டமிடல் செயன்முறை தொடர்பான இடரினை நன்கு நிவர்த்தி செய்யும் உபாயமார்க்க வணிகத் திட்டம் குறித்த கலந்துரையாடலின் போது வணிகத்தில் உள்ள இடர்கள் பரிசீலிக்கப்பட்டு ஆழமாக விவாதிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டன (மேலதிக விபரங்களுக்கு இடர் மீளாய்வு அறிக்கை பக்கம் 208 முதல் 236 பார்வையிடவும்).

தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் வகிபாகங்கள்

1971ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் கைத்தொழிற்துறையின் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கு இணங்கும் வகையில் நியமனம் மற்றும் வகிபாக தெளிவாக்கலுக்கான முகாமைத்துவத்துவ பங்களிப்புக்கான சாட்டுதல் மற்றும் அதிகாரம் மற்றும் பொறுப்புகளின் வினைத்திறனான பின்பற்றல்கள் என்பவற்றை வங்கி உறுதி செய்கின்றது. தலைவர் மற்றும் பொது முகாமையாளர்.்.பிரதான நிர்வாக அலுவலர் ஆகியோரின் வகிபாகங்கள் தனித்தனியாக உள்ளதுடன், அவற்றின் தனிப்பட்ட பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. எந்தவொரு தனி நபருக்கும் தடையற்ற முடிவெடுக்கும் அதிகாரங்கள் இல்லை என்பதையும், அதிகாரம் மற்றும் அதிகாரத்தின் பொருத்தமான சமநிலைகள் இருப்பதை உறுதி செய்வதற்கும் பொறுப்புகளைப் பிரித்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

தலைவர் ஒரு சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இருக்கின்றார். பொது முகாமையாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு முக்கிய முகாமைத்துவ பணியாளராக இருக்கின்றார், அவர் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் இருப்பார், ஆனால் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருக்கமாட்டார். தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலரின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை பணிப்பாளர் சபை பட்டயம் தெளிவாக வரையறுக்கின்றது. தலைவரானவர், பணிப்பாளர் சபைக்குத் தலைமைத்துவம் வழங்குதல், பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டுக்கு வசதி அளித்தல், அதிகாரத்தை கையாளுதல் மற்றும் வங்கியின் சிறந்த நிறுவன ஆளுகையினை மேம்படுத்தல மற்றும் பேணுதல் ஆகிய பொறுப்புகளை கொண்டுள்ளார். பொது முகாமையாளர்.்.பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணிப்பாளர் சபை செயலாளருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரலை அமைக்கின்றனர். பணிப்பாளர் சபையின் கடமைகளை நிறைவேற்றுவதில் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபை போதுமான தகவல்களைப் பெறுவதை தலைவர் உறுதி செய்கின்றதுடன், பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் அங்கத்தரவர்களின் திறம்பட்ட பங்கேற்பு, பங்குதாரருடன் பயனுள்ள தகவல்தொடர்பு மற்றும் பிரதான முகாமைத்துவப் நபர்களுடன் திறந்த தொடர்பு என்பவற்றைக் கொண்டுள்ளார்.

பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இடர் நாட்டத்தன்மை நிலைகளுக்குள் வங்கியின் உபாயமார்க்கம் மற்றும் வியாபாரத்தின் அன்றாட முகாமைத்துவம் ஆகியவற்றை வடிவமைத்தல், மேம்படுத்தல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றுக்கு பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் பொறுப்பேற்கின்றார். பொது முகாமையாளர்.்.பிரதான நிறைவேற்று அலுவலர் நிறுவன முகாமைத்துவக் குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குகின்றதுடன் நிறுவன நிர்வாக கட்டமைப்பில் அனுமதிக்கப்பட்ட அவர்களுடைய அதிகாரத்தின் அம்சங்களை நிறுவன முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு வழங்குகின்றார். முகாமைத்துவ குழுக்களுக்குத் தலைமை தாங்குவதோடு, வங்கியின் செயல்திறன் குறித்த துல்லியமான, சரியான நேரத்தில் மற்றும் தெளிவான தகவல்களை பணிப்பாளர் சபை பெறுவதை உறுதி செய்கின்றார். பொது முகாமையாளர்.். பிரதான நிறைவேற்று அலுவலர் வங்கியின் விவகாரங்களை மேற்கொள்ளும் போது நல்ல நிறுவன ஆளுகையும் உயர்ந்த தரங்களும் பயன்படுத்தப்படுவதையும் பராமரிப்பதையும் உறுதி செய்கின்றார்.

பணிப்பாளர் சபை செயலாளரின் வகிபாகம்

சபையின் செயலாளர் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் ஒழுங்காக பின்பற்றப்படுதல் மற்றும் மீளாய்வு செய்யப்படுதலை உறுதி செய்வதில் ஒரு முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றார். பணிப்பாளர் சபையின் செயலாளரது பொறுப்புகள் பின்வருமாறு சுருக்கமாக கூறப்படுகின்றன:

- சபை மற்றும் உபகுழுக்களுக்கான அனைத்து கூட்டங்களுக்கும் தேவையானவற்றை உறுதிப்படுத்தல்
- பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் அனைத்துக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளைப் பேணுதல்
- பணிப்பாளர் சபையினது ஒழுக்க விதிகள் மற்றும் சட்ட ரீதியான இணக்கப்பாட்டு தன்மையினை உறுதி செய்தல்
- பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டை உறுதி செய்தல்
- பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் அனைத்துக் கூட்டங்கள் தொடர்பான தொழில்சார் ஆலோசனைகளை தலைவருக்கு வழங்குதல்
- தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக பணிப்பாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல். நிறுவன ஆளுகைக்கான கோட்பாடுகள் மற்றும் தொடர்புபட்ட ஒழுக்கவிதி மற்றும் சட்டங்களுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்தல்
- பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் அனைத்து பதிவுகள், கூட்ட அறிக்கைகளைப் மற்றும் ஏனைய ஆவணங்களை பாதுகாத்தல்
- சபை பற்றிய சுற்றுநிருபங்கள் நேரத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை மற்றும் பணிப்பாளர் சபையின் முடிவுகளை நேரத்திற்கு முகாமைத்துவத்திற்கு தொடர்பாடுதல்

நிறுவன ஆளுகை

- சபையின் உப குழுக்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் வெளிப்பாடுகள் ஆகியன தொடர்பாக உரிய வகையில் சபை தகவல்களை பெற்றுக்கொள்வதை உறுதி செய்தல்.
- சபை முடிவுகளின் முகாமைத்துவ அமுல்படுத்தல்கள் பின்தொடரல் மற்றும் சபைக்கு அறிக்கையிடல்

ஓர் முக்கிய முகாமை நபர் என்னும் வகையில் செயலாளரது நியமனம் மற்றும் பதவி நீக்கம் ஆகியன சபை நியமன குழுவுடன் தொடர்புபட்டதாகும்.

பணிப்பாளர்களது சம்பளம் மற்றும் நிர்ணய முறை

1971ஆம் ஆண்டு 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கியின் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்குட்பட்டு, பணிப்பாளர்களின் சம்பளமானது தொடர்புபட்ட அமைச்சரினால் தீர்மானிக்கப்படும். எந்த ஒரு பணிப்பாளரும் தன்னுடைய சம்பளத்தை தீர்மானிப்பது தொடர்பான விடயங்களில் தொடர்புபடுவதில்லை. பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவானது பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களது சம்பளங்கள் தொடர்பாக மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும் நிறுவன ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளும் வங்கியானது பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சம்பளக் கொள்கையினைக் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக பணிப்பாளர் சபை அரசுடமை வங்கிகள் தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளின் இணக்கமான வகையில் இறுதி முடிவினை வழங்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த அமைச்சருக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும். பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவானது மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் மீளாய்வு

2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கியில் சட்ட வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய பிரயோகிக்கத்தக்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் நிறுவன கோட்பாடுகளுக்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றில் குறிப்பிட்ட பொறுப்புகளை உள்ளடக்கும் பணிப்பாளர் சபையின் பட்டயம் மற்றும் பணிப்பாளர் சபையின் உப குழுக்களின் பட்டயம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட கடமைகளை பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்கள் உரிய வகையில் நிறைவு செய்கின்றமையை உறுதி செய்வதற்காக வருடாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபை மற்றும் பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் சுயமீளாய்வை மேற்கொள்ளுகின்றனர். இந்த மீளாய்வு செயன்முறையிலே ஒவ்வொரு பணிப்பாளர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்பளர் சபை பெறுபேற்று மீளாய்வுப் படிவம் ஒன்றை பூர்த்தி செய்ய அது சபையின் செயலாளரினால் பணிப்பாளர் சபை நியமன குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

பெரும்பாலான பணிப்பாளர்களின் சேவைக்காலம் 2023 ஆண்டின் முற்பகுதியில் முடிவடைந்த காரணத்தில் வருடாந்த சபை மற்றும் உபகுழு மீளாய்வுகள் முடிவடையவில்லை.

பிரதான நிறைவேற்று அலுவலரின் மதிப்பீடு

வருடத்தின் ஆரம்பத்தில் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலருடன் ஒப்புக்கொள்ளப்பட்ட மூலோபாய வணிகத் திட்டத்தின் நிதி மற்றும் நிதியல்லா இலக்குகளின் படி அளவுகோள்களின் அடிப்படையில் வருடாந்த அடிப்படையில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலரின் செயற்திறனை பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்கின்றது. மதிப்பீட்டினைச் செய்யும் போது தொழிற்பாட்டுச் சூழலில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கு சரியான கவனத்தை வழங்குகின்றது. தலைவர் முறையான மற்றும் முறைசாரா பின்னூட்டல்களை பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலருடன் கலந்தாலோசிக்கின்றார். அனுமதிக்கு முன்னர் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலருக்கு மதிப்பீட்டுக்கான பின்னூட்டல் வழங்க உரிய கவனம் மேற்கொள்ளப்படுகின்றது.

சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை



மனோஹரி அபேயசேகர
தலைவர்
சபைக் கணக்காய்வுக் குழு

குழுவின் அமைப்பு

2022 இல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையின் கணக்காய்வுக் குழு கீழ்வரும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

பெயர்	அங்கத்துவ நிலை	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திருமதி மனோஹரி அபயசேகர* (17 ஜனவரி 2020 இருந்து 2 ஜனவரி 2023 வரை)	தலைவர்	14	14
கலாநிதி எம் கே சி சேனாநாயக்க* (17 ஜனவரி 2020 இருந்து 27 பெப்ரவரி 2022 வரை)	அங்கத்தவர்	02	02
திரு. ஜுட் நிலுக்ஷன்* (8 மார்ச் 2022 இருந்து இன்று வரை)	அங்கத்தவர்	12	10
திரு. எச் கே டீ லக்ஸ்மன் காமினி* (8 மார்ச் 2021 இருந்து இன்று வரை)	அங்கத்தவர்	14	14

*சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

2022 சபைக் கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் நிறுவன ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 184 இருந்து 186 வரை வழங்கப்பட்டுள்ளன

அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

கணக்காய்வு கண்காணிப்பாளர் தேசிய கணக்காய்வு அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு), உதவி பொது முகாமையாளர் (கணக்காய்வு) பிரதிப் பொது முகாமையாளர், (நிதி மற்றும் நிறுவன திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை)/சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்.

கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்

குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் சபைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

2023 இல்

பெரும்பாலான சபை உறுப்பினர்களின் பதவிக்கால நிறைவுடன் வங்கிப்பணிப்பாளர் குழு ஐந்து பணிப்பாளர்களுடன் மட்டுமே 2023 இல் மறுசீரமைக்கப்பட்டது. முழு பணிப்பாளர் சபையில் ஏழு உறுப்பினர் உள்ளனர் இருப்பினும் முடிவுகளை எடுப்பதற்கு நான்கு பணிப்பாளர்களின் கோரம் தேவைப்படும். அதன் படி சபை கணக்காளர் சபையினை மறுசீரமைத்தது. உறுப்பினர்கள் வருமாறு.

பெயர்	அங்கத்துவ நிலைமை
திரு துஸ்யந்த பஸ்நாயக்க**	தலைவர்
திரு. ஜுட் நிலுக்சன்*	அங்கத்தவர்
திரு. எச் கே டீ லக்ஷ்மன் காமினி*	அங்கத்தவர்

*சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம் ஒழுங்காக புதுப்பிக்கப்பட்டதுடன், (மூன்று வருடத்திற்கு ஒரு தடவை) குழுவின் குறிப்புகளின் நியதியைத் தெளிவாக வரையறுக்கின்றது. வங்கித்துறையில் ஏற்பட்ட புதிய முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு 2018 ஆம் ஆண்டில் குழுவின் பட்டயம் இறுதியாக மீளாய்வு செய்யப்பட்டது.

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை மீதான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் சிறந்த ஆளுகைக்கான அரச தொழில் முயற்சிகளின் ஏற்பாடுகளுக்கமைய வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட பணிப்புரையின் பிரிவு 3(6)(ii) இற்கு அமைய அரச தொழில் முயற்சிகளின் சிறந்த ஆளுகைக்கான ஏற்பாடு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை" என்பவையும் அதன் தொடர்ச்சியான திருத்தங்களாகும்.

குழுவானது, தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் பின்வரும் மேற்பார்வை பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1. வங்கியின் நிதிக் கூற்றுகள் நேர்மையானதாகயிருத்தல்
2. வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் செயற்திறனுடையதாக இருத்தல்
3. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டு செயலாற்றுகை மற்றும்
4. வங்கியின் வெளியகக் கணக்காய்வுச் செயற்பாட்டு செயலாற்றுகை

பட்டயமானது குழுவின் தொழிற்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களை குறிப்பிடுகிறது. பட்டயத்திற்கான பட்டியலானது குழுவின் தொழிற்பாடுகளை மற்றும் அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதன் இணக்கப்பாட்டினை ஆராய உதவுகிறது.

சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

அறிக்கையிடல்

குழு அதன் நடவடிக்கைகள் குறித்து குழு நேரடியாக, அதன் கூட்ட அறிக்கைகளுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகிறது. சபைக் கணக்காய்வுக் குழு அகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கு இடையேயான திறந்த தொடர்பாடல்களைப் பேணுகிறது. குழுவின் செயற்பாட்டுப் பரப்பெல்லை நியதிகள் (TOR) அனைத்து பொருண்மைமிக்க அம்சங்களிலும் இணங்கப் பட்டுள்ளன எனக் குழு கருதுகிறது.

2022 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் குழுவானது 14 கூட்டங்களை நடாத்தியதுடன் சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டியத்துக்கு அமைவாக குழுவின் ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) மூன்றில் இரண்டாகும். அழைப்பின் பெயரில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி அடங்கிய வங்கியின் சிரேஷ்ட முகாமைத்தவத்தினர் தேவை அடிப்படையில், அழைப்பின் பெயரில் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

நிதி அறிக்கை நிலை மற்றும் செயற்றிறன்

வங்கி நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மையினை மேற்பார்வை செய்ய குழு மதிப்பீடு செய்தது மற்றும் வெளிப்படுத்தல்களுக்காக காலாண்டு அறிக்கைகள் தாயாரிக்கப்பட்டன. குழுவானது பிரதான தீர்மான இடங்கள், கணக்கீட்டு கொள்கைள் மற்றும் நடைமுறைகளிலான மாற்றங்கள், கணக்காய்விலிருந்து எழும் பிரதான மாற்றங்கள், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு, நிதிக்கூற்றுக்களின் உண்மையான மற்றும் நியாயமான தன்மையினை வெளிப்படுத்த பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குதல் என்பவற்றை நோக்குகிறது.

“2022 முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளின் ஆய்வு அறிக்கையினை குழு ஆய்வு செய்தது இது உள்ளக கணக்காய்வு பிரிவின் கண்டுபிடிப்புகளுடன் சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் வரைவு நிதி அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டது.

உள்ளக மூலதன போதுமானதன்மை மதிப்பீட்டு முறைமை (ICAAP)

பகுதி 10, 2016 வங்கிச்சட்ட நியமம் 1 ஆனது மூலதன மதிப்பீட்டு முறைமையின் நேர்மையான, சரியான மற்றும் நியாயமான தன்மை தொடர்பில் சுயாதீனமான மதிப்பீட்டினை கோருகிறது. ICAAP இன் தேவைப்பாட்டிற்கு ஏற்ப குழு உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறனை மதிப்பீடு செய்தது.

மத்திய வங்கியின் புதிய வங்கிச்சட்ட நியம இல. 13 மற்றும் 14 உடன் இணங்குதல்

மத்திய வங்கியின் புதிய வங்கிச்சட்ட நியமம் 13, கடன் வகைப்படுத்தல், மதிப்பிடல், தயார்நிலை மற்றும் செயற்படுத்தல், நியமம் 14 கடனல்லாத நிதிச்சொத்துக்களின் வகைப்படுத்தல், மதிப்பிடல், தயார்நிலை மற்றும் செயற்படுத்தல், என்பவற்றை குழு மதிப்பாய்வு செய்தது.

இடர் மற்றும் கட்டுப்பாடுகளின் அளவீடுகள்

வங்கியின் பணிப்பாளர்கள் மற்றும் அதன் துணை அமைப்புகள் இடர்களை இனம்காணுதல் மற்றும் ஆராய்தல் மற்றும் வணிக தொழிற்பாடுகள் மற்றும் நிதி அறிக்கையிடல் தொடர்பில் பொறுப்பானது. வங்கி இடர் அடிப்படையிலான கணக்காய்வு முறைமை மற்றும் 2007 வங்கிச்சட்டம் நியமம் இல 12, பிரிவு 3 (8) (ii) (b) ஏற்ப வங்கி உள்ளக கட்டுப்பாட்டினை மீளாய்வு செய்தது மற்றும் இலங்கை பட்டய கணக்காளர்களினால் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக முழுமையான கட்டுப்பாட்டு சூழல் மற்றும் பிரதான இடர்களுக்கான குறித்த கட்டுப்பாடுகள் என்பவற்றை வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமையினை சபை கணக்காய்வு குழு ஆய்வு செய்தது.

மேலும், கணக்கீட்டு மற்றும் நிதி அறிக்கையிடலின் பிழைகள் சொத்துக்களை தவறாக வழிநடத்தல், சட்ட மீறல், நிறுவன கொள்கைகளுக்கு இணங்காமை போன்ற வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மதிப்பீடு செய்தது. இது தொடர்பில் வெளியக மற்றும் உள்ளக கணக்காய்வாரள்களின் தொடர்புபட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை முகாமைத்துவ பதில்களுடன் ஆராய்தல்.

பக்கம் 246 முதல் 248 வரை உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளரின் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேவைப்பாடுகளை இணங்குவதில் வங்கி தேவையான நடைமுறைகளை கொண்டுள்ளதென கருதுகிறது.

உள்ளக கணக்காய்வு மற்றும் ஆராய்ச்சி

சபை கணக்காய்வு குழு ஆனது உள்ளக கணக்காய்வு பணிகள் தனிச்சையாக இடம்பெறுவதை உறுதிப்படுத்துகிறது. அதன் வாய்ப்பு, பணிகள், மற்றும் கணக்காய்வுப் பிரிவின் வளங்களின் பொதுமான தன்மையினை ஆய்வு செய்தது மற்றும் பிரிவான அதன் வேலைகளை நடாத்துவதற்கு தேவையான அதிகாரங்களை கொண்டுள்ளனதென திருப்தியடைகிறது.

வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் படி வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவானது கிளைகள், பிரிவுகள் மற்றும் ஏனைய பிரிவுகளில் கணக்காய்வினை நடத்தியது. மதிப்பிடப்பட்ட இடர் அடிப்படையில் கணக்காய்வின் தேவை தீர்மானிக்கப்பட்டது. கணக்காய்வு திட்டம் சபை கணக்காய்வு குழுவினால் அங்கிகரிக்கப்பட்டது. 2022 இற்காக அங்கிகரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டமானது முடிவடைந்த 2022 ஆம் ஆண்டில் அடையப்பட்டது.

உள்ளக கணக்காய்வு பிரிவானது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க செயல்படுதலை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறனை உறுதிப்படுத்த உள்ளக பரிசீலனைகளை மேற்கொள்வதோடு அதன் கண்டுபிடிப்புகளை பிரசுரிக்கிறது. முகாமைத்துவ தொழிற்பாடுகளின் தன்னிச்சையான மற்றும் நேரான தன்மையை வழங்க உள்ளக கணக்காய்வு நடத்தப்பட்டது மற்றும் அதன் கண்டுபிடிப்புகளை சபை கணக்காய்வு குழு ஆனது மதிப்பீடு செய்தது.

மேலும் குழுவானது டிசெம்பர் 2022 வரை நடாத்தப்பட்ட உள்ளக விசாரணைகள் மற்றும் வங்கியின் மோசடித் திரும்பல்கள் அறிக்கைகளை மதிப்பீடு செய்தது மற்றும் கணக்காய்வு மற்றும் காவல் பிரிவின் சிரேஸ்ட ஊழியர்களின் செயற்றிறனை ஆய்வு செய்தது.

வங்கியின் உள்ளக கணக்காய்வு கையேடு உள்ளக கணக்காய்வு பணியினை சுருக்கமாக கூறுவதோடு உள்ளக கணக்காய்வினை ஆட்சி செய்யும் கொள்கைகள், தரங்கள், மற்றும் நடைமுறைகள் வரையறுக்கிறது.

உள்ளக கணக்காய்வு சாசனம் உள்ளக கணக்காய்வு பிரிவின் கடைமைகளை வினைத்திறனாக மற்றும் தன்னிச்சையாக நடாத்த உதவுகிறது. சாசனமானது எல்லை, பணிகள், அதிகாரங்கள், அறிக்கையிடல், நடைமுறைகள் மற்றும் தன்னிச்சையான தன்மை என்பவற்றை உள்ளடக்குகிறது.

வெளியக கணக்காய்வு

சட்டத்தின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதி வங்கியின் வெளியக கணக்காய்வாளர். ஈடுபாட்டின் போது சிரேஸ்ட முகாமை இல்லாது வெளியக கணக்காய்வாளருடன் இரு கூட்டங்கள் இடம் பெற்றன. முக்கியமான விடயங்கள் தொடர்பில் தங்களது எண்ணங்களை வெளிப்படுத்தவும் கலந்தாலோசிக்கவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. சபை கணக்காய்வு குழு கூட்டங்களின் போது அரச கணக்காய்வாளர் சிரேஸ்ட அதிகாரியுடன் கணக்காய்வு செய்முறையின் வினைத்திறன் கலந்தாலோசிக்கப்பட்டது. வெளியக கணக்காய்வுக்கு வேயான அனைத்து தகவல்கள் மற்றும் ஆவணங்களும் வழங்கப்படுதலை குழு உறுதி செய்தது.

குழுவானது வருடத்தினுள்:

- 2021 டிசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையினை, முகாமைத்துவ கடிதம் மற்றும் பதில்கள் மற்றும் திருத்த நடவடிக்கைகளுக்கான பின் தொடரல் என்பவற்றை மதிப்பீடு செய்தது.
- கணக்காய்வாளர் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய அறிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டன மற்றும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

உள்ளக கணக்காய்வினை மேற்பார்வை செய்தல்

- கண்காய்வின் போது கண்டறியப்பட்ட சிக்கல்களை சரிசெய்வதற்கான பொறிமுறையினை பின்பற்றியது
- ஒழுங்கு விபரங்கள் மற்றும் விசாரணைகள் பற்றிய குறித்த அறிக்கைகளை கால இடைவெளியில் ஆய்வு செய்வது
- பொதுவான மோசடிகள்/முறைகேடுகள் பற்றி மதிப்பாய்வு செய்து மீண்டும் நிகழ்வதனை தவிர்பதற்கான முயற்சிகளை எடுப்பது.

நெறிமுறைகள் மற்றும் நல் ஆளுகை

குழுவானது வங்கியின் நல் ஆளுகை நடைமுறைகளை பேணுதல் மற்றும் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்கிறது.

அனைத்து தர மோசடிகளையும் சபை கணக்காய்வு குழு காலாண்டு அடிப்படையில் மதிப்பீடு செய்கிறது. காலாண்டு மதிப்பீட்டின் போது சபை கணக்காய்வு குழு ஒவ்வொரு மோசடிகள், அதற்கான நடவடிக்கைகள் மற்றும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்று ஏனைய விடயங்கள் தொடர்பில் புள்ளிவிபரங்களை அளித்தது. அனைத்து ஆரம்ப விசாரணைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் தொடர்பில் சுருக்கத்தினை கேட்பதற்கு எந்த நேரத்திலும் சபை கணக்காய்வு குழுவுக்கு உரிமையுள்ளது

இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

வங்கி இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs/LKASs) அமைவாகத் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் கைக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் குழுவினால் மீளாய்விற்குட்பட்டு தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

இணக்கப்பாடு

சட்டம் மற்றும் ஒழுங்குமுறையின் இணக்கப்பாடு வினைத்திறனினை குழு மதிப்பீடு செய்தது மற்றும் இணக்கப்பாடுகள் அல்லாத (ஒழுக்க நடவடிக்கை உள்ளடங்கலான) முகாமைத்துவ விசாரணைகளை பின்தொடர்ந்தமை.

2023 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

சிக்கலான உள்ளக மற்றும் வெளியக சூழலின் தேவைக்கு மற்றும் வினைத்திறனாக தொழிற்பட நிதி முறைமை, செய்முறைகள், உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றை தொடர்ந்தும் பார்வையிடல்

தலைமை அதிகாரி தன்னிச்சையான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்பார்வையிடல் மற்றும் தேவையான முன்னேற்றங்களை மேற்கொள்ளல்.

குழு மதிப்பீடு

சபையின் 2022 ஆம் ஆண்டு மதிப்பீடு நிறைவடையவில்லை, பெரும்பாலான பணிப்பாளர்களின் பணிக்காலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவடைந்தது.



திருமதி. மனோஹரி அபேயசேகர்
தலைவர்
(2022 இல் அலுவலக பதவியில் இருந்தவர்)
சபைக் கணக்காய்வுக் குழு

27 ஏப்ரல் 2023
கொழும்பு

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு அறிக்கை



திருமதி கேசிலா ஐயவர்தன
தலைவர்
சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு

குழுவின் அமைப்பு

2022 இல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

பெயர்	அங்கத்துவ நிலை	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திருமதி கேசிலா ஐயவர்தன* (17 ஜனவரி 2020 முதல் 26 டிசெம்பர் 2022 வரை)	தலைவர்	11	11
திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன** (28. ஒக்டோபர் 2020 முதல் 03 ஜனவரி 2023 வரை)	அங்கத்தவர்	11	09
திரு எரங்க ஐயவர்தன** (08 மார்ச் 2021 முதல் 29. டிசெம்பர் 2022 வரை)	அங்கத்தவர்	11	09

*சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் நிறுவன ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 184 இருந்து 186 வரை வழங்கப்பட்டுள்ளன.

அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியுடன் தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி குழுவுக்கு தகவல்கள் வழங்குவதுடன், அனைத்து குழுக் கூட்டங்களிலும் கலந்துக்கொள்வார்

பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி) மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்தவத்தினரின் தேவை அடிப்படையில், அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்வார்.

கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்

குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

2023 இல்

பெரும்பாலான சபை உறுப்பினர்களின் பதவிக்கால நிறைவுடன் வங்கிப்பணிப்பாளர் குழு ஐந்து பணிப்பாளர்களுடன் மட்டுமே 2023 இல் மறுசீரமைக்கப்பட்டது. முழு பணிப்பாளர் சபையில் ஏழு உறுப்பினர் உள்ளனர் இருப்பினும் முடிவுகளை எடுப்பதற்கு நான்கு பணிப்பாளர்களின் கோரம் தேவைப்படும். அதன் படி சபை, மனித வளங்களும் ஊதியங்களும் குழு மறுசீரமைத்தது. உறுப்பினர்கள் வருமாறு:

பெயர்	அங்கத்துவ நிலைமை
திரு எஸ்.ஆர்.டபல்யூ.எம். ஆர்.பீ.சத்குமார**	தலைவர்
திரு. ஜுட் நிலுக்சன்*	அங்கத்தவர்
திரு. எச் கே டீ லகஸ்மன் காமினி*	அங்கத்தவர்

*சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
**சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் பட்டயம்

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவானது திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 ஒ (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையின் பிரிவு 03 (06) (i) மற்றும் (iii) இன் ஏற்பாடுகளின் நியதிப்படி சபை உருவாக்கப்பட்டது. இக்குழு பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன் குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகள் நேரடியாக பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிவிக்கப்படும்.

குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

பட்டயத்தின்படி, குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- கூட்டு உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியங்கள் தவிர வங்கியின் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையைத் (சம்பளங்கள், சம்பளப் படிகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானித்தல் குழுவின் பொறுப்பாகும்.
- குழுவானது, பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினருக்கான குறிக்கோள் மற்றும் இலக்குகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினருக்கான ஊதிய நன்மைகள் மற்றும் பிற செயற்றிறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை கொடுப்பனவுகளை தீர்மானித்தல்.
- குழுவானது சிரேஸ்ட-மற்ற ஊழியர்களின் மனித வள கொள்கைகள் மற்றும் சம்பளக்கட்டமைப்பு தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் ஆய்வு செய்தது. இந்த செயன்முறைக்கு தேவையான தகவல்கள் மற்றும் பரிந்துரைகள் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் சிரேஸ்ட ஊழியர்களிடமிருந்து பெறப்பட்டது.

2022 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

2022 ஆம் ஆண்டில் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் குழுவின் கூட்ட நடவடிக்கைகள் பணியாளர்களின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்களுக்காக சபைக்கு தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

- 2021 இற்கான பிரதான முகாமைத்துவ பணியாளர்கள் (KMPs) பொது மேலாளர்/ பிரதமநிறைவேற்று அதிகாரி, சிரேஸ்ட பிரதிப் பொது முகாமையாளர்இ அனைத்து பிரதிப் பொது முகாமையாளர்இஇ மற்றும் உதவிப் பொது முகாமையாளர்களின் முக்கிய நிர்வாக குறிகாட்டிகளின் (KPI) செயற்றிறன் மதிப்பீடு
- ஆட்சேர்ப்பு மதிப்பாய்வு மற்றும் வங்கி தேவையின் அடிப்படையில் ஊழியர்களின் பதவி உயர்வு
- பணியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனித வளம் மேலான முறையீடுகளின் பரிசீலனை
- ஊழியர் மீதான ஒழுக்க நடைமுறை, தண்டனை மற்றும் பதவி உயர்வு பற்றிய ஆய்வு
- ஆட்சேர்ப்பு முறையின் மதிப்பாய்வு
- வங்கிக்கு தேவையான பயிற்சி அலுவலர் மற்றும் பணியாட்களை நியமித்தல்

2023 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- ஊதிய கொள்கை பொருத்தபாட்டினை வங்கி பேணுவதை உறுதிப்படுத்தல்
- ஊழியர் ஈடுபாட்டு கலாச்சாரத்தை உருவாக்க மனிதவள தந்திரோபாயத்தில் கவனம் செலுத்தல்
- பட்டயத்தின் பொறுப்புக்களை அடைதல்

குழு மதிப்பீடு

சபையின் 2022 ஆம் ஆண்டு மதிப்பீடு நிறைவடையவில்லை, பெரும்பாலான பணிப்பாளர்களின் பணிக்காலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவடைந்தது.

Kesila Jayawardena

திருமதி கேசிலா ஜயவர்தன
தலைவர்
(2022 இல் அலுவலக பதவியில் இருந்தவர்)
சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு

27 ஏப்ரல் 2023
கொழும்பு

சபை நியமனக் குழுவின் அறிக்கை



திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன
தலைவர்
சபை நியமனக் குழு

குழுவின் அமைப்பு

2022 இல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபை நியமனக் குழு பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

பெயர்	அங்கத்துவ நிலை	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
யூ ஜி ஆர் ஆரியரத்ன** (17 ஜனவரி 2020 முதல் 01. ஜனவரி 2023 வரை)	தலைவர்	03	03
திரு. ஜுட் நிலுக்சன்* (28. பெப்ரவரி 2022 இருந்து இன்று வரை)	அங்கத்தவர்	03	03
திரு. எச் கே டீ லக்ஸ்மன் காமினி* (20 ஜூலை 2021 இருந்து இன்று வரை)	அங்கத்தவர்	03	03

*சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் நிறுவன ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 184 இருந்து 186 வரை வழங்கப்பட்டுள்ளன

அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் குழுவுக்குத் தகவல்களை வழங்குவதுடன் குழுக் கூட்டங்களில் அழைப்பின் பெயரில் கலந்து கொள்கின்றார்.

கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர், சபை நியமனக் குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

2023 இல்

பெரும்பாலான சபை உறுப்பினர்களின் பதவிக்கால நிறைவுடன் வங்கிப்பணிப்பாளர் குழு ஐந்து பணிப்பாளர்களுடன் மட்டுமே 2023 இல் மறுசீரமைக்கப்பட்டது. முழு பணிப்பாளர் சபையில் ஏழு உறுப்பினர் உள்ளனர் இருப்பினும் முடிவுகளை எடுப்பதற்கு ஐந்து பணிப்பாளர்களின் கோரம் தேவைப்படும். இருப்பினும் நிதியறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கையெளுத்திடப்பட்ட தினத்தில் சபை நியமனக்குழு மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை.

சபை நியமனக் குழுவின் பட்டயம்

முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தெரிவில் சபையின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டினை உறுதி செய்வதற்காக திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 (x) (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை நியமனக் குழுவை பணிப்பாளர் சபை நிறுவியது.

குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

சபை நியமனக் குழு, பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கு/நியமிப்பதற்கான செயன்முறையை நடைமுறைப்படுத்தல்,/பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பதவிக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்காக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய தகுதிக்கான தேவைப்படுத்தப்படும் தராதரங்கள், அனுபவம் மற்றும் முக்கிய விடயங்கள் போன்ற பிரமாணங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகும்.

மேலும் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளவாறும், பணிப்புரை 3 (3) இல் கொடுக்கப்பட்ட அளவுகளிலும் குறித்துரைக்கப்பட்ட பதவிகளை பெறுவதற்கு தகுதியான மற்றும் சரியானவர்கள் என பணிப்பாளர்கள் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை குழு உறுதிப்படுத்தும். ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குழு காலத்துக்கு காலம் மேலதிகமான/ புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகளையும், ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான அடுத்து வரும் ஒழுங்குகளையும் கவனத்தில் எடுத்து பரிந்துரைகளை மேற்கொள்ளும்.

2022 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

2022 ஆம் ஆண்டில் 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

- வங்கியின் முக்கிய முகாமைத்துவ நபர்கள் தொடர்பான ஆட்சேர்ப்பு திட்டங்களை மதிப்பாய்வு செய்தல்
- வங்கி மற்றும் வங்கி அல்லாத துறைகளில் சிறப்பு தரத்திற்கான பதவிகளுக்கு மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்கள (KMPs) நேர்காணல்

2023 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- முக்கிய முகாமைத்துவ நபர்கள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்குதல்
- வங்கியின் எதிர்கால திட்டமிடலினை தொடர்ச்சியாக கண்காணித்தல்
- முக்கிய முகாமைத்துவ நபர்கள் பொருத்தமான நபர்களை ஆடசேர்ப்பதற்கான ஆய்வு

குழு மதிப்பீடு

சபையின் 2022 ஆம் ஆண்டு மதிப்பீடு நிறைவடையவில்லை, பெரும்பாலான பணிப்பாளர்களின் பணிக்காலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவடைந்தது.



திரு. யூ.ஜீ.ஆர். ஆரியரத்ன
தலைவர்
(2022 இல் அலுவலக பதவியில் இருந்தவர்)
சபை நியமனக் குழு
27 ஏப்ரல் 2023
கொழும்பு

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை



திரு. யூ.ஜி.ஆர்.ஆரியரத்ன
தலைவர்
சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

குழுவின் அமைப்பு

2022 இல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையினால் நியமிக்கப்பட்ட சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

பெயர்	அங்கத்துவ நிலை	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
கலாநிதி எம் கே சி சேனாநாயக்க* (17 ஜனவரி 2020 முதல் 28. பெப்ரவரி 2022 வரை)	தலைவர்	01	01
யூ ஜி ஆர் ஆரியரத்ன** (08 மார்ச் 2021 முதல் 08. மார்ச் 2022 வரை)	அங்கத்தவர்	01	01
(08. மார்ச் 2022 முதல் 03 ஜனவரி 2023 வரை)	தலைவர்	06	06
திரு எம் ரி ஜே பெரேரா* (22 ஏப்ரல் 2020 முதல் 21 பெப்ரவரி .2023 வரை)	அங்கத்தவர்	07	07
திரு. எச் கே டீ லகஸ்மன் காமினி* (08 மார்ச் 2022 இருந்து இன்று வரை)	அங்கத்தவர்	06	06

*சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் நிறுவன ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 184 இருந்து 186 வரை வழங்கப்பட்டுள்ளன.

சபையில் இல்லாத உறுப்பினர்

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் பிரதான இடர் அதிகாரி

அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

வங்கியின் இணங்குவிப்பு அலுவலர் அழைப்பின் பெயரில் கிரமமாக கூட்டங்களில் கலந்து கொண்டார். குழுவானது, ஏனைய பிரதிப் பொது முகாமையாளர்கள் உதவிப் பொது முகாமையாளர்கள், மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள் தேவை அடிப்படையில், அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

2023 இல்

பெரும்பாலான சபை உறுப்பினர்களின் பதவிக்கால நிறைவுடன் வங்கிப்பணிப்பாளர் குழு ஐந்து பணிப்பாளர்களுடன் மட்டுமே 2023 இல் மறுசீரமைக்கப்பட்டது. முழு பணிப்பாளர் சபையில் ஏழு உறுப்பினர் உள்ளனர். இருப்பினும் முடிவுகளை எடுப்பதற்கு ஐந்து பணிப்பாளர்களின் கோரம் தேவைப்படும். இருப்பினும் நிதியறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கையெழுத்திடப்பட்ட தினத்தில் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை.

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபை 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவின் நியதிகளின் கீழ் நாணயச் சபையில் நிறைபெறச் செய்யப்பட்ட அதிகாரத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை ஒருங்கிணைந்த முகாமைத்துவக் குழுவை நிறுவியது.

குழுவின் வகிபாகங்களும் பொறுப்புக்களும்

- இடர் முகாமைத்துவம் தொடரடபான பொறுப்புக்களை பூர்த்தி செய்ய பணிப்பாளர் சபைக்கு உதவுதல் மற்றும் வினைத்திறனான இடர்முகாமைத்துவ கட்டமைப்பினை உருவாக்கல்
- வங்கியினால் அங்கிகரிக்கப்பட்ட இடர்முகாமைத்துவ கொள்கை மற்றும் வேறு இடர் தொடர்பான கொள்கைகளை அமுல்படுத்தல் மற்றும் வங்கியின் இடர்முகாமைத்துவ கொள்கையை காலத்துக்கு காலம் புதுப்பித்தல்
- வங்கியினால் எதிர்கொள்ளப்படும் கடன், சந்தை, தொழிற்பாட்டு மற்றும் உபாய இடர்கள் இனம்காணப்பட்டு, அளவிடப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்ட போதுமான அளவு முகாமைசெய்யப்படுதலை உறுதிப்படுத்தல்
- முக்கிய இடர் தொடர்பான தகவல்களை பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து பெற்று சபைக்கு வழக்கப்பட்ட பொறுப்புக்களுக்கு ஏற்ப சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளல்.
- புதிய முன்னேற்றங்கள் தொடர்பிலான இடர்கள் மற்றும் அவை தொடர்பிலான இணக்கப்பாடுகள் இனம்காணப்பட்டு, அளவிடப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்ட போதுமான அளவு முகாமைசெய்யப்படுதலை உறுதிப்படுத்தல்
- பாசல் III மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்கள்/ வழிகாட்டுதல்களுடன் இணங்குவதை உறுதிசெய்தல்

குழு கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் வங்கியுடன் தொடர்பான இடர் மற்றும் இணக்கம் பற்றிய எடுத்துரைப்புகள் ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது ஆணையின் கீழ் வரும் முன் மொழிவுகளுக்கான ஒப்புதலை வழங்குவதுடன் சபையினால் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டிய முன் மொழிவுகள்/ அறிக்கைகள் ஆகியவற்றை பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்கின்றது.

இடர் முகாமைத்துவம் தொடர்பான உரிய பகுதி/ பிரிவு ஆகியன வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் விபரமான அறிமுகத்தை வழங்குகின்றன. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இடர் முகாமைத்துவம், இணக்குவிப்புப் பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகள் ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது.

2022 ஆண்டின் போதான நடவடிக்கைகள்

காலாண்டுக்கு ஒருமுறை சந்திக்கிறது எனினும் தேவைகளுக்கு ஏற்ப கூட்டங்கள் நிர்ணயிக்கப்படும் 2022 ஆம் வருடத்தில் குழு ஏழு கூட்டங்களை நடத்தியது.

குழு வங்கியினை எதிராக பாதிக்கக்கூடிய தொழிற்பாட்டு, கடன், சந்தை, திரவத்தன்மை போன்ற அனைத்து பிரதான இடர்களை ஆராய்கிறது. இது பிரதான முகாமைத்து நபர்களுடன் நெருக்கமான உறவினை பேணுகிறது.

வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் இடர்முகாமைத்துவ வினைத்திறன் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

குறித்த வருடத்தினுள் குழுவினால் நடாத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- பலவீனமான பொருளாதார நிலைமைகாரணமாக குறையும் கடன் தரத்தினை மதிப்பாய்வு செய்தல்
- இடர் தாங்கு எல்லைக் கட்டமைப்பு மற்றும் இடர் சகிப்புத்தன்மை வரம்பு குறித்த மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கைகள், வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமை அம்சம் குறித்த அறிக்கைகளை மீளாய்வு செய்தல் (அதாவது கடன் இடர், சந்தை இடர், திரவத்தன்மை இடர், தொழிற்பாட்டு இடர், மனிதவள இடர், தொழில்நுட்ப இடர், சைபர் பாதுகாப்பு இடர் போன்ற)
- வங்கியின் பல்வேறுபட்ட இடர் வரம்புகளை மீளாய்வு செய்வதுடன் தேவையான அனுமதிகளை வழங்குதல்
- வங்கியின் இடர் முகாமை கொள்கைகளை மீளாய்வு செய்து, சபையின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்தல் வங்கியின் உள்ளக மூலதன போதுகை மதிப்பீட்டு செயல்முறை (ICAAP) ஆவணத்தை மீளாய்வு செய்தல்
- இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை தொடர்பில் எழுந்த திருத்த செயல்முறை தொடர்பிலான பின் தொடர்பிலான செயன்முறை
- தொடர்புபட்ட பிரிவுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள், நிதி மோசடி, மோசடி இடர் முகாமைத்துவம் தொடர்பான காலாந்த அறிக்கைகளை மதிப்பிடல்
- வங்கி இணக்க ஆராய்வுகள் மற்றும் அதன் முக்கிய பணிகளான அடகு வைத்தல், கடன், மனித வளம் KYC தேவைப்பாட்டினை பேணுதல் பற்றிய மதிப்பீடு
- பாசல் III அறிவுறுத்தல்கள் வழிகாட்டுதல்களுடன் இணங்குவதை உறுதிசெய்தல்
- இணக்கப்பாடு திட்டம் மற்றும் இணக்கப்பாடு கையேட்டின் வருடாந்த மதிப்பீடு

2023 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- பேரின மற்றும் நுண்பாக சூழல் காரணிகள், சந்தைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச இடர் காரணிகளில் கவனம் செலுத்தல்
- வங்கியின் இடர் மற்றும் இணக்கப்பாட்டு தந்ரோபாயத்தின் அமுல்படுத்தலை மேற்பார்வை செய்தல்
- இடர் முகாமைத்துவத்தில் உள்ளூர் மற்றும் சர்வதேச முன்னேற்றங்களை ஆராய்தல்
- சந்தை முன்னேற்றங்கள் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கு வங்கியின் நோக்கு தொடர்பில் தொடர்ச்சியாக நோக்குதல்

குழு மதிப்பீடு

சபையின் 2022 ஆம் ஆண்டு மதிப்பீடு நிறைவடையவில்லை, பெரும்பாலான பணிப்பாளர்களின் பணிக்காலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவடைந்தது.



திரு. யூ ஜி ஆர் ஆரியரத்ன
தலைவர்
(2022 இல் அலுவலக பதவியில் இருந்தவர்)
சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு
27 ஏப்ரல் 2023
கொழும்பு

தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவின் அறிக்கை



திரு எரங்க ஐயவர்தன
தலைவர்
தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழு

குழுவின் அமைப்பு

2022 இல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையினால் நியமிக்கப்பட்ட சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழு பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

பெயர்	அங்கத்துவ நிலை	வருகை தரக்கூடிய எண்ணிக்கை	வருகை தந்த எண்ணிக்கை
திரு எரங்க ஐயவர்தன** (10 பெப்ரவரி 2022 முதல் 29 டிசெம்பர் 2022 வரை)	தலைவர்	05	05
யூ ஜி ஆர் ஆரியரத்ன* (10 பெப்ரவரி 2022 முதல் 03 ஜனவரி 2023 வரை)	அங்கத்தவர்	05	05
திரு எம் ரி ஜே பெரேரா* (10 பெப்ரவரி 2022 முதல் 21 பெப்ரவரி 2023 வரை)	அங்கத்தவர்	05	05

*சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் நிறுவன ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 184 இருந்து 186 வரை வழங்கப்பட்டுள்ளன.

அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலகர் குழுவுக்கு தகவல்கள் வழங்குவதுடன் குழுக் கூட்டங்களில் அழைப்பின் பெயரில் கலந்து கொள்வார்.

பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)/பிரதான தகவல் அலுவலகர்

கோரம்

குறைந்தது இரண்டு உறுப்பினர்

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர், சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

2023 இல்

பெரும்பாலான சபை உறுப்பினர்களின் பதவிக்கால நிறைவுடன் வங்கிப்பணிப்பாளர் குழு ஐந்து பணிப்பாளர்களுடன் மட்டுமே 2023 இல் மறுசீரமைக்கப்பட்டது. முழு பணிப்பாளர் சபையில் ஏழு உறுப்பினர் உள்ளனர் இருப்பினும் முடிவுகளை எடுப்பதற்கு ஐந்து பணிப்பாளர்களின் கோரம் தேவைப்படும். இருப்பினும் முடிவுகளை எடுப்பதற்கு ஐந்து பணிப்பாளர்களின் கோரம் தேவைப்படும். இருப்பினும் நிதியறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கையெளுத்திடப்பட்ட தினத்தில் சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழு மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை.

தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபை 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவின் நியதிகளின் கீழ் நாணயச் சபையில் நிறைபெறச் செய்யப்பட்ட அதிகாரத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவை நிறுவியது.

சபை தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவானது வங்கியின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான தந்திரோபாய இலக்குகளை மேற்பார்வை செய்ய நிறுவப்பட்டது.

குழுவின் வகிபாகங்களும் பொறுப்புக்களும்

- தகவல் தொழில்நுட்ப ஆளுகை கட்டமைப்பை மீளாய்வு செய்தல் மேம்படுத்தல் மற்றும் அங்கிகரித்ததுடன் சந்தை சவால்களை எதிர்கொள்ள புதிய ICT கொள்ளைகளை உருவாக்கல்.
- தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான செயற்றிட்டங்களுக்கு பொருத்தமான சிபாரிசுகளை மேற்கொள்ளல் மற்றும் சுமூகமான உறவினை சபை உபகுழுக்களுடன் பேணுதல் மற்றும் வங்கியின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பின் வினைத்திறனினை உறுதிப்படுத்தல்

2022 ஆண்டின் போதான நடவடிக்கைகள்


- வங்கி பணிப்பாளர் சபைக்கு ICT திட்டங்கள் தொடர்பான கொள்முதல் நடவடிக்கைகள் செய்ய சபை பணிந்துரைத்தது
- தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழுவின் பட்டயத்தினை மீளாய்வு செய்து வலுப்படுத்தி மற்றும் சபைக்கு அங்கிகரிக்க பரிந்துரைத்தல்
- வாடிக்கையாளர் தரவு பாதுகாப்பின் தேவையினை ஆய்வு செய்தல் மற்றும் தரவு பாதுகாப்பு தொடர்பில் தேவையான கொள்கைள் மற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

2023 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட நோக்கு

- வங்கியின் மைய வங்கியியல் தீர்வை செயற்படுத்தல்
- சைபர் பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களில் முன்னோக்கி செல்வதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தல்
- தகவல் தொழில்நுட்ப ஆளுகை கட்டமைப்பை வலுப்படுத்தல் மற்றும் பராமரித்தல்

குழு மதிப்பீடு

சபையின் 2022 ஆம் ஆண்டு மதிப்பீடு நிறைவடையவில்லை, பெரும்பாலான பணிப்பாளர்களின் பணிக்காலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவடைந்தது.



திரு எரங்க ஐயவர்தன
தலைவர்
தகவல் தொழில்நுட்ப மூலோபாய குழு
(2022 இல் அலுவலக பதவியில் இருந்தவர்)

27 ஏப்ரல் 2023
கொழும்பு

இடர் மீளாய்வு

இலங்கை, அனைத்து துறைசார் நிறுவனங்களும் பெருமளவிலான பொதுமக்களும் கடுமையான துன்பத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சவால்மிக்கமிக்கதொரு காலப்பகுதியினூடாக நகர்ந்துகொண்டிருக்கிறது. நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற வங்கித் துறையும் கூட பேரண்டப் பொருளாதாரத்தின் அழுத்தம் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் பணவீக்கமானது 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலிருந்து ஒரு அதிகரித்துச் செல்லும் போக்கினையே காட்டியது. இத்தகைய போக்கு தொடர்ந்ததோடு, 2022 ஆம் ஆண்டின் தொடக்கமும் குறிப்பாக அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்துடன் ஒரு பாதகம் மிக்க பேரண்டப் பொருளாதார அறிகுறிகளுடனேயே ஆரம்பித்தது. கடந்த சமீபத்திய காலத்தில் அரசிறை வருமானத்தில் குறைவினை ஏற்படுத்தக் காரணமாக அமைந்த வரிக் குறைப்புகள் போன்ற அரசின் தவறான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டில் அரசிறைப் பற்றாக்குறையில் அதிகரிப்பிற்கும் வழியமைத்தது. 2022 மார்ச் மாதம் வரையான காலத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட ஐ.அ.டொ/இ.ரூ. நாணய மாற்று வீத பிடித்துவைப்பானது நாட்டின் அந்நியச் செலாவணி ஒதுக்கங்கள் தொடர்பில் மோசமான நிலைமைக்கு இட்டுச் சென்றதோடு, இதன் தொடர் நிலையானது 2022 ஏப்ரல் மாத இறுதியில் குறைவான அந்நியச் செலாவணி ஒதுக்கங்களைப் பதிவாக்கியது.இதன்பிரகாரம், சீன மக்கள் வங்கி (PCoC) மூலமான வருமானங்கள் உள்ளிட்ட நாட்டின் அந்நியச் செலாவணி ஒதுக்கங்கள் 2022 ஏப்ரல் மாதத்தில் ஐ.அ.டொ. 1.6 பில். என பதிவாகியது.

அந்நியச் செலாவணி ஒதுக்கங்களிலான குறைவு அத்துடன் பிட்ச் மற்றும் எஸ்அன்பீ ஆகிய இரு தரப்படுத்தல்கள் மூலமாகவும் இலங்கையின் கடன் மீளளிப்புத் தகுதியானது தவணை தவறுதல் நிலைக்கு தரமிறக்கி மதிப்பீடு செய்யப்பட்டமை போன்றன வெளிநாட்டு நிதி மூலங்களை அணுகுவதற்கு தடையாக விளங்கியன. 2022 ஆண்டுக் காலத்தின் போது ரூபாவின் மதிப்பானது 82.32% சதவிதத்தினால் குறைந்ததோடு, பணவீக்கமானது 73.7% சதவீதம் வரை உச்சத்தைத் தொட்டது (NCPI-செப்டம்பர் 2022).

பணவீக்கத்தைக் குறைத்து பொருளாதாரத்தினை ஸ்திர நிலைக்கு கொண்டு வரும் நோக்கில், மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2022 ஏப்ரல் மாதத்தில் 700 அடிப்படைப் புள்ளிகளால் ஒரு கொள்கை வீத அதிகரிப்பினை முன்னெடுத்ததோடு, இது ஜூலை மாதத்தில் மற்றுமொரு 100 அடிப்படைப் புள்ளிகளால் மேலும் அதிகரிக்கப்பட்டது.

தனியார் துறையினர்களுக்கான கடன் வளர்ச்சியானது இவ் ஆண்டுக் காலத்தில் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது. எதிர்மறைச் சந்தைசார் திரவத்தன்மை மற்றும் கொள்கை வீத மாற்றம் ஆகியன அரசாங்கப் பிணையங்கள் மீதான சந்தை வீதங்கள் மற்றும் வட்டி வீதங்களை 30 சதவீத அளவிற்கு மிகைப்படுத்தியதோடு, இது வங்கிகளிலான வட்டி வீத எல்லைகளை சவால்மிக்கதாக்கியது. 2022 ஆம் ஆண்டுக் காலத்தில் நிலவிய இந்த பாதகம் மிக்க பேரண்டப் பொருளாதார நிபந்தனைகள் திரவத்தன்மை சார் இடர்கள், அந்நியச் செலாவணி மீதான இடர்கள் மற்றும் கடன் தவணை தவறுதல் பற்றிய இடர்கள் குறித்தான பாதிப்பினை அதிகரித்தது.

இந்த அறிக்கையானது தற்போது நடைமுறையிலுள்ள அழுத்தம் மிக்க நிபந்தனைகளுக்கு மத்தியிலான இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான தேசிய சேமிப்பு வங்கியின் அணுகுமுறை தொடர்பில் மீளாய்வு செய்கிறது.

தேசிய சேமிப்பு வங்கியானது 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு உரிமம் பெற்ற விசேட வங்கியாக விளங்குகிறது. இந்த வங்கியின் தொழிற்பாடுகள் போட்டித்தன்மை மீதான வரையறைகளை உருவாக்கி,குறித்த சட்டத்தின் மூலமும் அதனையடுத்து வந்த திருத்தங்கள் மூலமும் வரையறை செய்யப்படுகின்றன.இருப்பினும், வங்கியில் மேற்கொள்ளப்படுகின்ற வைப்புகளுக்கும் அதற்கான வட்டிகளுக்கும் இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்படுவதோடு, குறித்த பண வைப்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான கோரிக்கைகளைச் செலுத்துவதற்கு வங்கியின் சொத்துகள் போதாதவிடத்து, திரட்டு நிதி இதற்குப் பொறுப்பாக அமைகிறது. இது வங்கியின் 50 வருட வரலாற்றில் பண வைப்பாளர்களுக்கு ஒரு மேலதிக பாதுகாப்பினை வழங்குவதோடு, தமது சேமிப்புகளுக்கான பாதுகாப்பான இடமாக இதனை பலரும் விரும்புவதற்கு வழியமைக்கிறது.

சட்டத்தினால் வழங்கப்பட்ட பணிப்பாணையின் பிரகாரம், வைப்புகள் மூலம் பெறப்படுகின்ற 60% சதவீதத்திற்கும் குறையாத பணத்தினை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்படுகின்ற அல்லது அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கப்படுகின்ற நிதி நடவடிக்கைகளில் முதலீடு செய்யுமாறு வேண்டப்படுகிறது. இதற்கிணங்க, வங்கியானது இந்த ஆண்டின் இறுதியில் 63.4% சதவீத்தினை அரசாங்கப் பிணையங்களில் பேணி வருகிறது. இது அரசுங்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தவிர்ந்ததாகும்.

வங்கித் துறையில் விளங்குகின்ற ஏனைய வங்கிகளைப் போன்று, எமது வங்கியானது தீவிரம் மிக்க பொருளாதார நிபந்தனைகள் காரணமாக திரவத்தன்மை, நிகர வட்டி வீத எல்லை மற்றும் விடயத் தரத்திலான குறைவு போன்றவற்றின் மீதான அழுத்தத்தினை எதிர்கொண்டது.வங்கியானது குறுங்காலத்தில் இலாபத்தினை ஈட்டுவதற்கான ஒத்திசைவுடன் ஒரு திரவத்தன்மை மிக்க நோக்கிலிருந்து கடன்தீர் ஆற்றல் மீது தனது மைய அவதானத்தினைச் செலுத்தியிருந்தது.

சவால் மிக்க இடர்களுக்கும் மத்தியில்,வங்கியானது ஒப்பந்தம் சார்ந்த பொருளாதாரச் சூழலைக் கருத்திற்கொள்கையில் ஐந்தொகை பற்றிய முன்னேற்றமானது ஒரு முன்னுரிமை மிக்க விடயமாக இருந்திடாத போதிலும், மூலதனப் போதுமை, திரவத்தன்மை மற்றும் உந்துசக்திக் காரணிபோன்ற கடன்தீர் ஆற்றல் பற்றிய சுட்டிகளை ஒழுங்குறுத்துகை சார் குறைந்தபட்சதேவைப்பாட்டிற்கு மேலாக பேணியது. இருப்பினும், உறுதியற்ற பொருளாதார நிபந்தனைகளுக்கு மத்தியில் இந்த மட்டத்தினை இடைக்காலம் முதல் நீண்டகாலம் வரையில் பேணுவதானது மிகவும் சவால் மிக்க விடயமென்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.


இடர் முகாமைத்துவமானது வங்கியின் அனைத்துப் பிரிவுகளுக்குமான நியமங்கள், குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்களை வரையறுப்பதன் மூலம் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான மூலோபாய அணுகுமுறைகளைத் தாபிக்கின்றது. பணிப்பாளர்கள் சபையினால் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் அங்கீகரிக்கப்பட்டு, ஒரு வலுவான இடர் கலாசாரம் பற்றி தொடர்ந்தும் வலியுறுத்துவதற்குத் துணையாக அது வங்கியினால் பொருந்திக்கொள்ளப்படுகிறது.



உரு 26: பொருளாதார நெருக்கடியிலிருந்தான சவால்கள்

இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம்

இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமானது விவேகம் மிக்க இடர் முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும் நோக்கில் குறித்த இடர்களை இனங்கண்டு, மதிப்பாய்வு செய்து, கண்காணித்து, அறிக்கை செய்து மற்றும் அவற்றைத் தணிக்கும் வகையில் மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை பொருத்தமான முறையில் அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதை இயலச் செய்கிறது.



உரு 27: இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம்

இடர் ஆளுகை

இடர் முகாமைத்துவ நடைமுறையானது உயர் ஆளுகை நியமம் ஒன்றினை பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டினை வங்கி கொண்டுள்ளது. இது இடர் எதிர்கொள் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்க முறையிலும் விவேகம் மிக்க முறையிலும் மேற்கொள்வதற்கு பணிப்பாளர்கள் சபையினையும் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளையும் இயலச் செய்கிறது. பணிப்பாளர்கள் சபையானது ஆளுகை வேலைச்சட்டகத்தில் உயர்ந்த மட்டத்தில் செயற்படுகின்றது.


பல்வேறு இடர் வெளிக்காட்டல்களை முகாமைத்துவம் செய்வதற்கும் மற்றும் உள்ளகக் கொள்கைகள் பொருத்தமான முறையில் தாபிக்கப்பட்டு அதற்கு இணக்கமுறுவதனை உறுதிப்படுத்துவதற்குமான ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட வேலைச்சட்டகத்தினை சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் தாபித்திருப்பதனை, பணிப்பாளர்கள் சபையானது இடர் கண்காணிப்பு பற்றிய வகிபாகத்தினூடாக உறுதிப்படுத்துகிறது. நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத அனைத்து இடர் வகைகளும் வங்கியின் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்திற்கு இணங்க முகாமைத்துவம் செய்யப்பட்டு அறிக்கையிடப்படுகிறது.

இரண்டு சபை மட்ட இடர் முகாமைத்துவக் குழுக்கள் காணப்படுகின்றன. அவை சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) மற்றும் சபைக் கணக்காய்வுக் குழு (BAC) என்பனவாகும். போதுமான அளவுடையதும் வினைத்திறன் மிக்கதுமான இடர் முகாமைத்துவத் தொழிற்பாடு வங்கியில் காணப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான அதன் இடர் சார்ந்த பதிலளிப்புகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைநிறைவேற்றுவதற்கு உதவும் நோக்கில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இடர் மீளாய்வு

சிரேஷ்ட முகாமைத்துவமானது, தகவலளிக்கப்பட்ட தீர்மானமெடுத்தலுக்கான சிறந்த உள்நோக்கத்தினை வழங்கி அனைத்து வணிகத் தொடர்களிலும் தற்போது காணப்படக்கூடிய மற்றும் எதிர்காலத்தில் எழக்கூடிய இடர்கள், போக்குகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை புரிந்துகொள்வதனை மைய அவதானமாகக் கொண்ட முகாமைத்துவக் குழு வேலைச்சட்டகத்தினை தாபிப்பதன் ஊடாக நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத இரு வகையான இடர்களை துல்லியமாக ஆளுகை செய்வதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இடர் ஆளுகை கட்டமைப்பில் தாபிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ மட்டக் குழுக்கள் பற்றிய பட்டியல் கீழே வழங்கப்படுகிறது.


- கடன் குழு
- சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு
- இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு
- முதலீட்டுக் குழு
- தகவல் பாதுகாப்புக் குழு



உரு 28: இடர் முகாமைத்துவத்திலுள்ள பாதுகாப்பு நிலைகள்

அனைத்து பணியாட்டொகுதி உறுப்பினர்களும் தமது பிரத்தியேக வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களினுள் காணப்படக்கூடிய இடர்களை உணர்ந்து அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளனர். "மூன்று நிலைப் பாதுகாப்பு" மாதிரியானது கடமைகளைப் பிரிப்பதன் மூலம் தெளிவான பாதுகாப்பு நிலையினை எடுத்துக்காட்டுகிறது.





BIRMC – சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு
ISC – தகவல் பாதுகாப்புக் குழு
CC – கடன் குழு
BAC – சபைக் கணக்காய்வுக் குழு
ORMC – செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு
IC – முதலீட்டுக் குழு
GM/CEO – பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
ALCO – சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு

உரு 25: இடர் முகாமைத்துவ ஆளுகைக் கட்டமைப்பு (தொழிற்பாடு சார் அறிக்கையிடல்)

கொள்கை வேலைச்சட்டகம்

இடர் முகாமைத்துவக் கொள்கை வேலைச்சட்டகமானது அட்டவணை-26 இல் வழங்கப்பட்டுள்ள கொள்கைகளைக் கொண்டுள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கையானது பிரதான இடர் பிரதேசங்கள், இடர் முகாமைத்துவ அணுகல்கள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் போன்றவற்றுக்குத் தீர்வளிக்கும் வகையிலானதொரு தனியான கொள்கைகளைக் கொண்ட கொள்கை வேலைச்சட்டகம் பற்றி விபரிக்கின்றது.

இடர் நாட்டம் பற்றிய ஆவணம் மற்றும் ஐஊயுயீ ஆவணம் ஆகியன கொள்கை மட்ட ஆவணங்களாக விளங்குவதோடு, இவை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்தின் முந்திய பார்வையினுள் வருகின்றது.


கொள்கை	உள்ளடங்கும் விடயம்
ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கை	வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம்
கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை	கடன் தொடர்பிலுள்ள இடர்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் தணித்தலுக்கான வேலைச்சட்டகம்
சந்தை மற்றும் திரவத்தன்மை பற்றிய இடர் முகாமைத்துவக் கொள்கை	சந்தை மற்றும் திரவத்தன்மை பற்றிய இடர்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் தணித்தலுக்கான வேலைச்சட்டகம்
இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை	இயக்கப்பாட்டு இடர்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் தணித்தலுக்கான வேலைச்சட்டகம். இந்தக் கொள்கையானது தகவல் முறைமைக் கொள்கை, வணிகத் தொடர் முகாமைத்துவ முறைமைக் கொள்கை போன்ற ஏனைய கொள்கைகளைக் கொண்டு குறைநிரப்பப்பட்டுள்ளது,
அழுத்தச் சோதனைக் கொள்கை	வங்கியின் அழுத்தச் சோதனை பற்றிய வேலைச்சட்டகத்தினை சுட்டிக்காட்டுதல்
இடர் முகாமைத்துவ வெளிப்பாட்டுக் கொள்கை	இடர் முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகள்.
ICAAP முகாமைத்துவக் கொள்கை	வங்கியின் உள்ளக மூலதனப் போதுமையளவு பற்றிய மதிப்பீட்டுச் செயலாக்கத்தினை (ICAAP) முன்னெடுப்பதற்கான வேலைச்சட்டகத்தினை வழங்குகிறது.
மாதிரி இடர் முகாமைத்துவக் கொள்கை	இடர் மதிப்பாய்வு, நிதி மற்றும் ஒழுங்குறுத்துகை பற்றிய அறிக்கையிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலில் பயன்படுகின்ற மாதிரிகளின் இடரை முகாமை செய்வதற்கானதொரு நடைமுறையினை வழங்குவதற்கான கொள்கை.

உரு 26: இடர் முகாமைத்துவக் கொள்கைகள்

இடர் மீளாய்வு

இடர் நாட்டம் பற்றிய கூற்று

வங்கியின் இடர் நாட்டம் பற்றிய கூற்றானது வியாபார இயக்கங்கள் மற்றும் இடர்களை சீரமைப்பதன் மூலம் பெறுமானத்தினை மேம்படுத்துகிறது. இது ஒரு எதிர்பார்க்கப்பட்ட இடருக்குப் பொருத்தமான திரும்பல் மிகுதியை வழங்கும் வகையில் வியாபாரச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான ஒரு வழிகாட்டியாகச் செயற்படுகின்ற அதேவேளை, ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர் மட்டங்களினுளேயே இது காணப்படுகிறது.



உரு 30: இடர் நாட்ட வேலைச்சட்டகத்தினை அமுல்படுத்தல்

வங்கியானது, பெறுமானங்களுக்கும் மற்றும் நிதிசார் நிலைமைக்கும் உரிய பாதகமான விளைவுகளை குறைத்துக் கொள்ளும் நோக்கில் தரப் பண்பு மற்றும் அளவுப் பண்பு ஆகியவற்றை உபயோகித்து நிறுவன மட்டத்தில் இடர் நாட்டத்தினை தாபிப்பதில் மேலிருந்து கீழான அணுகுமுறை ஒன்றினை உபயோகித்து வருகிறது. நிறுவன மட்டத்திலான அளவுப் பண்பு சார் இடர் நாட்டமானது பிரதானமாக மூலதனப் போதுமை, திரவத் தன்மை, இலாபம் மற்றும் ஏனைய விவேகம் மிக்க தேவைப்பாடுகள் மீது மைய அவதானம் செலுத்துகின்றது.

தரப் பண்பு சார்ந்த கூற்றானது, வங்கி பூச்சிய இடர் நாட்டத்தைக் கொண்டிருப்பதற்கான இடர்களையே பிரதானமாகக் கொண்டுள்ளது. வியாபாரத் தொடர் மட்டத்தில் இடர் நாட்ட எல்லைகளாக குறிப்பாக கடன், பங்கு, வட்டி வீதம், அந்நியச் செலாவணி மற்றும் இயக்கம் போன்ற இடர் வகைகள் மூலமான விடயங்கள் காணப்படுகின்றன. மேலிருந்து கீழான மற்றும் அடியிலிருந்து உச்சி வரையான அணுகலை ஒருமுகப்படுத்துவதானது, வரையறுக்கப்பட்ட கட்டமைப்புகள், வரவு செலவு மதிப்பிடப்பட்ட மட்டங்கள் மற்றும் பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகள் (KORIs) போன்றவற்றை உபயோகித்து அனேக விவேகம் மிக்க இடர் நாட்ட மட்டங்களைத் தாபிப்பதற்காக பிரிவு மட்டத்திலும் மற்றும் உற்பத்தித் தொடர் மட்டத்திலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

அவதானம் செலுத்தப்பட்ட விடயப்பரப்பு	சுட்டி	2022 – உண்மைப் பெறுமதி	இடர் நாட்டத்திற்கு எதிராக செலயாற்றுகை
இலாபத் தன்மை	NIM	2.03	✓
	ROE	3.40	✓
	ROA	0.28	✓
மூலதனப் போதுமை	CET 1	14.36	✓
	Tier 1	15.78	✓
	மொத்த மூலதனம்	17.99	✓
திரவத் தன்மை	LCR	195.54	✓
	SLAR	40.62	✓
	NSFR	180.51	✓
உந்துசக்தி	உந்து சக்தி விகிதம்	7.43	✓

இடர் மட்டங்கள்

✓ இடர் நாட்ட மட்டத்தினுள் ✓ அதிகபட்ச சகிப்பு மட்டத்தினுள்
✓ அதிகபட்ச சகிப்பு மட்டத்திற்கு கீழே

உரு 27: இடர் நாட்ட மட்டங்களுக்கு எதிராக நிதிசார் சுட்டிகள்

2022 ஆம் நிதியாண்டுக்காக, இலாபத்தன்மைச் சுட்டிகள் ஒரு உயர் இடர் மட்டத்தினை சுட்டிக்காட்டுகின்றன. வங்கியானது, 2022 ஆம் ஆண்டுக் காலத்தின் போது நிலவிய பொருளாதார நிபந்தனைகள் மற்றும் அதிவிசேட சந்தையிலுள்ள திரவத்தன்மைப் போக்கு ஆகியவற்றிலிருந்து கடன்தீர் ஆற்றலைப் பேணுவதற்கான குறுங்கால இலாபத்திற்கான குறிக்கோளினை கைவிட வேண்டியிருந்தது.


திரவத்தன்மை, மூலதனப் போதுமை மற்றும் உந்துசக்தி வீதங்கள் ஒரு குறைந்த இடர் மட்டத்தினையே சுட்டிக்காட்டுகின்றன.

ICAAP ஆவணம்

ICAAPஆனது, வங்கியின் இடர் விபரக்குறிப்புடன் உள்ளக மூலதன ஏற்புடைமையினை உறுதிப்படுத்தும் வகையில் வணிகச் செயலாற்றுகை, இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் இடர் உணர்வு மூலதனம் ஆகியவற்றை மிகச் சிறப்பான முறையில் கொண்டுள்ளது. ICAAPஆனது, இடர் நாட்டம், அழுத்தச் சோதனை மற்றும் மூலதனத் திட்டமிடல் எண்ணக்கருக்கள் போன்றவற்றினை அனைத்து பொருள்சார்ந்த இடர்களை அறிந்துகொள்வதற்கான ஒரு சிறந்த இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்துடன், BIRMC இனூடாக பணிப்பாளர்கள் சபையின் மேற்பார்வைப் பொறுப்புடன் கொண்டுள்ளது. இந்தச் செயன்முறையானது இடர் முகாமைத்துவப் பிரிவினால் (RMD) விரிவாக ஆவணப்படுத்தப்படுகிறது.

ICAAPமுன்னெடுக்கப்படுவதோடு, இதன் ஆவணமானது, மேற்பார்வைமிக்க மீளாய்வுச் செயன்முறை மற்றும் சர்வதேச தரத்திலான சிறந்த நடைமுறைகள் தொடர்பில் வங்கிகளுக்கு விநியோகிக்கப்பட்ட பாசல் III மற்றும் தூண் II வழிகாட்டல்கள் குறித்தான இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கு இணங்கிக் காணப்படுகின்ற சபை அங்கீகரித்த ICAAP கொள்கையின் பிரகாரம் தயாரிக்கப்படுகிறது. இடர் மதிப்பாய்வுகள் தூண்-I மற்றும் தூண்-II குறித்தான இடர்களை அறிய உதவுகிறது.

வங்கியின் ICAAP ஆனது, வங்கிக்கும் ஒழுங்குறுத்துகையாளர்களுக்கும் அவசியமான அடிப்படை அம்சங்களாக விளங்குகின்ற நான்கு கோட்பாடுகள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இதன் பிரகாரம், ICAAPஆனது மூலதன மட்டங்களுடன் இணைக்கப்படுவதோடு, ஒழுங்குறுத்துகை சார் குறைந்தபட்ச மிகையில் மூலதனத்தைப் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வங்கியானது இடர் விவரங்களையும் உள்ளக மூலதனத் தேவைப்பாடுகளையும் மதிப்பீடு செய்து அவற்றை அளவிடுவதற்கான உள்ளக மாதிரிகளைக் கொண்டுள்ளது. இடர் மதிப்பாய்வுகள் தூண்-I மற்றும் தூண்-II ஆகிய இரு இடர்கள் தொடர்பிலும் கண்டறிய உதவுகிறது. உள்ளக மட்டுப்பாடுகள் மூலதனப் போதுமை தொடர்பான வினைத்திறன் மிக்க மதிப்பாய்வினை வழங்குவதற்குரிய மூலதனத் தேவைப்பாட்டினை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.



உரு 31: ICAAP வேலைச்சட்டகம்

இடர் முகாமைத்துவம்

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் என்பது, ஒரு வங்கியின் பரந்த நோக்குப் பார்வையில் குறித்த இடரை புரிந்துகொண்டு, அதனை முகாமைத்துவம் செய்து மற்றும் அதனைத் தொடர்பாடல் செய்வதற்கான ஒரு தொடர்ச்சியான, செயலூக்கமுள்ள மற்றும் முறையான செயன்முறையாகும். இது வங்கியின் வாய்ப்பு மிக்க இடர்களை அதன் ஒவ்வொரு மட்டத்திலும் இனங்காண்டு, அதன் பின்னர் மேம்பட்டதொரு தீர்மானம் மேற்கொள்கைக்கு வசதியளிக்கும் வகையில் உயர் மட்டத்திலான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்பாடல் செய்வதற்கான நடைமுறையிலுள்ள மதிப்பாய்வு ஒன்றினைக் கொண்டுள்ளது.

இடர் முகாமைத்துவமானது, இடர் மைய தீர்மானம் மேற்கொள்வதற்கு உதவுவதற்கும் மற்றும் மூலதனப் போதுமையினையும் மத்திய வங்கியினால் எடுத்துச் சொல்லப்பட்ட விவேகம் மிக்க தேவைப்பாடுகளையும் மதிப்பாய்வு செய்வதற்கும் வங்கியின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள இடர்களை இனங்கண்டு, மதிப்பாய்வு செய்து, கண்காணித்து மற்றும் அவற்றைக் குறைப்பதற்கான செயன்முறையில் உபயோகிக்கப்படுகின்ற பன்மடங்கான செயன்முறைகள், மாதிரிகள் மற்றும் கருவிகளைக் கொண்டுள்ளது.

வங்கியின் இடர் பதிவேடானது தற்போதைய மற்றும் எதிர்கால வாய்ப்புள்ள இடர்கள் குறித்தான தகவல்களைக் கொண்டுள்ளது. இடர் அடையாளம் மற்றும் மதிப்பாய்வு மாதிரிகள் ஆகியவற்றை உபயோகித்து RMD இன் மூலம் இந்த இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்படுகிறது. இதற்கிணங்க, இங்கு நான்கு பிரதான இடர்கள் காணப்படுகின்றன. கடன் இடர், சந்தை இடர் (அதாவது, பங்கு, அந்நியச் செலாவணி மற்றும் வட்டி வீதம்), இயக்கப்பாட்டு இடர் மற்றும் திரவத்தன்மை சார்ந்த இடர் போன்றனவே இந்த நான்கு பிரதான இடர்களுமாகும். இடரானது முகாமைத்துவத்திற்கு அறிக்கை செய்யப்படுவதோடு, சபை மட்டக் குழுக்கள் இவற்றிலுள்ள பிரதான இடர்கள், தற்போது காணப்படுகின்ற ஏனைய அனைத்து இடர்கள் மற்றும் எழக்கூடிய இடர்கள் போன்ற இடர்கள் தொடர்பில் கலந்துரையாடுகின்றன. பிரதான இடர்கள் பற்றிய விபரங்கள், முறைமைகள் மற்றும் குறித்த இடர்களைத் தீர்ப்பதற்கு இந்த மீளாய்வுக் காலத்தில் எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்களுடன் கூடிய அவ் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட செயன்முறைகள் போன்றன தொடர்பில் இதன் பின்னர் கலந்துரையாடப்படுகின்றன.

கடன் இடர்

கடன் இடர் என்பது உடன்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க கடன்பெற்றோர் அல்லது எதிர்த்தரப்பினர் தமது நிதிசார்ந்த கடப்பாடுகளை எதிர்கொள்வதற்குத் தவறுவதன் காரணமாக ஏற்படக்கூடிய இழப்புக்கான வாய்ப்புக்களைக் குறிக்கின்றது. இந்த வெளிப்பாடுகள் பிரதானமாக நேரடிக் கடன் வழங்கும் செயற்பாடுகள் மற்றும் அதேபோல் ஒப்பிய பொறுப்பு மற்றும் தற்செயல் செலவுகள் போன்றவற்றிலிருந்து எழுகின்றன.

வங்கிக்குரிய கடன் இடரானது பிரதானமாக எதிர்த்தரப்பினரின் தவணை தவறுகை மீதான இடர்,ஒருமுகப்படுத்தப்பட்ட இடர் மற்றும் தீர்வளித்தல் மீதான இடர்போன்றவற்றை உள்ளடக்குகின்றது.


கடன் இடர் வெளிப்பாடுகள்

டிசம்பர் 31 இலுள்ளவாறு	2022			2021			
	அதிகபட்ச வெளிப்பாடு (ரூ.'000)			அதிகபட்ச வெளிப்பாடு (ரூ.'000)			
	மொத்த நிலுவைப் பெறுமதி	கடன் சேதமிழப்பு	நிகர வெளிப்பாடு	மொத்த நிலுவைப் பெறுமதி	கடன் சேதமிழப்பு	நிகர வெளிப்பாடு	மாற்றம் %
காசும் காசுக்குச் சமமானவையும்	8,735,208	1,139	8,734,069	7,656,263	225	7,656,038	14.08
மத்திய வங்கியுடன் இருப்பு	236,480	–	236,480	–	–	–	–
வங்கிகளில் இடப்பட்டவை	10,470,905	4,496	10,466,409	7,122,376	1,678	7,120,698	46.99
பெறுதி நிதிப் பத்திரம்	28,172	0.00	28,172	–	–	–	–
இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் – நியாயமான பெறுமதியில் கணக்கிடப்பட்டவை	14,173,948	–	14,173,948	19,572,933	–	19,572,933	-27.58
கடன்தீர் செலவில் நிதிச் சொத்துக்கள்							
– கடன்கள் மற்றும் முற்பணங்கள்	570,255,736	17,228,415	553,027,321	550,912,009	11,970,220	538,941,789	2.61
– படுகடன் மற்றும் ஏனைய பத்திரங்கள்	920,068,906	939,528	919,129,378	936,735,215	1,385,163	935,350,052	-1.73
OCI மூலம் நியாய பெறுமதியில் கணிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்	27,662,763	–	27,662,763	13,817,594	–	13,817,594	100.2
ஆரம்ப ஐந்தொகையின் அதிகபட்ச வெளிப்பாடு (மொத்த அடிப்படையில்)	1,551,632,118	18,173,578	1,533,458,540	1,535,816,390	13,357,286	1,522,459,104	0.72
ஐந்தொகை முடிவில் அதிகபட்ச வெளிப்பாடு	–	–	12,898,050	–	–	11,853,668	8.81
அதிகபட்ச கடன் வெளிப்பாடு	–	–	1,546,356,590	–	–	1,534,312,772	0.78

அட்டவணை 28: அதிகபட்ச கடன் இடர் வெளிப்பாடுகள்


ஆரம்ப ஐந்தொகை வெளிப்பாடுகள் வங்கியின் மொத்த கடன் இடர் வெளிப்பாட்டின் 99% சதவீதமாகும்.

கடன் வெளிப்பாடு: பொருள்/ஆவணம் அடிப்படையிலானது வரைபு 45



A – வீடு மற்றும் ஆதனக் கடன்கள்
B – பிரத்தியேகக் கடன்
C – வைப்புகளுக்கு எதிராக கடன்கள்
D – அடகு
E – வாகனக் கடன்கள்
F – தவணைக் கடன் - SOE மற்றும் GOSL
G – தவணைக் கடன்கள் – வங்கி மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள்
H – தவணைக் கடன்கள் – நிறுவனங்கள்
I – கடன் விடயங்களிலான முதலீடு – SOE
J – கடன் விடயங்களிலான முதலீடு – வங்கி மற்றும் NBFI
K – கடன் பத்திரங்களிலான முதலீடு – நிறுவனங்கள்

கடன் பிணைத்தொகை அடிப்படையிலானது வரைபு 47




A – அசையாச் சொத்து
B – அசையும் சொத்து
C – திறைசேரி உத்தரவாதம்
D – நிறுவன உத்தரவாதம்
E – பிரத்தியேக உத்திரவாதம்
F – பணம்
G – தங்கம்
H – பெறத்தகு குத்தகை
I – பாதுகாப்பற்றது
J – ஏனையவை

வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் பிரிவானது 2022 ஆம் ஆண்டுக் காலத்தின் பொழுது 3.5 சதவீத வளர்ச்சி ஒன்றினை பதிவு செய்தது. இந்த வளர்ச்சிக்கு சில்லறைக் கடன் வழங்கல்களே பிரதான காரணமாகும். பெருமளவிலான கடன்களும் முற்பணங்களும் மற்றும் கடன் பொறுப்பிலுள்ள முதலீடுகளும் 60 மாதங்களுக்கும் மேலான ஒரு காலத்திற்குரிவையாகும்.

சில்லறை கடன் வழங்கல் தயாரிப்புகள் அதிகளவான உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளதோடு, இதில் 58.7 சதவீதம் பிரத்தியேக கடன்களைக் கொண்டுள்ளன. கடன் வழங்கல் பிரிவானது பிரதானமாக திறைசேரி உத்தரவாதங்களின் மூலம் ஆதரவளிக்கப்படுகின்ற கடன்கள் மற்றும் கடன்பொறுப்புக்களின் வழிமுறைகளினால் வழங்கப்படுகின்ற அரசாங்க மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான 94.4 சதவீத வெளிக்காட்டல்களைக் கொண்டுள்ளது.

கடன்கள் மற்றும் முற்பணங்கள் எதிர் சேதமிழப்பிற்கான ஏற்பாடு வரைபு 46



வங்கியின் கட்டம்-3 சேதமிழந்த கடன் வீதம் 2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு 2.8 சதவீதமாகும். இது 2021 இல் 2.5 சதவீதமாக விளங்கியது. இருப்பினும் இது துறையின் சதவீதமான 11.1 சதவீதத்திற்கும் குறைவாகும்.

	கட்டம் 3 கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா '000	பிரத்தியேக சேதமிழப்புத் தொகை ரூபா '000	கூட்டான சேதமிழப்புத் தொகை ரூபா '000	எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு தொகை ரூபா '000
2021	19,998,993	585,014	5,718,914	6,303,928
2022	25,508,516	2,115,825	7,797,611	9,913,436

அட்டவணை 29: கட்டம் 3 கடன் சேதமிழப்புக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் பற்றிய பகிர்வு

இடர் மீளாய்வு


2022 ஆம் ஆணடில் சேதமிழப்புக் (கட்டம் 3) கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 25.5 பில்லியனாகக் காணப்படுகிறது (2021 இல் இது ரூபா. 20.0 பில்லியன் ஆகும்). கடன் தலைப்பின் தரத்திலான சிதைவானது சேதமிழப்புக் கட்டணமான ரூபா 5.3 பில்லியனுக்கு வழியமைத்தது (2021 இல் இது ரூபா 3.0 பில்லியன் ஆகும்). இது 2021 இன் 31.5% சதவீதத்திற்கு எதிராக இவ்வாண்டின் இறுதியிலுள்ளவாறான 38.7% சதவீத கட்டம்-3 இற்கான ஏற்பாட்டுடன் கூடிய மொத்தமான சேதமிழப்புக் கடன் ஏற்பாடாக ரூபா 17.2 பில்லியன் அதிகரிப்பாகும்.

ஒருமுகப்படுத்தப்பட்ட இடர்


கடன் பிரிவிலுள்ள ஒருமுகப்படுத்தப்பட்ட இடரினை முகாமைத்துவம் செய்வதானது ஒரு இன்றியமையாத அம்சமாக மாறியுள்ளது. வங்கியின் இடர் நாட்டக் கூற்றானது ஒருமுகப்படுத்தலுக்கான எல்லைகளை வரையறை செய்வதோடு,இணக்கப்பாட்டு மட்டத்தினை உறுதிப்படுத்தும் வகையில் தாபிக்கப்படும் எல்லைக்கு எதிரான கடன் வெளிக்காட்டல்களை கண்காணிக்கின்றது. வங்கியானது அழுத்தம் மிக்க நிபந்தனைகளின் கீழ் மாத்திரம் சான்றாக விளங்கக் கூடிய வெளிக்காட்டல்களுக்கு இடையிலான பரஸ்பர சார்பு அம்சங்களை இனங்காணும் நோக்கில் ஒருமுகப்படுத்தப்பட்ட இடரின் மட்டத்தினை கண்காணிப்பதற்கு HHI சுட்டி மற்றும் அழுத்தச் சோதனை ஆகியவற்றை பயன்படுத்துகின்றது.

வங்கியானது துறைசார்ந்த ஒருமுகப்படுத்தலுக்கான ஒரு மிதமான இடர் நாட்டத்தினை கொண்டுள்ளது. மேல் மாகாணத்திற்கான உயர் புவியில் சார்ந்த ஒருமுகப்படுத்லுக்கு கடன் பிரிவில் அனேக பாரிய கடன்கள் பதியப்பட்டமையே காரணமாகும்.

துறைசார் ஒருமுகப்படுத்தல் வரைபு 48



புவியியல்சார் ஒருமுகப்படுத்தல் வரைபு 49



வெளிநாட்டுக் கடன் இடர்

வங்கி குறித்தான வெளிநாட்டு வெளிப்படுதலும் வெளிநாட்டு வங்கிகளுடனான வைப்புக்களிலிருந்து எழுந்துள்ளதோடு, கடன் வசதிகள் மற்றும் பத்திர கடன் போன்றன மொத்த சொத்துக்களின் 0.4% சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டன.

கடன் இடர் பற்றிய மீளாய்வு

கொவிட்-19 தொற்றுநோய் தாக்கத்திலிருந்து படிப்படியாக மீண்டெழுந்த பின்னர் 2022 ஆம் ஆண்டானது ஒரு சவால் மிக்க ஆண்டாக விளங்கியதோடு, அதற்கு கடுமையான வெளிநாட்டு ஒதுக்கம் சார்ந்த நெருக்கடிகள் மூலம் ஏற்பட்ட பல அனேக மோசமான பொருளாதார நிபந்தனைகளும் காரணமாக

அமைந்த அதேவேளை, இது நாணயச் சபையினை ஒரு இறுக்கமான நாணயக் கொள்கையை நோக்கிய நகர்வுக்கு இட்டுச்சென்றது. இதன் விளைவாக, வட்டி வீதமானது அதிகரிக்கும் பணவீக்க அழுத்தங்களுடன் வானளவில் உயர்ந்ததோடு, இது மக்களின் வாழ்வாதாரத்தினை பெரிதும் பாதித்தது.

இந்த நிலைமையானது கடன் பிரிவின் வளர்ச்சி மற்றும் அதன் தரத்தினை மோசமாகப் பாதித்தது. சில்லறையான மற்றும் நிறுவனம் சார்ந்த கடன் பெற்றோர் மூலமான கடன் தீர்க்கும் ஆற்றலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டதோடு,இது காசுப் பாய்ச்சல் முகாமைத்துவத்தில் பாதகமான விளைவினை ஏற்படுத்தி செயலாற்றுகை குறைந்த மற்றும் செயலாற்றுகை இன்றிய வெளிப்பாடுகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தியது.

வங்கியின் அனேக கடன் வழங்கும் நடவடிக்கைகள் நுகர்வோர் துறை நோக்கி ஒருமுகப்படுத்தப் பட்டதன் காரணமாக பொருளாதார நடவடிக்கைச் சுருக்கமானது இவ் ஆண்டினுள் துறை சார்ந்த ஒருமுகப்படுத்தலை அதிகரித்தது.

இடர் வகை	இடர் முகாமைத்துவ அணுகுமுறை	இடர் மட்டம்	தாக்கம்
கடன் இடர்	➔ சபை அங்கீகரித்த கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளைப் பொருந்திக் கொள்ளல் ➔ கடன் வழங்கலை அங்கீகரிப்பதற்கென விசேட அதிகாரக் கட்டமைப்பு ➔ இடர் மதிப்பாய்வுகளுடன் கூடிய இடர் மதிப்பீடுகள். ➔ இடர் தரப்படுத்துகை ➔ மட்டுப்பாடுகளுக்கு எதிரான கண்காணிப்பு ➔ கடன் பிணை வழிமுறை ➔ கடன் மீளாய்வுப் பொறிமுறை ➔ சுயாதீன இடர் மீளாய்வு/பரிமாற்றத்தில் மற்றும் பிரிவு சார் மட்டத்தில் கண்காணிப்பு. ➔ பணக் கொடுப்பனவின் பின்னரான மீளாய்வுகள் ➔ சேதமிழப்பு பற்றிய ஏற்பாடளித்தல்கள் ➔ பெறுமதியிடல்/மீள்பெறுமதியிடல் மற்றும் LTV விகிதம் பற்றி கண்காணித்தல். ➔ ஆரம்ப எச்சரிக்கைச் சுட்டிகள், சுயாதீன இடர் மதிப்பாய்வு/செயலாற்றுகை இன்றியவற்றின் முன்னேற்றப் போக்கு ஆகியவற்றைக் கண்காணித்தல். ➔ அழுத்தச் சோதனை ➔ பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி	உயர்வு	➔
ஒருமுகப்படுத்தப்பட்ட இடர்	➔ HHI சுட்டி ➔ மட்டுப்பாட்டுக் கண்காணிப்பு	உயர்வு	➔
வெளிநாட்டுக் கடன் சார் இடர்	➔ கடன் பிணை வழிமுறை ➔ மட்டுப்பாட்டுக் கண்காணிப்பு	குறைவு	➔

*சுட்டல் மற்றும் மூலதனம் ஆகியன குறித்தான தாக்கத்திலான வருடா வருட மாற்றம்

➔ தாக்கம் அதிகம் ➔ மாற்றம் இல்லை ➔ தாக்கம் குறைவு

அட்டவணை 30: ➔ கடன் இடர் மீளாய்வு

கடன் இடர் முகாமைத்துவம்

கடன்களும் முதலீடுகளும் மொத்த சொத்துக்களில் 43.6% சதவீதமாகவும் மற்றும் மொத்த இடர்-நிறைந்த சொத்துக்களின் 81.2% சதவீதத்திற்கும் மேலாக கடன் இடர் நிறைந்த சொத்துக்கள் காணப்படுவதனாலும், ஒரு விவேகமான முறையில் கடன் இடரினை முகாமைத்துவம் செய்வதானது வங்கியின் நீடுறுதித் தன்மைக்கு இன்றியமையா முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கடன் இடரானது சபை அங்கீகரித்த கடன் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தின் ஊடாக முகாமைத்துவம் செய்யப்படுவதோடு, இது ஒரு வலுவான இடர் ஆளுகைக் கட்டமைப்பினையும் மற்றும் ஒரு பூரணத்துவம் வாய்ந்த விரிவான இடர் முகாமைத்துவச் செயன்முறையினையும் கொண்டுள்ளது.

சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட கடன் கொள்கைகளும் மற்றும் தொழிற்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள அலுவலர்களின் கடமைகளைப் பிரித்து வழங்கும் வகையில் தாபிக்கப்பட்ட நடைமுறைகளும் கடன் செயன்முறையின் முன்று பிரதான கட்டங்களையும் உள்ளடக்கி வணிகத் தொடர் மட்டத்தில் கடன் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான வசதியை வழங்குகின்றது.

இடர் மீளாய்வு

கடன் உருவாக்கம்

- கடன் மதிப்பீடு மற்றும் தரப்படுத்தல்
- கடன் பிணை வழிமுறை
- சட்டம் சார் சரிபார்க்கை
- மேற்பார்வை மற்றும் பெறுமதியிடல்
- விசேட அதிகாரக் கட்டமைப்பின் கீழ் கடன் அங்கீகாரம் அளித்தல்.

ஆவணப்படுத்தல் மற்றும் பணக் கொடுப்பனவு

- ஆவணங்களைச் சரிபார்த்தல்
  - கடன் உடன்படிக்கை
  - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்
  - அடமானப் பத்திரம்
- காப்புறுதி (தலைப்பு/தீ காப்புறுதி/ DTA)
- பணம் வழங்கல்

பணக் கொடுப்பனவின் பின்னரான முகாமைத்துவம்

- கடன் சேகரிப்புக் கண்காணிப்பு
- பணக் மீள்பெறுகையின் பின்னரான கண்காணிப்பு
- LRM
- கடன் பிணை வழிமுறை பற்றிய மீள் மதிப்பிடல் (அசையாச் சொத்துக்கள்)
- மீட்டெடுப்புகள்

உரு 32: கடன் இடர் முகாமைத்துவச் செயன்முறை

இடர் முகாமைத்துவப் பிரிவின் CRMU ஆனது, தொழிற்துறைகள், பொருளாதாரம், சுற்றாடல் மற்றும் சமூகம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட காரணிகள் போன்ற வாடிக்கையாளர் மைய காரணிகள், உள்ளகக் காரணிகள் மற்றும் வெளியகக் காரணிகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு பரிமாற்ற மற்றும் துறைப்பிரிவு மட்டத்தில் சுயாதீன இடர் மீளாய்வு/ கண்காணிப்பினூடாக இடர் முகாமைத்துவச் செயன்முறையினை விரிவாக்கியுள்ளது.

பரிமாற்ற மட்டத்திலான மதிப்பீட்டுச் சரிபார்த்தல் மற்றும் சுயாதீன இடர் மதிப்பாய்வுகள் ஆகியன குறிப்பிடத்தக்க கடன் வெளிப்பாடுகளின் பேரில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆரம்ப எச்சரிக்கைச் சுட்டிகள், செயலாற்றுகை அற்ற போக்குகள், ஒருமுகப்படுத்தும் கடன் வகை மீளாய்வுகள் மற்றும் அழுத்தச் சோதனை போன்றன மீதான கண்காணிப்பு மற்றும் சம்பவப் பகுப்பாய்வு ஆகியன கடன் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான இடர் அறிக்கையிடல், முன்கூட்டிய விழிப்பூட்டல் மற்றும் சரிப்படுத்தல் நடவடிக்கை போன்றவற்றை இலகுபடுத்துகின்றது.

கொள்கை வேலைச்சட்டம்

- வங்கியின் கடன் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டன.
- இடர் நாட்ட மட்டங்கள் மற்றும் கடன் எல்லைகள் ஆகியன மீளாய்வு செய்யப்பட்டன

நடவடிக்கை/கண்காணிப்பு

- கடன் இடர் வகை பற்றி அவ்வப்போது ஒரு கிரம அடிப்படையில் BIRMC மற்றும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல்.
- ஆரம்ப எச்சரிக்கைச் சுட்டிகள் மற்றும் கடன் வகை கண்காணிப்பு அறிக்கை ஆகியவற்றை ஒரு கிரம அடிப்படையில் அவ்வப்போது CC இற்குச் சமர்ப்பித்தல்.
- சேதமிழப்பு பற்றிய மதிப்பாய்வுகளை செல்லுபடியாக்குதல்.
- நிறுவனக் கடன் பெறுனர் பற்றிய உள்ளக தரப்படுத்தல் மதிப்பாய்வினை செல்லுபடியாக்குதல்
- மீள் மதிப்பிடல் முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பு
- அழுத்தச் சோதனை மற்றும் சம்பவப் பகுப்பாய்வு

செயலாக்க முன்னேற்றங்கள்

பின்வரும் விடயங்கள் ஊடாக விருத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் அடிப்படையிலான கட்டுப்பாட்டு மேம்பாடுகளும் பரிந்துரைச் செயன்முறையும்.

- இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பாய்வு (RCSA)
- LRM

உரு 33: கடன் இடர் முகாமைத்துவம் - நடவடிக்கைப் படிமுறைகள் - 2022

சந்தை இடர்

சந்தை இடர் என்பது, ஒரு நிறுவனத்திற்கு ஒரு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சந்தைகளில் நிலவும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இடர்களாகும். வாய்ப்பு மிக்க இழப்புகள் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல், வருவாய் ஈட்டல்கள் மற்றும் மூலதன மட்டம் ஆகியவற்றை மோசமாக மாற்றக்கூடிய வட்டி வீதங்கள், அந்நியச் செலாவணி வீதங்கள், பங்கு விலைகள் மற்றும் பண்டங்களின் விலைகள் போன்ற சந்தை மாறிகளில் மோசமான நகர்வுகளை தோற்றுவிக்கலாம். சந்தை இடருக்கான வங்கியின் வெளிப்பாடுகள் பின்வரும் வழிமுறைகளிலிருந்து எழுகின்றன:

வர்த்தக ஏடு

வர்த்தக இடர் என்பது நிதிச் சந்தைகளில் வங்கியினால் முன்னெடுக்கப்படுகின்ற வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் ஏற்படுகின்ற இழப்புக்கான வாய்ப்பாகும். வங்கியின் வணிகப் பதிவேடானது அரசாங்கத்தின் பிணையங்கள் மற்றும் பங்குக் கருவிகளைக் கொண்டதாகும்.
வங்கியானது வர்த்தக ஏட்டிலுள்ள பிடித்துவைத்தல் நிலைமைகள் காரணமாக சந்தை இடர்களை எதிர்கொள்கின்றது. 2022 ஆம் ஆண்டின் முடிவில், வங்கியின் வர்த்தகப் பதிவேடானது ரூபா 14.2 பில்லியனைக் காண்பிப்பதோடு, இது வங்கியின் மொத்த சொத்துக்களின் 0.88% சதவீதமாகும்.

வட்டி வீத இடர்: ஆக்கவிளைவு வளைவுகள் மற்றும் கடன் பரவுகைகளின் மாற்றங்களின் மூலம் ஏற்படுகிறது.

பங்கு வீலை இடர்: பங்கு முதலீடுகள் குறித்தான விலைகளிலான மாற்றங்கள் மூலம் உண்டாகின்றது.

அந்நியச் செலாவணி வீத இடர்: தற்போதைய செலாவணி வீதங்களிலான மாற்றங்கள் மூலம் உண்டாகின்றது.

பண்டங்கள் சார்ந்த இடர்: வங்கி பண்டங்களில் முதலீடு செய்வதில்லை என்பதனால் பண்டங்களின் விலை சார்ந்த இடர் மூலம் வங்கி நேரடியாகப் பாதிக்கப்படுவதில்லை. இருப்பினும், பண்டம் சார்ந்த விலை மூலமான இடரானது அடகு வைத்தல் முற்பண வகை தொடர்பில் தங்கத்தின் விலையிலான ஏற்ற இறக்கத்தின் அளவுக்கு மட்டுப்படுத்தப்படுகிறது.

வர்த்தகஏடு அல்லாதவை

இது பிரதானமாக அரசாங்க பிணையங்களையே கொண்டுள்ளது. 2022 இன் முடிவில், அரசாங்க பிணையங்களில் காணப்பட்ட மொத்த முதலீடுகள் ரூபா 822.4 பில்லியன் ஆகும் என்பதோடு, இது வங்கியின் மொத்தச் சொத்துக்களின் 50.9 சதவீதம் ஆகும். மேலும் நிறுவனக் கடன் மற்றும் ஏனைய நிதி விடயங்களிலுள்ள முதலீடுகள் ரூபா 135.2 பில்லியனாக விளங்குகின்றதோடு, இது வங்கியின் மொத்தச் சொத்துக்களின் 8.4% சதவீமுமாகும். மேலே குறிப்பிட்ட வெளிப்பாடுகளிலிருந்து 79% சதவீதமானவை நீண்டகால ஆவணங்களிலான மற்றும் ஒரு வருடத்திற்கும் கூடுதலான ஒரு முதிர்ச்சியுடன் கூடிய பிணையங்களிலும் உள்ள முதலீடுகளைக் கொண்டுள்ளது.

வங்கியானது வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளில் இடர் வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளது.

உள்ளக மற்றும் ஒழுங்குறுத்துகை வரையறைகளுடன் இசைவுறும் வகையில் திறந்த நிலைமைகளைப் பேணுவதை வங்கி உறுதி செய்து வருகிறது.

ஐந்தொகையில் உள்ள சந்தை இடர் விடயங்கள் பற்றிய விபரம்

2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு	நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொகை ரூ. '000	வர்த்த இடருக்கான வெளிக்காட்டல் ரூ. '000	வர்த்தகமற்ற இடருக்கான வெளிக்காட்டல் ரூ. '000	சந்தை இடர் வகை
நிதிச் சொத்துக்கள்				
காசும் காசுக்குச் சமமானவைகளும்	8,734,069	–	8,734,069	IRR, FX
மத்திய வங்கியிலுள்ள மீதி	236,480	–	236,480	IRR
வங்கிகளுடனான பணியமர்த்துவை	10,466,409	–	10,466,409	IRR, FX
வருவிக்கப்படும் நிதி விடயங்கள்	28,172	–	28,172	IRR, FX
நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்	14,173,948	14,173,948		IRR, பங்கு
கடன்தீர் செலவிலான நிதிச் சொத்துக்கள் – கடன்களும் பெறத்தக்கவைகளும்	553,027,321	–	553,027,321	IRR, FX
கடன்தீர் செலவிலான நிதிச் சொத்துக்கள் – கடன்களும் ஏனைய நிதி விடயங்களும்	919,129,377	–	919,129,377	IRR, FX
OCI மூலமான நியாயமான பெறுமானத்தில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்	27,662,763	–	27,662,763	IRR, பங்கு
மொத்தம்	1,533,458,539	14,173,948	1,519,284,591	
நிதிப் பொறுப்புக்கள்				
வங்கிகளுக்கானவை	4,086,731	–	4,086,731	IRR, FX
கடன்தீர் செலவிலான நிதிப் பொறுப்புக்கள் – வைப்பாளர்கள்	1,476,739,818	–	1,476,739,818	IRR, FX
கடன்தீர் செலவிலான நிதிச் சொத்துக்கள் – ஏனைய கடன் பெற்றவர்கள்	16,766,044	–	16,766,044	IRR, FX
குத்தகைப் பொறுப்பு	1,377,229	–	1,377,229	IRR
விநியோகிக்கப்பட்ட கடன் பிணையங்கள்	23,778,255	–	23,778,255	IRR
மொத்தம்	1,522,748,077	–	1,522,748,077	

அட்டவணை 31: சந்தை இடர் வெளிப்பாடு

இடர் மீளாய்வு

சந்தை இடர் மீளாய்வு

இடர் உள்ளடக்கம்	இடர் முகாமைத்துவ அணுகல்	இடர் மட்டம்	தாக்கம்மூ
மீள்-விலையிடல் இடர்	• மீள்-விலையிடல் இடைவெளி எல்கைகளைக் கண்காணித்தல். • வீத உணர்வுமிக்க சொத்துக்கள் (RSA) மற்றும் வீத உணர்வுமிக்க பொறுப்புக்கள் (RSL) மீதான வரையறைகள்.	உயர்வு	▲
ஆக்கவிளைவு வளைவு இடர்	• வீத திடீர் மாற்றத்துடன் கூடிய உணர்வு மிக்க/அழுத்தச் சோதனை • ஆக்கவிளைவு, காலப்பகுதி மற்றும் காலப்பகுதிக்கான இடைவெளிகளைக் கண்காணித்தல் • இழப்பு எல்லைகளை நிறுத்தல்	உயர்வு	▲
அடிப்படை இடர்	• RSA மற்றும் RSL இடைவெளி மீதான வீத திடீர் மாற்ற உணர்வுகள்	உயர்வு	▲
FX இடர்	• கட்டுப்பாட்டுக் கண்காணிப்பு • செலாவணி மாற்று வீத நகர்வுக் கண்காணிப்பு • FX ஏயசு • அழுத்தச் சோதனை.	நடுத்தரம்	▶
பங்கு விலை சார் இடர்	• நாளாந்த அடிப்படையில் சந்தைக்குரிய-குறி FVPL மற்றும் FVOCI இற்கான வகை • வரையறைக் கண்காணிப்பு • பங்கு ஏயசு • அழுத்தச் சோதனை	நடுத்தரம்	▶
பண்டங்களின் விலை சார் இடர்	• அடகுச் சேவையிலான LTV கண்காணிப்பு • தங்கத்தின் விலைகளைக் கண்காணித்தல் • அழுத்தச் சோதனை	குறைவு	▶

* வருமானம் மற்றும் மூலதனம் மீதான தாக்கத்திலுள்ள வருடா வருட (லுழலு) மாற்றம்

▲ தாக்க அதிகரிப்பு ▶ மாற்றம் இல்லை ▼ தாக்கம் குறைவு

உரு 32: சந்தை இடர் மீளாய்வு

அதிகரிக்கும் வட்டி வீதம்,செலாவணி மாற்று வீதங்களிலான தேய்மானம் போன்ற சந்தை மாறிகளிலான மாற்றங்கள் சந்தை மற்றும் திரவத்தன்மை சார்ந்த இடர்களை அதிகரித்ததோடு,வங்கியின் இலாபமீட்டும் தன்மை, திரவத்தன்மை மற்றும் மூலதன மட்டங்களை எதிர்மறையாகப் பாதித்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 மார்ச் ஆரம்பத்தில் இறுக்கமான நாணயக் கொள்கையோடு,அரசாங்கப் பிணையங்கள் பற்றிய இரண்டாவது சந்தை விளைவு வளைவுக்கோடானது அனைத்துப் போக்குகளிலும் சமாந்தரமாக மேல்நோக்கி நகர்ந்தது. நிதி நிறுவனங்களினால் பண வைப்புக்களுக்காக உயர் வட்டி வீதங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக பங்குச் சந்தைத் திரும்பல் மற்றும் அதன் அளவுகள் வீழ்ச்சி கண்டன.

இவ் ஆண்டுக் காலத்தின் போது, வங்கியானது முதலீட்டு வகையின் பெறுமதியில் எதிர்மறையான தாக்கத்தினைக் குறைக்கும் நோக்கிலான அனேக பிரயத்தனங்களை மேற்கொண்ட அதேவேளை, பங்கு மற்றும் அரசாங்க பிணையங்களில் வணிக நடவடிக்கை இடம்பெற்றன. வெளிநாட்டு நாணயங்களைக் கொண்ட நடவடிக்கைகள் இவ் ஆண்டுக் காலத்தில் விதிக்கப்பட்ட மேலதிக விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுகளுக்கு இசைவுற்று இடம்பெற்றன.

வங்கியானது வர்த்தகப் பதிவேடு மற்றும் வங்கியியல் பதிவேடு ஆகிய இரண்டிலும் வட்டி வீத இடரினால் பாதிக்கப்படுகிறது. திறைசேரி முறிகள் மற்றும் பிணையங்களுக்கான வட்டி வீதங்கள் மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை விளைவுகளிலான எல்லையோர அதிகரிப்பானது வங்கியின் வட்டி வீத இடரினை அதிகரித்தது. வங்கியியல் பதிவேட்டிலான வட்டி வீத இடரானது கணிசமானளவு அதிகரித்ததோடு, இதற்கு 12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சி அம்சங்களில் காணப்பட்ட பரந்த எதிர்மறையான முதிர்ச்சி இடைவெளியே காரணமாகும்.

2022 ஆண்டுக்கான நிகர வட்டி வருமானமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி கண்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இதற்கு வட்டி வீத உணர்வு கூடிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் இருந்தான வட்டி வீத வருமானத்தில் (32%) ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் வட்டிக்கான செலவில் ஒரு உச்ச கட்டத்தினால் (83%) ஏற்பட்ட அதிகரிப்பு இதற்குக் காரணமாக விளங்குகின்றது.

நிகர வட்டி எல்லையானது 2021 ஆம் ஆண்டில் அறிக்கை செய்யப்பட்ட 3.71% சதவிதத்தில் இருந்து 2.03% சதவிதத்திற்கு இவ் ஆண்டில் வீழ்ச்சி கண்டுள்ளது. மேலும், அதிர்ச்சி மிக்க அதிவிசேட சதவீத மாற்றம் ஒன்றின் மூலம் ஒரு பொருளாதாரப் பெறுமதி நோக்கிலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க குறைவு அவதானிக்கப்பட்டது.

ஐ.அ.டொ./இ.ரூ. இடையிலான சராசரி புள்ளி வீதமானது 2022 ஆம் ஆண்டுக் காலத்தில் 81.18 சதவீதத்தினால் தேய்மானம் அடைந்ததோடு,

ரூ. 202.77 - ரூ. 367.38 எனும் வீச்சினுள் ஒரு ஏற்ற இறக்கத்தினையும் காண்பித்தது (மூலம்: புளும்பேர்க்). 2022 ஆம் ஆண்டுக் காலத்தில், உள்நாட்டு அந்நியச் செலாவணி மாற்றுச் சந்தையில் ஏற்பட்ட செலாவணி மாற்றத்திலான தொடர்ச்சியான வீழ்ச்சியின் காரணமாக இலங்கை மத்திய வங்கி தந்தி ஊடான பரிமாற்றங்கள் பற்றிய நடுத்தர வீதமானது 82.32 சதவிதத்தினால் தேய்மானமடைந்தது. இலங்கை மத்திய வங்கியானது 2022 மார்ச் மாதத்தில் இருந்து செலாவணி மாற்று வீதத்தில் பாரிய நெகிழ்வுத் தன்மையை அனுமதித்ததோடு, 2022 ஏப்ரல் மாதம் வரை குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய சீராக்கலை இது காட்டியது. இருப்பினும், 2022 மே மாதம் முதல் கொண்டு பல்வேறு சதவீத எல்லைகளைக் கொண்ட புதிய செலாவணி மாற்று வீதம் அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தினால் செலாவணி மாற்றத்தில் ஒரு பாரிய உறுதித் தன்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.

அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) ஆனது 8,489.66 எனும் அளவில் நிறைவடைந்து, 31% சதவீதத்தினால் அல்லது 3,736 சுட்டிப் புள்ளியினால் இறங்கிய அதேவேளை, S&P SL20 சுட்டெண் ஆனது 2,635.63 எனும் அளவில் முடிவடையும் வகையில் 1598 சுட்டிப் புள்ளியனால் அல்லது 38% சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வங்கியின் பங்கு FVPL வகையின் சந்தைப் பெறுமதியானது 16% சதவீதத்தினால் ரூபா 1.69 பில். இற்கு வீழ்ச்சி கண்டது. இவ் ஆண்டுக் காலப் பகுதியின் பொழுது, வங்கி அலகு அறக்கட்டளை நிதியங்களில் முதலீடு செய்வதிலிருந்து முழுமையாக விலகி இருந்தது. வங்கியானது 2022 ஆம் ஆண்டுக்காக பங்குப் பிணையங்கள் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து நிகர அடைவினைப் பாதுகாத்துக் கொண்டது.

மறு புறம், இரண்டாம் நிலைச் சந்தை பற்றியவர்த்தக விளைவுகளிலான அதிகரிப்புக் காரணமாக FVPL மற்றும் FVOCI வகைகளில் உணரமுடியாத இழப்புக்கள் பதிவாகின.

பிரிவின் வகை	2022 (ரூ. '000)		2021 (ரூ. '000)		உணரப்படாத இலாபம்/(நட்டம்) (ரூ. '000)
	பதிவேட்டுப் பெறுமதி	சந்தைப் பெறுமதி	பதிவேட்டுப் பெறுமதி	சந்தைப் பெறுமதி	
FVPL பிரிவு	**3,001,032**	**1,956,839**	2,683,677	2,329,980	(690,496)
FVOCI பிரிவு	**3,230,241**	**2,313,822**	3,230,241	2,895,358	(581,536)
மொத்தம்	**6,231,273**	**4,270,661**	5,913,918	5,225,338	(1,272,032)

உரு 33: பங்கு வகை பற்றிய நிலைப்பாடு

பிரிவின் வகை	2022 (ரூ. '000)		2021 (ரூ. '000)		உணரப்படாத இலாபம்/(நட்டம்) (ரூ. '000)
	பதிவேட்டுப் பெறுமதி	சந்தைப் பெறுமதி	பதிவேட்டுப் பெறுமதி	சந்தைப் பெறுமதி	
FVPL பிரிவு	**13,681,755**	**12,018,126**	17,747,123	17,001,217	(917,722)
FVOCI பிரிவு	**25,450,281**	**24,370,862**	11,153,812	10,725,355	(650,962)
மொத்தம்	**39,132,036**	**36,388,988**	28,900,935	27,726,572	(1,568,684)

உரு 34: அரச பிணையங்கள் வகை பற்றிய நிலைப்பாடு

சந்தை இடர் முகாமைத்துவம்

முதல் நிலைப் பாதுகாப்பு அலுவலகமாக விளங்குகின்ற திறைசேரி முகப்பு அலுவலகமானது, இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட அதன் நேரடியான பொறுப்புக்குரிய பணி இலக்கினுள் வங்கியின் வர்த்தகம் சார் மற்றும் வர்த்தகம் சாரா ஆகிய இரண்டு சந்தை இடர்கள் குறித்துமான காத்திரமான முகாமைத்துவ நடவடிக்கைகளுக்குக் பொறுப்பாக விளங்குகின்றது. திறைசேரியின் இடைநிலை அலுவலகமானது இரண்டாம் நிலைக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாட்டு மையமாக விளங்குவதோடு, இது முதல் நிலைப் பாதுகாப்பு அலுவலகத்தின் வர்த்தக இடர் முகாமைத்துவ நடைமுறைகளை சுயாதீனமாக கண்காணிக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகிறது.

IRM வேலைச்சட்டகத்தின் கீழ், சந்தை இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமானது, வர்த்தம் சார்ந்த மற்றும் வர்த்தகம் சாராத இரண்டு அம்சங்களுக்கும் பொதுவான இடர் விடயங்களை வெளிக்கொணர்ந்து அனைத்து இடர் வகைகளையும் ஒன்றாக சுட்டிக் காட்டுகிறது.

உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் சிறந்த சந்தை அனுபவங்கள் ஆகியவற்றுக்கு இணங்கி ஒழுகும் விவேகம் மிக்க இடர் மட்டுப்பாடுகள், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் சாத்தியம் மிக்க சந்தை மற்றும் திரவத்தன்மை சார் இடர்களுக்கான பிரதான குறிகாட்டிகள் பற்றி அறிக்கை செய்தல் போன்றன சந்தை இடர்களை தொடக்கத்தில் கண்டறிந்து அவற்றை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்கு பயன்படுகின்றன.

இடர் மீளாய்வு

வட்டி வீத இடர்

வர்த்தகப் பதிவேட்டிலான வட்டி வீத இடர்

வர்த்தகப் பதிவேட்டிலான வட்டி வீத இடரானது FVPLவகையில் பேணப்படுகின்ற வங்கியின் வட்டி வீத உணர்திறன் கொண்ட முதலீடுகளிலிருந்து எழுகின்றவை ஆகும். வர்த்தக மற்றும் FVOCI வகைகளிலுள்ள வங்கியின் வட்டி வீத உணர்திறன் கொண்ட முதலீடானது இவ் ஆண்டின் இறுதியின் அரசாங்க பிணையங்களிலான அதன் மொத்த முதலீடுகளின் 4.6% சதவீதமாக காணப்பட்டது. அரசாங்க பிணையங்கள் குறித்தான வர்த்தக நடவடிக்கைகளில் காணப்படும் வட்டி வீத இடரானது முன் தீர்மானிக்கப்பட்ட இடர் நாட்ட எல்லைகள், உணரப்படாத இலாபங்கள்.'. நட்டங்கள் மற்றும் வர்த்தகப் பதிவேட்டில் பேணப்பட்ட பிணையங்களுக்கான காலத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகள் போன்றவற்றுக்கு எதிரான எம்-காலப்பகுதியைக் (M-duration) கண்காணிப்பதன் ஊடாக கணிப்பிடப்படுகிறது.

வங்கியியல் பதிவேட்டிலான வட்டி வீத இடர்


	1 மாதத்தை விடக் குறைவு	1-3 மாதங்கள	3-6 மாதங்கள்	6-12 மாதங்கள்	1-3 வருடங்கள்	3-5 வருடங்கள	5 வருடங்களுக்கு மேல்
RSA (ரூ.மில்)	35,739	58,701	57,798	177,287	383,463	383,904	387,698
RSL (ரூ.மில்)	196,783	571,999	349,114	333,638	33,008	29,372	7,455
கால இடைவெளி (RSA-RSL) (ரூ.மில்)	(161,044)	(513,298)	(291,316	(156,351)	350,455	354,532	380,243
திரண்ட இடைவெளி (ரூ. மில்)	(161,044)	(671,342)	(965,658)	(1,122,009)	(771,554)	(417,022)	(36,779)
RSL இன் ஒரு சதவீதமாக உண்மையான இடைவெளி – 2022 (%)	-81.8	-89.7	-83.4	-46.9	1,061.7	1,207.0	5,100.3
RSL இன் ஒரு சதவீதமாக உண்மையான இடைவெளி – 2021 (%)	-86.8	-88.7	-84.2	-68.4	2,457.3	1,552.1	8,493.9

அட்டவணை 35 வட்டி வீத உணர்திறன் மிக்க இடைவெளி – வங்கியியல் பதிவேடு


வட்டி வீத இடருக்கான வங்கியின் பாதிப்பானது, சந்தையில் உள்ள வட்டி வீதங்களிலான கடுமையான ஏற்றத் தாழ்வுகளினால் பாதிக்கப்படுகின்ற நிகர வட்டி வருமானத்தின் ஒரு விளைவாக ஏற்படுகின்றது. இது வட்டி ஈட்டுகின்ற சொத்துக்கள், வட்டி செலுத்தும் பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகை அல்லா விடயங்கள் போன்றவற்றில் ஒரு வாய்ப்பு மிக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளது. IRR இற்கான வங்கியின் வெளிப்பாடானது மீள் விலையிடல் இடர், விளைவு வளைவு இடர் மற்றும் அடிப்படை இடர் போன்ற வடிவங்களில் இனங்காணப்பட முடியும்.

மேசமான வட்டி வீத நகர்வுகள் வங்கியின் மூலதனம் மற்றும் வருமானங்களில் தாக்கம் செலுத்துகின்றன. இந்த IRR இன் வடிவமானது, வர்த்தகம் அல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காலக் கட்டமைப்பிலுள்ள வேறுபாடுகள் மற்றும் விடயங்கள் விலையிடப்படுவதனை அடிப்படையாகக் கொண்ட வட்டி வீதச் சுட்டிகள் ஆகியவற்றில் இருந்து எழுகின்றது. IRRBB ஆனது சரியாக நிர்வகிக்கப்படாதவிடத்து, வங்கியின் மூலதன அடிப்படை மற்றும் எதிர்கால வருமான ஈட்டல்களில் குறிப்பிடத்தக்க மோசமான தாக்கம் ஒன்றினை தோற்றுவிக்க முடியும்.

அரசாங்கப் பிணையங்கள் வகை உள்ளடக்கம் வரைபு 50



திறைசேரிமுறி விளைவு வரைபு 51



வங்கியானது IRR ஐ பிரதானமாக ஒரு வட்டி வீத மீள் விலையிடல் இடைவெளிப் பகுப்பாய்வுகள் ஊடாக மதிப்பாய்வு செய்கிறது. இது அதிவிசேட வட்டி வீத திடீர் மாற்றங்களில் இருந்தான வருமான ஈட்டுதல்கள் மற்றும் மூலதனம் ஆகியவற்றுக்கான பாதிப்புக்களைச் சுட்டிக்காட்டுகின்றது. வட்டி வீத மீள் விலையிடல் இடைவெளிப் பகுப்பாய்வுகள் வட்டி-ஈட்டும் சொத்துக்கள் மற்றும் வட்டி-செலுத்தும் பொறுப்புக்கள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை அளவிடுவதோடு,இவை வரையறுக்கப்பட்ட முதிர்வுத் தொகுதியினுள் மீள் விலையிடப்படுகின்றன. வங்கியானது வருமானம் ஈட்டுகைகள் மற்றும் பொருளாதார பொறுமதி ஆகிய இரு கண்ணோட்டங்களிலும் IRR ஐ அளவிடுகின்றது.

வங்கியன் NII அல்லது NIM ஆனது வட்டி வீத வேறுபாடுகளுக்கு உட்படுமிடத்து, வங்கியின் 90சதவீதமான சொத்துக்களும் பொறுப்புக்களும்வட்டி வீத உணர்வு மிக்கவையாக விளங்குவதனால் IRR ஐ நிர்வகிப்பது வங்கிக்கு மிகவும் இன்றியமையாத விடயமாகும்.

வங்கியின் IRR முகாமைத்துவமானது தூண்டுதல் மிக்கதாகும், இதனால் முதிர்வுகளிலுள்ள (நிலையான வட்டி விதம் கொண்ட சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள்) பொருத்தப்பாடின்மைகளைக் குறைப்பதற்கு அல்லது மீள் விலையடல்களை (ஏற்ற இறக்கம் கொண்ட வட்டி வீதம் உடைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள்) பொருந்தச் செய்வதற்கு வழி ஏற்படுகின்றது.


பங்கு வீலை சார்ந்த இடர்

பங்கு விலை சார்ந்த இடர் என்பது, பங்குச் சந்தையின் உந்துசக்தியானது வருமானம் மற்றும் ஒதுக்கங்களில் வங்கியை சாத்தியம் மிக்க மாறுபாடுகளுக்கு வெளிப்படச் செய்வதன் காரணமாக பங்குப் பிரிவிலுள்ள முதலீட்டுகளின் பெறுமானத் தேய்வு குறித்தான இடரைக் குறிக்கின்றது. வங்கியானது சாதாரண பங்குகள் மற்றும் அலகு அறக்கட்டளைகள் (யுனிட் ட்ரஸ்ட்) ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பிலும் பட்டியலிடப்பட்ட பங்குக் கருவிகளில் உள்ள அதன் முதலீடுகளிலிருந்தான பங்கு விலை இடருக்கு வெளிப்படுகிறது.

சந்தை மாறிகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் ஆகியவற்றில் ஏற்படக் கூடிய மாற்றங்களில் இருந்து உந்தப்படுகின்ற பங்குப் பரிமாற்றங்கள் மற்றும் கடன் வகை இடர்களை கண்காணிக்கும் நோக்கில் ஒரு விரிவான எல்லைக் கட்டமைப்பானது நடைமுறையில் இருந்து வருகின்றது.

வங்கியின் பட்டியலிடப்பட்ட பங்குப் பிரிவானது FVPL மற்றும் FVOCI ஆகிய இரு பிரிவுகளையும் கொண்டுள்ளதோடு, பங்குகளிலான முதலீட்டு அளவானது இடர் வரையறை வேலைச்சட்டகம், முதலீட்டுக் கொள்கைக் கூற்று (IPS) மற்றும் சந்தை நிபந்தனைகள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது.

பங்கு வகையின் உள்ளடக்கம் வரைபு 52



அந்நியச் செலாவணி இடர்

அந்நியச் செலாவணி இடரானது சகல வெளிநாட்டு நாணயங்களிலும் உள்ள இழப்புக்காப்பு அற்ற நிலைமையுடன் தொடர்புபட்டதாகும். வங்கியானது நியம அளவீட்டு அணுகு முறையின் கீழ் அந்நியச் செலாவணி இடருக்கான மூலதனத்தினை, நிகர அந்நியச் செலாவணி வெளிப்பாட்டினைக் (NFCE) கருத்திற்கொண்டு ஒதுக்குகின்றது. அந்நியச் செலாவணி இடரை முகாமைத்துவம் செய்யும் நோக்கில்,நிகர திறந்த நிலையானது (NOP) சீரான மற்றும் உள்ளக எச்சரிக்கை எல்லைகளுக்கு எதிராக ஒரு நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.2022 ஆம் ஆண்டின் இறுதியில், வங்கியின் நிகர வெளிநாட்டு நாணய வெளிப்பாடானது (NFCE) 2.45 மில். ஐ.அ.டொலர்களாகும், இது வங்கியின் மொத்த சீராக்க மூலதனத்தின் 1.4% சதவீதமாகும்.


	<1 மாதம்	1-3 மாதங்கள்	3-6 மாதங்கள்	6-12 மாதங்கள்	1-3 வருடங்கள்	3-5 வருடங்கள்	5 வருடங்கள்	மொத்தம் 2022	மொத்தம் 2021
USD	(10,886,636)	5,428,783	5,535,754	(10,088,051)	2,093,140	–	–	**(7,917,011)**	4,695,197
EUR	(1,548,311)	(276,853)	2,903,542	(545,791)	–	–	–	**532,587**	(163,511)
GBP	(649,935)	(274,361)	1,173,770	197,180	–	–	–	**446,655**	290,557
SGD	40,959	–	–	–	–	–	–	**40,959**	8,232
AUD	(767,874)	(980,505)	1,012,447	1,371,441	–	–	–	**635,509**	180,157
JPY	6,271,504	–	–	–	–	–	–	**6,271,504**	2,893,592
CHF	54,411	–	–	–	–	–	–	**54,411**	47,145
CAD	69,921	–	–	–	–	–	–	**69,921**	15,432
AED	40,482	–	–	–	–	–	–	**40,482**	7,328

அட்டவணை 36: அந்நியச் செலாவணி நடவடிக்கைகளுக்கான நாணய அடிப்படையிலான முதிர்வு இடைவெளிகள்

இடர் மீளாய்வு

உள்ளக மற்றும் கட்டுப்பாட்டு எல்லைக்கு எதிராக நாளாந்த நிகர திறந்த நிலைமை (NOP)


வரைபு 53




வங்கியானது, இடர் நாட்டத்தினுள் பேணுவதற்கான ஒரு நோக்கில் பங்கு வர்த்தக பதிவேடு மற்றும் அந்நியச் செலாவணி திறந்த நிலைமை ஆகியவற்றுக்காக VaR அளவீடுகளை உபயோகித்து சந்தை இடர் முகாமைத்துவத் தொழிற்பாட்டின் கீழ் விலை ஏற்றத்தாழ்வினை அளவிடுகிறது.

பங்கு VaR

வரைபு 54



FX VaR வரைபு 55



கொள்கை வேலைச்சட்டகம்

- வங்கியின் சந்தை இடர் மற்றும் திரவத்தன்மை சார்ந்த இடர் முகாமைத்துவக் கொள்கை பற்றி மீளாய்வு செய்யப்பட்டது.
- இடர் நாட்ட எல்லைகள் மற்றும் திறைசேரி எல்லைகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது.
- எதிர்த் தரப்பினர் தரப்படுத்துகை மாதிரி தொடர்பிலான மீளாய்வு செய்யப்பட்டது.

கண்காணிப்பு

- நாளாந்த திறைசேரி இடைத்தர அலுவலகத் தொழிற்பாடுகள்.
- BIRMC மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கான சந்தை இடர் கட்டுப்பாடு பற்றி அவ்வப்போது சமர்ப்பித்தல்.
- முதலீடு மற்றும் வர்த்தகப் பிரிவு, வெளிநாட்டு நாணய வெளிப்பாடுகள் மற்றும் திறைசேரி தொடர்பான பரிமாறல்கள் மற்றும் IC/ALCO இற்கான அறிக்கை குறித்தான கண்காணிப்பு.
- அழுத்தச் சோதனை மற்றும் சம்பவப் பகுப்பாய்வு

செயலாக்க மேம்பாடுகள்

பின்வருவன ஊடாக உருவாக்கப்பட்ட வெளியீடுகளின் அடிப்படையில பரிந்துரைச் செயலாக்கம் மற்றும் கட்டுப்பாட்டு மேம்பாடுகள்:

- RCSA
- இடைவெளிப் பகுப்பாய்வு

உரு 34: சந்தை இடர் முகாமைத்துவம் - முன்னெடுப்புப் படிமுறைகள் - 2022

திரவத்தன்மை மற்றும் நிதியிடல் சார் இடர்

திரவத்தன்மை மற்றும் நிதியிடல் சார் இடரானது, வங்கிகள் ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புக்கள் அற்ற தீர்க்க வேண்டிய கடனில் விழுவதனால், ஆரம்ப அல்லது முடிவு ஐந்தொகைக் கடப்பாடுகளை எதிர்கொள்ளும் நோக்கில் வங்கியிடம் போதுமான நிலையான அல்லது மாறுபட்ட நிதியிடல் வழிமூலங்கள் இல்லாதிருக்கக் கூடிய வேளையிலான இடர்களாகும். வங்கியின் திரவத்தன்மை வங்கி முன்னதாகத் தீர்மானிக்கப்பட்ட திரவத்தன்மை எல்லைகளினுள் செயற்படுவதையும் மற்றும் வங்கியின் திரவத்தன்மைக் கொள்கை, ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கியொழுகுவதையும் உறுதிப்படுத்துவதை இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் வேண்டுகிறது.

திரவத்தன்மை சார் இடர் மீளாய்வு

குறுங்காலக் கடன் சந்தைத் திரவத்தன்மை எல்லையானது 2022 ஆம் ஆண்டுக் காலம் முழுவதும் எதிர்மறையாகவே விளங்கியது. 2022 ஏப்ரல் மாதத்தின் ஆரம்ப காலத்தில் கொள்கை வீதங்கள் 700bps இனால் உயர்வடைந்த பின்னர்,சந்தை வட்டி வீதங்கள் வானத்தை எட்டுமளவு உயர்ந்த காரணத்தினால் எதிர்மறையாகக் காணப்பட்ட திரவத்தன்மை எல்லையானது மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. வாடிக்கையாளர்கள் அதிக இலாபத்தை ஈட்டும் நோக்கில் வைப்புக்களை மீளப் பெற்று நிதிக் கருவிகளில் முதலீடு செய்வதை விரும்புவதனால், வைப்புக்களைப் பேணுவதற்கும் மற்றும் திறைசேறி முறிகள் சார்ந்த வட்டி வீதங்களை சமப்படுத்துவதற்குமாக வங்கிகள் உயர் வட்டி வீதத்தினை வழங்கின.

2022 ஆம் ஆண்டுக்கான வைப்புத் திரட்டலானது முன்னைய ஆண்டை விடக் கணிசமானளவு குறைவடைந்துள்ளது. சேமிப்பு வைப்புத் திரட்டலானது நேர்மறையாகக் காணப்பட்ட அதேவேளை, வங்கியானது உயர் வட்டி வீதங்களை வழங்கி நிலையான வைப்புக்களைக் கவர்ந்து அவற்றைத் தக்கவைத்துக் கொண்டது. மீள் வணிகக் கடன் பெறுகை முன்னைய ஆண்டை விட அதிகரித்தது. இதற்கு இவ் ஆண்டு முழுவதும் நிலவிய கடுமையான திரவத்தன்மையே காரணமாகும்.

வங்கியானது பொருளாதார வெளியீட்டிலான சுருக்கம், டொலர் பற்றாக்குறை, எதிர்மறையான சந்தைத் திரவத்தன்மை, உயர் வட்டி வீதம், கடன் தீர்த்தலிலான தாமதம் போன்றவற்றுக்கு மத்தியில் தற்போதைய பொருளாதாரப் பின்னணியில், குறிப்பாக SOEs மற்றும் SLDB ஆகியவற்றுக்கான பாரிய கடன் வழங்கும் வசதிகளில், குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது.

2022 ஆம் ஆண்டானது, திரவத்தன்மை நிலையினைப் பொறுத்தவரையில் மிகவும் கடினமான ஆண்டாக விளங்கியது. LSB நிலைமை காரணமாக வங்கியினால் SDF

இடர் மீளாய்வு

மற்றும் SLF ஆகிய வசதிகளையும் மற்றும் அழைப்புப் பணச் சந்தைகளையும் அணுக முடியாமற் போனது. வங்கியானது திரவத்தன்மை எல்லைகளைப் பேணுவதற்கு கடுமையாகப் போராடிய அதேவேளை, நிலையான வைப்புகள் மற்றும் சந்தைக் கடன் வழங்கல்களுக்கு உயர் வட்டி வீதங்களை வழங்கியது. வங்கி ஒழுங்கு முறையான திரவத்தன்மை வீதத்தினைப் பேணிய போதிலும்,முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியினையே சந்தித்தது. இதற்கு பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையிலான சீர்திருத்த நடவடிக்கைகளினால் பொருந்திக் கொள்ளப்பட்ட அவதானம் மிக்க திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்றன ஆதரவாக விளங்கியுள்ளன.

இடர் உள்ளடக்கம்	இடர் முகாமைத்துவ அணுகல்	இடர் மட்டம்	தாக்கம்
திரவத்தன்மை சார் இடர்	➔ குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கு எதிராக கட்டுப்பாட்டு வீதங்களைக் கண்காணித்தல் ➔ எல்லைகளுக்கு எதிராக பல்வேறு காலத் தொகுதிகளிலுள்ள முதிர்வு இடைவெளிகளைக் கண்காணித்தல். ➔ களஞ்சிய அணுகலின் கீழ் வட்டி வீதங்களைக் கண்காணித்தல். ➔ திரவத்தன்மை சார் அவசரநிலைக்கு திட்டமிடல் ➔ அழுத்தச் சோதனை மற்றும் சம்பவப் பகுப்பாய்வு	அதிகரித்தது	➔

* வருமானம் ஈட்டல் மற்றும் மூலதனம் மீதான தாக்கம் பற்றிய வருடா வருட மாற்றம்

➔ தாக்கம் அதிகரிப்பு ➔ மாற்றம் இல்லை ➔ தாக்கம் குறைவு

அட்டவணை 37: ➔ திரவத்தன்மை சார் இடர் பற்றிய மீளாய்வு

திரவத்தன்மை சார் இடர் முகாமைத்துவம்

திரவத்தன்மை மற்றும் நிதியிடல் சார்ந்த இடர் முகாமைத்துவத்தின் பிரதான குறிக்கோள் யாதெனில், சாதாரண மற்றும் அழுத்தம் மிக்க சந்தர்ப்பங்களின் போது பொருத்தமான வேளையில் பொருத்தமான செலவில் குறித்த கடப்பாடுகளை எதிர்கொள்வதற்குத் தேவையான நிதிகளைப் பெறுக் கொள்வதும் அதன் இருப்பினை உறுதிப்படுத்துவதுமாகும்.

வங்கியின் திரவத்தன்மை சார்ந்த இடரானது, ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் மற்றும் கையிருப்பு அணுகல் மற்றும் நகர்வு அணுகல் போன்றவற்றின் கீழான தேவைப்பாடுகள் ஆகிய இரு தேவைப்பாடுகளின் கீழுள்ள பிரதான திரவத்தன்மைச் சுட்டிகளை கண்காணிப்புச் செய்வதன் மூலம் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டு விடயங்களிலுமுள்ள மாற்றங்கள் விரும்பத்தக்க திரவத்தன்மை மட்டம் ஒவ்வொரு வேளையின் பொழுதும் பேணப்படுவதையும் மற்றும் அது வங்கியின் இடர் நாட்டத்திற்கு ஏற்ப இருப்பதையும் உறுதிப்படுத்தும் வகையில் நிதியிடல் தேவைப்பாடுகள் ஒப்பீட்டாய்வு செய்யப்பட்டு அளவிடப்படுகின்றன. திரவத்தன்மை இடைவெளிகளுக்கான உள்ளக எல்லைகள் நடைமுறையில் உள்ளதோடு, வங்கியின் திரவத்தன்மை விவரம் ஆரோக்கியமான மட்டத்தில் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் ரூபாய் மற்றும் பிரதான வெளிநாட்டு நாணயங்கள் ஆகிய இரு நாணயங்களுக்குமாக ஒழுங்குமுறை அடிப்படையில் கண்காணிப்பட்டு வருகிறது.

திரவத்தன்மை சார் இடரானது, உயர் தரம் மிக்க திரவச் சொத்துக்கள் மற்றும் பன்முகத் தன்மை மிக்க நிதியிடல் மூலங்கள் ஆகியவற்றிலுள்ள போதுமான தடைகாப்புக்களை பராமரிப்பதன் மூலம் தணிக்கப்படுகிறது. மேலும், வங்கியின் தற்செயலான நிதியிடல் திட்டத்திற்கு இணங்க போதுமான திரவத்தன்மைத் தடைக் காப்புக்களின் இருக்கையினை உறுதிப்படுத்தும் வகையில் மூலோபாயங்கள்/விருப்பத் தெரிவுகள் நடைமுறையில் உள்ளன. வங்கியானது அதிவிசேட பொருளாதார நிபந்தனைகளுக்கு மத்தியில்,திரவத்தன்மை சார்ந்த இடர்களை கடுமையாக கண்காணிப்பதனை உறுதிப்படுத்தியதோடு, வங்கிக்கான நிதியிடல் சார் இடர்களைக் குறைப்பதற்கான முன்கூட்டிய நடவடிக்கைகளை எடுத்தது.

ஒழுங்குறுத்துகை விகிதங்கள்

வங்கியின் ஒழுங்குறுத்துகை சார் திரவத்தன்மைச் சுட்டிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளன. இருப்பினும், குறைந்த பட்ச ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளுக்கு மேலாக பேணப்படுகிறது.

வீதங்கள்	2022	2021	ஒழுங்குறுத்துகை குறைந்தபட்ச சதவீதம் (%)
SLAR – DBU	40.6	59.6	20
LCR – ரூபா	195.5	240.8	100
LCR – அனைத்து நாணயங்கள்	193.5	240.4	100
NSFR	180.5	160.8	100

அட்டவணை 38: ➔ ஒழுங்குறுத்துகை திரவத்தன்மை சார் விகிதங்கள்

கையிருப்பு அணுகல் முறை

வங்கியானது, நிதியிடல் தேவைப்பாடுகள் பற்றிய போதுமையினைக் கண்காணித்தல் மற்றும் வங்கியின் இடர் நாட்டத்தினுள் நிதியிடல் மற்றும் திரவத்தன்மை சார்ந்த இடர்கள் நிர்வகிக்கப்படுதலை உறுதிப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக கையிருப்பு அணுகல் முறையின் கீழ் பின்வரும் திரவத்தன்மை சார் விகிதங்களில் கண்காணித்து வருகிறது.

கையிருப்பு அணுகலின் கீழான விகிதங்கள்	2022 %	2021 %
மொத்தச் சொத்துக்களுக்கான நிகர கடன்கள்	34.2	34.1
வாடிக்கையாளர் வைப்புக்களுக்கான கடன்கள்	38.6	38.6
குறுங்கால பொறுப்புக்களுக்கான திரவத்தன்மை சார் சொத்துக்கள்	39.6	56.4
மொத்தச் சொத்துக்களுக்கு கொள்முதல் செய்யப்பட்ட நிதிகள்	16.9	20.8
(வருமானச் சொத்துக்கள் – தற்காலிக முதலீடுகள்) இற்கான (பாரிய பொறுப்புக்கள் – தற்காலிக முதலீடுகள்)	4.8	20.7
மொத்தக் கடன் விகிதத்திற்கான அர்ப்பணிப்பு	2.5	1.8

அட்டவணை39: ➔ கையிருப்பு அணுகலின் கீழான விகிதங்கள்

நகர்வு அணுகுமுறை:

நகர்வு அணுகுமுறையின் கீழ், திரவத்தன்மை சார்ந்த இடர்களை மதிப்பீடு செய்வதற்காக வங்கியினால் உபயோகிக்கப்படுகின்ற முறையியல் ஒன்றே திரவத்தன்மை சார் இடைவெளிப் பகுப்பாய்வாகும். திரவத்தன்மை சார் இடைவெளிகள் குறித்த எல்லைகளுக்கு எதிராக அவ்வப்பொழுது கண்காணிக்கப்பட்டு வருவதோடு, அது உணர்திறன் மிக்க பகுப்பாய்வுகள் மற்றும் அழுத்தச் சோனை போன்றவற்றுக்கும் உபயோகிக்கப்படுகின்றன.

12 மாதங்களுக்கும் குறைவான தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வைப்புச் செறிவுகளின் காரணமாக ஒரு வருடத்திற்கும் குறைவான முதிர்வுத் தொகுதிகளில் உயர் எதிர்மறையான திரவத்தன்மை சார் இடைவெளிகள் அவதானிக்கப்பட்டன.இது உயர்வான வட்டி வீத உணர்வு மிக்க சந்தை ஒன்றில் நிதியைத் தக்க வைப்பதற்கும் மற்றும் கவர்வதற்குமான அவதானத்தினை வேண்டி நிற்கின்ற ஒரு முதன்மை அக்கறை மிக்க விடயமாக மாறியது.


சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வுக் கண்காணிப்பானது பாதகமான திரவத்தன்மை எல்லைகளை முன்கூட்டியே அறிந்துகொள்வதை இயலச் செய்கிறது. இவ் ஆண்டுக்காலத்தில் கடன் பெறல் குறித்தான குறைந்தபட்ச நம்பிக்கையுடன் நிதியிடல் தேவைப்பாடுகளை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு வங்கியினால், உயர் செலவுக்கு மத்தியிலும் இயலுமாக இருந்தது.

உற்பத்திகளின் அடிப்படையில் நிதியிடல் பற்றிய பல்வகைப்படுத்தல்

நாட்டில் அந்நியச் செலாவணி ஒதுக்கங்களில் ஏற்பட்ட பற்றாக் குறையுடன் எழுந்த பொருளாதார நெருக்கடியானது பொருளாதார வட்டி வீதங்களை ஒரு உயர் முடிவை நோக்கி நகர்த்தியது. வங்கியின் பண வைப்பு அடிப்படையானது வருடா வருடம் ரூபா. 1.5 ரில். ஐ எட்டும் வகையில் 4.0 சதவீதத்திற்கு வளர்ந்ததோடு, இதற்கு பிரதானமாக 2022 ஆம் ஆண்டுக் காலத்தின் போதான கால வைப்புக்களிலான அதிகரிப்பே காரணமாகும்.

உற்பத்திகளின் அடிப்படையில் நிதியிடல் பல்வகைமை

வரைபு 56



வங்கியானது பாரியளவிலானதொரு சில்லறை வைப்புக்கள் மற்றும் நிறுவன வைப்புக்களுக்கு அதன் கிளை அலுவலகங்கள் ஊடான அணுகலைக் கொண்டுள்ளதோடு, நிலையான நிதிகளுக்கான தொடக்க மூலம் என்ற வகையில் அவை மீதான அக்கறையினையும் கொண்டுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள வங்கியின் கிளை அலுவலகங்கள் ஊடான சில்லறை வைப்புக்களுக்கான (சேமிப்புகள் மற்றும் நிலையான வைப்புகள்) அணுகலானது நிதியிடலிலுள்ள ஒருமுகப்படுத்தப்பட்ட இடரைக் குறைப்பதற்கு உதவுகிறது. நிதியிடல் சார் இடர்கள், பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் பிரகாரம் திறைசேரியின் ALM பிரிவினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.


சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்வு பற்றிய விபரம்

வங்கி	0-3 மாதங்கள் ரூபா. மில்.	3-12 மாதங்கள் ரூபா. மில்.	1-3 மாதங்கள் ரூபா. மில்.	3-5 வருடங்கள் ரூபா. மில்.	5 வருடங்களுக்குமேல் ரூபா. மில்.	மெத்தம் ரூபா. மில்.
ஒப்பந்தம் சார் முதிர்ச்சி கொண்ட சொத்துக்கள்	117,562	249,834	417,766	406,345	425,180	1,616,686
ஒப்பந்தம் சார் முதிர்ச்சி கொண்ட பொறுப்புக்கள்	771,127	688,251	34,242	31,167	91,900	1,616,686
முதிர்ச்சி இடைவெளி	(653,565)	(438,417)	383,524	375,178	333,280	–
திரண்ட இடைவெளி	(653,565)	(1,091,982)	(708,458)	(333,280)	–	–
பொறுப்புக்களின் ஒரு சதவீதமாக உண்மையான இடைவெளி – 2022 (%)	-85	-64	1,120	1,204	363	–
பொறுப்புக்களின் ஒரு சதவீதமாக உண்மையான இடைவெளி – 2021 (%)	-87	-73	2,342	1,572	410	–


அட்டவணை 40: சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய முதிர்வு விபரங்கள்

இடர் மீளாய்வு

நிறுவனம் சார் வைப்புகள் மற்றும் சில்லறை வைப்புகள் வரைபு 57



நிலையான வைப்பு மற்றும் சேமிப்புகள் வரைபு 58




இயக்கப்பாடு சார்ந்த இடர்

இயக்கப்பாடு சார்ந்த இடரானது,போதாமையுள்ள அல்லது வெற்றியளிக்காத உள்ளகச் செயன்முறைகள், முறைமைகள் மற்றும் மக்கள் அதேபோல் வெளியக காரணிகள் போன்றவற்றிலிருந்து எழக் கூடும்.இயக்கப்பாட்டு இடரானது சட்டம் சார்ந்த இடர்களைக் கொண்டிருப்பினும், நற்பெயர் சார்ந்த மற்றும் மூலோபாயம் சார்ந்த இடரை தவிர்க்கின்றது.

இயக்கப்பாடு சார் இடர் வெளிப்பாடு

இயக்கப்பாடு சார் இடர் அனைத்து வங்கியியல் இயக்கப்பாடுகளிலும் இயல்பானதே. 2022 ஆம் நிதி ஆண்டுக்கான இயக்கப்பாட்டு இழப்புகள், கடந்த மூன்று ஆண்டுகளுக்குமாக சராசரியாக கணக்காய்வு செய்யப்பட்ட மொத்த வருமானத்தின் 0.1 சதவீதமாக காணப்பட்டது. இது இடர் நாட்ட மட்டங்களினுள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.


இடர் நாட்டம் மற்றும் சகிப்பு மட்டத்திற்கு எதிராக உண்மையான இயக்கப்பாட்டு இழப்புகள் வரைபு 59




மேற்படி போக்கானது கடந்த ஐந்து வருட காலத்திற்கும் மேலாக குறைந்த பட்ச எல்லைகளில் இழப்புக்களைப் பராமரிப்பதில் வங்கியின் உறுதியான நிலையினை எடுத்துக் காட்டுகிறது. இது இயக்கப்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்வதற்குத் தற்போதுள்ள ஆளுகைக் கட்டமைப்பு, கொள்கைகள், உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகள், செயலாக்கங்கள் மற்றும் நடைமுறைகள் போன்ற விடயங்களிலுள்ள வினைத்திறன்களை பிரதிபலிக்கின்றது.

2022 ஆம் ஆண்டுக்காக சேகரிக்கப்பட்ட உள்ளக இழப்பு நிகழ்வு பற்றிய தரவுகள் மூலம், உயர்ந்தளவு நிகழ்வுத் தடவைகள் மற்றும் அவற்றின் தீவிரத் தன்மை போன்றன வர்த்தகச் சீர்குலைவு மற்றும் முறைமை செயலிழப்பு போன்றவற்றிலிருந்து அறிக்கை செய்யப்பட்டன.

இழப்பு நிகழ்வுத் தரவு இடம்பெற்ற தடவை வரைபு 60



இழப்பு நிகழ்வுத் தரவு பற்றிய தீவிரத் தன்மை வரைபு 61



IF – உள்ளக மோசடி
EF – வெளியக மேசடி
EPWS – தொழில்வாய்ப்பு நடைமுறைகளும் தொழில் இடப் பாதுகாப்பும்
CPBP – வாடிக்கையாளர், தயாரிப்புகள் மற்றும் வணிக நடைமுறைகள்
DPA – பௌதீக சொத்துக்களுக்கான சேதம்
BDSF – வணிக தடங்கல் மற்றும் முறைமை செயலிழப்பு
EDPM – நிறைவேற்றம், விநியோகம் மற்றும் செயலாக்க முகாமைத்துவம்

இயக்கப்பாடு சார்ந்த இடர் மீளாய்வு

இடர் உள்ளடக்கம்	இடர் முகாமைத்துவ அணுகுமுறை	இடர் மட்டம்	தாக்கம்*
மோசடி பற்றிய இடர்	• உள்ளகக் கட்டுப்பாடுகள் • மோசடி இடர் முகாமைத்துவம் மற்றும் தீவினை வெளிக்கொணரல் செயன்முறை • பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகள் (KORIs) கண்காணிப்பு • இழப்பு நிகழ்வுகள் கண்காணிப்பு • இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு (RCSA) • ABC இடர் மதிப்பாய்வு	மிதமானது	↓
தகவல் தொழில்நுட்ப இடர்	• உள்ளகக் கடடுப்பாடுகள் • தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை • KORIs கண்காணிப்பு • நிகழ்வு அறிக்கையிடல் • இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பாய்வு (RCSA)	உயர்வு	→
வியாபார முன்னெடுப்பு பற்றிய இடர்	• வணிக முன்னெடுப்பு முகாமைத்துவ முறைமை (BCMS) • KORIs கண்காணிப்பு	உயர்வு	↑
இணக்கபாட்டு/ ஒழுங்குறுத்துகை இடர்	• இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பரிசோதனைகள் • KORIs கண்காணிப்பு • இணக்கப்பாடு இடர் புள்ளி அட்டை	உயர்வு	↑
சட்டவாக்க இடர்	• ஒப்பந்தம் சார்ந்த அனைத்துக் கடப்பாடுகள் மீதான சட்டவாக்க சான்றுப்படுத்தல் • KORIs கண்காணிப்பு	மிதமானது	→

* வருமானம் ஈட்டல் மற்றும் மூலதனம் மீதான தாக்கம் பற்றிய வருடா வருட மாற்றம்

↑ அதிக தாக்கம் → மாற்றம் இல்லை ↓ தாக்கம் குறைவு

அட்டவணை 41: இயக்கப்பாட்டு இடர் பற்றிய மீளாய்வு

மோசமான சமூக-பொருளாதார நிபந்தனைகளின் தாக்கங்கள் வங்கியின் இயக்கப்பாட்டினை பல்வேறு வழிகளில் பாதித்தன. செலவு அதிகரிப்பு, மின் தடைகள், எரிபொருள் தட்டுப்பாடு, பொதுமக்கள் அமைதியின்மை, திருட்டு மற்றும் மோசடிச் சம்பவங்களினால் பாதிப்புறும் தன்மை போன்றன வங்கியின் செயற்பாடுகளுக்கு சவாலாக விளங்கியதோடு, இவை தொடர் வணிகச் செயற்பாட்டினை உறுதி செய்வதற்கும் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டுக் கட்டமைப்பினை வலுவூட்டுவதற்குமான மேலதிக நடவடிக்கைகளை வேண்டி நின்றன.

நிதி மற்றும் நிதி மூலதன வகைகளின் செயலாற்றுகை மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஒழுங்குறுத்துகையாளர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட முன்னெடுப்புக்கள் போன்றவற்றுக்கு தடையாக விளங்கிய இடையூறுகள் இக் காலப் பகுதியினுள் சட்டம் மற்றும் ஒழுங்குறுத்துகை ஆகிய இரு வகை சார்ந்த இடர் வெளிப்பாடுகளையும் அதிகரித்தன.

வங்கியானது மிகச் சிறந்த வாடிக்கையாளர் அனுபவம் மிக்க மற்றும் செலவு வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கில் ஒரு நவீன மைய வங்கியியல் தீர்வினைக் கொண்டு பாரம்பரிய முறைமையினை பதிலீடு செய்வதற்கான ஒரு மிகவும் முக்கியமான தொழில்நுட்ப நிலைமாற்ற விழிம்பில் உள்ளது. இந்த முன்னெடுப்பானது மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம், டிஜிடல் முறைமை மற்றும் செயன்முறை மீள் பொறிமுறையாக்கம் போன்றவற்றின் ஊடான பாதுகாப்பான வழிமுறைகள் மற்றும் செயன்முறை பரிமாற்றங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதைக் கொண்டு இணைக்கப்படுகின்றன. தற்போது நடைமுறையிலுள்ள தகவல் தொழில்நுட்பக் கருத்திட்டங்களின் அமுல்படுத்துகையானது வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்பு இடர் வெளிப்பாடு ஆகியவற்றை அதிகரித்ததோடு, குறித்த இடர்கள் கடுமையான கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தகவ் பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவற்றின் ஊடாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இயக்கபாட்டு இடர் முகாமைத்துவம்

இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவமானது, ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் மற்றும் சர்வதேச ரீதியில் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றுக்கு அமைவாக வங்கியின் இடர் நாட்டத்திற்கு இணங்க ஒரு செலவு-வினைத்திறன் மிக்க முறையில் இயக்கப்பாட்டு இடர்களை நிர்வகித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டதாகும்.

இயக்கப்பாட்டு இடர் பற்றிய முகாமைத்துவமானது தற்போதும் இடம்பெற்று வருகின்றதொரு செயலாக்கமாகும். உரிய வேளையின் போதான அறிக்கையிடல் மற்றும் விவேகம் மிக்க தன்மையில் பொருத்தமான மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக அத்தகைய இடர்களை தணித்தல் அல்லது தவிர்க்கும் நோக்கில் குறித்த இயக்கப்பாட்டு இடர்களை இனங்காணல்,அளவிடுதல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கையானது இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத்திற்கான வேலைச்சட்டகத்தினை வரையறை செய்கிறது.

இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத்திற்கான அடிப்படையானது முறைமைக் கட்டுப்பாடுகள், அணுகல் கட்டுப்பாடுகள், கடமை பிரிப்பு, தெளிவான அதிகார மற்றும் பதிலளிப்பு வழிமுறைகள், கொடுக்கல் வாங்கல்களுக்கான அதிகாரமளிப்பு மற்றும் சரிபார்க்கை மீதான இரட்டைச் சோதனைகள், சொத்துக்கள் மீதான பௌதீகக் கட்டுப்பாடுகள்,பதிவு பேணுகை, ஒருமைப்பாடு, கணக்காய்வுச் சான்றுகள் மற்றும் கணக்காய்வுப் பதிவேடுகள் போன்றன உள்ளிட்ட பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு ஒன்றின் ஊடாக தாபிக்கப்படுகிறது.

RMD இலுள்ள ORMU ஆனது இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினுள் காணப்படக் கூடிய இயக்கப்பாட்டு இடர்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிடுவதற்கு பல்வேறு தொழில்நுட்பங்களையும் செயன்முறைகளையும் உபயோகிக்கின்றது.

இயக்கப்பாட்டு இழப்பு நிகழ்வு பற்றிய தரவுகளைச் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்வு செய்வதானது வங்கியின் இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தின் ஒரு பிரதான அம்சமாக விளங்குகின்றது. முறையான தரவுச் சேகரிப்பானது மிகவும் அர்த்தமுள்ள மற்றும் வினைத்திறன் மிக்க தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தரவுப் பகுப்பாய்வு பற்றிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்துகிறது. வங்கியானது உரிய வேளையின் போதான ஒழுங்குறுத்துகை அறிக்கையிடலுக்கான அனைத்து புவியில் சார் அமைவிடங்களிலிருந்துமான உள்ளக இழப்புத் தரவுகளை இனங்கண்டு அவற்றை சேகரிப்பதற்காக ஒரு ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறையினைக் கொண்டுள்ளது. மேலும், வங்கியின் வெளியக இழப்பு நிகழ்வு பற்றிய தரவுத் தளமானது இது போன்ற நிறுவனங்களில் இடம்பெற்ற இயக்கப்பாடு சார்ந்த இழப்பு நிகழ்வுகள் பற்றிய தகவல்களையும்

சுட்டிக்காட்டுகிறது. சேகரிக்கப்படுகின்ற தரவுகள் அடிப்படை தளம் II இழப்பு நிகழ்வு வகையாக்கத்திற்குள் வகைப்படுத்தப்படுவதோடு, அவை தன்மை, அடிப்படைக் காரணிகள் மற்றும் நிகழ்வுத் தடவைகளை அறிந்து கொள்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. செயன்முறை மேம்பாடுகள் மற்றும் இடர் தணிப்பு நடவடிக்கைகள் போன்றன இழப்பு நிகழ்வுத் தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுகின்றன.

இயக்கப்பாட்டு இடர் வெளிப்பாடானது, பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகள் மூலம் (KORIs) சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு தொடர்பாடல் செய்யப்படுகிறது. வங்கியானது கணக்காய்வு விடயங்கள், வணிகத் தொடர் நடவடிக்கை, தகவல் பாதுகாப்பு, உற்பத்தித் தரம், செயலாக்கத் தரம், மற்றும் இணக்கப்பாடு போன்ற முக்கிய பல்வேறு பகுதிகள் மீதான பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகளைக் கொண்டமைந்த KORI மெட்ரிக்ஸ் ஐ உபயோகித்து வருகின்றது. இடர்களை மதிப்பாய்வு செய்வதற்காக பிரதான இயக்கப்பாட்டு இடர் சுட்டிகள் (KORIs) ஒவ்வொரு பகுதிக்குமான தொடக்க வாயில் எல்லைகளைக் கொண்டு வரையறை செய்யப்படுகின்றன. இயக்கப்பாடு சார்ந்த சூழல் நிலைமையினைக் கருத்திற் கொண்டு, இத்தகைய தொடக்க வாயில் எல்லைகள் வருடாந்தம் அல்லது அதிக தடவைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன.

இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பாய்வானது (RCSA), இடர்களை இனங்கண்டு அவற்றை மதிப்பாய்வு செய்வதற்கும் மற்றும் அவற்றை இடர் முகாமைத்துவக் குழுவினைக் கொண்டு கூட்டாகக் கட்டுப்படுத்துவதற்கும் செயலாக்க உரிமையாளர்களினால் உபயோகிக்கப்படும் ஒரு தொழில்நுட்பமாக விளங்குகின்றது. செயன்முறை, கட்டுப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு மேம்பாடுகள் ஆகியவற்றில் இடர் உரிமையாளர்களின் ஈடுபாட்டின் அதிகரிப்பானது தற்போதுள்ள செயன்முறையின் பயனுறுதித் தன்மைக்கு ஒரு மேலான நடைமுறைத் தன்மையில் பெறுமதி சேர்க்கிறது. இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பாய்வானது (RCSA) ஆனது வங்கியின் நாளாந்த இயக்கப்பாடுகளில் இடர் முகாமைத்துவத்திற்கான ஒரு உகந்த கலாசாரத்தை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டதாகும்.

வங்கியினுள் இடம்பெறும் வாடிக்கையாளர் அனுபவங்கள் தொடர்பிலான வாடிக்கையாளர் முறைப்பாடுகள் பற்றிய பகுப்பாய்வுகளை வங்கி ஒரு இலவச பின்னூட்டலாக கருதுகின்றது. ORMU ஆனது ஒவ்வொரு காலாண்டின் அடிப்படையில் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை பகுப்பாய்வு செய்வதோடு, அதன் பெறுபேறுகள் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் இயக்கப்பாட்டு இடர் தொடர்பில் பாதிப்புறும் தன்மைகளைக் குறைப்பதற்கும் உபயோகிக்கப்படுகின்றன.

அழுத்தச் சோதனை மற்றும் சம்பவப் பகுப்பாய்வு ஆகியன முன் பிரயத்தனம் மிக்க இடர் தணிப்பு நடவடிக்கைகளை எடுக்கும் வகையில்,இயக்கப்பாட்டு இடர் தொடர்பில் பாதிப்புறும் தன்மையிலிருந்தான தாக்கத்தினை இனங்காண்பதற்கு உபயோகிக்கப்படுகின்றன.

சட்டம் சார்ந்த இடர்கள்

சட்டவாக்க இடரானது இயக்கப்பாட்டு இடரின் ஒரு உள்ளார்ந்த அங்கமாக விளங்குகின்றது. இது வியாபாரம் மற்றும் சம்பந்தப்பட்ட தொடர்புகள், செயன்முறைகள், நடைமுறைகள் மற்றும் சேவைகள் தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்ற சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் விழிப்புணர்வின்மை அல்லது தவறுதலான புரிதல் அல்லது தெளிவின்மை மற்றும் பொறுப்பற்ற அலட்சியம் போன்றன காரணமாக ஏற்படக்கூடிய நிதி சார்ந்த இடர் அல்லது புகழ் சார்ந்த இழப்பினால் ஏற்படக் கூடிய இடராகும்.

இது அபராதம், தண்டம் மற்றும் தண்டனைக்குரிய சேதங்களுக்கு வழிவகுக்கக் கூடிய அல்லது பொறுப்பு அல்லது இழப்பில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய வங்கிக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு கோரிக்கைக்கு வழிவகுக்கக் கூடிய தவறான ஆவணப்படுத்தல் மற்றும் ஆவண வரைவு செய்வதிலான குறைபாடு காரணமாக குறித்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய இழப்புக்களும் இதில் அடங்குகின்றன.

சட்ட இடர் முகாமைத்துவமானது வங்கியின் இயக்கப்பாடுகளையும் மற்றும் அதன் நற்பெயரையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தக் கூடிய அடிப்படை உந்து சக்திகளை இனங்காணும் ஒரு செயன்முறையாகும். வங்கியின் சட்டவாக்கப் பிரிவானது சட்ட இடர்களின் தீவிரத் தன்மையினை குறைக்கும் நோக்கில் வினைத்திறனாகவும் காத்திரமாகவும் பதிலளிப்பதற்கான இன்றியமையாத வகிபாகத்தினை வழங்குகின்றது. மேலும் வங்கியின் வணிகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதையும் ஒப்பந்த அடிப்படையிலான தொடர்புகள் இடம்பெறுவதனையும் அத்துடன் அவை சட்டவாக்க வேலைச்சட்டகத்தின் பிரயோகத்துடன் இசைவுறுவதனையும் மேற்வடி சட்டப் பிரிவு உறுதி செய்கின்றது.

சட்டப் பிரிவானது வங்கியின் சட்ட இடர் பற்றிய மூலோபாயம் மிக்க முகாமைத்துவம் தொடர்பில் ஈடுபடுவதோடு, சாத்தியம் மிக்க சட்ட இடர்களை இனங்காண்பதில் ஏனைய வணிகப் பிரிவுகளுடன் கூட்டாகவும் ஈடுபடுகின்ற அதேவேளை, வங்கியின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் போதுமான மற்றும் பொருத்தமான தணிப்பு நடவடிக்கைகள் பொருந்திக் கொள்ளப்படுவதையும் உறுதி செய்கிறது. மேலும் சட்டப் பிரிவானது,வங்கியின் இயக்கப்பாடு குறித்தான பொருள் சார்ந்த தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தக் கூடிய சட்டத்தில் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, நெருக்கடி மிக்க நிலைமைகளை முகாமைத்துவம் செய்தல், துணை நிறுவனங்கள் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்தல், அறவீடுகளை இலகுவாக்கல் மற்றும் உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீளமைத்தல் போன்றவற்றினை நோக்காகக் கொண்டு சட்ட உதவி, வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றது.


இணக்கப்பாடு மற்றும் ஒழுங்குறுத்துகை இடர்

ஒழுங்குறுத்துகை சார்ந்த இடர் என்பது சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளிலான ஒரு மாற்றத்தின் போது அது பொருள் ரீதியில் ஒரு பாதுகாப்பு, வியாபார, துறை அல்லது சந்தை தொடர்பான விடயத்தில் ஏற்படும் பாதிப்பினைக் குறிக்கின்ற அதேவேளை, இணக்கப்பாட்டு இடரானது நடைமுறைச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், உள்ளக கொள்கைகள் அல்லது பரிந்துரைக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளைப் பொருந்திக் கொள்ளாமையின் காரணமாக ஏற்படக் கூடிய இடராகும். இணக்கப்பாட்டு இடரை முகாமைத்துவம் செய்வதற்கு ஒரு முறையான அணுகுமுறை அவசியமாக விளங்குகின்றது. இணக்கப்பாட்டு இடரானது ஒழுங்குறுத்துகை சார்ந்த பொருளாதாரத் தடைகள், நிதிசார் அபராதங்கள், வியாபாரத் தடங்கல்கள், இயக்கப்பாட்டு மற்றும் நிறுவனத்தின் புகழ் சார்ந்த சேதங்கள் போன்றவற்றுக்கு வழிவகுக்கக் கூடும்.

இணக்கப்பாட்டு தோற்ற முறையானது துரித மாற்றங்களைக் கொண்டுள்ளதோடு, இடர் மூலோபாயங்கள், முறையியல்கள் மற்றும் வேலைச்சட்டகங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்து அவற்றை ஒருங்கிணைத்துச் செயற்படுவது வங்கியின் தேவையாக உள்ளது.

எனவே, இணக்கப்பாட்டு இடர்களை எதிர்கொள்வதற்கு பாரம்பரிய சம்பிரதாய அணுகு முறைகள் மீது தங்கியிருப்பதானது வங்கித் துறையின் இணக்கப்பாடு மிக்க சுற்றுச் சூழல் முறைமை பற்றிய கூடிய பல்வகைமைக்கு எதிராக வினைத்திறன் அற்றதாக விளங்குகின்றது. இதனால் வங்கியானது இடர் முகாமைத்துவத்தினை எதிர்கொள்வதற்காக நவீன மற்றும் புத்தாக்கம் மிக்க மூலோபாயங்களை தழுவும் வகையில், இணக்கப்பாட்டு இடர்களுக்கான தீர்வினை வழங்கும் வகையில் விதிமுறை-மைய அணுகுமுறையிலிருந்து காத்திரமான ஆளுகை மிக்க வேலைச்சட்டகம் ஒன்றுடன் கூடிய இடர்-மையஅணுகு முறையொன்றுக்கு நகர்ந்தது.

இணக்கப்பாட்டுப் பிரிவானது இணக்கப்பாட்டு அதிகாரியின் தலைமையின் கீழ் தொழிற்படுவதோடு, இது BIRMC ஊடாக பணிப்பாளர்கள் சபைக்கு நேரடியாக அறிக்கை செய்கிறது.



உரு 35: இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டுக் காலத்தில்,வங்கியின் இணக்கப்பாட்டு மற்றும் ஒழுங்குறுத்துகை இடர்களைக் குறைப்பதற்கான பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

- 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதி சார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் பிரகாரம், பண மோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி உதவியளித்தல் போன்ற செயற்பாடுகளை தடுப்பதற்கும், கண்டறிவதற்கும், புலனாய்வு செய்வதற்கும் மற்றும் வழக்குத் தொடுப்பதற்குமான வசதியேற்பாட்டினை வழங்கும் நோக்கில் சந்தேகத்திற்கிடமான நிதிசார் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் பற்றி நிதிப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்தல்.
- வங்கியின் சபை மற்றும் கூட்டுறவு முகாமைத்துவமானது அதன் வணிக மற்றும் ஏனைய விவகாரங்களை முன்னெடுக்கத் தேவையான அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை ஒதுக்குவதனைத் தீர்மானிக்கும் நோக்கில், 1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 76(x)(1) இன் மூலம் வழங்கப்படும் தத்துவத்தினைப் பிரயோகிப்பதில் நிறுவன ஆளுகை பற்றிய 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கப் பணிப்புரைக்கு இணக்கமுறுதல். இந்த வகையில் வங்கியானது நிதிசார்ந்த உறுதித் தன்மையினையும் வணிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தன்மையினையும் பேணுவதற்குத் தேவையான பாதுகாப்பானதும் சிறந்ததுமான நடைமுறையினை உறுதிப்படுத்துகிறது.
- ஏற்புடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய கிரம அடிப்படையிலான மீளாய்வினை உறுதி செய்தல்.
- வங்கியின் கிளை அலுவலகங்கள், பிரிவுகள் மற்றும் வங்கியின் தயாரிப்புகள் மீதான இணக்கப்பாட்டு மதிப்பாய்வுகளை முன்னெடுத்தல்.
- பயிற்சி வழங்கும் அமர்வுகள் மூலம் விழிப்பணர்வினை வழங்குதல்.
- தானியக்க AML முறைமை ஊடாக பண மோசடிச் செயற்பாடுகளை இனங்காணல்.

வியாபார முன்னெடுப்பு சார்ந்த இடர்

வியாபார முன்னெடுப்புச் சார்ந்த இடர் என்பது, இயற்கையின் பேரழிவினால் அல்லது மனித ஈடுபாட்டினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் பொழுது, அதன் பிரதான அக்கறைதாரர்களின் நலன்களை வினைத்திறன் மிக்க முறையில் பாதுகாப்பதற்கான நிறுவனத்தின் தாக்குப்பிடிப்பு மீது ஏற்படக் கூடிய பாதகம் மிக்க தாக்கத்தினைக் குறிக்கின்றது.

இயற்கை அழிவு, மனித ஈடுபாட்டு அழிவு அல்லது தகவல் தொழில்நுட்ப இயக்கத்திலான அனர்த்தங்கள் போன்றவற்றிலிருந்தான குறைந்தபட்ச தலையீட்டுடன் கூடிய வியாபார முன்னெடுப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில், வியாபார முன்னெடுப்பு முகாமைத்துவம் (BCM) இற்கான ஒரு ஆளுகைக் கட்டமைப்பு, கொள்கை ஆவணங்கள், செயலாக்கங்கள் மற்றும் முறைமைகள் ஆகியவற்றை வங்கி நடைமுறையில் கொண்டுள்ளது.

BCP அலகானது வினைத்திறன் மிக்க நடைமுறைப்படுத்துகை, சோதனை மற்றும் BCM வேலைச்சட்டகக் கண்காணிப்பு போன்றன தொடர்பிலான பொறுப்பினை கொண்டுள்ளதோடு, வங்கியின் அனர்த்த மீட்பு தொடர்பிலான முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்குமான பொறுப்பினையும் கொண்டுள்ளது. பட்டை III வடிவச் சான்று (TCDD) வழங்கப்பட்ட தரவு மையமானது வியாபார முன்னெடுப்பு உட்கட்டமைப்புக்கானதொரு மேலதிக சக்தியை வழங்குகிறது.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடர்

தகவல் தொழில்நுட்ப இடரானது, அது சார்ந்த பாதிப்புறும் தன்மை எழுகின்ற பொழுது, வணிகத் தரவுகள், முக்கியமான முறைமைகள் மற்றும் பல்வேறு வணிகச் செயன்முறைகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்குகின்றது.

தொழில்நுட்ப இடர் முகாமைத்துவமானது, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சாத்தியம் மிக்க மற்றும் நியமதர தொழில்நுட்பங்களை உபயோகித்து, தகவல் முறைமைகளின் தரவு முக்கியத்துவம் மற்றும் தகவல் முறைமை உட்கட்டமைப்பின் வகை ஆகியவற்றைக் கருத்திற் கொள்வதன் மூலம் வியாபார தாக்குப்பிடிக்கும் தன்மையினைத் தாபிப்பதனை இலக்காகக் கொண்டதாகும்.

வங்கியில் தொழில் துறைக்கு அவசியமான தொழில்நுட்ப மேம்பாட்டினை மையமாகக் கொண்ட மூலோபாயமானது சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் மேற்பார்வையுடனான மூலோபாய வியாபாரத் திட்டத்தின் ஊடாக எட்டப்படுகிறது. பிரதம தகவல் அதிகாரி செயலூக்கம் மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைப்பாடுகளை கிரம அப்படையில் மீளாய்வு செய்கின்றார்.

இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை வேலைச்சட்டகத்தினுள்ளான ORMU ஆனது, குறித்த விலகல்கள் தொடர்பில் BIRMC ஊடாக உயர் முகாமைத்துவத்திற்கும் மற்றும் சபைக்கும் தெரிவிக்கும் நோக்கில் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள், சிறந்த நடைமுறைகள், பாதுகாப்பு நிகழ்வுகள், இழப்பு நிகழ்வுகள் மற்றும் KORIs ஆகியவற்றைக் கண்காணிக்கின்றது.

தொழில்நுட்ப இடரானது உள்ளக மூலதனப் போதுமை மதிப்பாய்வுச் செயன்முறை ஒன்றாக மதிப்பிடப்படுவதோடு, வங்கியினால் உபயோகிக்கப்படுகின்ற தகவல் தொழில்நுட்பத் தயாரிப்புகள்/வழிமுறைகளிலுள்ள செயலாக்க இடைவெளிகள் மற்றும் கட்டுப்பாட்டு விளைவுத் திறன்களை இனங்காண்பதற்கு RCSA முன்னெடுக்கப்படுகின்றது.

தகவல் பாதுகாப்புக் குழுவும் (ISC) மற்றும் தகவல் தொழில்நுட்ப வழிப்படுத்தல் குழுவும் (ITSC) தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் தாக்குதிறன் ஆகியவற்றுக்குப் பொறுப்பான முகாமைத்துவ மட்டக் குழுக்காளாக விளங்குகின்றன.

பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரியின் தலைமையின் கீழான தகவல் பாதுகாப்புப் பிரிவானது தகவல் பாதுகாப்பு இடர் முகாமைத்துவத்திற்கான ஒரு வேலைச்சட்டகத்தினை அமுல்படுத்துவதற்கான பொறுப்பினையும், மற்றும் அனுபவம் மிக்க வெளியக சேவை வழங்குனர்களின் உதவியுடன் தகவல் முறைமைகள் மீதான சுயாதீன இடர் மதிப்பாய்வுகளை முன்னெடுப்பதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளதோடு, இடர்களை எதிர்கொள்வதற்கு அல்லது இடர்களைத் தணிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கு மேற்படி மதிப்பாய்வுப் பெறுபேறுகள் உபயோகிக்கப்படுகின்றன.

வங்கியானது வளர்ந்து வரும் சைபர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தும் நோக்கில் தகவல் பாதுகாப்பு முன்னெடுப்புக்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. வங்கியின் தகவல் பாதுகாப்பு பாதிப்புறும் தன்மையை குறைப்பதற்கும் மற்றும் பாதுகாப்புத் திறனை மேம்படுத்துவதற்குமான பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- வங்கியானது கொடுப்பனவு அட்டைக் கைத்தொழில் – தரவுப் பாதுகாப்பு நியமம் (PCI DSS) இற்கு 2019 இல் இணக்கமுற்றுச் செயற்பட்டதோடு, டெபிட் அட்டை உடையோரின் தரவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி 2022 ஆம் ஆண்டுக்கான PCI DSS மீள்சான்றும் வங்கிக்கு வழங்கப்பட்டது.
- வங்கி வருடத்தின் முழு நாட்களும் 24 மணி நேரமும் பாதுகாப்பு இயக்க நிலையத்தினை 2020 இல் ISD இன் கீழ் ஒரு திறமையான மூன்றாந் தரப்பினரின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தியது. 2022 ஆம் ஆண்டிற்கு பிரேரிக்கப்பட்ட ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாட்டினை வங்கி அடைந்து கொண்டதோடு, சர்வதேச நியமதரங்களை எதிர்கொள்ளும் வகையிலான நிகழ்வு பதிலளிப்புத் திறன்கள் மேலும் வலுவூட்டப்பட்டன.
- தரவுகளைப் பாதுகாத்துப் பேணி மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் தரவு ஒழுக்கு பாதுகாப்பு (DLP) மற்றும் தரவு வகைப்பாட்டுத் தீர்வினை அமுல்படுத்துவதற்கான முன்னெடுப்பினை வங்கி 2020 ஆம் ஆண்டுக் காலத்தில் முன்னெடுத்தது. 2022 ஆம் ஆண்டுக் காலத்தில் வங்கியின் அனைத்து தகவல் தொழில்நுட்ப முறைமைகளையும் உள்ளடக்கும் வகையில் DLP தீர்வினை பெறும் நடவடிக்கை அதிகரிக்கப்பட்டது.

- வங்கியானது தகவல் தொழில்நுட்ப பிரிவு, தகவல் பாதுகாப்புப் பிரிவு மற்றும் அட்டை நிலையங்களுக்கான ISO 27001:2013 சான்றுகளை ஈட்டிக் கொண்டது.

வங்கியானது, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் "தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம் மற்றும் உரிமம் அளிக்கப்பட்ட வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் திறன் பற்றிய ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகம்" குறித்தான CBSL இன பணிப்புரையினை அடைந்துகொள்வதை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளை வங்கி எடுத்து வருகிறது.

இலஞ்சம் மற்றும் ஊழல் சார்ந்த இடர்கள்

அன்பளிப்புக்கள் மற்றும் விருந்தோம்பல்கள், இலகுபடுத்தல் சேவைகளுக்கான கொடுப்பனவுகள், அரசியல் பங்களிப்புகள், பணம் மற்றும் தரகுக் கொடுப்பனவுகள், அனுசரணை அளிக்கப்பட்ட பிரயாணங்கள் மற்றும் உறைவிட வசதியளித்தல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளல் மற்றும் உள்ளக பணியாட்தொகுதியினர், வாடிக்கையாளர், சேவை வழங்குனர் அல்லது ஏனைய எவரேனும் மூன்றாம் தரப்பினர் போன்றோருக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கு ஈடாக அறக்கட்டளைப் பங்களிப்புகளை ஏற்றுக்கொள்ளல் போன்றன இலஞ்சம் மற்றும் ஊழலின் பொதுவான வடிவங்களாக காணப்படுகின்றன.

வங்கியின் புகழ் சார்ந்த இடர்களையும் மற்றும் நிதி சார்ந்த இழப்புக்களையும் தணிக்கும் நோக்கில், வங்கியானது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் எந்தவொரு சகிப்புத் தன்மையினையும் கொண்டிருக்காது. இதற்கிணங்க, ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் வங்கிக்காக மற்றும் வங்கியின் துணை நிறுவனங்களுக்காக அல்லது அவை சார்பில் செயற்படுகின்ற மூன்றாம் தரப்பினர் ஆகியோர் பின்வரும் விடயங்களிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்:

- ஏதேனும் அனுகூலமானது மற்றுமொரு நபருக்கு வழங்கப்படினும் அல்லது மற்றுமொரு நபரினால் பெற்றுக்கொள்ளப்படினும், மற்றும் அதன் மதிப்பு எவ்வளவாயிருப்பினும், எந்தவொரு தன்மையுமுடைய இலஞ்சம் மற்றும் ஊழல் நடத்தைகளில் ஈடுபடுதல்.
- எந்தவொரு நேர்மையற்ற கணக்கீடுகளையும் மேற்கொள்ளல் அல்லது பூரணமான மற்றும் துல்லியமான நிதி சார்ந்த நடவடிக்கைகளை மறைத்தல்.

இடர் முகாமைத்துவப் பிரிவானது, உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் சார்ந்த இடரினால் பாதிப்படையக் கூடிய பிரதேசங்களை இனங்காணும் நோக்கில், 2020 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கையின் அடிப்படையில் வருடாந்த இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு பற்றிய இடர் மதிப்பாய்வினை முன்னெடுத்து வருகிறது.

இடர் பரிமாற்றம்

வெளியகவளச் சேவையானது வங்கிக்கான ஒரு வினைத்திறன் மிக்க செலவுச் சேமிப்பும் இடர் பரிமாற்ற மூலோபாயமுமாக விளங்குகின்றது. வங்கியின் வெளியகவள ஏற்பாடுகள் வங்கியின் நிர்வாகப் பிரிவினால் இனங்காணப்பட்டு முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகிறது. வெளியகவளச் செயற்பாடுகள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வெளியகவளக் கொள்கை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் போன்றவற்றுக்கு இணங்க முன்னெடுக்கப்படுகின்றன.

வங்கியின் உள்ளகக் கொள்கைகளுக்கு அமைவான தேவைப்பாடுகளின் பிரகாரம் வெளியகவளச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு குறித்த சேவை வழங்குனர் கொண்டுள்ள திறனை உறுதிப்படுத்தும் நோக்கில், புதிய ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் அல்லது தற்போதுள்ள உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு முன்னர் வெளியகவளச் சேவை வழங்குனர் குறித்தானதொரு துறைசார்ந்த சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காப்புறுதியானது பிரதான காப்பீடளிக்கத்தக்க இடர்களை ஒரு காப்புறுதிச் சேவை வழங்குனருக்கு பரிமாற்றும் வகையில் ஒரு இயக்கப்பாடு சார்ந்த இடர் தணிப்பு நுட்பத்திற்குரிய பிரதான வகிபாகம் ஒன்றினை வழங்குகிறது. காப்புறுதிக் கொள்கைகளின் போதுமைத் தன்மையானது வங்கிக்குரிய தற்போதைய மற்றும் எதிர்கால இடர்களைக் கருத்திற்கொண்டு தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. RMD ஆனது காப்புறுதி மீட்புக் குறித்தான முன்னேற்றத்தினைக் கண்காணிப்புச் செய்து அறிக்கை செய்கிறது. காப்புறுதித் தொழிற்பாடானது நிர்வாகப் பிரிவினுள் ஒருமுகப்படுத்தப்படுகிறது.



உரு 36: இயக்கப்பாட்டு இடர் முகாமைத்துவம் – நடவடிக்கைப் படிமுறைகள் – 2022

சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகை சார்ந்த இடர்

சுற்றாடல் மற்றும் சமூக இடர்கள் என்பது இயற்கைச் சுற்றாடல் அல்லது மக்கள் சமூகம் தொடர்பில் வங்கிக்கான சாத்தியம் மிக்க எதிர்மறையான தாக்கங்களைக் குறிக்கின்றது. இது காலநிலை மாற்றம், உயிர்ப் பல்வகைமை, மனித உரிமைகள் போன்ற சமூக அம்சங்கள் மற்றும் பால்நிலை பாகுபாடு போன்ற அம்சங்களை உள்ளடக்குகின்றது. இது சார்ந்த ஆளுகையானதுகொள்கைகள், நடைமுறைகள், முகாமைத்துவ முறைகள் மற்றும் கூட்டுறவு ஆளுகை சார்ந்த சிறந்த நடைமுறைகள் ஊடான வகைப்பொறுப்பினைக் கொண்டிருத்தல், ஊழல் எதிர் நடவடிக்கை,தீவினை

வெளிக்கொணரல், மனக் குறைகள் பற்றிய பொறிமுறைகள், வரி நியாயாதிக்கம் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) சார்ந்த இடர் பற்றிய காத்திரமான முகாமைத்துவமானது பசுமைத் தன்மை, காலநிலை நேயம், சமூக உள்ளடக்கம் மற்றும் நன்னெறி சார் வணிகச் சூழல் மற்றும் பாதக நிலைமைகளை நிர்வகித்தல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான இன்றியமையாத ஒரு விடயமாக விளங்குகின்றது. இதனால் ESG இடர் முகாமைத்துவமானது IRM வேலைச் சட்டகத்துடன் கூட்டிணைக்கப்படுகிறது. ஆளுகை இடரானது IRM வேலைச் சட்டகத்திலுள்ள இடர் முகாமைத்துவ இணக்கப்பாட்டினுள் நிர்வகிக்கப்படுகிறது. வங்கியானது நீடுதிமிக்கதொரு தன்மையில் வணிக நடவடிக்கைகளை இனங்கண்டு அவற்றை விருத்தி செய்வதற்கான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, நீடுறுதி மிக்க முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் புத்தாக்கம் மிக்க நிதி சார்ந்த தீர்வுகளையும் விருத்தி செய்து வருகிறது.

நிறுவனத்தின் நற்பெயர் சார்ந்த இடர்

நிறுவனத்தின் நற்பெயர் சார்ந்த இடரானது வங்கியின் செயற்பாடுகள், வியாபார அனுபவங்கள், உற்பத்திகள், சேவைகள் போன்றன குறித்தான எதிர்மறையான அக்கறைதாரர்கள் எண்ணக்கருக்கள் காரணமாக வர்த்தகச் சின்னத்தில் ஏற்படக் கூடிய பாதகமான தாக்கம் பற்றிய இடராகும். நற்பெயர் சார் இடரானது வங்கியின் வருமானம் மற்றும் சொத்துக்களில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். இதனால், நிதி நிறுவனங்களின் இயக்கத்தில் பொதுமக்களின் நம்பிக்கையினைப் பேணும் வகையில் நற்பெயர் சார் இடர் பற்றிய முகாமைத்துவமானது நிதி நிறுவனங்களுக்கு ஒரு இன்றியமையாத விடயமாக விளங்குகின்றது.

வங்கியானது, இலங்கையிலுள்ள ஒரு முன்னோடி உரிமம் பெற்ற விசேட அரச வங்கி என்ற வகையில் சுமார் ஐந்து தசாப்த காலமாக களங்கமற்ற நற்பெயரினைப் பேணி வந்துள்ளது. ஒரு நல்ல புகழ் மிக்க நற்பெயரானது வங்கியின் நாணயத்தினைப் பிரதிபலிக்கின்றது. ஒரு நிதிச் சேவை வழங்குனர் என்ற வகையில், திறமையான பணியாட்தொகுதியினர் மற்றும் வாடிக்கையாளர் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தும் உற்பத்திகள் மற்றும் சேவைகள் போன்றன வாடிக்கையாளர் நம்பிக்கைக்கான அடித்தளத்தை உருவாக்குகின்றன.

வங்கியானது நற்பெயர் இழப்பு தொடர்பில் இடர் நாட்டம் எதனையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும், நற்பெயர் சார்பாதிப்புறு நிலைமைகள் பாதகமான பேரண்டப் பொருளாதாரத்தின் ஒரு விளைவாக எதிர்கொள்ளப்பட்ட சவால்களுடன் உருவாகின. இதனால், RMD ஆனது, அவசியமான இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை எடுப்பதற்கான முகாமைத்துவத்துடன் உரிய வேளைகளில் தொடர்பாடலைப் பேணும் நோக்கில் நற்பெயர் சார்ந்த இடர்களை மிகவும் நெருக்கமாக கண்காணிக்கின்றது. வங்கியானது பாதகம் மிக்க தொடர்பாடல்களிலிருந்து வங்கியின் நற்பெயரைப் பாதுகாக்கும் நோக்கில் வாடிக்கையாளர்களுடனும் ஏனைய அக்கறைதாரர்களுடனும் தொடர்பாடலைப் பேணுவதற்காக பல்வேறு வழிமுறைகளை உபயோகித்து வருகிறது. சந்தைப்படுத்தல் பிரிவானது வங்கியின் வர்த்தகப் பெறுமானம் மற்றும் நற்பெயர் ஆகியவற்றைப் பாதுகாக்கும் காவலனாகத் திகழ்கின்றது.

ICAAP வழிகாட்டல்களின் அடிப்படையில் நற்பெயர் சார்ந்த இடர்களை மதிப்பிடுவதற்காக ஒரு புள்ளி அட்டை-மைய மாதிரி உபயோகிக்கப்படுகிறது.

மூலோபாய இடர்

மூலோபாய இடர் என்பது, வங்கியின் வருமான ஈட்டல்கள் மற்றும் மூலதனம் போன்றவற்றிலான மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில், வெற்றி அளிக்காத வியாபாரத் திட்டம் அல்லது பொருத்தமான ஒரு வியாபாரத் திட்டத்தினை அமுல்படுத்த முடியாமை, வியாபாரச் சூழலில் ஏற்படக் கூடிய மாற்றங்களுக்கு உடனடி பதிலளிப்பினை வழங்கத் தவறுகின்றமை மற்றும் வள ஒதுக்கீடு போதாமை போன்ற காரணங்களினால் எழக்கூடிய இழப்பு சார்ந்த இடராகக் கருதப்பட முடியும்.

சிரேஷ்ட முகாமைத்துவத்தின் கண்காணிப்புடன் கூடிய வங்கியின் தொலைநோக்கு, பணியிலக்கு மற்றும் பணிப்பாளர்கள் சபையுடனான இடர் நாட்டம் என்பவற்றை சீரமைக்கின்றதான மூலோபாயத் திட்டங்களும் மற்றும் வரவுசெலவுத் திட்டச் செயலாக்கங்களுமானவை மூலோபாய இடர் பற்றிய முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கின்றது.

ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து பெறப்படுகின்ற உள்ளீடுகள் வங்கியின் வியாபார மூலோபாயத்தை வகுத்தமைக்கும் விடயத்தில் கூட்டிணைக்கப்படுகின்ற. மூலோபாயத்தை நிறைவேற்றுவதிலுள்ள இடரைக் குறைக்கும் நோக்கில் சரியான தகைமை, கொள்திறன்கள், உட்கட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்ற விடயங்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அவசியமான நடவடிக்கைகளை வங்கி எடுத்துள்ளது. முகாமைத்துவமானது மூலோபாய இடரைத்தணிக்கும் வகையில் ஒரு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலோபாயத் தீர்மானங்களின் முன்னேறத்தினை மீளாய்வு செய்து வருகிறது.

பொருளாதார நெருக்கடி மூலம் எழுந்த நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத தாக்கங்கள் மூலோபாயக் குறிக்கோள்களை அடைவதில் உள்ள மூலோபாய இடரினை கடுமையாக அதிகரித்தது. மேலே கலந்தாலோசிக்கப்பட்ட முன்னெடுப்புக்கள் தவிர, சபையும் மற்றும் சிரே்ட முகாமைத்துவமும் வங்கியின் கடன் தீர்கும் ஆற்றலைப் பாதுகாப்பதற்கான அதிகபட்ச விழிப்புணர்வுடன் செயற்பட்டு வருகிறது.

ஒரு விரிவான புள்ளி அட்டை–மைய மாதிரியானது ICAAP வழிகாட்டல்களின் அடிப்படையில் வங்கியின் மூலோபாய இடரை மதிப்பிடுவதற்காக உபயோகிக்கப்படுகிறது.

மூலதன மீளாய்வு

ஒழுங்குவிதி சார் மூலதனத் தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தல், பண வைப்பாளர்கள்/கடன் கொடுனர்களுக்கு நிதிசார் பாதுகாப்பினை வழங்கல், எதிர்கால வியாபார விரிவாக்கத் தளர்வினைப் பேணுதல் மற்றும் வங்கியின் அக்கறைதாரர்களுக்கு போதுமான திரும்பலை உருவாக்குதல் என்பன போன்ற நோக்கங்களுக்காக வங்கிக்கு உறுதியான மூலதனக் கட்டமைப்பு ஒன்று அவசியமாகிறது.

மூலதனத்தை முகாமைத்துவம் செய்வதானது வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு உறுதியளிக்கின்ற அதேவேளை, அக்கறைதாரர்களுக்கான திரும்பலையும் அது உருவாக்குகிறது. இதனால், வங்கியானது செயலாற்றுகைக்கும் இடருக்கும் இடையில் உகந்ததொரு சமநிலையினை பேணி மிகவும் வினைத்திறன் மிக்க முறையில் மூலதனத்தினை முகாமைத்துவம் செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதோடு, இடர் திணிவுமிக்க சொத்துக் கலவை மற்றும் இடர் விவரத்திலுள்ள மாற்றங்கள் போன்றன தொடர்பில் கண்டிப்பான கண்காணிப்பினையும் முன்னெடுத்து வருகிறது. வங்கியின் மூலதன முகாமைத்துவச் செயன்முறையானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க காணப்படுகிறது.

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான அடித்தளம் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் பற்றிய பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் மீதான 2019 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் செயற்பாட்டு பணிப்புரைகளின் பிரகாரம், அட்டவணை 42 இல் விபரிக்கப்பட்டவாறாக குறைந்தபட்ச மூலதன விகிதங்களைப் பேணுமாறு வேண்டப்படுகிறது.

மேலும்,இலங்கை மத்திய வங்கியானது 2022 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கப் பணிப்புரையின் மூலம், தற்போது நிலவுகின்ற அதிவிசேட பேரண்டப் பொருளாதார நிபந்தனைகளைக் கருத்திற் கொண்டு உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான அடித்தளம் III இன் மூலதனத் தேவைப்பாடு மீதான 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பணிப்பரையில் எடுத்துக் கூறப்பட்டவாறான நிபந்தனைகளுக்கு உட்பட்டு,மூலதனப் பாதுகாப்பு தடைகாப்பினை (CCB) 2.5% சதவீதம் வரை குறைத்துப் பேணுவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளை அனுமதித்தது.


இடர் மீளாய்வு

2022 ஆம் அண்டுக்கான கட்டுப்பாடு சார்ந்த குறைந்தபட்ச தேவைப்பாட்டு மட்டத்திற்கு மேல் மூலதனப் போதுமையினை வங்கியினால் பேண முடியுமாக இருந்தது. இதற்கு 2021 ஆம் ஆண்டில் இலாபங்கள் ஊடாக ஈட்டப்பட்ட உள்ளக மூலதனமே பிரதான காரணமாக விளங்கியது. CETI விகிதப் பங்கானது 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த 17.17% சதவீதத்திலிருந்து, இவ் ஆண்டுக் காலப் பகுதியில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 14.36% சதவீதத்திற்கு குறைவடைந்தது. வங்கியின் அடுக்கு 1 மூலதன விகிதமானது 2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு 15.78% சதவீதத்திற்கு குறைவடைந்தது. மொத்த மூலதன விகிதமும் 2021 டிசம்பர் 31 இல் இருந்த 20.83% சதவீதத்திற்கு எதிராக 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 17.99% சதவீதத்திற்கு குறைவடைந்தது.

குழுமத்திற்கான மொத்த மூலதன விகிதமானது 2021 டிசம்பரில் காணப்பட்ட 22.0% சதவீதத்திற்கு எதிராக 2022 இல் 19.96% சதவீமாக காணப்படுகிறது. 100% சதவீதம் முழுவதும் அரசுக்குச் சொந்தமான வங்கி என்றவகையில், வெளியக அடிப்படையில் ஒழுங்குவிதி சார்ந்த மூலதனத்தினை உயர்த்துவதற்கான வரையறையுடன் கூடிய விருப்பத்தெரிவுகள் காணப்படுகின்றன.எனவே, தக்கவைத்துக் கொள்ளப்படுகின்ற வருமானங்களே வங்கியின் மூலதனத்தினை அதிகரிப்பதற்கான பிரதான வழிமுறையாக விளங்குகின்றன.

இருப்பினும், மூலதனத்தினை அதிகரிக்கும் வகையில் தக்கவைத்துக் கொள்ளப்பட்ட வருமானப் பங்களிப்பு 2022 ஆம் ஆண்டில் ரூபா 2.5 பில்லியனாக காணப்படுகின்ற அதேவேளை, இப் பெறுமானம் 2021 ஆம் ஆண்டில் 22.1 பில்லியனாக விளங்கியது.

மூலதன மட்டம் - வங்கி மற்றும் குழுமம் வரைபு 62



மூலதனப் போதுமை பற்றிய விகிதங்கள்

விகிதங்கள் (%)	ஒழுங்குவிதி சார் குறைந்தபட்ச அளவு	2022 டிசம்பரில் உள்ளவாறு உண்மைப் பெறுமதி		2021 டிசம்பரில் உள்ளவாறு உண்மைப் பெறுமதி	
		வங்கி	குழுமம்	வங்கி	குழுமம்
CET 1	6.50	**14.36**	**16.49**	17.17	18.54
அடுக்கு 1	8.00	**15.78**	**17.90**	18.60	19.96
மொத்த மூலதனம்	12.50	**17.99**	**19.96**	20.83	22.00

அட்டவணை 42: மூலதனப் போதுமை பற்றிய விகிதம்

வங்கியானது தூண்-I மற்றும் தூண்-II ஆகிய இரண்டும் சார்ந்த இடர்களை உள்ளடக்கும் நோக்கிலும் ஒரு அழுத்தச் சோதனை தடைக்காப்பாகவும் ICAAP இன் கீழ் ஒழுங்குவிதி சார் குறைந்தபட்ச எல்லை மிகையில் மூலதனத்தைப் பேணுவதற்கு உத்தேசித்து வருகிறது. அழுத்த நிபந்தனைகளின் கீழான மூலதனத் தேவைப்பாட்டினை மதிப்பிடும் வகையில் தற்போதுள்ள மற்றும் கணிக்கப்பட்டுள்ள இடர் பிரதேசங்களில் அழுத்தச் சோதனை முன்னெடுக்கப்படுகிறது.

அழுத்தச் சோதனை

ICAAP இன் ஒரு ஒருங்கிணைந்த அங்கமாக அழுத்தச் சோதனை விளங்குகின்றது. வங்கியின் அழுத்தச் சோதனை வேலைச்சட்டகமானது பணிப்பாளர்கள் சபையினதும் மற்றும் மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டல்களினதும் ஒப்புதலைப் பெற்ற அழுத்தச் சோதனைக் கொள்கையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. வங்கியின் அழுத்தச் சோதனை வேலைச்சட்டகமானது வர்த்தகப் பதிவேடு மற்றும் வங்கியியல் பதிவேடு ஆகியவற்றிலுள்ள கடன் இடர், வட்டி வீத இடர், இயக்கப்பாட்டு இடர், திரவத்தன்மை சார் இடர், ஒருங்கிணைத்தல் இடர் மற்றும் எஞ்சிய கடன் இடர் போன்ற அனைத்து பொருள்சார் இடர்கள் தொடர்பிலுமான அழுத்தச் சோதனைகளைக் கொண்டுள்ளது. வங்கியானது அழுத்தச் சோதனை நோக்கங்களுக்காக அதிகரிக்கும் பாதிப்புகள் தொடர்பில் வரையறுக்கப்பட்ட மூன்று மட்டங்களைக் கொண்டுள்ளது, அவையாவன சிறிதளவு மற்றும் நடுத்தரவளவு மற்றும் பாரியளவு (அல்லது, குறைந்தளவு, நடுத்தரவளவு மற்றும் உயர்ந்தளவு) என்பனவாகும்.

அழுத்தச் சோதனையானது, வங்கி இயங்குகின்ற சூழமைவில் ஏற்படுகின்ற பாதகமான பொருளாதாரம், அரசியல் மற்றும் பௌதீக மாற்றங்களின் கீழ் மாறுபட்ட தீவிரத் தன்மையின் எதிர்பாராத நிகழ்வுகளைத் தாங்கி நிற்பதற்கான வங்கியின் திறன் மீதான ஒரு புரிதலை வழங்குகின்றது.

வட்டி வீதங்கள், அந்நியச் செலாவணி வீதங்கள் மற்றும் பங்கு விலைகள் போன்றன உள்ளிட்ட குறிப்பான கருவிகள் அல்லது விவரங்கள் பற்றிய பிரத்தியேக சந்தைக் காரணி நகர்வுகளின் தாக்கத்தை அளவிடுவதற்காக உணர்வு ரீதியான பகுப்பாய்வு உபயோகிக்கப்படுகிறது.

இடர் மீளாய்வு

வங்கியானது பிரதானமாக, பாதகம் மிக்க வட்டி வீத ஏற்ற இறக்கங்கள் காரணமாக ஏற்படக்கூடிய வர்த்தக மற்றும் வங்கியியல் ஏடு குறித்தான தாக்கத்தினை இனங்காண்பதற்காக மேற்படி உணர்வு ரீதியான பகுப்பாய்வினை உபயோகிப்பதோடு, அறிக்கைகள் ALCO இற்கு ஒரு ஒழுங்குமுறை அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

	FVPL (ரூ. '000)	FVOCI (ரூ. '000)	மொத்தம் (ரூ. '000)
2022 ஆம் ஆண்டில் உணரப்படாத அடைவு/(இழப்பு)	(917,722)	(650,959)	(1,568,681)
M2Mபெறுமதியிலான மாற்றம்			
விளைவில் 100 bps அதிகரிப்பு	(116,861)	(229,836)	(346,697)
விளைவில் 200 bps அதிகரிப்பு	(230,716)	(454,844)	(685,560)
விளைவில் 100 bps வீழ்ச்சி	119,985	234,821	354,806
விளைவில் 200 bps வீழ்ச்சி	243,198	474,775	717,973

அட்டவணை 43: உணர்வுரீதியான பகுப்பாய்வு – வர்த்தகப் பதிவேட்டிலான வட்டி வீத இடர் – அரசாங்க பிணையங்கள்

எதிர்மறையான இடைவெளிகள் மீதான 100 அடிப்படைப்புள்ளி திடீர் மாற்றம்		1 மாதம் வரை	1-3 மாதங்கள்	3-6 மாதங்கள்	6-12 மாதங்கள்	1-3 வருடங்கள்	3-5 வருடங் கள்	5 வருடங் களுக்கு மேல்	மெத்தம்
தனித்து நிற்கும் மட்டம்	முதிர்வு இடைவெளி (ரூ. மில்)	(161,044)	(513,298)	(291,316)	(156,351)	350,455	354,531	380,243	(36,779)
	தேறிய வட்டி வருமானத்தின் மீதான தாக்கம் (ரூ. மில்)	(1,549)	(4,289)	(1,836)	(407)				(8,080)
திரண்ட மட்டம்	முதிர்வு இடைவெளி (ரூ. மில்)	(164,178)	(519,761)	(290,266)	(155,346)	351,080	359,204	382,013	(37,254)
	தேறிய வட்டி வருமானத்தின் மீதான தாக்கம் (ரூ. மில்)	(1,579)	(4,343)	(1,829)	(404)				(8,155)

அட்டவணை 44: உணர்வுரீதியான பகுப்பாய்வு – வங்கிப் பதிவேட்டிலுள்ள விளைவு வளைவு பற்றிய மதிப்பாய்வு

அழுத்தச் சோதனை அனுபவத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள் இடர் நாட்டம் மற்றும் இடர் எல்லைகளைத் தாபித்தல், மூலதனத் திட்டமிடல், மூலோபாய வியாபாரத் திட்டமிடல் போன்றவற்றுக்கும் மற்றும் செயலூக்கமுள்ள தீர்மானம் மேற்கொள்ளலுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் முக்கிய வியாபார இயக்கங்களிலுள்ள இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் உபயோகிக்கப்படுகின்றன.

அதிவிசேட பொருளாதார நிபந்தனைகளிலிருந்தான தாக்கங்கள் சிரேஷ்ட முகாமைத்துவம், பணிப்பாளர்கள் சபை மற்றும் ICAAP மூலமான ஒழுங்குறுத்துகைகள் போன்றவற்றுக்கான தாக்கங்கள் தொடர்பில் ஆரம்ப நிலையிலேயே தொடர்பாடல் செய்யும் நோக்கில் அழுத்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டன.

இடர் மீளாய்வு

இடர்பரப்பு	நிகழ்வு	மூலதனப் போதுமை விகிதத்திற்கான தாக்கம் குறைவு (%)	நடுத்தரம் (%)	உயர்வு (%)
கடன் இடர்	கடன் இடர் – பொருளாதார வீழ்ச்சி ஒன்றின் காரணமாக NPLs இல் அதிகரிப்பு (குறைவு – 10%, நடுத்தரம் – 20%, உயர்வு – 30%)	-0.38	-0.75	-1.11
சந்தை இடர்	வட்டி வீத இடர் – சந்தை வருவாயில் அதிகரிப்பு (குறைவு - 50bps, நடுத்தரம் – 100bps, உயர்வு – 200bps)	-0.05	-0.1	-0.19
	பங்கு விலை இடர் – சந்தை விலைகளில் வீழ்ச்சி (குறைவு - 10%, நடுத்தரம் – 20%, உயர்வு - 30%)	0.01	0.03	0.05
	FX இடர்: ஐ.அ.டொலருக்கு எதிரான ரூபாய் தேய்மானம் (நீண்ட நிலைப்பாடு) (குறைவு – 10%, நடுத்தரம் – 15%, உயர்வு – 20%)	-0.019	-0.005	-0.003
இயக்கப்பாட்டு இடர்	பாசல் II இழப்பு நிகழ்வு வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இயக்கப்பாட்டு இழப்புக்களிலான அதிகரிப்பு	-0.022	-0.032	-0.048

அட்டவணை 45: வருமான ஈட்டல் மற்றும் மூலதனம் மீதான தாக்கம்

குறைந்தபட்ச வெளிப்பாட்டுத் தேவைப்பாடு – தூண் III

குறைந்தபட்ச வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகள்,வங்கியின் மூலதனப் போதுமை மற்றும் இடர் வெளிப்பாடுகளை அளவிடுவதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களை அனுமதிக்கும் நோக்கில் பாசல் III இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரைகளுக்கு இணங்க குறைந்தபட்ச வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொட்பில் பக்கம் 442 தொடக்கம் 453 வரை பார்க்க.

நிதியியல் அறிக்கைகள்

நிதியியல் நாட்காட்டி 238

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை 239

நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று 245

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று 246

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம் 248

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி நிறுவன திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று 249

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 250

நிதியியல் கூற்றுகளின் உள்ளடக்கம் 253

வருமானக் கூற்று 254

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று 255

நிதியியல் நிலைக் கூற்று 256

பங்குரிமைமூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று 258

காசுப் பாய்ச்சல் கூற்று 262

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் 264

நிதியியல் நாட்காட்டி

நிதியியல் நாட்காட்டி 2022

2022 மார்ச் 31 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல்	2022 மே 31
2022 ஜூன் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல்	2022 ஆகஸ்ட் 31
2022 செப்டம்பர் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல்	2022 நவம்பர் 30
2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை (கணக்காய்வுசெய்யப்படாத) வெளியிடுதல்	2023 மார்ச் 31
2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகளை (கணக்காய்வுசெய்யப்பட்ட) வெளியிடுதல்	2023 மே 19

2023 முன்மொழியப்பட்ட நிதியியல் நாட்காட்டி

2023 மார்ச் 31 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல்	2023 மே 31
2023 ஜூன் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல்	2023 ஆகஸ்ட் 31
2023 செப்டம்பர் 30 அன்று முடிவுற்ற காலாண்டுக்கான இடைக்கால நிதியியல் அறிக்கைகளை வெளியிடுதல்	2023 நவம்பர் 30
2023 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகளை (கணக்காய்வுசெய்யப்பட்ட) வெளியிடுதல்	2024 மார்ச் 29

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

பொது

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் இணைத்து வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய தமது ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். வங்கியானது கடந்த ஆண்டுகளிலும் மற்றும் எதிர் காலத்திலும் இவ்வாறு பெறுமதி வாய்ந்ததாகவும் அதனை நிலை நிறுத்துவதாகவும் விளங்குமென்பதைத் தெரிவிக்கும் வகையில் வங்கியின் செயற்பாடுகள் மூலோபாயத் தோற்றத்தை வழங்குவதாக நாம் உறுதிப்படுத்துகிறோம். இவ்வறிக்கையானது, 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களுடன் இணங்குகிறது. மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிறுவன ஆளுகை மீதான உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிக்கான வங்கிச் சட்ட நியமம் 2007 ஆம் ஆண்டு இல. 12 பணிப்புக்கள் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் தேவைப்பாடுகளையும் உள்ளடக்குகிறது. வருடாந்த நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வாளர் சபையினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் பரிந்துரை செய்யப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2023 ஏப்ரல் 27 இல் விநியோகிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கி, 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மூலம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியென்ற அந்தஸ்து வழங்கப்பட்டது வங்கிக்கு லங்கா தர நிறுவனத்தினால் நீண்டகால கடன் இறுக்கும் ஆற்றல் AAA (நிலையான) தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வணிக மதிப்பாய்வு

வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

தேசிய சேமிப்பு வங்கி முதன்மைச் செயற்பாடானது, இலங்கை மக்களிடையே சேமிப்பை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்வதும் ஆகும். குறித்த வருடத்தில் வங்கி நடவடிக்கைகளானது, சில்லறை வங்கியியல், நிறுவன வங்கியியல், வியாபார நிதியிடல், மற்றும் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு இணங்க திறைசேரி நடவடிக்கைகள் முதலீடு கொரஸ்போன்டன் வங்கியியல் மற்றும் பணமாற்றல் வசதிகள், அடகுவைத்தல், வெளிநாட்டு நாணய தொழிற்பாடுகள், மற்றும் ஏனைய நிதிச்சேவைகள்

நோக்கம், பணி மற்றும் மதிப்பீடுகள்

வங்கியின் நோக்கம், பணி, மதிப்பீடுகள் ஆகியன இவ்வாண்டறிக்கையின் 4 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து நிரந்தர ஊழியர்களும் வங்கியின் ஒழுக்கக் கோவைக்குக் கட்டுப்பட்டுள்ளதுடன், வங்கியின் நோக்கு மற்றும் பணியை அடைவதற்கான நோக்கில் அரச சத்தியப் பிரமாணத்துக்கும் கட்டுப்பட்டவர்களாவர்.

அரசாங்க உத்தரவாதம்

வங்கியில் வைப்புச் செய்த பணம் மற்றும் அதற்கான வட்டியினை மீளச்செலுத்துவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது.

வங்கியின் துணை நிறுவனங்கள்

தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி ஆகியன வங்கியின் இரண்டு துணை நிறுவனங்களாகும். தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடு, இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர் ஒருவராக, அரசாங்கப் பிணையங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும்.

இலங்கை சேமிப்பு வங்கியின் முக்கிய செயற்பாடுகளாவன சேமிப்பு வைப்பு மற்றும் நேர வைப்புக்களைத் திரட்டல், கடன்கள் வழங்குதல், குத்தகை, வாடகை கொள்வனவு, நகை அடகு மற்றும் பிறகடன் வசதிகளை வழங்குதல் மற்றும் முறிவடைந்த வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் கடன் கணக்குகளை மறுசீரமைத்து வைப்பு பொறுப்புக்களை தீர்த்தல்.

இக்கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 24 ஆம் குறிப்பில் பக்கம் 317 இல் தரப்பட்டுள்ளன.

குழும கட்டமைப்பு மாற்றங்கள்

எதுவித பாரிய மாற்றங்களும் வங்கி மற்றும் குழுமத்தின் பிரதான நடவடிக்கைகளில் இடம் பெறவில்லை.

வணிக செயற்திறன் மீளாய்வு

2022 வருடத்தின் வங்கி மற்றும் குழுமத்தின் முழுமையான நிதி செயற்திறன் பற்றிய மீளாய்வு தலைவர் அறிக்கை (பக்கம் 14), பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி மீளாய்வு (பக்கம் 18) வழங்கப்பட்டுள்ளது. பக்கம் 99 தொடக்கம் 166 வரையான முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு நிதி மூலதன மீளாய்வு, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் (பக்கம் 254) என்பன பிரதான வணிகங்கள் பற்றி மற்றும் வங்கி மற்றும் குழுமத்தின் நிலைமை பற்றிய விவரமான ஆய்வினை வழங்குகிறது. இந்த அறிக்கைகள் ஆண்டறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

கிளை வலையமைப்பு விரிவாக்கம்

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மூலதனச்செலவானது நிதி அமைச்சின் மற்றும் மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கமைய முழுமையான மேற்பார்வை செய்யப்பட்டது. இதற்கமைய வலையமைப்பில் ஒரு (01) கிளை அதிகரிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் 262 கிளைகளை வங்கி தனது வலையமைப்பில் கொண்டிருந்தது. வாடிக்கையாளர் வசதிகளை அதிகரிக்கும் விதத்தில் தன்னியக்கக் காசு இயந்திர வலையமைப்பு (ATM/CRM) மேலும் விரிவாக்கப்பட்டது. வங்கியானது இவ் ஆண்டில் நாடு முழுவதிலும் 05 CRM மற்றும் 01 ATM இயந்திரங்களை நிறுவி, ஏனைய (peer) வங்கிகளின் ATM பாவனைக்கு மேலதிகமாக தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய தன்னியக்கக் காசு இயந்திரங்கள் எண்ணிக்கையை 390 ஆக்கியது.

நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய (SLFRSs/ LKASs) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை திருத்தப்பட்ட 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் குறித்த வெளிப்பாடுகள் தொடர்பிலான சட்ட தேவைப்பாட்டுடன் இணங்குவதாகவும் அமைந்துள்ளன. 2022 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் நிதிக் கூற்றுக்கள் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி, நிறுவன திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை) இனால் முறையாக சான்றுபடுத்தப்பட்டு, பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் தலைவர் உள்ளிட்ட இரு பணிப்பாளர்களினால், தற்காலிக தலைவர் உள்ளடங்களாக அனுமதிக்கப்பட்டும், கையொப்பமிடப்பட்டும் 254 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளது. இது வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது.

கணக்கீட்டுக் கொள்கைகளும் இவ்வாண்டின் போது ஏற்பட்ட மாற்றங்களும்

வங்கி தனது நிதிக் கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs/ LKASs) அமைவாகத் தயாரித்துள்ளது. இவ்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் கைக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் 264 தொடக்கம் 280 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. மீளாய்விற்குட்பட்ட ஆண்டில், எதுவித மாற்றங்களும் வங்கி மற்றும் குழுமத்தின் கணக்கீட்டு கொள்கைகளில் இடம் பெறவில்லை.

நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

2022 டிசெம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியினது அலுவல்களை உண்மையான மற்றும் நேர்மையான நோக்கத்தினைப் பிரதிபலிப்பதற்கும் அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான இலாபத்தினைப் பிரதிபலிப்பதற்கும் வங்கியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர்களுடையது ஆகும். இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs/ LKASs) மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதன் திருத்தங்கள் மற்றும் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் தேவைப்பாடுகளுக்கிணங்க அனைத்தையும் உள்ளடக்கிய பக்கம் 254 முதல் 257 வரை உள்ள பக்கங்களில் காணப்படும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்னும் கருத்தினை பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர். இவ் ஆண்டறிக்கையின் 245 ஆம் பக்கத்தில் காணப்படும் பணிப்பாளர்களின் பொறுப்புடைமைக் கூற்று வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புடமை இதில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு யாப்பின் 154ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியே தேசிய சேமிப்பு வங்கியின் கணக்காய்வாளர் ஆவார். 2022 டிசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியினதும் மற்றும் குழுவின் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பனவற்றின் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேற்கொண்டுள்ளனர். வங்கிக்கான மற்றும் அதன் துணை கம்பனியான தே சே வ நிதி முகாமைத்துவக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியினது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2022 இல் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வங்கியின் கண்காய்வு நடாத்தப்பட்டது. அவர்களின் கணக்காய்வில் அடையாளங் காணப்பட்ட விடயங்கள் உடனடி நடவடிக்கைக்காக கிரமமான முறையில் முகாமைத்துவத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதி அறிக்கையிடல் முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி அவசியமான தரவுகள் மற்றும் தகவல்களுடன் நிதியியல் கூற்றுக்கள் பரிசோதனைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் ஆண்டறிக்கையின் 250 ஆம் பக்கங்களில் காணப்படுகிறது.

எதிர்கால முன்னேற்றங்கள்

வங்கி மற்றும் குழுமத்தின் எதிர்கால முன்னேற்றம் பற்றிய மீளாய்வு 2022இன் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையின் தலைவரின் செய்தி (பக்கம் 14), பொது முகாமையாளர்/பி.நி.அ. மீளாய்வு (பக்கம் 18) மற்றும் "முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு" பக்கம் 99 முதல் 166 வரை வழங்கப்பட்டுள்ளது.

மொத்த வருமானம்

2022 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொத்த வருமானம் ரூபா 174,557 மில்லியனாகக் (2021 – ரூபா 134,939 மில்லியன்) காணப்பட்ட வேளையில் தொகுதியின் வருமானம் ரூபா 175,004 மில்லியனாக (2021 – ரூபா 130,060 மில்லியன்) விளங்கியது. வருமானங்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இல் தரப்பட்டுள்ளன. வங்கியின் மொத்த வருமானம குழும வருமானத்தில் 99.7% (2021 – 99.2%). வங்கி மற்றும் குழுமத்தின் பிரதான வருமானம் வட்டிவருமானம் 99.1% (2021 – 97.4%). மற்றும் 100.4% (2021 – 98.0%).

பங்கிலாபம் மற்றும் ஒதுக்கீடுகள்

பெறுபேறுகளும் பகிர்வும்

வங்கியினதும் தொகுதியினதும் வருமான வரிக்கு முன்பான இலாபம் முறையே ரூ. 4,510 மில்லியனாகவும், ரூ. 2,340 மில்லியனாகவும் (2021 – ரூ. 28,381 மில்லியனாகவும், ரூ. 28,425 மில்லியனாகவும்) விளங்கியது.

வருமான வரிக்குப் பின்பான வங்கியினதும், தொகுதியினதும் இலாபம் முறையே ரூ. 2,530 மில்லியனாகவும் ரூ. 949 மில்லியனாகவும் (2021 ரூ. 22,120 மில்லியனாகவும் ரூ. 22,131 மில்லியன்) விளங்கியிருந்தன. வங்கிக்கான இலாபம் பற்றிய விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

	2022 ரூ. மில்லியன்	2021 ரூ. மில்லியன்
அனைத்துச் செலவுகள் தேய்வுக்கான ஒதுக்கீடு ஏற்படக் கூடிய கடன் இழப்புக்கள் மற்றும் பெ.சே.வ., தே.நி.வ., க.மீ.வ. மற்றும் வரிக்கு முன்பான எதிர்காலத் தேய்வுகள் ஆகியவற்றின் பின்பான ஆண்டுக்குரிய இலாபம்	**7,763**	34,544
நிதிச் சேவைகள் மீதான பெ.சே.வ வரி	**3,186**	6,162
நிதிச்சேவைகளுக்கான சமூக பாதுகாப்பு பங்களிப்பு (SSCL) வரி	**67**	–
வருமான வரிக்கான ஏற்பாடு	**1,980**	6,262
வரிக்கு பின்னரான தேறிய இலாபம்	**2,530**	22,120
வரி நீங்கலான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	**(1,223)**	2,183
வருடத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	**1,307**	24,303
பங்கீடுகள்		
நியதிச்சட்ட ஒதுக்கத்திற்கு மாற்றல்	**(51)**	(1,106)
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிக்கான (NITF) பங்களிப்பு	**(25)**	(221)
திரட்டிய நிதிக்கான பங்களிப்பு/பங்குலாபம்	**–**	(3,500)
ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள்	**(1,231)**	(19,476)

வரி விதிப்பிற்கான ஏற்பாடு

2022 டிசெம்பர் 19 இல் உறுதிப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்ட இல.45 (திருத்தங்கள்) ஏற்ப வருமான வரி 24% இலிருந்து 30% மாக அதிகரித்தது. இடைப்பட்ட வருடத்தில் வட்டிவீதம் 30% மாக அதிகரித்ததால் 2022 வருடத்தில் இரண்டு வரி வீதங்கள் பங்கீட்டு அடிப்படையில் (50% முதல் 6 மாதங்கள் மற்றும் 50% இரண்டாவது 6 மாதங்கள்) 2022/23 மதிப்பீட்டு வருடத்திற்கு அமுலாக்கப்பட்டது

நிதிச் சேவைகளுக்கான சமூக பாதுகாப்பு தொடர்பில் 2022 நிதிச்சேவைகளுக்கான சமூக பாதுகாப்பு பங்களிப்பு (SSCL) வரி சட்ட இல. 25 படி 1 ஒக்டோபர் 2022 முதல் நிதி சேவைகளுக்கான பெறுமதி சேரில் 2.5% மாக அமுல்படுத்தப்பட்டது. வங்கி மற்றும் தொகுதியின் தொழிலுக்கு ஏற்புடைய நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி 15% ஆகும்.

2022 ஆம் ஆண்டின் கட்டணவரி சட்ட இல. 14 இன் படி குழுவானது 2022/23 வரிக்கான வருமானத்தில் 25% மான ரூ. 5,524 மில்லியன், மற்றும் இது கடந்த ஆண்டுக்கானது என்பதனால் 31 டிசெம்பர் 2022 நிதியறிக்கையில் கடந்த வருட திருத்தமாக திருத்தப்பட்டது.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS 12 இற்கமைய வருமான வரிகள் மீது பொறுப்புடைமை முறையின் கீழ் அனைத்து அறியப்பட்ட தற்காலிக வேறுபாடுகள் மீதும் பிற்போடப்பட்ட வரியினை வங்கி வழங்கியது. வருமான வரிச் செலவினம் மற்றும் பிற்போடப்பட்ட வரி விதிப்பு பற்றிய தகவல்கள் முறையே குறிப்புகள் 13 இலும் 30 இலும் முறையே 291 மற்றும் 329 பக்கங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு பங்கு இலாபம், வரிகள் மற்றும் அறவீடுகள்/ தேசத்திற்கான பங்களிப்புகள்

2022 ஆம் ஆண்டில் வங்கி அரசாங்கத்திற்கு வரிகள் மற்றும் அறவீடுகள் வாயிலாக ரூ. 5,578 மில்லியன் (2021 – ரூ. 16,465 மில்லியன்) பங்களிப்புச் செய்தது.

இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

	2022 ரூ. மில்லியன்	2021 ரூ. மில்லியன்
வருமான வரி	1,980	6,262
பெறுமதிசேர் வரி/ SSCL	3,253	6,162
சிறப்பு கட்டணம்	320	320
திரட்டிய நிதிக்கான பங்களிப்பு	–	3,500
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிக்கான பங்களிப்பு	25	221
தேசத்திற்கான மொத்த பங்களிப்பு	5,578	16,465

ஒதுக்குகள்

வங்கியின் மொத்த ஒதுக்குகள் 31 டிசெம்பர் 2021 இல் ரூ. 63,492 மில் ஆக காணப்பட்டது. (2020 – ரூ. 66,613 மில்). வங்கியின் ஒதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

	2022 ரூ. மில்லியன்	2021 ரூ. மில்லியன்
நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம்	5,225	5,174
மீள் மதிப்பீட்டு ஒதுக்கு	6,494	7,050
பிடித்து வைத்த வருவாய்கள்	2,874	13,728
ஏனைய ஒதுக்குகள்	48,899	40,661
மொத்த ஒதுக்குகள்	63,492	66,613

ஒதுக்குகளின் மாற்றங்கள் பற்றிய தகவல்கள் பங்கு மூலதன மாற்றங்களின் கூற்றில் 258 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

தபால் மா அதிபருக்கான (த மா அ) சேவைக் கட்டணங்கள்

தபால் மா அதிபருக்கான 2022 ஆம் ஆண்டுக்குரிய சேவைக்கட்டணங்கள் ரூ. 249 மில்லியனாக, 2021 இல் வழங்கப்பட்ட அதே அடிப்படையிலேயே வழங்கப்பட்டன.

ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பொறுப்புக்கள்

வங்கி இரண்டு ஓய்வூதிய நிதியினை பேணுகிறது: ஊழியர் ஓய்வூதிய நிதி I மற்றும் ஓய்வூதிய நிதி II. மேலும் வங்கி துணையிழந்த மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதிய நிதி மற்றும் ஓய்விற்கு பின்னரான மருத்துவ திட்டத்தினையும் பேணுகிறது. நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 38 ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் பக்கம் 340 – 350 இல் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன செலவினம்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள், கட்புலனாகாச் சொத்துக்கள் (நடைமுறையிலுள்ள மூலதனம் உள்ளடங்கலாக) ஆகியனவற்றைக் கையேற்றல் தொடர்பிலான வங்கியின் மொத்த மூலதனச் செலவினம் இவ்வாண்டில் ரூ. 906 மில்லியனாகவும் (2021 – ரூ. 1,306 மில்லியன்) மற்றும் தொகுதியின் செலவினம் ரூ. 912 மில்லியனாகவும் (2021 – ரூ. 1,336 மில்லியன்) விளங்கின. இவற்றின் விபரங்கள் இந்த ஆண்டறிக்கையில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 26 (அ) மற்றும் 26 (ஆ) இல் 320முதல் 324 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கி, தொகுதிக்கு முறையே ரூ. 14,756 மில்லியன் மற்றும் ரூ. 15,646 மில்லியனாக (2021 இல் வங்கிக்கு ரூ. 15,046 மில்லியன் மற்றும் தொகுதிக்க ரூ. 15,950 மில்லியனாக) விளங்கியது. நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களிலுள்ள விபரங்கள் வருமாறு:

- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 26: ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பக்கம் 318.

- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 29: நன்மதிப்பு மற்றும் கட்புலனாகாச் சொத்து பக்கம் 327.
- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 48.1: மூலதன அர்ப்பணிப்பு பக்கம் 356.

குறித்துரைக்கப்பட்ட மூலதனம் மற்றும் பங்குடைமை

குறித்துரைக்கப்பட்ட மூலதனம்

வங்கியின் அங்கீகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 பில்லியன் ஆகும். இது ஒவ்வொன்றும் ரூ. 10.00 கொண்ட ஒரு பில்லியன் சாதாரண பங்குகளைக் கொண்டு ஆக்கப்பட்டது. வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் 2022 டிசெம்பர் 31 இல் ரூ. 9.4 பில்லியன் ஆக விளங்கியது. திறைசேரியின் செயலாளர் அவரது அலுவல்சார் பதவிக்கிணங்க விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனம் அனைத்திற்கும் உரிமையாளராவார். இது பற்றிய தகவல்கள் குறிப்பு 43 – வழங்கப்பட்ட மூலதனம் மற்றும் மற்றும் குறிப்பு 46.1 கோரப்படாத வைப்பு ஒதுக்கம் என்பவற்றின் கீழ் 354 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பங்குடைமை

இலங்கை அரசாங்கமானது, தேசிய சேமிப்பு வங்கியின் தனிப்பட்ட பங்குதாரர் ஆகும்.

கீழ்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன் வழங்கல்

2022 டிசெம்பர் 31 கீழ்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன் பொறுப்பு ரூபா 5 பில்லியன். பட்டியல்படுத்தப்படாத தரப்படுத்தப்பட்ட பிணையளிக்கப்படாத கீழ்நிலைப்படுத்தப்பட்ட நிரந்தர தொகுதிக்கடன்களை ரூபா 100 பெறுமதியினை உடைய தனிப்பட்ட வைப்பாக 27 அக்டோபர் 2020 வழங்கப்பட்டது. வங்கியானது நிதிநிலவர அறிக்கை தினத்தில் உள்ள தொகுதிக்கடன் விபரங்கள் குறிப்பு 37.1 பக்கம் 337 முதல் 338 இல் உள்ளது.

சிரேஷ்ட தொகுதிக்கடன் வழங்கல்

2022 டிசெம்பர் 31 அன்று வங்கியின் தொகுதிக்கடன் பொறுப்பு ரூபா 11.5 பில்லியன் ஆகும். பட்டியலிடப்படாத தரப்படுத்தப்பட்ட சிரேஷ்ட மீட்டுக்கொள்ளக்கூடிய ரூபா 100 பெறுமதியான தொகுதிக்கடன்கள் 24 செப்டெம்பர் 2021 தனியார் வழங்கல் மூலம் வழங்கப்பட்டன. மற்றும், ரூபா 6.3 பில்லியன் பெறுமதியான பட்டியலிடப்படாத தரப்படுத்தப்பட்ட பிணையளிக்கப்படாத மீட்டுக்கொள்ளக்கூடிய ஒவ்வொன்றும் ரூபா 100 பெறுமதியான தொகுதிக்கடன் 2019 செப்டெம்பர் 10 இல் வழங்கப்பட்டன. சிரேஷ்ட தொகுதிக்கடன் விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் 338 பக்கங்களில் குறிப்பு 37.2 இல் உள்ளது.

பங்கு தகவல்

குறித்த வருடத்திற்கான 2022 இற்கான அடிப்படை பங்கிற்கான வருவாய் மற்றும் பங்கிற்கான தேறிய சொத்து பெறுமதி என்பன ரூபா 2.69 (2021 – ரூபா 23.53) மற்றும் ரூபா 77.54 (2021 – ரூபா 80.86). சராசரி பங்கிற்கான அடிப்படை மற்றும் குன்றிய வருமானம் குறிப்பு 14 பக்கம் 293 மற்றும் தேறிய சொத்து பெறுமதி குறிப்பு 50 பக்கம் 364 இல் தரப்பட்டுள்ளது.

நன்கொடைகள்

2022 ஆம் ஆண்டின் போது வங்கியினால் நடாத்தப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிகழ்வுகளின் விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் பக்கம் 159 மற்றும் 160 இல் தரப்பட்டுள்ளது

பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் நிதி அமைச்சு மற்றும் தபால் மா அதிபரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு பதவி வழி உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கி ஏழு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. 1995 இன் 28 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1971 இன் 30 ஆம் இலக்க தேசேவ சட்டத்தின் பிரிவு 11 (1) இன் ஏற்பாடுகளின் கீழ் தலைவர் மற்றும் ஏனைய நான்கு பணிப்பாளர்கள் ஆகியோர் நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுவர். பின்வரும் பணிப்பாளர்களின் விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கம் 184 முதல் 186 இல் தரப்பட்டுள்ளது.

2022 வருடத்திற்கான பணிப்பாளர் தகவல்கள்

பணிப்பாளரின் பெயர்	நியமன திகதி	அங்கத்துவ அந்தஸ்து
திருமதி கேசிலா ஐயவர்தன – தலைவர்	26 டிசெம்பர் 2019 – 26 டிசெம்பர் 2022	நிஅஅ/சுஅ
திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன – பதவிவழிப் பணிப்பாளர்	31 ஆகஸ்ட் 20218 – 3 ஜனவரி 2023	நிஅஅ /சு
கலாநிதி எம் கே சி சேனாநாயக்க – பதவிவழிப் பணிப்பாளர்	11 ஜனவரி 2020 – 28 பெப்ரவரி 2022	நிஅஅ/சுஅ
திரு எரங்க ஐயவர்தன – சிரேஷ்ட பணிப்பாளர் (15 ஜூன் 2020 முதல் 2 ஜனவரி 2023)	2 ஜனவரி 2020 – 2 ஜனவரி 2023	நிஅஅ/சு
திருமதி மனோஹரி அபயசேகர – பணிப்பாளர்	2 ஜனவரி 2020 – 2 ஜனவரி 2023	நிஅஅ/சுஅ
திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்	21 பெப்ரவரி 2020 – 21 பெப்ரவரி 2023	நிஅஅ/சுஅ
திரு எச் கே டி லக்ஷ்மன் காமினி – பணிப்பாளர்	14 டிசெம்பர் 2020 முதல் இன்றுவரை	நிஅஅ/சுஅ
திரு ஜூட் நிலுக்ஷன் – பதவிவழிப் பணிப்பாளர்	28 பெப்ரவரி 2020 முதல் இன்றுவரை	நிஅஅ/சுஅ

சுஅ – சுயாதீனம் அற்ற பணிப்பாளர், **நிஅஅ** – நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர், **சு** – சுயதீனமான பணிப்பாளர்

2022 ஆம் ஆண்டிற்கான வங்கி துணை நிறுவனங்களின் பணிப்பாளர்கள்

2022ஆம் ஆண்டுக்கான தே.சே.வ நிதி முகாமைத்துவ கம்பனியின் பணிப்பாளர் பெயர்கள் வருமாறு:

திருமதி கேசிலா ஐயவர்தன – தலைவர்

திரு. யூ ஜி ஆர் ஆரியரத்ன – பணிப்பாளர்

திருமதி மனோஹரி அபயசேகர – பணிப்பாளர்

திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்

திரு. டபிள்யூ ஒ ரொட்ரிகோ – பணிப்பாளர்

திரு. எச் கே டி லக்ஷ்மன் காமினி – பணிப்பாளர்

திரு. எம் பி ஏ டபிள்யூ பீரிஸ் – பணிப்பாளர்

திரு. கே ரவீந்திரன் – பணிப்பாளர்

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் பெயர்கள் வருமாறு:

திருமதி கேசிலா ஐயவர்தன – தலைவர்

திரு. ஹேமந்த கமகே – பணிப்பாளர்

திரு. பிரசாட் இம்புல்கொட – பணிப்பாளர்

திரு. எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்

திரு. ஐனக அருணசாந்த – பணிப்பாளர்

திரு. எம் கே பி குமார – பணிப்பாளர்

சபை உப குழுக்கள்

முழுமையான பொறுப்பு மற்றும் பதில் கூறும் பெறுப்பு பணிப்பாளர் சபையிடம் காணப்பட நான்கு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கினால் வெளியிடப்பட்ட வங்கிகளின் முழுமையான கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்தும், "இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்" 2007 இன் இல. 12 வங்கி சட்ட நியமத்தின் படி அவையாவன: சபை கணக்காய்வு குழு, சபை மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழு, சபை நியமன குழு, மற்றும் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மற்றும் ஒரு கட்டாயமற்ற குழு சபை தந்ரோபாய சந்தைப்படுத்தல் குழு.

சபை உப குழுக்களின் நியமங்கள் மத்திய வங்கி மற்றும் தேசேவ சட்ட நிறுவன ஆளுகை தொடர்பான பரிந்துரைகளையும் மற்றும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சுயாதீனமான நியமங்கள் என்பவற்றின் பரிந்துரைகளுக்கு அமைவானது.

31 டிசெம்பர் 2022 இல் கட்டாயமான சபை உப குழுக்களின் உள்ளடக்கம் மற்றும் கூட்டங்களின் போதான பணிப்பாளர் வருகை என்பன பக்கம் 190 மற்றும் இவ் உப குழுக்களின் அறிக்கைகள் பக்கம் 199 முதல் 207 வரை வழங்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களின் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள், சபை உப குழு கூட்டங்கள் மற்றும் முன் கூறப்பட்ட கூட்டங்களுக்கான பணிப்பாளர்களின் வருகைகள் இவ்வாண்டறிக்கையின் நிறுவன ஆளுகை அறிக்கையில் பக்கம் 190 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

நேரடி மற்றும் நேரடியற்ற வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள் நிதிக் கூற்றுக்கான குறிப்பு 49.5.2 இல் பக்கம் 361 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந் நலன்கள், சபைக் கூட்டங்களில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. வங்கியுடனான ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் ஏதேனும் நேரடி அல்லது நேரடியற்ற நலன்களைக் கொண்டிருக்கவில்லை.

வங்கியினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்களில் பணிப்பாளர்களின் அக்கறை

பணிப்பளாளர்கன் பெயரில் எதுவித தொகுதிக்கடன்களும் பதிவாகவில்லை.

பணிப்பாளர்களின் வேதனங்களும் ஏனைய நலன்களும்

வங்கி மற்றும் தொகுதி தொடர்பில் 2022 நிதியாண்டுக்கான பணிப்பாளர்களது வேதனங்கள் மற்றும் ஏனைய நலன்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 49.5.1 ஆம் குறிப்பில் பக்கம் 361 இல் தரப்பட்டுள்ளன.

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (LKAS) 24 இல் தொடர்புடைய திறத்தவர்களின் நியமங்களுக்கமைய "தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை" வகைப்படுத்தக் கூடிய ஏதேனும் இருப்பின் பணிப்பாளர்கள் அவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். பணிப்பாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள், பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையின் பகுதியொன்றாக விளங்கும் நிதிக் கூற்றுக்களுக்கான 49.5.3 ஆம் குறிப்பில் 361 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய அல்லது அபாயங்களை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் செயற்பாட்டில் வங்கியும் தொகுதியும் ஈடுபடவில்லை. சுற்றாடலை பாதுகாக்க எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் பக்கம் 162 முதல் 166 இல் தரப்பட்டுள்ளன.

நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசுக்கான நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட ஒழுங்குமுறை அமைப்புக்கள், ஊழியர்களுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அறிவித்தல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 52, பக்கம் 364 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, கணக்குகளுக்கான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்களைத் தேவைப்படுத்தும் எந்தவித நிகழ்வுகளும் அறிவிக்கும் திகதியிலிருந்து ஏற்படவில்லை.

தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

முன்னறிகின்ற எதிர்காலத்தின் போது அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு வங்கி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை மீளாய்வு செய்து திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினைப் பேணுவதற்கு செயற்பாடுகளைத் தடை செய்கின்ற கட்டுப்பாடுகள் அல்லது திட்டம் போன்ற வங்கியின் இயலுமை மீது சந்தேகத்தினைத் தோற்றுவிக்கின்ற நிச்சயமற்ற தன்மைகள் எதுவும் இருப்பதாக பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள்

இடர் ஆய்வு அறிக்கை

இடர் முகாமைத்துவம் செய்வதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பினையும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது. வங்கியினால் எதிர்கொள்ளப்படும் அத்தகைய இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல்

மற்றும் முகாமை செய்தல் ஆகியவற்றுக்கான செயல்முறையொன்று நடைமுறையிலுள்ளது. இடர்களைக் குறைப்பதற்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க வழிமுறைகள் இவ்வறிக்கையின், இடர் மற்றும் மூலதன முகாமைத்துவ அறிக்கையின் 208 ஆம் பக்கத்திலிருந்து 236 வரையான பக்கங்களிலும், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கையின் 199 முதல் 201 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள

சபை கணக்காய்வு குழுவினூடாக வங்கியானது வினைத்திறனான மற்றும் விரிவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை அமுல்படுத்தி மற்றும் நடைமுறைப்படுத்தியுள்ளது. வங்கி எதிர் கொள்ளக் கூடிய இடர்களைக் குறைத்தல், முக்கிய தவறுக் கூற்றுக்கள் அல்லது இழப்புகளுக்கு எதிராக நியாயமான உத்தரவாதங்களை வழங்குதல் என்பவற்றுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மீள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சபை கணக்காய்வு குழு அறிக்கை 199 முதல் 201 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிக்கான வங்கிச் சட்ட நியமம் 2007 ஆம் ஆண்டு இல. 12 இல. 3 (8) (ii) (b) பணிப்புக்கள் என்பவற்றின் கீழ் வங்கியானது உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் ஒரு கூற்றினை வெளியிட்டுள்ளது. இது அறிக்கையில் 410 ஆம் பக்கத்திலுள்ளது. சபையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் நிதிக்கூற்றுக்களானது வெளியக அறிக்கையிடல் நோக்கத்திற்காக பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கடைய தயாரிக்கபட்டதை உறுதிப்படுத்துகிறது.

கணக்காய்வு தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டினை சபை பெற்றுள்ளது, அறிக்கையின் 248 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நியமனம், அவர்களது ஊதியம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 வது பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதி தேசிய சேமிப்பு வங்கியின் கணக்காய்வாளர் ஆவார்.

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 12 பக்கம் 290 இல் கணக்காய்வு கட்டணம் மற்றும் நிதியாண்டுக்கான ஏனைய சேவைகள் தொடர்பிலான செலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒழுங்குவிப்பு மேற்பார்வை

ஒழுங்குவிப்பு மேற்பார்வை நிறுவனமான மத்திய வங்கி (CBSL) காலத்திற்கு காலம் வங்கியானது மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பரிந்துரைகளுக்கு இணங்கியுள்ளதா என பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது. வங்கியில் அக்கறை கொண்ட தரப்பினரின் அக்கறைகளுக்கு ஏற்ப தேவையான நிதி நியமங்களை தேவையான மட்டங்களில் பேணுகிறதா என்பதை தீர்மானிக்கிறது. குறிப்பாக வைப்பாளர்களை பாதுகாத்தல்.

நிறுவன ஆளுகை

வங்கியினை முகாமை செய்வதில் சிறந்த நிறுவன ஆளுகை மற்றும் நியதிகளை பின்பற்றுவதை பணிப்பாளர்கள் முக்கியப்படுத்தியுள்ளனர். எனவே பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை பரிந்துரைத்துள்ளனர்:

(அ) வங்கி வணிகத்தினை நடாத்துவதில் குறித்த சட்டங்கள் மற்றும் நியதிகளை உடன்பட்டுள்ளது மற்றும் சட்டங்கள் மற்றும் நியதிகளை மீறும் எந்த வித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

(ஆ) வங்கி தொடர்புபட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர் மற்றும் அவர்கள் அக்கறை கொண்ட எந்த விடயத்திலும் ஈடுபடவில்லை.

(இ) வங்கியானது தொடர்ந்து இயங்கும் எண்ணப்பாடு உடையது மற்றும், பணிப்பாளர் சபை தந்திரோபாய வணிக திட்டத்தினை பகுப்பாய்வு செய்துள்ளது மற்றும் எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்திற்கு தே.சே.வ தேவையான வளங்களைக் கொண்டுள்ளது. வங்கி மற்றும் துணைக்கம்பனியின் நிதிக்கூற்றுகள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவில் தயாரிக்கப்பட்டள்ளன.

(ஈ) தொடர்புபட்ட தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

(உ) நிதி, தொழிற்பாடு மற்றும் இணங்குவிப்பு கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய உள்ளக கட்டுப்பாடு தொடர்பான மீளாய்வினை வங்கி செய்துள்ளது மற்றும் அவற்றின் வினைத்திறன் மற்றும் உடன்பாடு தொடர்பில் நியாமான உறுதியினை பெற்றுள்ளது.

நீடித்து நிலைத்திருத்தல்

வணிக தந்திரோபாயங்களை உருவாக்கும் போது வங்கி நீடித்து நிலைத்திருக்கும் விடயங்களை கருத்தில் கொள்கிறது. இவ்விபரங்கள் பூகோளவியல் அறிக்கையிடல் முன்முனைவுகளின் உள்ளடக்கச் சுட்டெண்ணின் கீழ் 456 முதல் 458 வரையான பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மனித வளங்கள்

உயர் தரச் சேவையினூடாக, நிலை பெறத்தக்க பெறுமதியினைத் தோற்றுவிப்பதற்கு அர்ப்பணிப்பு மிக்க மற்றும் உயர் ஊக்கமிகு ஊழியர்களை விருத்தி செய்வதற்கும், பேணுவதற்கும் வங்கி தொடர்ந்தும் செயலாற்றியது. வங்கியின் மனித மூலவளத் தரத்தினை விருத்தி செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மனித மூலதனத்தை மேம்படுத்த வங்கியினால் தழுவப்பட்ட கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் 2022 ஆண்டறிக்கையின் 130 பக்கங்களில் தரப்பட்டுள்ளன.


தொடரும் வழக்குகள்

நிதிக்கூற்றின் குறிப்பு 51, பக்கம் 364 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள், பணிப்பாளளர் மற்றும் வங்கியின் சட்டத்தரணிகளின் கருத்துப்படி, வங்கி நிதி நிலைமை மற்றும் எதிர்கால தொழிற்பாடுகளில் தாக்கத்தை கொண்டதல்ல.

அறிக்கையின் உள்ளடக்கத்தினை ஒத்துக்கொள்ளல்

பணிப்பாளர் சபை இந்த ஆண்டறிக்கையின் உள்ளடக்கத்தை ஒப்புக்கொள்கிறது

சபையின் ஆணைப்படி.



எஸ் ஆர் டபுள்யூ எம் ஆர் பி சத்குமார
தலைவர் (பதில்)



தனுஸ்க விஜயகோன
சபைச் செயலாளர் (பதில்)

4 மே 2023
கொழும்பு

நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் (வங்கி) மற்றும் வங்கியினதும், அதன் துணை நிறுவனங்களின் (தொகுதி) திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்பு இக்கூற்றில் தரப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கள்

அனைத்துக் கொடுக்கல் வாங்கல் கணக்குகளினதும் முறையான பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் நியதிச் சட்ட வேண்டுதலுக்கிணங்க ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் நிலைமையின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்ற, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் என்பவற்றுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான. பொறுப்பு வங்கியின் பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும். 2022 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று, பங்கு மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அவற்றிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

வங்கியினதும், அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்கள், உண்மையானதும் நியாயமானதுமான நோக்கினை பின்வருவன தொடர்பில் தருகின்றன:

1. 2022 டிசெம்பர் 31 இல் வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களின் நிதி நிலைமை மற்றும்
2. 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களின் நிதிச் செயலாற்றுகை.

நிதிக் கூற்றுக்கள் தயாரித்தலில் பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை உறுதி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளனர்:

1. நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வரையமைப்புக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பக்கம் 264 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், தற்போது நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வரையமைப்புகளுக்கு அமைவாக பொருத்தமாகக் காணப்படுகின்றன. இக் கொள்கைகள் முரண்பாடின்றிப் பிரயோகிக்கப்பட்டதுடன் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டுமுள்ளன.
2. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கொடுக்கல் வாங்கல்களின் வடிவம் மற்றும் அவற்றின் போதுமை ஆகியவற்றின் சரியான பிரதிபலிப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற நியாயமானதும், விவேகமிக்கதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3. இயையுடைய அனைத்துப் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்படுகின்றன. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும், 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 7 (i) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க பணிப்பாளர்கள் சபை வங்கியின் அலுவல்கள் மற்றும் தொழிற்பாட்டினைக் கட்டுப்படுத்தி நிருவகிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட மாதிரியுடன் நிதிக் கூற்றுக்கள் இணங்கிச் செல்வதை பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்துகின்றது.

பணிப்பாளர்கள் சபையானது கணக்கீட்டு பதிவுகள் சரியாக பதிவு செய்யப்பட்டு வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான செம்மையுடன் வங்கியின் நிதிக் கூற்றுக்களை எவ்வேளையிலும் தயாரிக்க இயலச் செய்வதனை உறுதி செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இவ்வாண்டறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒருமைப்பாடு மற்றும் குறிக்கோள்களுக்கான பொறுப்புடைமையினையும் பணிப்பாளர் சபை ஏற்றுக் கொள்கின்றது. (254 முதல் 263 வரையுள்ள பக்கங்களில் நிதிக் கூற்றுகள் காட்டப்பட்டுள்ளன.) இவ்வாண்டறிக்கையில், தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், கணக்குப் பதிவேடுகளுடன் முரண்படாத மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அவற்றுக்கான திருத்தங்கள் ஆகியவற்றுடன் இணங்கியுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

பணிப்பாளர்கள் சபை வங்கியினதும் தொகுதியினதும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளையும் கவனத்தையும் எடுத்தல், மோசடிகள் மற்றும் வேறு ஒழுங்கீனங்களைக் கண்டு பிடித்தல் என்பற்றுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் செயற்றிறன் மிக்க மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறுவி மற்றும் உள்ளகக் கணக்காய்வினையும் முற்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் எல்லைகளுக்கமைவாகவே பிரயோகிக்க மற்றும் செயல்படுத்தப்படுகின்றமையையும் உள்ளடக்குகின்ற செயற்றிறனைக் கண்காணிக்கின்ற செயற்றிறன் மிகு முறைமையினை ஏற்படுத்தியுள்ளது. பணிப்பாளர்கள், நிதிக் கூற்றுக்கள், அவர்களது கிரமமான கூட்டங்களில் அவர்களால் நேரடியாகவும், சபைக் கணக்காய்வுக் குழுவினூடாகவும் மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றனர். நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று இவ்வாண்டறிக்கையின் 246 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கை 248 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக வங்கியின் அனைத்துப் பதிவேடுகளும் பணிப்பாளர்கள் சபை மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கச் செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வறிக்கையின் 250 ஆம் பக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்டவாறு காணப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகளை வெளிப்படுத்தியுள்ள மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் ஆய்வு செய்துள்ளது பொருத்தமானதென அவரால் கருதப்பட்ட அனைத்துப் பரிசோதனைகளையும் பொறுப்பேற்பதற்கு சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இணங்குவிப்பு அறிக்கை

அரசாங்கத்திற்கும் ஏனைய தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்குமானதும், வங்கி மற்றும் தொகுதியின் தொடர்பிலும் ஊழியர்கள் தொடர்பிலும் வங்கியினால் செலுத்தப்படத்தக்க அனைத்து வரிகள், சுங்கம் மற்றும் விதிப்புகள் அத்துடன் அனைத்து ஏனைய அறியப்பட்ட நியதிச்சட்ட நிலுவைகளையும் பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உறுதி செய்கின்றனர். நிதி நிலைமைக் கூற்று திகதியன்று உள்ளவாறான வங்கியினாலும் தொகுதியினாலும் நிலுவையாகச் செலுத்தப்படத்தக்கதாயுள்ள அதிகார நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன, அல்லது தொடர்புடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், நிதி நிலை, தொழிற்பாட்டு நிலைமைகள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட "நிறுவன ஆளுகைக் கோவை" இல் தீர்க்கப்பட வேண்டிய ஏனைய காரணிகள் கருத்திற் கொள்ளப்பட்டன. வங்கி மற்றும் தொகுதி முன்னறிகின்ற எதிர்காலத்திற்குத் தொழிற்பாட்டினைத் தொடர்வதற்காக போதிய வளங்களைக் கொண்டுள்ளன. மற்றும் இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் பிரயோகத்தினை நியாயப்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன், இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்குவதற்கு சபை அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

சபையின் ஆணைப்படி



தனுஸ்க விஜேகோன்
சபைச் செயலாளர் (பதில்)

2022 ஏப்ரல் 27
கொழும்பு

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று

பொறுப்புக்கள்

2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை 3 (8) (ii) (ஆ) இற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2017 இல் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகைக்கான சிறப்பு வழிகாட்டலின் கோட்பாடு (ஈ) 1.5 யை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில், போதிய மற்றும் செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு பேணப்படுவதனை உறுதி செய்வதற்கு பணிப்பாளர்கள் சபை (சபை) பொறுப்புடையதாகும். எனினும், அத்தகைய முறைமையொன்று வங்கியின் தொழில் குறிக்கோள்களை அடைவதற்கான தவறு இடரினை இல்லாதொழிப்பதனை விட ஏற்றுக் கொள்ளத்தக்க இடர் வழிவகைகளினுள் வங்கியின் முக்கிய இடர் பகுதிகளை முகாமை செய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை, முகாமைத்துவத்தின் மற்றும் நிதித் தகவல்களின், அத்துடன் பதிவேடுகளுக்கு எதிரான அல்லது நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடிகளுக்கெதிரான முக்கிய புறழ் கூற்றுக்களுக்கு எதிரான தீர்க்கமான உத்தரவாதத்தையன்றி நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கக் கூடியதாகவுள்ளது.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட முக்கிய இடர்களை இனங்கண்டு மதிப்பிட்டு முகாமை செய்வதற்காக முன்னெடுக்கப்படும் செயன்முறை ஒன்றை பணிப்பாளர்கள் சபை ஸ்தாபித்துள்ளதுடன், இச் செயன்முறை வியாபாரச் சூழலில் அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளில் அத்துடன் ஏனைய வழிகாட்டல்களில் மாற்றங்கள் ஏற்படும் போது அல்லது வேண்டப்படும் போது நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையினை மேம்படுத்துவதனை உள்ளடக்குகின்றது. இச் செயன்முறைகள் சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்றின் மீது வங்கி பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடன் இணங்குகின்றமை உறுதி செய்யப்படுகின்றது. இவ் வழிகாட்டலில் வழங்கப்பட்டவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் கொள்கைகளுக்கமைய சபையானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீடு செய்தது.

நிதி அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு தற்போது செயற்பாட்டிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை செயற்றிறன் மிக்கது, மற்றும் போதுமானது எனவும், அத்துடன் புற நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் இயைபுடைய கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளது எனவும் சபை கருதுகின்றது.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட இடர்களை இனங்கண்டு மதிப்பிடுவதனூடாக இடர் மற்றும் கட்டுப்பாடு என்பவை மீது சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் அமுலாக்குவதிலும் இவ்விடர்களைத் தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல் தொழிற்படுத்தலிலும், கண்காணித்தலிலும் முகாமைத்துவம் சபைக்கு உதவுகின்றது.

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு வடிவமைப்பு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை பிரயோகித்தல் மற்றும் மீளாய்வு செய்தலின் போது தழுவிக்கொள்ளப்பட்ட செயன்முறையின் சிறப்பம்சங்கள்

காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை மீளாய்வு செய்கின்ற முறைமையினை சபை செயற்படுத்தியுள்ளது. ஏனையவற்றுக்கிடையிலான முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வங்கித் தொழிற்பாடுகளின் செயற்றிறன் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுவனக் குறிக்கோள்கள், உபாயங்கள் மற்றும் கொள்கைகளும் வணிகப் பணிப்புரைகளுக்கும் இணங்கி வங்கித் தொழிற்பாடுகள் காணப்படுகின்றன என்றும் உறுதி செய்வதில் சபைக்கு உதவுவதற்குமான வரையறை செய்யப்பட்ட நோக்கெல்லைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் சபை உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.
- சபைக் கணக்காய்வுக் குழுவானது (BAC), வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரிகள் ஆகியோரால் அடையாளங் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொள்வதுடன், அத்தகைய குறைபாடுகளைச் சரி செய்வது தொடர்பில் திருத்த நடைமுறைகளையும் மேற்கொள்கின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி வங்கியின் வெளியகக் கணக்காய்வினை மேற்கொள்கின்றார். பொதுவாக, அரச கணக்காய்வு மேற்பார்வையாளர் சபைக் கணக்காய்வுக் குழுக்கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார்.
- சபைக் கணக்காய்வுக் குழு, கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அதன் தரம் தொடர்பில் குறிப்பிடத்தக்க கவனத்தைச் செலுத்தி உள்ளக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மீளாய்வு செய்கிறது. 2022 ஆம் ஆண்டில் சபை கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இந்த ஆண்டறிக்கையின் 199 ஆம் பக்கத்தில் காணப்படும் சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கிளைகள், பிரிவு மற்றும் ஏனைய அலகுகளின் கணக்காய்வுகளை மேற்கொள்கின்றது. கணக்காய்வு இடைவெளிகள் மதிப்பிடப்பட்ட இடர் மட்டங்களின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்துவதற்காக சபை கணக்காய்வுக் குழுவினால் ஒப்புதலளிக்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுடனான இணக்கத்தையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்றிறன் தன்மைகளையும் உறுதி செய்வதற்கு கணக்காய்வுப் பரிசோதனைகளை நடாத்துவதுடன் ஏதேனும் இணங்கியொழுகாமை தொடர்பில் அதன் காண்புகளை அறிக்கையிடுகின்றது. தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளின் மீதான சுயாதீன மற்றும் பொருண்மை அறிக்கையொன்றினை வழங்கும் பொருட்டு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வுகளின் காண்புகள், சபைக் கணக்காய்வுக் குழுவின் பருவகாலக் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள், குழுக் கூட்டங்களின் குறிப்புகளோடு காலத்துக்குக் காலம் என்ற அடிப்படையில் சபையின் தகவலுக்காகச் சமர்ப்பிக்கப்படும்.
- வங்கியின் இடரினது பிரதான பகுதிகளின் முழுமையான முகாமைத்துவத்தைக் கண்காணிப்பதற்கு சபைக்கு

உதவுவதற்காக சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) சபையினால் நிறுவப்பட்டது. வங்கியின் நடவடிக்கைகள் பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களுக்கிணங்க மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சபையானது சுயாதீன இணங்குவிப்புப் பிரிவொன்றை நிறுவியது. ஏதாவது இணங்குவிப்பற்ற விடயங்கள் தொடர்பில் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவுக்கு காலத்துக்குக் காலம் அறிவிக்கப்படும். இடர் மதிப்பீடு பற்றிய அறிக்கை சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்கப்படும்.

- முகாமைத்துவ மட்டக் குழுக்கள், வங்கியின் நாளாந்த வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய விடயங்களின் செயற்றிறன் வாய்ந்த முகாமை மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்துவற்கு ஏற்புடைய உரித்துடன் இயங்குகின்றன. இம் மதிப்பீடு, வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட செயன்முறையை மட்டும் உள்ளடக்கியுள்ளதுடன், அதன் துணை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளை உள்ளடக்கவில்லை.


வங்கியானது LKASs மற்றும் SLFRSs ஆகியவற்றை உள்ளடக்கிய, புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை 2012 இல் ஏற்றுக் கொண்டது. அத்தகைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமையினால் ஏற்றுக் கொள்ளுகைக்கான புதிய தேவைப்பாடுகள், அறவீடு, பகுப்பாய்வு மற்றும் வெளிப்படுத்துகை ஆகியவற்றுடன் இணங்கிச் செல்லும் செய்முறைகளில் முன்னேற்றகரமான அதிகரிப்பும், தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டன.

முன்னைய ஆண்டுகளுக்கான நிதியறிக்கையிடல் மீதாள உள்ளகக்கட்டுப்பாட்டு முறை பற்றி வெளியக கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கள் ஆண்டின் போது மீளாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்த நடவடிக்ககைகள் மேற்கொள்ளப்பட்டன. 2022 ஆம் ஆண்டிற்கான நிதியறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாட்டு முறை பற்றிய வெளியக கணக்காய்வாளர்களின் கருத்துக்கள் எதிர்வரும் காலத்தில் கவனத்தில் எடுக்கப்படும்.

உறுதிப்படுத்தல்

மேற்குறித்த செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு சபை வெளியக நோக்கங்களுக்காக நிதி அறிக்கையிடல் நம்பகத் தன்மை மற்றும் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பில் நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கும் பொருட்டு வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதி செய்கின்றது.


சபையின் ஆணைப்படி



எஸ் ஆர் டபுள்யூ எம் ஆர் பி சத்குமார
தலைவர் (பதில்)



துஷ்யந்த பஸ்நாயக
பணிப்பாளர்



ஜூட் நிலுக்ஷன்
பணிப்பாளர்

2023 ஏப்ரல் 27
கொழும்பு.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. } பீஏஎன்/ஏ/என்எஸ்பீ/ஐசி/2022/01

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 15 மே 2023

தலைவர்,
தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர் சபைக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கை

அறிமுகம்

2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு ("கூற்று") மீதான பணிப்பாளர் சபைக் கூற்றுத் தொடர்பான உறுதிப்பாட்டை இவ்வறிக்கை வழங்குவதாக உள்ளது.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2007ன் 12ஆம் இலக்க வங்கிச் சட்ட நெறிப்படுத்தலின் 3 (8) (ii) (ஆ) பிரிவிற்கிணங்க விதியோகிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுக்கு உரித்தான பணிப்பாளர்களின் கூற்று மீதான வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்களுக்கிணங்க கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமரப்பித்தல் ஆகியவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கைத் தரநியமத்துடனான 3050 (திருத்தப்பட்டது) உடன் எனது பொறுப்புக்களும் இணங்குவித்தலும்.

கூற்றானது பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட இரு ஆவணம் மூலமும் துணையளிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டின் வடிவம் மற்றும் செயல்திறன் வாய்ந்த தன்மை என்பவற்றை மீளாய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயன்முறையினை பொருத்தமானவாறு பிரதிபலிக்கின்றதா என்பதனையும் மதிப்பிடுவதே எனது பொறுப்பாகும்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று மீது வங்கிகளுக்கான உத்தரவாத ஈடுபாடுகள் 3050 (திருத்தப்பட்டது) மீதான இலங்கை தரநியமத்திற்கிசைவாக இவ் ஈடுபாட்டினை நான் மேற்கொண்டுள்ளேன். இந்நியமமானது உள்ளகக் கட்டுப்பாடு மீதான கூற்றினை அனைத்து முக்கியத்துவமிக்க நோக்குகளிலும் தயாரித்துள்ளதா என்பது பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதத்தினை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகளை நான் திட்டமிட்டு செயலாற்றுவதை தேவைப்படுத்துகின்றது.

இவ் ஈடுபாட்டின் நோக்கத்திற்காக இற்றைப்படுத்துவதற்கான அல்லது எவையேனும் அறிக்கைகளை மீள வழங்குவதற்கான பொறுப்பு எனக்கில்லை அன்றியும் இவ் ஈடுபாட்டு நடவடிக்கையில் நான் நிதியியல் தகவல் பற்றி செயலாற்றவோ அத்துடன் கணக்காய்வு செய்யவோ அல்லது மீளாய்வு செய்யவோ இல்லை.

செயலாற்றப்பட்ட பணி பற்றிய தொகுப்பு

கூற்றானது பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணத்தின் மூலம் துணையளிக்கப்பட்டிருந்ததா அத்துடன் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாட்டு முறையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயன்முறையினை பொருத்தமானவாறு பிரதிபலித்திருந்ததா என்பது பற்றி மதிப்பிடுவதற்கான எனது ஈடுபாட்டினை நான் மேற்கொண்டேன்.

செயலாற்றப்பட்ட நடைமுறைகளானவை முதன்மையாக வங்கியின் ஆளணியினை மற்றும் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயன்முறைக்கு துணையளித்தவற்றின் மாதிரி அடிப்படையில் ஏற்கனவேயுள்ள ஆவணம் பற்றி வினவுதல் என்பவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கை தரநியமமானது 3050 (திருத்தப்பட்ட), அறிக்கை, அனைத்து இடர்நேர்வுகளையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது என்பதனை பரிசீலிக்கவோ அல்லது வங்கியின் இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் செயல்திறன் மீதான அபிப்பிராயமொன்றினை ஏற்படுத்தவோ என்னை தேவைப்படுத்தவில்லை. உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கைத் தரநியமமானது 3050 (திருத்தப்பட்ட) ஆண்டறிக்கையில், வெளிப்படுத்தப்பட்ட எவையேனும் முக்கிய பிரச்சினைகள் பற்றிய முக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு நோக்குகளைக் கையாளுவதற்கு விவரிக்கப்பட்டுள்ள செயன்முறைகள் உண்மையில் பிரச்சினைகளுக்கான பரிகாரமாக அமையுமா என்பதனை பரிசீலிப்பதற்கும் என்னை தேவைப்படுத்தவில்லை.

தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகளானவை வங்கியின் தன்மை பற்றிய கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலான நிகழ்வு அல்லது கொடுக்கல் வாங்கல் பற்றிய எனது புரிந்துணர்வு கொண்ட எனது தீர்ப்பினை சார்ந்தவையாகும்.

நான் பெற்றுக்கொண்ட சான்றுகள், எனது முடிவுரைக்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

எனது முடிவுரை

மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டின் அடிப்படையில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கூற்று வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் திட்டமிடல் மற்றும் செயற்திறன் தொடர்பான மீளாய்வின்போது பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயற்பாடு தொடர்பாக எனது அறிவு முரண்படுவதை ஏற்றுக் கொள்ளுவதற்கான காரணங்கள் எதுவும் எனது கவனத்திற்குட்படவில்லை

டபுள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி நிறுவன திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று

2022 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் (தொகுதி) ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள்
- 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம்
- 1955 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்
- திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மாதிரி மற்றும் தகவல் வெளிப்படுத்தலுடன் தொடர்புடைய வழிகாட்டல்கள்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRSs/LKASs)
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை

நிதிக் கூற்றுக்கள் மற்றும் வெளிப்படுத்தல்களைத் தயாரிக்கையில் பயன்படுத்திய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியினால் விதந்துரைக்கப்பட்ட வடிவங்களுடன் இணங்கியிருந்தது. இவை கணக்கீட்டு நியமம் – (LKAS1), "நிதிக் கூற்றுக்களை எடுத்துரைத்தல்" இனது வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடனும் இணங்கியிருந்தது. குழு காலாண்டு அடிப்படையில் அதன் பாவனையாளர்களுக்கு நிதியியல் பெறுபேறுகளை எடுத்துரைக்கின்றது.

நிதிநிலைக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வங்கி மற்றும் குழுவினால் சரியாகவும் மற்றும் நிலையாகவும் பிரயோகிக்கப்பட்டன. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் உயர் நிலைத் தீர்மானங்கள் மற்றும் சிக்கல்களில் ஈடுபடுத்திய மதிப்பீடுகளும் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் சபை கணக்காய்வுக் குழுவுடன் கலந்துரையாடப்பட்டன.

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கை வெளியீடு தொடக்கம் கணக்கீட்டுக் கொள்கைகளில் மற்றும் கணிப்பீட்டு முறைகளில் மாற்றங்கள் ஏதும் காணப்படவில்லை. அதற்கமைய, தற்போதைய எடுத்துரைத்தலுடன் இணங்கும் விதத்தில் ஒப்பீட்டுத் தகவல்கள் திருத்தப்படவில்லை.

இவ்வாண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய நிதித் தகவல்கள் மீளாய்வுக்குட்பட்ட காலத்தின் போது வங்கி மற்றும் தொகுதியினது சொத்துக்கள், பொறுப்புக்கள் நிதி நிலைமைகள், தொழிற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல்களின் பெறுபேறுகள் தொடர்பில் அனைத்து முக்கிய விடயங்களையும் நியாயமாக எடுத்துரைக்கின்றது என நாம் எமது அறிவுக்கு எட்டிய வரையில் உறுதி செய்கின்றோம். தொகுதி தொடர்ச்சியான தொழிற்பாட்டுக்கு போதிய வளங்களைக் கொண்டுள்ளது என்றும் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் தொடர்ந்தியங்கும் எண்ணக் கரு பிரயோகிக்கப்பட்டது என்றும் நாம் உறுதி செய்கின்றோம்.

உள்ளக கட்டுப்பாடு மற்றும் செயல்முறைகளின் பொறுப்புக்கள்

(vii) ஊழியர்களுக்கான வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்புகளானவை திட்டச் சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதியினைக் கழித்து வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்புகளின் தற்போதயை பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளன (குறிப்பு 38).

2.1.5 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைத்தல் நாணயம்

தொகுதி தொழிற்படும் அடிப்படை பொருளாதார சூழலின் நாணயமாகவுள்ள இலங்கை ரூபாவில் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் வேறு விதத்தில் குறிப்பிட்டாலன்றி அனைத்து பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு முழுமையாக்கப்பட்டுள்ளன. மீளாய்விற்குட்படுகின்ற ஆண்டின்போது தொகுதியின் எடுத்துரைத்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

2.1.6 நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்

நிதியியல் நிலைமைக் கூற்றில் எடுத்துரைக்கப்-பட்டுள்ள வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளும் பொறுப்புகளும் அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்புபடுகின்ற திரவத்தன்மை மற்றும் முதிர்வு விதங்களை பிரதிபலிப்பதற்கு ஏற்றவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுகளை பாதிக்கின்ற பணவீக்க காரணிகளுக்காக சரிப்படுத்தல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் முதிர்வு விதங்கள் பற்றிய பகுப்பாய்வொன்று 398 மற்றும் 401 ஆம் பங்கங்களில் குறிப்பு இல. 55 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

2.1.7 தொடர்ந்தியங்கம் எண்ணக்கரு

வங்கியானது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனமாக தொடர்ந்தும் இருப்பதற்கான தகைமையினை தொடர்ந்தும் கொண்டிருப்பதாக பணிப்பாளர் சபை/ முகாமைத்துவம் மதிப்பிட்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்தில் தொழில் அலுவல்களை தொடர்ந்து நடாத்தவதற்கான வளங்களைக் கொண்டிருப்பதாக திருப்தியடைகின்றது. மேலும், தொடர்ந்து இயங்கும் நிறுவனமாக தொடர்ந்தும் செயற்படுவதற்கான தொகுதியின் தகைமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகம் எதனையும் ஏற்படுத்தக்கூடிய, உணரக்கூடிய நிச்சயமின்மைகள் எவற்றையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆதலால், தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

2.1.8 உருவகமும் ஒன்றுசேர்தலும்

ஒரே வகையின் ஒவ்வொரு முக்கிய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஒரே வகையற்ற தன்மையினை அல்லது தொழிற்பாடுகளைக் கொண்ட விடயங்கள், 'நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்' மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் - இகநி 1 இனால் அனுமதிக்கப்பட்டவாறு அவை முக்கியமற்றதாக காணப்படவில்லையெனின் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன.

2.1.9 ஒப்பீட்டுத் தகவல்கள்

நடப்பு காலத்தின் நிதியியல் கூற்றுகள் பற்றிய புரிதலினை அதிகரிக்கும் பொருட்டும் காலங்களுக்கிடையிலான ஒப்பீட்டினை அதிகரிப்பதற்கும் அளவுசார், விளக்கம்சார், மற்றும் விவரணம்சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலாக ஒப்பீட்டுத் தகவல்கள், நிதியில் கூற்றுகளில் முந்திய ஆண்டு தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பாக எடுத்துரைப்பதற்கும் நடைமுறை ஆண்டின் எடுத்துரைத்தலுக்கு இணங்கக்கூடியவாறும் ஒப்பீட்டுத் தகவல்கள் அவசியமான இடங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டுத் தகவல்கள் பற்றிய விபரங்கள், 365 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 53 இல் தரப்பட்டுள்ளன.

2.1.10 முழுமையாக்கல்

நிதியியல் கூற்றுகளில் உள்ள தொகைகள், இலங்கை கணக்கீட்டு நியமம் – இகநி 01 "நிதியியல் கூற்றுகளை எடுத்துரைத்தல்" மூலம் அனுமதிக்கப்பட்டவாறு வேறுவகையில் குறித்துக்காட்டப்பட்டவை தவிர கிட்டிய ஆயிரம் ரூபாய்க்கு முழுமையாக்கப்பட்டுள்ளன.

2.1.11 எதிரீடுசெய்தல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடுசெய்வதற்கு சட்டரீதியாக அமுலாக்கத்தக்க உரிமையொன்று காணப்படுகின்ற போது அத்துடன் சமகாலத்தில் தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவுசெய்வதற்கு அல்லது சொத்துகளை தேறல்செய்து பொறுப்புகளை தீர்ப்பனவுசெய்வதற்கு உத்தேசமொன்று காணப்படுகின்றபோது மாத்திரம் நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் எதிரீடுசெய்யப்பட்டு தேறிய தொகை நிதியியல் நிலைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன. கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்கோடல் ஒன்றினால் (சர்வதேச நிதி அறிக்கையிடல் நியம பொருள்கோடல்கள் குழு மற்றும் நியம பொருள்கோடல் குழு மூலம் வழங்கப்பட்ட) வேண்டப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி அத்துடன் வங்கியின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி வருமானம் மற்றும் செலவுகள் என்பன வருமானக்கூற்றில் எதிரீடுசெய்யப்படவில்லை.

2.1.12 முக்கிய கணக்கீட்டு தீர்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுக்களை தயாரித்தலானது கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிப்பதில் தாக்கத்தினை ஏற்படுத்தகின்ற அத்துடன் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற தீர்புகளை, மதிப்பீடுகளை, மற்றும் ஊகங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. உண்மைப் பெறுபேறுகள் இம்மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படையான ஊகங்ககளும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் தாக்கத்தினைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் எதிர்கால காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கை பிரயோகித்தலில் மதிப்பிடுதல், முக்கிய தீர்மானங்கள் மற்றும் ஊகங்கள் என்பனவற்றின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

அ. முக்கிய கணக்கீட்டுத் தீர்புகள்

இந்நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கிய தாக்கங்களைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கையில் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய தகவல்கள், கீழே குறிப்புகள் 2.1.12.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.12.1 நிதியியல் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் வகைப்படுத்தல்

இநிஅநி 9 இற்கு அமைவாக, பின்வரும் மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் நிதியியல் சொத்துகளை வேறுபட்ட வகுப்புகளாக வகைப்படுத்தி அதாவது கடன்தீர் செலவு, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி என்பனவற்றில் அளவிடப்படுவதற்கு, தொகுதியின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் நோக்கெல்லையொன்றினை வழங்குகின்றன.

- 270 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.1.4.1 இல் எடுத்துரைக்கப்பட்டவாறு நிதியியல் சொத்துகளை முகாமைசெய்வதற்கான நிறுவனத்தின் தொழில் மாதிரி.
- 271 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.1.4.2 இல் எடுத்துரைக்கப்பட்டவாறு நிதியியல் சொத்துகளின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகள்.

ஆ. ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மைகள்

முக்கிய சீராக்கங்களை தோற்றுவிக்கின்ற குறிப்பிடத்தக்க இடர்நேர்வொன்றினைக் கொண்டுள்ள ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மைகள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்புகள் 2.1.12.2 தொடக்கம் 2.112.9 வரை உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.12.2 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட நிதிச் சொத்துகளினதும் நிதிப் பொறுப்புகளினதும் சீர்மதிப்புப் பெறுமதியானது தொழிற்படும் சந்தைகளிலிருந்து உருவாக்கப்பட முடியாதவிடத்து, கணித மாதிரிகளின் பயன்பாட்டினை உள்ளடக்குகின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு அவை தீர்மானிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் அனேகமாக அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகளிலிருந்து பெறப்படுவதாயினும், அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகள் கிடைக்காத நிலையில் சீர்மதிப்புப் பெறுமதியைத் தாபிப்பதற்கு தீர்புகள் தேவைப்படுகின்றன.

நிதியியல் சாதனங்களின் விலைமதிப்பீட்டுக்கா பயன்படுத்தப்படும் முறையியல்களும் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையும் 402 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு இல. 56 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

2.1.12.3 நிதியியல் சொத்துகள் மீதான சேதஇழப்பு நட்டங்கள்

நிதியியல் சொத்துகளின் அனைத்து வகைகளுக்கும் இநிஅநி 9 மற்றும் இகநி 39 இரண்டின் கீழும் சேதஇழப்பு நட்டங்களின் அளவீடானது குறிப்பாக, சேதஇழப்பு நட்டங்களை நிர்ணயிக்கின்ற போது தொகை மதிப்பீடு, எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் காலநிகழ்வு மற்றும் பிணைஉறுதிப் பெறுமதிகள் போன்றனவற்றில் தீர்புகளை வேண்டுகின்றது.

அதற்கமைய, வருமானக் கூற்றில் சேதஇழப்பு நட்டமொன்று ஏற்பாடுசெய்யப்பட வேண்டுமா என்பதனை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தொகுதி தனிப்பட்டரீதியாக முக்கியத்துவமிக்க அதன் கடன்களையும் முற்பணங்களையும் மீளாய்வுசெய்கின்றது. குறிப்பாக, சேதஇழப்பு நட்டங்களை நிர்ணயிக்கின்ற போது, தொகை மதிப்பீடு மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் காலநிகழ்வு போன்றனவற்றில் முகாமைத்துவத்தின் தீர்புகள் வேண்டப்படுகின்றன. இம்மதிப்பீடுகள் பல எண்ணிக்கையான காரணிகள் பற்றிய ஊகங்களை அடிப்படையாக கொண்டவை என்பதுடன் இதன் காரணமாக உண்மையான பெறுபேறுகள் வேறுபட்டு, மேற்கொள்ளப்பட்ட சேதஇழப்பு ஒதுக்கீட்டுக்கு எதிர்காலத்தில் மாற்றங்களை விளைவிக்கலாம்.

நிதியியல் சொத்துகளுக்கு ஏற்புடைய தனிப்பட்ட சேதஇழப்பு ஏற்பாடானது சேதஇழப்புக்காக தனிப்பட்ட ரீதியாக மதிப்பீடுசெய்யப்பட்டதுடன் கிடைக்கப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால காசுப் பாய்ச்சல் பற்றிய முகாமைத்துவத்தின் சிறந்த மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டதாகும். இக்காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதில் முகாமைத்தவமானது கடன்பெறுநரொருவரின் நிதியியல் நிலைமை மற்றும் ஏதேனும் துணையளிக்கின்ற பிணைஉறுதியின் நிகர தேறத்தக்க பெறுமதி என்பன பற்றியும் தீர்புகளை மேற்கொள்கின்றது. சேதஇழப்புச் செய்யப்பட்ட ஒவ்வொரு சொத்தும் அதன் மதிப்புகளின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது, அத்துடன் காசுப் பாய்ச்சல்களின் செயலாற்றத்தக்க உபாயமும் மதிப்பீடும் மீளஅறவிடத்தக்கவையாக கருதப்படுகின்றன.

கூட்டான சேதஇழப்பு ஏற்பாடு உருவாக்கப்பட்டவை:

- தனிப்பட்ட ரீதியாக முக்கியமானவையாக கருத்திற்கொள்ளப்படாத ஒரே விதாமான தன்மையிலான கடன் மற்றும் முற்பணங்களைக் கொண்ட தொகுதிகள்; அத்துடன்
- தனிப்பட்ட ரீதியாக முக்கியமாயினும், தனிப்பட்ட ரீதியியல் சேதமிழந்தவையாக அறியப்படாத சொத்துகளின் தொகுதிகள்.

இநிஅநி 9 இற்கு அமைவாக, தொகுதியின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு கணிப்புகளானவை மாறிலி உள்ளீடுகளினதும் அவற்றின் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் தன்மைமைகளினதும் தெரிவு தொடர்பில் ஏதுவாகின்ற பல எண்ணிக்கையான ஊகங்களுடன் கூடிய சிக்கலான மாதிரிகளின் பெறுபேறுகள் ஆகும். கணக்கீட்டு தீர்புகளாகவும் மதிப்பீடுகளாகவும் கருத்திற்கொள்கின்ற எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகளின் அடிப்படைக் கூறுகள் உள்ளடக்குவன:

- கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்படுகின்றதா என்பதனை பண்புரீதியாக மதிப்பிடுவதற்கும் அத்துடன் அவ்வாறு இருக்குமெனில், ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அடிப்படையின் மீது அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளுக்கான ஒதக்கீடுகளுக்குமான தொகுதியின் மூலப்பிரமாணம்;
- நிதியியல் சொத்துகளின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பானது கூட்டான அடிப்படையில் மதிப்பிடப்படுகின்ற போது அவற்றின் பிரிவுபடுத்தல்;
- பல்வேறு புள்ளிவிபரவியல் சூத்திரங்கள் மற்றும் உள்ளீடுகள் தெரிவு என்பவற்றை உள்ளடக்குகின்ற எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரிகளை உருவாக்குதல்;
- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, பணவீக்கம், வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள் மற்றும் தொழிலின்மை போன்ற பேரண்ட பொருளாதார உள்ளீடுகளுக்கும் தவணைதவறுதல் நிகழுந்தன்மை, தவணைதவறுதலில் உள்ள கடன் அளவு மற்றும் தவணைதவறுதல் மூலம் ஏற்படும் நிதியியல் நட்டம் மீதான தாக்கம் என்பவற்றுக்கும் இடையிலான இணைப்புகளை நிர்ணயித்தல்;
- எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகளினுள் பேரண்டப் பொருளாதார உள்ளீடுகளை செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளையும் அவற்றின் நிகழும்தன்மை நிறையேற்றங்களையும் தெரிவுசெய்தல்.

2.1.12.4 ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீள்விலைமதிப்பீடு

வங்கியினதும் தொகுதியினதும் இறையிலி காணி மற்றும் கட்டடங்கள், மீள்விலைமதிப்-பிடப்பட்ட தொகைகளில் பிரதிபலிக்கின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் (இநிஅநி-13) "சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு" இன் நியதிகளின் பிரகாரம், இறையிலி காணியினதும் கட்டடங்களினதும் சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக தொகுதி சுயாதீன தொழில்சார் விலைதிப்பீட்டாளர்களை ஈடுபடுத்தியது.

இறையிலி காணியினதும் கட்டடங்களினதும் சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் முறைகளும் முக்கிய ஊகங்களும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு இல. 2.3 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளன.

2.1.12.5 ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பயன்பாட்டு ஆயுட்காலம்

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் போன்றவற்றை தொகுதி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்கின்றது. இப்பெறுமதிகளினதும் வீதங்களினதும் முறைகளினதும் மதிப்பீட்டில் முகாமைத்துவத் தீர்பு பிரயோகிக்கப்படுகின்றது. ஆதலால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுத்தப்பட்டவையாகும்.

2.1.12.6 நிதியியல் சொத்துகள் அல்லாதவற்றின் சேதஇழப்பு

பிற்போடப்பட்ட வரிச் சொத்து தவிர்ந்த சொத்தொன்றுக்கு தேசஇழப்புக்கான சாத்தியம் உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தொகுதி கணிக்கும். அறிகுறி காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான ஆண்டு தேசஇழப்பு பரிசோதனை தேவைப்படு-மிடத்து, சொத்தில் மீளப்பெறத்தக்க தொகையை தொகுதி மதிப்பிடும். சொத்தொன்றின் கொண்டுசெல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சுமிடத்து, சொத்தானது சேதமிழந்துள்ளதாக கருதப்படுவதுடன், அதன் மீளஅறவிடத்தக்க தொகையில் பதிவுசெய்யப்படும்.

2.1.12.7 பிற்போடப்பட்ட வரிச் சொத்து

பிற்போடப்பட்ட வரி இழப்புகள் பயன்படுத்தக் கூடியதாகவிருக்கின்றமைக்கு எதிராக எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்கின்ற நிகழ்வு காணப்படுகின்றது என்ற ரீதியில், வரி இழப்புகளுடன் தொடர்புபட்டு அத்தகைய வரிச் சொத்துகள் இனங்காணப்பட்டுள்ளன. எதிர்கால வரித் திட்டமிடல் மூலோபாயங்களுடன் சேர்த்து எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபங்கள் நிகழக்கூடிய காலம் மற்றும் மட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, இனங்காணப்படக்கூடிய பிற்போடப்பட்ட வரிச்

சொத்து தொகையினை நிர்ணயிப்பதற்கு தீர்பு தேவைப்படுகின்றது.

2.1.12.8 வரையறைசெய்யப்பட்ட நலக் கடப்பாடுகள்

வரையறைசெய்யப்பட்ட நல திட்டங்களின் கிரயமும் அவற்றின் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதிகளும் கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடுகளை பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடானது கழிவு வீதங்கள், சொத்துகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் என்பன பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்தகின்றது.

பொருத்தமான கழிவு வீதத்தினை நிர்ணயிக்கும்போது, முகாமைத்துவமானது ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சியுள்ள நிறையேற்றப்பட்ட சராசரிக் காலத்தை ஒத்த உயர்தர நிறுவன முறியொன்றின் விளைவை கருத்திற்கொள்கின்றது. சந்தையில் பொருந்துகின்ற உயர்தர நிறுவன முறிகள் காணப்படாதவிடத்து, கால இடர்நேர்வு சீர்செய்யப்பட்ட அரசாங்க முறி விளைவு, கழிவு வீதமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இறப்பு வீதமானது பொதுவாக கிடைக்கத்தக்க இறப்பு வீத அட்டவணைகளை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது. எதிர்கால சம்பள அதிகரிப்புகளும் ஓய்வூதிய அதிகரிப்புகளும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்க வீதங்களையும் வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதத்தையும் அடிப்படையாக கொண்டமைந்துள்ளன.

இத்திட்டங்களின் நீண்டகால தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைக்கு உட்பட்டவையாகும்.

2.1.12.9 ஏற்பாடுகள், கடமைப்பொறுப்புகள் மற்றும் எதிர்பாராச் செலவுகள்

தொகுதியானது சாதாரண தொழில் நடவடிக்கைகளில் அதற்கெதிரான சட்டக் கோரிக்கைகளை பெறுகின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் ஏதேனும் பின்தொடர்கின்ற உரிமைக் கோரிக்கை நேரிடக்கூடியமை தொடர்பில் முகாமைத்துவம் தீர்புகளை மேற்கொள்கின்றது. சட்டக் கோரிக்கைகளை முடிவுறுத்தும் காலம் நிச்சயமற்றதாகவுள்ள-மையினைப் போன்றே பொருளாதார நலன்களின் சாத்தியமான வெளிப்பாய்ச்சல் தொகையும் காணப்படுகின்றது. காலம் குறித்தலும் செலவும் தொடர்புடைய சட்டசீதியான நியாயாதிக்கத்தில் காணப்படும் உரிய செயன்முறையிலேயே இறுதியாக தங்கியிருக்கின்றன.

2.1.12.10 இலங்கை கணக்கீட்டு நியமம் (இநிஅநி 16) – குத்தகைகள்

இந்நியமமானது குத்தகைகளை இனங்காணுதல், அளவிடுதல், எடுத்துரைத்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றுக்கான கோட்பாடுகளை எடுத்துரைக்கின்றது. இதன் குறிக்கோள், குத்தகைபெறுநரும் குத்தகைவழங்குநரும் அக்கொடுக்கல்வாங்கல்களை நம்பகமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விதத்தில் தொடர்புடைய தகவல்களை வழங்குவதனை உறுதிசெய்வதாகும். நிறுவனமொன்றின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றகை மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன மீது குத்தகைகள் கொண்டிருக்கின்ற தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு இந்நிதியியல் கூற்றுகளை பயன்படுத்துவோருக்கு இத்தகவல்கள் அடிப்படையொன்றினை வழங்குகின்றன. இந்நியமமானது பின்வரும் நியமங்களையும் பொருள்கோடல்களையும் மாற்றீடு செய்கின்றது.

(அ) இகநி 17 குத்தகைகள்

(ஆ) சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் பொருள்கோடல் குழு 4 ஏற்பாடொன்று குத்தகையொன்றினைக் உள்ளடக்குகின்றதா என்பதை தீர்மானித்தல்;

(இ) நிலையியல் பொருள்கோடல் குழு- 15 தொழிற்பாட்டுக் குத்தகைகள் - ஊக்கத்தொகைகள்; அத்துடன்

(ஈ) நிலையியல் பொருள்கோடல் குழு-27 குத்தகையொன்றின் சட்டரீதியான வடிவத்தை ஈடுபடுத்துகின்ற கொடுக்கல்வாங்-கல்களின் அடிப்படையை மதிப்பிடுதல்.

கீழே குறித்துரைக்கப்பட்டவை 2019 சனவரி 1 ஆம் திகதியுடைய ஆரம்ப பிரயோக திகதியில் இருந்து பிரயோகிக்கப்பட்டுவருகின்ற இநிஅநி 16 இன் பின்பற்றலின் மீதான வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளாகும்.

2.1.12.10.1 குத்தகையொன்றை இணங்காணுதல்

விலைஈட்டுக்கான பரிமாற்றத்தில் காலப்பகுதி ஒன்றுக்காக இனங்காணப்பட்ட சொத்தொன்றினை பயன்படுத்துவதனை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒப்பந்தம் வெளிப்படுத்துமாயின் அவ்வொப்பந்தமானது குத்தகையாகும். எனவே, ஒப்பந்தமொன்றின் தொடக்கத்தில் வங்கியானது பின்வரும் விடயங்களை கருத்திற்கொள்வதன் மூலம் ஒப்பந்தமானது குத்தகை ஒன்றா அல்லது குத்தகையினை உள்ளடக்குகின்றதா என்பதை மதிப்பிடுகின்றது.

1. இனங்காணப்பட்ட சொத்து கிடைக்கப்பெறும்தன்மை
2. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான வங்கியின் உரிமை
3. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டில் இருந்து அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமாக பெற்றுக்கொள்வதற்கான வங்கியின் உரிமை
4. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை பணிப்பதற்கான வங்கியின் உரிமை

அதற்கமைய, வங்கியானது இநிஅநி 16: குத்தகைகள் இன் கீழ் குத்தகையினை உள்ளடக்குகின்ற கிளையொன்றினை தொழிற்படுத்துவதற்காக மற்றும் இயந்திரங்களை பயன்படுத்துவதற்காக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வாடகை உடன்படிக்கைகளையும் (குறுகிய கால உடன்படிக்கைகள், 12 மாதங்களுக்கு குறைவான மற்றும் குறைந்த பெறுமதி உடன்படிக்கைகள் தவிர) இனங்காண்கின்றது.

2.1.12.10.2 சொத்துகளை பயன்படுத்து-வதற்கான குத்தகைபெறுநரின் உரிமை

வங்கியானது சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினை குத்தகை திகதியின் தொடக்கத்தில் (அதாவது குத்தகை உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான திகதி) இனங்காணுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையானது ஏதேனும் ஒன்றுதிரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் சேதஇழப்பு நட்டங்களை கழித்து செலவில் அளவிடப்படுவதுடன் குத்தகைப் பொறுப்புகளில் ஏதேனும் மீள்அளவீட்டிற்காக சீர்செய்யப்படுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமைச் செலவானது இனங்காணப்பட்ட குத்தகைப் பொறுப்புகளின் தொகை மற்றும் ஏதேனும் கிடைக்கப்பெற்ற குத்தகை ஊக்குவிப்புக்களை கழித்து தொடக்கத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட குத்தகை கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. குத்தகை தவணைக் காலத்தின் இறுதியில் குத்தகைச் சொத்தின் சொத்தாண்மையை பெற்றுக்கொள்-வதற்கு வங்கி நியாயமானளவில் நிச்சயமில்லாதவிடத்து, இனங்காணப்பட்ட சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை, அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தினையும் குத்தகை தவணையினையும் விட குறைவாக நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையாது சேதஇழப்புக்கு உட்படுவதில்லை.

2.1.12.10.3 குத்தகைப் பொறுப்புகள்

குத்தகை திகதியின் தொடக்கத்தில், வங்கியானது குத்தகை தவணைக் காலத்தின் மீது மேற்கொள்ளப்படவுள்ள குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்ட குத்தகைப் பொறுப்புகளை இனங்காண்கின்றது. குத்தகை கொடுப்பனவுகளானவை கிடைக்கப்பெறத்தக்க ஏதேனும் ஊக்கத்தொகைகளை கழித்து நிலையான கொடுப்பனவுகள் (கட்டாய நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக), சுட்டி அல்லது வீதமொன்றைச் சார்ந்து மாறுபடத்தக்க குத்தகை கொடுப்பனவுகள், மற்றும் எஞ்சியிருக்கின்ற பெறுமதி உத்தவாதங்களின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. குத்தகை நியதியானது குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தெரிவினை வங்கி பிரயோகிப்பதனை பிரதிபலிக்குமாயின், வங்கியினால் பிரயோகிக்கப்படவுள்ள நியாயமாக நிச்சயமான கொடுப்பனவு தெரிவொன்றின் பிரயோக விலை மற்றும் குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தண்டப்பண கொடுப்பனவுகள் என்பவற்றையும் குத்தகை கொடுப்பனவுகள் உள்ளடக்குகின்றன. சுட்டியொன்றை அல்லது வீதமொன்றைச் சார்ந்திருக்காத மாறுபடத்தக்க குத்தகை கொடுப்பனவுகள், கொடுப்பனவு இடம்பெறுதல்களை தூண்டுகின்ற நிகழ்வு அல்லது நிலமைக் காலத்தில் செலவாக இனங்காணப்படுகின்றது. குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியினைக் கணிக்கின்ற போது, குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதம் உடனடியாகநிர்ணயிக்கப்படமுடியாமலிருப்பின் வங்கியானது குத்தகையின் தொடக்க திகதியில் திறைசேரி முறி வீதத்தினை (திறைசேரி முறியின் காலம் குத்தகைக் காலத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும்) பயன்படுத்துகின்றது. தொடக்கத் திகதியின் பின்னர், குத்தகைப் பொறுப்புகளின் தொகையானது வட்டி திரள்வினை பிரதிபலிப்பதற்கு அதிகரிக்கப்படுவதுடன் செலுத்தப்பட்ட குத்தகை

கொடுப்பனவுகளுக்காக குறைக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, குத்தகைப் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகையானது குத்தகை தவணைக் காலத்தில் திருத்தமொன்று, மாற்றமொன்று, கட்டாய நிலையான குத்தகை கொடுப்பனவுகளில் அல்லது ஏதுவாகின்ற சொத்தை கொள்வனவுசெய்வதற்கான மதிப்பீட்டில் மாற்றம் போன்றன காணப்படுமாயின் மீள அளவிடப்படுகின்றது.

2.1.12.10.4 குறுகிய கால குத்தகைகளும் குறைந்த பெறுமதியுடைய சொத்துகளின் குத்தகைகளும்

தொகுதியானது அதன் குறுகிய கால குத்தகைகளுக்கு (அதாவது தொடக்கத் திகதியில் இருந்து 12 மாத அல்லது அதற்கு குறைவான தவணைக் காலத்தை கொண்டிருக்கின்ற அத்துடன் கொள்வனவு தெரிவுவொன்றினை உள்ளடக்காத குத்தகைகளுக்கு குறுகிய கால குத்தகை இனங்காணல் விதிவிலக்கினை பிரயோகிக்கின்றது. குறைந்த பெறுமதியுடையதாக கருதப்படுகின்ற குறைந்த பெறுமதி சொத்துகள் குத்தகை இனங்காணல் விதிவிலக்கினையும் தொகுதி பிரயோகின்றது. குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதி சொத்துகள் மீதான குத்தகை கொடுப்பனவுகள், குத்தகை தவணைக் காலத்தின் மீது நேர் கோட்டு அடிப்படையில் செலவாக இனங்காணப்படுகின்றன. ஏதுவாகின்ற சொத்தின் பெறுமதியானது ரூபா 1 மில்லியனுக்கு குறைவாக அல்லது சமமாக காணப்படுமாயின் வங்கி அதனை குறைந்த பெறுமதியுடைய குத்தகை சொத்துகளாக கருதுகின்றது.

2.1.12.10.5 மீளப்புதுப்பித்தல் தெரிவுகளுடன் கூடிய குத்தகை தவணைக் காலத்தினை நிர்ணயிப்பதில் முக்கியமான தீர்பு

நிறைவேற்றப்படுவதற்கு நியாயமளவில் நிச்சயம் காணப்படுமாயின் அல்லது சாத்தியமாக காணப்படுமெனில், குத்தகையினை நீடிப்பதற்கான தெரிவொன்றினால் உள்ளடக்கப்படும் எவையேனும் காலப்பகுதிகளுடன் அல்லது நிறைவேற்றப்படாமைக்கு நியாயமானளவு நிச்சயம் காணப்படுமாயின் குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தெரிவொன்றினால் உள்ளடக்கப்படும் எவையேனும் காலப்பகுதிகளுடன் ஒன்றுசேர்த்து தவணைக் காலத்தினை இரத்துச்செய்ய முடியாத குத்தகைத் தவணைக் காலமாக தொகுதி நிர்ணயிக்கின்றது. மீளப்புதுப்பிப்பதற்கான தெரிவினை நிறைவேற்றுவதற்கு நியாயமான நிச்சயம் காணப்படுகின்றதா என்பதை மதிப்பிடுவதில் தொகுதி தீர்ப்பினை பிரயோகிக்கின்றது. அதாவது, மீளப் புதுப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அதற்கு பொருளாதார ஊக்கத்தொகை ஒன்றினை தோற்றுவிக்கின்ற அனைத்து தொடர்புடைய காரணிகளையும் அது கருத்திற்கொள்கின்றது. தொடக்கத் திகதியின் பின்னர் மீளப்புதுப்பிப்பதற்கான தெரிவினை நிறைவேற்றுவதற்காக (அல்லது நிறைவேற்றாமைக்கு) தொகுதியின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற அத்துடன் அதன் இயலுமையினை பாதிக்கின்ற முக்கிய நிகழ்வு அல்லது சூழ்நிலைகளில் மாற்றம் காணப்படுமாயின், குத்தகை தவணைக் காலத்தினை அது மீள மதிப்பிடுகின்றது. ஒப்பந்தமானது குத்தகையினை நீடிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான தெரிவுகளை கொண்டிருக்குமிடத்து, குத்தகை தவணைக் காலத்தினை தீர்மானிப்பதில் தொகுதி நடந்த நிகழ்வின் தன்மையினை பயன்படுத்துகின்றது. அதற்கமைய, தொகுதி மற்றும் குத்தகைகொடுனர் மூலம் கைச்சாத்திடப்பட்ட வாடகை ஒப்பந்தங்களினால் உள்ளடக்கப்படும் காலப்பகுதியின் அடிப்படையிலமைந்த வருடங்களின் எண்ணிக்கையாக தொகுதி குத்தகை தவணைக் காலத்தினை இனங்கண்டுள்ளது.

2.1.12.10.6 அளவீடு

தொகுதியானது 2019.01.01 கொண்ட ஆரம்ப பிரயோக திகதியுடன் மாற்றம்செய்யப்பட்ட முன்கூட்டியே பொருந்தக்கூடிய பின்பற்றல் முறையினைப் பயன்படுத்தி இநிஅநி 16 ஐப் பின்பற்றியது. இம்முறையின் கீழ், ஆரம்பத் திகதியில் இனங்காணப்பட்ட நியமத்தினை முதன்முறையாக பிரயோகிப்பதன் ஒன்றுதிண்ட விளைவுடன் முன்கூட்டியே பொருந்தக்கூடிய நியமம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.
மாற்றம்செய்யப்பட்ட முன்கூட்டியே பொருந்தக்கூடிய அணுகுமுறையினைப் பயன்படுத்தி வங்கி, இநிஅநி 16 ஐப் பிரயோகிப்பதனால்,

- முன்னர் அறிக்கையிடப்பட்டவாறான ஒப்பீடுகளை தொகுதி விட்டுவிடுகின்றது.
- மாறுதலடைதயும்போது சொத்திற்கும் பொறுப்பிற்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு, ஆரம்ப பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளில் இனங்காணப்பட்டுள்ளது
- குத்தகையின் தொடக்கத்திலிருந்து இநிஅநி 16 பிரயோகிக்கப்பட்டிருந்தாற்போன்று, சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினை அளவீடுசெய்கின்றது (ஆனால் மாறுதல் திகதியில் கழிவிடல் வீதத்தினை பயன்படுத்தி)

சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினதும் குத்தகைப் பொறுப்பினதும் ஆரம்ப அளவீடு

சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையானது ஆரம்பத்தில் 2019.01.01 அன்று உள்ளவாறு நிலுவையாக ஆக்கப்பட்ட ஏதேனும் முற்பணங்களுக்கு சீர்செய்யப்பட்ட அனைத்து குத்தகை வாடகைகளினதும் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. குத்தகைப் பொறுப்பானது தொடக்கத் திகதியில் எஞ்சியுள்ள குத்தகைக் காலப்பகுதியின் மீது எதிர்கால குத்தகை வாடகைகளின் தற்போதைய பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்பட்டுள்ளன.

சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினதும் குத்தகைப் பொறுப்பினதும் தொடர்ந்துவருகின்ற அளவீடு

தொடக்கத் திகதிக்கு பின்னர் வங்கியானது செலவு மாதிரியொன்றினைப் பிரயோகித்து சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினை அளவிடும். இச்சொத்துக்கள், நேர்-கோட்டு முறையினைப் பயன்படுத்தி 2019.01.01 அன்று உள்ளவாறு நிலுவை குத்தகை தவணைக்கு கடன்தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது. குத்தகை பொறுப்பின் தொடர்ந்து வருகின்ற அளவீடானது குத்தகை வட்டியினை அதிகரிப்பதன் மூலமும் குத்தகை கொடுப்பனவுகளை குறைப்பதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

கழிவு வீதம்

எதிர்கால வாடகைக் கொடுப்பனவுகளை கழிப்பதற்கு குத்தகைபெறுநர் அதிகரித்துச்செல்லும் கடன்பெறுதல் வீதத்தினை பிரயோகிக்க வேண்டும். அதாவது "அதனையொத்த தவணைக் காலத்தின் மீது, அதனையொத்த பிணையுடன், அதனையொத்த பொருளாதாரச் சூழலில் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமைக்கு அதனையொத்த பெறுமதியினைக் கொண்ட சொத்தினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நிதியங்களை கடன்பெறுவதற்கு குத்தகைபெறுநர் செலுத்தவேண்டிய வட்டி வீதம்" ஒரேமாதிரியான குத்தகை காலப்பகுதியுடன்கூடிய குத்தகைகளுக்கு தொகுதி தனியொரு கழிவு வீதமொன்றினை பிரயோகிக்கின்றது.

ஒப்பந்தமொன்றின் கூறுகளை வேறாக்கல்

குத்தகைக் கூறுகளில் இருந்து குத்தகையற்ற கூறுகளை வேறுபடுத்தாத நடைமுறைச் சூழலுக்கேற்றவாறு இசைவான விதத்தில் பிரயோகிப்பதனை தொகுதி தெரிவுசெய்கின்றது என்பதுடன் அதற்கு பதிலாக ஒவ்வொரு குத்தகைக் கூறையும் அத்துடன் எவையேனும் இணையப்பெற்ற குத்தகையல்லா கூறுகளையும் தனியொரு குத்தகை கூறாக கொள்கிறது.

ஆரம்ப நேரடிச் செலவுகள்

தொகுதியானது நடைமுறைச் சூழலுக்கேற்றவாறு ஆரம்ப பிரயோக திகதியன்று சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை அளவீட்டிலிருந்தான ஆரம்ப நேரடிச் செலவுகளை உள்ளடக்குவதில்லை.

2.2 கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள்

2022 ஆண்டின் போது கணக்கீட்டுக்கொள்ளைகளில் முக்கிய மாற்றங்கள் இடம்பெறவில்லை.

2.2 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு

"சீர்மதிப்புப் பெறுமதி" என்பது பிரதான அளவீட்டுத் திகதியில் அல்லது அது கிடைக்காத பட்சத்தில், அத்திகதியில் தொகுதி அணுகுவழியினை கொண்டுள்ள மிகவும் அனுகூலமிக்க சந்தையில், சந்தை பங்கேற்பாளர்களுக்கிடையில் ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல் ஒன்றில் சொத்தொன்றை விற்பனைசெய்வதற்கு கிடைக்கப்பெறக்கூடிய அல்லது பொறுப்பொன்றினை மாற்றல்செய்வதற்கு கொடுப்பனவுசெய்யப்படக்கூடிய விலையாகும். பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது அதன் செயலாற்றமற்ற இடர்நேர்வினை பிரதிபலிக்கின்றது.

தொகுதியானது செயற்பாடுமிக்க சந்தையொன்றில் சாதனமொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியினை அச்சாதனத்திற்காக செயற்பாடுமிக்க சந்தையொன்றில் குறிக்கப்பட்ட விலையினை பயன்படுத்தி அளவிடுகின்றது. முன்னெடுக்கப்படும் அடிப்படையொன்றில் விலையிடல் தகவல்களை வழங்குவதற்கு போதிய நிகழுந்தன்மை மற்றும் அளவு என்பவற்றுடன் சொத்தொன்றிற்கான அல்லது பொறுப்பொன்றிக்கான கொடுக்கல்வாங்கல் இடம்பெறுமாயின் அச்சந்தை செயற்பாடுமிக்க சந்தையாக கருத்தில் கொள்ளப்படுகின்றது.

செயற்பாடுமிக்க சந்தையொன்றில் குறிக்கப்பட்ட விலை எதுவும் காணப்படவில்லையாயின், அப்போது தொகுதியானது தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்துகின்ற அத்துடன் அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டை குறைக்கின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்துகின்றது. தெரிவுசெய்யப்பட்ட

மதிப்பீட்டு நுட்பமானது கொடுக்கல்வாங்கல் ஒன்றினை விலைகுறிப்பதில் சந்தை பங்கேற்பாளர்கள் கருத்தில்கொள்கின்ற அனைத்து காரணிகளையும் உள்ளடக்குகின்றது.

சந்தைப் பங்கேற்பாளர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுவார்களாயின், சொத்தை அல்லது பொறுப்பை விலைகுறிக்கின்ற போது சந்தை பங்கேற்பாளர்கள் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையினை பயன்படுத்துவர் என்ற ஊகங்களைப் பயன்படுத்தி சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவிடப்படுகின்றது.

தொகுதியானது மாற்றம் ஏற்பட்டுள்ள காலப்பகுதியான அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையின் மட்டங்களுக்கிடையிலான மாற்றல்களை இனம்காணுகின்றது.

நிதியல்லாத சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்தின் உச்ச மற்றும் சிறந்த பயன்பாட்டில் அதனை பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தின் உச்ச மற்றும் சிறந்த பயன்பாட்டில் அதனைப் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்காளருக்கு அதனை விற்பனைசெய்வதன் மூலம் பொருளாதார நலன்களை ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளரின் இயலுமையினை கருத்திற்கொள்கின்றது. காணி மற்றும் கட்டடங்கள் போன்ற முக்கிய சொத்துகளின் விலைமதிப்பீட்டிற்காக வெளிவாரி தொழில்சார் விலைமதிப்பீட்டளார்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சீர்மதிப்புப் பெறுமதி தொடர்பான பகுப்பாய்வொன்று 402 தொடக்கம் 407 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 56 இல் தரப்பட்டுள்ளது.

2.4 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் - பொது

2.4.1 திரட்டுதலுக்கான அடிப்படை

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகள், இநிஅநி 10 - "திரட்டிய நிதியியல் கூற்றுகள்" மற்றும் இகநி 27- "திரட்டிய மற்றும் வேறான நிதியியல் கூற்றுகள்" ஆகிய நியதிகளுக்கமைவாக வங்கியினதும் அதன் துணைநிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுகளை உள்ளடக்குகின்றன.

2.4.1.1 தொழில் ஒருங்கிணைப்புகள்

"தொழில் ஒருங்கிணைப்புகள்" (இநிஅநி 03) மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தொகுதிக்கு கட்டுப்படுத்தல் கைமாற்றப்படுகின்ற போது கையகப்படுத்தல் முறைமையினை பயன்படுத்தி தொழில் ஒருங்கிணைப்புகள் கணக்கிற்கொள்ளப்படுகின்றது. கையேற்றலில் விலையீடு கைமாற்றப்பட்டு கையகப்படுத்தப்பட்ட இனங்காணத்தக்க தேறிய சொத்துகள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. தோன்றுகின்ற ஏதேனும் நல்லெண்ணம் சேதஇழப்பிற்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றது. பேரம்பேசுதல் கொள்வனவு மீதான ஏதேனும் இலாபம், இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றது. கொடுக்கல்வாங்கல் செலவுகள் அவை படுகடன் அல்லது பங்குரிமைமூலதனப் பிணையங்களுடன் தொடர்புள்ளதாயின் தவிர ஏற்பட்ட செலவாக்கப்படுகின்றன.

கைமாற்றப்பட்ட விலையீடானது ஏற்கனவே இருந்த தொடர்புகளை தீர்ப்பனவுசெய்தலுடன் தொடர்புடைய தொகைகளை உள்ளடக்குவதில்லை. அத்தகைய தொகைகள் பொதுவாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

ஏதேனும் எதிர்பாரா விலையீடானது கையகப்படுத்தல் திகதியன்று சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. நிதியியல் சாதனம் பற்றிய வரைவிலக்கணத்தை நிறைவுசெய்கின்ற எதிர்பாரா விலையீட்டினை கொடுப்பனவுசெய்வதற்கான கடப்பாடு பங்குரிமைமூலதனமாக வகைப்படுத்தப்படுத்தப்படுமாயின், அது மீள் அளவீடு செய்யப்படுவதில்லை என்பதுடன் தீர்ப்பனவானது பங்குரிமைமூலதனத்தினுள் கணக்கில்கொள்ளப்படுகின்றது. வேறுவிதத்தில், எதிர்பாரா விலையீட்டின் சீர்மதிப்புப் பெறுமதியில் காணப்படும் தொடர்ந்து வருகின்ற மாற்றங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

2.4.1.2 குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள்

குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள் பற்றிய விபரங்கள் 355 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 47 இல் தரப்பட்டுள்ளன.

2.4.1.3 துணைநிறுவனங்கள்

வங்கிக்கு கட்டுப்பாடு மாற்றப்பட்ட திகதியிலிருந்தும் துணைநிறுவனத்தின் நிதியியல் கூற்றுகள் முழுமையாக திரட்டப்பட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு நிறுத்தப்படும் திகதி வரை திரட்டப்படுதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். ஏதேனும் நிறுவனமொன்றின் செயற்பாடுகளிலிருந்து நலன்களைப் பெறுவதற்காக நிதியியல் மற்றும் தொழிற்படுத்தல் கொள்கைகளை ஆளுவதற்கு வங்கிக்கு அதிகாரம் உள்ளவரை கட்டுப்படுத்தல் தொடர்ந்தும் இருக்கும். திரட்டுதல் நோக்கத்திற்கான வங்கியின் துணைநிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்கள் தேசிய சேமிப்பு வங்கியைப் போன்று அதே அறிக்கையிடும் காலத்திற்காக ஒரேமாதிரியான கணக்கீட்டு கொள்கைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

2.4.1.4 கட்டுப்படுத்தலை இழத்தல்

துணைநிறுவனம் ஒன்றினை கட்டுப்படுத்துவதனை தொகுதி இழக்கின்ற போது துணைநிறுவனத்தின் சொத்துகளையும், பொறுப்புகளையும் அது இனங்காணாது என்பதுடன் ஏதேனும் தொடர்புடைய குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள் மற்றும் பங்குரிமையின் வேறு கூறுகள் என்பனவும் இனங்காணப்படாது. விளைகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. முன்னால் துணைநிறுவனத்தின் தக்கவைக்கப்பட்ட ஏதேனும் நலன் கட்டுப்படுத்தல் இழக்கப்படுகின்ற போது சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

2.4.1.5 இணைநிறுவனங்கள்

விபரங்கள் 318 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 25 இல் தரப்பட்டுள்ளன.

2.4.1.6 திரட்டுதலின் மீது இல்லாதொழிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்

குழுக்களுகுள்ளான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து விளைகின்ற அனைத்து குழுக்களுக்குள்ளான மீதிகள், வருமானம் மற்றும் செலவுகள் அத்துடன் தேறாத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன திரட்டிய நிதியியல் கூற்றுகள் தயாரிக்கின்ற போது முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டன. 359 மற்றும் 360 ஆம் பக்கங்களில் உள்ள முறையே குறிப்பு இல. 49.3 மற்றும் 49.4 - துணைக்கம்பனிகளுடனான கொடுக்கல்வாங்கல் ஐப் பார்க்க.

2.4.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும்

வெளிநாட்டு நாணயத்திலான அனைத்து கொடுக்கல்வாங்கலும் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படுகின்றன.

அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட நாணய சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் அத்திகதியில் ஆளுகின்ற நடு நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவில் மீள் நாணயமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாணய விடயங்களில் தீர்ப்பனவில் ஏற்படும் அல்லது ஆரம்பத்தில் அவை பதிவுசெய்யப்பட்டவற்றிலிருந்து வேறுபட்ட வீதத்தில் நாணய விடயங்களை மாற்றும்போது ஏற்படுகின்ற அனைத்து செலாவணி வேறுபாடுகளும் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவீடு செய்யப்படும் நாணயமல்லாத விடயங்கள், ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட திகதிகளின் நாணயமாற்று வீதத்தினை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நாணயமல்லாத விடயங்கள், சீர்மதிப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலான நாணயமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும்.

வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகின் நிதியியல் நிலைமைக் கூற்றானது, அறிக்கையிடும் திகதியிலான நடு செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்பட்டது. வெளிநாட்டு நாணய வங்கிதொழில் அலகின் கொடுக்கல்வாங்கல்கள், மேற்குறித்த கொள்கைக்கு அமைவாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஏற்பட்ட இலாபங்கள்/நட்டங்கள் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

2.5 முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்- சொத்துகளையும் பொறுப்புகளையும் இனங்காணுதல்

நிதியியல் சாதனங்கள்

2018 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கின்ற ஆண்டறிக்கையிடும் காலப்பகுதிகளுக்காக இநிஅநி 9- 'நிதியியல் சாதனங்கள்' இகநி 39 இனை பதிலீடுசெய்தது. இகநி 39 இற்கமைய, காப்பு கணக்கீட்டினை தொடர்ந்து பிரயோகிப்பதற்கு இநிஅநி 9 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொள்கைத் தெரிவொன்றாக வங்கி தெரிவுசெய்தது.

2.5.1 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப இனங்காணல், வகைப்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்த அளவீடு

2.5.1.1 இனங்காணப்பட்ட திகதி

கடன்கள் மற்றும் முற்பணங்கள், வைப்புகள் மற்றும் பின்நிகழ்வுப் பொறுப்புகள் போன்றவற்றினை தொகுதி அவை உருவாக்கப்பட்ட திகதியில் இனங்காண்கின்றது. வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு நிதியங்கள் மாற்றல்செய்யப்படுகின்ற போது இனங்காணப்படுகின்றன. வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவைகளை வங்கிக்கு நிதியங்கள் மாற்றல்செய்யப்படுகின்ற போது வங்கி இனங்காணகின்றன. அனைத்து ஏனைய நிதியியல் சாதனங்களும் (கிரமமான வழி மூலமான நிதியியல் சொத்துகளின் கொள்வனவு மற்றும் விற்பனைகள் உள்ளடங்கலாக) வர்த்தக திகதியில் அதாவது சாதனத்தின் ஒப்பந்தம்செய்யும் ஏற்பாடுகளின் ஒரு தரப்பினராக தொகுதி ஆகுகின்ற திகதியன்று இனங்காணப்படுகின்றன.

2.5.1.2 நிதியியல் சாதனங்களை இனங்காணலும் ஆரம்ப அளவீடும்

ஆரம்ப இனங்காணலில் நிதியியல் சாதனங்களை வகைப்படுத்தலானது குறிப்புகள் 2.5.1.4.1 மற்றும் 2.5.1.4.2 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டவாறு அவற்றின் ஒப்பந்த நியதிகள் மற்றும் சாதனங்களை முகாமைசெய்வதற்கான தொழில் மாதிரி என்பனவற்றைச் சார்ந்துள்ளது.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் என்ற விடயங்கள் தவிர, நிதியியல் சாதனங்கள் ஆரம்பத்தில் அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் (குறிப்பு 56 இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு) அளவிடப்பட்டு, கொடுக்கல்வாங்கல் செலவுகள் இத்தொகைக்கு சேர்க்கப்பட்டுள்ளன அல்லது இத்தொகையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளன. வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை, கொடுக்கல்-வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் போது நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியானது கொடுக்கல்வாங்கல் விலையிலிருந்து வேறுபடுகின்றபோது, வங்கியும் தொகுதியும் கீழே விவரிக்கப்பட்டவாறு நாள் 1 இலாபம் அல்லது நட்டத்திற்கு கணக்கிடுகின்றன.

2.5.1.3 'நாள் 1' இலாபம் அல்லது நட்டம்

ஒரேமாதிரியான சாதனத்தின் ஏனைய அவதானிக்கத்தக்க நடப்புச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கத்தக்க சந்தைகளிலிருந்தான தரவுகளை மட்டுமே உள்ளடக்குகின்ற மாறிலிகளின் மதிப்பீட்டு நுட்பமொன்றின் அடிப்படையில் அமைந்த சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து கொடுக்கல்வாங்கல் விலை வேறுபடும்போது, தொகுதியானது கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி ('நாள் 1' இலாபம் அல்லது நட்டம்) என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை உடனடியாக இனங்காண்கின்றது. அவதானிக்கப்பட முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதி தீர்மானிக்கப்படுமிடத்தான சந்தர்ப்பங்களில் கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் மாதிரிப் பெறுமதி என்வற்றுக்கிடையிலான வேறுபாடானது உள்ளீடுகள் அவதானிக்கத்தக்கதாயிருக்கும் போது மாத்திரம் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படும் அல்லது அச்சாதனம் இனங்காணப்படாதிருக்கும் போது கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி என்வற்றுக்கிடையிலான வேறுபாடானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. ஒரே மாதிரியாகப் பொருந்தக் கூடிய திட்டங்களின் கீழ் சலுகை வீதங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்த வரையில், ஏற்படக் கூடிய 'நாள் 1 நட்டம்' ஊழியர்களின் எஞ்சியுள்ள சேவைக் காலப்பகுதி அல்லது கடன் திருப்பிச் செலுத்தவேண்டிய காலப்பகுதி ஆகிய இரண்டில் எது குறுகியதோ அதன் மீது பொருந்தக்கூடிய விளைவு வட்டி வீதங்களை பயன்படுத்தி பிற்போடப்பட்டு கடன்கழிப்புச் செய்யப்படுகின்றது.

2.5.1.4 நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

வங்கியானது சொத்துகளையும் சொத்தின் ஒப்பந்த நியதிகளையும் முகாமைசெய்வதற்கான தொழில் மாதிரியின் அடிப்படையிலமைந்த அதன் அனைத்து நிதியியல் சொத்துகளையும் பின்வரும் வகுதிகளில் ஒன்றில் வகைப்படுத்தப்படுகின்றது:

- கடன்தீர் செலவு
- ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி

வங்கியும் தொகுதியும், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள அதன் பெறுதி மற்றும் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலினை குறிப்பு இல. 2.5.1.6 இல் விளக்கியவாறு வகைப்படுத்தி அளவிடுகின்றது. வங்கி, நிதியியல் சாதனங்களை இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கலாம், அவ்வாறு செய்வது, அளவீட்டு அல்லது இனங்காணல் ஒத்திசைவின்மைகளை இல்லாதொழிக்கின்றது அல்லது கணிசமாக குறைக்கின்றது.

2.5.1.4.1 தொழில் மாதிரி மதிப்பீடு

வங்கியினதும் தொகுதியினதும் தொழில் குறிக்கோள்களை அடைவதற்கு நிதியியல் சொத்துகளை அவை எவ்வாறு முகாமைசெய்கின்றன என்பதனை சிறப்பாக பிரதிபலிக்கின்ற விதத்தில் அவற்றின் தொழில் மாதிரியினை அவை நிர்ணயிக்கின்றன.

வங்கியின் தொழில் மாதிரியானது சாதனத்திற்கு சாதனம் என்ற அடிப்படையில் மதிப்பிடப்படுவதில்லை, ஆனால் அது ஒன்றுதிரண்ட சொத்துப்பட்டியலின் உயர் மட்டத்தில் மதிப்பிடப்படுவதுடன் பின்வருவன போன்ற அவதானிக்கத்தக்க காரணிகளின் அடிப்படையிலமைந்தது:

- தொழில் மாதிரியினதும் அத்தொழில் மாதிரியினுள் வைக்கப்பட்ட நிதியில் சொத்துகளினதும் செயலாற்றுகை எவ்வாறு மதிப்பிடப்பட்டு குழுமத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணிக்கு அறிக்கையிடப்படுகின்றது,
- தொழில் மாதிரியின் செலாற்றுகையினைப் (அத்துடன் அத்தொழில் மாதிரியினுள் வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்துகளை) பாதிக்கின்ற இடர்நேர்வுகள், குறிப்பாக, அவ்விடர்நேர்வுகள் முகாமைசெய்யப்படும் விதம்.
- தொழிலின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு ஊதியங்கள் வழங்கப்படுகின்றன (உதாரணமாக, ஊதியமானது முகாமைசெய்யப்படுகின்ற சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையிலா அல்லது சேகரிக்கப்படும் ஒப்பந்த காசுப் பாய்ச்சலின் மீதா என்பது).
- எதிர்பார்க்கப்படும் விற்பனைகள் நிகழும்தன்மை, அளவு மற்றும் கால அளவு என்பவும் வங்கியின் மதிப்பீட்டின் முக்கிய அம்சங்களாக காணப்படுகின்றன.

தொழில் மாதிரி மதிப்பீடானது 'மோசமான சூழ்நிலை' அல்லது 'அழுத்தமான சூழ்நிலை' போன்ற சூழ்நிலைகளை கருத்திற்கொள்ளாது நியாயமாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளை அடிப்படையாக கொண்டவை. ஆரம்ப இனங்காணலின் பின்னர் வங்கியின் அடிப்படையான எதிர்பார்ப்பிலிருந்து வேறுபட்ட வழியில் காசுப் பாய்ச்சல் தேறியிருக்குமாயின், அத்தொழில் மாதிரியில் வைக்கப்பட்ட எஞ்சிய நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலை வங்கி மாற்றுவதில்லை ஆனால் முன்னெடுத்துச் செல்கையில் புதிதாக தோற்றம்பெற்ற அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிதியியல் சொத்துகளை மதிப்பிடுகின்ற போது அத்தகைய தகவல்களை கூட்டிணைக்கும்.

2.5.1.4.2 ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளா என்பது பற்றிய மதிப்பீடு (SPPI பரிசோதனை)

வங்கியின் வகைப்படுத்தல் செயன்முறையில் இரண்டாம் கட்டமாக, வங்கியானது நிதியியல் ஒப்பந்த நியதிகள் தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் பரிசோதனையை நிறைவு செய்கின்றனவா என்பதை இனங்காணுவதற்கு அவற்றை மதிப்பிடுகின்றது.

இப்பரிசோதனை நோக்கத்திற்காக "முதன்மை" என்பது ஆரம்ப இனம்காணலில் நிதியியல் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளதுடன் நிதியியல் சொத்தின் ஆயுட்காலம் (உதாரணமாக, முதன்மை மீள்கொடுப்பனவுகள் அல்லது கட்டுப்பண/கடன்கழிப்பு காணப்படுமாயின்) மீது மாற்றமடையலாம்.

கடன்வழங்கல் ஏற்பாடொன்றினுள் மிகமுக்கிய வட்டிக் கூறுகளாக காணப்படுவது பொதுவாக பணத்தினதும் கொடுகடன் இடர்நேர்வினதும் காலப்பெறுமதிக்கான கைமாறுகளாகும். தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு, வங்கியானது தீர்புகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டுள்ள நாணயம் மற்றும் வட்டி வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலம் போன்ற தொடர்புடைய காரணிகளை கருத்திற்கொள்கின்றது.

இதற்குமாறாக, அடிப்படை கடன்வழங்கல் ஏற்பாடொன்றிற்கு தொடர்பு இல்லாதவையாக காணப்படுகின்ற ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களின் இடர்நேர்வுகளுக்கான அல்லது தளம்பலுக்கான குறைந்தபட்ச கடன் அளவை விட அதிகமாக அறிமுகப்படுத்துகின்ற ஒப்பந்த நியதிகள், செலுத்தவேண்டிய தொகை மீது தனியே முதன்மை மற்றும் வட்டி கொடுப்பனவுகளான ஒப்பந்த காசுப் பாய்ச்சல் இடம்பெற அனுமதிப்-பதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் இலாபம்

அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்து அளவிடுவிப்படப் வேண்டியுள்ளது.

நிதியியல் நிலைமைக் கூற்றில் இனம்காணப்பட்ட வேறுபட்ட நிதியியல் சொத்துகளின் வகைகள் பற்றிய விபரங்களுக்கு கீழே குறிப்பு இலக்கம் 2.5.1.4.3 தொடக்கம் 2.5.1.4.5 வரை பார்க்க.

2.5.1.4.3 கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்தொன்று பின்வரும் இரு நிபந்தனைகளையும் நிறைவுசெய்யமாயின் அது கடன்தீர் செலவில் அளவிடப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ளவையாக நியமிக்கப்படுவதில்லை:

- ஒப்பந்த காசுப்பாய்ச்சலை சேகரிப்பதற்காக சொத்தை வைத்திருப்பதற்கான குறிக்கோளுடைய தொழில் மாதிரியொன்றினுள் சொத்து வைத்திருக்கப்படல்; மற்றும்
- செலுத்தவேண்டிய முதன்மைத் தொகை மீது தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளாக காணப்படுகின்ற காசுப் பாய்ச்சலுக்கு நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறித்துரைத்த திகதியில் இடம்பெறச்செய்தல்.
- கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) காசும் காசுக்கு சமமானவையும்
"காசும் மற்றும் காசுக்கு சமமானவையும்" பற்றிய விபரங்கள் 297 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 16 இல் தரப்பட்டுள்ளன.

(ஆ) மத்திய வங்கிகளுடனான மீதிகள்
"மத்திய வங்கிகளுடனான மீதிகள;" பற்றிய விபரங்கள் 297 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 17 இல் தரப்பட்டுள்ளன.

(இ) வங்கிகளுடனான இருப்புகள்
"வங்கிகளுடனான இருப்புகள்" பற்றிய விபரங்கள் 298 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 18 இல் தரப்பட்டுள்ளன.

(ஈ) கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் சொத்துகள் - கடன்களும் முற்பணங்களும்
"கடன்களும் முற்பணங்களும்" பற்றிய விபரங்கள் 303 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 21 இல் தரப்பட்டுள்ளன.

(உ) கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் சொத்துகள் - படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்
"படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்" பற்றிய விபரங்கள் 311 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 22 இல் தரப்பட்டுள்ளன.

2.5.1.4.4 ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளானவை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் மற்றும் பங்குரிமைமூலதன சாதனங்களை உள்ளடக்குகின்றன.

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் கீழே குறிப்புகள் (அ) மற்றும் (ஆ) இல் தரப்பட்டுள்ளன.

(அ) ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்
தனியே முதன்மைத் தொகையினதும் செலுத்தவேண்டிய முதன்மை தொகை மீதான வட்டியினதும் கொடுப்பனவுகளாக காணப்படுகின்ற சொத்தின் காசுப் பாய்ச்சல்கள் கொடுப்பனவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்கான அத்துடன் நிதியியல் சொத்துகளை விற்பனை செய்வதற்கான குறிக்கோளைக் கொண்ட தொழில் மாதிரியொன்றினுள் படுகடன் சாதனங்கள் வைக்கப்பட்டிருப்பின், அப்படுகடன் சாதனங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

"ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள படுகடன் சாதனங்கள்" பற்றிய விபரங்கள் 313-316 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 23 இல் தரப்பட்டள்ளன.

(ஆ) ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட பங்குரிமைமூலதனச் சாதனங்கள்
ஆரம்ப இனங்காணிலின் மீது, தொகுதியானது உபாய மற்றும் நியதிச்சட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கும் அதன் சில பங்குரிமைமூலதன முதலீடுகளை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் பங்குரிமைமூலதன சாதனங்களாக மாற்ற முடியாதவாறு வகைப்படுத்துவதை தெரிவு செய்கின்றது. "ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குரிமைமூலதனச் சாதனங்கள்"பற்றிய விபரங்கள் 313-316 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 23 இல் தரப்பட்டள்ளன.

2.5.1.4.5 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்

இநிஅநி 09 இன் பிரகாரம், கடன்தீர் செலவில் அல்லது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக வகைப்படுத்தப்பட்டவை தவிர்ந்த அனைத்து நிதியியல் சொத்துகளும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகளானவை, வர்த்தகப்படுத்துவதற்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது முகாமைசெய்யப்படுகின்ற மற்றும் அவற்றின் செயலாற்றுகையானது ஒன்றில் அவை ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அன்றில் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்கோ அத்துடன் நிதியியல் சொத்துகளை விற்பனை செய்வதற்கோ என இரண்டிற்கும் வைக்கப்படாமையினால், சீர்மதிப்புப் பெறுமதி அடிப்படையொன்றில் மதிப்பிடப்படுகின்ற நிதியியல் சொத்துகளையும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் மீது நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகளையும் உள்ளடக்குகின்றது. இவை கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன.

(அ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்
இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகளானவை நிதி நிலமைக் கூற்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்படுகின்றன. சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், "இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீதான தேறிய இலாபம் அல்லது நட்டம்" இல் பதிவுசெய்யப்படுகின்றன. உழைக்கப்பட்ட வட்டியானது விளைவு வட்டி வீதத்தைப் பயன்படுத்தி "வட்டி வருமானம்" இல் ஒன்றுதிரடப்படும் அதேவேளை பங்கிலாப வருமானமானது கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை தாபிக்கப்படுகின்ற போது "ஏனைய தொழிற்பாட்டு வருமானம்" இல் பதிவுசெய்யப்படுகின்றது.

தொகுதியானது அறிக்கையிடும் திகதியின் இறுதியில் உள்ளவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவையாக ஆரம்ப இனம்காணலின் மீது நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

2.5.1.5 நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

இநிஅநி 9 இன் பிரகாரம், தொகுதியானது நிதியியல் பொறுப்புகள், நிதியியல் உத்தரவாதங்கள் மற்றும் கடன் கடமைப்பொறுப்புகள் என்பவற்றை பின்வரும் வகுதிகளில் ஒன்றினுள் வகைப்படுத்தப்படுகின்றது:

- இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் பொறுப்புகளும் மற்றும் பின்வருவனவும் இவ் வகுதியினுள் உள்ளவையும்.
  - வர்த்தகத்திற்காக பிடித்துவைக்கப்பட்டவை அல்லது
  - இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் நியமிக்கப்பட்டவை
- கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் பொறுப்புகள்

நிதியியல் பொறுப்புகளின் தொடர்ந்துவரும் அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கின்றது. நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலுக்கான இகநி 39 இல் ஏற்கனவே உள்ள தேவைப்படுத்தல்களை இநிஅநி 9 பாரியளவில் தக்கவைத்துள்ளது.

2.5.1.5.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் பொறுப்புகள்

தொகுதியானது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவையாக நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

2.5.1.5.2 கடன்தீர் செலவில் நிதியியல் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்படாத தொகுதியினால் வினியோகிக்கப்பட்ட நிதியியல் சாதனங்களானவை 'வங்கிக்கு செலுத்தப்படவேண்டியவை', 'ஏனைய வாடிக்கையாளருக்கு செலுத்தப்படவேண்டியவை' மற்றும் 'படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை' 'ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்பட-வேண்டியவை' அல்லது 'விநியோகிக்கப்பட்ட படுகடன் பிணையங்கள்' என பொருத்தமானவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன, இங்கு ஒப்பந்த உடன்படிக்கையின் நோக்கமானது வைத்திருப்பவருக்கு காசுத் தொகையினை அல்லது வேறு நிதியியல் சொத்தினை ஒப்படைப்பதற்கான கடப்பாட்டினை அல்லது நிலையான காசுத் தொகை ஒன்றின் பரிமாற்றம் அல்லது சொந்த பங்குரிமைமூலதன பங்குகளில் நிலையான எண்ணிக்கை ஒன்றிற்கான வேறு நிதியியல் சொத்து மூலமானவை தவிர கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான கடமைப்பாடு ஒன்றினை தொகுதி கொண்டுள்ள பெறுபேறுகளைத் தோற்றுவிக்கும். சாதனத்தின் ஒப்பந்த நியதிகளின் நோக்கத்திற்கு அமைவாக தொகுதியானது மூலதனச் சாதனங்களை நிதியியல் பொறுப்புகளாக அல்லது பங்குரிமைமூலதன சாதனங்களாக வகைப்படுத்துகின்றது.

ஆரம்ப இனங்காணலின் பின்னர், அத்தகைய நிதியியல் பொறுப்புகள் விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் அதனைத்தொடர்ந்து அளவிடப்பட்டுள்ளன. கடன்தீர் செலவானது கையேற்றலின் ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாக காணப்படுகின்ற ஏதேனும் கட்டணங்கள் அல்லது செலவுகளைக் கருத்திற்கொண்டு கணிக்கப்பட்டுள்ளது.

விளைவு வட்டி வீத கடன்தீர்த்தலானது வருமானக் கூற்றில் 'வட்டிச் செலவுகளில்' உள்ளடக்கப்பட்டுள்ளது. பொறுப்புகள் அடையாளப்படுத்தப்படாமையின் போதும் அதேபோன்று விளைவு வட்டி வீத கடன்தீர்த்தல் செயன்முறை ஊடாகவும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

(அ) வங்கிகளுக்குச் செலுத்தப்படவேண்டியவை
'வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை' பற்றிய விபரங்கள் 333 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 32 இல் தரப்பட்டுள்ளன.

(ஆ) வைப்பாளர்களுக்குச் செலுத்தப்படவேண்டியவை
'வைப்பாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை' பற்றிய விபரங்கள் 334 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

(இ) படுகடன் பிணையங்கள் வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை
'படுகடன் பிணையங்கள் வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை' பற்றிய விபரங்கள் 334 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

(ஈ) ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை
'ஏனைய கடன் பெறுநர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை' பற்றிய விபரங்கள் 334 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

(உ) வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்
'வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்' பற்றிய விபரங்கள் 336 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 37 இல் தரப்பட்டுள்ளன.

2.5.1.6 பெறுதிச் சொத்துகளும் பொறுப்புகளும்

பெறுதிச் சொத்துகளும் பொறுப்புகளும், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுதிகளாகவும் இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் பெறுதிகளாகவும் பரந்த அளவில் வகைப்படுத்தப்படுகின்றன.

2.5.1.6.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுதி

பெறுதி என்பது பின்வரும் அனைத்து 03 பண்புகளுடனும் கூடிய நிதியியல் சாதனம் ஒன்றாகும் அல்லது வேறு ஒப்பந்தமாகும்:

- குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதம், நிதியியல் சாதன விலை, பண்ட விலை, வெளிநாட்டுச் செலாவணி வீதம், விலைச் சுட்டிகள் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கொடுகடன் சுட்டி அல்லது ஏனைய மாறிலிகளில் ஒன்றுக்கான மாற்றத்திற்கு பதிலிறுத்துவதில் அதன் பெறுமதி மாற்றமடைகின்றது, ஆயினும், நிதியல்லாத மாறிலியொன்றின் விடயத்தில் ஒப்பந்தத்திற்கான தரப்பினருக்கு இது பிரத்தியேகமானதாக (அதாவது "ஏதுவாகின்கின்ற") காணப்படுவதில்லை.
- இது ஆரம்ப தேறிய முதலீட்டினையோ அல்லது சந்தைக் காரணிகளின் மாற்றங்களுக்கு ஒரே மாதிரியான பதிலிறுத்தலினை கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வேறு வகையான ஒப்பந்தத்திற்கு தேவைப்படுத்தக்கூடியதனை விட சிறிய ஆரம்ப தேறிய முதலீடொன்றினை தேவைப்படுத்தாது.
- இது எதிர்காலத் திகதியொன்றில் தீர்ப்பனவுசெய்யப்படுகின்றது.

வங்கியானது பல்வேறு இணைத்தரப்பினர்களுடன் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றது. இவை, வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள், கொடுகடன் தவணைதவறுதல் பரஸ்பரபரிமாற்றல்கள், குறுக்கு நாணய பரஸ்பரபரிமாற்றல் ஒப்பந்தங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. பெறுதிகள், சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்டு அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி சாதகமாகவுள்ள போது சொத்துகளாகவும் அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி எதிர்மறையாக உள்ள போது பொறுப்புகளாவும் கொண்டுசெல்லப்படுகின்றன. அத்தகைய பெறுதிகளின் உத்தேச தொகையும் சீர்மதிப்புப் தொகையும் குறிப்பு 19 இல் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன. காப்பு கணக்கீடு பிரயோகிக்கப்படாதவிடத்து, பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், தேறிய வர்த்தக வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றன. காப்பு கணக்கீடு வெளிப்படுத்தல்கள், 298-299 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 19 இல் தரப்பட்டுள்ளன.

2.5.1.6.2 இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காகவும் காப்பு கணக்கீட்டுக்காவும் வைத்திருக்கப்படும் பெறுதி

இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கும் பெறுதிகளானவை, வர்த்தகப்படுத்தல் சொத்துகள் மற்றும் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படாத அனைத்து பெறுதி சொத்துகளை மற்றும் பொறுப்புகளை உள்ளடக்குகின்றன. இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைக்கப்பட்ட பெறுதிகள் நிதி நிலைமைக் கூற்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

2.5.1.6.2.1 சீர்மதிப்புப் பெறுமதிக் காப்புகள்

இனங்காணப்பட்ட சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் அல்லது இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிக்கக்கூடியதான நிறுவனத்தின் கடமைபொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியின் மாற்றத்தின் காப்பொன்றில் காப்பிடுகின்ற சாதனமாக பெறுதியொன்று நியமிக்கப்படுகின்ற போது, பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், காப்பிடப்பட்ட இடர்நேர்விற்கு சாட்டத்தக்கதாகவுள்ள காப்பிடப்பட்ட விடயமாக அதே நிரல் விடயத்தில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றன. காப்பிடப்படுகின்ற பெறுதி காலாவதியடையுமெனில் அல்லது விற்பனை செய்யப்படுமாயின், முடிவுறுத்த அல்லது பிரயோகிக்கப்படுமாயின், அல்லது பெறுதியானது சீர்மதிப்புப் பெறுமதி காப்புக் கணக்கீட்டிற்கான மூலப்பிரமாணத்தினை இனிமேலும் நிறைவு செய்யாதிருக்குமாயின், அல்லது காப்பு நியமனம் இரத்துச் செய்யப்படுமாயின், காப்புக் கணக்கீடானது எதிர்பார்ப்புடன் தொடர்ச்சியாக கொண்டுசெல்லப்படாது. எனினும், பெறுதியினை மாற்றீடுசெய்வதற்கு அவசியமானவை தவிர, அதன் நியதிகளில் மாற்றமின்றி சட்டங்களின் அல்லது ஒழுங்குவிதிகளின் விளைபயனாக இரண்டு தரப்பினர்களாலும் மத்திய இணை தரப்பினர் ஒருவருக்கு மாற்றிடப்படுமாயின், அப்போது பெறுதியானது காலாவதியடைந்ததாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படாது.

விளைவு வட்டி வீத முறை பயன்படுத்தப்படும் காப்பிடப்பட்ட வகையொன்றிற்கான தொடர் செயற்பாடு நிறுத்தப்படும் நிலை வரையிலான ஏதேனும் சரிப்படுத்தலானது அதன் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது வகையின் மீள் கணிக்கப்பட்ட விளைவு வட்டி வீத பாகமொன்றாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு பெறுமதி குறைக்கப்படுகின்றது. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு தொகுதி ஏதேனும் சீர்மதிப்பு பெறுமதி காப்பினைக் கொண்டிருக்கவில்லை.

2.5.1.6.2.2 காசுப் பாய்ச்சல் காப்புகள்

இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிக்கக்கூடிய இனங்காணப்பட்ட சொத்துடன் அல்லது பொறுப்புடன் இணையப்பெற்ற குறித்த இடர்நேர்வொன்றிற்கு சாட்டத்தக்க காசுப் பாய்ச்சல்களில் மாறுபடும்தன்மையுடைய காப்பொன்றில் காப்பிடும் சாதனமாக பெறுதியொன்று நியமிக்கப்படுகின்ற போது, பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள

மாற்றங்களில் விளைவுமிக்க பாகமானது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுவதுடன் பங்குரிமைமூலதனத்தினுள் காப்பிடுகின்ற ஒதுக்கில் எடுத்துரைக்கப்படுகின்றது. பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்களின் விளைவற்ற ஏதேனும் பாகமானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றது.

காப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல்கள், இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிப்பதனால் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட தொகையானது அதே காலப்பகுதியின் மீள்வகைப்படுத்தல் சரிப்படுத்தலாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மற்றும் இலாபம் அல்லது நட்டம் அத்துடன் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் அதேமாதிரியான நிரல் வகையிலும் மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

காப்பிடப்படுகின்ற பெறுதி காலாவதியடையுமெனில் அல்லது விற்பனை செய்யப்படுமாயின், முடிவுறுத்த அல்லது பிரயோகிக்கப்படுமாயின், அல்லது பெறுதியானது சீர்மதிப்புப் பெறுமதி காப்புக் கணக்கீட்டிற்கான மூலப்பிரமாணத்தினை இனிமேலும் நிறைவு செய்யாதிருக்குமாயின், அல்லது காப்பு நியமனம் இரத்துச் செய்யப்படுமாயின், காப்புக் கணக்கீடானது எதிர்பார்ப்புடன் தொடர்ச்சியாக கொண்டு செல்லப்படாது. எனினும், பெறுதியினை மாற்றீடுசெய்வதற்கு அவசியமானவை தவிர அதன் நியதிகளில் மாற்றமின்றி சட்டங்களின் அல்லது ஒழுங்குவிதிகளின் விளைபயனாக இரண்டு தரப்பினர்களாலும் மத்திய இணை தரப்பினர் ஒருவருக்கு மாற்றிடப்படுமாயின், அப்போது பெறுதியானது காலாவதியடைந்ததாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படாது. தொகுதியானது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு ஏதேனும் காசுப்பய்ச்சல் காப்பினைக் கொண்டிருக்கவில்லை.

2.5.1.6.3 உட்பொதிந்த பெறுதிகள்

உட்பொதிந்த பெறுதி என்பது தனிப் பிரிவு பெறுதியொன்றுக்கு ஒத்த வகையில் ஒன்றிணைந்த சாதனத்தின் காசுப் பாய்ச்சல்களில் சில மாறுபடுகின்ற தாக்கத்துடன்கூடிய பெறுதியற்ற இணைந்த ஒப்பந்தமொன்றினையும் உள்ளடக்குகின்ற கலப்பு சாதனமொன்றின் கூறொன்றாகும். உட்பொதிந்த பெறுதியானது குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதம், நிதியியல் சாதன விலை, பண்ட விலை, வெளிநாட்டுச் செலாவணி வீதம், விலைகள் சுட்டிகள் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கொடுகடன் சுட்டி அல்லது ஏனைய மாறிலிகள் போன்ற ஒன்றிற்கு அமைவாக திருத்தப்படுவதற்கு ஒப்பந்தத்தினால் வேறு வகையில் வேண்டப்படுகின்ற சில அல்லது அனைத்து காசுப் பாய்ச்சல்களையும் ஏற்படுத்துகின்றது, ஆயினும், நிதியல்லாத மாறிலியொன்றின் விடயத்தில் ஒப்பந்தம் ஒன்றிற்கான தரப்பினர் ஒருவருக்கு பிரத்தியேகமானதாக காணப்படுவதில்லை. நிதியியல் சாதனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆனால் அச்சாதனத்தின் சுயாதீனமாக ஒப்பந்தரீதியாக கைமாற்றத்தக்க அல்லது அச்சாதனத்திலிருந்து வேறுபட்ட இணைத்தரப்பினர் ஒருவரை கொண்டுள்ள பெறுதியானது உட்பொதிந்த பெறுதியொன்றல்ல ஆயினும் அது வேறான நிதியியல் சாதனமொன்றாகும்.

இநிஅறி 09 இற்கு அமைவாக வேறொரு ஒப்பந்த ஒழுங்கில் பெறுதிகள் உட்பொதிந்து இருக்கலாம் (இணைந்த ஒப்பந்தம்). தொகுதியானது நிதியியல் பொறுப்புகளில் மற்றும் நிதியல்லாத இணைந்த ஒப்பந்தங்களில் உட்பொதிந்துள்ள பெறுதிகளை அவை பின்வருமாறு இருப்பின் தனியான பெறுதிகளாக கொள்கின்றது:

- இணைந்த ஒப்பந்தமானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் சுயமாகக் கொண்டுசெல்லப்படவில்லை
- உட்பொதிந்த பெறுதியின் நியதிகள் தனியான ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கப்பட்டிருப்பின் அவை பெறுதியொன்று பற்றிய வரைவிலக்கத்தினை நிறைவுசெய்யும் அத்துடன்
- உட்பொதிந்த பெறுதியின் பொருளாதார பண்புகளும் இடர்நேர்வுகளும் இணைந்த ஒப்பந்தத்தின் பொருளாதார பண்புகளுக்கும் இடர்நேர்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பற்றவை.

அறிக்கையிடும் திகதியன்றுள்ளவாறு தொகுதி உட்பொதிந்த பெறுதிகளைக் கொண்டிருக்கவில்லை

2.5.1.7 நிதியியல் சொத்துகளையும் பொறுப்புகளையம் மீள்வகைப்படுத்தல்

இநிஅறி 09 இன் பிரகாரம் தொழில் நடவடிக்கையொன்றினை கையேற்றலை, கையுதிர்த்தலை அல்லது முடிவுறுத்தலை உள்ளடக்கக்கூடிய அத்தகைய நிதியியல் சொத்துகளை முகாமைசெய்வதற்கான அதன் தொழில் மாதிரியின் குறிக்கோளை தொகுதி மாற்றுகின்ற போதான அத்தகைய அரிதான சூழ்நிலைகள் மாத்திரம் தவிர, நிதியியல் சொத்துகளை அவற்றின் ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

இநிஅறி 09 இனால் அத்தகைய மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படாமையினால் நிதியியல் பொறுப்புகள் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

2.5.1.7.1 நிதியியல் சொத்துகளின் மீள்வகைப்படுத்தல் அளவீடு

2.5.1.7.1.1 நிதியியல் சாதனங்களை 'இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி' இல் மீள்வகைப்படுத்தல்

- **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  மீள்வகைப்படுத்தல் திகதி மீதான சீர்மதிப்புப் பெறுமதி புதிய மொத்த கொண்டுசெல்லும் தொகையாக வருகின்றது. விளைவு வட்டி வீதமானது புதிய கொண்டுசெல்லும் தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. சீர்மதிப்புப் பெறுதியில் தொடர்ந்து வரும் மாற்றங்கள் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.
- **கடன்தீர் செலவிற்கு**
  மீள்வகைப்படுத்தல் திகதி மீதான சீர்மதிப்புப் பெறுமதி புதிய கொண்டுசெல்லும் தொகையாக வருகின்றது. விளைவு வட்டி வீதமானது புதிய மொத்த கொண்டுசெல்லும் தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

2.5.1.7.1.2 நிதியியல் சாதனங்களை 'ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி' இல் மீள்வகைப்படுத்தல்

- **இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ள ஒன்றுதிரண்ட மீதி, மீள்வகைப்படுத்தல் திகதியன்று இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றது.
- **கடன்தீர் செலவிற்கு**
  நிதியியல் சொத்து, சீர்மதிப்புப் பெறுமதியில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ள ஒன்றுதிரண்ட மீதி அகற்றப்படுவதுடன், மீள்வகைப்படுத்தல் திகதியன்று சீர்மதிப்புப் பெறுமதியினை சீர்செய்யப் பயன்படுகின்றது. சீர்செய்யப்பட்ட தொகை கடன்தீர் செலவாகின்றது.

ஆரம்ப இனங்காணிலில் நிர்ணயிக்கப்பட்ட விளைவு வட்டி வீதம் மற்றும் மொத்த கொண்டுசெல்லும் தொகை என்பன மீள்வகைப்படுத்திலின் பயனாக சரிசெய்யப்படுவதில்லை.

2.5.1.7.1.3 நிதியியல் சாதனங்களை 'கடன்தீர் செலவு' இல் மீள்வகைப்படுத்தல்

- **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஏதேனும் வேறுபாட்டுடன் சீர்மதிப்புப் பெறுமதிக்கு சொத்து மீளஅளவிடப்படுகின்றது. ஆரம்ப இனங்காணிலில் நிர்ணயிக்கப்பட்ட விளைவு வட்டி வீதமானது மீள்வகைப்படுத்திலின் பயனாக சரிசெய்யப்படுவதில்லை.
- **இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**
  மீள்வகைப்படுத்தல் திகதியன்றுள்ள சீர்மதிப்புப் பெறுமதி புதிய கொண்டுசெல்லும் தொகையாகின்றது. கடன்தீர் செலவு மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி என்பவற்றிக்கிடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

அறிக்கையிடும் திகதிக்கு வங்கியும் தொகுதியும் ஏதேனும் நிதியியல் சாதன மீள்வகைப்படுத்தலை கொண்டிருக்கவில்லை.

2.5.1.8 நிதியியல் சொத்துகளையும் நிதியியல் பொறுப்புகளையும் இனங்காணமை

2.5.1.8.1 நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்துகளிலிருந்து காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகின்றபோது அல்லது நிதியியல் சொத்தின் சொத்தான்மையின் அனைத்து இடர்நேர்வுகளும் கைமாறுகளும் கணிசமாக கைமாற்றப்படுகின்ற அல்லது தொகுதியானது நிதியியல் சொத்தின் ஒன்றில் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும் கைமாற்றாது அன்றில் கணிசமாக தக்கவைக்காது அத்துடன் கட்டுப்பாட்டினை தக்கவைக்காதுள்ள கொடுக்கல்வாங்கலொன்றில் ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை பெற்றுக்கொள்வதற்கான உரிமையினை அது கைமாற்றுகின்ற போது, நிதியியல் சொத்தொன்றினை (அல்லது இயைபானவிடத்து நிதியில் சொத்தொன்றின் பாகமொன்றினை) தொகுதி இனங்காணாது.

நிதியியல் சொத்தொன்று இனங்காணப்படாதபோது, சொத்து கொண்டுசெல்கின்ற தொகைக்கும் (அல்லது இனங்காணப்படாத சொத்தின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கொண்டுசெல்லும் தொகை) மற்றும் கிடைக்கப்பெற்ற விலைஈடுத் தொகை (பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் புதிய சொத்தினை கழித்து மற்றும் ஊகிக்கப்பட்ட புதிய பொறுப்பு உள்ளடங்கலாக) மற்றும் எனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டிருந்த ஏதேனும் ஒன்றுதிரட்டிய இலாபம் அல்லது நட்டம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடானது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

எனினும், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவாறு நியமிக்கப்பட்ட பங்குமூலதன முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒன்றுதிரண்ட இலாபம்/நட்டம், இநிஅநி 09 இற்கு அமைய அத்தகைய பிணையங்களின் இனங்காணாமையின் மீது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுவதில்லை. தொகுதியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்டதாகவுள்ள இனங்காணாமைக்கு தகுதிபெறுகின்ற கைமாற்றல்செய்யப்பட்ட நிதியியல் சொத்துகளில் உள்ள ஏதேனும் நலன் வேறான சொத்தாக அல்லது பொறுப்பாக இனங்காணப்பட்டுள்ளது.

தொகுதி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றது, இதன் ஊடாக இது அதன் நிதியியல் நிலைக்கூற்றின் மீது இனங்காணப்பட்ட சொத்துகளை கைமாற்றல்செய்கின்றது ஆனால் கைமாற்றல்செய்யப்பட்ட சொத்துகளின் அல்லது அவற்றின் பாகமொன்றின் இடர்நேர்வுகள் மற்றும் கைமாறுகள் அனைத்தையுமோ அல்லது கணிசமானவற்றையோ தக்கவைக்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், கைமாற்றல்செய்யப்பட்ட சொத்துகள் இனங்காணப்படாது இருப்பதில்லை.

சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சலினை பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமையினை தொகுதியானது கைமாற்றி அல்லது கடந்துசெல்லல் ஒழுங்கொன்றை மேற்கொண்டு அத்துடன் கணிசமாக சொத்தின் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும் கைமாற்றாது அன்றில் தக்கவைக்காது அன்றில் சொத்தின் கட்டுப்பாட்டினை கைமாற்றல்செய்யாதிருக்கும் போது, சொத்தில் தொகுதியின் தொடர்ச்சியான ஈடுபாடு உள்ளதென்ற ரீதியல் சொத்தானது இனங்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் தொகுதி இனங்காணுகின்றது. கைமாற்றல்செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் தொகுதி தக்கவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

2.5.1.8.2 நிதியியல் பொறுப்புகள்

தொகுதியின் ஒப்பந்தக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்ற போது, இரத்துச்செய்யப்படுகின்ற போது அல்லது காலாவதியடைகின்ற போது நிதியியல் பொறுப்பொன்றினை அது இனங்காணாது.

2.5.1.9 நிதியியல் சொத்துகளினதும் நிதியியல் பொறுப்புகளினதும் திருத்தியமைப்புகள்

2.5.1.9.1 நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்தின் நியதிகள் திருத்தம்செய்யப்படுமாயின், திருத்தம் செய்யப்பட்ட சொத்தின் காசுப் பாய்ச்சல் கணிசமான வேறுபடுகின்றதா என்பதை தொகுதி மதிப்பிடுகின்றது. காசுப் பாய்ச்சல்கள் கணிசமானளவில் வேறுபடுமாயின், அப்போது மூல நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியடைந்துள்ளதாக கருதப்படுகின்றது. இவ்விடயத்தில் மூல நிதியியல் சொத்து இனங்காணப்படுவதில்லை என்பதுடன் புதிய நிதியியல் சொத்தொன்று சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றது.

இநிஅநி 09 இன் பிரகாரம், கடன்தீர் செலவில் கொண்டுசெல்லப்படும் திருத்தியமைக்கப்பட்ட சொத்தின் காசுப் பாய்ச்சல், கணிசமாக வேறுபடாவிடின், திருத்தியமைத்தலானது நிதியியல் சொத்தின் இனங்காணமையினை விளைவிக்காது. இவ்விடயத்தில், தொகுதியானது நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகையினை மீளக்கணிப்பீடு செய்வதுடன், மொத்த கொண்டுசெல்லும் தொகையினை சீர்செய்வதிலிருந்து தோன்றுகின்ற தொகையினை இலாபம் அல்லது நட்டத்தில் திருத்தியமைத்தல் இலாபம் அல்லது நட்டம் ஒன்றாக இனங்காண்கின்றது. கடன்பெறுநரின் நிதியியல் கஷ்டநிலை காரணமாக அத்தகைய திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்படுமாயின், அப்போது இலாபம் அல்லது நட்டம் சேதஇழப்பு நட்டத்துடன் சேர்த்து எடுத்துரைக்கப்படுகின்றது. ஏனைய சந்தர்ப்பங்களில் இது வட்டி வருமானமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

2.5.1.9.2 நிதியியல் பொறுப்புகள்

ஏற்கனவே காணப்படும் நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் அதே கடன் வழங்குனரிடமிருந்து வேறொரு பொறுப்பின் மூலம் மாற்றீடு செய்யப்படுகின்றவிடத்து, அல்லது ஏற்கனவே உள்ள நிதியியல் பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக திருத்தியமைக்கப்படுமிடத்து, அத்தகைய பரிமாற்றம் அல்லது திருத்தியமைத்தல் மூலப் பொறுப்பின் இனங்காணமை ஒன்றாக கொள்ளப்படுவதுடன் புதிய பொறுப்பொன்று இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில், திருத்தியமைக்கப்பட்ட நியதிகளின் அடிப்படையிலமைந்த புதிய நிதியியல் பொறுப்பானது சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றது. முடிவுறுத்தப்பட்ட நிதியியல் பொறுப்பின் கொண்டுசெல்லும் தொகைக்கும் திருத்தியமைக்கப்பட்ட நியதிகளுடனான புதிய நிதியியல் பொறுப்புக்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

2.5.1.10 நிதியியல் சாதனங்களை எதிரீடுசெய்தல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடுசெய்வதற்கு அத்துடன் சொத்துகளை தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவுசெய்வதற்கு உத்தேசமொன்று காணப்படுகின்றதாயின், அல்லது சமகாலத்தில் சொத்துக்களை தேறல்செய்து பொறுப்புகளை தீர்ப்பனவுசெய்வதற்கு, நடைமுறையில் சட்டரீதியாக அமுலாக்கத்தக்க உரிமையொன்று காணப்படுகின்றதாயின், அத்துடன் அப்போது மாத்திரம், நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் எதிரீடுசெய்யப்பட்டு, தேறிய தொகை நிதியியல் நிலைக்கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன.

2.5.1.11 கடன்தீர் செலவும் மொத்த கொண்டுசெல்லும் தொகையும்

நிதியியல் சொத்தொன்றின் அல்லது நிதியியல் பொறுப்பொன்றின் "கடன்தீர் செலவு" என்பது நிதியியல் சொத்து அல்லது நிதியியல் பொறுப்பு ஆரம்ப இனங்காணலில் அளவிடப்பட்டு, முதன்மை மீள்கொடுப்பனவுகளைக் கழித்து, ஆரம்ப தொகைக்கும் முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாட்டின் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி திரண்ட கடன்தீர் தொகையினை கூட்டி அல்லது கழித்து, அத்துடன் நிதியியல் சொத்துகளுக்காக ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டினை சீர்செய்த தொகையாகும்.

'நிதியியல் சொத்தொன்றின் மொத்த கொண்டுசெல்லும் தொகை' என்பது ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டுக்கான சரிப்படுத்தலுக்கு முன்னர் நிதியியல் சொத்தொன்றின் கடன்தீர் செலவாகும்.

2.5.1.12 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை உள்ளடங்கலாக 269 ஆம் மற்றும் 402 ஆம் பக்கங்களில் குறிப்பு இலக்கம் 2.3 மற்றும் 56 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

2.5.2 நிதியியல் சொத்துகளின் சேதஇழப்பு

2.5.2.1 தனிப்பட்ட சேதஇழப்பு மதிப்பீடு

முன்னர் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை அளவொன்றிற்கு மேல் நிதியியல் சொத்துகளுக்காக (அதாவது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவம்மிக்க நிதியியல் சொத்துகள்), சேதஇழப்பு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது என்ற புறநிலைச் சான்று காணப்படுமாயின், இழப்புத் தொகையானது சொத்து கொண்டுசெல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் (ஏற்பட்டிருக்காத எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு நீங்கலாக) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது.

பிணைஉறுதியாக்கப்பட்ட நிதியியல் சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக் கணிப்பானது மீட்புரிமைத்தடை நிகழத்தக்கதோ இல்லையோ என்பதைப் பொருட்படுத்தாது, பிணைஉறுதியினை பெற்றுக்கொண்டு விற்பனை செய்வதற்கான மீட்புரிமைத்தடை செலவுகளை கழிப்பதிலிருந்து தோன்றக்கூடிய காசுப் பாய்ச்சல்களை பிரதிபலிக்கின்றது. தனிப்பட்ட சேதஇழப்பு மதிப்பீடு பற்றிய விபரங்கள் 305 ஆம் பக்கத்தில் குறிப்பு இலக்கம் 21 (ஈ) இல் தரப்பட்டுள்ளன.

2.5.2.2 தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமிக்க மதிப்பீடும் தனிப்பட்ட ரீதியாக சேதம்இழக்காதவையும்

தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமிக்க ஆனால் சேதமிழக்காத கடன்களானவை தோற்றம்பெற்றதிலிருந்து முக்கிய கொடுகடன் சீர்குலைவு காணப்படுகின்றதா என்ற மூலப்பிரமாணத்தின் அடிப்படையில் கட்டம் 1 அல்லது கட்டம் 2 இல் ஏதாவது ஒன்றின் கீழ் சேதஇழப்பிற்காக கூட்டாக மதிப்பிடப்படும்.

முக்கிய கொடுகடன் சீர்குலைவினை நிறுவுகின்ற அதேவேளை வங்கி பின்வரும் மூலப்பிரமாணங்களை பரிசீலனையில்கொள்ளும்:

- சாதனம் புதிதாக தோற்றுவிக்கப்படுமாயின், கணிசமாக வேறுபடக்கூடிய ஏற்கனவே உள்ள நிதியியல் சாதனமொன்றின் வீதங்களில் அல்லது நியதிகளில் காணப்படும் ஏனைய மாற்றங்கள்.
- குறித்த நிதியியல் சாதனமொன்றிற்கான அல்லது அதேமாதிரியான நிதியியல் சாதனத்திற்கான கொடுகடன் இடர்நேர்வு தொடர்பான வெளிவாரிச் சந்தை குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்.

- கடன்பெறுநரின் படுகடன்/பங்குரிமைமூலதன சாதனங்களின் விலையில் காணப்படும் மாற்றங்கள் போன்ற கடன்பெறுநருடன் தொடர்புடைய ஏனைய தகவல்கள்.
- கடன்பெறுநருக்கான உண்மையான/எதிர்பார்க்கப்பட்ட உள்ளக கடன் தரப்படுத்தலில் தரங்குறைப்பு அல்லது கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீட்டிற்கான உள்ளக ரீதியாக பயன்படுத்தப்படும் நடத்தை புள்ளிகளில் குறைவு.
- கடன்பெறுநர் அவரின் கடன்பாட்டினை நிறைவுசெய்வதற்கான இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொழில், நிதியியல் அல்லது பொருளாதார நிலைமையில் தற்போதுள்ள அல்லது எதிர்வுகூறப்படும் பாதகமான மாற்றங்கள்.
- வருவாயில் உண்மையான/எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சி, தொழிற்படுத்தல் இடர்நேர்வில் அதிகரிப்பு, பணியாற்று மூலதனப் பற்றாக்குறை, சொத்து தரத்தில் குறைவு, சொத்து விகிதாசாரத்தில் அதிகரிப்பு, திரவத்தன்மை முகாமைத்துவ பிரச்சினைகள் போன்றவை தொடர்பில் கடன்பெறுநரின் தொழிற்படுத்தல் பெறுபேறுகளின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம்.
- அதே கடன்பெறுநரின் வேறு நிதியியல் சாதனங்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.
- கடன்பெறுநரின் படுகடன் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை விளைவிக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல், பொருளாதார, தொழில்நுட்பவியல் சூழலில் உண்மையாக அல்லது எதிர்பார்க்கப்பட்ட பாதகமான மாற்றம்.

2.5.2.3 எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கோட்பாடுகள் பற்றிய பொதுநோக்கு

2018 சனவரி 1 தொடக்கம், 'நிதியியல் சாதனங்கள்' ஆக இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கடன் பொறுப்புகள் மற்றும் நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்களுடன் சேர்த்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்படாத அனைத்து கடன்களுக்கும் ஏனைய படுகடன் நிதியியல் சொத்துகளுக்கும் வங்கியானது எதிரபார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்காக ஒதுக்கீடொன்றினை பதிவுசெய்துவருகின்றது. பங்குரிமைமூலதன சாதனங்கள் இநிஅநி 9 இன் கீழ் சேதமிழப்பிற்கு உட்படுத்தப்படுவதில்லை.

ஏதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு ஒதுக்கீடானது தோற்றம்பெற்றதிலிருந்து கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் இல்லாதவிடத்து, சொத்தின் ஆயுட்காலத்தின் மீது தோன்றுமென (ஆயுட்காலம் எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பு) எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும், அத்தகைய சந்தர்ப்பங்களில் இழப்பு ஒதுக்கீடானது 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் அடிப்படையிலிருக்கும். கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றுள்ளதா என்பதனை நிர்ணயிப்பதற்கான வங்கியின் கொள்கைகள் 276 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.2.7 இல் எடுத்துரைக்கப்படுகின்றன.

12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு என்பது ஆயுட்கால எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பின் பாகமொன்றாகும் இது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாத காலங்களினுள் சாத்தியமானதாக காணப்படுகின்ற நிதியியல் சாதனமொன்றின் தவணைதவறுதல் நிகழ்வுகளில் இருந்து விளைகின்ற எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை விவரிக்கின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு மற்றும் 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு ஆகிய இரண்டும் ஏதுவாகின்ற நிதியியல் சாதனங்களின் சொத்துப்பட்டியல் தன்மையைச் சார்ந்து ஒன்றில் தனிப்பட்ட அடிப்படையிலோ அன்றில் கூட்டான அடிப்படையிலோ கணிக்கப்படுகின்றன.

நிதியியல் சாதனத்தின் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது நிகழுகின்ற தவணைதவறுதல் இடர்நேர்வில் காணப்படும் மாற்றத்தினை கருத்திற்கொள்வதன் மூலம் நிதியியல் சாதனமொன்றின் கடன் இடர்நேர்வானது ஆரம்ப இனங்காணலில் இருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதா என்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிதியிலும் கணிப்பீடொன்றினை செயலாற்றுவதற்கு தொகுதி கொள்கையொன்றினை நிறுவியுள்ளது.

அத்தகைய செயன்முறையொன்றின் அடிப்படையில் வங்கி அதன் கடன்களை கீழே விவரிக்கப்பட்டவாறு கட்டம் 1, கட்டம் 2, கட்டம் 3 ஆக வகைப்படுத்தியுள்ளது:

கட்டம் 1:

- கடன்கள் முதலாவது இனங்காணப்படுகின்றபோது, வங்கியானது 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் அடிப்படையில் ஒதுக்கீடொன்றினை இனங்காண்கின்றது. கொடுகடன் இடர்நேர்வு மேம்பட்டுள்ள வசதிகளையும் ஆயினும் ஆரம்ப இனங்காணலின் மீது அடிப்படையில் கொடுகடன் சேதமிழக்காதவை, மற்றும் கட்டம் 2 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களையும் கட்டம் 1 உள்ளடக்குகின்றது.

கட்டம் 2:

- கடனொன்று தோற்றம்பெற்றது முதல் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைக் காண்பித்துள்ளபோது, ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான ஒதுக்கீடொன்றினை வங்கி பதிவுசெய்கின்றது. கொடுகடன் இடர்நேர்வு மேம்பட்டுள்ள வசதிகளையும் கட்டம் 3 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களையும் கட்டம் 2 உள்ளடக்குகின்றது.
- வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்த கொடுப்பனவுகளானவை கீழே கட்டம் 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர, 30 நாட்களுக்கு மேற்பட்ட கடந்த கால நிலுவையாக காணப்படுகின்றவிடத்து, கொடுகடன் வசதிகள் இநிஅநி 9 இல் குறிப்பிடப்பட்டவாறு தள்ளுபடிசெய்யத்தக்க அநுமானத்திற்கு உட்படுகின்றது.

கட்டம் 3:

- இநிஅநி 9 இல் குறிப்பிடப்பட்டவாறு தள்ளுபடிசெய்யத்தக்க ஊகத்திற்கு உட்பட்டு வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேல் கடந்த கால நிலுவையாகின்ற கொடுகடன் வசதிகள்.
- இரு தடவைகளுக்கு மேல் மறுசீரமைக்கப்பட்டவையாக காணப்படுகின்ற அனைத்து மறுசீரமைக்கப்பட்ட கடன்களும்.
- அனைத்து மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்களும்.
- இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்-கமைவாக செயலாற்றமற்றதாக வகைப்படுத்தப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகள்/வாடிக்கையாளர்கள்.
- வாடிக்ககையாளரொருவரின் அல்லது சாதனமொன்றின் இடர்நேர்வுத் தரப்படுத்தலானது வெளிவாரி கடன் தரப்படுத்தல் முகவராண்மை ஒன்றினால் B+ ஆக தரங்குறைக்கப்பட்டுள்ளபோது அத்துடன்/அல்லது வங்கிகளின் உள்ளக தரப்படுத்தல் முறைமையில் இரு – படிநிலைகள் தரங்குறைக்கப்பட்டுள்ளபோது.
- கொடுகடன் இடர்நேர்வில் செயலாற்றமற்ற கொடுகடன் வசதிகளின்/வாடிக்கையாளர்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (குறிப்பு இல. 2.5.2.2.7 ஐப் பார்க்க).

செலுத்தவேண்டிய மொத்த தொகையோ அல்லது அதன் ஒரு பாகத்தை மீளஅறவிடுவதற்கு நியாயமான எதிர்பார்க்கைகளை வங்கி கொண்டிராத நிதியியல் சொத்துகளுக்காக, நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகை குறைக்கப்படுகின்றது. இது நிதியியல் சொத்தின் இனங்காணாமை (பகுதியளவிலான) ஒன்றாக கருதப்படுகின்றது.

2.5.2.4 எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கணிப்பீடு

எதிர்பார்க்கப்பட்ட காசுப் பற்றாக்குறைகளை அளவிடுவதற்கு, விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டத்தட்ட சமமாக்கலொன்றில் கழிவுசெய்யப்பட்ட எதிரகார்க்கப்படும் கொடுகடன் இழப்பினை தொகுதி கணிக்கின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்திற்கு அமைவாக நிறுவனமொன்றிற்கு செலுத்தவேண்டிதாகவுள்ள காசுப் பாய்ச்சலுக்கும் பெறுவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்ற காசுப் பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடாகும். எதிரகார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டுப் பொறிமுறை, கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் முக்கிய கூறுகள் பினவருமாறு:

- **தவணைதவறுதல் நிகழும்தன்மை:** தவணைதவறுதல் நிகழும்தன்மை என்பது வழங்கப்பட்ட கால வீச்சொன்றில் தவணைதவறுதல் நிகழக்கூடியமை பற்றிய மதிப்பீடொன்றாகும். கடன்வசதியானது முன்னர் இனங்காணப்பட்டிருக்காது அத்துடன் இன்னும் சொத்துப்பட்டியலில் இருக்குமாயின், மதிப்பிடப்பட்ட காலப்பகுதியில் குறித்த நேரமொன்றில் மாத்திரம் தவணைதவறுதல் நிகழலாம்.
- **தவணைதவறுதலில் கடன் அளவு** தவணைதவறுதலில் கடன் அளவு என்பது ஒப்பந்தத்தினாலோ அல்லது வேறுவகையிலோ அட்டவணைப்படுத்தப்பட்ட முதன்மை மற்றும் வட்டி மீள்கொடுப்பனவுகள், இணங்கிய கடன்வசதிகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கடன் தொகைகள், அத்துடன் தவறிய கொடுப்பனவுகளில் இருந்தான ஒன்றுதிரண்ட வட்டி உள்ளடங்கலாக அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் கடன் அளவில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கருத்திற்கொண்டு எதிர்கால

தவணைதவறுதல் திகதியொன்றில் உள்ள கடன் அளவு பற்றிய மதிப்பீடாகும்.

- **கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை**
  கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை என்பது தரப்பட்ட நேரமொன்றில் தவணைதவறுதலொன்று நிகழுமிடத்து, அதிலிருந்த தோன்றுகின்ற இழப்பு பற்றிய மதிப்பீடொன்றாகும். ஒப்பந்த காசுப் பாய்ச்சல் நிலுவை மற்றும் ஏதேனும் பிணைஉறுதி தேறுகின்றவை உள்ளடங்கலாக கடன்வழங்குநர் பெற்றுக்கொளவதற்கு எதிர்பார்க்கின்றவை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை இது அடிப்படையாக கொண்டது. இது பொதுவாக தவணைதவறுதல் கடன் அளவின் சதவீதமாக கூறப்படும்.

கொடுகடன் இழப்புகள் நிர்ணயிக்கப்படுவதற்கான உயர்ந்தபட்ச காலமானது வங்கி அதனை முன்கூட்டி அழைப்பதற்கான உரிமையினை கொண்டிருக்காதவிடத்து நிதியியல் சாதனமொன்றின் ஒப்பந்த ஆயுட்காலமாகும். சேதஇழப்பு நட்டங்களும் விடுவிப்புகளும் நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் பெறுமதியின் சீராக்கமாக கணக்கிடப்படுகின்ற திருத்தியமைத்தல் நட்டங்கள் அல்லது இலாபங்களிலிருந்து வேறாக கணக்கிடப்பட்டு காண்பிக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு பொறிமுறை முறை கீழே சுருக்கமாக தரப்பட்டள்ளது:

கட்டம் 1:

- 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாதங்களினுள் சாத்தியமானதாகவுள்ள நிதியியல் சாதனமொன்றின் மீதான தவணைதவறுதல் நிகழ்வுகளிலிருந்து விளைகின்ற எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆயுட்கால எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பின் பாகமொன்றாகு கணிக்கப்படுகின்றது. அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் 12 மாத காலங்களில் நிகழுகின்ற தவணைதவறுதல் எதிர்பார்க்கையின் அடிப்படையில் 12 மாத எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பினை தொகுதி கணிப்பிடுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட 12 மாத இத்தவணைதவறுதல் நிகழுந்தன்மை, தவணைதவறுதல் கடன் அளவினை எதிர்வுகூறுவதற்கு பிரயோகிக்கப்படுவதுடன் எதிர்பார்க்கப்பட்ட கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை மூலம் பெருக்கப்பட்டு மூல விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டிய பெறுமதியாக்கல் மூலம் கழிவுசெய்யப்படுக்கின்றது.

கட்டம் 2:

- கடனொன்று அதன் உருவாக்கத்திலிருந்து கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை காண்பித்துள்ளபோது, ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்கான ஒதுக்கீடொன்றினை வங்கி பதிவுசெய்கின்றது. பொறிமுறையானது மேலே விளக்கப்பட்டவற்றை ஒத்ததாகும் ஆனால் தவணைதவறுதல் நிகழுந்தன்மைகள் மற்றும் கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை என்பன சாதனத்தின் ஆயுட்காலத்தின் மீது மதிப்பிடுப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் காசுப் பற்றாக்குறையானது மூல விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டியபெறுமதியாக்கல் மூலம் கழிவுசெய்யப்படுக்கின்றது.

கட்டம் 3:

- கொடுகடன் சேதஇழந்துள்ளதாக கருத்திற்கொள்ளப்படுகின்ற கடன்களுக்காக, வங்கியானது இக்கடன்களுக்கென ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளை இனங்காணுகின்றது. இம்முறையானது 100% இல் நிர்ணயிக்கப்பட்ட தவணைதவறுதல் நிகழுந்தன்மையுடன் கட்டம் 2 சொத்துகளுக்கானதை ஒத்ததாகும்.

2.5.2.5 ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்களுக்கான எதிர்பார்கப்பட்ட கொடுகடன் இழப்புகளானவை சீர்மதிப்புப் பெறுமதியில் காணப்படுகின்ற, நிதியியல் நிலைக் கூற்றில் உள்ள இந்நிதியியல் சொத்தின் கொண்டுசெல்லும் தொகையை குறைப்பதில்லை. இதற்கு பதிலாக, கடன்தீர் செலவில் சொத்துகள் அளவிடப்பட்டிருப்பின் தோற்றம்பெறக்கூடிய ஒதுக்கீட்டுக்குச் சமமான தொகையொன்று இலாபம் அல்லது நட்டத்திற்கான நேரொத்த விதிப்பனவொன்றுடன் திரட்டிய சேதமிழப்புத் தொகையொன்றாக ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒன்றுதிரட்டிய நட்டமானது சொத்துகளின் இனங்காணமையின் மீது, இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு வங்கியும் தொகுதியும் சேதஇழப்பிற்கு உட்படுகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனம் எதனையும் கொண்டிருக்கவில்லலை.

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்களுக்கான எதிர்பார்கப்பட்ட கொடுகடன் இழப்புகளானவை சீர்மதிப்புப் பெறுமதியில் காணப்படுகின்ற, நிதியியல் நிலைக் கூற்றில் உள்ள இந்நிதியியல் சொத்தின் கொண்டுசெல்லும் தொகையை குறைப்பதில்லை. இதற்கு பதிலாக, கடன்தீர் செலவில் சொத்துகள் அளவிடப்பட்டிருப்பின் தோற்றம்பெறக்கூடிய ஒதுக்கீட்டுக்குச் சமமான தொகையொன்று இலாபம் அல்லது நட்டத்திற்கான நேரொத்த விதிப்பனவொன்றுடன் திரட்டிய சேதமிழப்புத் தொகையொன்றாக ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒன்றுதிரட்டிய நட்டமானது சொத்துகளின் இனங்காணமையின் மீது, இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு வங்கியும் தொகுதியும் சேதஇழப்பிற்கு உட்படுகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனம் எதனையும் கொண்டிருக்கவில்லலை.

2.5.2.6 முன்னோக்கி எதிர்பார்க்கும் தகவல்கள்

வங்கியின் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியில், அது பின்வருவம் பொருளாதார உள்ளீடுள் போன்ற முன்னோக்கி எதிர்பார்க்கின்ற தகவல்களின் பரந்த வீச்சொன்றில் தங்கியுள்ளது:

- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி
- தொழிலின்மை வீதங்கள்
- பணவீக்க வீதங்கள்
- செலாவணி வீதங்கள்
- வட்டி வீதங்கள்

ஏதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளை கணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளும் மாதிரிகளும் எப்போதும் நிதியியல் கூற்றுகளின் திகதியன்று சந்தையின் அனைத்து பண்புகளையும் உள்ளடக்காதிருக்கலாம். இதனைப் பிரதிபலிப்பதற்கு அத்தகைய வேறுபாடுகள் குறிப்பிடத்தக்களவு முக்கியமாக காணப்படுகின்றபோது தற்காலிக சீராக்கங்களாக பண்புசார் சீராக்கங்கள் அல்லது முதலீட்டாளர் கணக்குகளை உகப்பாக்குகின்ற முகாமைத்துவ முறைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

2.5.2.7 கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு

சாதனமொன்று அல்லது சாதனங்களைக் கொண்ட சொத்துப்பட்டியலொன்று 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு அல்லது ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு உட்பட்டுள்ளதா என்பதனை நிர்ணயிக்கும் பொருட்டு, எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு உட்படுகின்ற அனைத்து சொத்துகளையும் தொகுதி தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது, ஆரம்ப இனங்காணல் தொடக்கம் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்படுகின்றதா என்பதனை வங்கி கணிப்பிடுகின்றது. வங்கியானது அளவுக்கு மீறிய செலவு அல்லது முயற்சி இன்றி தொடர்புடையதாக மற்றும் கிடைக்கத்தக்காகவுள்ள நியாயமான மற்றும் துணையளிக்கத்தக்க தகவல்களை பரிசீலனையில் கொள்கின்றது. இது, வங்கியின் வரலாற்று அனுபவம் மற்றும் நிபுணத்துவ கொடுகடன் மதிப்பீடு அத்துடன் எதிர்நோக்குகின்ற தகவல்கள் எனபவற்றின் அடிப்படையிலமைந்த அளவுசார் மற்றும் பண்புசார் தகவல் பகுப்பாய்வுகளை உள்ளடக்குகின்றது. அதற்கமைய, பின்வரும் காரணிகளில்/நிபந்தனைகளில் ஒன்று நிறைவுசெய்யப்படுகின்றபோது கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக தொகுதி கருதுகின்றது.

- வசதியின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கு மேல் கடந்தகால நிலுவையாகின்றபோது (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக் குறிகாட்டி)
- தொடர்ச்சியாக முன்னைய இரு ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்பெறும் நிறுவனமொன்றின் புரள்வில் அல்லது வரிக்கு முந்திய இலாபத்தில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட வீழ்ச்சி (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக் குறிகாட்டி)
- முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்பெறும் நிறுவனமொன்றின் சொத்து பெறுமதியில் 25% இற்கு மேல் சிதைவடைதல் (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக் குறிகாட்டி)

- கடன்பெறும் நிறுவனமொன்றின் வெளிவாரிக் கடன் தரப்படுத்தலானது வெளிவாரி கடன்தரப்படுத்தல் முகவராண்மை ஒன்றினால் BB+ ஆக அல்லது அதற்குக் கீழ் அதனைத் தொடர்ந்து தரங்குறைக்கப்பட்டுள்ளது (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக் குறிகாட்டி)(ஆரம்ப கடன்தரப்படுத்தலின் தொடர்ந்துவருகின்ற தரங்குறைத்தலானது (அளிக்கும் நேரத்தில்) கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.
- உள்ளகத் தரப்படுத்தலின் கீழ் இரு படிநிலைகள் தரங்குறைத்தல் (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக் குறிகாட்டி).
- கொடுகடன் வசதியானது தரமுயர்த்தப்பட்ட கொடுகடன் வசதியினை விட 2 தடவைகள் வரை மறுசீரமைக்கப்பட்டிருத்தல்.
- வியாபார தொழிற்பாடுகளின்/கருத்திட்டங்களின் தொடக்கமானது அடிப்படையில் உடன்பட்ட திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேல் தாமதமடைதல் (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்பு அல்லது வாடிக்கையாளரின் இடர்நேர்வைச் சார்ந்திருக்கின்ற தவணைதவறுதல் மூலப்பிரமாணம் ஆகிய இரண்டுமாக இருக்கக்கூடும்).
- பிணைஉறுதியின் பெறுமதி குறிப்பிடத்தக்களவு குறைக்கப்படுதல் (25 சதவீதத்திற்கும் மேல்) அல்லது குறித்த ஆதனமொன்றுக்கான குறிப்பான குறிகாட்டியின் அடிப்படையில் பிணைஉறுதியின் தேறும்தன்மை சந்தேகத்திற்கிடமானதாகவிருத்தல் (ஆதனச் சுட்டி) (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக் குறிகாட்டி).
- பகிரங்கமாக கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் பணிப்பாளர் சபையில் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக் குறிகாட்டி).
- கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் தவிர்ந்த நோக்கமொன்றுக்காக கடன்பெறுநர் கடன் பெறுகைகளைப் பயன்படுத்தகின்றார் என்ற நேரடியான சான்று கிடைக்கப்பெறுதல்.
- ஏதேனும் இடர்நேர்வுத் தணிப்பு நடவடிக்கையின்றி உத்தரவாதி மூலம் உத்தரவாதத்தை மீளப்பெறல்.
- மதிப்பிடப்பட்ட செலவில் இருந்து கருத்திட்டம் நிறைவுபெறும் நிலை வரை குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (25%). இக்காரணி கருத்திட்டம் தொடங்கப்படுவது வரை கணிப்பீட்டுக்குத் தொடர்புடையதாகும்.
- AAA தொடக்கம் BBB- வரையான தரப்படுத்தல் நீங்கலாக தற்போதய வெளிவாரி தரப்படுத்தலிலிருந்து ஒரு படிநிலை தரங்குறைத்தல்.
- நம்பத்தகுந்த தகவல்களின் அடிப்படையில் கடன்பெறுநர், கொடுகடன் வசதியின் செயலாற்றுகையைப் குறிப்பிடத்தக்களவு பாதிக்கின்ற வழக்காடலுக்குட்பட்டுள்ளார் என்ற நேரடியான சான்று கிடைக்கப்பெறுதல் (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்பு அல்லது வாடிக்கையாளரின் இடர்நேர்வைச் சார்ந்திருக்கின்ற தவணைதவறுதல் மூலப்பிரமாணம் ஆகிய இரண்டுமாக இருக்கக்கூடும்).
- நிலுவைகளின் தீர்ப்பனவை தடுக்கக்கூடிய கொடுகடன் வசதியின் செயலாற்றுகையில் நேரடியாக தாக்கமேற்படுத்துகின்ற புவியியல் அமைவிடத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று அல்லது இயற்கை அனர்த்தம் (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்பு அல்லது வாடிக்கையாளரின் இடர்நேர்வைச் சார்ந்திருக்கின்ற தவணைதவறுதல் மூலப்பிரமாணம் ஆகிய இரண்டுமாக இருக்கக்கூடும்).
- கடன் வழங்கப்பட்ட அல்லது கருத்திட்டம் தொழிற்படுகின்ற தொழில்துறைக்கான கருத்திட்டத்தின்/வசதியின் மீளச்செலுத்தும் இயலளவை பாதிக்கின்ற அளவிற்கு பேரண்ட பொருளாதார எதிர்பார்க்கை சீர்குழைதல். இணங்கியவாறு படுகடனை மீளச்செலுத்துவதற்கான தொழிற்பாடுகளைத் தடுக்கக்கூடிய புதிய ஒழுங்குவிதிகளில்/ அரசாங்க கொள்கைகளில் இருந்து தோன்றுகின்ற தாக்கத்தை இது உள்ளடக்குகின்றது (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்பு அல்லது வாடிக்கையாளரின் இடர்நேர்வைச் சார்ந்திருக்கின்ற தவணைதவறுதல் மூலப்பிரமாணம் ஆகிய இரண்டுமாக இருக்கக்கூடும்).
- கொடுப்பனவுகளின் விரிவுபடுத்தல்கள், ஒத்திவைத்தல், ஒப்பந்தங்களை தள்ளுபடிசெய்தல் உள்ளடங்கலாக சலுகைகளை ஏற்படுத்துகின்ற நியதிகளின் திருத்தியமைத்தல்கள். கடன்வசதியின் மீளச்செலுத்தல் மீது எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டவை (கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்பு அல்லது வாடிக்கையாளரின் இடர்நேர்வைச் சார்ந்திருக்கின்ற தவணைதவறுதல் மூலப்பிரமாணம் ஆகிய இரண்டுமாக இருக்கக்கூடும்).
- வாடிக்கையாளரை தொடர்புகொள்ள அல்லது கண்டுபிடிக்க இயலாதிருத்தல் (தவணைதவறுதல் குறிகாட்டி).
- தரப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளை விட கொடுகடன் வசதிகள் 2 இற்கு மேற்பட்ட தடவைகள் மறுசீரமைக்கப்படுதல் (சேதமிழந்த கொடுகடன் பற்றிய குறிகாட்டி).
- தரப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர்ந்த கொடுகடன் வசதிகளை மீள அட்டவணைப்படுத்தல்.
- வசதியின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கும் மேல் கடந்தகால நிலுவையாகுதல்.
- தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு பிரச்சினைகள் காரணமாக கணக்காய்வாளர் கணக்காய்வு அபிப்பிராயாத்தினை தகமைபெறச்செய்தல் அல்லது மறுதலிப்பொன்றை அல்லது பாதகமான அபிப்பிராயமொன்றை வழங்கியிருத்தல்.
- கடன்பெறுநர் கடன்தீர்க்க வகையற்றவர்/ தீர்த்துக்கட்டுதல் நடவடிக்கை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது அல்லது தொடங்கும் தறுவாயிலுள்ளது என்பதற்கு நேரடிச் சான்று கிடைக்கப்பெறுதல் (தவணைதவறுதல் குறிகாட்டி).

2.5.2.8 தவணைதவறுதல் மற்றும் கொடுகடன் சேதஇழந்த சொத்துகள் பற்றிய வரைவிலக்கணம்

ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களையும் முற்பணங்களையும் தொகுதி பின்வரும் சந்தர்ப்பங்களின்போது தவணைதவறப்பட்டதாக கருதுகின்றது

- பிணையங்கள் தேறுதல் (ஏதேனும் வைக்கப்பட்டிருப்பின்) போன்ற நடவடிக்கைகளுக்கு தொகுதி மூலமான உதவியின்றி அதன் கடப்பாடுகளை தொகுதிக்கு முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடன்பெறுநர் இயலாதிருத்தல் அல்லது
- கடன்பெறுநர், அவரின் ஒப்பந்த கொடுப்பனவுகள் மீது 90 நாட்கள் கடந்த கால நிலுவையினைக் கொண்டிருத்தல்.

மேலும், குறித்த முதலீட்டுக்கு வெளிவாரி கடன்தரப்படுத்தல் ''தவணை தவறுதல்'' இனை குறித்தொதுக்குகின்ற போது நிதியியல் முதலீடுகளை தொகுதி கட்டம் 3 இன் கீழ் வகைப்படுத்துகின்றது.

2.5.3 ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய விபரங்கள் 318 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 26 இல் தரப்பட்டுள்ளன.

2.5.3.1 பெறுமானத்தேய்வு

''பெறுமானத்தேய்வு'' பற்றிய விபரங்கள் 318 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 26 இல் தரப்பட்டுள்ளன.

2.5.3.2 கடன்பெறுதல் செலவுகள்

''கடன்பெறுதல் செலவுகள்'' மீதான இலங்கை கணக்கீட்டு நியமம்- இகநி 23 இற்கு அமைய சொத்தின் செலவின் பாகமாக தகமைபெறுகின்ற சொத்தின் கையகப்படுத்தல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்திசெய்தல் போன்றவற்றிற்கு நேரடியாக சாட்டத்தக்க கடன்பெறுதல் செலவுகளை தொகுதி மூலதனமாக்குகின்றது. தகமைபெறுகின்ற சொத்து என்பது அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு ஆயத்தமாகுவதற்கு கணிசமான காலப்பகுதியினை எடுத்துக்கொள்கின்ற சொத்தொன்றாகும். ஏனைய கடன்பெறுதல் செலவுகள், அவை நிகழுகின்ற காலப்பகுதியில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. வங்கியும் தொகுதியும் அறிக்கையிடும் காலப்பகுதிக்காக ஏதேனும் கடன்பெறுதல் செலவினை மூலதனமாக்கவில்லை.

2.5.4 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துகள் பற்றிய விபரங்கள் 327 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 29 இல் தரப்பட்டுள்ளன.

2.5.5 நிதியியல் சொத்துகள் அல்லாதவற்றின் சேதஇழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், பிற்போடப்பட்ட வரிச் சொத்து தவிர்ந்த சொத்தொன்று சேதமிழப்புச் செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ளதா என்பதை தொகுதி கணிக்கும். சாத்தியமொன்று காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான ஆண்டு சேதஇழப்பு பரிசோதனை தேவைப்படுமிடத்து, சொத்தில் மீளப்பெறப்பட வேண்டிய தொகையை தொகுதி மதிப்பிடும். சொத்தொன்றின் கொண்டுசெல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறவேண்டிய தொகையை விஞ்சுமிடத்து, சொத்தானது சேதமிழந்துள்ளதாக கருதப்படுவதுடன், அதன் அறவிடத்தக்க தொகையில் பதிவுசெய்யப்படுகின்றது.

2.5.6 ஓய்வு நலக் கடப்பாடு

2.5.6.1 வரையறைசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள்

2.5.6.1.1 ஊழியர் ஓயவூதிய நிதியம் - I

1995 ஒக்டோபர் 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் இணைந்த நிரந்தர பணியாளர்களுக்கு வரையறைசெய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டமொன்றை வங்கி செயற்படுத்துகின்றது. இதில் வேறாக

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

நிர்வகிக்கப்படும் நிதியமொன்றிற்கு பங்களிப்புச்செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டம் I இன் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் செலவானது, எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு கணிப்பீட்டு பெறுமான முறையைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. கணிக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் நட்டங்கள், அவற்றுக்குரிய காலப்பகுதியில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

வரையறைசெய்யப்பட்ட நன்மை சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும், கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட சொத்துகளின் உண்மைப் பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் பெறப்பட்ட வரையறைசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகப்பிந்திய மதிப்பீடானது தொழில்சார் கணிப்பீட்டு நிறுவனமொன்றான எக்சூரியல் அன்ட் மெனேஜ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் கணிப்பீட்டு நிறுவன இணை உறுப்பினரான திரு எம் பூபாலநாதன் என்பவரினால் 2022 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது.

2022.12.31 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பன்வருமாறு:

வட்டி/கழிவு வீதம்	ஆண்டுக்கு 18.00%
வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு	ஆண்டுக்கு 8.00%
சராசரி அடிப்படைச் சம்பளத்திலான அதிகரிப்பு	ஆண்டுக்கு 15.00%

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்குப் புறம்பாக பேணப்படுவதுடன் நம்பிக்கை உறுதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஓய்வூதியத் நிதியம் I இன் நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினாலும் வங்கியின் பணிப்பாளர் சபையினாலும் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வுசெய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

ஊழியர் ஓய்வூதியத் நிதியம் I பற்றிய விபரங்கள் 341 தொடக்கம் 343 வரையான பங்கங்களில் குறிப்பு இல. 38. (அ) 1 இல் தரப்பட்டுள்ளன.

நிதியிடப்படாத கடந்தகால சேவைச் செலவானது கணிப்பு மதிப்பீடு முடிவடைந்தவுடன் ஏனைய அனைத்தையும் வருமானத்தின் மீது இனங்காணப்படுகின்றது. 2022 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பு மதிப்பீட்டு ரூ. 8,764.7 மில்லியன் கொண்ட கடந்த காலச் சேவை செலவுப் பற்றாக்குறையைக் காட்டியது. இது முழுமையாக வழங்கப்பட்டிருந்தது. நிதியிடப்படாத ஓய்வூதியப் பொறுப்பின் விபரங்கள் 341 தொடக்கம் 343 வரையான பங்கங்களில் குறிப்பு இல. 38(அ).1. இல் தரப்பட்டுள்ளன.

2.5.6.1.2 ஊழிர் ஓய்வூதிய நிதியம் - II

1995 ஒக்டோபர் 01ம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வங்கியில் இணைந்த நிரந்தர அலுவலர்களுக்காக வங்கி வரையறைசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒன்றினைத் தாபித்து தொழிற்படுத்துகின்றது. வேறாக நிர்வகிக்கப்படும் நிதியம் ஒன்றிற்கு அங்கத்தவர்களின் மொத்த சம்பளத்தில் 12 சதவீதத்தினை மாதாந்தம் பங்களிப்பதற்கு இது வங்கியினை தேவைப்படுத்துகின்றது. வரையறைசெய்யப்பட்ட நல ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் நலன்களை வழங்குவதற்கான செலவானது எதிர்வுகூறப்பட்ட அலகு வரவுக் கணிப்பு மதிபபீட்டு முறையினைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. கணிப்பீட்டு பெறுகைகளும் நட்டங்களும் அவை நிகழும் ஆண்டுக் காலத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

வரையறைசெய்யப்பட்ட நன்மைச் சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும் கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட சொத்துகளின் சீர்மதிப்பு பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் வரையறைசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது கணிப்பீட்டு இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகப்பிந்திய மதிப்பீடானது தொழில்சார் கணிப்பீட்டு நிறுவனமொன்றான எக்சூரியல் அன்ட மெனேஜ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் கணிப்பீட்டு நிறுவன இணை உறுப்பினரான திரு எம் பூபாலநாதன் என்பவரினால் 2022 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது.

2022.12.31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பன்வருமாறு:

வட்டி/கழிவு வீதம்	ஆண்டுக்கு 18.00 %
வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு	ஆண்டுக்கு 8.00 %
சராசரி அடிப்படைச் சம்பளத்திலான அதிகரிப்பு	ஆண்டுக்கு 8.00 %

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்கு புறம்பாக பேணப்படுவதுடன் நம்பிக்கை உறுதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஓய்வூதியத் நிதியம் II இன் நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினாலும் வங்கியின் பணிப்பாளர் சபையினாலும் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வுசெய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

ஊழியர் ஓய்வூதியத் நிதியம் II பற்றிய விபரங்கள் 343 தொடக்கம் 346 வரையான பங்கங்களில் குறிப்பு இல. 38. (அ) 2 இல் தரப்பட்டுள்ளன.

நிதியிடப்படாத கடந்தகால சேவைச் செலவானது கணிப்பு மதிப்பீடு முடிவடைந்தவுடன் ஏனைய அனைத்தையும் வருமானத்தின் மீது இனங்காணப்படுகின்றது. 2022 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பு மதிப்பீட்டு ரூ. 2,365.4 மில்லியன் கொண்ட கடந்த காலச் சேவை செலவு மிகையைக் காட்டியது. ஓய்வூதியத் நிதியம் II இற்கான முற்பணம் பற்றிய விபரங்கள் 343 தொடக்கம் 346 வரையான பங்கங்களில் குறிப்பு இல. 38 (அ) 2 இல் தரப்பட்டுள்ளன.

2.5.6.1.3 விதவைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம்

2013 டிசம்பர் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், ஓய்வூதியத் நிதியம் II உறுப்பினர்களுக்காக வங்கி, விதவைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத் திட்டத்தை தாபித்துள்ளது. விதவைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத் திட்டத்துடன் உறுப்பினராவதை ஓய்வூதியத் நிதியம் II உறுப்பினர்கள் தெரிவுசெய்யலாம். நிதியத்திற்கு வங்கி பங்களிக்காத அதேவேளை, வங்கியின் ஊழியர்கள் நிதியத்திற்கு மாதந்தோறும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 5% பங்களிப்புச்செய்கின்றனர்.

2.5.6.2 பணிக்கொடை

பதவியினர் ஓய்வூதியத் திட்டம் - II நிறுவப்பட்டதுடன் 1995 ஒக்டோபர் 01ம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் வங்கியில் இணைந்துகொண்ட ஊழியர்கள் ஓய்வூதியத் திட்டம்-II இன் உறுப்பினர்களாயினர். இதனால் சேவைப் பணிக்கொடைத் திட்டத்தின் கீழான உரிமைகள் மற்றும் சலுகைகளுக்கு அவர்கள் உரித்துடையவர்களல்லர். எவ்வாறாயினும், இவ்

ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஏதேனும் ஓய்வூதிய நலனுக்கு உரித்துடையவராவதற்கு ஓய்வுபெறும் நேரத்தில் வங்கியில் ஆகக்குறைந்தது 120 மாதகால தடங்கலற்ற செயற்பாடுமிக்க சேவையொன்று வேண்டப்படுகின்றது. எனவே, 10 வருட சேவைக்கு முன்னர் ஓய்வுபெறுகின்ற ஊழியர்கள் அத்துடன் அவர்களது சேவைகள் ஓய்வினை விட ஐந்து வருட சேவைக்கு பின்னர் முடிவுறுத்தப்பட்டிருப்பின் 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், தொடர்ச்சியான ஒவ்வொரு வருட சேவைக்கும் நிதியாண்டின் கடைசி மாதத்திற்கு ஏற்புடைய மொத்த சம்பளத்தின் ஒரு அரை விகிதத்தில் நிறுத்தல் பணிக்கொடையினை பெறுவதற்கு உரித்துடையவர்.

முகாமைத்துவத்தின் தீர்புகளுக்கமையவும் கடந்த கால அனுபவத்தின் படியும் அத்தகைய நிகழ்வுகளின் நிகழும்தன்மை அரிதாக காணப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியன்று முக்கிய பொறுப்பொன்று மதிப்பிடப்பட்டிருந்தாலன்றி நிதியியல் கூற்றுகளில் பணிக்கொடை ஏற்பாடு ஒன்று பேணப்படுவதில்லை. 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் அத்தகைய நிகழ்வில் ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடை செலுத்தப்பட்டிருக்குமிடத்து, பணிக்கொடையானது அதே ஆண்டில் வருமானக் கூற்றில் செலவொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

2.5.6.3 தொழிலுக்குப் பின்னரான மருத்துவ நலன்கள்

ஓய்வுபெற்ற ஊழியர்களுக்காக பங்களிப்புடனான மருத்துவ உதவித் திட்டம் ஒன்றினை வங்கி கொண்டுள்ளது. இத்திட்டத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளில் சுயாதீனமாக வைக்கப்பட்டுள்ளதுடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத்தின் நம்பிக்கை நிதியத்தின் உறுதிப்பத்திரத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு முகமைத்துவத்தையும் ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் செலவானது, எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு கணிப்பீட்டு பெறுமான முறையைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. கணிக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் நட்டங்கள், அவற்றுக்குரிய காலப்பகுதியில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

வங்கியின் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினை பங்களிப்பு மருத்துவ திட்டத்திற்கு வங்கி பங்களிப்புசெய்கின்றது. காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டு சிபாரிசுகளின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி 2022ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து ரூ. 668.5 மில்லின் கொண்ட தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஆகப்பிந்திய மதிப்பீடானது தொழில்சார் கணிப்பீட்டு நிறுவனமொன்றான எக்சூரியல் அன்ட் மெனேஜ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் கணிப்பீட்டு நிறுவன இணை உறுப்பினரான திரு எம் பூபாலநாதன் என்பவரினால் 2022 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது. 2022.12.31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பின்வருமாறு:

வட்டி/கழிவு வீதம்	ஆண்டுக்கு 18.00%
மருத்துவச் செலவு பணவீக்க வீதம்	ஆண்டுக்கு 10.00%

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்கு புறம்பாக பேணப்படுவதுடன் நம்பிக்கை உறுதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஓய்வூதியத் நிதியம் II இன் நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினாலும் வங்கியின் பணிப்பாளர் சபையினாலும் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வுசெய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

தொழிலுக்குப் பின்னரான மருத்துவ நலன்கள் பற்றிய விபரங்கள் 347 ஆம் பக்கத்தில் பங்கங்களில் குறிப்பு இல. 38. (அ) 3. இல் தரப்பட்டுள்ளன.

நிதியிடப்படாத கடந்தகால சேவைச் செலவானது கணிப்பு மதிப்பீடு முடிவடைந்தவுடன் ஏனைய அனைத்தையும் வருமானத்தின் மீது இனங்காணப்படுகின்றது. 2022 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பு மதிப்பீட்டு ரூ. 3,724.2 மில்லியன் கொண்ட கடந்த காலச் சேவை செலவுப் பற்றாக்குறையைக் காட்டியது, இது முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது. நிதியளிக்கப்படாத பொறுப்பு பற்றிய விபரங்கள் 347 தொடக்கம் 349 வரையான பங்கங்களில் குறிப்பு இல. 38.(அ).3. இல் தரப்பட்டுள்ளன.

2.5.6.4 வரையறைசெய்யப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

வரையறைசெய்யப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் பற்றிய விபரங்கள் 288 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 11 இல் தரப்பட்டுள்ளன.

2.5.7 ஏனைய பொறுப்புகள்

ஏனைய பொறுப்புகள் பற்றிய விபரங்கள் 351 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 41 இல் தரப்பட்டுள்ளன.

2.5.8 ஏற்பாடுகள்

முன்னைய நிகழ்வொன்றின் விளைவாக நிகழ்காலத்தில் கடப்பாடொன்றை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) தொகுதி கொண்டிருக்கையில், அத்துடன் இக்கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு பொருளாதார நலன்களுடனான மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று நிகழக்கூடியதாகவிருக்கின்ற அத்துடன் இக்கடப்பாட்டு தொகை தொடர்பில் நம்பத்தகுந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படக்கூடியதாகவிருக்கின்ற போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவுகள், ஏதேனும் மீளளித்தலைக் கழித்து வருமானக் கூற்றில் எடுத்துரைக்கப்படுகின்றன.

2.5.8.1 மோசடியான மீளப்பெறுதலுக்கான ஏற்பாடு

2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு இனங்காணப்பட்ட மோசடியான பண மீளப்பெறுதலின் மொத்த பெறுமதி ரூ. 58.3 மில்லியன் ஆகும். காப்புறுதியிலிருந்து ரூ. 15 மில்லியன் கொண்ட சார்புக்கொடுப்பனவு கிடைக்கப்பெற்றுள்ளது. 2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு மீதி மோசடியான பண மீளப்பெறுதலுக்கு ரூ. 42.6 மில்லியன் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது.

2.5.9 எதிர்பாராப் பொறுப்புகளும் கடமைப்பொறுப்புகளும்

அரசாங்க திறைசேரி உண்டியல்களும் முறிகளும்		17,242,954	–	–	17,242,954
பங்குரிமைமூலதன பங்குகள்		2,069,513	–	–	2,069,513
கூறு நம்பிக்கை		260,466	–	–	260,466
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள்	23				
ஏனைய முதலீடுகள்-அரசாங்கப் பிணையங்கள்		10,922,236	–	–	10,922,236
பங்குரிமைமூலதனப் பங்குகள் - விலைகோரப்பட்டவை		2,674,004	–	–	2,674,004
பங்குரிமைமூலதனப் பங்குகள் - விலைகோரப்பட்டவை		–	163,863	–	163,863
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த நிதியியல் சொத்துகள்		33,169,173	163,863	–	33,333,036
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த சொத்துகள்		33,169,173	163,863	12,471,910	45,804,946

56. நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி (தொடர்ச்சி)

56.2 சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை என்பவற்றை நிர்ணயித்தல் (தொடர்ச்சி)

		தொகுதி			
2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு	குறிப்பு	மட்டம் 1 ரூ. '000	மட்டம் 2 ரூ. '000	மட்டம் 3 ரூ. '000	மொத்தம் ரூ. '000
நிதியல்லா சொத்துகள்					
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்					
காணியும் கட்டடங்களும்	26	–	–	13,274,685	13,274,685
முதலீட்டு ஆதனங்கள்	28	–	–	204,977	204,977
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த நிதியல்லா சொத்துகள்		–	–	13,479,662	13,479,662
நிதயியல் சொத்துகள்					
பெறுதி நிதியியல் சாதனங்கள்	19				
நாணய பரஸ்பரபரிமாறல் ஒப்பந்தம்		–	–	28,172	28,172
ஏனையவை		–	–	7,220	7,220
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள்	20				
அரசாங்க திறைசேரி உண்டியல்களும் முறிகளும்		21,280,009	–	–	21,280,009
பங்குரிமைமூலதன பங்குகள்		1,956,839	–	–	1,956,839
கூறு நம்பிக்கை		–	–	–	–
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள்	23				
ஏனைய முதலீடுகள்- அரசாங்கப் பிணையங்கள்		25,833,465	–	–	25,833,465
பங்குரிமைமூலதனப் பங்குகள் - விலைகோரப்பட்டவை		2,249,685	–	–	2,249,685
பங்குரிமைமூலதனப் பங்குகள் - விலைகோரப்பட்டவை		–	109,406	–	109,406
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த நிதியியல் சொத்துகள்		51,319,998	109,406	35,392	51,464,796
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த சொத்துகள்		51,319,998	109,406	13,515,053	64,944,458

		தொகுதி			
2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு	குறிப்பு	மட்டம் 1 ரூ. '000	மட்டம் 2 ரூ. '000	மட்டம் 3 ரூ. '000	மொத்தம் ரூ. '000
நிதியல்லா சொத்துகள்					
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்					
காணியும் கட்டடங்களும்	26	–	–	13,339,223	13,339,223
முதலீட்டு ஆதனங்கள்	28	–	–	210,577	210,577
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த நிதியல்லா சொத்துகள்		–	–	13,549,800	13,549,800
நிதிச் சொத்துகள்					
பெறுதி நிதியியல் சாதனங்கள்					
நாணய பரஸ்பரபரிமாறல் ஒப்பந்தம்	19	–	–	–	–
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள்					
அரசாங்க திறைசேரி உண்டியல்களும் முறிகளும்		38,062,173	–	–	38,062,173
பங்குரிமைமூலதன பிணையங்கள்		2,069,513	–	–	2,069,513
கூறு நம்பிக்கை		260,466	–	–	260,466
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள்					
ஏனைய முதலீடுகள்- அரசாங்கப் பிணையங்கள்		12,931,250	–	–	12,931,250
பங்குரிமைமூலதனப் பங்குகள் - விலைகோரப்பட்டவை		2,839,035	–	–	2,839,035
பங்குரிமைமூலதனப் பங்குகள் - விலைகோரப்படாதவை		–	163,863	–	163,863
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த நிதியியல் சொத்துகள்		56,162,438	163,863	–	56,326,300
சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த சொத்துகள்		56,162,438	163,863	13,549,800	69,876,100

56. நிதியயில் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி (தொடர்ச்சி)

56.3 சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டு படிநிலை மட்டங்களுக்கிடையிலான அசைவுகளின் இணக்கம்

ஆண்டின் போது வங்கியும் தொகுதியும் படிநிலை மட்டங்களுக்கிடையிலான அசைவுகளைக் கொண்டிருக்கவில்லை.

56.4 மட்டம் 3 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

சீர்மதிப்பு பெறுமதி படிநிலையின் மட்டம் 3 இலுள்ள காணி மற்றும் கட்டங்களுக்காக தொடக்க மீதியிலிருந்து முடிவு மீதிக்கான இணக்கம் 320-322 வரையான பக்கங்களில் குறிப்பு இல. 26 (அ) - 26 (ஆ) வரைத் தரப்பட்டுள்ளது.

சீர்மதிப்பு பெறுமதி படிநிலையின் மட்டம் 3 ஆக வகைப்படுத்தப்பட்ட காணி மற்றும் கட்டங்கள் தொடர்பிலான மீள்விலைமதிமிப்பீட்டு ஒதுக்கின் கணக்கிணக்கம் 258-261 வரையான பக்கங்களில் பங்குரிமைமூலதன மாற்றங்கள் கூற்றில் தரப்பட்டுள்ளது.

முதலீட்டு ஆதனங்கள்

சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையின் மட்டம் 3 இலுள்ள காணி மற்றும் கட்டங்களுக்காக தொடக்க மீதியிலிருந்து முடிவு மீதிக்கான இணக்கம் 325 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 28 இல் தரப்பட்டுள்ளது.

பெறுதி நிதியியல் சாதனங்கள்

பெறுதிச் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைக் கணிப்பதற்கு வங்கியும் தொகுதியும் சீர்மதிப்புப் பெறுமதியின் மட்டம் 3 இனைப் பயன்படுத்துவதுடன் அச்சாதனங்கள் பற்றிய விபரங்கள் 298 மற்றும் 334 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 19 மற்றும் 33 இல் தரப்பட்டுள்ளன.

56.5 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

டிசம்பர் 31 அன்று உள்ளவாறு		வங்கி			
		2022		2021	
	குறிப்பு	கொண்டு செல்லும் தொகை ரூ. '000	சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000	கொண்டு செல்லும் தொகை ரூ. '000	சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000
நிதியியல் சொத்துகள்					
காசும் காசுக்கு சமமானவையும்	16	8,734,069	8,734,069	7,656,038	7,656,038
மத்திய வங்கியுடனான மீதி	17	236,480	236,480	–	–
வங்கிகளுடனான இருப்புகள்	18	10,466,409	10,466,409	7,120,698	7,120,698
பெறுதி நிதியியல் சாதனங்கள்	19	28,172	28,172	–	–
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள்					
– சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை.	20	14,173,948	14,173,948	19,572,933	19,572,933
கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள்					
– கடன்களும் முற்பணங்களும்	21	553,027,321	575,700,957	538,941,789	539,346,454
– படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்	22	919,129,377	675,180,495	935,350,052	907,556,434
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்	23	27,662,763	27,662,763	13,817,594	13,817,594
மொத்த நிதியியல் சொத்துகள்		1,533,458,539	1,312,183,293	1,522,459,104	1,495,070,151
நிதியியல் பொறுப்புகள்					
வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை	32	4,086,731	4,086,731	7,686,553	7,686,553
கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் பொறுப்புகள்	35				
– வைப்பாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை		1,476,739,818	1,476,136,191	1,428,467,385	1,427,778,508
– படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை		–	–	–	–
– ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை		16,766,044	16,766,044	7,719,532	7,719,532
வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்	37	23,778,255	23,778,255	37,529,017	38,411,518
மொத்த நிதியியல் பொறுப்புகள்		1,521,370,848	1,520,767,221	1,481,402,487	1,481,596,112

56. நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி (தொடர்ச்சி)

56.5 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி (தொடர்ச்சி)

டிசம்பர் 31 அன்று உள்ளவாறு		புசழரி			
		2022		2021	
	குறிப்பு	**கொண்டு செல்லும் தொகை** ரூ. '000	**சீர்மதிப்புப் பெறுமதி** ரூ. '000	கொண்டு செல்லும் தொகை ரூ. '000	சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000
நிதியியல் சொத்துகள்					
காசும் காசுக்கு சமமானவையும்	16	8,782,807	8,782,807	7,721,532	7,721,532
மத்திய வங்கியுடனான மீதி	17	236,696	236,696	7	7
வங்கிகளுடனான இருப்புகள்	18	11,034,246	11,034,246	9,323,663	9,323,663
பெறுதி நிதியியல் சாதனங்கள்	19	35,392	35,392	–	–
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள்					
– சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை.	20	23,236,848	23,236,848	40,392,152	40,392,152
கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள்					
– கடன்களும் முற்பணங்களும்	21	553,052,170	575,726,903	538,600,866	539,006,629
– படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்	22	927,916,442	683,967,559	940,536,328	912,742,709
ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்	23	28,252,211	28,252,211	15,993,803	15,993,803
மொத்த நிதியியல் சொத்துகள்		1,552,546,811	1,331,272,663	1,552,568,350	1,525,180,495
நிதியியல் பொறுப்புகள்					
வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை	32	12,711,256	12,711,256	10,470,191	10,470,191
கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் பொறுப்புகள்	35				
– வைப்பாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை		1,475,808,557	1,475,204,929	1,426,724,704	1,426,035,827
– படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை		–	–	–	–
– ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை		18,889,245	18,889,245	27,087,920	27,087,920
வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்	37	23,851,810	23,851,810	37,618,575	38,501,076
மொத்த நிதியியல் பொறுப்புகள்		1,531,260,868	1,530,657,241	1,501,901,389	1,502,095,014

56.6. சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயித்தல்

நியதியியல் சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதியும் சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்படாத பொறுப்புகளும்

நிதியியல் கூற்றுகளில் சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்படாத நிதியியல் சாதனங்களுக்கான சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் முறையியல்கள் மற்றும் ஊகங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

கொண்டுசெல்லும் பெறுமதியினை அண்ணளவாக்கும் சீர்மதிப்புப் பெறுமதியுடைய சொத்துகள்

குறுகிய கால முதிர்ச்சியை கொண்ட (மூல முதிர்ச்சி ஒரு ஆண்டிற்கும் குறைவாக உள்ளவை) நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகளை பொறுத்தவரையில் அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதிகளை கொண்டுசெல்லும் தொகையே அண்ணளவாக்கும் என கருத்தப்படும். விசேடமாக குறிப்பிடக்கூடிய முதிர்சியற்ற சேமிப்பு வைப்புகளுக்கும் இந்த எடுகோல் பொருந்தும்.

வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்டு காலத்துக்கு காலம் வட்டி செலுத்தப்படும் நீண்ட கால வைப்புகள் மற்றும் மாறுபடும் வட்டி வீதங்களில் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட வருமதிகள் ஆகியவையும் சீர்மதிப்புப் பெறுமதியில் புத்தகங்களில் கொண்டு செல்லப்படும் என கருத்தப்படும்.

56. நிதியியில் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி (தொடர்ச்சி)

56.6. சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயித்தல் (தொடர்ச்சி)

நிலையான வீத நிதியியல் சாதனங்கள்

கொண்டுசொல்லப்படும் தொகைகள், குறுங்கால கடன் வசதிகளுக்கான சீர்மதிப்புப் பெறுமதிகளாகக் கருதப்படும். முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் சீர்மதிப்புப் பெறுமதியிடலில், அதே மாதிரியான வர்த்தகப் பிணையங்களுக்கு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வீதங்களே பயன்படுத்தப்பட்டன. இவ் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில் புதிய கடன்கள் வழங்கப்பட்ட சந்தை வீதங்களை பயன்படுத்தியே நிலையான வட்டி வீதங்களை கொண்ட கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவையும் மதிப்பீடுசெய்யப்பட்டன. மாறாக ஒரு ஆண்டிற்கு மேல் அடிப்படைக் காலத்துடனும் முதிர்ச்சியின் போது வட்டி செலுத்தப்படுவதுடனும் கூடிய நிலையான வைப்புகள் இவ் ஆண்டில் நான்காம் காலாண்டில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட மாறுகின்ற வட்டி வீதங்களைப் பயன்படுத்தி கழிவீடு செய்யப்பட்டன.

நிதியியல் சொத்துகளின் விலைகோரப்படாத பங்குரிமைமூலதனங்கள்

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளில் உள்ள அனைத்து விலைகோரப்படாத பங்குமூலதனங்களும் (பிரதேச அபிவிருத்தி வங்கி தவிர) அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி நம்பத்தகுந்தவாறு மதிப்பிடப்படமுடியாமையினால், செலவில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அம்முதலீடுகளுக்கான செயற்பாடுமிக்க சந்தை காணப்படவில்லை என்பதுடன் நீண்ட காலத்திற்கு அதனை வைத்திருப்பதற்கு தொகுதி உத்தேசிக்கின்றது. பிரதேச அபிவிருத்தி வங்கிப் பங்குகளில் உள்ள முதலீடு அவதானிக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் பெறுமதி மதிப்பீட்டு மாதிரியினைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியிடப்படுகின்றன. 316 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 23 (உ) ஐப் பார்க்க.

57 மூலதன முகாமைத்துவம் (ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின் படி)

குறிக்கோள்

ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு ஏற்புடன் அணிசேர்ந்துள்ள உபாயக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு போதுமான மூலதன தாங்குகளை வைத்திருக்கும் பொருட்டு அதன் மூலதனத்தை முகாமைசெய்வதற்கு வங்கி வேண்டப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம்

இலங்கை மத்திய வங்கியானது திரட்டிய மற்றும் தனியான அடிப்படைஇரண்டிலும் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாட்டினை அமைத்து கண்காணிக்கின்றது. ஏதேனும் மேலதிக இடர்நேர்வினை சமாளிப்பதற்கான மூலதனம் தொடர்பில் பாசல் III பணிப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு வங்கி வேண்டப்பட்டுள்ளது. 2019.01.01 அளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட, பாசல் III மூலதன ஒழுங்குமுறைப்படுத்தல்கள், பசல் II இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று பரஸ்பர மீள்வலுவூட்டப்பட்ட தூண்கள் மீது, அதாவது, குறைந்தபட்ச மூலதனத் தேவைப்படுத்தல், மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறை மற்றும் சந்தை ஒழுக்கம் என்பவற்றை தொடந்தும் அடிப்படையாக கொண்டிருக்கும். 2019.12.20 ஆம் திகதியின் 2019 இன் 12 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை வழங்கும் வரை வங்கியானது உள்நாட்டு முறைசார்ந்த முக்கியத்துவமிக்க வங்கியாக கருதப்பட்டது. இப் பணிப்புரையின் பின்னர் வங்கி முறைசார்ந்த முக்கியத்துவமிக்க வங்கியாக இனிமேலும் கருதப்படாது.

கொடுகடன் இடர்நேர்வுக்காக தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையினையும், சந்தை இடர்நேர்வுக்காக தரப்படுத்தப்பட்ட அளவீட்டு அணுகுமுறையினையும், தொழிற்பாட்டு இடர்நேர்வுக்காக அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையினையும் தற்போது வங்கி பயன்படுத்துகின்றது. மூலதனத்தின் விசேடமாக,பொதுப் பங்குரிமை மூலதனத்தினை மீள்வரையறை செய்வதல் மற்றும் மூலதனக் காப்பு தாங்கு மற்றும் உள்நாட்டு முறைசார்ந்த முக்கியத்துவமிக்க வங்கிகள் மீதான மூலதன அதிர்ச்சி போன்ற புதிய மூலதன காப்புகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தல் மூலம் விசேடமாக மைய மூலதனத்தின் தரத்தனையும் அளவினையும் அதிகரிப்பதன் மீது பாசல் III வலியுறுத்துகின்றது. இலங்கை மத்திய வங்கியின் பாசல் III பணிப்புரைக்கமைவாக, வங்கிம் தொகுதியும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 8.5%குறைந்தபட்ச அடுக்கு I மூலதன விகிதாசாரத்தினையும் 12.5% கொண்ட குறைந்தபட்ச மொத்த மூலதன விகிதாசாரத்தினையும் பேணுவதற்கு வேண்டப்பட்டுள்ளன.

எனினும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோய்த்தொற்றுடன் கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிப்பதற்கான நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் கீழ், உள்நாட்டில் முறைமைசார்ந்த முக்கியத்துமிக்க வங்கிகளுக்கும் உள்நாட்டில் முறைமைசாரந்த முக்கியத்துவமற்ற வங்கிகளுக்கும் 250 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட மொத்தத்திலிருந்து முறையே 100 அடிப்படை புள்ளிகளாலும் 50 அடிப்படை புள்ளிகளாலும் அவற்றின் மூலதன காப்பு தாங்குகளை குறைப்பதற்கு நாணயச் சபை அனுமதியளித்தது.

அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு குறைந்தபட்ச தேவைப்படுத்தல் 0.5% இனால் குறைக்கப்பட்டு குறைந்தபட்ச அடுக்கு I மூலதன விகிதத்தை 8% ஆகவும் குறைந்தபட்ச மொத்தமூலதன விகிதத்தை 12% ஆகவும் பேணுவதற்கு வங்கியினை தேவைப்படுத்தியது.

ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனமானது அடுக்கு 1 மூலதனம் மற்றும் அடுக்கு 2 மூலதனம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. வங்கியும் தொகுதியும் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்படும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்படுத்தல்களுடன் எப்போதும் இணங்கியொழுகுகின்றன.

ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன விகிதாசாரம்:

	வங்கி		தொகுதி	
டிசம்பர் 31அன்று உள்ளவாறு	**2022**	2021	**2022**	2021
பொதுப் பங்குரிமைமூலதனம் அடுக்கு 1 மூலதன விகிதாசாரம் (குறைந்தபட்ச தேவைப்படுத்தல் – 6.5%)	**14.357**	17.171	**16.492**	18.538
அடுக்கு 1 மூலதன விகிதாசாரம் (குறைந்தபட்ச தேவைப்படுத்தல் – 8.0%)	**15.778**	18.598	**17.903**	19.960
மொத்த மூலதன விகிதாசாரம் (குறைந்தபட்ச தேவைப்படுத்தல் –12.0%)	**17.999**	20.828	**19.959**	22.001

58 பத்திரங்கலற்ற திறைசேரி முறிகளின் மற்றும் பத்திரங்கலற்ற திறைசேரி உண்டியல்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கலவாங்கல்கள்

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2019 இன் 1 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைப் பணிப்புரையினால் வேண்டப்பட்டவாறு மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான பின்வரும் மேலதிகத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

58.1 மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட பிணையங்கள் கொண்டுசெல்லும் பெறுமதி

	வங்கி	
டிசம்பர் 31 அன்று உள்ளவாறு	2022 **ரூ. '000**	2021 ரூ. '000
மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட பிணையங்கள் கொண்டுசெல்லும் பெறுமதி	**22,799,900**	8,191,410
நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காக கிடைக்கப்பெற்ற பிணையங்களின் சந்தைப் பெறுமதி	**771,293**	5,961,028

58.2 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உச்சவரம்புகள்

டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ஒவ்வொரு முதிர்ச்சிக் கூடைக்கும் ஏற்புடைய குறைந்தபட்ச உச்சவரம்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

	2022 **குறைந்தபட்ச உச்சவரம்பு**		2021 குறைந்தபட்ச உச்சவரம்பு	
டிசம்பர் 31 அன்று உள்ளவாறு	**மீள்கொள்-வனவுக் கொடுக்கல்-வாங்கல்கள்** %	**நேர்மாற்று மீள்கொள்-வனவுக் கொடுக்கல்-வாங்கல்கள்** %	மீள்கொள்-வனவுக் கொடுக்கல்-வாங்கல்கள் %	நேர்மாற்று மீள்கொள்-வனவுக் கொடுக்கல்-வாங்கல்கள் %
தகைமையுடைய பிணையத்தின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலம்				
1 ஆண்டு வரை	**4**	**4**	4	4
1 ஆண்டுக்கு மேற்பட்ட மற்றும் 3 ஆண்டுகள் வரை	**6**	**6**	6	6
3 ஆண்டுக்கு மேற்பட்ட மற்றும் 5 ஆண்டுகள் வரை	**8**	**8**	8	8
5 ஆண்டுக்கு மேற்பட்ட மற்றும் 8 ஆண்டுகள் வரை	**10**	**10**	10	10
8ஆண்டுகளுக்கு மேற்பட்டவை	**12**	**12**	12	12

58.3 இணங்காமைக்காக வங்கி மீது விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள்

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2019 இன் மேற்குறித்த பணிப்புரைகளுடன் இணங்காமைக்காக 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது வங்கி மீது தண்டப்பணங்கள் எதுவும் விதிக்கப்படவில்லை.

பிற்சேர்க்கைத் தகவல்

வங்கிச்சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு
410

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம்
430

இலங்கை மத்திய வங்கியினால் வேண்டப்பட்ட ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்
435

2016 இன் 1 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் III 3 ஆம் அட்டவணைக்கு அமைய பாசல் III வெளிப்படுத்தல்கள்
442

உள்நாட்டில் - முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கி மதிப்பீட்டுச் செயன்முறை
454

மைய அளவீட்டின் படி உலகளாவிய அறிக்கையிடல் முன்முனைவுகளின் (GRI) உள்ளடக்கச் சுட்டெண்
456

Independent assurance report
459

ஐ.அ. டொலர்களில் வருமானக்கூற்று
462

ஐ.அ. டொலர்களில் அனைத்தையும் வருமானக்கூற்று
463

ஐ.அ.டொலர்களில் நிதியியல் நிலைக்கூற்று
464

புள்ளி விபரக் குறிகாட்டிகள் 2013-2022
465

வைப்புப் பகுப்பாய்வு
466

தொடர்புடைய வங்கிகள்
467

பரிமாற்று இல்லங்கள்
467

யூரோ கீரோ உறுப்பினர்கள்
468

நிதியியல் மற்றும் வங்கியியல் அருஞ் சொற்கள் விளக்கத் தொகுப்பு
469

நிறுவனத் தகவல்கள்
475

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட கட்டளைகள் மற்றும் அதன் பிற்கால திருத்தங்கள் ஆகியவற்றுக்கு அமைவாக பிரசுரிக்கப்பட வேண்டிய வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கை.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (1)	**பணிப்பாளர் சபையின் பொறுப்புகள்**	
3 (1) (i)	பின்வருவனவற்றை உறுதி செய்வதன் மூலம் பணிப்பாளர் சபையானது வங்கியினுடைய பாதுகாப்பு மற்றும் பொருத்தமான தன்மையை பலப்படுத்தல் வேண்டும்:	
	a. வங்கியின் தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் கூட்டு வணிகப் பெறுமதிகளை மேற்பார்வை செய்து அங்கீகரித்தல் மற்றும் இவை வங்கி முழுவதும் உரியவாறு தொடர்பாடல் செய்யப்படுவதை உறுதி செய்தல்	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் மூலோபாய இலக்குகள் மற்றும் நிறுவன மதிப்புகள் பக்கம் 78 மற்றும் 126 இல் கூறப்பட்டுள்ள படி பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் அங்கிகரிக்கப்பட்ட 2023-2025 காலத்திற்கான வணிக திட்டத்தில் இவை உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அனைத்து மட்ட ஊழியர்களுக்கும் கூட்டங்கள் மற்றும் அறிமுகப்படுத்தல் திட்டங்கள் மூலமாக தொடர்பாடப்பட்டுள்ளது. 2021 இல் தயாரிக்கப்பட்ட 2022-2024 இற்கான வணிக திட்டம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு, 2023-2025 வரை வங்கி மீதான பொருளாதார நெருக்கடி தாக்கங்களை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. வங்கி மதிப்புகள் வங்கியின் வலைதளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
	b. வங்கியினுடைய ஒட்டுமொத்த வணிக தந்திரோபாயம் ஒட்டுமொத்த இடர்க் கொள்கை மற்றும் இடர்முகாமைத்துவ நடைமுறைகள், பொறிமுறைகள் ஆகியவற்றை அளவிடக்கூடிய இலக்குகளுடன் கூடிய வகையில் குறைந்தபட்சம் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு அங்கீகரித்தல்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை மூன்று வருடத்துக்கான மூலோபாய வணிகத்திட்டத்தினை 2023-2025 தயாரிப்பதற்கான வழிகாட்டுதலை வழங்கியுள்ளது இதனை நிறுவன முகாமையுடன் விரிவான கலந்துரையாடலின் பின்னர் பணிப்பாளர் சபை அங்கிகரித்தது. வங்கியின் முழுமையான இடர் முகாமைத்துவ கட்டமைப்பு, நடைமுறைகள் மற்றும் இடர் தாங்கிகொள்ளும் தன்மை என்பவற்றோடு மூலோபாய வணிகத்திட்டம் இணைக்கப்பட்டுள்ளது. மூலோபாய வணிகத்திட்டமானது அடுத்த மூன்று வருடங்களுக்கான அளவிடக்கூடிய நோக்கங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. மூலோபாய வணிகத்திட்டமானது வருடந்தோறும் புதுப்பிக்கப்பட்டு மற்றும் ஆய்வு செய்யப்படும் சுழலும் திட்டமாகும். 2023-2025. காலத்துக்கான மூலோபாய வணிகத் திட்டமானது 09 மார்கழி 2022 விஷேட பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.
	c. பிரதானமான இடர்களை அடையாளம் கண்டு அத்தகைய இடர்களில் இருந்து பாதுகாப்பு தரும் வகையில் முகாமை செய்வதற்கான பொருத்தமான முறைமைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் இடர் கொள்கையை அங்கீகரிக்கும் பொறுப்பு சபை ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு உள்ளது. முக்கிய அபாயங்களை கண்டறிதல், நிர்வாக கட்டமைப்புகளை அமைத்தல் மற்றும் அளவிட கண்காணித்தல் மற்றும் பிரதான இடர்களை முகாமை செய்தல் இதில் உள்ளடங்கும். பின்வரும் அறிக்கைகள் இது தொடர்பில் விபரங்கள் வழங்கும்: ● இடர் மீளாய்வு அறிக்கை பக்கம் 208 முதல் 236 ● பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை பக்கம் 205-206
	d. வைப்பாளர்கள், கடன்பெற்றவர்கள், கடன்கொடுத்தோர் மற்றும் பங்குதாரர் உள்ளடங்கலான அனைத்து அக்கறை உள்ள தரப்பினருனான தொடர்பாடல் பற்றிய கொள்கை ஒன்றினை நடைமுறைப்படுத்துவதை அங்கீகரித்தல்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியானது பணிப்பாளர் சபை அங்கிகரித்த அனைத்து அக்கறைதாரர்களையும் உள்ளடக்கிய வினைத்திறனான மற்றும் நேரத்தினை உறுதி செய்யும் தொடர்பாடல் கொள்ளையை அமுல்படுத்தியுள்ளது.
	e. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகள் ஆகியவற்றின் போதுமான தன்மை மற்றும் நாணயத் தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது. சபை கணக்காய்வுக் குழு மற்றும் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுக்களானது வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை ஆகியவை தொடர்பான போதுமான தன்மை மற்றும் நாணயத் தன்மை விடயங்களில் பணிப்பாளர் சபைக்கு உதவி வழங்குகிறது. உள்ளக கணக்காய்வு பிரிவு மற்றும் இது தொடர்பான அரசு கணக்காய்வு மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை சபை கணக்காய்வுக் குழுக்களால் மற்றும் சபை ஒருங்கிணைந்த முகாமைத்துவ மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அது தொடர்புபட்ட முகாமைத்துவத்தின் பதில்கள் பெறப்படுகின்றன.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	f. சர்வதேச கணக்கீட்டு நியமங்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட வகையில் பிரதம முகாமைத்துவ நபர்களை அடையாளம் கண்டு குறித்தொதுக்குதல்.	இணங்கப்பட்டுள்ளது. பிரதம முகாமைத்துவ நபர்களை (KMP) சர்வதேச கணக்கீட்டு நியமம் இவர்கள், கொள்கை, நேரடி நடவடிக்கைகள் மற்றும் வணிக நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் இடர் மேலாண்மை ஆகியவற்றில் கணிசமாக செலவாக்கு செலுத்தும் நிலையில் உள்ளனர். நியமிக்கப்பட்ட அனைத்து பிரதம முகாமைத்துவ நபர்களையும் நியமனம் செய்தல், BNC இனால் பரிந்துரைக்கப்பட்டு சபையினால் அங்கிகரிக்கப்படுகிறது. நிறுவன ஆளுகை தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல் படி பொது முகாமையாளர், சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்கள், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள் மற்றும் தொடர்புபட்ட தரங்களில் உள்ள அதிகாரிகளை, வங்கி பிரதம முகாமைத்துவ நபர்களாக அடையாளம் கண்டுள்ளது.
	g. பணிப்பாளர்கள் தமக்காகவும் பிரதம முகாமைத்துவ நபர்களுக்காகவும் அதிகாரப் பரப்புகள் மற்றும் பொறுப்புக்களை வரையறை செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் அதிகாரப் பரப்பு தொடர்பான விடயங்கள் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 7 இன் படி ஆளுகை செய்யப்படுகின்றன. தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் சபை பட்டயமானது பணிப்பாளர் சபையின் அதிகாரப்பரப்பு மற்றும் பொறுப்புகளை விவரிக்கிறது இது வருடத்தினுள் மீளாய்வு செய்யப்பட்டது. சபையின் மனித வள மற்றும் சம்பள குழுவானது பிரதம முகாமைத்துவ பர்களது அதிகார பரப்புக்கள் மற்றும் பொறுப்புகளை வரையறை செய்துள்ளதுடன் ஒவ்வொரு பிரதம முகாமைத்துவ நபர்களினதும் தொழில் விபரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
	h. சபையின் கொள்கைக்கு இணக்கமான வகையில் வங்கி மற்றும் பிரதம முகாமைத்துவ நபர்கள் ஆகியோரது விவகாரங்கள் தொடர்பான பொருத்தமான மேற்பார்வை நடைமுறையில் உள்ளதை உறுதி செய்தல்	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையானது வங்கியின் மூலோபாய வணிகத்திட்டத்திற்கு அமைய வங்கியின் செயற்திறனினை ஆய்வு செய்கிறது. சபையின் உப குழுவானது நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பான அறிக்கையினை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கும். மேலும் பிரதம முகாமைத்துவ நபர்கள் தமது பொறுப்பெல்லைக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக கிரமமான முன்னிலைப்படுத்தலை மேற்கொள்வதுடன் அவை தொடர்பான விளக்கங்களை அளிக்குமாறு பணிப்பாளர் சபையினால் அழைக்கப்படுவர்.சபையினால் பிரதம முகாமைத்துவ நபர்களது அதிகாரப்பகிர்வு வரையறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
	i. அவசியமான போது, பணிப்பாளர்கள் மற்றும் பிரதம முகாமைத்துவ நபர்களது தெரிவு, நியமனம், தேர்தல் மற்றும் முகாமைத்துவ அக்கறை முரண்பாடுகள், பலவீனங்களை அடையாளம் கண்டு மாற்றங்களை நடைமுறைப்படுத்துதல் உள்ளடங்கலான பணிப்பாளர் சபையின் சுய ஆளுகை நடைமுறைகளின் பயனுறுதித்தன்மையை சீரான கால இடைவெளிகளில் மதிப்பீடு செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள் பங்குதாரர்களினால் செய்யப்படுகிறது. சுய மதிப்பீடு, சபையின் செயற்திறன் அதன் மதிப்பீடு ஆண்டு தோறும் மேற்கொள்ளப்படுகிறது. 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் நிர்வாகத்தின் தொடர்புடையவர்களுக்கிடையான கொடுக்கல்வாங்கல்களின் முரண்பாடுகள் தொடர்பில் விபரிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் காலாண்டு அறிவிப்புக்கள் நபர்கள் மற்றும் அவர்களின் நலன்களைப் பெற்று பணிப்பாளர்கள் கருத்து வேற்றுமைகள் ஏதேனும் இருந்தால் பணிப்பாளர்களால் அவை கண்காணிக்கப்படுகிறது.
	j. பிரதம முகாமைத்துவ நபர்கள் தொடர்புபட்ட வகையில் வங்கியானது பொருத்தமான தொடர்ந்து செல்கைத் திட்டம் ஒன்றினை கொண்டிருப்பதனை உறுதி செய்தல்	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான எதிர்காலத் திட்டமொன்று நடைமுறையில் உள்ளது.
	k. தேவைகளின் அடிப்படையில் கொள்கைகளை மீளாய்வுக்கு உட்படுத்தல், தொடர்பாடல் வசதிகளை உருவாக்குதல் மற்றும் கூட்டு வணிக நோக்கங்களை நோக்கிய செயற்பாடுகளை கண்காணித்தல் ஆகிய நோக்கங்களுக்காக பிரதம முகாமைத்துவ நபர்களுடன் கிரமமான சந்திப்புகளை மேற்கொள்ளுதல்.	இணங்கப்பட்டுள்ளது. பிரதம முகாமைத்துவ நபர்கள் பெறுபேறுகள், தந்திரோபாயம், கொள்கை மற்றும் தமது பொறுப்புக்களுக்கு உட்பட்ட பகுதிகள் தொடர்பாக பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் கலந்துரையாடல்களில் முறையாக தொடர்புபடுகின்றார்கள். மேலும் பிரதம முகாமைத்துவ நபர்கள் தமது பொறுப்புக்கு உட்பட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாக முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்வதுடன் கொள்கைகள் மற்றும் கூட்டு வணிக நோக்கங்கள் ஆகியவை தொடர்பான பொருண்மையான விடயங்களில் விளக்கமளிப்புகளை மேற்கொள்ளுமாறு சபை மற்றும் உப குழுக்களால் அழைக்கப்படுகின்றனர். மேலும், கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை மாற்றங்கள் தொடர்பில் மாதாந்த இணங்கிவிப்பு அறிக்கையானது இணங்கிவிப்பு அலுவலரினால் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	l. ஒழுங்கு விதிமுறை சூழலினை விளங்கிக்கொண்டு வங்கியானது ஒழுங்கு விதியாளர்களுடன் பயனுறுதி வாய்ந்த உறவுமுறையை பேணுவதனை உறுதி செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களின் நியமனத்தின் போது தேவையான ஒழுங்கு விதிமுறைகள் கையளிக்கப்படுகின்றன. இணங்கிவிப்பு அதிகாரி ஒழுங்கு விதிமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்துவதுடாக அவர்களது பணியை செவ்வனே செய்ய முடிகிறது.
	m. வெளிவாரிக் கணக்காய்வாளர்களை பணிக்கு அமர்த்துதல் மற்றும் மேற்பார்வை ஆகிய விடயங்களில் போதிய அக்கறை செலுத்தப்படுதல.	இணங்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக சோலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது சரத்து மற்றும் அரசுடமை வங்கி என்னும் வகையில் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் 37 ஆம் பிரிவு ஆகியவற்றுக்கு அமைவாக கணக்காய்வு தலைமை அதிகாரி அவர்களே வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர் ஆவார்.
3 (1) (ii)	பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரை நியமித்து இந்த கட்டளைகளின் கட்டளை இலக்கம் 3 (5) இற்கு அமைவாக தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை வரையறை செய்து அங்கீகரிக்கும்.	இணங்கப்பட்டுள்ளது. கட்டளையின் பிரிவு 3 (9) (ii) உடன் இணைத்து வாசிக்கவும் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 11 (1) மற்றும் அதன் திருத்தச் சட்டமாகிய 1995 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தலைவர் அமைச்சரினாலேயே நியமிக்கப்படுவார். தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 26 (i) குறிப்பிடுவதன் படி பணிப்பாளர் சபை பொருத்தமான, தகுந்த நபர் ஒருவரை வங்கியின் பொது முகாமையாளராக நியமிக்க அவரே வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் தொழிற்படுவார். தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டளையின் பிரிவு 3 (5) இற்கு அமைவாக, தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது பொறுப்புகள் வேறுபட்டு காணப்படுவதுடன் அவை வரையறுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
3 (1) (iii)	பணிப்பாளர் சபையானது கிரமமான முறையில் ஒன்று கூடுவதுடன் ஏறத்தாழ ஒரு மாத இடைவெளியில் ஒவ்வொரு ஆண்டும் பணிப்பாளர் சபை குறைந்தபட்சம் 12 தடவைகள் ஒன்று கூடி இருத்தல் வேண்டும். அத்தகைய கிரமமான பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு சமூகம் அளிப்பதற்கு தகமை வாய்ந்த பணிப்பாளர்களில் பெரும்பான்மையானவர்களது நேரடியான ஆரோக்கியமான பங்குபற்றலுடன் கூட்டம் இடம் பெற்றிருக்க வேண்டும். இயலுமான வரையில் எழுத்து மூலமான சுற்றுநிருப தீர்மானங்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுடைய ஆரோக்கியமான பங்குபற்றுதலுடன் கிரமமான சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு சமுகம் அளித்தவர்கள் தொடர்பான விபரங்கள் பக்கம் 190 இல் கூட்டங்களின் எண்ணிக்கையுடன் வழங்கப்பட்டுள்ளது. வங்கியானது எழுத்து மூலமான சுற்றுநிருபம் மூலம் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை இயன்றளவு விதிவிலக்கான நிலைமை தவிர்த்து குறைப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. அப்படியான முடிவுகள் எதிர்வரும் சபைக் கூட்டத்தில் உறுதி செய்யப்படும்.
3 (1) (iv)	வணிகத்தின் மேம்படுத்தல் மற்றும் இடர்களின் முகாமைத்துவம் ஆகியன தொடர்பாக வழக்கமான சபைக் கூட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் தமது வாதங்கள் மற்றும் முன்மொழிவுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் காணப்படுவதை சபை உறுதி செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. ஒரு வாரம் முன்பதாகவே அடுத்து வரும் கூட்டத்தில் இடம்பெறவுள்ள உப நிகழ்ச்சிநிரல் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் மற்றும் பணிப்பாளர்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட வேண்டிய வங்கியின் வியாபார முன்மொழிவுகளை தலைவருக்கு சமர்ப்பிப்பார்கள்.
3 (1) (v)	வழக்கமான கூட்டங்களுக்கு அனைத்து பணிப்பாளர்களும் பங்களிக்கும் வகையில் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்பதாகவே அறிவித்தல் வழங்கப்படுவதனை பணிப்பாளர் சபை செயன்முறைகள் உறுதி செய்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் ஏனைய கூட்டங்களுக்கு நியாயமான அறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. கூட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கலான தனது கலந்துரையாடல்களில் பங்குபற்ற இருக்கும் மற்றும் அவசரமான முன்மொழிவுகளை மேற்கொள்வதற்கும் பணிப்பாளர்களுக்கு வசதி அளிக்கும் வகையில் அவசர சுற்றுநிருபம் தவிர்ந்த ஏனையவை குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்பதாகவே இலத்திரனியல் சுற்றுநிருபம் செய்யப்படும். ஒரு சிறப்புக் கூட்டத்தை திட்டமிடுவதற்கு முன் நியாயமான அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அனைத்து பணிப்பாளர்களின் அனுமதி பெறப்படும் மற்றும் ஏதேனும் அவசர முன்மொழிவுகளும் சமர்பிக்கப்படும்.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (1) (vi)	சமீபத்தில் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் இடம்பெற்ற கூட்டங்களில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு அளவான கூட்டங்களுக்கு சமுகமளிக்காத பணிப்பாளர்கள் அல்லது சமீபத்தில் இடம்பெற்ற மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளிக்காத பணிப்பாளர்கள் பதவி விலக்கப்படுவதனை பணிப்பாளர் சபை செயன்முறைகள் உறுதி செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வங்கி சட்ட கட்டளைகளுக்கு அமைவாக பணிப்பாளர்களது வருகையானது மதிப்பீடு செய்யப்படும். பணிப்பாளர்களது வருகை தொடர்பான விபரங்கள் பக்கம் 190 இல் தரப்பட்டுள்ளது. எந்த ஒரு பணிப்பாளர்களும் கடந்த 12 மாதங்கள் அல்லது மூன்று தொடர்ச்சியாக கூட்டங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு சமுகமளிக்க தவறவில்லை.
3 (1) (vii)	1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டத்தின் நாற்பத்து மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்தி செய்கின்ற வகையில் கம்பனி செயலாளர் ஒருவரை பணிப்பாளர் சபை நியமித்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை செயலாளர் 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கி சட்டத்தின் 43 ஆம் பிரிவுக்கு இணக்கமான வகையில் ஒரு சட்டத்தரணியாக இருக்கின்றார்.
3 (1) (viii)	பணிப்பாளர் சபையின் செயன்முறைகள் யாவும் பிரயோகிக்கப்பட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின்படி பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் கம்பனி செயலாளரது சேவைகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான அணுகை அனைத்து பணியாளர்களுக்கும் காணப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபை செயன்முறை இடம்பெறுவதை உறுதி செய்யும் பொறுப்பினை கொண்ட செயலாளரிடம் இருந்து தேவையான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான அனுமதி அனைத்து பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
3 (1) (ix)	கம்பனி செயலாளர் பணிப்பாளர் சபை கூட்டத்தின் அறிக்கைகளை பேணுவதுடன் கூட்ட அறிக்கைகள் எந்த ஒரு பணிப்பாளரும் நியாயமான முன்னறிவித்தலின் பெயரில் பார்வையிடுவதற்கு அனுமதி காணப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் செயலாளர் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகளை சபைக்கு சுற்றுநிருபம் செய்கின்றார். அடுத்து வரும் கூட்டத்தில் அந்த அறிக்கைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.
3 (1) (x)	பணிப்பாளர் சபையானது தமது கடமைகளை செயற்படுத்தும் போது போதுமான கவனம் மற்றும் பாதுகாப்புடன் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்வதற்கு அவசியமான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் போதுமான தகவல்களுடன் கூட்ட அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். மேலும் ஒழுங்குவிதி அமைப்புகள் மற்றும் மேற்பார்வை அமைப்புகள் சபையின் கலந்துரையாடல் மற்றும் கூட்டம் தொடர்பான விடயங்களை மதிப்பீடு செய்வதற்கான ஒரு அடிப்படையாக கூட்ட அறிக்கைகள் காணப்படுதல் வேண்டும். ஆகவே பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையானது பின்வரும் விடயங்களை தெளிவாக பதிவு செய்தல் வேண்டும்: (a) பணிப்பாளர் சபை தனது கலந்துரையாடல்களின் போது பயன்படுத்திய தகவல்கள் மற்றும் தரவு முதலியவற்றின் சுருக்கம் (b) சமீபத்தில் கருத்தில் எடுக்கப்பட்ட விடயங்கள் (c) பணிப்பாளர் சபை தமது கடமைகளை செயன்முறைப்படுத்தும் போது, போதுமான கவனம் மற்றும் பாதுகாப்புடன் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்யும் வகையில் விடயங்களைக் கண்டுபிடிக்கும் கலந்துரையாடல் தொடர்பான ஏற்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட கருத்துக்கள் (d) சபையின் தந்திரோபாயங்கள் கொள்கைகள் ஆகியன அமைப்புக்குப் பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணக்கமாகவும் காணப்பட்டமை உறுதி செய்யும் நிர்வாக உறுப்பினர்களது சுருக்கவுரை மற்றும் உறுதிப்படுத்தல்கள் (e) பின்பற்றப்பட்ட இடர்முகாமைத்துவ நடைமுறைகளில் ஒரு மேலோட்டமான பார்வை என்ற வகையில் பணிப்பாளர் சபையின் இடர்கள் தொடர்பான அறிவு மற்றும் புரிந்துணர்வு, மற்றும் (f) தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபை முடிவுகள்	இணங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள மூல பிரமாணங்களுக்கு இணக்கமான முறையில் கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (1) (xi)	அவசியமான சந்தர்ப்பங்களில் நியாயமான வேண்டுகோளின் அடிப்படையில் பணிப்பாளர்கள் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும் அதற்கான செலவினங்களை வங்கி பொறுப்பேற்கவும் அடிப்படையான பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட படிமுறை காணப்படுதல் வேண்டும். வங்கிக்கான தமது கடமை தொடர்பாக ஒரு பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களுக்கு பொருத்தமான தொழில்சார் சுயாதீன ஆலோசனை மூலம் உதவி அளிப்பதற்கான தனியான தீர்மானத்தினை பணிப்பாளர் சபை மேற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் பிரிவு 27 கூறுகிறது, சபை தனது கடமைகளை நிறைவேற்ற, தேவைப்படும் போது சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையைப் பெறமுடியும். அவசியமான சூழ்நிலைகளில் வங்கியின் செலவில் பணிப்பாளர்கள் தமக்கு அவசியமான சுயாதீன தொழில்சார் ஆலோசனைகளை நியாயமான கோரிக்கையின் பேரில் பெற்றுக் கொள்வதற்கான பணிப்பாளர் சபை பட்டயம் நடைமுறையில் உள்ளது.
3 (1) (xii)	பணிப்பாளர்கள் தமது, ஏனைய நிறுவனங்கள் மீதான அல்லது உறவுமுறை தரப்பினருடனான ஈடுபாடுகளில் அக்கறை முரண்பாடுகள் அல்லது அக்கறை முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய தோற்றப்பாடுகள் ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. நியமனத்தின் போது மற்றும் வருடாந்த அடிப்படையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது, தமது அக்கறைகள் தொடர்பாக பணிப்பாளர்கள் பிரகடனங்களை மேற்கொள்கின்றார்கள். அக்கறை முரண்பாட்டு நிலைமை ஒன்று காணப்படும் போது அத்தகைய சூழ்நிலைகளை பணிப்பாளர்கள் கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல், தமது கருத்துக்களை வழங்குதல், அங்கீகரித்தல் ஆகிய நடவடிக்கைகளிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். அத்துடன், அத்தகையோர் பணிப்பாளர் அத்தகைய சூழ்நிலைகளில் கூட்ட வருகை உரிமையில் கணக்கில் எடுக்கப்படுவதில்லை.
3 (1) (xiii)	வங்கியினுடைய திசைமுகப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு ஆகியன நிலைத்த தன்மையில் தமது அதிகாரத்தின் கீழ் தொழிற்படுத்த படுவதனை உறுதி செய்யும் வகையில் பணிப்பாளர் சபை தமது தீர்மானத்துக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக முறைசார்ந்த அட்டவணை ஒன்றினை பெறுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. கடமைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட வலுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பட்டயம் விவரிக்கிறது. வங்கியானது தீர்க்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் ஆண்டுக் காலப்பகுதியில் போது அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை.
3 (1) (xiv)	வங்கியானது தனது கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாத போது அல்லது முறிவடையும் நிலையை அடையும் போது அல்லது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கான கொடுப்பனவுகளை நிறுத்தும் போது அல்லது அத்தகைய சாத்தியத்தன்மை ஒன்று ஏற்படும் போது பணிப்பாளர் சபை அல்லது அது தொடர்பாக பங்கு ஏதேனும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்பதாகவே இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைக்கு பொறுப்பாக உள்ள பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கி தீர்ப்பனவு இயலுமையைக் கொண்டுள்ளதுடன், அத்தகைய சூழ்நிலைகள் எவையும் ஆண்டுக்காலப்பகுதியில் ஏற்பட்டிருக்கவில்லை.
3 (1) (xv)	மூலதன போதுமை விகிதம் மற்றும் ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகளில் அடிப்படையில் சபையின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமான வகையில் அனைத்து மட்டங்களிலும் வங்கி போதுமான மூலதனமாக்கலை மேற்கொள்வது பணிப்பாளர் சபையினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் வரையறுக்கப்பட்ட இடர் ஏற்பு எல்லையினுள் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணக்கமான வகையில் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மூலதன போதுமை தொடர்பான விடயங்களை பணிப்பாளர் சபை கண்காணிக்கிறது. பாசல் III - வங்கிச்சட்டத்தின் நியமம் 2016 இல. 01, தூண் 111 இற்கு கீழான வெளிப்படுத்தல்கள் பக்கம் 442 முதல் பக்கம் 453 வரை பார்க்கவும்.
3 (1) (xvi)	இந்த கட்டளைகளின் மூன்றாவது கட்டளைக்கு அமைவாக வங்கியினுடைய ஆண்டு அறிக்கை மற்றும் வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கை ஆகியவற்றை பணிப்பாளர் சபை பிரசுரித்தல் வேண்டும்	இணங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது வருடாந்த முதல் அறிக்கையில் பக்கம் 178 - 198 இல் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை அறிக்கையின் ஒரு பகுதியாக அமைகிறது.
3 (1) (xvii)	வருடாந்திர அடிப்படையில் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் ஆளும் சுயமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அத்தகைய மதிப்பீடுகள் தொடர்பான பதிவுகள் பேணப்படுவதற்கான முறை ஒன்றினை பணிப்பாளர் சபை பின்பற்றுதல் வேண்டும்.	வங்கியானது வருடாந்த அடிப்படையில் பணிப்பாளர்கள் மேற்கொள்ளப்படும் சுய மீளாய்வுப் பரிசோதனை ஒன்றினை பின்பற்றுகிறது. இருப்பினும் பெரும்பாலான பணியாளர்களின் பதவிக்காலம் வருட ஆரம்பத்தில் நிறைவடைந்தமையால் 2022 இற்கான சுய மீளாய்வுப் பரிசோதனை பூர்த்தி செய்யப்படவில்லை.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (2)	**சபையின் உள்ளடக்கம்**	
3 (2) (i)	பணிப்பாளர் சபையில் உள்ள பணிப்பாளர்கள் எண்ணிக்கையானது 7க்கு குறையாத வகையிலும் 13க்கு அதிகரிக்காத வகையிலும் காணப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 8(1) இன் படி தலைவர் உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை ஏழு பணிப்பாளர்களைக் கொண்டிருக்கின்றது. 2022 ஆம் நிதியாண்டிற்கான பணிப்பாளர்கள் பற்றிய தகவல்களை இவ்வறிக்கையின் பக்கம் 184 முதல் 186 வரை தரப்பட்டுள்ளது. தற்போதைய சபையின் விபரம் இவ்வறிக்கையின் பக்கம் 170 முதல் 172 இல் தரப்பட்டுள்ளது.
3 (2) (ii)	a. பிரதம நிறைவேற்று அதிகாரியாகவுள்ள பணிப்பாளர் ஏனைய பணிப்பாளர்களது 2022 ஆம் நிதியாண்டிற்கான பணிப்பாளர்கள் பதவிக்காலம் 9 ஆண்டுகளை விட அதிகரித்தல் ஆகாது.	இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் நிதியாண்டிற்கான பணிப்பாளர்கள், தற்போதுள்ள எந்த ஒரு பணிப்பாளரும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கவில்லை. 2022 ஆம் நிதியாண்டிற்கான பணிப்பாளர்கள் பற்றிய தகவல்களை இவ்வறிக்கையின் பக்கம் 184 முதல் 186 வரை தரப்பட்டுள்ளது. தற்போதைய சபையின் விபரம் இவ்வறிக்கையின் பக்கம் 170 முதல் 172 இல் தரப்பட்டுள்ளது.
	b. 1 ஜனவரி 2008 அன்று 9 வருடங்களை பூர்த்தி செய்த பணிப்பாளர் ஒருவர் அல்லது 31 டிசம்பர் 2008 க்கு முன்னர் அத்தகைய காலத்தினைப் பூர்த்தி செய்யும் இயக்குனர் ஒருவர் 1 ஜனவரி 2009 க்குப் பின்னர் ஆகக் கூடுதலாக மூன்று ஆண்டுகள் மாத்திரமே பதவியில் நீடிக்க முடியும்.	இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் நிதியாண்டிற்கான பணிப்பாளர்கள், தற்போதுள்ள எந்த ஒரு பணிப்பாளரும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கவில்லை.
3 (2) (iii)	நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கையானது பணிப்பாளர் சபையில் உள்ள மொத்த பணிப்பாளர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றினை விட அதிகரிக்கவில்லை என்னும் நிபந்தனையை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வங்கி ஊழியர் ஒருவர் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட, தெரிவு செய்யப்பட அல்லது பதவி வழங்கப்பட (இனி வரும் பகுதிகளில் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர் என குறிப்பிடப்படும்) முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தொழிற்படுவார்.	இணங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள். நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இன் 30 ஆம் இலக்கம் மற்றும் திருத்தங்கள் உள்ளடக்கவில்லை.
3 (2) (iv)	வங்கியானது குறைந்த பட்சம் மூன்று அல்லது மொத்த பணிப்பாளர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று, இதில் அதிகமான எண்ணிக்கையில் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும்.	2022 ஆம் நிதியாண்டிற்கான பணிப்பாளர் சபையானது இரண்டு சுயாதீன பணிப்பாளர்களையும் ஐந்து சுயாதீனமற்ற பணிப்பாளர்களையும் கொண்டிருத்தது. தற்போதைய பணிப்பாளர் சபை ஐந்து பணிப்பாளர்களை உள்ளடக்கியதுடன் அதில் இரண்டு பதவிவழிப் பணிப்பாளர்களையும் (திறைசேரி மற்றும் தபால்மா அதிபரின் பிரதிநிதிகள்), மூன்று பணிப்பாளர்கள் விடய அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய சபையில் இரண்டு சுயாதீன பணியாளர்களும் மூன்று சுயாதீனமற்ற பணியாளர்களும் அடங்குகின்றனர். நிதியாண்டிற்கான பணிப்பாளர்களின் வகை தொடர்பான விபரம் பக்கம் 184 முதல் 186 இலும் தற்போதைய சபை விபரம் 170 முதல் 172 இல் தரப்பட்டுள்ளன.
3 (2) (v)	சுயாதீனமான இயக்குனர் ஒருவருக்கு பதிலாக ஒரு பதில் இயக்குனர் நியமிக்கப்படும் பட்சத்தில் அந்த பதிலாக நியமிக்கப்பட்டவர் சுயாதீன இயக்குனருக்கு இருக்க வேண்டிய மூல பிரமாணங்களை திருப்தி செய்திருத்தல் வேண்டும்.	பொருத்தமற்றது. எந்தவொரு சுயாதீன பணிப்பாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்த மாற்று பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தில் அதற்கான எந்த இடமும் அளிக்கப்படவில்லை.
3 (2) (vi)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் சீரான பெறுபேற்றுப் பதிவுகள் மற்றும் தந்திரோபாயம், பெறுபேறுகள், வளங்கள் ஆகியன தொடர்பாக சுயாதீனமான தீர்மானங்களை எடுக்க கூடிய வகையில் அவசியமான திறன்கள் மற்றும் அனுபவங்களை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களின் சுயவிவரங்கள் உட்பட தேவையான தகவல்கள் முறையே பின்வருமாறு தரப்பட்டுள்ளது. 2002 ஆம் நிதியாண்டிற்கான பக்கம் 184 முதல் 186. இலும் தற்போதைய சபை விபரம் 170 முதல் 172 இல் தரப்பட்டுள்ளன.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (2) (vii)	பணிப்பாளர் சபை கூட்டம் ஒன்றுக்கு சமுகம் அளிக்க வேண்டிய ஆகக் குறைந்த எண்ணிக்கையிலான பணிப்பாளர்கள் சமூகமளித்து இருந்தாலும் கூட சமூகமளித்து இருக்கும் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற இருக்கும் பட்சத்தில் பணிப்பாளர் சபை கூட்டம் முறையாக கொண்டு நடத்தப்பட முடியாது.	இணங்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி கூட்டம் ஒன்றுக்கான குறைந்தபட்ச வரவு எண்ணிக்கை நான்கு. இது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் அதிகமாக உள்ளது. வங்கியின் அனைத்து ஏழு பணிப்பாளர்களுமே நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் ஆவர்.
3 (2) (viii)	நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்கள் வங்கியின் பணிப்பாளர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு வணிக தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டப்படும்.	இணங்கப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்கள் வங்கியின் பணிப்பாளர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு வணிக தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டப்படும். தலைவர், நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், சுயாதீன மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர்களின் பெயர்கள் உட்பட பணிப்பாளர்களின் வகையின் அடிப்படையில் 2022 ஆம் நிதியாண்டின் சபையின் அமைப்பு பக்கம் 180 முதல் 183 வரை மற்றும் தற்போதைய சபை அமைப்பு பக்கம் 190 இல் கொடுக்கப்பட்டுள்ளது.
3 (2) (ix)	பணிப்பாளர் சபைக்கு புதிய பணிப்பாளர் நியமிப்பதற்கான முறை சார்ந்த வெளிப்படையான செயன்முறை காணப்படுதல் வேண்டும். மேலும் பணிப்பாளர் சபைக்கான நியமனத்தின் தொடர்ச்சித் தன்மைக்கான வழிமுறைகளும் காணப்படுதல் வேண்டும்.	தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 8 (1) (அ) இன் படி அனைத்து பணிப்பாளர் நியமனங்களும் அமைச்சரினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி ஐந்து பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.ஒரு பணிப்பாளர் திறைசேரியின் செயலாளராக இருப்பார் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்டவர் மற்ற பணிப்பாளர் தபால் மா அதிபர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.
3 (2) (x)	வழக்கமான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நியமிக்கப்படும் ஒவ்வொரு பணிப்பாளர்களும் அவர்களது நியமனத்தின் பின்னர் வரும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வைத்து பங்குதாரர்களின் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.	தொடர்பற்றது. தொடர்புபட்ட அமைச்சரினால் நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதனால் இப்பகுதி அவசியமற்றது.
3 (2) (xi)	பணிப்பாளர் ஒருவர் பதவி விலகினால் அல்லது பதவி விலக்கப்பட்டால்: a. பணிப்பாளர் சபை குறித்த பணிப்பாளர் பதவி விலகி இருக்கிறார் அல்லது அதுவும் பதவி விலக்கப்பட்டு இருக்கிறார் என்பதனை அதற்குரிய காரணங்களுடன் குறிப்பிட்டு பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய விடயங்கள் காணப்படுகின்றனவா இல்லையா என்பது தொடர்பான ஒரு கூற்றினை வழங்குதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு பங்குதாரராக உள்ள இலங்கை அரசாங்கம் தொடர்புபட்ட, வங்கிக்கான அமைச்சர் ஊடாக பணிப்பாளர்களது நியமனங்கள் மற்றும் பதவி விலக்கல்களை மேற்கொள்கிறது. ஏதேனும் பதவி விலகல்களும் குறித்த அமைச்சரினாலே பரிந்துரைக்கப்படும். இலங்கை மத்திய வங்கிக்கு பதவி விலகல் தொடர்பில் அறிவிக்கப்படும்.
	b. பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் தொடர்பிலான அறிக்கையினை வெளியிடல்.	ஒரே ஒரு பங்குதாரராக இலங்கை அரசாங்கம் உள்ளது மற்றும் அமைச்சரினூடாக பதவிவழிப் பணிப்பாளர்கள் தவிர்ந்த ஏனைய ஐந்து அங்கத்தவர் கொண்ட பணிப்பாளர் சபை தொடர்பிலான மாற்றம் இடம்பெறும்.
3 (2) (xii)	மற்றொரு வங்கியானது இவ்வங்கியின் சேய் கம்பனியாகவோ அல்லது துணைக் கம்பனியாகவோ இல்லாதவிடத்து பணிப்பாளர் அல்லது ஊழியர் ஒருவர் மற்றொரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்படவோ, தேர்தலில் தெரிவு செய்யப்படவோ அல்லது பதவி வழங்கப்படவோ முடியாது.	2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தேசிய சேமிப்பு வங்கி தனது பங்கு உரிமையினை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் வங்கியின் ஊழியராக உள்ள சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமித்துள்ளதுடன் திரு. ஐயந்த இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளராக நியமித்ததுடன் தவிர வேறு எந்த பணிப்பாளர் மற்றும் ஊழியர் ஏனைய வங்கிகளில் பணிப்பாளராக நியமிக்கப்படவில்லை.
3 (3)	**பணிப்பாளர்களது தகமை மற்றும் பொருத்தமான தன்மையினை மதிப்பீடு செய்வதற்கான மூலம் பிரமாணங்கள்**	
3 (3) (i) (a) & (b)	பணிப்பாளராக பணியாற்றும் எந்த ஒரு நபரது வயதும் 70 வருடங்களுக்கு மேற்படுதலாகாது.	இணங்கப்பட்டுள்ளது. 70 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு பணிப்பாளரும் காணப்படவில்லை.
3 (3) (ii)	எந்த ஒரு நபரும் துணை கம்பனிகள் மற்றும் சேய் கம்பனிகள் உள்ளடங்களாக 20க்கும் மேற்பட்ட உரிமங்கள் அல்லது நிறுவனங்களுக்கு பணிப்பாளராகப் பணியாற்றலாகாது.	இணங்கப்பட்டுள்ளது. சேய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கும் மேற்பட்ட கம்பனிகள், உரிமங்கள் அல்லது நிறுவனங்களுக்கு எவரொருவரும் பணிப்பாளராக கடமையாற்றவில்லை.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (3) (iii)	இலங்கையில் தொழிற்படும் உரிமம் பெற்ற வங்கியின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி அக்குறிப்பிட்ட வங்கியில் அவரது பதவிக்காலம் நிறைவடைந்து ஆறு மாதங்களுக்கு முன்பாக மற்றுமொரு இலங்கையில் தொழிற்படும் வங்கியின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமனம் செய்யப்படமுடியாது. மீள்கட்டமைப்புக்குள்ளாகும் உரிமம் பெற்ற வங்கிகளின் சபையை மீளமைக்கும் போது ஒய்வு பெற்ற வங்கியாளர்களின் நிபுணத்துவம் தேவைப்படுவது போன்ற அசாதாரண சந்தர்ப்பங்களில் நிகழும் மாறுதல்களானவை, நாணயச் சபையிடம் முன்னதாகவே பெறப்பட்ட அனுமதிக்குட்பட்டதாகும். இது தொடர்பில், உரிமம் பெற்ற வங்கிகளானவை பணிப்பாளர்கள், அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியை நியமனம் செய்யும் போது ஆறப்போடும் இடைவெளித் தேவைப்பாட்டுடன் இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். இத்தகைய பணிப்புரைகளை மீறி நியமனம் செய்யும் சபையால் ஒரு பணிப்பாளர் நியமனம் செய்யப்படும் போது, உரிமம் பெற்ற வங்கிகளானவை அத்தகைய நியமனம் பெற்றவர் இந்த பணிப்புரைக்கெதிராக ஏதேனும் அதிகாரத்தை பிரயோகம் செய்தல் மற்றும் ஏதேனும் சலுகைகளை அனுபவிப்பதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் இச்சந்தர்ப்பம் உருவாகவில்லை.
3 (4)	**பணிப்பாளர் சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்**	
3 (4) (i)	நடைமுறையிலுள்ள பகிர்ந்தளித்தல் ஒழுங்குமுறைகளை பணிப்பாளர்கள் கவனமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை குறித்த கால இடைவெளிகளில் அதிகார பகிர்ந்தளிப்பு தொடர்பான விடயங்களில் ஆய்வுக்கு உட்படுத்தி ஏற்றுக்கொள்வதுடன் பணிப்பாளர்கள் தமது கடமைகளை சரியாக நிறைவேற்றி கொள்வதுடன் அதிகாரப் பரம்பல் தொடர்பான விடயங்களிலும் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்கின்றனர்.
3 (4) (ii)	பணிப்பாளர் சபை தமது கடமைகளை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுவதற்கு குந்தகமாக அல்லது பாதகம் விளைவிக்கக் கூடிய வகையில் எந்த ஒரு விடயத்தையும் சபை உபகுழுக்களுக்கோ, பிரதம நிறைவேற்று அதிகாரிக்கோ, நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்களுக்கோ அல்லது பிரதம முகாமைத்துவ நபர்களுக்கோ பகிர்ந்தளிக்க முடியாது.	
3 (4) (iii)	பணிப்பாளர் சபை பகிர்ந்தளித்தல் போன்ற நடைமுறைகளை ஓர் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்வதுடன் அவை வங்கியின் தேவைக்குப் பொருத்தமானவையாக இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும்.	
3 (5)	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**	
3 (5) (i)	தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது வகிபாகம் தனி ஒருவரால் பின்பற்றப்படுதலாகாது.	இணங்கப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகிய வகிபாகங்கள் இரு வேறுபட்ட நபர்களால் கையாளப்படுகின்றன. தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது பொது முகாமையாளரது பொறுப்புகளை வரையறை செய்வதற்கான பணிப்பாளர் சபை பட்டயம் காணப்படுகிறது.
3 (5) (ii)	தலைவர் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளராகவும் அதே வேளை சுயாதீனமானவராக இருத்தல் மிகவும் விரும்பப்படுகிறது. தலைவர் சுயாதீனமான பணிப்பாளராக உள்ள இல்லாத போதும் அவசியமான விடயங்களை ஆவணப்படுத்தி பணிப்பாளர் சபை சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரை சிரேஷ்ட பணிப்பாளராக நியமித்தல் வேண்டும். சிரேஷ்ட பணிப்பாளரின் நியமனம் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.	2022 நிதியாண்டிற்கான வங்கியின் தலைவர் ஒரு சுயதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக உள்ளார். சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் திரு எரங்க ஜெயவர்தன சிரேஷ்ட பணிப்பாளராக வங்கிச்சட்ட கட்டளைக்கு அமைவாக நியமிக்கப்பட்டார்.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (5) (iii)	பணிப்பாளர் சபை என்று தமது நிறுவன ஆளுகை அறிக்கையிலே தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது அடையாளங்கள் மற்றும் அவர்களுக்கு இடையேயான உறவு முறைகளின் இயல்பு பற்றி வெளிப்படுத்துதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் பொது முகாமையாளர்.்பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் அடையாளத்துடன் இணங்குவது ஆண்டறிக்கையில் பக்கம் 197 இல் வெளியிடப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் பொது முகாமையாளர்.்பிரதான நிறைவேற்று அதிகாரிகளுக்கிடையான நிதி வணிக குடும்ப மற்றும் பிற பொருள் தொடர்பான உறவுகள் எதுவும் இல்லை என்பதை சபை அறிந்திருக்கிறது. மேலும் மற்ற சபை உறுப்பினர்களுக்கிடையேயும் எந்த உறவும் இல்லை.
3 (5) (iv)	பணிப்பாளர் சபையின் தலைவர் பணிப்பாளர் சபை தலைமை வழங்கி பணிப்பாளர் சபை தமது பொறுப்புகளை பயனுறுதி வாய்ந்த வகையில் நிவர்த்தி செய்வதையும் பணிப்பாளர் சபை அனைத்து அவசியமான விடயங்களில் உரிய காலப்பகுதியில் பொருத்தமாக கலந்துரையாடப்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தலைவர் பணிப்பாளர் சபைக்கு தலைமை வகிப்பதுடன் பணிப்பாளர் சபையின் பொறுப்புகள் யாவும் உரிய வகையில் நிவர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்கிறார். பணிப்பாளர் சபை அனைத்து முக்கிய விடயங்களை பொருத்தமான காலப்பகுதியில் கலந்துரையாடுகிறது.
3 (5) (v)	தலைவரே பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி அங்கீகரிப்பதற்கான பொறுப்பினை கொண்டிருக்கிறார்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவரின் வழிகாட்டலின் பெயரில் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கிறார்.
3 (5) (vi)	அனைத்து பணியாளர்களுக்கும் சபை கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. உரிய காலப்பகுதியில் பணிப்பாளர்கள் அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபைக் கூட்டங்களில் எழும் விடயங்கள் குறித்து சபைக்கு போதுமான விளக்கமும் தகவலும் அளிக்கப்படுவதை தலைவர் உறுதி செய்கிறார். அதை உறுதிப்படுத்த பின்வரும் நடைமுறைகள் உள்ளன: • சபைக் கூட்டங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு கூட்டப்படுவதுடன், அனைத்து பணிப்பாளர்களும் அவசியமான விடயங்களை மீளாய்வு செய்வதற்கு மற்றும் மேலதிக தகவல்களை கோருவதற்கும் கூட்டங்களின் பின்னர் அவசியமான பின்தொடரலை மேற்கொள்வதற்கும் அவசியமாக ஒவ்வொரு கூட்டங்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு வாரம் முன்பதாக இலத்திரன் வழி மூலம் கூட்ட ஆவணங்கள் சுற்றுநிருபம் செய்யப்படுகின்றன • தேவைப்படும் போது பிரதம முகாமைத்துவ நபர்களால் விடையங்கள் தெளிவுபடுத்தல்.
3 (5) (vii)	அனைத்து பணிப்பாளர்களும் பணிப்பாளர் சபை விடயங்களில் ஆரோக்கியமான பங்களிப்பினை மேற்கொள்வதுடன் வங்கியின் சிறந்த அக்கறையுடன் செயற்படுவதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தலைவரின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பட்டியல் சபை பட்டையத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
3 (5) (viii)	தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களுடைய பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினை உறுதி செய்வதுடன் நிறைவேற்று அதிகாரமுள்ள மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களிடையே இந்த உறவு முறை ஒன்று காணப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. முழுமையான பணிப்பாளர் சபையும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.
3 (5) (ix)	பிரதம முகாமைத்துவ நபர்கள் மற்றும் நிறைவேற்று உறுப்பினர்கள் தொடர்பான நேரடியான மேற்பார்வை விடயங்களில் தலைவர் ஈடுபடுதல் ஆகாது.	இணங்கப்பட்டுள்ளது. தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பதவி நிலையில் செயற்படுவதுடன் பிரதம முகாமைத்துவ நபர்களது செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை.
3 (5) (x)	பங்குதாரர்களுடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலை மேற்கொள்வதற்கான அவசியமான படிமுறைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பங்குதாரர்கள் கருத்துக்கள் பணிப்பாளர் சபைக்கு தொடர்பாடல் செய்யப்படுவதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கி பங்குதாரருடன் அதாவது இலங்கை அரசு, பயனுள்ள தகவல்தொடர்புகளை வைத்திருக்கிறது. தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக பதவி வழிப்பணிப்பாளர் நியமிக்கப்பட்டு, சபை மற்றும் பங்குதாரர்களுக்கு இடையிலான தகவல்தொடர்பு ஊடகமாக செயல்படுகிறார்.
3 (5) (xi)	வங்கி ஊழியர்கள் மற்றும் வணிகம் தொடர்பான விடயங்களில் நிறைவேற்றும் பொறுப்பில் உச்ச அதிகாரத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளார்	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் அன்றாட நடவடிக்கைகள் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. சபை பட்டயமானது பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு உள்ள அதிகாரங்களை குறிப்பாக விளக்குகிறது.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (6)	**பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் குழுக்கள்**	
3 (6) (i)	இந்த கட்டளைகளில் வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் இலக்கம் 3 (6) (ii), 3 (6) (iii), 3 (6) (iv) மற்றும் 3 (6) (v) ஆகியவற்றுக்காக ஒவ்வொரு வங்கியும் குறைந்த பட்சம் நான்கு சபை குழுக்களை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கை இடவேண்டும். அனைத்து குழுக்களும் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்	இணங்கப்பட்டுள்ளது. 2007 வங்கிச்சட்டத்தின் வழிகாட்டி எண் 12 இன் படி ஐந்து சபை குழுக்களை சபை நிறுவியுள்ளது. சபை கணக்காய்வுக் குழு, சபை மனிதவள ஊதியக்குழு, சபை நியமனக்குழு, சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக்குழு என்ற கட்டாய குழுக்களையும் சபை தகவல் தொழில்நுட்ப தந்திரோபாய குழு என்ற கட்டாயமல்லாத குழுவையும் நிறுவியுள்ளது. அனைத்து குழுக்களும் குழுவின் தலைவர்கள் மூலம் நேரடியாக சபைக்கு அறிக்கை அளிக்கின்றன. தேசிய சேமிப்பு வங்கியின் செயலாளர் ∴சபையின் செயலாளர் அனைத்து சபைக்குழுக்களுக்கும் செயலாளராக பணியாற்றுகிறார். அவர் கூட்டங்களை ஏற்பாடு செய்கிறார் மற்றும் குழுத்தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்ட அறிக்கை, பதிவுகள் போன்றவற்றை பராமரிக்கிறார். சபைக் குழுவின் அறிக்கைகள் பக்கம் 199 முதல் 207 வரை கொடுக்கப்பட்டுள்ளது.
3 (6) (ii)	கணக்காய்வு குழு தொடர்பாகப் பின்வரும் விதிகள் பிரயோகிக்கத் தக்கதாகும்.	
	a. குழுவின் தலைவர் கணக்கியல் மற்றும் கணக்காய்வு விடயங்களுடன் போதுமான தராதரங்கள் மற்றும் அனுபவத்தினை கொண்ட ஒரு சுயாதீனமான நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளராக இருத்தல் வேண்டும்.	2022 ஆம் நிதியாண்டிற்கான சபை கணக்காய்வு குழுவின் தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர் ஆவார். 2022 ஆம் நிதியாண்டிற்கான சபை உபகுழு தலைவரின் சுயவிபரம் பக்கம் 185 இல் தரப்பட்டுள்ளது. சபையின் அனைத்து உறுப்பினர்களும் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாகவே நியமிக்கப்படுகின்றனர். சபை கணக்காய்வுக் குழுவின் தலைவர் தேவையான தகுதிகள் மற்றும் அனுபவத்தினை கொண்டுள்ளனர். குழுவின் தற்போதைய தலைவரின் சுயவிபரம் பக்கம் 172 இல் கொடுக்கப்பட்டுள்ளது.
	b. குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் எனவே குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாவர்.
	c. பின்வரும் விடயங்கள் தொடர்பாக குழு பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்: (i) பொருத்தமான சட்டங்களுக்கு அமைவாக விதத்தில் கணக்காய்வு சேவையினை வழங்குவதற்கான வெளிவாரி கணக்காய்வாளர் நியமனம் (ii) காலத்துக்கு காலம் மத்திய வங்கியினால் கணக்காய்வாளருக்கு வழங்கப்படும் வழிகாட்டல்களினை நடைமுறைப்படுத்தலைப் பிரயோகித்தல். (iii) கணக்கீட்டு நியமங்கள் அமுலாக்கல் (iv) சேவைக் காலம், கணக்காய்வு கட்டணம், கணக்காய்வாளரது பதவி விலகல் அல்லது பதவி விலக்குதல் ஆகியன கணக்காய்வாளருடைய நியமனம் ஐந்து வருடத்துக்கும் ஏற்படாத வகையில் காணப்படுவதுடன் முன்னைய காலம் முடிவடைந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அதே கணக்காய்வு பங்காளர் மீண்டும் பணிக்கு அமர்த்தப் படவில்லை என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. ➲ குறிப்பு விதிமுறைகளுக்கு இணங்க சபை கணக்காய்வுக் குழு மற்றவற்றுடன் பின்வரும் பரிந்துரைகளை செய்கிறது. ➲ கணக்காய்வாளர்களுக்கான மத்திய வங்கியின் வழிகாட்டல்களை காலத்துக்கேற்ப அமுல்படுத்தல் பொருத்தமாக கணக்கீட்டு நியமங்களை அமுல்படுத்தல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியே வங்கியின் வெளியக கணக்காய்வாளராக இருப்பதனால் சபைக்கு வெளியக கணக்காய்வார் தொடர்பில் எந்த பங்கும் இல்லை.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	d. கணக்காய்வுக் குழுவானது வெளிவாரி கணக்காய்வாளரது சுயாதீனத் தன்மை, பக்கம் சாராத்தன்மை மற்றும் நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவான வகையில் கணக்காய்வு செயன்முறைகளில் பயனுறுதி வாய்ந்த தன்மை ஆகியவற்றில் ஆய்வு மற்றும் கண்காணிப்பு செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியே வெளிவாரி கணக்காய்வாளராக காணப்படுவதனால் சுயாதீனத் தன்மை மற்றும் சாரா தன்மை ஆகியன காணப்படுகின்றது. சபையின் கணக்காய்வு குழு கூட்டங்களில் கணக்காய்வு செயன்முறையின் பயனுறுதி வாய்ந்த தன்மையானது அரசாங்க கணக்காய்வு மேலதிகாரியுடன் கலந்துரையாடப்படுகிறது.
	e. கணக்காய்வு தவிர்ந்த பிற சேவைகளை வழங்குவதற்காக வெளிவாரி கணக்காய்வாளர் பயன்படுத்துவதற்கான கொள்கை ஒன்று குழுவினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.	பொருத்தமற்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியே கணக்காய்வாளராக காணப்படுவதனால் இந்த விடயம் தொடர்பற்றதாகும். எனினும் சபையின் கணக்காய்வு குழு சட்டத்துக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றொரு கணக்காய்வாளரை நியமிக்கும் போது அந்த கணக்காய்வு நிறுவனத்தின் சுயாதீனத் தன்மை, பக்கம் சாரா தன்மை அல்லது பயனுறுதி தன்மை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும். 2022 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகம் மெசர்ஸ் ஏன்ஸ்ட் அன்ட் யங் இடமிருந்து ஆலோசனை பெற்றார்.
	f. கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்பதாக குழுவானது கணக்காய்வின் இயல்பு மற்றும் பரப்பெல்லை ஆகிய விடயங்களை கலந்துரையாடி முடிவு செய்யும்.	பொருத்தமற்றது. வெளிவாரி கணக்காய்வாளர் என்ற வகையில் கணக்காய்வின் பரப்பெல்லை மற்றும் விஸ்தீரணம் ஆகியன கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படும்.
	g. வங்கியின் நிதிக் கூற்றுக்கள், ஆண்டு அறிக்கைகள், கணக்குகள் வெளிப்படுத்தல்களுக்காக தயாரிக்கப்படும் காலாண்டு அறிக்கைகள், முக்கிய நிதி அறிக்கைகள், தீர்ப்புகள் ஆகியவற்றின் ஒழுங்குமுறை தன்மையை கண்காணிப்பதற்காக குழுவானது வங்கியின் நிதி சார்ந்த தகவல்களை மறு ஆய்வுக்கு உட்படுத்தும்.	இணங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு குழுவானது வெளிப்படுத்தல் நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கை ஆகியன பிரசுரத்துக்குத் தயாரான நிலையில் மீளாய்வுக்கு உட்படுத்தியது. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் உள்ளக கணக்காய்வு பிரிவானது முக்கிய நிதி அறிக்கைகள் தீர்ப்புகள் கணக்கிட்டு கொள்கை மாற்றங்கள் ஆகியன உள்ளடங்கலான வேறுபாடுகளை இனங்கண்டு கணக்காய்வு குழுவுக்கு தனியானதொரு அறிக்கையினை வழங்கும்.
	h. இடைக்கால கணக்காய்வு மற்றும் இறுதி கணக்காய்வு ஆகியவற்றுக்கு இடையே ஏற்படும் ஒதுக்கங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக சபையின் கணக்காய்வு குழு கலந்துரையாடும். இத்தகைய குழு கூட்டங்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதிகள் பங்குபெறுகிறார்கள்.	இணங்கப்பட்டுள்ளது. இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வு ஆகியவற்றிடையே ஏற்படக்கூடிய பிரச்சனைகள் மற்றும் ஒதுக்கீடுகள் ஆகியவை தொடர்பாக கணக்காய்வாளர் கலந்துரையாடலுக்காக உள்ளடக்க விரும்பும் விடயங்கள் தொடர்பாகவும் குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது.
	i. குழுவானது கணக்காய்வாளரது முகாமைத்துவ கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதில்கள் ஆகியவற்றை மீளாய்வுக்கு உட்படுத்தும்.	இணங்கப்பட்டுள்ளது. சபையின் கணக்காய்வு குழுவானது வெளிவாரி கணக்காய்வாளரது அறிக்கையினை நிதியியல் சட்டத்தின் பிரிவுகள் 14 (2) (இ) மற்றும் 13 (7) (அ) ஆகியவற்றுக்கு அமைவாக ஆய்வு செய்த முகாமைத்துவத்தின் பதில்களையும் கவனத்தில் எடுக்கிறது.
	j. வங்கியின் உள்ளகக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக பின்வரும் படிமுறைகளை குழு மேற்கொள்ளுதல் வேண்டும்.	
	i. உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்கள் ஆகியவற்றின் போதுமான தன்மையை மீளாய்வுக்கு உட்படுத்தி, திணைக்களம் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை கொண்டுள்ளமையை திருப்தி செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு திட்டமானது சபை கணக்காய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. இது உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளத் தேவைப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	ii. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் விளைவுகள் ஆகியன தொடர்பாக மீளாய்வுகளை மேற்கொள்வதுடன் தேவையான போது, உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை உறுதி செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வின் திட்டம், மற்றும் செயன்முறைகளின் விளைவுகள் ஆகியவற்றை மீளாய்வு செய்துள்ளதுடன், பரிந்துரைகள் தொடர்பான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை உறுதி செய்கிறது.
	iii. உள்ளக கணக்காய்வு திணைக்களத் தலைவர், சிரேஷ்ட ஊழியர்கள் ஆகியோரது பெறுபேறுகளை மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழுவானது தலைமை உள்ளக கணக்காய்வார் மற்றும் வேலை செயன்முறைகள் மற்றும் உள்ளக கணக்காய்வின் பெறுபேறுகளை ஆய்வு செய்யும். சிரேஷ்ட ஊழியர்களிக் செயற்றினானது சபையினால் அங்கிகரிக்கப்பட்ட ஆய்வு முறையில் தலைமை கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட்டு அது சபை கணக்காய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். 2022 ஆம் ஆண்டுக்கான ஆய்வு நடைபெற்றது.
	iv. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர், சிரேஷ்ட ஊழியர்கள் மற்றும் வெளிவாரி ஒப்பந்த சேவை வழங்குனர்களது நியமனம் மற்றும் விலகல் ஆகியன தொடர்பாக பரிந்துரைகளை வழங்குதல்.	பொருத்தமற்றது. ஆண்டுக்காலப்பகுதியில் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை.
	v. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒப்பந்தப் புற சேவை வழங்குனர் ஆகியோர் உள்ளடங்கலாக, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட ஊழிய உறுப்பினர்களது பதவி விலகல் தொடர்பாக குழு மதிப்பாய்வுகளை மேற்கொள்வதுடன், பதவிவிலகும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒப்பந்தப் புற சேவை வழங்குனர் முதலிய சிரேஷ்ட ஊழிய உறுப்பினர்கள் தமது பதவிவிலகலுக்கான காரணத்தை சமர்ப்பிக்கவும் உதவுதல்.	பொருத்தமற்றது. ஆண்டுக்காலப்பகுதியில் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை.
	vi. உள்ளக கணக்காய்வு செயற்பாடு என்பதை உறுதி செய்யவும் தாம் கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமாக உள்ளதுடன், அது பாரபட்சமற்ற முறையில், தொழில்சார் திறமை மற்றும் போதுமான கவனம் ஆகியவற்றுக்கு இணக்கமாக செய்யப்படுவதனை உறுதி செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பின் படி, பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு) நேரடியாக சபை கணக்காய்வு ஊடாக சபைக்கு அறிக்கையிடுவதுடன், வங்கியின் நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமாக உள்ளார்.
	k. உள்முக விசாரணைகள் மற்றும் கணக்காய்வு மூலமான முக்கிய கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமையின் பதிலளிப்புகள் ஆகியவற்றை குழு பரிசீலிக்க வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. உள்முக விசாரணைகள் மற்றும் கணக்காய்வு மூலமான முக்கிய கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமையின் பதிலளிப்புகள் ஆகியவற்றை சபை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்துள்ளது. அத்தகைய விசாரணைகளின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டன என்பதையும் உறுதி செய்கிறது.
	l. பிரதம நிதி அதிகாரி, பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளரது ஒரு பிரதிநிதி ஆகியோர் பொதுவாக கூட்டங்களுக்கு வருவார்கள். குழுவானது குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது நிறைவேற்று பணிப்பாளர்கள் இன்றி, வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் நடாத்தியுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் 14 கூட்டங்கள் நடைபெற்றன. கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் பிரதிநிதி 12 கூட்டங்களுக்கு வருகை தந்திருந்தார். பொது முகாமையாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு) பிரதி பொது முகாமையாளர் (நிதி, நிறுவன திட்டமிடல், மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமை) மற்றும் கணக்காய்வாளர் பிரதிநிதி ஆகியோர் பொதுவாக கூட்டங்களுக்கு வருவார்கள். மேலதிகமாக வெளியக கணக்காய்வாளருடன் சபை கணக்காய்வுக் குழு மூன்று சுயாதீன கூட்டங்களை பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் உள்ளக கணக்காய்வாளர் இன்றி நடாத்தியது.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	m. குழுவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்: i. அதன் பரப்பெல்லைக்கு உட்பட்ட எந்தவொரு விடயத்திலும் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம். ii. அவ்வாறு செய்வதற்கு வேண்டிய வளங்கள் iii. தகவல்களுக்கான முழுமையான அணுகல் மற்றும் iv. வெளிவாரி தொழில்முறை அறிவுரையைப் பெறும் மற்றும் தேவைப்பட்டால், தொடர்புடைய அனுபவமுடைய வெளிவாரி பங்கேற்க அழைக்கும் அதிகாரம்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் சபையின் கணக்காய்வுப் பட்டயத்தின் படி: • குழுவானது எந்தவொரு விடயத்தையும் விசாரிக்கும் அதிகாரம் • அதன் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கான வளங்கள் • தகவலலுக்கான கிடைப்பனவு மற்றும் • தேவைப்படின், தொழில்முறை ஆலோசனை பெறும் அதிகாரம் மற்றும் வெளியிலிருந்து அனுபவமுடையவர்களை அழைக்க அதிகாரம் கொண்டுள்ளது குழு அறிக்கையின் பக்கம் 199 முதல் 201 வரை பார்க்கவும்.
	n. விவாதிக்க வேண்டிய விடயங்கள் மற்றிய போதிய முன்னறிவித்தலுடன், குழு வழக்கமாக, சந்திக்க வேண்டும். அத்துடன், அதன் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அதன் முடிவுகளைப் பதிவு செய்தல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபைக் கணக்காய்வுக் குழு வழக்கமான கூட்டங்களை கொண்டுள்ளது. மேலதிகமாக கூட்டங்கள் தேவைப்படும் போது அட்டவணைப்படுத்தப்படுகிறது. ஆண்டுக் காலப்பகுதியில் குழு 14 முறை சந்தித்துள்ளதுடன் கூட்ட அறிக்கைகள் பராமரிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களுக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பில் நியாயமான அறிவித்தல் வழங்கப்பட்டதுடன், அதன் முடிவுகள் சபை செயலாளரினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.
	o. குழுவானது தகவலளிக்கும் முறையில் பின்வருவனவற்றை வெளிப்படுத்தும்: i. கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் ii. ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை, மற்றும் iii. ஒவ்வொரு கூட்டங்களுக்குமான தனித்தனி பணிப்பாளர்கள் வருகை பற்றிய விடயங்கள்	இணங்கப்பட்டுள்ளது. சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கை பக்கம் 199 முதல் 201 வரை பின்வருவனவற்றைப் பார்வையிடுக: 1. கணக்காய்வுக் குழுவின் நோக்கம். 2. 2022 ஆண்டு காலத்தில் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை 3. கூட்டங்களுக்கான பணிப்பாளர்களின் வருகை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன
	p. குழுவின் செயலாளரே கம்பனியின் செயலாளராக அல்லது உள்ளக கணக்காய்வு தலைவராக தொழிற்படுவதுடன் குழுவின் கூட்டங்கள் தொடர்பான விபரமான அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபையின் செயலாளரே குழுவின் செயலாளராக இருப்பதுடன் கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன.
	q. நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு அல்லது பிற விடயங்கள் தொடர்பான இரகசியமான முறையில், ஊழியர்களால் சாத்தியமான முறைகேடுகள் காரணமாக வினா எழுப்புவதற்கான முறைமையினை குழு மீளாய்வு செய்தல வேண்டும். அந்த வகையில் அத்தகைய விடயங்கள் தொடர்பான சுயாதீனமான விசாரணை மற்றும் பொருத்தமான பின்தொடரல்கள் ஆகியவற்றுடன் வெளிவாரிக் கணக்காய்வாளர் மற்றும் வங்கியுடனான உறவுமுறைகளை மேற்பார்வை செய்வதற்கான முக்கிய பிரதிநிதியாக தொழிற்படுவதனை உறுதி செய்யும்.	இணங்கப்பட்டுள்ளது. முக்கியமான கண்டறிதல்கள் தொடர்பாக கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிட்டு கொள்ளை மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஓர் தகவல் தெரிவிக்கும் கொள்கை நடைமுறையில் உள்ளது. பொருத்தமான பின் தொடர் நடவடிக்கைகளுக்கான குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் கணக்காய்வுக் குழுவுக்கு தெரியப்படுத்தப்படுகின்றன. கணக்காய்வுக் குழுவானது வெளியக கணக்காய்வாளருடனான வங்கியின் உறவுகளை மேற்பார்வையிடுவதற்கான முக்கிய பிரதிநிதி அமைப்பாகும்.
3 (6) (iii)	சபையின் மனிதவள மற்றும் சம்பளக் குழுக்கள் தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளது.	
	a. வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களது சம்பளம் தொடர்பான கொள்கை (சம்பளங்கள், படிகள் மற்றும் பிற நிதிசார் கொடுப்பனவுகள்) ஒன்றினைத் தீர்மானிக்கும்.	இணங்கப்பட்டுள்ளது. இயக்குனர்களது சம்பளம் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 பிரிவு 10 மற்றும் அதன் திருத்தங்களின் படி அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகிறது. பொது முகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய நபர்கள் ஆகியோரது சம்பளம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் மனித வள மற்றும் சம்பளக் குழுவினால் தீர்மானிக்கப்படுகிறது.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	b. பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்கள் ஆகியோருக்கான இலக்குகளை குழு தீர்மானிக்கும்.	இணங்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 பிரிவு 8 மற்றும் அதன் திருத்தங்களின் படி அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் இது பணியாளர்களுக்கு பொருத்தமற்றது. பொதுமுகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ நபர்களது இலக்குகள் தந்திரோபாய வணிக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதான பெறுபேற்றுக் குறிகாட்டிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு உருவாக்கப்படுகின்றன.
	c. குழுவானது ஒழுங்கான கால அடிப்படையில் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களது இலக்குகளுக்கு எதிராக ஆய்வு செய்தல் வேண்டும். அத்துடன் சம்பளங்கள், நன்மைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவு அடிப்படையிலான ஊக்குவிப்புகள் ஆகியவற்றினை மீளாய்வு செய்வதற்கான அடிப்படையினை உருவாக்குதல் வேண்டும்.	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ அதிகாரிகளின் செயற்றிறன் ஆய்வுக்கான அளவுகோல்களானது சபைக் குழுவினால் அமைக்கப்பட்ட இலக்குகளுடன் இணங்குகுவதை எதிர்வரும் வருடத்தில் முதல் காலாண்டில் மதிப்பாய்வு செய்யப்படும். இருப்பினும், இது இடம்பெறவில்லை. பெரும்பாலான பணிப்பாளர்களின் பதவிக்காலம் 2023 வருட ஆரம்பத்தில் நிறைவடைந்தது.
	d. பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் போது தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி குழுவின் கூட்டங்களுக்கு வருகை தர வேண்டும்	இணங்கப்பட்டுள்ளது. பொது முகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான அனைத்து விடயங்களும் விவாதிக்கப்படும் போது தவிர சபையின் அனைத்து கூட்டங்களிளும் கலந்து கொள்வர்.
3 (6) (iv)	சபையின் நியமனக் குழு தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளது: a. புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்களின் தெரிவு அல்லது நியமனம் தொடர்பான கொள்கை ஒன்றினை குழு நடைமுறைப்படுத்தல் வேண்டும்.	பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள், மற்ற இரண்டு பணிப்பாளர்களும் வங்கிச் சட்டத்தின் படி முன்னாள் அலுவலர்கள் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி பணிப்பாளர்கள் அமைச்சரினாலேயே நியமிக்கப்படுகிறார்கள். பிரிவு 11 – பணிப்பாளர் சபையின் ஒரு பணிப்பாளரை தலைவராக அமைச்சர் நியமிப்பார். பிரிவு 26 – பணிப்பாளர் சபையானது தகமையான, பொருத்தமான ஒருவரை பொது முகாமையாளராக நியமிக்க அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் தொழிற்படுவார். முக்கிய முகாமை நபர்கள் நியமன விடயங்கள் இணக்கமாக உள்ளது. பணிப்பாளர் சபையானது, சபையின் நியமனக் குழுவின் பரிந்துரையின் பேரில் முக்கிய முகாமை நபர்களை நியமிக்கும்.
	b. தற்போதைய பணிப்பாளர்களின் மீள் தேர்தலை குழுவானது கருத்திற் கொள்ளும் (அல்லது கருத்திற் கொள்ளாதுவிடும்).	பொருத்தமற்றது. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி 5 பணிப்பாளர்கள் அமைச்சரினாலேயே நியமிக்கப்படுகிறார்கள். ஏனைய இருவரும் தேசிய சேமிப்பு சட்டத்தின் பிரகாரம் பதவி வழிப்பணிப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.
	c. பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்கள் பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்கான தகமை மூலப்பிரமாணங்களை குழு உருவாக்குதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 மற்றும் அதன் திருத்தங்களின் படி, பணிப்பாளர் சபையின் இணங்கப்பட்ட நடைமுறையுடன் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, முக்கிய முகாமை நபர்கள் பதவிக்கு தகமை பெறுவதற்கான மூலப்பிரமாணங்களைக் குறிப்பிடும் பதவியுயர்வுக் கொள்கையானது நடைமுறையில் உள்ளது.
	d. இக் கட்டளைகளின் கட்டளை 3(3) மற்றும் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவான முறையில், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்கள் ஆகியோர் தமது பதவிகளுக்கு தகைமையானவர்களாகவும் பொருத்தமானவர்களாகவும் இருப்பதனை குழு உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் மற்றும் பொது முகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது ஒப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசிகள் மற்றும் பிரகடனங்கள் ஆகியன சபை செயலாளரினால் பெறப்பட்டு, அதே ஆவணங்கள் பிரதம முகாமை நபர்களிடமிருந்து மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் சேகரிக்கப்பட்டு தகமை மற்றும் பொருத்தமான தன்மையை மதிப்பிட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும்.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	e. காலத்துக்குக் காலம் குழுவானது இளைப்பாறும் பணிப்பாளர்கள் மற்றும் பிரமத முகாமை நபர்கள் ஆகியோரது தொடர்ச்சித் தன்மை ஏற்பாடுகளுக்கான மேலதிக அல்லது புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளும்.	இணங்கப்பட்டுள்ளது. தலைவர், பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியவர்களது நியமன விடயங்கள் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதம முகாமை நபர்களது நியமனங்கள் சபையின் நியமனக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும்.
	f. குழுவானது ஒரு சுயாதீன பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. குழுவானது சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்படுகின்றது.
3 (6) (v)	சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு:	
	a. குழுவானது இடர் வகைகளை மேற்பார்வை செய்யும் குறைந்தபட்சம் மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரமத முகாமை நபர்களைக் கொண்டிருக்கும்.	இணங்கப்பட்டுள்ளது. பொது முகாமையாளர் மற்றும் பிரதம இடர் அதிகாரி இடர்களை முகாமை செய்ய பொறுப்புடையவர். அதாவது கடன் இடர் முகாமை, சந்தை மற்றும் திரவத்தன்மை இடர் முகாமை மற்றும் தொழிற்பாட்டு இடர் மற்றும் மூலோபாய இடர். இணக்குவிப்பு அதிகாரி அனைத்து கூட்டங்களுக்கும் அழைக்கப்படுவர். ஏனைய பிரமத முகாமை நபர்கள் மற்றும் ஊழியர்கள் தேவைக்கு ஏற்ப அழைக்கப்படுவர். சபையானது பிரமத முகாமை நபர்களுடன் அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்புகளிப்படையில் நெருக்கமாக பணிபுரிகிறது.
	b. குழுவானது வங்கியின் இடர்கள் அதாவது, கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் ஆகியவற்றை மாதாந்த அடிப்படையில் பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத் தகவல் முறைமை ஊடாக மதிப்பிடும். சேய்க் கம்பனிகள் மற்றும் துணைக் கம்பனிகளுக்கு, இடர் முகாமைத்துவமானது வங்கி மட்டத்திலும் குழு மட்டத்திலும் மேற்கொள்ளப்படும.	இணங்கப்பட்டுள்ளது. கடன் இடர் முகாமை, சந்தை மற்றும் திரவத்தன்மை இடர் முகாமை மற்றும் தொழிற்பாட்டு இடர் முகாமை ஆகியன சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் பரிந்துரையின் பேரில் சபையினால் அங்கீகரிக்கப்படும். இடர் முகாமைப் பிரிவு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்பு எல்லையின் அடிப்படையில் வங்கி மற்றும் குழு அடிப்படையில் இடர் குறிகாட்டிகளில் மாதாந்த அறிக்கைகளை சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் ஊடாக சபைக்கு மாதாந்த அடிப்படையில் அறிக்கையிடும்.
	c. குழுவானது பிரத்தியேகமான அளவுசார் மற்றும் பண்புசார் இடர் மட்டங்களை கடன் குழு மற்றும் சொத்துப் பரிப்புக் குழு முதலிய அனைத்து முகாமை மட்டக் குழுக்களுக்கும் மீளாய்வு செய்து இடர் குறிகாட்டிகளை காலரீதியாக அறிக்கையிடுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபையானது கடன் குழு போன்ற முகாமைத்துவ மட்ட குழுக்களின் அறிக்கைகளை ஆய்வு செய்யும். முதலீட்டு குழு மற்றும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழு இடர்களை முகாமைசெய்வதற்கான பண்பு மற்றும் வினைத்திறனினை ஆராயும் மற்றும் காலரீதியாக அறிக்கையிடப்படும் இடர்கள் முகாமைசெய்யப்படுதலை உறுதிப்படுத்தும். சபை ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் அனைத்து முகாமை மட்ட இடர்களை முகாமை செய்வதற்கான பண்பு மற்றும் வினைத்திறன் ஆய்வு செய்யப்படும்.
	d. குழுவானது பிரத்தியேகமான இடர்களின் விளைவுக்கு பொருத்தமான திருத்த நடிவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபையினால் தீர்மானிக்கப்பட்ட நிலைகளை விட உயர்வான குறித்த இடர் நிலைமைகளை குறைப்பதற்கு பொருத்தமான திருத்த நடவடிக்கைகள் ஒழுங்குமுறை மற்றும் கொள்கைநிலை தேவைப்பாட்டிற்கு ஏற்ப சபையினால் மேற்கொள்ளப்படும்.
	e. குழுவானது பிரத்தியேக இடர்களைக் குறைக்கும் வகையில் குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. முடிந்த ஆண்டின் போது குழு 5 கூட்டங்களைக் கூட்டியிருந்தது. கூட்டங்கள் மற்றும் சமுகமளித்தோர் தொடர்பான விபரங்கள் பக்கம் 205 இல் வழங்கப்பட்டுள்ளன.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	f. குழுவினால் அல்லது வங்கி மேற்பார்வைகளுக்குப் பொறுப்பாக பணிப்பாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பிரத்தியேகமான இடர்களுக்குப் பொறுப்பானவர்கள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாத போது குழுவானது பொறுப்பான அதிகாரிகள் மீது பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.	இணங்கப்பட்டுள்ளது. குறித்த விடயங்களை கையாள்வதற்கு வங்கியானது ஒழுங்குமுறை நடைமுறையினை நிறுவியுள்ளது. வருடத்தினுள் அதற்கான எந்த தேவைப்பாடும் ஏற்படவில்லை.
	g. குழுவானது பணிப்பாளர் சபைக்கு ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்து ஒரு வாரத்தினுள் பிரத்தியேகமான விடயங்களில் பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளுக்காக இடர் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும்.	இணங்கப்பட்டுள்ளது. இடர் முகாமைத்தவ அறிக்கை மற்றும் பரிந்துரைகளுடன் கூட்டம் தொடர்பான விபரமான அறிக்கை அடுத்துவரும் சபைக் கூட்டத்தில் வழங்கப்படும்.
	h. குழுவானது வங்கியின் தொடர்புபட்ட சட்டம், ஒழுங்குவிதி முறைகள், ஒழுங்குவிதி கட்டளைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்யும் இணக்கப்பாட்டு செயன்முறை ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. தொழிற்பாட்டுப் பகுதிகளில் வங்கியின் தொடர்புபட்ட சட்டம், ஒழுங்குவிதிமுறைகள், ஒழுங்குவிதி கட்டளைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்யும் இணக்கப்பாட்டு செயன்முறை ஒன்றினை உருவாக்கியுள்ளது. இத் தொழிற்பாடானது அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அவர் காலரீதியான அடிப்படையில், சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, கணக்காய்வுக் குழு மற்றும் சபைக்கு அறிக்கையிடுவார்.
3 (7)	**தொடர்புபட்ட தரப்பினர் ஊடுசெயல்கள்**	
3 (7) (i)	எந்தவொரு நபருடனும் தொடர்புபடும் எந்தவொரு ஊடுசெயல் தொடர்பிலும் அக்கறை முரண்பாடுகள் எழாமையை உறுதி செய்யும் படிமுறைகளை சபை உருவாக்குதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உறவுமுறைத் தரப்பினர், அவர்களது ஊடுசெயல்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் அக்கறை முரண்பாடுகளை நீக்கும் வகையில் மிகச் சாதகமான அணுகுமுறைகளை உறவுமுறைத் தரப்பினருக்கு வழங்குவதைத் தவிர்க்கும் வரையறைகள் ஆகியன உள்ளிட்ட உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல் கொள்கையானது நடைமுறையில் உள்ளது. பணிப்பாளர்கள் தனித்தனியாக தமது உறவுமுறைத் தரப்பின் ஊடுசெயல்கள் தொடர்பாக வெளிப்படுத்துமாறு கோரப்படுகின்றனர். இத்தகைய உடுசெயல்கள் தன்னியக்கமான முறை ஒன்றின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.
3 (7) (ii)	இக் கட்டளையில் தொடர்புபட்ட தரப்பினர் தொடர்பான ஊடுசெயல்கள் வகைகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபையால் அங்கீகரிக்கப்பட்ட உறவுமுறைத் தரப்பினர் பரிவர்த்தனைக் கொள்கை பினவரும் பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது: (அ) நாணய சபையினால் வரையறுத்துள்ள படி அதிகபட்ச இடவசதிகளை வழங்குதல் (ஆ) வைப்பு, கடன் மற்றும் முதலீடு வடிவத்தில் வங்கியில் எந்தவொரு பொறுப்புகளை உருவாக்குதல் (இ) நிதி அல்லது நிதி சாராத எந்தவொரு சேவையையும் வங்கிக்கு வழங்குதல் அல்லது பெறுதல். (ஈ) வங்கி மற்றும் எந்தவொரு தொடர்புடைய தரப்பினருக்கும் இடையில் அறிக்கையிடல் மற்றும் தகவல் தொடர்புகளை உருவாக்குதல் அல்லது பராமரித்தல். இது அத்தகைய தொடர்புடைய கட்சிகளுக்கு நன்மை தரக்கூடிய ரகசிய அல்லது உணர்திறன் வாய்ந்த தகவல்களைப் பகிர வழிவகுக்கும். இது தொடர்பான தகவல் குறிப்பு 49.5 “உறவுமுறைத் தரப்பினர்” இல் பக்கம் 361 இல் வழங்கப்பட்டுள்ளது.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
3 (7) (iii)	மேலே கட்டளை 3 (7) (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள படி, வங்கியானது ஊடுசெயல்களில் ஈடுபடும் பிற தரப்பினரை விட உறவுமுறைத் தரப்பினருக்கு "மிக சாதகமான கையாள்கை" வழங்கப்படவில்லை என்பதை இணங்கும் வகையில் உறவுமுறைத் தரப்பினருடன் ஊடுசெயல்களில் ஈடுபடவில்லை என உறுதி செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் தொடர்புள்ள தரப்பினரின் கொடுக்கல்வாங்கல் கொள்கையானது ஏனைய வாடிக்கையாளரை விட தொடர்புபட்ட தரப்பினருக்க மிக சாதகமான சலுகைகள் கிடைப்பதை தடுக்கிறது. . இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:: (அ) வங்கியின் ஒழுங்குபடுத்தப்பட்ட மூலதனத்தில் பரிந்துரைக்கப்பட்ட சதவீதத்திற்கு மேற்பட்ட "மொத்த தேறிய கடன்வசதிகள்" தொடர்புபட்ட தரப்பினருக்கு வழங்கல் (ஆ) வங்கியின் சிறந்த வட்டி வீத்தினை விட குறைவான வட்டியினை அறிவிடுதல் அல்லது தொடர்பற்ற தரப்பினரை விட அதிக வைப்புக்கான வட்டியினை தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கலுக்கு செலுத்துதல் (இ) தொடர்பற்ற தரப்பினருடனான சாதாரண வணிகத்திற்கு மேலான வகையில், சாதகமான விதிமுறைகள், வியாபார நட்டத்தினை/மூடுதல்/விலக்குதல்/சலுகைகள் போன்ற முன்னுரிமைகளை வழங்கல் (ஈ) மதிப்பீட்டு செயன்முறை இல்லாமல் சேவைகள் வழங்குதல் அல்லது பெறுதல் (உ) இரகசிய தன்மையுடைய விபரங்களை தொடர்புபட்ட தரப்பினருடன் பங்கிட அறிக்கையிடல் மற்றும் தகவல் பரிமாற்ற முறையினை கொண்டிருத்தல் அத்தகைய ஊடுசெயல்களை அடையாளம் காட்டும் வகையில் பணிப்பாளர்களிடமிருந்து வருடாந்த வெளிப்படுத்தல்கள் பெறப்படுகின்றன. வங்கியானது ஊடுசெயல்களில் ஈடுபடும் பிற தரப்பினரை விட உறவுமுறைத் தரப்பினருக்கு "மிக சாதகமான கையாள்கை" வழங்கப்படவில்லை என்பதை காலரீதியாக அடையாளம் காண்பதற்கான முறைமைகள் செயற்பாட்டில் உள்ளன. வழக்கமான முறையில் உறவுமுறைத் தரப்பினருடன் இடம்பெற்ற ஊடுசெயல்கள் நிதிக் கூற்றுக்களின் "உறவுமுறைத் தரப்பினர்" குறிப்பு 49.5 பக்கம் 361 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
3 (7) (iv)	ஒரு வங்கி எந்தவொரு பணிப்பாளர்களுக்கோ அல்லது அத்தகைய பணிப்பாளர்களின் நெருக்கமான உறவினருக்கோ ஒரு வசதியளித்தல் பணிப்பாளர் சபையினால் கருத்தில் கொள்ளப்படும் பணிப்பாளர் தவிர்ந்த, மூன்றில் இரண்டு பங்கான பணிப்பாளர்கள் சாதகமாக வாக்களித்து அங்கீகரிக்கப்படாதவிடத்து, அத்தகைய வசதியளித்தல் ஒன்றை வழங்குதல் ஆகாது.	இணங்கப்பட்டுள்ளது. அத்தகைய நிகழ்வுகள் இவ்வாண்டில் பதிவு செய்யப்படவில்லை.
3 (7) (v)	a. ஒரு நபருக்கு அல்லது அவரது நெருக்கமான உறவினருக்கு அல்லது அத்தகைய நபர் கணிசமான அக்கறையைக் கொண்டுள்ள ஏதேனும் கருதுபொருள்களுக்கு ஏதேனும் வசதிகள் வழங்கப்பட்டு, அத்தகைய நபர் பிற்பட்ட காலங்களில் வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டால், அவர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு ஒரு வருட காலப்பகுதியினுள் நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அவசியமான பிணையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் வங்கியினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. சபையின் செயலாளர் பணிப்பாளர்களை ஆட்சேர்க்கமுன் அவர்களிடமிருந்து வெளிப்படுத்தலினை பெறுவதோடு அவர்கள் ஏதேனும் மேலதிக கொடுக்கல்வாங்கல்களை வெளிப்படுத்த வேண்டும்.
	b. கட்டளை 3 (7) (v) மேற்குறிப்பிட்டவாறு பாதுகாப்பு வழங்கப்படாதவிடத்து, வங்கியானது குறித்த தங்கியிருத்தலுக்கான பணம் மற்றும் அதற்கான வட்டி ஏதேனுமிருப்பின் அவற்றை வழங்கும் போது குறிப்பிட்ட நேரத்தில் அல்லது பணிப்பாளர் பதவி ஏற்றதிலிருந்து 18 மாதம் என்பவற்றுள் முன்னரான திகதியில் மீளப்பெற தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. இணங்குதல் பிரிவானது செய்முறையினை இந்த ஒழுங்குமுறையுடன் மேற்பார்வை செய்கிறது மற்றும் காலாண்டு அறிக்கையினை சபைக்கு சமர்ப்பிக்கிறது.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	c. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்காத பணிப்பாளர்கள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து நீக்கப்படுவதுடன் அது தொடர்பில் வங்கி பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.	
	d. இந்த உப கட்டளையானது, தங்கியிருத்தல் வசதி வழங்கப்படும் போது வங்கியின் ஊழியராக இருந்து மற்றும் வங்கியினால் ஊழியருக்கு வழங்கப்படும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்பாளர்களுக்கு பொருந்தாது.	
3 (7) (vi)	வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்படத்தக்கதான அடிப்படையில் அமைந்த திட்டம் ஒன்று தவிர்ந்த ஏனைய வசதிகளை அல்லது "மிக சாதகமான கையாள்கையை" வங்கி வழங்குதல் ஆகாது.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்படத்தக்கதான அடிப்படையில் அமைந்த திட்டம் ஒன்று தவிர்ந்த ஏனைய வசதிகள் ஊழியருக்கு வழங்கப்படவில்லை. வங்கி ஊழியர்கள் சுற்றுநிருபம் மூலம் வங்கியின் ஏனைய ஊழியருக்கு அல்லது நெருக்கமான உறவுகளுக்கு மிக சாதகமான கையாள்கையை மேற்கொள்வதை தவிர்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
3 (7) (vii)	கட்டளை 3 (7) (v) மற்றும் 3 (7) (vi) ஆகியவற்றின் படி வங்கியினால் எந்தவாரு வசதியளித்தல்களும் அல்லது அது தொடர்பான வட்டிகளும் நாணய சபையின் முன் அனுமதியின்றி மேற்கொள்ளப்படலாகாது. அத்துடன், அத்தகைய அனுமதியின்றிய மாற்றல்கள் பெறுமதியற்றவையாகவும் செல்லுபடியற்றவையாகவும் இருக்கும்.	இணங்கப்பட்டுள்ளது. அத்தகைய நிகழ்வுகள் இவ்வாண்டில் பதிவு செய்யப்படவில்லை.
3 (8)	**வெளிப்படுத்துகை**	
3 (8) (i)	சபை பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:	
	a. வருடாந்த கணக்காய்வு செய்யப்பட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக்கூற்றுக்கள் யாவும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதி அமைப்புக்களினால் பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான வடிவில் தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது.
	b. அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது.
3 (8) (ii)	சபையானது பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்தல்களை ஆண்டறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும்.	
	a. வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்ட நியமங்கள் மற்றும் விசேட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலான ஒழுங்குவிதி தேவைப்பாடுகளுக்கு இணங்கமாக தயாரிக்கப்பட்டுள்ளன என்னும் கூற்று.	இணங்கப்பட்டுள்ளது. வருடாந்த கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் யாவும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதி அமைப்புக்களினால் பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான வடிவில் தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான வெளிப்படுத்தல் பக்கம் 245 இல் "நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர் பொறுப்பு" மற்றும் "பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் (நிதி நிறுவன திட்டமிடல் மற்றும் முகாமை தகவல் முறைமை) பொறுப்பு பற்றிய கூற்று" பக்கம் 249 இல் தரப்பட்டுள்ளது.

வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	b. வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரித் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்கு விதிமுறை தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பன தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்கும் வகையில் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது உறுதி செய்கிறது என்பது தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை.	இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரித் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்கு விதிமுறை தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை ஆண்டிறிக்கையின் பின்வரும் அறிக்கைகள் உள்ளடக்குகின்றன: பணிப்பாளர்களது ஆண்டறிக்கை பக்கம் 239 முதல் 244. நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று பக்கம் 245. நிதி அறிக்கையிடல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு பற்றிய கூற்று பக்கம் 246 முதல் 247.
	c. 31 டிசம்பர் 2008 இன் பின்னர் தயாரித்துப் பிரசுரிக்கப்பட் எந்தவொரு கூற்றுக்கள் தொடர்பான மேலே 3 (8)(ii) (b) இல் குறிப்பிட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதி தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்துகை	இணங்கப்பட்டுள்ளது. பக்கம் 248 இலுள்ள வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீனமான உறுதிப்படுத்தல் அறிக்கையினைப் பார்வையிடுக.
	d. பணிப்பாளர்களது விபரங்கள்: 1. பெயர்கள், தகமை மற்றும் பொருத்தமான தன்மை உள்ளடங்கலாக 2. வங்கியுடனான ஊடுசெயல்கள் மற்றும் 3. வங்கியால் செலுத்தப்பட்ட மொத்த கட்டணங்கள் அல்லது சம்பளங்கள	இணங்கப்பட்டுள்ளது. 2022 நிதியாண்டின் போதான பணிப்பாளர்களது விபரங்கள் பக்கம் 184 முதல் 186 இல் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய பணிப்பாளர்களின் விபரம் பக்கம் 170 முதல் 172 இல் வழங்கப்பட்டுள்ளது. பக்கம் 361 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பக்கம் 361 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
	e. மொத்த நிகர தங்கியிருத்தல் என்பது ஒவ்வொரு உறவுமுறைத் தரப்பினருக்கும் உரிய வகையில் 3 (7) (iii) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு உறவுமுறைத் தரப்பினருக்கும் மொத்த நிகர தங்கியிருத்தலானது என்பது உரிய வகையில் வங்கியின் ஒழுங்குமுறை மூலதன வீதாசாரத்தின் படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது. மொத்த நிகர தங்கியிருத்தலானது என்பது உரிய வகையில் வங்கியின் ஒழுங்குமுறை மூலதன வீதாசாரத்தின் படி பக்கம் 361 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5.3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
	f. பிரதம முகாமை நபர்களுக்கு வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்த சம்பளப் பெறுமதி மற்றும் பிரதம முகாமை நபர்களுக்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஊடுசெயல்களின் மொத்தப் பெறுமதி, சம்பளங்கள் என்னும் பரந்த வகையினுள் உள்ளடக்கப்படல்.	இணங்கப்பட்டுள்ளது. பக்கம் 361 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
	g. வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கைகளில் உள்ள கட்டளைகள் தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்தல்.	இணங்கப்பட்டுள்ளது. வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்தலானது நிறுவன ஆளுகை கட்டளை இல 12 2007 ஆண்டின் படி பெறப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் அனைத்து கண்டுபிடிப்புகளும் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
	h. பாதுகாப்புத் தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடுகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான இணக்கப்பாடின்மைக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் ஆகியன பற்றிய விபரத்தை வழங்கும் ஓர் அறிக்கை.	இணங்கப்பட்டுள்ளது. நிதி அறிக்கைளிடல் தொடர்பிலான பணிப்பாளர் பொறுப்பு பக்கம் 245 இல் பாதுகாப்புத் தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடுகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான இணக்கப்பாடின்மைக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் ஆகியன பற்றிய விபரத்தை வழங்குகிறது.

பிரிவு	கோட்பாடு	2022 இல் இணக்கத்தன்மை மட்டம்
	i. வங்கியின் இடர் முகாமைத்துவம் தொடர்பான குறைபாடுகள், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைக்கான பணிப்பாளரினால் குறித்துக் காட்டப்பட்டு, அத்தகைய விடயங்கள் நாணய சபையினால் பொது மக்களுக்கு வெளிப்படுத்தமாறு பணிக்கப்பட்டு இருப்பின், அத்தகைய விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் உள்ளடங்கலான ஒழுங்குவிதி மற்றும் மேற்பார்வை கூற்று ஒன்று.	இணங்கப்பட்டுள்ளது.
3 (9)	**நிலைமாறுகை மற்றும் ஏனைய பொதுவான ஏற்பாடுகள்.**	
3 (9) (i)	இந்த நியமத்துடனான இணக்கப்பாடானது ஜனவரி 1, 2008 முதல் ஆரம்பமாகும் மற்றும் அனைத்து உரிமம் பெற்ற வணிக வங்கிகளும் ஜனவரி 1, 2009 அல்லது அதற்கு முன்னராக, குறிப்பாக நீடிக்கப்பட்ட இணக்கப்பாட்டு திகதிகள் குறிப்பிப்பட்ட பகுதிகள் தவிர, இந்த நியமத்தின் பரிந்துரைகளுடன் முழுமையாக இணங்க வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. வங்கி பொருத்தமான நிலைமாறுகை ஏற்பாடுகளுடன் இணங்கியுள்ளது.
3 (9) (ii)	இலங்கையில் குறித்த சட்டங்களுக்கு அமைவாக தோற்றுவிக்கப்பட்ட வங்கிகள் தொடர்பில் சபையானது குறித்த சட்டத்திற்கு அமைவாக தொழிற்படலாம் மற்றும் குறித்த சட்டத்தின் அனைத்து பரிந்துரைகளுக்கும் ஏற்புடையவாறு செய்படவேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் அனைத்து பரிந்துரைகளுக்கும் ஏற்றவாறு தொழிற்பட, அனைத்து ஏற்புடைய நடைமுறைகளையும் தேசிய சேமிப்பு வங்கி எடுத்துள்ளது. ஏதேனும் இணக்கப்பாடற்ற நிலைமைகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி குறித்த பரிந்துரைகளுக்கு ஏற்ப தொழிற்பட்டமை தொடர்பில் குறித்த பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளது.
3 (9) (iii)	நியமமானது இலங்கையில் தொழிற்படும் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கும், குறித்த வங்கி தோற்றுவிக்கப்பட்ட நாட்டின் சட்ட வரைமுறைகளுக்கு முரண்படாத வகையில், ஏற்புடையதாகும். வெளிநாட்டு வங்கியின் இலங்கை கிளையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அதன் தாய் நிறுவன வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கையுடன் வெளியிடப்படும்.	பொருத்தமற்றது
3 (9) (iv)	இந்த நியமத்தின் ஏதேனும் பரிந்துரைகளுக்கும், வங்கியின் உள்ளக விபரணம் (அல்லது உள்ளக நியதிகள்) தொடர்பில் முரண்பாடுகள் இருப்பின் எப்பொழுதும் இந்த நியமமே நடைமுறைபடுத்தப்படும். எனினும் வங்கியின் தனிப்பட்ட உள்ளக விபரணத்தில் உள்ள விடயம் நியமத்தினை விட கடுமையான தரத்தினைக் கொண்டிருப்பின் அது நடைமுறைப்படுத்தப்படும்.	பொருத்தமற்றது

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம்

விதிக் குறிப்புகள்	கோட்பாடுகள்
A	**வெளிப்படுத்துகை**
A.1	**சபை** சபை பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.: a தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையானது 1971 ஆம் ஆண்டில் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் பிற்காலத் திருத்தங்கள் ஆகியவற்றினால் விதந்துரைக்கப்பட்ட படி தலைவர் உள்ளடங்கலான 7 நிறைவேற்று அதிகாரமற்ற பணியாளர்களை கொண்டு இருக்கின்றது. வங்கியின் ஐந்து பணிப்பாளர்கள் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி அமைச்சரால் நியமிக்கப்பட இரண்டு பதவிவழிப் பணிப்பாளர்கள் திறைசேரியின் செயலாளர் அல்லது அவரது நியமன அலுவலர் மற்றவர் தபால் மா அதிபர் அல்லது அவரது நியமன அதிகாரியாக இருப்பர். பணிப்பாளர் சபையானது தலைவரினால் தலைமைத்துவம் வழங்கப்படுவதுடன் வங்கியின் உச்சமட்ட தீர்மானம் மேற்கொள்ளும் பிரிவாகவும் காணப்படும். குறித்த வருடத்தில் வங்கியினை வினைத்திறனான கட்டுப்பாடுகள் மூலம் வழிநடத்த மற்றும் சபையானது ஏழு (7) புகழ்பெற்ற தொழில்வல்லுனர்களை கொண்டிருந்தது. 2022 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் விபரங்கள் பக்கம் 170 முதல் 172 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.
A.1.1	**கிரமமான கூட்டங்கள்** பணிப்பாளர் சபையானது சட்டத்திற்கு இணக்கமான வகையில் ஆண்டு காலத்தின் போது கிரமமாக ஒன்று கூடியது. ஆண்டின் போது பணிப்பாளர் சபை 31 கூட்டங்களை நடாத்தி இருந்ததுடன், பட்டயங்களுக்கு இணக்கமான முறையில் ஆண்டு காலத்தில் உபகுழுக்களும் கூட்டங்களை நடத்தி இருந்தன. சபைக் கூட்டங்களின் ஒழுங்குமுறையான தன்மை மற்றும் தகவல்களை சமர்ப்பிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் செயன்முறை ஆகியன பணிப்பாளர் சபையினால் இணங்கப்பட்டதுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் பக்கம் 189 முதல் 191 வரை வழங்கப்பட்டுள்ளன.
A.1.2	**பணிப்பாளர் சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்** பணிப்பாளர் சபையின் பட்டயத்தினால் விபரிக்கப்பட்ட சபைக்கான பொறுப்புக்கள் பக்கம் 183 இல் வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை பட்டயம் மீளாய்வு செய்யப்பட்டது. பணிப்பாளர் சபை செயலாளரினால் உதவி அளிக்கப்பட்டது.
A.1.3	**நாட்டின் சட்டங்களுக்கு இணக்கமான பணிப்பாளர் சபை நடவடிக்கைகள்** நாட்டின் சட்டங்கள், இலங்கை மத்திய வங்கியின் கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான சர்வதேச சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றுக்கு இணக்கமாக வங்கி செயற்படுவதனை உறுதி செய்வதற்காக பணிப்பாளர் சபையானது வழிமுறைகளை அங்கீகரித்திருக்கிறது. இது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வங்கி சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை பெறுதல் அது தொடர்பான செலவினங்களை வங்கி தாங்கிக் கொள்ளுதல் உள்ளடங்கலான வழிமுறைகளை உள்ளடக்கும்.
A.1.4	**செயலாளரது ஆலோசனை மற்றும் சேவைகளுக்கான அணுகை மற்றும் பணிப்பாளர் சபை செயலாளர் நியமனம் மற்றும் பதவி நீக்கம்** பிரயோகிக்க தக்கதான அனைத்து விதிமுறைகள் மற்றும் ஒழுக்க விதிகளுக்கு இணக்கமான முறையில் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் பொறுப்பினை கொண்ட பணிப்பாளர் சபையின் செயலாளரது சேவைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமையை அனைத்து பணிப்பாளர்களும் கொண்டு இருக்கின்றார்கள். பணிப்பாளர் சபை செயலாளர் நியமனம் மற்றும் பதவி நீக்கம் ஆகியன பணிப்பாளர் சபை நியமனக் குழுவின் ஆலோசனையின் பெயரில் ஒரு பிரதான முகாமைத்துவ நபர் என்ற அடிப்படையில் முழுமையாக பணிப்பாளர் சபையையே சாரும். பக்கம் 197 இல் “சபை செயலாளரின் பங்கு” பகுதியில் சபை செயலாளரின் பங்கு பற்றிய மேலதிக விபரங்களுக்கு பார்வையிடவும்
A.1.5	**சுயாதீனமான தீர்ப்பு** பணிப்பாளர் சபையுடன் தொடர்புபட்ட தந்திரோபாயம், பெறுபேறு, வள ஒதுக்கீடு, இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் நடத்தை நியமங்கள் ஆகியன உள்ளடங்கலான விடயங்களில் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான உரிமை வங்கியின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படவில்லை.
A.1.6	**வங்கியின் பணிப்பாளர் சபைக்கு போதுமான நேரம் மற்றும் முயற்சிகளை அர்ப்பணித்தல்** பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் கூட்டங்கள் முன்கூட்டியே திட்டமிடப் படுவதுடன் பணிப்பாளர்கள் கூட்டத்துக்கான ஆவணங்களை போதுமான காலம் மீளாய்வு செய்வதனையும், தேவை ஏற்படும் போது மேலதிக தகவல்களை கோருவதற்கும் கூட்டம் முடிவடைந்த பின்னர் அவசியமான விடயங்களை பின் தொடர்வதற்கும் வசதி அளிக்கும் முகமாக கூட்டம் தொடர்பான ஆவணங்கள் ஒருவாரத்துக்கு முன்னரே இலத்திரனியல் வழிமுறை மூலமாக பணிப்பாளர்களுக்கு அனுப்பப்படுகின்றன. வழக்கம் இதுவாக இருந்த போதிலும் வழக்கத்துக்கு மாறான சூழ்நிலைகளில் கூட்டத்துக்கு மிகவும் அண்மித்த காலப்பகுதியில் ஆவணங்களை தொடர்பாடல் செய்வதற்கான ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. இது வணிக தொழிற்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் போதுமான அளவு பரிச்சயம் அடைவதற்கான நேரத்தினை வழங்குவதன் மூலம் ஈடு செய்யப்படுகின்றது.
A.1.7	**தீர்மானங்களுக்கான அழைப்பு** தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி, எவரேனும் இரண்டு பணிப்பாளர்களது எழுத்து மூலமான வேண்டுகோளுக்கு அமைவாக பணிப்பாளர் சபையின் தலைவர் அது வங்கியின் சிறந்த அக்கறைகளுக்கு அவசியமானது என கருதுமிடத்து பணிப்பாளர் சபையின் விசேட கூட்டம் ஒன்றினை கூட்ட முடியும். அத்தகைய விசேட கூட்டம் ஒன்றுக்கான கூட்ட அழைப்பானது கூட்டத்துக்கு நான்கு நாட்கள் முன்னதாக அனைத்து பணிப்பாளர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

ⓐ இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம்

விதிக் குறிப்புகள்	கோட்பாடுகள்
A.1.8	**இயக்குனர்களுக்கான பயிற்சி அளித்தல்** வங்கியின் பணிப்பாளர் சபையானது நியமனத்தின் போது அவசியமான பயிற்சியளித்தலைப் பெறுகின்றது. விபரங்களுக்கு பக்கம் 193 இனைப் பார்வையிடுக.
A.2	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது பொறுப்புக்களின் பிரிப்பு** பணிப்பாளர் சபையின் பட்டயத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்ட வகையில் அதிகாரத்தின் மற்றும் சமத்துவத்தை பேணும் வகையில் சிறந்த நடைமுறைகளை தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது பதவிகள் தெளிவாக பிரிக்கப்பட்டுள்ளன. வங்கியின் தலைவர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இருக்கும் அதேவேளை பிரதம நிறைவேற்று அதிகாரி பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவராக இருப்பதில்லை.
A.3	**தலைவரது வகிபாகம்** தலைவர் நிறுவன ஆளுகையினை சிறப்பாக பேணுவதற்கும் பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டிற்கும் வசதி அளிப்பதற்குமான ஓர் தலைமைத்துவ பங்கினைக் கொண்டிருக்கிறார். தலைவர் பிரதம முகாமை நபர்களுடன் சிறந்த தொடர்பாடல் வரிசைகளை பேணுவதற்கும் தந்திரோபாய மற்றும் தொழிற்பாட்டு விடயங்களில் பங்களிப்பினை வழங்குவதற்கும் பொறுப்பினை கொண்டுள்ளார். கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலானது பொதுமுகாமையாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி, பணிப்பாளர்கள் மற்றும் சபையின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு, தந்திரோபாயம், பெறுபேறு, வள ஒதுக்கீடு, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு ஆகியன தொடர்பான விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு உருவாக்கப்படும். போதிய விவரமான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலானது பணிப்பாளர்களுக்கு பொருத்தமான காலப்பகுதியில் வழங்கப்படும். அனைத்து பணிப்பாளர்களும் அவர்களுடைய கடமைகள் பொறுப்புக்கள் மற்றும் உப குழுக்களின் கட்டமைப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்தப்படுவர். பணிப்பாளர்கள் பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினை வழங்கவும் நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பான போதுமான தகவல்களை பெற்றுக்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டு முறைசார்ந்த தீர்மானத்தை அடையுமாறும் ஊக்குவிக்கப்படுவர். கருத்தில் எடுக்கப்படும் விடயங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட விபரங்கள் தொடர்பான பணிப்பாளர்களது கருத்துக்கள் கூட்ட அறிக்கைகளாக பதிவு செய்யப்படும்.
A.4	**நிதிசார் நிபுணத்துவம்** பணிப்பாளர் சபையின் சில பணிப்பாளர்கள் நிதியியல், கணக்கீடு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் அங்கத்துவம் ஆகிய தொழில்சார் தகமைகளை கொண்டிருப்பதனால் பணிப்பாளர் சபை நிதி சார்ந்த விடயங்களில் போதுமான நிபுணத்துவம் மற்றும் அறிவினை கொண்டிருக்கின்றது.
A.5	**சபையின் சமத்துவம்** பணிப்பாளர் சபையானது தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி அரச வங்கிகளுக்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஏழு நிறைவேற்று அதிகாரம் இல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. பணிப்பாளர்கள் வருடாந்த அடிப்படையில் தமது சுயாதீனம் அல்லது சுயாதீனமின்மை தொடர்பான ஒப்பமிட்டு திகதியிடப்பட்ட பிரகடனத்தை சமர்ப்பிக்கிறார்கள்.
A.6	**தகவல் வழங்கல்** முகாமைத்துவமானது பணிப்பாளர் சபைக்கு அவசியமான தகவல்களை உரிய காலத்தில், பொதுவாக பணிப்பாளர் சபை கூட்டம் அல்லது உப குழுக்களின் கூட்டத்திற்கு ஏழு நாட்கள் முன்பதாக அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளை உரிய வகையில் நிறைவேற்றும் வகையில் சமர்ப்பிக்கிறார்கள். பணிப்பாளர் சபையானது கலந்துரையாடப்படும் விடயம் தொடர்பாக அவசியமான அளவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதனையும் செய்யலாம் தலைவர் உறுதி செய்வதுடன் அவசியமான சூழ்நிலைகளில் கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறு பிரதம முகாமைத்துவ நபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூட்டங்களில் பங்கு பெற்ற முடியாத பணிப்பாளர்கள் முறைசார்ந்த ரீதியாக ஆவணப்படுத்தப்பட்ட கூட்ட அறிக்கைகள் மூலம் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பாக அறிவிக்கப்படுவதுடன் அடுத்த கூட்டத்திற்கு முன்பதாக இந்த விடயம் கலந்துரையாடப்படும். கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் மற்றும் அவசியமான ஆவணங்கள் ஏழு நாட்கள் முன்னதாகவே அனுப்பி வைக்கப்படுவதுடன் முடிவடைந்த கூட்டத்தின் அறிக்கையானது குறைந்தபட்சம் கூட்டத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைக்கப்படும்.
A.7	**பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள்** ஒரு அரசுடமை வங்கி என்னும் வகையில் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக அனைத்து பணிப்பாளர்களும் அரச வங்கிகளுக்கு பொறுப்பாக உள்ள அமைச்சரினால் நியமிக்கப்படுவர். மேலதிக விபரங்களுக்கு பக்கம் 193 இல் உள்ள கூட்டாண்மை ஆளுகை பகுதியை பார்வையிடவும்.
A.8	**மீள்-தேர்தல்** தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக பணிப்பாளர் ஒருவர் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படல் ஆகிய காரணங்களுக்காக பதவியிலிருந்து விலகி இருந்தால் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் ஒருவரது பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆகும். பணிப்பாளர்கள் நியமனம் மற்றும் மீள் நியமனத் தேர்தல்கள் தொடர்பான விபரங்களுக்கு பக்கம் 193 இல் உள்ள நிறுவன ஆளுகை பகுதியை பார்வையிடவும்.
A.9	**பணிப்பாளர் சபையின் பெறுபேற்று மதிப்பீடு** தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக பணிப்பாளர் ஒருவர் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படல் ஆகிய காரணங்களுக்காக பதவியிலிருந்து விலகி இருந்தால் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் ஒருவரது பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆகும். பணிப்பாளர்கள் நியமனம் மற்றும் மீள் நியமனத் தேர்தல்கள் தொடர்பான விபரங்களுக்கு பக்கம் 193 இல் உள்ள நிறுவன ஆளுகை பகுதியை பார்வையிடவும்.

⊛ இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகள் விதியுடனான இணக்கப் பிரகடனம்

விதிக் குறிப்புகள்	கோட்பாடுகள்
A.10	**பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் வெளிப்படுத்தல்** நிறுவன விதியில் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் ஆண்டறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன: பெயர், தகமை, நிபுணத்துவம், முக்கிய வணிக அக்கறைகள் மற்றும் அவர்களது சுருக்கமான சுயவிவரங்கள் ஆகியன பக்கம் 170 முதல் 172 வழங்கப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் நிறைவேற்று அதிகாரம் உள்ளவர்களா அல்லது நிறைவேற்று அதிகாரமற்றவர்களா மற்றும் சுயாதீனமான அல்லது சுவாதீனமற்றவர்கள் என்கின்ற விடயங்கள் பக்கம் 190 இல் வழங்கப்பட்டுள்ளன. உறவுமுறைத் தரப்பினரது ஊடுசெயல்கள் தொடர்பான விடயங்கள் பக்கம் 361 இல் தரப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் குறிப்பு இலக்கம் 49.5 இல் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் அங்கத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்கள் அது கூட்டத்துக்கான வருகை தொடர்பான விபரங்கள் பக்கம் 190 இல் உள்ளன.
A.11	**பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது பொது முகாமையாளரது மதிப்பீடு** வருடத்தின் ஆரம்பத்தில் பொது முகாமையாளர்–பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட உபாயமார்க்க வியாபாரத் திட்டத்தின் நிதி மற்றும் நிதியல்லா இலக்குகளின் படி அளவு கோள்களின் அடிப்படையில் வருடாந்த அடிப்படையில் பொது முகாமையாளர்" பிரதம நிறைவேற்று அதிகாரியின் செயற்திறனை பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்கின்றது. இறுதியறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
B	**பணிப்பாளர்களின் சம்பளங்கள்**
